உ

கடவுள்துணை.

# முப்பத்திரண்டுபதுமைகதை.

இஃது,

கோசுலாபுரம்.

அருணாசலமுதலியாரால்

பரிசோதித்து.

திருப்பதி

இரத்தினமுதலியார்

அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1882—ஷ

3585 1221/3-82 3585 3586

# கதையின் அட்டவணை.

முதலாவது-சிங்காரஜோதிர்மணிப்பதுமைகதை,
௨-வது-சித்திரசிங்காரமணிப்பதுமைகதை.
௩-வது-மாசிலாமணிப்பதுமைகதை,
௪-வது-தெய்வசிகாமணிப்பதுமைகதை,
௫-வது-மனோரஞ்சிதப்பதுமைகதை
௬-வது-அபரஞ்சிப்பதுமைகதை,
௭-வது-கருணாநிதிப்பதுமைகதை
௮-வது-சங்கநிதிப்பதுமைகதை
௯-வது-பதுமநிதிப்பதுமைகதை,
௰-வது-சற்குணநிதிப்பதுமைகதை,
௰௧-வது-சகலாவல்லிப்பதுமைகதை,
௰௨-வது-விவேகசிந்தாமணிப்பதுமைகதை,
௰௩-வது-நீதிசிந்தாமணிப்பதுமைகதை,
௰௪-வது-மநுநீதிசிந்தாமணிப்பதுமைகதை,
௰௫-வது-சுந்தரமணிப்பதுமைகதை,
௰௬-வது-சத்தபரிபூரணப்பதுமைகதை,
௰௭-வது-அணிமணிப்பதுமைகதை,
௰௮-வது-பரிபூரணக்கலாநிதிப்பதுமைகதை,
௰௯-வது-சரசசலாபஉலாசவிலாசகுலாசபதுமைகதை,
௨௰-வது-இந்திரலீலாவதிப்பதுமைகதை,
௨௰௧-வது-குணபூஷணிப்பதுமைகதை,
௨௰௨-வது-வேண்டார்த்தஇரத்தினப்பதுமைகதை,
௨௰௩-வது-மாணிக்கவாசகவல்லிப்பதுமைகதை,
௨௰௪-வது-சுரதசீலைபுரியுமரகதவல்லிப்பதுமைகதை,
௨௰௫-வது-கர்ப்பகவல்லிப்பதுமைகதை,
௨௰௬-வது-அமிர்தவல்லிப்பதுமைகதை,
௨௰௭-வது-சிவவாக்கியவல்லிப்பதுமைகதை,
௨௰௮-வது-பூங்காவனபொற்பதுமைகதை,
௨௰௯-வது-சிரோமணிப்பதுமைகதை,
௩௰-வது-மணிமந்திரதந்திரசுந்தரிப்பதுமைகதை,
௩௰௧-வது மின்னொளிப்பதுமைகதை,
௩௰௨-வது-மதனாபிஷேகசனரட்சகமோகினிப்பதுமைகதை,

கதையின் அட்டவணை-முற்றிற்று.

கடவுள்துணை.

# முப்பத்திரண்டுபதுமைகதை.

127/3-82

## விநாயகர் துதி

பதுமையாகநற்போஜன்புந்திக்குறப்
பதுமைசொன்னகதையின்பகுப்பெலாம்
கதுமையானகடகரிகாற்றுறீஇ
முதுமையானதமிழின்மொழிகுவாம்.

## கதைகளினுடைவரலாறு

கடல்புடைசூழ்ந்த பூலோகத்தில் உச்சினி[illegible]ரித்தில க்ஷத்திரிய குலத்தில் உற்பவித்த விக்கிரமார்க்க[illegible]ன்பவன் கைலாயபதியாகியபரம சிவனைக்குறித்து கொடியதபசுசெய்யும்போது விக்கிரமார்க்கன்செய்யுந்த பாக்கினியானது கைலாயத்திற்குப்போய்த் தகிக்கவுமையவள்பார்த்துப்ப ரமசிவனைக்குறித்து இந்தஅக்கினிச்சுவாலை யிங்குவரவேண்டிய தென்ன வென்றுகேட்க சுவாமிபூமியிலேவிக்கிரமார்க்கன்மிகவும் அகோரமானத பசுபண்ணுகிறான் அவன்தபாக்கினியானது கைலாயத்தில்வந்ததென்று சொல்லித்தானும் உமையவளும் இடபத்திலேறிப்பூமியில்வந்து விக்கிர மார்க்கனுக்குத் தரிசனைகொடுத்து என்னவரம்வேண்டுமென்ன விக் கிரமார்க்கன்சுவாமி எனக்கும்னிதர்வயதுக்கு மேலானவயதும் தெய்வதத் துவமும் கூடுவிட்டுக்கூடுபாய்கின்றது முதலானஅஷ்டமாசித்தவல்லமை களும் சௌரியபராக்கிரமம் சகலகல்விகளும்எல்லாநற்குணங்களும் சகல பாக்கியங்களும் உண்டாகவரம் வேண்டுமென்றுகேட்க பரமசிவன்மனமகி ழ்ந்து நீ ஆயிரவருஷம்உயிரோடிருந்து உலகத்தையாளவும்நீகேட்டுக்கொ ண்டபடிஎல்லாவரமுங்கொடுத்தேன் இந்திரனாலேஒருசிங்காதனமுனக்கு க்கொடுக்கப்படுமென்றும் பலதேவதைகள்கிருபைகளும்பெறுவாயென்று ம் முடிவிலேதெய்வதத்துவத்தின்படி ஒருவயதுபெண் வயற்றிலேஒருஆ ண்பிள்ளைபிறக்கும் அந்தப்பிள்ளையுந் தெய்வதத்துவமுள்ளதாகவிருக்கு ம் அதன்கைச்சக்கரத்தினாலே நீமரணமாவாயென்றும் வரங்கொடுத்துப் போய்விட்டார் விக்கிரமார்க்கன் வரம்பெற்றுவந்தவுடனே தம்பிபட்டியா னவன் எல்லாங்கேட்டுப் பரமசிவன்திருவாக்கின்படி ஆயிரம்வருஷம்அர சாளுகிறதொகையைக்காட்டி லாறுமாதம்வனசஞ்சாரியாகவும் நாட்டிலா றுமாதம் இராஜாதிபதியாகவுமிருந்தால் இரண்டாயிரம் வருஷம்வாழ் வோடேயிருக்கலாமென்னவிக்கிரமார்க்கன் அப்படியேசெய்யலாமென்று சம்மதித்திருந்தான்.

காமதேனுகற்பகத்தரு சங்கநிதிபதுமநிதி ஐயிராவதமுதலியபலவ
ஸ்துக்களும் முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரமுனிவ
ர்களும் புடைசூழும்படிகோடானுகோடி சூரியர்களுதயமானதுபோலும்
விளங்காநின்ற நவமணிகளிழைத்தகொலு மண்டபத்தில் அரம்பைமேன
கைஊர்வசிதிலோத்தமை முதலானவர்கள்நடனமாடவும் கின்னரர்கிம்புரு
டர்பாடவும் தேவகன்னிகள்வெண்சாமரைபோடவும் நவசித்தர்கள்கொண்
டாடவும் தேவேந்திரமகாராஜன் கொலுவீற்றிருக்கையில் பூலோகத்தில்
நெடுநாளாக இல்லறமுறைமை வழுவாமல் பரிசுத்தமாகநித்தியகருமங்களை
முடித்து வேதாகமபுராண சாத்திரங்களையறிந்து கடவுள்வழிபாட்டிலே ம
னதைச்செலுத்தித் தவமேபொருளாகக்கொண்டிருக்கின்ற சுசீலனென்கி
றபிராமணன் ஒருநாள்தேவலோகத்திற்குத் தேவேந்திரன் திருக்கொலுவி
ற்குப்போனானவன்வந்ததைத்தேவேந்திரன் கண்டுஇப்பிராமணன்மானி
[illegible]கைஅவ[illegible]செய்திருந்தும் இவன்தெய்வீகமும் பரிசுத்தமு முடைய
வனென்றுகளிகொண்டு அபுருபமான ஒருமாம்பழத்தைப் பிராமணனுக்
குக்கொடுத்தான் அப்பிராமணனாகிய சுசீலன் மாங்கனியைக்கைக்கொண்டு
இந்திரனிடத்தில் விடைபெற்றுப் பூலோகத்தில்தன்னுடைய உள்ளன்ப
ருக்கவேதாந்த கோளரிபரத்துருகரி இராஜனிடத்தில்வந்துஅக்கினியை
க்கொடுத்து ஆசிர்வாதஞ்சொல்லிப்பின்னும் இராஜனைநோக்கிப் பிரபுவே
இந்தக்கனிஇந்திரனால் கொடுக்கப்பட்டது இதுவிலையுயர்ந்தது இதன்பெ
ருமையும் அருமையும்உரிசியும் ஆதிசேடனாலும்சொல்லி முடியாதது இ
தைநீரேபுசிக்கவேண்டும் இதனால்வருமபலன் அநேகமென்றுசுசீலனென்
னும்பிராமணன்சொல்ல வேதாந்தகோளரி என்னும்இராஜன் இந்தப்பிராம
ணன்நம்மிடத்தில்மிகவும் உள்ளன்புடையவனானபடியினாலேதனக்குக்கி
டைத்த அரிதானமாங்கனியை நமக்குக்கொண்டு வந்துகொடுத்தான் இவ
னுக்குநாம் சந்திரசூரியருள்ளவரையிலும் சிலகிராமங்களைச்சொந்தமாக
விடுவோமாகில் இப்பிராமணன்சந்ததிக்குச் சுதந்தரமாயிருக்கும் என்று
அரசன்யோசித்துச் சிலகிராமங்களைக் கைக்கொள்ளும்படி தானபத்திர
மெழுதிக்கொடுத்துவிட்டான் பிராமணன்பெற்றுக்கொண்டுபோனான்.

அரசன்மாங்கனியைத் தன்னுயர்த்துணைவியாகிய மனோரஞ்சிதவல்
லியிடத்திற்கொடுத்தான் அவள்வாங்கித் தனக்குமோகமாகவிருக்கிற இர
தசாரதிமோகாங்கன்கையிற் கொடுத்தாள் அவன்வாங்கித் தனக்கிஷ்டமான
பாங்கிமதனவல்லிகையிற்கொடுத்தா னவள்வாங்கித்தனக்காசையுள்ள கள்
ளக்கணவன் மாலைகட்டிமாப்பிள்ளை ராயனிடத்திற்கொடுத்தா னவன்வா
ங்கித்தன்தேவி அரண்மனைதாதிகையிற்கொடுத்தான் அவள்வாங்கிக்கனி
யைக்கையிலேந்தி இராஜமாளிகைபெருக்கவருகையில்வேதாந்தகோளரியெ
ன்னும் இராஜனெதிர்ப்பட்டு அடிபெண்ணே இக்கனிஉனக்கெங்கிடைத்த
து இதைத்தாவென்று கேட்கஅவளரசன்கையிற்கொடுத்துக்கைகட்டிவாய்
புதைத்து நிற்கையில்இராஜன்சுசீலனென்னும்பிராமணனை வரவழைத்து
ஓபிராமணனே இம்மாங்கனி எங்குங்கிடையாதுமிகவும் அருமையானதென்

பொய்சொன்னுயே அக்கனியைப்போலவே இக்கினியிருக்கின்றதே இ
வள்கொண்டு வந்ததைநன்ருகப்பார்என்றுசொல்லச்சுசிலன்என்னும்பிரா
மணன்கேளுநம்மகாராஜனேகெட்டிக்காரன்பொய்யெட்டினுத்தெரியும்என்
றபழமொழிப்படி நான்சொன்னபொய்சற்றுநேரத்திலேதெரியும ஆகையி
னுலேஇக்கினியைக்கொடுத்தவர்களார்அக்கினிஇவளிடத்தினில் எப்படிவ
ந்ததுசாம-பேத-தான-தண்டம்என்னும்உபாயநான்கு இவற்றுள்தண்டவு
பாயத்தினுலே இவளைவிசாரித்தால் உண்மைவிளங்கும்என்றுசுசிலன்சொ
ல்லிப்போனுன் அரசன்மெய்யென்று மந்திரிகளைக்கொண்டு இவளிடத்தி
லிருந்தமாம்பழம எவ்விதமாகவந்தது இதைத்தண்ட உபாயத்தினுல்விசா
ரியுங்களென்ன அரசன்சொற்படிக்குமந்திரிகள் விசாரிக்கையில்அடிமேல
டியடித்தால் அம்மியும்நகரும் என்றபழமொழிப்படிவான முறைபாக அவ
ரவர்கள்கையிலிருந்துமாங்கனிவந்தவகைதெரிந்தது இதைவேதாந்தகோள
ரியென்னும்அரசன்கண்டு மனமவிண்டுவிசனங்கொண்டுபாவநம்பினுலு
ம்பலாம் பெண்களைநம்பலாகாதென்ற வாக்கியம்உண்மையென்றெண்
ணியோசனை பண்ணித்துறவறவழியிலேசென்று தவமுயற்சியிலேநின்று
சுத்தசைதன்னியமாகிய நித்தியவஸ்துவின் கிருபையைப்பெறுவதே அ
ரசாட்சிகாமாருகிறது அரசாட்சியல்லவென்று நிர்ச்சித்தனைகரம்பிவிக்கி
ரமார்க்கனைவரவழைத்துத் தன்னுடைய இராச்சியமுற்றும்அவன்வசத்தி
லொப்பிவித்துநல்லசபதினத்தில் விக்கிரமார்க்கனுக் கபிஷேகஞ்செய்வித்
துச்சபாமண்டபத்தில் நவமணிச்சிங்காசனத்தில் அவனையெழுந்தருளச்
செய்துபொனமுடிசூட்டிச் செங்கோல்கொடுத்து அப்பாவிக்கிரமார்க்கனே
நீதம்பிபட்டியை மந்திரியாகவைத்துப் பூவலயமெல்லாம் ஒருகுடைநிழலு
க்குள்ளே மநுமுறைப்படிக்குச் செங்கோல்செலுத்துவாயாகவென்றுவாழ்
த்திவரங்கொடுத்துக்காட்டிலே தபசுசெய்யப்போய்விட்டான் தமையன்வே
தாந்தகோளரியாகிய பரத்துருகரி இராஜன்சொல்லைச சிரசின்மேற்கொ
ண்டுதம்பியாகிய விக்கிரமார்க்கனென்னும்இராசன் மநுநீதிமுறைமைத
வருதுபுலியும்பசுவும் ஒருதுறையிலே தண்ணீர்குடிக்கவும் பருந்துங்
கிளியும் ஒருகூண்டிலேபசுகமாகவிருக்கவும் பாம்பின்படத்துக்கீழ்தவளை
விடுத்துறங்கவும்கரடிகளுக்குங்குரங்குகள்பேனெடுக்கவும் ஓநாய்க
ளும்ஆடுகளிமுதலாவிக்குலாமவும் பாம்புங்கீரியும்பரிந்துவிளையாடவும்பூ
னையும்எலியம்புகழ்ந்துவிளையாடவும் சிங்கமும்சர்ப்பமும் சிரித்துச்சிநே
கிக்கவும்யானையும்யாளியுந் துதிக்கையோடுதுதிக்கை கோர்த்துக்குலாவவு
ம்மயிலும்ஞெகதியும் மகிழ்ந்துசஞ்சரிக்கவும்புலிக்குப்பூனை சலாஞ்செய்யவு
ம்முயல்களுக்குநாய்கள் முத்தங்கொடுக்கவும் யாதொருபயமில்லாமல்செ
ங்கோல்செலுத்திவருநாளில் ஒருநாள்ஒருசைவப்பிராமணன் விக்கிரமார்
க்கராசனுக்குச சிநேகிதமாக, அப்பிராமணன் முகாந்திரமாய்விக்கிரமார்
க்கனுக்கு வேதாளம்வாகனமான காலத்திலே விஸ்வாமித்திரர்கைலங்கிரி
ச்சாரிலே தபசுபண்ணிக்கொண்டிருக்கையில் அவரிடத்திலிருந்து ஏா
தமகாமுனிவர் பூலோகசஞ்சாரஞ்செய்து பொன்னுலகமெல்லாம் சஞ்சரித்
லோகத்திற்குப்போனு ரதுகண்டுதேவேந்திரன் எதிர்கொண்டிராதகுர்

இருப்பிடங்கொடுக்க அவர்வீற்றிருக்கின்ற போதுஇந்திரன் கொலுவிற்றிருந்தார் அப்பொழுது மேனகை ஊர்வசி அரம்பை திலோத்தமைஇந்நால்வரும் நடனமாடினார்கள்.

அந்நடனத்தைத் தேவராஜன்பார்த்து ஓ ஓ நாரதமகா முனிவரே இந்நால்வருக்குள்ளே ஆடலிலும்பாடலிலும் வல்லவள் எவள் அவளைக்குறித்துச்சொல்லுமென்ன நாரதர் இந்திரபூபதியே பூலோகத்திலேசங்கீத[illegible]சாஸ்திரங்களிலே வல்லவனாகிவிக்கிரமார்க்கனென்றொருஇராஜனிருக்கிறான் அவனைக்கேட்டால்இவர்களுடைய ஆடல்பாடல்திறங்களைப் பகுத்துச்சொல்வான் அவனை இவ்விடத்திற்கு வரவழையுங்களென்ன இந்திரன்பூலோகத்திலும் அவ்வளவுவல்லவனிருக்கிறானா அப்படியானால் இப்பொழுதுவனைத் தேவதூதரால் இங்குவரவழைக்கின்றேனென்று ஒரு தேவதூதனைநோக்கிஓ தூதனே நீ ஒரு புட்பரதங்கொண்டுபோய் பூலோகத்தையாளுகின்ற விக்கிரமார்க்கனை அழைத்துக்கொண்டு வாவென்னத் தேவதூதன் சுவாமி தங்கள் திருவாக்கின்படிஇதோ அழைத்துவருகிறேனென்றுபுட்பரதமேறிக்கொண்டு பூலோகத்தில்வந்து விக்கிரமார்க்கனிருக்கின்ற இடத்திலிறங்கினான்.

ஆகாயத்திலிருந்து புட்பத்தேரிறங்கினதை விக்கிரமார்க்கன்கண்டுபயங்கொண்டு இருகரங்களுஞ் சிரமேற்குவித்துஎன்தெய்வமேஎளியேனைக்குறித்து இங்குவந்தகாரணம் என்னமோ யானறிந்திலேன் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பணிந்துநிற்கத் தேவதூதன்விக்கிரமார்க்கனே உன்னை யென்னாண்டவனாகிய தேவேந்திரமகாராஜனழைத்துவரக் கட்டளையிட்டார் நீ வரவேண்டுமென்றழைக்க விக்கிரமார்க்கன் தேவராஜன் என்னை யழைத்துவரச்சொன்னது நான்செய்த பாக்கியந்தான் இதோவருகிறேனென்றுசொல்லத் தேவதூத னரசனைப் புட்பவிமானத்திலேற்றிக்கொண்டு இந்திரன்கொலுமுன்விட்டான் இந்திரன்விக்கிரமார்க்கன் புண்ணியசாலியாகையால் அவனைமரியாதையுடன் சிங்காசனத்திலுட்கார வைத்து மனமகிழ்ந்து முகமன்கூறி விக்கிரமார்க்கபூபதியே நீர் ஆடல்பாடல்களில்வல்லவனென்று நாரதமுனிவனெனக்குச்சொல்லியிருக்கிறாரதனால் என்சபையிலாடுகிறவணிகையர் நால்வருக்குள்ளேஎவளாஎவள ஆடல்பாடல்களில்வல்லவள் இதைத்தாங்களறிந்துஎனக்குத் தெரிவிக்கவேண்டுமென்ன இராஜன்தேவேந்திரமகாராஜனே யான்பூலோகத்தரசன் திரிகால வர்த்தமானங்களை யறியாதவன்மேலு மறிவிலாச்சிறியனானேன் இத்தேவமாதர்களுடைய திறங்களையறிந்துசொல்லவல்லவனல்லவே தாங்களென்னையொருபொருளாக மதித்துக்கேட்டதால் தங்களையான்காணப்பெற்ற தங்களனுக்கிரகத்தைப்பற்றி என்னாற்கூடியமாத்திரஞ் சொல்லுகிறேன்.

இங்ஙனம்நடனமாடுகிற நால்வருக்குள்ளே அரம்பையானவள் பரதசாத்திரமுறைப்படிக்குச் சுதிபிறழாது துளைக்கருவி தோற்கருவிக்கஞ்சகருவிஎன்னு மூக்கருவிகளுமொத்த தொனியின்படி பதம்பெயர்த்து அபியங்காட்டித் தேவரு மூவருமயங்கும்படி யாடினள் உருப்பசியானவள் சங்கீதசாஸ்திரவிதிப்படிக்கு இராகக்கியானம்பிசகாமல் சரளிசுரங்களும் பிறழாமல் நரம்புக்கருவியும் மிடற்றுக்கருவியும்பகுத்தறியக்கூடாத வண்ணமாய்ச் சுவரிலெழுதியசித்திரம்போலச் சற்றுமசையாது நின்றுகல்லுங் கரைந்துருகப்பாடினள் என்று விக்கிரமார்க்கன்சொன்னவுடனே தேவேந்திரன் இருதயமுங்களிக்க திருமுகம்அலர்ந்து உடலம்பூரிக்க விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓபூலோகத்தரசனே உன்போலும்சங்கீத சாத்திரங்களிலே வல்லவர்களைச் சுவர்க்கமத்தியபாதாளங்களிலே கண்டதில்லை யென்று ஒருபட்டுப்பீதாம்பரத்தை அவனுடுத்திக் கொள்ளும்படிசெய்து கோடானகோடிசூரியருதயமானாற்போலும் நவமணிகள் பிரகாசிக்கும் பெருமையும் சித்திரத்திலு மெழுதப்படாத வடிவுபொருந்திய முப்பத்திரண்டு பதுமைகளையும்படிக்கும்படி அணி அணியாகவுடைய சித்திரவிசித்திரம்பொருந்திய அட்டசிங்கந்தாங்கும் ஒருசிங்காசனத்தை அவனுக்குக் கொடுத்து அனுப்பினர் விக்கிரமார்க்கன் பட்டுப்பீதாம்பரத்தையும் சிங்காதனத்தையும்தேவேந்திர னிடத்திற்பெற்றுக்கொண்டு பூலோகத்தில் தன்னுடையஉச்சினிபுரத்திற்குவந்து அரண்மனையில் அரசிருக்க மண்டபத்திற்சிங்காசனத்தைவைத்தும் பூசைமுதலானவைகளைச்செய்து தான்மிகவும்பரிசுத்தமனமுடையவனாக முப்பத்திரண்டு தருமங்களையும் நடத்திக்குடிகளுக்குத்தன்னிடத்திற் குறைமுறை யில்லாமல் ஆறிலொருகடமைவாங்கி மாதமும்மாரிபெய்யவும் வருஷம்முப்போகம்விளையவும் சத்தியந்தவறாது தேவைத்தியுடனே அச்சிங்காதனத்திலிருந்து செங்கோல்செலுத்திவருங் காலத்தில் பிரதிட்டாபுரியென்றொரு பட்டணமுண்டு அந்தப்பட்டணத்தில் தேவசிரோன்மணியென்றொரு பிராமணனிருந்தான் அவனுக்குமனைவி திவ்வியசிந்தாமணி அவள்வயிற்றில் அபுரூப கண்மணியென்றொரு பெண்பிறந்து அந்தப்பெண் ஒருவயதில் அதிரூபசவுந்தரியமுடையவளாகவிருந்ததை ஆதிசேடன்கண்டுமோகங்கொண்டு புணர்ந்தான் அவன்புணர்ந்தினாலே அப்பெண்வயிற்றில்ஒருஆண்பிள்ளை பிறந்தது அந்தஆண்குழந்தையைப் பெண்ணைப்பெற்றபிராமணனும் பிராமணத்தியுங்கண்டு வெட்கங்கொண்டுகையிலெடுத்துக் குயவன்வீட்டுக்குப்பையிலே போட்டு விட்டுப்போய்விட்டார்கள்.

தேவசகாயன்என்கிற குயவன் வீட்டைவிட்டு வெளியில் வந்துபார்க்கையில் நான்பிள்ளையில்லாதவனாகையால் தேடிப்போனமருந்து காலிற்றட்டுப்பட்டாற்போலும் கும்பிடப்போனதெய்வம் குறுக்காகவந்தாற் போலும் பிள்ளையையெடுத்து மார்போடணைத்து முத்தங்கொடுத்துயார்பெற்றபுத்திரனோ நான்செய்ததவப்பலனோ இதுஎனக்குக்கிடைத்ததுஎன்றுவீட்டிற்கொண்டு போய்த் தன்மனைவி அமிர்தவல்லிகையிற் கொடுத்துப்பெண்ணே இப்பிள்ளையைத்தெய்வங்கொடுத்தது நீ அன்பாகவளர்த்துக் கொள்ளென அவள்வளர்த்துவருகையில் தேவசகாயன்வளர்த்துவருகிறபிள்ளை

க்குச் சாலிவாகனன் என்றுநாமந்தரித்துச்சகலகலைகளையுங்கற்பித்தான் அப்பிள்ளை இளவயதில்சகலமுங்கற்றுமண்ணாலே இரதம்யானைசேனை குதிரை இவைகளை அநேகங்கோடிகளாகச்செய்து சூனியோட்டிக்கொண்டு விளையாடிவரும் இப்பிள்ளைவிளையாடிவருங்காலத்திலே விக்கிரமார்க்கனுக்குத் துற்சகுனங்களுந்துற்குறிகளுங்காணப்படுவதல்லாமலும் தன்னுடைய வீரசூரபராக்கிரமங்களுநாளுக்குநாள் பொருளுமையுள்ளவர்கள்செல்வங் குறைதல்போலக்குறைந்துவருவதைக்கண்டு விக்கிரமார்க்கன் தன்னுடையசபையிலுள்ளபெரியோர்களையுஞ் சாத்திமார்களையும்பார்த்துப் புண்ணியபுருஷர்களே எனக்குத்துற்சகுனங்களுந் துற்குறிகளும் பலகுறைகளும் சம்பவிக்கக் காரணமென்னவென்றுகேட்க சபையார் விக்கிரமார்க்க மகாராஜனேதெய்விகத் தன்மைபொருந்திய உமக்குத்தெரியாதகாரியம் எங்களுக்கெப்படித்தெரியும் தெரியாதேயென்றார்கள் அதற்கு விக்கிரமார்க்கன்முற்காலத்திலே பூலோகத்தில் நான்தபசுசெய்து பரமசிவனுடையகாட்சியைக்கண்டு அவனைவரங்கேட்டபோது அவனெனக்குக்கொடுத்த வரமாவது எப்படிப்பட்டதென்றால் பரமசிவனுனக்கென்னவரம்வேண்டு மென்றுகேட்டார் நானெனக்குத்தெய்வதத்துவந் தரவேண்டுமென்று கேட்டேன் அதற்குச்சுவாமிபூவுலகத்திலே தெய்வதத்துவமில்லை உனக்குமாத்திரந் தெய்வதத்துவந்தந்தேன் உன்னைத்தேவர்கள்முதலானவர்களும் கணம்பண்ணுவார்களென்றுசொல்லி இனிமேல்பூமியிலேதெய்வதத்துவமாக ஒருவயது பெண்வயிற்றில் ஒருபிள்ளை யுற்பத்தியாகும் அந்தப்பிள்ளையினாலே உனக்குமரணமுண்டாகுமென்று திருவாய்மலர்ந்தருளினார் அந்தப்பிரகாரம் தெய்விகமாக ஒருவயதுபெண் வயிற்றில்ஒருபிள்ளைபிறந்துவந்தாலல்லவோ அந்தப்பிள்ளைகையாலேயான்மரணமடையவேண்டும் அப்படிக்கிஇப்பொழுது பிள்ளைஉற்பத்தியாகவில்லையே எனிப்படிக்குத் துற்குறிகள் துற்சகுனங்களும் பலவீனங்களுங்காணப்படுகின்றனவென்று இராஜன்கேட்க சபையார் சொல்லுகிறார்கள்.

எங்களாண்டவனேசகலபுவன கர்த்தாவாகியபரமசிவனார்திருவாக்குக்கெதிர்வாக்கிராது அவர்சொற்படிஒருவயதுபெண்வயிற்றிலேஒருபிள்ளை பிறந்திருக்கக்கூடும் வெள்ளம்வருமுன்னே அணைபோடவேண்டும் சிறியபாம்பாகிலும் பெரியதடிகொண்டடிக்கவேண்டும்ஆகையால் திமிஞ்சலைத்தாலும் பகைமிஞ்சலைக்கலாகாது நமது சத்துருவைக்கருவறுக்கவேண்டும் நம்முடையவேதாளத்தைக் கொண்டு கடல்சூழ்ந்தபூமிக்குள்ளே எவ்விடத்திலாகிலும் ஒருவயது பெண்வயிற்றில்ஆண்பிள்ளை பிறந் திருக்கின்றதாவென்று விசாரித்துவரும்படிக் கட்டளைக்கொடுங்கள் அப்படிக்குப் பிள்ளை பிறந்திருக்குமாகில்நாம் யானைசேனைதேர் குதிரைகளுடன் புறப்பட்டுப் போய் அந்தப்பிள்ளையைச்சங்கரித்து விடுவோம்முளையிற்கிள்ளாதமர

முற்றிலுங் கோடாரிகொண்டுவெட்டித்தள்ளவேண்டும் இப்பொழுதேசத்
துருவின் ஜயம்பெற்றால்யாதொருபயமில்லாமல் அரசாளலாமென்ன வி
க்கிரமார்க்கன் வேதாளத்தைப்பார்த்து என்வாகனமாகிய வேதாளமேநீபு
கைநுழைகிறதற்கு அரிதானஇடமானாலும் அரிய காவலுள்ள இடமானா
லும் விட்டுவிடாமல் உலகமெங்குந்திரிந்து ஒருவயது பெண்வயிற்றில் ஆ
ண்பிள்ளை பிறந்திருக்கிறதாவென்று தேறவிசாரித்துவந்து சொல்லென்ன
அதற்குவேதாளம் என்னாண்டவனேகாற்றுப்புகாதயிடமிருந்தாலும் நான்
புகாதஇடமில்லை இதோபார்த்துவருவேனென்று எங்குந்திரிந்து வருகை
யில் மேற்குத்திசையிலே கல்யாணபுரியில் ஒருகுயவன் வீட்டிலே ஒருவ
யதுபெண்வயிற்றில் பிள்ளைபிறந்தது வளராநின்றது என்றுகேழ்விப்பட்
டதேயல்லாமல் கைக்குக்கண்ணாடிபோலுங் கண்ணினாலுங்கண்டுவந்தேன்
என்றரசனுக்கறிவிக்க விக்கிரமார்க்கன் பொருள்பறிகொடுத்தவர்க ளிருத
யம்போலக் கலங்கிப்பொறுத்து ஆலோசனைசெய்கிறதருணத்தில் அப்பி
ள்ளைக்கு நாளுக்குநாள் கல்விகற்பவர்களறிவு பிரகாசிப்பதுபோலச் சௌ
ரியம்பிரகாசித்து உலகமெல்லாம்புகழத்தக்கசத்தியானது பலராலும் விக்
கிரமார்க்கன்சபையிலும் வந்துபரவியது அரசன் அதுகண்டு மனத்தைரி
யங்கொண்டு நால்வகைச்சேனைகளுடன் தன்பட்டணம்விட்டுப்புறப்பட்டுக்
கல்யாணபுரிக்கு எதிராகவந்து நிற்கையில் குயவன்வளர்த்த பிள்ளையானது
தன்மேல்பகைமன்னர்கள்யுத்தஞ்செய்யவந்தார்கள் இனியவர்களையுயிருட
ன் விடுகிறதில்லை உரலிலகப்பட்டவை யுலக்கைக்குத்தப்புமா அப்படியென்
ன்கையிலகப்பட்டமன்னர்கள் உயிர்வைத்து வாழ்வார்களாவென்று தான்
விளையாடும்படியாக மண்ணினாற்செய்த யானைசேனை குதிரைதேர் இவை
களிடத்தில்நின்று தான்தெய்வீகமாகச் சிறுபெண்குழந்தைவயிற்றிற் பிற
ந்தசிறுபிள்ளையென்றது உண்மையானால் இந்தஉருவங்களெல்லாம்உயிர்பெ
ற்றுவந்தசேனைகளுடன் எதிர்த்துப் போர்செய்யவேண்டுமென்று மந்திர
ப்பிரயோகஞ்செய்து ஒருபொற்பிரம்பாலடிக்க அந்தஉருவங்களெல்லாம்
உயிராகி பூமியெங்கும்பரவி ஒருஎள்விழஇடமில்லாமல்நெருங்கி விக்கிர
மார்க்கன்சேனைகளையெல்லாம் நாசஞ்செய்தான் அப்பொழுது அசரீரிவிக்
கிரமார்க்காஉன்வயது இன்றோடே சரியென்றது சாலிகாவனன்தன்னுடை
யகையிலிருந்த சக்கரத்தைக் கிறுகிறுவென்றுசுழற்றினான் கன்னியின்குழ
ந்தை பெற்றபிள்ளையானால் இதுவிக்கிரமார்க்கன்சிரத்தை யறுக்கக் கடவ
தென்று சொல்லிவிட்டமாத்திரத்தில் அச்சக்கரம் விக்கிரமார்க்கன் சிரத்
தைத்துணித்தது, அந்தச்சிரமானது தன்மனைவி மதனமஞ்சரிமடியில்வி
ழுந்தவுடனே அவள்தன்னாயகனிறந்தானென்றும் இனித்தானிருந்தால் க
ற்புக்குவிரோதமென்றும் நினைத்துத்தன்கொழுநனாகியமந்திரிப்பட்டியை
அழைத்து தன்னொருபிள்ளையாகிய அருமைத் திருமகனை அவன்கையி
லொப்பிவித்துத் தமைகனுக்குப்பட்டங்கட்டிக் கொழுநனைப்பார்த்து நீர்
மந்திரியாகவிருந்துஇராச்சியபரிபாலனஞ்செய்யுமென் தன்நாயகனை வை
த்ததீயிலேதானும்விழுந்திறந்து நாயகனோடு வீரசொர்க்கஞ்சேர்ந்தாள்.

பட்டியாகியமந்திரி தன்தமயன் விக்கிரமார்க்கன் பிள்ளையாகிய அதி
வீரபராக்கிரமனுக்குப் பட்டங்கட்டித் தான்மந்திரியாகவேயிருந்து இராஜ
ரீகஞ்செய்துவருங்காலத்தில் ஆகாயத்திலிருந்து ஒருவாக்குப்பிறந்தது அ
துயென்னவென்றால் ஓ இராஜகுமாரனே பட்டியாகியமந்திரியே விக்கிர
மார்க்கனேறிய சிங்காதனம் நீங்களேறத்தகாது ஆகையினால் அதைப்பூமி
யினுள்ளிருக்கும்படி புதைத்துவிடுங்களென்ன அந்தவாக்கை இராஜகுமா
ரனும் மந்திரியுங்கேட்டுப் பயந்து அப்படியேசிங்காதனத்தைக் கொல்லையு
ள்ளே வெட்டிப்புதைத்தார்கள் இதுநிற்கசாலிவாகனனும் மந்திரியுந்தங்க
ள்சேனைகளுடன் தங்கள்தேசத்தையாண்டுக்கொண்டிருந்தார்கள் அதன்
பின்புபட்டியும் விக்கிரமார்க்கன்பிள்ளையும் சிங்காதனம்புதைத்துவைத்தி
ருந்த கொல்லையைத்தங்கள்ரண்மனைப்புரோகிதனை சிங்காரவையனுக்கு
க்கொடுத்துச் சிலகாலம்வாழ்ந்து இறந்துவிட்டார்கள் அப்பிராமணன் அ
க்கொல்லையில் அவரைதுவரை உளுந்து எள்ளுகொள்ளுசாமை தினைவர
குகம்பு கேழ்வரகு சோளமுதலானவைகளைப் பயிர்செய்து சிங்காதனமிரு
க்கிறமேட்டின்மேல்பரண்கட்டிக் காடை கவுதாரி கிளிகள் குருவிகள்முத
லானபரவைகளையோட்டிக் கொல்லையைக்காத்து வருநாளில் ஒருநாள் உச்
சினிமாங்காளிப்பட்டணத்திற்குச் சமீபமான தாரகாபுரியென்றொரு நகர
முண்டு அந்நகரத்தையாளுகின்றவன் போஜமகாராஜன் அவன்ஒருநாள்த
ன்னுடையசேனைகளுடன் வேட்டையாடிக்கொண்டு கொல்லைவழியாகவரு
கையில் சிங்காதனமிருந்தவிடத்தில் பரணின்கீழே முட்செடிகளின் புதரி
லே ஒருமுயலிருந்து வேட்டைநாயைத்துரத்திவந்தது அதைப் போஜரா
ஜனும் மந்திரியுங்கண்டு இவ்விடத்திலொரு அதிசயமிருக்கவேண்டுமென்று
பேசிக்கொள்ளுகிறபோது பரணிலேறிக்கொல்லையைக்காத்திருந்த பிராம
ணன் ஓஜனங்களேநீங்கள்வேட்டையாடி இளைத்துக்களைத்துப்போனீர்களே
நம்முடையகொல்லையிலே வெள்ளரிப்பிஞ்சு வெள்ளரிப்பழம் கம்பங்கதிர்
சோளக்கதிர் முதலானவைகளிருக்கின்றன இவைகளைப்பிடுங்கித்தின்று தா
கத்தில் சலத்தைக்குடித்துத் தோப்பிலிருந்து விடாய்தீர்த்தபின் போங்
களென்னச் சனங்கள்கொடுக்கிறதெய்வமே மேக்கடித்துக்கொடுக்கும் என்
றது சரியன்றுகாய்ந்தமாடு கம்பிலேவிழுந்தாற்போல்எல்லாருங் காய்களையு
ங்கதிர்களையும் பிடுங்கித்தின்கிறசமயத்தில் பிராமணன்பரணைவிட்டிற
ங்கிவந்துஐயோ இதென்ன அநியாயம் வந்தஜனங்களிப்படிக் கொல்லையைக்
கொள்ளையிடுவார்களா எப்படியென்ன செய்வேன் பிழைக்கவழியில்லையே
மேய்கிறகோழி மூக்கையறுத்தாற்போல செய்தார்களேயென்று போஜரா
ஜனிடத்தில் முறையிட்டழுதான் இராஜன்கண்டு இப்பிராமணன் முன்பு
காய்கதிர்களைப் பிடுங்கித்தின்னச்சொல்லிப் பின்பு கொள்ளையிட்டார்களெ
ன்கிறானே இதென்னமோ தெரியவில்லையென்று தானும்மந்திரியும் பர
ணின்மேலேறிப்பார்க்கையில் அவ்விடத்தில் மந்திரியுந்தானும் கொலுவி
ருந்து நீதிவிசாரணைசெய்வதுபோலக் காணப்பட்டதை இருவருமறிந்து இ
வ்விடத்தின்கீழாக மகிமையுள்ள வஸ்து இருக்கவேண்டும் அதனாலேமுய
லுக்கும் பிராமணனுக்கும் சமத்துப்பலமை யுண்டாயிற்றுப் பின்பு சோ
திப்போம்என்று பிராமணனையழைத்து ஓபிராமணா இக்கொல்லைவகை

வுதானியங்கொடுக்கும் அதைச்சொல்லு உனக்கு அதற்குமேலாக ஆயிரம்பங்கு தானியம்விளையவும்நிலங்களை உனக்குக்கொடுக்கிறேனென்ன பிராமணன் சுவாமி திருக்கண் கண்டார்க்குத் தீவினையில்லையென்றும்போலத் தங்களைக்கண்ட வெனக்குத்தரித்திர மில்லைத்தங்கள் சித்தமென் பாக்கியமென்றான் போஜராஜன்பிராமணனுக்குவேண்டியதிரவியங்களையும் நிலங்களையுங் கொடுத்தனுப்பிஒட்டர்களைவிட் டவ்விடத்தை வெட்டிச் சோதிக்கையில்பலகோடிசூரியர்கள் உதயமானாற்போலும் ஒருசிங்காதனங் காணப்பட்டது.

போஜராஜனும் மந்திரியும்பார்த்து மகிழ்ச்சிகொண்டு இலட்சம்பிராமணர்களுக்குப் போஜனஞ் செய்வித்துப் புதையலெடுத்தவர்கள் மனம்போலப் பூரித்துக்கோடானகோடி திரவியங்களைத் தானங்கொடுத்துச் சிங்காதனத்தை யெடுப்பித்துத் தனது தாரகாபுரிக்குக் கொண்டுவந்து தங்கத்தாலும் நவமணிகளாலுஞ் செய்வித்த ஆயிரங்காலையுடையசபா மண்டபத்தின் மைத்தில்வைத்து அபிஷேகமுதலானவைகளைச் செய்வித்துச் சிங்காரித்துத் தூபதீபங்கொடுத்துப் பலியிடுவித்துத்தாங்களும்ஸ்நானஞ்செய்து அலங்கரித்துக்கொண்டு மகுடமன்னர்கள்சூழ்கவும் சத்துருக்களடிதாழ்கவும் விருதுகொடிபிடிக்கவும் வேசையர்கள்நடிக்கவும் முப்பத்திரண்டுவாத்தியமுழங்கவும் நவமணிச்சாமம்வழங்கவும் வெண்சாமரைகள் போடவும்வித்துவான்கள்பாடவும் சதுரங்கசேனைக்கு நடுவேபட்டத்து யானையின்மேல் நவரத்னவிமானத்திலேஎழுந்தருளிப் பட்டணத்தைவலமாகவந்து சபாமண்டபத்தில் இறங்கிச் சிங்காதனத்தைக்கும்பிட்டுவலம்வந்து மந்திரி பின்னிற்கப் போஜராஜன் வழிபடுகடவுளைவணங்கி முப்பத்திரண்டுபடிக்கும் முப்பத்திரண்டுபதுமைகளையுடைய சிங்காதனத்தின் முதற்படியில் வலதுபாதத்தைத் தூக்கிவைத்தமாத்திரத்தில் அப்படிக்குக்காவலாக இருக்கிறசிரோமணியென்னும பதுமையானதுபார்த்து இருகரமுங்கொட்டிகுலுங்கச்சிரித்துச் சொல்லுகின்றது ஓ போஜமகாராஜனே என்காவலைமீராதே இப்படியிலேறாதே நில்லும் யான்சொல்லும் செய்தியைக்கேளும சந்திரசருமன் புத்திரனாகிய விக்கிரமார்க்க ராஜனேறிய சிங்காதனம்இது தேவேந்திரனால் கொடுக்கப்பட்டது எங்கள் விக்கிரமார்க்கப் பூபதியைப்போல்உதவிஅன்புஇரக்கம் தேவபத்தி கொடைபுண்ணியம்சாந்தம் நீதி பொறுமை பரிசுத்தவிவேகம் துணிவுதெய்வதத்துவம் இவைமுதலான நன்மைகள் உம்மிடத்திலிருந்தால் இந்தசிங்காசனத்திலேறத்தகுமென்று சொல்ல அதற்குப்போஜராஜன்வெட்கித் தலைகுனிந்துசொல்லுகிறான் வாசாய் முதற்படிக்குக்காவலாகிய சிங்கார சிரோமணியென்னும்பதுமையே அந்தவிக்கிரமார்க்கன் இவ்வளவு நற்குணங்களுடனிருந்தும் உலகத்திற்கு என்னவுதவிசெய்தான் சொல்லென்னபதுமைசொல்லும்.

கதைகளினுடையவரலாறு - முற்றிற்று.

## முதலாம்படிக்குக்காவலாகிய

## சிங்காரசிரோன்மணிப்பதுமைசொல்கதை.

கேளும்போஜராசனே எங்களாண்டவனாகிய விக்கிரமார்க்கன் இந்தச்சிங்காதனத்திலிருந்து செங்கோல்செலுத்தி அரசாளுநாளையிலேசாந்தசீலமகாரிஷியென்கிறவர் உச்சினிமகாளிகோயிலுக்கு வடக்கேமயானபூமியில் யாககுண்டம்வெட்டி அதில் ஒருபிணத்தை வளர்த்திஅதன் மார்பிலே ஓமாக்கினிமூட்டி நெடுங்காலங்கொடூரவேழ்விசெய்து மாகாளிதோத்திரஞ்செய்கையில் அக்காளிதேவிதெரிசனையாகிச் சாந்தசீலரிஷியே உமக்கென்னவரம்வேண்டுங் கேளுமென்ன சாந்தசீலன்மகாகாளிமாதேவியே எனக்கொருக்காலும் மரணமில்லாமலும் நானினைத்தகாரியம் நிறைவேறவும் நானெப்பொழுதுஉன்னை நினைக்கிறேனோ அப்பொழுது நீபிரசன்னமாகவும் விக்கிரமார்க்கன் சிங்காதனம் எனக்குக்கிடைக்கவும் வரந்தரவேண்டுமென்ன காளிகாதேவியானவள் சாந்தசீலனே நீநினைத்தபடியே தருகிறேன் மகுடமன்னர்கள் சிரசு ஆயிரஞ்சிரசுஎனக்கு பலிதந்தாயானால் உன்னுடைய எண்ணப்படி வரந்தருவேனென்றுசொல்லிப் போனபின்பு சாந்தசீலன்காளிகாதேவிக்குத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மகுடமன்னர்தலைகளைப்பலிகொடுத்து இன்னுமொரு விக்கிரமார்க்கன் தலைதான் கொடுக்கவேண்டுமென்றுமனதிலே கபடமாகநினைத்துவிக்கிரமார்க்கபூபதி ஒருநாள்மந்திரிபிரதானிப்பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்வேதவேதியர்கள்புடைசூழக்கோடிச்சூரியபிரகாசமாகியசிங்காதனத்தில் வீற்றிருக்கிறதருணத்தில்காவிகாம்பரசடாசடவியாகியசாந்தசீலனென்கிறமுனிவர்நித்தியம்ஒருமாதளம்பழம்கொண்டுவந்துவிக்கிரமாதித்தன்முன்னே வைத்துக்கண்டுபோவார் இப்படிகண்டுவருகிறகாலத்தில் ஒருநாள்கொண்டுவந்தபழத்தைக்கீழேவைக்க ராஜாவினுடைய குமாரனதைக்கண்டுதனதுகையிலெடுத்துக்கொண்டுபோய்ச் சிங்கரியென்னுங் கற்கடகத்துக்குக்கொடுக்கஅது வாங்கிப் பட்சிக்கையில் அதினுள்ளேயிருந்த விலையில்லாத இரத்தினங்கள்கீழேசொரிவதை இராசன்கண்டுஇதுவரைக்குங்கொண்டுவந்து கொடுத்தபழமெல்லாம்எங்கென்று கேட்குமளவில்பொக்கிஷக்காரர் பழங்களியாவையுங்கொண்டுவந்து இராசன்முன்னேவைக்கஅப்பழங்களைப்பிளந்துபார்க்குமளவில் அவைகளிலேயுமப்படியேரத்தினமிருக்கக்கண்டு விக்கிரமாதித்தன் ஆச்சரியப்பட்டு இதுவரைக்கும் அந்தமுனியீஸ்வரனாவிசாரியாமற்போனேனென்றுவிக்கிரமாதித்தன்அம்முனியைநோக்கிஉமக் கென்ன வேண்டுமென்றுகேட்க அந்தமுனியானவர்சொல்லுவார் எனக்கொருகாரியமுண்டு அதைச்செய்கிறதானால் சொல்லுமென்றார் அப்படியே செய்வே

னென்றுஉறுதியானவாக்குஅவ்வரசன்கொடுத்தபின்புஅதுவேசமயமென்றுகருதிநீர்கிருஷ்டபக்ஷ சதுர்த்தசியினன்றிராத்திரியில்நாமிருக்குமயானத்துக்குவரவேண்டுமென்றுசாந்தசீலனென்கிறமுனிசொல்லஅப்படியேவருகிறேனென்றுஇம்முனியையனுப்பிவிட்டுஇராசாவும் கிருஷ்ணபட்சசதுர்த்தசியின்றிராத்திரியில் வில்லையெடுத்துக்கச்சைகட்டிக்கொண்டு வீரசடைபின்னிவிபூதிதூளிதம்பண்ணிபதினெட்டுஆயுதங்களைக்கட்டி அர்த்தராத்திரியில்சாந்தசீலனைத் தேடிக்கொண்டுவந்தான்சாந்தசீலருங்கண்டுசந்தோஷித்து வாரும்விக்கிரமாதித்தனே உம்மையழைத்தகாரியம் இந்தமயானத்தில் ஒருமுருக்கமரத்தின்மே லுயர்ந்தகிளையிலொருவேதாளந்தொங்குகின்றது அதுஒருவர்கையிலுமகப்படாது நீமகாபலவானானபடியினாலே உம்முடையகையிலகப்படும் அதைஎப்படியாகிலும் உபாயத்தினால்பிடித்துக்கட்டிக்கொண்டு வந்துஎன்முன்னேவிடவேண்டுமென்று சாந்தசீலன்சொல்ல அப்படியேசெய்கிறேனென்று இராசாவும் முனீஸ்வரரிடத்துவிடைபெற்று மகாவிசாலசம்பொருந்தியவனாந்திரத்தின் முருக்கமரத்தைத்தேடிப்போகையில் அம்மரத்திலுயர்ந்தகிளையிற்றலைகீழாகத்தொங்குகிற வேதாளத்தைக்கண்டுபிடித்துக்கட்டி தோளில்வைத்துக்கொண்டுவரும்போது வேதாளமானதுசொல்லும்வாருமையா இராசனேநமக்குவழிதுலையவேண்டும்ஆகையால்அதற்கொருகதைசொல்லுகிறேன்நீவிடைகொடுக்காதிருந்தாலுன்தலைவெடித்துப் போகசாபமிடுவேனென்று வேதாளஞ்சொல்ல அப்படியேவிக்கிரமாதித்தனுங்கதைக்கு விடைகொடுக்கிறேனென்றான் அப்பொழுதேவேதாளஞ்சொல்லத்தொடங்கிற்று.

## சிங்காரசிரோண்மணிப்பதுமைகதை- முற்றும்,

## முதலாவது-பத்மாவதிசரித்திரம்.

தேவபுரமென்னும்பட்டணத்தில்பிரதாபவுதானனென்றும் ஒருராசனுண்டு அவனுக்குவச்சிரமகுட னென்றொருபுத்திரனும் அவ்வரசன்மந்திரிக்கொருபிள்ளையுமுண்டு, இவ்விருவிளைஞரும் விநோதார்த்தமாகடாதமொருநாள் வேட்டைக்குப்புறப்பட்டு இருண்டதோப்புகளிலும் அடர்ந்தகாடுகளிலும் உட்புகுந்துவேட்டையாடுகையில் அவ்வாரணியமானவனத்தினடுவிலிருக்கின்றதடாகத்தில் ஒருஸ்திரீயானவள்சலக்கிரீடைபண்ணுகின்றவளை இராசகுமாரன்கண்டு அவள்பேரில்மோகித்து நின்றான்அத்தடாகத்தில்சலக்கிரீடை பண்ணுகிறஸ்திரீயும இவ்விராசகுமாரன்தன்னைநோக்கிநிற்பதைக்கண்டு அதிகவிரகங்கொண்டு அந்தத்தடாகத்திற்புட்பித்திருக்குங்கமலங்களில் தனதுகையினாற்றாவி ஒருகமலத்தைக்கொய்துதன்னிருகண்ணிலும் ஒற்றிப்பல்லினால்கடித்துக்கால்மேற்போட்டுக் கொண்டாள்மறுமடியும் ஒருகமலத்தைக்கொய்து மார்பிலணைத்துத்தலையில்வைத்துப்பட்டணம்போனாள் அதன்பின்பு இராசகுமாரன்மந்திரிகுமாரனையழைப்பித்து அவள்சைகைபண்ணினவகைகளைச்சொல்லி இதற்குவிபரமேதென்றுகேட்க மந்திரிகுமாரன்சொல்லுகிறான் வாருமையாஇராசகுமாரனே அவள்கமலத்தைக்கொய்து கண்ணிலொற்றினதுதானிருப்பதாகண்ணபுரமென்றும் பல்லிற்கடித்தது தன்பெயர்பத்மாவதி என்றும்தன்காலிற்போட்டது தன்தகப்பன் பெயர்காலிங்கராயனென்றும் மார்பிலணைத்த

துதன்னண்டைக்கு வந்தாலவனைகிறேனென்றும் தலையில்வைத்தது இரக
சியமாகவரசசொன்னது இந்தச்சைகைக்குஇதுவேவிபரமென்றுமந்திரிகு
மாரன்சொல்லக்கேட்டு இராஜகுமாரன்அதிகசந்தோஷத்தோடுபட்டணம்
வந்துதனதுரதகஜதுரகபதாதிகளை நிறுத்தித்தானும்மந்திரிகுமாரனுமாக
அவளிருக்கும் பட்டணத்தைத்தேடிப்போய் அவ்விராஜகுமாரத்திக்குப்பூ
ச்சென்டுகட்டிக்கொடுக்குமொர் அம்மையார்வீட்டிலிறங்கி யிருந்துஅவ்வ
ம்மையாரைத்தங்கள் கைவசம்பண்ணினபின்புதாமரைத் தடாகத்திற்சை
கைபண்ணிவந்தவர்த்தமானமெல்லாம் அவ்வம்மையாருடனேசொல்லி இ
ராசகுமாரத்தியண்டைக்கு அனுப்பினார்கள் அவளும்அந்தப்படிக்குப்பத்
மாவதியைக்கண்டு இராசகுமாரன்சொன்னவர்த்தமானமெல்லாம் அவளு
டனேசொல்ல அதுகேட்டுஇராசகுமாரத்தியும்சைகையாகப் பத்துவிரலை
யுஞ் சந்தனக்குழம்பிலேதோய்த்துத்தவடையிலடித்து ஓட்டிவிட்டாள்அ
ம்மையார் வெகுமனஸ்தாபத்துடனே திரும்பிவந்து இராசகுமாரனுக்குஅ
வள்தன்னைஅடித்தஅடியைக்காட்டிநீங்களென்னைக் கொல்லவல்லோவகை
செய்தீர்களென்றுதுக் கித்தழுதுநிற்பதைக்கண்டு இராசாவும்நமக்குள்ளா
னவ ளல்லவென்றுஅதிககோபத்துடனிருந்தான் அப்படியிருக்கிறராசா
னைப்பார்த்துமந்திரிகுமாரன் சொல்லுகிறான்நிலவு இன்னம்பத்துநாளிரு
க்கிறது அந்தப்பத்துநாளுங் கழித்தவுடனே வரச்சொன்னஅடையாளமெ
ன்றான் அப்படியேபத்துநாளுஞ்சென்று பதினொன்றுநாள் அம்மையாரு
க்குடன்படிக்கைச் சமாதானம்பண்ணிமறுபடியும் இராசகுமாரத்தியண்
டைக்குஅனுப்பினார்கள் அப்படியே அம்மையாரும்போய் இராச குமார
த்தியுடனேசொல்ல அவள்கோபித்துக்கொண்டு தனதுமூன்றுவிரலாற்கு
ங்குமக்குழம்பிற்றோய்த்துத் தூதிமார்பிலடித்து உடனேவேறொருகள்ள
வழியாகவோட்டிவிட்டாள் அவ்வம்மையார்திரும்பிவந்து தான்போனவர்த்த
மானமும் அவளுடனேசொன்னவிபரமும் அதற்குஅவளடித்துக்கள்ளவ
ழியாகப்போகச்சொல்லி யோட்டினதையுந்தெரியச்சொன்னாள் இராசகு
மாரன் அதிகவிசனத்துடனே துக்கிப்பதைமந்திரிகண்டு சொல்லுகிறான்
அவளுக்குமாதவிடாயானதால் மூன்றுநாளுங்கழித்தவுடனே எப்போது
வருகிறவழிவாராமல்கள்ளவழியுங்காட்டி யனுப்பினதென்றுமந்திரி குமார
ன்சொன்னதைக்கேட்டு இராசகுமாரன் சந்தோஷப்பட்டு அப்படியேமாத
விடாய்நாள் மூன்றுங்கழித்தவுடனே நாலாநாள்கந்தபரிமளகஸ்தூரிப்பூசி
க்கொண்டுபட்ட ஆபரணங்களணிந்து உல்லாசமாய்அந்தக்கள்ளவழியாக
நிலவறையிறபோய் இராஜகுமாரத்தியைக்கண்டு சந்தோஷித்து அவளுட
னேபத்துநாள் கூடிப்போகித்துக்கொண்டுவருகையில் இருவருங்கூடியி
ருக்கிற மன்மதபோகத்திலே மந்திரிகுமாரனை நினையாமலிருந்தபின்புமந்
திரியைநினைத்துக்கொண்டு ஒருநாளும்விட்டுப்பிரியாததாம் இவனுடைய
பிரியமாகிய விரகத்திலேமந்திரியைப்பிரிந்தோமென்று வியாகூலப்ப

ட்டிருந்தான் அதுகண்டுஇராசகுமாரத்தியானவள் இராசனைநோக்கிதேவ
ரீர்இத்தனைநாளும்போலேசந்தோஷமாயிருக்கவில்லை இன்றையதினத்தி
ற்குத்துயரத்துடனே யிருப்பதென்னென்றுகேட்க இராசன்சொல்லுகிற
ன்வாராய்என் அமிர்தமாகியதேனேயென்பின்னேவர்த சினேகிதனாகியம
ந்திரிகுமார னிருக்கிறான்அவனைநான்ஒருநாளும் விட்டுப்பிரிந்ததில்லைய
த்துநாளாய் விட்டுப்பிரிந்தோமென்கிறமனஸ்தாபமொழிய வேறொருசிந்
தையுமில்லையென்றான் அதுகேட்டுஇராசன்கன்னிகை கோபித்துக்கொ
ண்டவள்போல எழுந்துதனதுஅரண்மனையில் தன்னைக்காத்திருக்குந்தா
திகளையழைத்து விஷங்கொண்டுவரச்சொல்லி அவ்விஷத்தைக்கச்சாயங்க
ளில்கலந்துக்கொண்டுவந்து இராசன்கையில்கொடுத்து இந்தக்கச்சாயங்க
ளைக் கொண்டுபோய்மந்திரிகுமாரனுக்குக்கொடுத்துச்சாப்பிடச்சொல்லிய
பின்பு அவளை அழைத்துவாருமென்று அனுப்பினாள்அப்படியே இராசா
வும் அக்கச்சாயங்களைக்கொண்டுவந்து மந்திரிகுமாரன்கையில்கொடுத்து
சாப்பிடச்சொன்னான் மந்திரிகுமாரன்அக்கச்சாயங்களைவாங்கிப்பார்த்துஇ
ராசனைநோக்கி என்னைக்கொல்லவல்லோ இக்கச்சாயங்களைக்கொண்டுவந்
தீர்என்றுசொல்வதை இராசன்கேட்டு திகைத்துநின்றான்நம்மை இவன்
இப்படிச்சொல்லலாமோ நான்பட்சத்துடனே கொண்டுவந்துகொடுத்தால்
வாங்கிச்சந்தோஷமாகப் புசியாமல்இப்படிச்சொன்னானென்றுமனதிலேகோ
பங்கொண்டிருந்தான் அதைமந்திரிகுமாரன்கண்டு வெளியிலெழுந்துஒரு
காயைக்கண்டு அதன்முன்னேஅக்கச்சாயத்தைவைத்தான் அதுவக்கச்சா
யத்தைப்புசித்து உதைத்துக்கொண்டு செத்ததைஇராசகுமாரன்கண்டும
ந்திரிகுமாரனை அணைத்துக்கொண்டு இப்படிக்கபடம்பண்ணினதையறியா
மற்போனேனென்று இருவரும்ஆலோசனைபண்ணிக்கொண்டு அவள்நம்
மைக் கொல்லவல்லோ வகைபண்ணினாள்அவளைஎப்படியும் உபாயதந்திர
ம்பண்ணி நமமுடையபட்டணமேகொண்டுபோவோம் நீர்திரும்பவும்அ
வளிடம்போய் என்னைக்கண்டுபேசினதையும் கச்சாயங்கொடுத்த விபரங்
களையும் அவளுடனேமார்க்கமாகச்சொல்லி அங்கிருந்துஇருவருமசைச
யோகசோபித்திரைபண்ணுந் தறுவாயில்அவள்நித்திரையைச்சோதித்து
அவள்கழுத்தில்போட்டிருக்கிற முத்துததாழ்வடத்தைக் கழற்றிக்கொண்
டுஅவளுடைய ஸ்தனியத்தின்நடுவே மூன்றுவிரல்நகத்தால் புதையவூ
ன்றிவைத்து வாருமென்றுசொல்லியனுப்பினான் அப்படியேஇராசகுமார
னும் நல்லதென்றுபோய் அவளுடனேகூடியாடி அவளுக்குச்சரிபோனப
டிக்கெல்லாம் மன்மதகிரீடைபண்ணி அவள்நித்திரைசோதித்து முத்துத்
தாழ்வடத்தை கழற்றிக்கொண்டு அவன்அவளுடையநடுமார்பில்மூன்றுவி
ரல்புதைய கிள்ளிவைத்துவந்தான்பொழுதுவிடிந்தபின்பு மந்திரிகுமாரன்
யோகிபுருஷனாகவும் இராசகுமாரனைசிஷனாகவும், வேடம்போட்டுக்கொ
ண்டு சுடுகாட்டிலேபோய்த்தவம்பண்ணுவார்போலிருந்து இராசன்கையி
ல்முத்துத்தாழ்வடத்தைக்கொடுத்து எடுத்துக்கொண்டுபோய் விலைகூறும்

விலைகேட்டால்ஏறக்குறையச்சொல்லிஅரண்மனைவாயில்வழியாகவிலைகூற
க்கொண்டுபோம்இராசன்அழைத்துவிலைகேட்பான் எனக்குவிலைதெரியா
தென்றுஅவ்வரசனைநம்மிடத்திற்கு அழைத்துவாருமென்றுஇராசாகுமா
ரனைஅனுப்ப அப்படியேஇந்தஇராசகுமாரன் முத்துத்தாழ்வடத்தைவி
லைகூறி அரண்மனைவாயில்வழியாகப் போகையில் அந்தப்பட்டணத்துஇ
ராசன்அவனையழைத்து தாழ்வடமவிலையென்னவென்றுகேட்கஆனால்கே
ளும் இராசாவேதாழ்வடம்வேண்டுமென்றால் மசானத்தில்யோகிபுருடன்
தவம்பண்ணுகிறார்நீங்கள் அவரண்டைக்குவந்து விலைபேசிவாங்கிக்கொள்
ளுங்களென்றுசொன்னான். அப்படியேஇராசனும் எழுந்திருந்துசுடுகாட்டி
ல்தவமாயிருக்கிறயோகிபுருடனை நமஸ்காரஞ்செய்து இந்தத்தாழ்வடம்ம
காசேத்தியாயிருக்கிறதாகையால் இதுஉங்களுக்கு எதுவந்தவாறுசொ
ல்லவேண்டுமென்னதவஞ்செய்கிறவன்சொல்லுகிறான்கேளுமையாஇராச
னேநாம் இந்தச்சுடுகாட்டிலேதவம்பண்ணிக்கொண்டிருக்கையில்ஒருநாள்.
மகாசௌந்தரியமுள்ள ஒருகன்னிகையானவள் அர்த்தராத்திரியில்வந்து
வேவுகின்றபிணத்தை இழுத்துமுன்னேபோட்டுப்பிடுங்கித்தின்றுவயிறு
நிரம்பினவுடன் இந்தப்பட்டணம்போவாள் இப்படிதினமும்தின்றுபோ
கையில்இராத்திரி இவளுடையநிலைமையறியவேண்டுமென்று அவள்பி
ணத்தைத்தின்கையில் என்சூலாயுதத்தைஎடுத்து அவள்மார்பில்ஊன்றி
நீயாரென்றுகேட்க அவள்பயந்துதனதுகழுத்திலிருந்த முத்துத்தாழ்வட
த்தைக்கழற்றிஎன்கையிலே கைக்கூலியாகக்கொடுத்து ஒருவருடனேயும்
இந்தவர்த்தமானத்தைச்சொல்லாதேயென்றும் தனதுபெயர்பத்மாவதியெ
ன்றும் தான்மனுஷரைப்பிடுங்கித்தின்னாவிடில் தன்பசிதீராதென்றுஞ்சொ
ல்லிப்போனாள் அப்படிப்பட்ட அதிசயமென்றுசொல்லித் தாழ்வடத்தை
இராசன்கையிற்கொடுத்தான் இராசன்இதைக்கேட்டுப் பயந்துதனதுஅர
ண்மனைக்குப்போய் தனதுகுமாரத்தியையழைத்துமார்பைத்திறந்துபார்த்
துமுத்துத்தாழ்வடத்தையும் அவளுக்குக்காட்டி உன்னுடையதாவெ
ன்றுகேட்டான் அவளும்வெட்கித்துக்கித்துத்தலைசாய்த்தாள் அதுகண்டு
இராசன்தன்மந்திரியுடன் இந்தவர்த்தமானமெல்லாம் சொல்லிஇதற்கு
ஆக்கினைஏதென்று கேட்கமந்திரிசொல்லுகிறான் பெண்கொலைசெய்தால்
ஸ்திரீயத்திவரும் ஆகையால்ஊர்கடக்கவோட்டிவிடுகிறதே தருமமென்று
சொன்னான் அந்தப்படியேஇராசாவும்சம்மதித்து அவளைப்பட்டணம்விட்
டுக்காட்டிலேயோட்டிவிட்டான் அந்தவேளையில்இராசகுமாரனும்மந்திரிகுமா
ரனும்பழயவேடங்கொண்டு அந்தஇராசகுமாரத்தியைக்கண்டு தங்கள்பட்
டணத்திற்கொண்டுபோனார்கள் அவள்போனபின்புஇராசன்புத்திரிசோப
த்தினாலே ஏங்கியிறந்தான் அதுகண்டுஇராசாவின் தேவியும்புருஷனும
பெண்ணும்போனார்களென்று விசனமுற்றுறங்கிச் சீவனைவிட்டாள்அவர்
கட்செத்ததோஷம் ஆருக்கென்று வேதாளம் விக்கிரமாதித்தனைக்கேட்கவிக்

கிரமாதித்தன் சொல்லுகிறான்மந்திரிகுமாரன் சொன்னபடி இராசகுமாரன்செய்தான்செத்துப்போன இராசாவின்மந்திரிவிசாரியாதபடிக்கு ஓட்டிவிடச் சொன்னமையாலும்மந்திரிக்குத் தோஷமென்றுசொல்லவேவேதாளங்கட்டவிழ்த்துக் கொண்டுபழையபடியேயோடி முருக்கமரமேறிக்கொண்டது.

பத்மாவதிகதை-முற்றிற்று.

---

## உ-வது-மந்திராவதிசரித்திரம்.

மறுபடியும் விக்கிரமாதித்தன்வேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது

பிரமசக்கரமென்னும் அக்கிராரத்தில்சடகோபிய னென்றுஓர்பிராமணனுண்டு அவனுக்குஓர்குமாரத்திஅவள்பெயர் சின்னியாளென்றுசொல்லப்படும் அவளைக்கலியாணம்பண்ணிக்கொள்ள வேண்டுமென்றுமூன்றுபிராமணப் பிள்ளைகள்வந்துஅந்தபெண்ணின் தமையனையொருவனு கேட்டான் அவன்வருகிறேனென்று வாக்குக்கொடுத்தபின்புஒருவன்அந்தப்பெண்ணின் தாயாரைக்கேட்டான் அவளுந்தருகிறேனென்றுகேட்டவனுக்கு உறுதிசொன்னபின்பு வேறொருவன் பெண்ணின்பிதாவைக்கேட்டான் அவனும்அவனுக்குத்தருகிறேனென்று நிசவாக்குக்கொடுத்தான் இவ்விதமாக ஒருவரைஒருவர் அறியாமல்ஒருவரொருவரைக் கேட்டுபோன மூவரும்வந்து உனக்கெனக்கென்றுவியாச்சியப்படுகையில் அந்தப்பெண் மனைஷதாபத்தினாலே தெய்வீகமாயிறந்துபோனாள் அவளைக்கொள்ளவந்த மூவரும்மகாவிசன முடையவர்களாகிஒருவன் தகனம்பண்ணினசாம்பலைக்காத்திருந்தான்வேறொருவன் அஸ்தியையெடுத்துக்கொண்டு காசியாத்திரைபோனான் மற்றொருவன்தேசாந்திரியாகப் பூமியெங்குந்திரிகிறபோது ஓரக்கிராரத்திலேபிராமணன் வீட்டிலேஅசனங்கேட்கல்லதென்றபடியால்அங்கிருந்தான் அவ்வீட்டுபிராமணத்திதன் பிள்ளையின்மேல்கோபமாகிஅக்கினியிலேதள்ள அப்பிள்ளை தகனமாகிப் போனதைக்கண்டு அசனம்பண்ணாமலிருக்கும் பிராமணன்கண்டுவாராய்பிராமண ஸ்ரீயே நீபிள்ளையைக்கொன்றபடியால் உன்வீட்டிலே அசனம்பண்ணுகிறதில்லையென்றான்அவளுஞ்சிசுபாவத்தால் உடலுண்டாக்கிச் சஞ்சீவிமந்திரத்தால்உயிர்கொடுத்து அந்தப்பிள்ளையையுங்கூடவைத்து அசனமிட்டாள்பிராமணன்ஆச்சரியப்பட்டு அந்தப்பிராமணஸ்திரீயைச் சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சிசுபாவம்இன்னதென்று வெளியாக்கிச்சஞ்சீவிமந்திரத்தையும் உபதேசம்பண்ணிச் சுடுகாட்டில்சேர்ந்தான்யாத்திரைபோன பிராமணனும்வந்தான் காத்திருந்தபிராமணன்முன்னே அவளைத்தகனம்பண்ணி அஸ்தியெல்லாமில்லை யென்றுசொல்லயாத்திரைபோனவன் காசிக்குக்கொண்டுபோனஅஸ்தியையுங்கொண்டு வந்தேனென்றுகொடுக்கமயானத்திலிருந்த அஸ்தியெல்லாமெடுத்துத் தான்கற்றுவந்தசிசுபாவத்தாலே சடலமுண்

டாக்கிச் சஞ்சீவிமந்திரத்தாலே அச்சடலத்துக்குஉயிர் கொடுத்தவுடன் அவள்பழையபடி எழுந்தமையால் அவளைக்கலியாணம்பண்ணுவது நான்நீயென்றபடி வழக்குள்ளவரானார்களாகையால் அவளாருக்குப் பாரியாளாகவேண்டுமென்றுவேதாளமானது விக்கிரமாதித்தனைக்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகின்றான் அஸ்தியையெடுத்துக்கொண்டு காசியாத்திரைபோனவன் பிள்ளையாகவேண்டும் எழுப்பினவன் தகப்பனாகவேண்டும் சுடுகாடுகாத்திருந்தவன் புருஷனாகவேண்டுமென்று விக்கிரமாதித்தன்சொல்லவேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடி முருக்கமறிக்கொண்டது.

மந்திராவதிகதை-முற்றிற்று.

### ௩-வது-பிராமணப்பிள்ளைகள்சரித்திரம்.

பின்னும்விக்கிரமாதித்தன் மரத்திலேறிவேதாளத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில்வேதாளஞ்சொல்லுங்கதையாவது

கேளாய்விக்கிரமாதித்தனே அங்கதேசமென்றுஒருபட்டணம் அந்தப்பட்டணத்திலே ஆதிவிஷ்ணுவென்றுஓர்பிராமணனுண்டு அவனுக்குமூன்றுகுமாரர்களும் உயோகதானென்கிறஇராசாவைக்கண்டு காத்துக்கொண்டிருக்குமளவில் அவர்களைஅந்தராசன் அழைத்துநீங்களென்னவிதமறிவீர்களென்றுகேட்டான் ஒருவன் போசனசுகமறிவேனென்றான் மற்றொருவன்ஸ்திரீசுகமறிவேனென்றான் வேறொருவன்நித்திரைசுகமறிவேனென்றான் இப்படி மூவரும் மூன்று விதமாகச்சொல்லஇராஜனும் அவர்களைச்சோதிக்கவேண்டுமென்றுபோசனசுகமறிவோனுக்கு ஓர்பிராமணன்வீட்டிலேசாப்பாடிடச்சொன்னார் அப்படியேசாப்பிட்டபின் இராஜாவைக்கண்டுபோசனஞ்சுடுநாற்றமென்று சொல்வதுகேட்டுவிசாரிக்குமளவிலே சுடுகாட்டுச்சாம்பலையெருவாகப்போட்டநிலத்தில்விளைந்தநெல்லரிசியென்று சொன்னார்கள்இராஜாவுஞ் சந்தோஷப்பட்டுஸ்திரீசுகமறிவோனையழைத்துத் தன்னுடையநாடகசாலைப் பெண்களிலே அதிசுரூபமாயிருக்கிறவர்களைச் சிங்காரித்துப்பள்ளியறையிலே போய்ப்பிராமணனுடனேகூடியிருவென்றுசொல்லஅப்படியேஅவளை இந்தப்பிராமணன்அனுபோகித்தபின் இராசாவின்பக்கத்திலேவந்து அவள்கொப்புநாற்றமுள்ளவளென்று சொல்லஅரசனுந்தனது நாடகசாலைப்பெண்களுக்கெல்லாந்தலைவியாயிருக்கிறவர்களையழைத்து இந்தப்பெண்ணினுடையசாதிமானமேதென்றுகேட்க அவள்ராசனைநோக்கிசுவாமி அந்தப்பெண்ஆயர்குலமென்றுசொல்லக்கேட்டு இராசாவுஞ்சந்தோஷித்து நித்திரைசுகமறிவோனையழைத்து ஓர்வீட்டில்கட்டில்மெத்தைபோட்டு காம்பரிந்தபுட்பங்களைஅதில்பரப்பி நித்திரைபண்ணச சொன்னான் அவனும்நித்திரைபண்ணிஎழுந்திருந்து வந்துஉடம்பெல்லாம் நோகிறதென்றுசொல்வதைஇராஜன்கேட்டுத்தாதிகளைவிட்டுச சோதிக்கச்சொல்லி நிரூபித்தபடிசோதித்துப்பார்க்குமளவில் புட்பத்தில்ஓர்மயிரிருந்ததென்றுசொன்னார்கள் இராசா

வுஞ் சந்தோஷப்பட்டு மூன்றுபெயரையும் தன்னிடத்தில்வைத்து நடப்பித்துவந்தான் இந்தமூன்றுபெயருக்குள்யாரதிகமென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன் சொல்லுகிறான்ஸ்திரீசுகமறிந்தவன் அன்னசுகமறிந்தவன் இவர்களிருவரும் புத்தியினாலேசொன்னதாகையால் நித்திரைசுகமறிந்தவன்சொன்னதே யதிகமென்றுவிக்கிரமாதித்தன் சொல்லவேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழயபடியேயோடிமுருக்கமரமேறிக்கொண்டது.

பிராமணப்பிள்ளைகளசரித்திரம்-முற்றிற்று

## ௬-வது-சூரியன்-சரித்திரம்.

விக்கிரமாதித்தன் அம்மரத்தடியில் தொங்குகிறவேதாளத்தைப்பிடித்துக்கட்டித் தூக்கிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ்சரித்திரமாவது

கேளாய்விக்கிரமாதித்தனே உச்சினியென்றொருபட்டணமுண்டுஅந்தப்பட்டணத்திலேஅர்ச்சுனசுவாமியென்றொருபிராமணன் அவனுக்குமகாசவுந்தரியமுள்ள ஓர்பெண்பிறந்ததுஅவளைப்பிலவயதாயில்வைத்துவளர்த்தான் இப்படியிருக்கிறநாளையில் அவளுடையவடிவின்விடாலியத்தைக்கேள்விப்பட்டு அவளைவிவாகம்பண்ணிக்கொள்ள வேண்டுமென்றுஞானியென்றும்விக்கிரம ஞானியென்றும்சூரனென்றும் மூன்றுபேர்கள்வந்து அவளைத்தங்களுக்குத்தரச்சொல்லிக் கேட்கஅவளுடைய தாய்தந்தைகள் மூவரிலொருவனுக்குக் கொடுக்கிறோமென்றுசொல்ல இப்படியிருக்கிறசமயத்திலொருராட்சசன்வந்துஅந்தப்பெண்ணையெடுத்துக்கொண்டுபோனான்

அதுகண்டுதாயுந்தகப்பனும் படுகிறமனஸ்தாபத்தைப்பார்த்துவிக்கிரமஞானிசொல்லுகிறான்நானொருரதம்பண்ணித் தருகிறேன்அதின்பேரிலேறிக்கொண்டுபோய் இராக்ஷதனைசெயித்து வருவாருண்டோவென்று சொல்லச்சூரனென்கிறவன் நான்போய்ச்செயம்பண்ணிவருகிறேன் ரதம்பண்ணித் தாருமென்னஅப்படியேவிக்கிரமஞானி சூத்திரனாலேஆகாயமார்க்கத்தில் பறக்கத்தக்கதாய்ரதஞ்சோடித்துக் கொடுத்தான்ஞானியென்கிறவன் ஞானம்பார்த்துஇராக்ஷதன்அந்தப்பெண்ணை யெடுத்துக்கொண்டுபோயிருக்கிறநிலைசொன்னான்சூரனும்அயித்தசம்சட்சணையுடனே இரதத்திலேறிப்போய் அந்தஇராட்சஸனுடனே போர்செய்துகடைசியிலவனைச் சிரச்சேதம்பண்ணிப்பெண்ணை இரதத்தின்மேலேற்றிக்கொண்டு வந்துஅவள்தாய்தகப்பன்மாளிகத்தில் விட்டான்அம்மூவரில்அந்தப்பெண்ணையாருக்கு விவாகம்பண்ணிக்கொடுக்கவேண்டுமென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன் சொல்லுகிறான்ஞானத்தினாற் சொன்னதுஞ்சூத்திரத்தினால்ரதஞ்சோடித்ததும் அதிகமல்லஅவ்விராட்சதனைச்செயித்துஅவளைக்கொண்டுவந்ததேயதிகம் அவனுக்கவள்ஸ்திரீயாகவேண்டும்அவனேஅவளுக்குப்புருஷனாக வேண்டுமென்னவேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டுபழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.(சூரியன்சரித்திரம்-முற்றிற்று)

## ரு-வது-நீதிவம்சகேதுசரித்திரம்

மறுபடியும்வேதாளத்தை விக்கிரமாதித்தன்பிடித்துக்கட்டித்தூக்கிக் கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ் சரித்திரமாவது

சோமவேதிகையென்று ஓர்பட்டணத்திலே நீதிவம்சகேதுவென்றொருராசனுண்டு அந்தராசனோக்காக்கின்றபத்திரகாளிக்கு அனேகவிஸ்தாரமானசவுக்கியத்துடனேகோயில் கட்டித்தேர்திருவிழா நடப்பித்துவருகிறநாளில் அந்தமண்டபத்திலுண்டானசனங்களெல்லாம் வந்துபார்க்கையில்அந்தச்சனங்களில்ஒருபெண்ணை யொருவன்கண்டு ஆசைப்பட்டு அந்தப்பத்திரகாளியைப் பார்த்துச்சொல்லுகிறான் அந்தப்பெண்என்னை விவாகம்பண்ணினளானால் என்னுடையசிரசைஉன்னுடைய பாதாரவிந்தத்திலேசெலுத்துகிறேனென்று பிரதிக்கினைபண்ணித் தன்னுடையதாய்தகப்பன்மாருடனேதான் அந்தப்பெண்ணை விவாகம் பண்ணவேண்டுமென்றான் அப்படியேஅவர்களும் அந்தபெண்ணிருக்கிற பட்டணத்தைவிசாரித்துப்போய் பெண்ணின் தாய்தகப்பன் மாரைக்கண்டுகேட்க அவர்களும்நல்லதென்றுசம்மதித்துக்கலியாணம் பண்ணிக்கொடுத்தார்கள் அப்படியேஅவ்விடத்திலிருந்து தன்பட்டணத்திற்குப்போனான் பின்னையுஞ்சிலநாளுக்குப்பின்தன்னுடையகுமாரனைக் கூட்டிவிட்டுத்தங்கையைப்போய்அழைத்துவரச்சொல்லிஅனுப்பினான் அவனும்போய்மைத்துனனையும் தங்கையையும்அழைத்துக்கொண்டுவருகையில் ஓர்பத்திரகாளிகோயிலிருக்க அவ்விடத்திலிருக்கிற தடாகத்திலேதண்ணீர்குடித்துநிழலுக்கிரங்கியிருந்தார்கள் அப்படியிருக்கையில் அந்தப்பெண்ணினுடையபுருஷன் காளியைச்சேவித்துவருகிறேனென்றுபோய்க் கோயிலுக்கெதிராகயிருக்கின்றமரத்தின்கிளையில் தன்தலைமயிரைமுடித்து கழுத்தைஇருதுண்டமாக அறுத்துக்கொண்டான்பின்பு அந்தப்பெண்ணின்தமையன்போனமனிதனைப் பார்த்துவருகிறேனென்றுபோய்த் தன்மைத்துனன் அவ்விடத்திலேபிரேதமாய்த்தொங்குவதைக்கண்டு தானுமப்படியேமயிரைக்கிளையில் முடிந்துகொண்டுகழுத்தையறுத்துக்கொண்டான் போன இருவருமவரவில்லையென்று அந்தப்பெண்ணும்போய்பார்த்துத்தமயனையும் புருஷனையுங்கழுத்தறுத்து இருதுண்டமாயிருக்கக் கண்டு அவளுங் காளி முன்பாகக் கழுத்தை யறுத்துக்கொள்ளப்போகையில் காளியானவள் பதறாதேயென்று கையமர்த்தியென்னவரம்வேண்டுமோ கேளென்றுசொல்லப் புருஷனையுந்தமையனையுமெழுப்பிவிடவேண்டுமென்று சொல்லஅப்படியே எழுப்புகிறேன்தலையும் உடலும்ஒன்றாய்ச்சேரென்றாள் நல்லதென்று இருதலைகளையும்மாறுபாடாக ஒருடல்களோடு சேர்த்து வைத்தாள் காளி யானவள் அவர்களிருவரையு மெழுப்ப அவர்களுடைய அங்கத்தைப் பார்த்து இந்தப்பெண்விசாரமுற்றிருந்தாள் ஆகையினாலிவ்விருவரில் அவளாருக்குப்பாரியாக வேண்டுமென்று வேதாளங் கேட்கவிக்கிரமாதித்தன் சொல்லுகிறான் புருஷன் முகந்தமையனுடலிலும் தமையன்முகம்பு

ருஷனுடலிலும் மாறுபாடாகச் சேர்க்கப்பட்டமையால் அவ்விருவரில் யாரிந்தப்பெண்ணைக் கண்டவுடன்பெண்சாதியென்று மரியாதைபண்ணுவானோ அவனே அவளுக்குப் புருஷனாக வேண்டுமென்று விக்கிரமாதித்தன் சொல்லக்கேட்டு அந்தவேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டுபழையபடி முருக்கமரத்தி லேறிக்கொண்டது.

நீதிவம்சகேதுசரித்திரம்-முற்றிற்று.

கூ-வது-கிளிசரித்திரம்.

பின்னும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்துகட்டிக்கொண்டு இறங்கிவருகையில் வேதாளஞ்சொல்லும் சரித்திரமாவது.

பாடலிபுரமென்கிறபட்டணத்திலே விக்கிரமகேசரியென்றொருராஜனுண்டு அவனுக்குப்பாரக்கிரம கேசரியென்றொரு குமாரனுண்டு அவன் பஞ்சவர்ணக் கிளியொன்று வளர்த்தான் அக்கிளியானது செல்காலம்வருங்காலம் நிகழ்காலமென்னப்பட்ட மூன்றுகாலமுஞ்சொல்லும் இப்படியிருக்கிறநாளில்இராசகுமாரன் அந்தக்கிளியைப்பார்த்துமுக்காலத்திலும்நடக்குங்காரியங்களைச்சொல்லுகிறாயேயெனக்குவிவாகமெப்போதாகுமென்று கேட்க. கிளிசொல்லுகிறது ஓராசனே வேதபுரியென்னும் பட்டணத்தில் மகாதரனென்கிற ஒருராசனுண்டு அவன் அனேககாலம் தவம்பண்ணினதால் ஓர்பெண்பிறந்தது அதற்கு இராக்கசியென்றுபெயருமிட்டு நிலவறையில்வைத்து வளர்க்கின்றான் அவளிப்போது பருவமாயினாள் அப்படியிருக்க அந்தப்பெண்ணும் ஓர்பஞ்சவர்ணக்கிளிவளர்க்கிறாள் அதுவுமுக்காலத்திலு நடக்குங்காரியங்களையறிந்துசொல்லும் ஆகையால் அக்கிளியையிராசகுமாரத்திதனக்குப் புருஷனெங்கே யிருக்கிறானென்றுகேட்க, கிளிசொல்லுகிறது பாடலிபுரமென்னும் பட்டணத்தில் விக்கிரமகேசரியென்கிறராசாவின்குமாரனாகிய பாரக்கிரமகேசரிக்கு வல்யப்போய்த் தேவியாவாயென்றுசொல்ல அந்தவார்த்தையை அவள்தனதுதகப்பனுடன் சொல்லஅவனுங்கிளிசொன்ன தொக்குமென்று தன்னுடையகுமாரத்தியைப் பல்லக்கின்மேலே உட்காரவைத்துக்கொண்டு அதுக்கேற்ற பேர்களையுங் கூட்டிக்கொண்டுவந்து கிளிசொன்னபிரகாரம் தன்குமாரத்தியைப்பராக்கிரம கேசரிக்கு கல்யாணம்பண்ணிக்கொடுத்தான் அப்போது புருஷனும்பெண்சாதியும் அறையிற் படுத்துக் கொண்டிருக்கையில் இராஜகுமாரனானவன் பெண்சாதியைப் பார்த்து நாமிருவரும் சந்தோஷமாய்ச் சுகத்தையடைந்திருக்கிறோம் நம்முடையகிளிகளிரண்டு மொன்றுக்கொன்று சந்தோஷமாயிருக்கவேண்டுமென்று இருவருடையகிளிகளையுமோர் கூண்டிலேவிட்டார்கள் அவைகளுஞ்சிறிதுநேரத்திற்குப்பின் ஆண்கிளியானது பெண்கிளியோடு மருவப்போகையில் பெண்கிளியானது மகாகொடுமைபொருந்தியமுகத்தோடு ஆண்கிளியைநோக்கி நிம்மை மருவவந்த காரணமேது ஆண்பிள்ளையானபேர்களை நம்பலாகாதென்றுசொல்ல அதற்கு ஆண்கிளியும்பெண்பிள்ளைகளை நம்பலாகாதென்று சொல்லஇப்படிவாதாடுகிறகிளிக

ளிரண்டும்சித்திரைபண்ணுகிற ராசாவையும் இராசகுமாரத்தியையும் எழுப்பித்தாங்களிருவரும் பேசினபேச்சையெல்லாம் அவர்களுடனே சொல்லி இந்தவழக்கைத் தீருங்களென்ன அப்படியே சம்மதித்துப் பெண்கிளியைப் பார்த்து நீ புருஷனை நம்பலாகாதென்று சொன்ன வர்த்தமானந் தெரியச் சொல்லென்றுகேட்க பெண்கிளிசொல்லத் தொடங்கிற்று கேளுமையாராஜாவே அபயஸ்தமென்கிறபட்டணத்தில் விரதவால்மீகனென்கிற ஓர்செட்டியுண்டு அவனுக்குத் தற்கேசரனென்றொருகுமாரனுண்டு அவன்திரவியசம்பன்னனாகையால் தாய்தகப்பன்சொற்படிநடவாமல் வேசிமார்களுக்குத் தகப்பன்தேடின திரவியமெல்லாம் கொண்டுபோய்ச் செலவழித்து எங்கோநுங் காமதுரந்தரனாய்த் திரிவதால் அவனைநிந்தித்து ஓட்டிவிட்டார்கள் அவனுஞ்சிலநாள் தேசாந்திரியாகத் திரிந்து அளகாபுரியென்கிற பட்டணத்தில் ஆடகனென்கிற வைசியன் வீட்டில்வந்துசேர்ந்தான் அவனையழைத்துத் தன்னிடத்திலிருக்கச்சொல்லித் தன்குமாரத்தி அலங்காரியென்கிறவளைக்கலியாணம்பண்ணிக் கொடுத்து சில பூஷணங்களையுங் கொடுத்துத் தன்னுதனத்துக்குக் கர்த்தனாகவைத்துநடத்திக்கொண்டுவந்தான் அப்படிச்சிலநாளிருந்தபின் தனதுமாமனாரையும்மாமியாரையும் நமஸ்கரித்துத் தன் தாய் தகப்பன்மாருடனே கோபித்துவந்து அநேகநாளாயிற்று ஆகையால் நானுமென் பெண்சாதியுமாகப் போய்ப் பார்த்துவருகிறோம் எங்களிருவரையும் அனுப்பவேண்டுமென்றுகேட்க அப்படியேசில திரவியத்தையும் பலபூஷணங்களையும் கொடுத்து அனுப்ப இருவரும் கொஞ்சதூரம்போகையிலவன் பாலஸ்திரிகளை நினைத்துக்கொண்டமையால் தன்மனையிற் கபடங்கொண்டு தன்னோடுகூடவரும்பெண்சாதியைப்பார்த்து பெண்ணே இவ்விடத்திற்கள்ளருண்டு நாமிந்தநகைகளை யெல்லாம்கழற்றிப் பத்திரமாகக்கொண்டு போவோமென்று அவள்பணிகளியாவையுங் கழற்றிக்கொண்டபின் அவளைஓர் பாழுங்கிணற்றில்தள்ளிப்போட்டு அந்தபாலஸ்திரீ அண்டைக்குப்போய்ச் சேர்ந்தான் அந்தப்பெண் கூவென்று கூக்குரலிட்டமுறையில் அவ்வழியிற்செல்லும் பாட்டைசாரிகள்கண்டுமிகவும் இரக்கமுற்று எடுத்துவிட்டார்கள் அவளும்திரும்பித்தனது தாய் தகப்பன்மார்களுடைய வீடம்போய்ச்சேர்ந்துதனதுபுருஷனையுந் தன்னையுங்கள்ளர்கண்டு சூழ்ந்துக்கொண்டுவுடைமைகளை யெல்லாம் பறித்துக்கொண்டு அவரையும்பிடித்துக்கொண்டு என்னையும்ஓட்டி விட்டார்கள்ஆகையினால் இக்கோலமாய்வந்து சேர்ந்தேனென்றுசொன்னாள் அதுகேட்டு மிகுந்ததுயரங்கொண்டு நல்லதுபயப்படாதேயென்று அவள்மனதுக்குத்திடம் வரச்செய்து வைத்திருந்தார்கள் அதன்பின் அவள் புருஷன் அவ்வுடைமைகள்முதலானவைகளையுங் கொண்டுபோய்த் தான்வைத்திருந்தவேசிகளுக்குக்கொடுத்துச் சிலநாளிருந்து அவர்களுக்குக்கொடுக்கவழியில்லாமல் கைவரண்டபின் தகப்பன்முதலானபேர்களும் வீட்டில்சேர்க்காமல் ஓட்டிவிட்டார்கள் பின் தான் மகாவிசனமுற்று மனதிற்கபடங்கொண்டு மாமனார் வீட்டிற்போகிறபோது அந்தப்பெண்ணை கண்டுமுன் விட்ட காலைப் பின்னிட்டுத்

திருப்பினான் அதுகண்டு தான்செய்தகுற்றத்தினால் பயந்துபோகிறானெ
ன்று குறுக்கேயோடிச் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு நீர் பயப்படத் தே
வையில்லை பெண்சாதியாளவளை விற்கவும் ஒற்றிவைக்கவும் தானதருமம்
பண்ணவும் தேவரீர்கர்த்தரல்லவோ ஆனதினால்குற்றமில்லை அடியாள்தா
ய் தகப்பன்களுக்கு உடைமையெல்லாங் கள்ளர்பறித்துக்கொண்டு உம்மையு
ம் பிடித்துப்போனார்களென்றுசொன்னேன் அவர்கள்நீரெப்போது வருவீ
ரென்று வழிபார்த்திருக்கிறார்கள்நீரொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை
வாருமையாவென்றுகையைப்பிடித் தழைத்துப்போய் தன்னுடையதாய்தக
ப்பன்மார்கள்முன்னே விட்டாள் அவர்களுந் தழுவிக்கொண்டு பயப்படா
தே என்றுசிலபூஷணமும் கொடுத்து மகாசெல்வமாயெப்போதும்போல
வைத்திருந்தார்கள் இப்படிச்சிலநாளிருந்தபின் மறுபடியுஞ்சிலதிக்கை
நினைத்துக்கொண்டு போகவேண்டுமென்று இவளை அழைத்தால்வருகிறவ
ளல்லவென்று நித்திரைபண்ணுகையில் அவளுடைமைகள் யாவையுங்கழ
ற்றிக்கொண்டு அவளையுங் கொன்றான் அப்படிகொத்தகபடு பண்ணதி
னாலே புருஷனை நம்பலாகாதென்று ராசனுடன் பெண்கிளி சொல்லக்கே
ட்டு ஆண்கிளியை யழைத்து பெண்டுகளைநம்பலாகாதென்று சொன்னவி
பரமேதென்றுகேட்க ஆண்கிளி அவ்வரசனைநோக்கிச் சொல்லும் அரிஷ்
டபாமென்கிறபட்டணத்திலே தர்மகேசரனென்னும் இராசன் இராச்சிய
பரிபாலனம் பண்ணுகையில் அந்தப் பட்டணத்தில் தனவர்த்தனென்கிற
கோமுட்டிக்கு ஓர் குமாரத்தியுண்டாயினள் அவளைப்பின்னொருகோமுட்
டிவந்து கேட்டுக்கலியாணம்பண்ணிக்கொண்டுதன்னூருக்கழைத்துப்போ
ய்த் தகப்பனிடத்திலே விட்டுத்தான் வியாபாரத்துக்குப் போனான் அத்த
ருணத்திலே எவ்வனகாலமானபடியால் ஓர்பிராமணனுடனே கூடியிருந்
தாள் இப்படி இருக்கிறநாளில் திரவியந்தேடிக்கொண்டு சிலநாளைக்குப்பின்
தகப்பனுடைய பட்டணம்வந்துசேர்ந்தான் அன்றிராத்திரி தானுந்தன்பெ
ண்சாதியும் ஓர்வீட்டில்படுத்திருந்தார்கள் அந்தப்பெண்புருஷனுக்குச்செ
ய்யவேண்டிய பணிவிடையெல்லாஞ்செய்து புருஷன்நித்திரை பண்ணின
பின்பு தனக்குக்களவான தாதியையழைத்துத் தன்கள்ளநாயகனாகிய பிரா
மணனை தன்படுக்கைவீட்டுக்குப் பின்வந்திருக்கச்சொல்லென்று சொல்லி
யனுப்ப அப்படியேயழைத்துவந்து வைத்துத்தன்னுண்டச்சி யாரண்டை
யிற் சொல்லவந்தாள் அப்போதுநல்லராத்திரியானபடியினாலே பட்டணம்
காக்கின்ற காவற்காரர் வீட்டின்பின்னாலே ஒண்டியாயிருக்கிறவனைக்கள
ளனென்று அம்பாலெய்தார்கள் அவ்வம்புபிராமணனுக்குப் பட்டுக் குற்று
யிராயிருந்தான் அந்தவேளையில்கோமுட்டிப்பெண் வந்தழைக்கப் பேசாம
லிருப்பதைக் கண்டுகோபித்து கொண்டிருக்கிறாரென்று கட்டிக்கொண்டு
முத்தமிடப் போகையில்அவள்மூக்குப்பிராமணன்வாயிலகப்பட்டு அதை
க்கடித்துக்கொண்டு பிராமணன் சிவனைவிட்டான் அவளும் பயந்து இடக்
கிட்டெழுந்து மூக்கைத் தடவிப்பார்க்க மூ கில்லாதபடியால் இ[illegible]என்ன

வனைசெய்யப் போகிறேனென்று மகாதுயரத்துடனே புருஷன்வெற்றிலைப்
பைஅவிழ்த்துப்பாக்குவெட்டியையெடுத்து அதிலேதன் மூக்கிலிருந்துவ
டியும் இரத்தைத்தடவிக் கோமுட்டித்தன் மூக்கையறுத்தானென்று
கூவினள் இந்தவார்த்தைஅவளுடைய தகப்பன்கேள்விப்பட்டு என்பெண்
ணை மூக்கறுப்பானேனென்று முறையிட்டு நீ சந்நிதானத்திலே அறிவிக்க
நீதியார் அவனை இராசமுகத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய்விட அவ்வராச
ன் கோமுட்டியையழைப்பித்துஇப்படிக்கொத்த காரியஞ் செய்வானேனெ
ன்று கேட்க நான்நித்திரைபண்ணுகையில்என்னருகேயிருந்தவள்கோவெ
ன்று கோவென்று கூவினதறிவேனொழிய மற்றொன்றுமறிந்தவனல்லவெ
ன்றான் அதன்பின் அந்தப்பெண்ணையழைத்துக்கேட்க நான்புருஷனுக்
கோர்நேரமுஞ் செய்தவளல்லவே என்றாள் இராஜன்மிகவுங் கோபித்துக்
கொண்டுஎன்னதான் குற்றஞ்செய்தாலும்பெண்சாதியை ஆக்கினை பண்ண
காரியமேதென்று கோமுட்டியை ஆக்கினை பண்ணக் கொலைக்காரர் வசம்
பண்ணினார்கள் அப்படி இருக்கிறவேளையில் காவற்காக்கிறவர்கள் வந்துரா
சனைக்கண்டு தெண்டனிட்டுவிண்ணப்பம் பண்ணினார்கள் கேளுமையாரா
சாவேநாங்கள்பட்டணஞ்சுற்றிவருகையில்இந்தகோமுட்டிவீட்டிலே யொ
ருவன்பதுங்கியிருந்தான் அவனைத் திருடனென்றெண்ணி அம்பாலெய்
தோம் அவன்கீழேவிழுந்து குத்துயிராய்க்கிடக்கிற தருணத்திலே கோமு
ட்டிபெண்வந்து அவனையழைக்கபேசாமலிருப்பதுகண்டு நான்வரநேரமா
யிற்றென்று கோபித்திருக்கிறாயோ வென்றுசொல்லி அவனைகட்டிக் கொ
ண்டு முத்தமிட்டாள் அப்போது இவள்மூக்கு அவன்வாயிலகப்பட்ட படி
யால் மூக்கைகடித்துச் சிவனைவிட்டான் அந்நேரமேதன் வீட்டிற்புகுந்து
தன் புருஷன்பேரில்நிந்தையிட்டுக்கூவினாள் அதற்கடையாளம் அக்கள்ள
வாயில் அவள் மூக்கிருக்கிறதென்று சொல்லக்கேட்டுஅப்படியே அப்பி
ணத்தைச் சோதித்துப் பார்க்குமளவில் சொன்ன சாதகஞ் சரியாயிருப்
பதுகண்டு இராசன் ஆச்சரியப்பட்டு அவளைப் பிரியைச்சுற்றி அக்கினிப்
பிரவேசம்பண்ணக் கட்டளையிட்டான் ஆகையால் பெண்பிள்ளையை நம்ப
லாகாதென்று ஆண்கிளிசொல்லிற்று இந்தஇரண்டு காரியத்திலும் பாவபு
ண்ணியமெ ஆருக்கென்று இராசகுமாரனே நீரறிந்துசொல்லுமென்று வே
தாளம் விக்கிரமாதித்தனைக் கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் பெ
ண்சாதியை விற்கவும் ஆக்கினைபண்ணவும் புருஷனுக்குச்செல்லுமபெண்
சாதிக்குச் செல்லாதென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டுமு
ருக்கமர மேறிக்கொண்டது.

கிளிக்கதை.

முற்றிற்று

விக்கிரமாதித்தன் பின்னும்மரத்திலேறிவேதாளத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில்வேதாளஞ்சொல்லுஞ்சரித்திரமாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே சரபகவென்னுமொரு பட்டணமுண்டு அதிலேசுக்கிரீவனென்னுமொரு ராஜன் இராச்சியபாரம் பண்ணுகிறகாலத்தில் ஓர்பிராமணன்வீரவர்த்தனனென்கிறவன் மகாசவுரியவானாகவிராமுடையவனாகவிருந்தான் அவன் அந்தராசனைக்கண்டு தன்னுடைய ஆண்மையைச்சொல்லிநித்தியம் ஆயிரம்பொன்சம்பளங்கட்டளைப் பண்ணிக்கொண்டு அந்தப்பொன்னை நாலுபங்காக்கியொருபங்கு தெய்வத்திற்கும் ஒருபங்குப்பிராமணருக்கும் ஒருபங்குபரதேசிகளுக்கும் ஒருபங்குதன்மனைவர்த்தனுக்குமளப்பித்து இப்படிஎந்நாளுஞ்செலவுசெய்துகொண்டு இராவும்பகலும் அரண்மனைவாசற்காத்திருப்பான் - இப்படியிருக்கிறநாளையில் ஒருநாள்காற்றுமழையும அகோரமாகவுந்தடிக்க அந்நேரம்அந்தப்பட்டணத்திற்குப்புறத்திலே கோவென்றழுகிறசத்தமுண்டாக அதைராசன்கேட்டு அந்நேரமே அவ்விடத்திற்குப்போயறிந்துவரத்தக்கபேரெவனுண்டோவென்று விசாரிக்குமளவில் வீரவர்த்தனனென்பவன்சகல ஆயுதங்களையுங்கட்டிக்கொண்டு இராசன்முன்வந்து தெண்டனிட்டு நானேபோய் அறிந்துவருகிறேனென்று வெளிப்புறப்பட்டுப்போனான் அவன் போவானோபோகமாட்டானோவென்று சோதிக்கவேணுமென்று அந்தராசாவுமதியாமற்பக்கமேபோனான் வீரவர்த்தனன்போய் அங்கழுகிறவளைக்கண்டுஏதுக்கழுகிறாய் நீயார்உன்பெயரென்ன உன்னூரென்னசொல்லென்றுகேட்டான் அப்போது அவள்சொன்னது இந்தப்பட்டணத்தை யாளுஞ்சுக்கிரீவனென்கியமகாராசன்வலது புசத்திலிருந்துவாழும் பூமிதேவியானநான் ஆகையால்அவ்வாசனுக்கின்றுமுதல்மூன்றுநாளுக்குள்ளேமரணம்வரப்போகிறது அவன்மறித்தானேயானால்நாமெங்கேயிருக்கப்போகிறோமென்றழுகிறேனென்றாள் அந்தவீரவர்த்தனன் அம்மா பூமிதேவியே இந்தவிக்கட்டுதீர்கவுபாயமுண்டோவென்று கேட்க அவளதைச்செய்யத்தக்கபேருண்டானாலுபாயமுண்டென்றுசொன்னாள் அதுகேட்டு வீரவர்த்தனன் நானேசெய்கிறேன்-அதற்குபாயஞ்சொல்லென்றுகேட்கபூமிதேவியானவள் இந்தஇரணக்கலத்திலேதுர்க்கையிருக்கிறாள் அவளுக்குப்பதினாறுவயதுள்ள குமாரனைக்கொண்டுபோய்ப்பலியிட்டால் அவ்விராசனுக்குமரணம்வராதென்றுசொன்னாள் அதுகேட்டுத்திரும்பிப்பட்டணத்தேவந்து தன் அரண்மனையிலேபோய்த் தன்பெண்சாதிபிள்ளைகளுடன் இந்தவர்த்தமானத்தைச்சொல்லித்தனதுகுமாரனையழைத்துக் கொண்டுதுர்க்கைமுன்னேவிட்டுத் தோத்திரம்பண்ணித் தன்கைப்பட்டயத்தைபுருவித்தன்குமாரன்கழுத்தையறுத்தான் அப்போதுகுமாரத்தியும்பெண்சாதியும் இப்பாதகத்தைப்பார்க்கமாட்டாமல் அவர்களுங்கழுத்தையறுத்துக் கொண்டுசெவனைவிட்டார்கள் அதுகண்டுவீரவர்த்தனனுங் கழுத்தையறுத்துக்கொண்டு செவனைவிட்டான், அதையெல்லாம்இராசன்பார்த்து நமக்காகவல்லவோ இவர்களநா

லுபெரும்மாண்டார்களென்று தானுங்கழுத்தையறுத்துக்கொள்ளப்போ
குமிடத்திலேதற்கியானவர்பிரசன்னமாய் வந்துநாலுபேரையுமெழுப்ப
இராசாவும்அவர்களையறியாமல் தன்னுடைய அரண்மனையில்வந்துநித்தி
ரைபண்ணினான் வீரவர்த்தனனும்பெண்சாதிபிள்ளைகுமாரத்தி இவர்களை
தனது அரண்மனையிற்போக அனுப்பிவிட அவர்கள் தங்களுடையஅரண்
மனையிற்போகத்தானும் அரசன்மனைவாசலில்வந்து காத்திருந்தான்பொ
ழுதுவிடிந்து இராசாவுங்கொலுச்சாவடிவந்து வீரவர்த்தனையழைத்துஇ
ராத்திரிபோனவர்த்தமானஞ்சொல்லென்றுகேட்கஅவன்தேவரீர் அனுப்
பினபடிபோய் அந்தஸ்திரீயைக்கண்டுஏதுக்கழுகுறாயென்று கேட்டேன்
அவளொன்றுஞ்சொல்லவில்லையென்றுசொன்னான் இராசாவுஞ்சந்தோஷ
ப்பட்டுத் தன்னுடையபிரதானிகளுடனே இந்தவர்த்தமானமெல்லாஞ்
சொல்லி வீரவர்த்தனனைத்தன்னுடைய ஆதீனகர்த்தனாகவைத்துநடப்பி
த்தான அந்தநாலுபேருக்குள்ளேசகாயஞ் செய்தவர்கள்யாரென்றுவேதா
ளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் சேவிக்கிறவன்இராசன்சொ
ற்படிசெய்யவேண்டும் பிள்ளையும்பெண்சாதியும்வீட்டுக்கு இரட்சகனாயி
ருக்கிறவன்சொற்படிகேட்கவேண்டும் இராசாவானவன்தனக்கென்னகாரி
யமென்றுபோகாமல் தானுங்கழுத்தையறுத்துக்கொள்ளப் போனானேஅ
துவேசகாயமென்று விக்கிரமாதித்தன்சொல்லவேதாளங் கட்டவிழ்த்துக்
கொண்டுபழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

வீரவர்த்தனன்கதை-முற்றிற்று.

## ௮-வது. காற்படிகன்சரித்திரம்.

பின்னும்விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டு
வருகையில்வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

தருமபுரமென்றொருபட்டணத்திலே கண்டஸிங்கனென்றொரு ராச
ன்பூமிமுழுதுமோர்குடைக்கீழ் ஆளுகிறநாளையில்காற்படிகனென்றொரு
வன்இராசாவைக்கண்டு அவரிடத்திலேசேவகத்துக்கு அமர்ந்துஅவர்மன
துசந்தோஷப்பட நடந்துவருகிறநாளில்ஒருநாள்சதுரங்க பலத்துடனே
வேட்டைக்குப்போகையில்இராசன்குதிரையைமுடுக்கஅதுஅதிவேகமாய்
நடந்தமையால்ஒருவருந்தொடர்ந்துவராததுகண்டுகுதிரையைநிறுத்தித்திரு
ம்பிப்பார்க்கையில்அந்நேரம்காற்படிகனென்பவன் தொடர்ந்து போய் இர
ண்டுநெல்லிப்பழங்கொடுத்தபின்தாகத்திற்காகஅதிகதூரம்போய்த்தேடிச்
சுனையைக்கண்டுசலங்கொண்டுவந்துஇராசனுக்குக்கொடுக்க இராசனுங்கா
ற்படிகனையழைத்துஉனக்குப்பிரதியுபகாரமென்னசெய்யப் போகிறேனெ
ன்றுசொல்லிவிடாய் தீர்ந்து சந்தோஷப்பட்டுத்தன்னுடையவாதினத்துக்குப்
பிரதானியாகவைத்துநடப்பித்துக்கொண்டுவருங்காலத்தில் ஒருநாள்ராசா

அக்காற்படிகளையழைத்துச்சிங்களதேசத்துராஜாவின்குமாரத்தியைக்கொண்டுவரவேணுமென்றுசொல்லநல்லதென்று ஒருவணிகனிடத்திற்சென்றுகப்பலேறிப்போகையில் அக்கப்பலுடைந்து அச்சமுத்திரத்தில்முழுகையில்காற்படிகளைமீனெடுத்துவிழுங்க அதன்வயிற்றைப்பீறிக்கொண்டுவெளியில்வந்துநின்றுஓர்கொடியைப்பற்றிப்போகக்கரைதட்டி மேலேறிவருகையில்அங்கோர்காளிகோயிலைக்கண்டான் அக்காளியைச்சேவிக்கப்போய் அங்கேஅனேகங்கன்னிகள் புடைசூழஒரிராஜகன்னிகைவந்து அம்மனைத்தெரிசனம்பண்ணக்கண்டு அவள்பேரில்மோகித்து அவள்பின்சென்றுவந்ததாதியை அழைத்துத்தன்னுடையகருத்தைச்சொல்ல அவளும்இராஜகன்னிகையுடனேசொன்னாள் இராஜகன்னிகையும் அவனையழைத்து இந்தகிணற்றில்முழுகிவாவென்றாள் அப்படியேயவனும் அக்கணமே அக்கிணற்றிலிறங்கிமுழுகவும் அவன்பட்டணத்தில்அவனைக்கொண்டுபோய்விட்டது அப்போது அவனைக்கண்டபேர்கள்காற்படிகள்வந்திருக்கிறானென்று இராஜாவுடனேசொல்ல இராஜனும்அழைத்துவரச்சொன்னான் அப்படியழைத்துக்கொண்டுபோயவிட அந்தகாற்படிகள் இராஜாவைக்கண்டுதான்போனதும்மரக்கலமுடைந்ததும்பின்புமீன்விழுங்கினதும் அதின்வயிற்றைப்பீறிப்போட்டுஓர்கொடியின்வழியாகக்கரையேறியங்குகண்ட அதிசயங்களையும்பின்னும் தான்வந்தவாறுஞ்சொன்னான் இராஜாவும் இதைக்கேட்டுத்தன் இராச்சியத்துக்குப்பிரதானியையரசாளவைத்துப்போட்டு இராஜாவுங்காற்படிகளுமாய்ப்புறப்பட்டுப்போகையில்அங்கோர்கொடிவழிதோற்றஅந்தவழியேபோய்க்காளிகோயிலைக்கண்டார்கள் அங்கேயிருக்கும்போதுமற்றுநாளும்அந்தராஜகன்னிகைவந்துகாளியைச் சேவித்துத்திரும்பும்போது இவ்வரசனைக்கண்டுமோகித்தாள் அப்பொழுதே தன்னுடையதோழியையழைத்துத்தூதனுப்பினாள் அவள்வந்து இராஜாவைக்கண்டு அந்தவார்த்தைச்சொல்லநல்லது இங்கேவரச்சொல்லென்றான் அந்தப்படிதாதிபோய்ச்சொல்ல இராஜகன்னிகையும்தான்கொண்டமோகத்தினாலும்ஆசையினாலும் இராஜாவின்முன்னேவந்துசொல்லுகிறாள் நான்நாகலோகத்து இராஜகுமாரத்தி உம்மைக்கண்டவுடனே வெகுவிகாரமுற்றேன் என்மோகத்தைத்தீர்க்கவேண்டுமென்றாள் இராஜாவும்மனமகிழ்ந்து அவளைநோக்கி இவன்என்பிரியமானதோழன் உன்மீதில்ஆசைகொண்டிருக்கிறான் அவனும்நீயும்மன்மதனும்இரதியும்போலேகூடியிருங்களென்றான் அப்படியேயல்லதென்று சம்மதிக்க அரசன்காற்படிகளையழைத்து அன்றுநீயெனக்கிரண்டுநெல்லிக்கனிகளைக்கொடுத்தாயல்லவோ இன்றுஉனக்குஇது ஓர்கனிக்குசரியாயிற்றென்றுசொல்லி இராஜன்அக்கிணற்றிலேமுழுகித்தன்ராச்சியமேவந்து சேர்ந்தான் ஆதலால்எவர் செய்தநன்றிமேன்மையென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன் சொல்லுகிறான் ஒருவனிடத்தில்சேவித்தால் அவன்சொற்படிசெய்வதுநீதி இராசன்தன்னைமோகித்த கன்னிகையைச் சேவகனுக்குக்கொடு

த்ததேதென்றியென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டுபழையப யோடி முருக்கமரமேறிக்கொண்டது. ௪

சாற்படிகன்கதை-முற்றிற்று.

௰-வது-மணிமான்சரித்திரம்.

விக்கிரமாதித்தன் மறுபடியும்மரத்திலேறி வேதாளத்தைப்பிடித்துக்க ட்டி தூக்கிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது

கேளாய்விக்கிரமாதித்தனே உவிஷபுரமென்கிறபட்டணத்திலேகிர கபுஜனென்னப்பட்ட ஒருஇராஜனுண்டு அவனுக்குமணிமேக்லைசையென் னொருகுமாரத்தியுண்டானாள் அவளைச்சகலகல்விகளையுடையவனுக்குக்க லியாணம்பண்ணிக்கொடுப்போமென்று அந்தராஜனினைத்திருக்கிறபோ து அப்படியேமணிமானென்கிற ஒருஇராஜகுமாரன்கல்வியிலும்புத்தி யிலும்விவேகத்திலும் சமர்த்துண்டானவன்வந்து அவளைக்கலியாணம்ப ண்ணிக்கொள்ளுவோமென்று தேடிவருங்கயில்அவனைஇராஜன்கண்டுஅ வன்வித்தைகளைப் பரிசோதித்துஅந்தப்பெண்ணைக் கலியாணம்பண்ணி க்கொடுத்தான் அவனும்கலியாணம்பண்ணிக்கொண்டுதன்பெண்சாதியை த்தன்பட்டணத்துக்குஅழைத்துவந்தான் இப்படியிருக்கிறநாளிலேபுருஷ னும்பெண்சாதியுமாகக்கச்சைக்கட்டிலின்பேரிலே படுத்துக்கொண்டிருக் கிறதெறும்புகள்சாரைசாரையாகக் கட்டிலின்கீழேவர முன்னேநடந்தெ றும்புகள்நடவாமல்நிற்கப் பின்னேவருகிறஎறும்புகள் எதுக்குநிற்கிறீர்க ளென்றுகேட்கக்கட்டிலின்கீழேவழியில்லையென்று சொல்லப்பின்னேநின் றஎறும்புகள்கட்டிலையெடுத்து யெறிந்துபோட்டுப் போகலாகாதோவென் றுசொல்லபுருஷனும்பெண்சாதியுங் கூடிநித்திரைபண்ணுகையில் எடுத் தால்தோஷமென்றறிந்தோமென்று சொல்ல அப்படிசொன்னஎறும்புகளி ன்பாஷையைஇராஜன்கேட்டு இதேதுஆச்சரியமென்றுசிரித்தான்ஸ்திரீ யும்இராஜாவைப்பார்த்து ஏன்சிரித்தீரென்றுகேட்க இருவரும்பேசினகு ரலைஎறும்புகள்கேட்க இராசாவைத்தங்கள்பாஷையினால் கூப்பிட்டுநாங்க ள்பேசினவார்த்தையைஒருவருடனேசொன்னால் உன்தலைவெடிக்கக்கடவ தென்று சாபமிடஇராசாவும் விசாரத்துடனிருக்கையில் ஸ்திரீயும்நான் கேட்பதற்குவாய்திறக்கவில்லைஎன்பேரில் தயவில்லாதபடியினாலேஇனி மேல்நான்வலுவிற் சீவனைவிடுவேனென்றுசொல்லக்கேட்டு அரசன்மயா னத்திலேகட்டையடுக்கச்சொல்லி அதின்மேற்படுத்துக்கொண்டுபெண்சா தியைக்கிட்டஅழைத்துச் சொல்லப்போகிறதறுவாயில் ஓராடுங்கடாவும் அங்கேவந்துநிற்கையில் அந்தஆட்டுக்கடாவானது பொலியப்போகஆடா னதுகடாவைநோக்கி நானுன்னோடிசேர்வதில்லை அதோகிணற்றில்நிற் கிறபுல்லைப்பறித்துவந்து எனக்குக்கொடுத்தாயானால்நானுன்னைச்

சேருமேயென்ன அதுகேட்டுக்கடாவானது மகாதுயரமுற்று ஆட்டைப் பார்த்து ஓஆடே நான் அந்தப்புல்லைத்தாவிப்போய் கிணற்றில்வி ழுந்துசெத்தால்மறுபடி நீஆரைச்சேரப்போருய் நீஎன்னைச்சேராவிடில் அதெனக்குப்பெரியகாரியமல்ல போவென்றுசொல்லிற்று இந்தவர்த்தமா னமெல்லாம் இராஜன்பார்த்து,த்திடுக்கென்றெழுந்து தன்பட்டணம்போ ய்மறுபடியும்வேறே கலியாணம்பண்ணிக்கொண்டு சுகஜீவனமாயிருந்தா ன்ஆகையால்புத்தியில் யாரதிகமென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்த ன்சொல்லுகிறான் ஆட்டுக்கிடாவானதுலும் ஸ்திரீபேச்சைக் கேளாதபடியி னலேஅதுமேலையதிகமென்றுசொல்லவேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டுப ழையபடியோடிமுருக்கமரமேறிக்கொண்டது.

மணிமான்கதை-முற்றிற்று.

௪-வது-மதனசேனையின்சரித்திரம்.

விக்கிரமாதித்தன் மரமேறிவேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண் டுவருகையில்வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

மகத்தேசத்தில்கௌசலமென்றொருபட்டணமுண்டு அதிலேதிரவி ரனென்றொரு இராஜனுண்டு அந்தப்பட்டணத்திலே வணிகருக்கெல்லாந் தலைமையானவன் தனதத்தனென்றொருவணிகனுண்டு அவன்வெகுகால ந்தவம்பண்ணிதத்தனென்றொருபிள்ளையும் மதனசேனையென்றொருபெ ண்ணும்பெற்றான் அவர்களைவெகுசெல்வமாகவளர்த்துச் சமுத்திரதத்த னென்பவனுக்குக்கொடுக்கிறேனென்று மதனசேனைக்குத்தாயுந்தகப்பனு ம்பரியமொப்பியிருக்கையில்அந்தப்பெண்ணின்தமையனுகியதத்தனென்ப வனுக்குத்தருமதத்தனென்றொருதோழனுண்டுஅவர்களிரண்டுபெயரும் பிரியாதசிநேகிதமாகையால்ஒருநாள்மதனசேனைசிலதோழிகளுடனேபந் துவிளையாடக்கண்டுதருமதத்தன்மோகித்து தோழனுடனேபேசியிருந்து தன்வீட்டுக்குப்போய் அன்றிராத்திரி முப்பதுநாழிகையும் முப்பதுயுகம் போலேயிருந்தமையால்கருமதத்தன்காலமேயெழுந்திருந்துமதன சேனை விளையாடுகிறமேடையினருகேசென்று அவளைக்கண்டு மகா உபசாரத்துட னேவேண்டியென்னைச்சேரவேண்டுமென அதுகேட்டுமவள் ஆனுற் சொல் லுகிறேன் கேளும்முன்னேபரியம்போட்டிருக்கிறசமுத்திரதத்தன் வந்தெ ன்னைக்கலியாணம்பண்ணிச்சேராமுன்உம்மைச்சேர்ந்துமருவிஅதன்பின் அவரித்துக்குப்போகிறேன் இதற்குமுன்னேகன்னித்தனத்தை பழிக்கப் போகாதென்று பிரமாணிக்கமாகச்சொன்னுள் அவனும்அதுகேட்டுநல்ல தென்றுசம்மதித்திருந்தபின்பு சிலநாள்சென்றபின்சமுத்திரதத்தன்வந்து அவளைக்கலியாணம் பண்ணிக்கொண்டு இருவருமொருபள்ளியறையிற்ப

டேத்திருக்கையில் அவள்புருஷன் அவளைத்தழுவவருகையில் மனதிலேசஞ்சலமில்லாமல் நாயகனைநோக்கிச்சொல்லுகிறாள் என்னென்புக்குரியநாயகனே நான்பக்குவமானகாலத்தில் ஒருவனென்பேரில்மோகித்தான் அவனுக்குநான் கன்னிமையழியப்போகாதென்று என்னுயகன்வந்தபின் அவனைச்சேராமுன்னம் உம்மண்டைக்குவருகிறேனென்று பிரமாணிக்கம்பண்ணிக்கொடுத்தேன் அதுதப்பாமற்போகவேண்டுமென்று சொல்லப்புருஷனுமவன் இவளிடத்திலேகபடில்லையென்றறிந்து சந்தோஷப்பட்டு உன்மனதின்படி போய்வாவென்றுசொல்லியனுப்பினான் அவளும்புருஷனைகயில்அநுமதி பெற்றுக்கொண்டு அர்த்தராத்திரியிலே போகையில் ஓர்கள்ளன்கண்டு அவள்அழகுக்குஆசைப்பட்டுத்தன்னுடனே கூடச்சொன்னான் அதைமறுத்துஇவள்அக்கள்ளனைநோக்கிஉனக்கு நான்பூண்டிருக்கும்பணிகள்யாவையும் கழற்றித்தருகிறேன் அதனைவாங்கிக்கொண்டு போவென்ன அதுகேளாமல் அக்கள்ளன்எப்படியுமுன்னை நான்சேரவேண்டுமென்றான் அதற்கவள் ஆனாலெனக்குநடந்தவர்த்தமானம் இவ்விதமானதால் அங்கேபோய்வருகிறேனென்று பிரமாணிக்கமாகச்சொல்லநல்லதென்றுகள்ளனும் அனுப்பிவிட்டுச்சந்தோஷத்தோடு அவ்வழியிற்காத்திருந்தான் அவளும்போய்அவனைக்கண்டு முன்னாலே நான்சொன்னபிரமாணிக்கந்தப்பாமல்வந்தேன் என்னைககூடென்றாள் அவனுஞ்சிவசிவாவென்று காதைமூடிக்கொண்டு இப்படிக்கொத்தபதிவிரதை யைச்சேரவொண்ணாதென்று உபசாரவார்த்தையைச்சொல்லி யனுப்பினான் அவள் அவனிடத்திற்கற்புநிலைதவறாமல் அநுமதிபெற்றுக்கொண்டு கள்ளனருகேவந்து அங்கேதான்போனதும் அவர்சொன்னவார்த்தைகளையுந்தான் அவ்விடம்வந்தவிதங்களையுஞ்சொல்ல அதுகேட்டுக்கள்ளனுக்குத்தருமவினை யுலங்குசத்தியந்தப்பாமல் வந்ததேபோதும் எனக்கொன்றும் வேண்டாமென்றுசொல்லித் தான்களவாண்டுவைத்திருந்தசில பூஷணங்களையுங் கொடுத்துஅனுப்பிவிட்டான் அவள்புருஷனண்டைக்குவந்து சாஷ்டாங்கமாகதெண்டன்பண்ணித் தான்போனதும்தனக்குவழியிலேவந்த இக்கட்டுந்தருமதத்தனும் தன்கற்புநிலைகுலையாமலனுப்பிவிட்டதையும புருஷனுக்குவிபரமாகச்சொல்ல அதுகேட்டுஅவனுமானந்தத்தில் களிப்புகொண்டு இவள்பதிவிரதையென்று சந்தோஷத்துடனேகூடியிருந்தான் அம்மூவரில் ஆரதிகமென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் அடித்துப்பறித்துக்கொண்டு போகிறகள்ளன் சந்தோஷப்பட்டனுப்பினதேயதிகமென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடிமுருக்கமரமேறிக்கொண்டது.

மதனசேனையின்கதை-முற்றிற்று.

## ௰௧-வது-வஸீசமார்க்கன் சரித்திரம்.

விக்கிரமாதித்தன்மரமேறி வேதாளத்தைப்பிடித்துக் கட்டிக் கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே விசயநகரமென்றொருபட்டண மூண்டு அந்தப்பட்டணத்திலே வயிசகேதுவென்கிறவொரிராசனுண்டு அவனுக்குச்சந்தனக்குயந்தியென்றும்தாரகவல்லியென்றும் மிருகக்கவதியென்றும் மூன்றுதேவிமாருண்டுவசந்தகலாத்திலேதென்றல் வீசமோர்நாளில்தாரகவல்லியும்இராசனுமபூங்காவனத்தில் அதிசயம்பார்க்கையில் அவள்கொண்டையில்முடித்திருக்குமபூவிலோர்வண்டுவந்தேறவே அவள்மூர்ச்சையாகிவிழுந்தனள் தாதிகளெல்லாத்தது ஆயாசந்தீர்த்தனர் மற்றொருநாள்சந்தனக்குயந்தியும்இராசனும்மேடையிற்சரசசல்லாபமாயிருக்கையில் நிலவின்பிரகாசத்தினால் அவளுடையுமேனியெங்குமகொப்பளித்ததுஅதுகண்டு தாதிமார்பன்னீரால்குளிரவீசினார்கள் மற்றொருநாள் மிருகக்காவதியுடன்இராசன்சரசமயிருக்கையில்உலக்கைசத்தம்அவள்காதிலேபட அந்தச்சத்தத்தினாலே கைவிரலெல்லாங் கன்றினவைக்கண்டு அதிசயப்பட்டனன் ஆகையாலிந்தமூவரிலே சுகதேசமாருக்கென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான்வண்டானது மேலேறினபடியினாலும் நிலவுவீசினதினாலும் அப்படியாயிற்றுஉலக்கைச்சத்தங்கேட்டுக் கைவிரல்கன்றினதேயதிசயமென்றுசொல்லக்கேட்டு வேதாளங்கட்டவிழ்த்துக் கொண்டுபழையபடியேமுருக்கமரமேறிக்கொண்டது.

வயிசமார்க்கன்கதை-முற்றிற்று.

## ௰௨-வது-மூத்தேவிமார்சரித்திரம்.

விக்கிரமார்க்கன் முருக்கமரமேறிவேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே விசையநகரமென்கிறபட்டணத்திலேவயிசமார்க்கனென்கிற ஓரிராசனுண்டு அவருக்குச்சந்திரவதனையென்றொருஅருபசிங்காரமானஸ்திரீ யானவளிருந்தாள்- அவள்பேரிலுள்ளமோகத்தினால் எந்நேரமும்அவளைவிட்டுப்பிரியமாட்டாமல் அதிகவிகாரமாகிராசகாரியங்களைவிசாரிக்காமலிருந்தான் ॥ இப்படியிருக்கிறநாளையில்அந்த அரசனுடையமந்திரியானவன் எல்லாக்காரியமுந்தானேவிசாரித்து அரசுநீதப்பாமல் நடத்திவருகையில் ராச்சியந்திலேசெனங்கள் இராசனைவுபாயத்தினால் தள்ளிவைத்துமந்திரியானவன்தானேகாரணகர்த்தனானென்கிற அபவாதவார்த்தைகளைச்சொல்ல அதுகேட்டுமந்திரி இலேசமுற்றுமனந்தாளாமல் தேசாந்திரியாகப்போனான்-அதைஇராசன்கேட்டுமற்றுமுள்ளவர்களை விசாரிக்கக்கட்டளைபண்ணினான் -அப்படியேராசாங்கமித்தப்படிக்குமற்றவர்பரிபாலனம்பண்ணுகையில் முன்போனமந்திரிதேசமெல்லாந்திரிந்துவருங்காலத்திலே சமுத்திரக்கரையினருகேயிருக்குஞ்சூர்நகரிற்சென

ன்று அந்நகரில்ஓர்வணிகனுடனே சினேகிதமாகி இவ்விருவரும் ஒருவரு
க்கொருவர்பிரியாமலிருந்தார்கள் இப்படியிருக்கையில்வர்த்தகனுமிவனை
நோக்கிநான் கப்பலேறிப்போய்வருகிறேன் நான்வருமளவும் இங்கேயிரு
மென்றுசொல்ல-மந்திரியும்நானுங் கூடவந்து அத்தீவாந்தரத்திலுள்ள அதி
சயம்பார்க்க வேண்டுமென்ன அப்படியேநல்லதென்று இருவருங்கப்பலே
றிப்போகையில் ஓர்காற்றுவந்துகப்பல்மோத அக்கப்பலுஞ் சுழலிலகப்
பட்டு திசையிருக்கமறுதிசைபோயிற்று - அப்படியேபோகையில்ஓர்திட்
டைக்கண்டு அங்கேகப்பலைநிறுத்தியிறங்கிப்பார்க்கையில்- அதிசயமாய்ஓ
ர்கோயிலும் அக்கோயிலுக்கெதிரே, ஒருவிருக்ஷத்தின்கீழ் ஓர்சிங்காசன
மேடையில் அதிரூபசவுந்தரியமானஸ்திரீயுடுத்திருப்பதைக் கண்டு இதே
தோதெய்வீகமாயிருக்கிறது நாமிங்கேயிருக்கப்போகாதென்று கப்பலே
றிக்கொண்டு தங்களுடைய தேசம்போனார்கள் வழியில்விழுந்தபொருள்ம
டியிலிருந்தாற்போல்மந்திரியும் அந்தராசனைக்கண்டான் ராசனும்வெகுச
ந்தோஷமாய் என்னைத்தனியேவிட்டுப்போனதும் போனவிடத்திற்கண்ட
அதிசயங்களையுஞ்சொல்லென்றான் உடனுமாச்சரியத்திலப்படிக்கொத்தவா
ர்த்தைசொன்னபடியினாலே மனந்தாளாமற்போனேன் வந்தவிடத்திற்க
ண்டவதிசயமிப்படியென்று மந்திரிசொல்ல அரசன்கேட்டு அந்தவதிசயம்
நான்பார்க்கவேண்டுமென்று மந்திரியையழைத்துக் கொண்டுகப்பலிலே
றிப்போய்அந்தத்திட்டிலிறங்கி அங்கிருக்குங்கோயிலைக்கண்டுகிட்டப்போ
ய்ப்பார்க்கையில்கன்னிகையைஇராசன்கண்டு இப்படிப்பட்டஸ்திரீயானவ
ள் இந்திராதிதேவர்களுக்குங்கிடையாளென்று மனதிலெண்ணிஅவளைய
டைந்து என்னைச்சேருகவேணு[illegible]ன் அவளும் இராசனைநோக்கிப்பா
ர்த்துஇவன்கிரீடந்தரித்த மன்மதனேயல்லாமல் வேறொருவனல்லவென்று
மனதிலெண்ணிக்கொண்டு பின்புஇராசனை அஷ்டமியாவது அமாவா
சையாவது வந்தவுடனேகூடுகிறேனென்றாள் அரசனும்நல்லதென்றுச
ம்மதித்திருக்கையில் அப்பருவம்வந்தமையால் அந்நாளில்ஓர்நோன்பு
நாற்கவேண்டுமென்று ஓர்பொய்கையிலேஸ்நானம்பண்ணினாள் இராசன்
கன்னியிருக்கிறமுள்ளையும் ஸ்திரீகளுடையமனதையும் நம்பவொண்
ணாதென்று அவளறியாமல் இராசன்வாளையுருவிக்கொண்டு பக்கமே
போனான் அந்தவாயில் நளராசனைசனிபற்றியது போலவும் சூரியனைப்
பனிமூடியதுபோலவுஞ்சந்திரனை இராகுமறைத்தது போலவுமசலதுஷ்ட—
னென்கிறவன்வந்தவளையெடுத்து விழுங்குவதைஇராசன்கண்டு அந்தஇ
ராக்கதனைவெட்டிவயிற்றைப்பீறி அவளைவெளியிலெடுத்துவிட அவள்அ
வ்விராசனைப்பார்த்துச் சொல்லுகிறாள் முன்னொருசாபம்வந்தவாறுகே
ளும்,தேவேந்திரனிடத்திலிருக்கின்றவித்துவசனத்தில் அதிகவிநாணமா
லவரொருவருண்டு அவர்பேர்மிருகாங்கிதன் அவருக்குமூத்தகுமாரத்
திநானெனக்குப்பிற்பாடு ஆயிரங்குமாரர்களுண்டு என்னுடையதகப்பன்
என்னையன்றித் தனியேஒருநாளும்போசனம்பண்ணுகிறதில்லை அப்படி
யிருக்கஒருநாள்அஷ்டமியிற் பார்வதிநோன்புநாற்கப்போனேன் அப்
போதுஎன்தகப்பன் போசனம்பண்ணும்பொருட்டாக என்னைத்தேடிக்கா
ணாமல்போசனங் கொள்ளாம லிருந்து நான்வந்தபின்பு என்னைக்கண்டு

மிகவுங் கோபங்கொண்டு என்னையிராக்கதன் விழுங்கவென்று சபித்தா
ர் அதுகேட்டு நான்மெத்தவும்பயந்து இந்தச்சாபந்தீர்வதெப்போதென்று
கேட்டேன் அவருடைய மூர்க்கமாகியகோபந்தெளிந்து சொன்னது வசி
சமார்க்கனென்றொரு இராசன் உன்னைச்சேரவருவான் அதினாலேசாபவி
மோசனமாகுமென்றார் அப்படியேதீர்ந்ததென்று விரதத்தை முடித்துக்
கொண்டு அவ்விருவரும் அந்ததடாகத்தில் மூழ்கிச்சந்தோஷமாக யிருவ
ருங்கூடித் தன்பட்டணமேவந்து சேர்ந்துவாழ்ந்திருப்பதை மந்திரிகண்டு
கருநாசத்தினாலுசிவனைவிட்டான் அவன்சிவனைவிட்டது எதினாலேயென்று
வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் குழந்தைகளுக்குருசி
யான வஸ்துவைக்கொடுத்தாற்போலுந் துறவறனுக்கு நல்லவசனஞ்சொ
ன்னாற்போலுங் குருடனுக்குப்பாலுஞ்சாதமுங் கொடுத்தாற்போலாயிற்று
சான்சொல்லிதேவகன்னிகையைக் கொண்டுவந்தனனென்று விக்ரமாதித்த
ன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியோடி முருக்க
மர மேறிக்கொண்டது.

வம்சமார்க்கன்கதை - முற்றிற்று.

### ௰௩-வது, யோகி சரித்திரம்.

மறுபடியும் விக்கிரமாதித்தன்மரமேறி வேதாளத்தைப் பிடித்துக்க
ட்டிக்கொண்டு வருகையில்வேதாளஞ் சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனேபுஷ்பபுரத்தின்சமீபத்திலோர்பாழுங்கோ
யிலுண்டு அதிலோர்பிராமணன்பசியினாலே மெய்தளர்ந்துபடுத்துக்கொ
ண்டிருந்தானவனை ஒருயோகிபுருடன்கண்டு அவன்பசியைத்தீர்க்கவேண்டு
மென்று மனதிலெண்ணிமந்திரத்தினால் ஒருபட்டணமுண்டுபண்ணிப் பி
ராமணன்வீட்டிலே அன்னமிட்டுவைத்தான் அந்தப்பிராமணனுந் திருத்தி
யாகச்சாப்பிட்டபின்பு களைதெளிந்து அப்போதுயோகிபுருடன் அந்தப்பி
ராமணனுக்கு மந்திரவுபதேசம்பண்ணினான் அவர்ஸ்நானம் பண்ணவே
ண்டுமென்றுபோய் ஸ்நானம்பண்ணுகையில் தன்னுடையபிள்ளைவந்து நி
ன்றதுபோல் கனவுகண்டுவெளியேவந்து யோகிபுருஷனுடனேநான்முழு
கப்போய் சலத்தில்சிரசை யமிழ்த்துகையில் இக்கனவு கண்டேனென்று
சொன்னான் அந்தமந்திரம்அவனுக்குப் பலியாமற்போனதேதென்று வே
தாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் விரதம் சிரத்தை தானம்
இவைமுதலானவையேகமனதாக யிருந்தாற்பலிக்கும் இல்லாவிட்டால்ப
லியாதென்று சொல்லக்கேட்டு வேதாளங்கட்டவிழ்த்துக் கொண்டு பழை
யபடியோடி முருக்கமா மேறிக்கொண்டது.

யோகிகதை - முற்றிற்று.

### ௰௪-வது, வைசியப்பெண்சரித்திரம்.

மறுபடியும்விக்கிரமாதித்தன் மரமேறிவேதாளத்தைப்பிடித்துக்கட்
டிக்கொண்டு வருகையில்வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே ஓர்பட்டணத்தில் ஒருவணிகனுக்குஒரு குமாரத்தியுண்டு அவள்விபசாரியாக ஓர்பிராமணனைச் சேர்ந்துக் கொண்டிருந்தாள் அந்நாளில்ஓர்வணிகன்வந்து அவளுடையதாய்தகப்பன்மாரைக்கண்டு உம்முடையகுமாரத்தியைத் தரவேண்டுமென்றுகேட்க நல்லதென்றுஇருவரும சம்மதித்துக்கலியாணம் பண்ணிக்கொடுத்தார்கள் புருஷனும்ஸ்திரீயும் அனுபோகம்பண்ணிக்கொண்டிருக்கிறநாளிலே அக்கள்ளனாகிய பிராமணனுடனேசேரக்கூடாமையால் அவன்மீதி லுண்டாகிய விருப்பத்தினலேமனவியாதிகொண்டு மரித்தனள் அவள்மரித்தசெய்தி பிராணன்கேள்விப்பட்டவுடனே விகாரமுற்றுமரிததான் பெண்சாதி இறந்ததுகண்டு காமநோயினலே அவள்புருஷனுமரித்தான் இம்மூன்று பேரில்யாரதிகமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறுன் பிராமணன்வைசியகன்னிகை எவ்வர்னகாலமுதற்கொண்டு அனேகநாள்கூடினமோகத்தினுலும் பின்புகூடாதபடியினுலும் மரித்தான் அவள்மீதி லுண்டாகிய விரகத்தினல் அவனிறந்தான் இவள்புருஷன்இவளுடைய கருத்தறியாமல் விருதாவாய்மரித்ததே பெரிதென்று விக்கிரமாதித்தன் சொல்லவேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழயபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

வைசியப்பெண்கதை - முற்றிற்று.

## ௰௬-வது, புலியையெழுப்பிய சரித்திரம்.

மறுபடியும் விக்கிரமாதித்தன் மரவேறிவேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டு வருகையில்வேதாளஞ் சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே பிரமபுரமென்னும் அக்கிராரத்திலேவிஷ்ணுசுவாமியென்ெருரு பிராமணனுண்டு அவருக்குத்தவததினுல் பெற்றபிள்ளைகள்நால்வருண்டு அந்தபிள்ளைகள்காரியத்தினளவே தேசாந்திரமபோனுர்கள் இப்படித்தேசாந்திரந் திரிகிறகாலத்தில் ஒருயோகிபுருஷனைக்கண்டு அவருக்குஅனந்தம்பணிவிடைகள் பண்ணிக்கொண்டிருக்கஅவரிந்த நால்வருக்குஞ் சஞ்சீவிமுதலானவித்தைகளுபதேசமபண்ணிவைத்தார் அப்படிஅவரிடமாகச சிலநாளிருந்து அவ்வழியிலே துஷ்டமிருகமாகிய புலியொன்றுசெத்துச் சரீரமெல்லாமிழந்து யெலும்புமாத்திரங்கிடக்கக்கண்டு நால்வரும்போய் ஒருவனெலும்பைச் சேர்த்து நரம்புண்டாக்கினுன் ஒருவனுதிரமுண்டாக்கினுன் மற்ெருருவன் சிவனுண்டாக்கினுன் புலியுந்தன் சுரூபத்தோடெழுந்துவந்து இந்நால்வரையுமடித்துப்போட்டது இந்ததோஷமயாருக்கென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன்சொல்லுகிறுன் இநதநால்வரிலே அதைதுஷ்ட மிருகமென்றறிந்து உயிராக்கினவனுக்கு தோஷமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழயபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

புலியையெழுப்பிய கதை - முற்றிற்று.

## ௰௬-வது, அனுமதி சரித்திரம்.

பின்னும்விக்கிரமாதித்தன் மரமேறிவேதாளத்தைப்பிடித்துக் கட்டிக்கொண்டு வருகையில்வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே வஜ்ரியென்னுமோர் நகரத்திலே தெய்வகாமியென்றொருபிராமணனுண்டு அவனுக்கு அர்ச்சுனசுவாமி யென்றொருகுமாரனுண்டு அவனுக்குப்-பதினாறுவயதில் அனுமங்கிரி யென்றொரு பெண்ணைக் கலியாணம் பண்ணினார்கள் புருஷனும் பெண்சாதியும் இரதியும்மன்மதனும்போலிருக்கிற வேளையில்ஒருநாளிராக்காலத்தில் புருஷனும்பெண்சாதியும் தென்றல் வீசுமிடத்தில் நித்திரை பண்ணுகையில அவளுடைய அதிரூபசிங்காரத்தைக்கண்டு ஒருஇராக்கதனெடுத்துக்கொண்டுபோனான் அந்தஅருச்சுனசுவாமி பக்கத்திலே ஸ்திரீயைக்காணாததினாலேவெகுமனஸ்தாபத்துடனேபூமியெங்குந்தேடிக்கொண்டுபோகிறபோது அந்தப்புரமென்னும் ஓரகிராரத்திலே பத்மநாபனென்னும்பிராமணனருகிற்சென்று அமுதுகேட்கஅப்பிராமணன் தன்பெண்சாதியை யழைத்து அவருக்குஅன்னமிடுவென்று சொன்னபடி அசனமும்பதார்த்தங்[illegible]கொண்டுவந்துகொடுக்க அதையோரிலையில்வாங்கி முடித்துக்கொண்டு [illegible]தியில்முழுகித் தனக்குண்டானநியமங்களெல்லா முடித்துக்கொண்டு தா[illegible] முடித்துவைத்த அசனத்தையெடுத்து சலத்தைதெளித்துச்சாப்பிடுகையி[illegible] இளமையில்வந்தநோய்போலவும் நன்றாய்வாழுங் காலத்தில் வந்த இயமன்[illegible]வும் தனியனாயிருக்கையில்வந்த இக்கட்டுபோலவும் ஒர்கெருடன் தன்ப[illegible]னாலே நல்லசர்ப்பத்தைப்பிடித்து அவன்சாப்பிடுகிற அசனத்துக்குநேராக[illegible]காண்டுவந்து விருட்சத்தின் மேல்வைத்து மூக்கினாலேகுத்த அந்தப்பாம்[illegible]கு வேதனையானபடியால் விஷத்தைக்கக்க அந்தவிஷம் அசனத்திலேவிழு[illegible]தையவன் அறியாமற் சாப்பிட்டபடியால் பிராமணன் மரித்துப்போனான்[illegible]லால் அந்தப்பிரமஹத்திதோஷம் யாருக்கென்று வேதாளங்கேட்கவிக்கிர[illegible]தித்தன் சொல்லுகிறான் தருமத்துக்கு அசனமிடுவித்தான் அக்கருடன்பி[illegible]னாலே கொண்டுவந்த சர்ப்பத்தைக் கொல்லச் சர்ப்பத்துக்கு வேதனையான[illegible]தினாலே விஷத்தைக் கக்கிற்று இந்தக்கதிஇன்னாருக்கென்று சொன்னவ[illegible]னுக்கு பாதகம்வந்துசேருமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்[illegible] விழ்த்துக் கொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

அனுமதிகதை ௲ முற்றிற்று

## ௰௭-வது. இரத்நவதி சரித்திரம்.

மறுபடியும்விக்கிரமாதித்தன் மரமேறிவேதாளத்தைக[illegible]த்துக் கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே அயோத்தியென்றொருப்பட்டண[illegible]ண்டு அந்தப்பட்டணத்தில் வீரகேசரியென்கிற ஒருவனிருக்கிறான் அவனுக்கு இரத்[illegible] யென்றொரு குமாரத்தியுண்டு அவளுடையஅழகுக்கு ஒருவர்[illegible]

அப்படியிருக்குங்கொத்துடனேபிறந்துவளர்ந்த பிள்ளையையுங் கன்றி
அனேகம்பேர்வந்து கலியாணம்பண்ணிக் கொள்ளுமபடிகேட்க ஒரு
ருக்கு நான்பாரியாகிறதில்லையென்றுதாய்தகப்பனுக்கு வெகுசெல்வ வதி
யாயிருந்தாள் அப்படியிருக்கிறகாலையிலந்தப்பட்டணத்தில்சிலர் சன்னமிடு
வது ஒருவராலுங்காணப்படாமையால் அந்தவூரில்வாழப்பட்ட செனங்க
ள்இராசனுடனேமுறையிட அதைக்கேட்டு அந்தக்கள்ளனைப்பிடிக்கவேண்டு
மென்று அர்த்தஇராத்திரியில்இராசன் நகர்சோதனைக்காகவருகையில் அ
ந்நேரத்தில் கறுத்தமேனியையும விரித்ததலையும் எதிர்த்தவரைத் துணிக்
கத்தக்க ஆயுதமுங்கழிகச்சையுங்கட்டிக்கொண்டுகள்ளத்தொழிலுள்ள வ
னாய் அக்கள்ளருக்கெல்லாம் தலைவனானகள்ளன் இராசன்முன்னேவர ராச
னுமவனேயாரென்றுகேட்க இந்தவூரைக்காக்கிறபத்திரகாளியின்புத்திரன்
ஊர்சுற்றிவருகிறேனென்றுசொல்ல ஆனால்நல்லதாயிற்று என்னுடையஅ
ரண்மனைக்குத்தலைவனாயிருமென்று உபாயத்தினாலேகூட்டிக்கொண்டுபோம் அர
ண்மனைவாசலிலே தந்திரம்பண்ணி இராசனும்அரண்மனைக்குள்ளே போ
னான் அந்தக்கள்ளனும்தன்பாஷையினாலேமற்றகள்ளரையழைக்க கள்ளர்வ
ந்துஇராசனைக்கொல்லவேண்டுமென்றுபோகையில் அந்தவார்த்தையைக்
காவற்காரர்கேட்டு அரசனுக்குச்சொல்ல அக்கணமேதனது சேனைகளோ
டெங்கைப்பிடியாகப்பிடித்துப்பின்கட்டாகக்கட்டி பட்டணத்தைச் சுற்றிவீ
தீக் கிழுவித்துப்போடநிருமித்தான் அப்படியேகள்ளனையழைத்துப்போ வ
ரமெல்லாம சந்தனம்பூசிகழுத்திலேமாலைபோட்டுப் பட்டணத் தீரத்தின
மாகச்சுற்றிவருகையில் அவ்வூர்செட்டித்தெருவில் வரும்போ க்கள்ளனைக்
வதியென்பவள் ஒருவர்பேரிலும் ஆசையில்லா திருந்தவள் ணக்கண்டாசை
கண்டாசையானள் அதுகண்டு அவள்தாய்தகப்பன் கள் ளன்றுசொல்ல அ
ப்பட்டவன் இவனையுங்கள்ளியென்று சொல்லுவார்க ளெனக்குப்புருஷ
னைக்கேட்டுஇரத்தினவதியென்பவள் அந்தக்கள் த்திலாவது அவனைவிடு
அவனுக்கேநான்ஸ்திரீயென்று சொல்லிஎக்க ன்சீவனைவனுமையில் ன்
லையாக்கினலென்சீவனிருக்கும் இல்லாவிடி காரணமென்றுநினைக்க அவ
டுவேனென்பதுகேட்டுயாவரும் இதென் மோமென்று ஓகோமேதக்பெ
தகப்பன்இராசனையாகிலும்போய்க்கா ணவைத்துச்சொல்லுகிறான் ஓமகா
டுத்துக்கொண்டுபோய் இராசன்மு பண்ணிப்பெற்ற ஒருகுமாரத்தியுண்
ராசனேனக்கு அனேகநாள்த முற்றாள் அவனைவிட்டுரட்சித்தால்உமக்கு
அவள் அக்கள்ளன்பேரில் மே வனென்றான் இராசனவனைப்பார்த்து மற்றவ
அனேகதிரவியங்கள்தருகிறே ன் இத்தனைநாளுங்கொள்ளைகொண்ட கள்ளனை
ன்னக்கேட்டாலுந்தருவி அதுவுமன்றி கள்ளனுக்குமேல் பேசுபேசவா
விட்டுப்போகாதென்ற முன்னே நில்லாமற் போவென்றான் அவ்வசனங்க
ளுமோர்கள்ளன் ன்வெகுகிலேசத்துடனே தன்வீட்டுக்கேகி இராசன்அ
ட்டுச்செட்டியார டெங்கவிதங்களைச்சொல்லக்கேட்டு அவன்குமாரத்திவெகு
ரண்யுமவிடு தலைவிரித்துமாரபிலறைந்துகொண்டு இக்கள்ளனைப் பின்தொ
ன்டெமு
டர்ந்த ழுது அலறிப்போவதையும இவளைப்பின்றொடர்ந்து இவள்தாய்த
ந்தார் அழுதுகொண்டுபோவதையும் ஆச்சரியமாகவேடிக்கை பார்த்
பேரெல்லாமிவர்களைப்பின்தொடர அக்கள்ளனைக்கொலைகளத்திலே ந

இருக்குங்குமாரத்தை சந்திவராடத்திக் கழுவிற்போடுகையி லக்கள்ள
ன் இந்தசெட்டிப்பெண் ணையும்அவள் தாய்தகப்பன்மாரையும்பார்த்துங்கை
த்துப்பின்பு அழுது த்தான்மரித்ததுகண்டுசெட்டிப்பெண்ணானவள் அ
க்கினியைவளர்த்து அதில்தன்னுயிரைவிட்டுப்போகையில்இவைகளெல்லா
மசகாயத்திலிரு ந்துபார்த்திருந்தபார்வதிபரமசிவனும்ரிஷபவாகனத்தி
ன்மீதிலிருந் அந்தப்பெண்ணைக் கூப்பிட்டு உனக்கென்னவரம்வேண்டு
மோகேளெ ன அந்தகவள் அந்தக்கள்ளனை எழுப்பித்தரவேண்டுமென்
கவும் இவள்பதிவிரதையென்றெண்ணிச் சந்தோஷித்து அந்
ருள் அ ரயெழுப்பிவிட்டுக் கைலாசபர்வதத்துக்குப்போனார்கள் அவே
க்கள்ள டி அந்தப்பெண்ணை அக்கள்ளனுக்கே கலியாணம்பண்ணிக்கொடுத்
ருந் வாழ்ந்திருப்பதை இராஜன் கேழ்விப்பட்டு சந்தோஷமாகிஅக்கள்ளனை
தனது சேனைக்குத்தலைவனாயிருக்கநியமித்தான் ஆதலால்அக்கள்ளனாயிருந்
விடுகையில்சிரித்ததும்பின்பு அழுதுமரித்ததும் என்னகாரணத்தாலென்
றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் முன்னே இந்தப்பெ
ண்தன்னையறியாதவன் இப்படிவந்தது அதிசயமென்று நகைத்தான்பின்பு
அவள்தாய்தகப்பன்படுகிற விசனத்தைக்கண்டு இரங்கியழுதானென்றும்
விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடி
யேமுருக்கமரமேறிக்கொண்டது.

இரத்தினவதி-சரித்திரம்-முற்றிற்று.

## ௪-வது-பகவதியின்சரித்திரம்.

பின்னும்விக்கிரமாதித்தன் மரத்திலேறிவேதாளத்தைப் பிடித்துக்க
ட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது-

கேளாய்விக்கிரமாதித்தனே கோலாமென்கிறவொருபட்டணத்திலே கீ
ர்த்திகேசனென்னும் இராஜனுக்குப் பகவதியென்றொருகுமாரத்தியுண்டு
அவள்வெகுசிங்காரத்துடனேயிருப்பாள் அவளைச்சந்தியகாலவேளையில் த
ன்சுவாமியென்றொரு பிராமணன்கண்டுமோகிக்க அந்தஇராஜகுமாரத்தி
யும் பிராமணனைக்கண்டு மோகித்தாள் அந்தப்பிராமணன்வெகு ஆசையி
னாலேயெந்தவுபாயத்திலேயவளைச் சேரலாமென்றுவிசாரமுற்று உலகதேவ
னென்கிற சித்தியோகியைக்கண்டு தான்மோகித்தவர்த்தமானம் அவரு-
க்குச்சொல்ல அவரும்நல்லதென்று பிராமணனைப்பெண்ணாகவேடம்போ
ட்டு ஒருவன்னிப்பெண்ணென்றெடுத்துக் கொண்டுபோய் இராசாவைக்க
ண்டுநான் காசியாத்திரைபோய்வருகிறேன் நான்போய்வருமளவும் இந்தப்
பெண்ணைஉம்முடைய அடைக்கலமாகவைத்திருமென்று சொல்லிப்போ
னான்இராசாவும் அந்தக்கபடமறியாமல்தன்குமாரத்தியண்டையிலிருக்கச்
சொல்லித்திட்டம் பண்ணினான் அப்படியே இராசகுமாரத்தியண்டையிலி
ருக்கவொருநாளிராசகுமாரத்திகண்டு இதேதுகள்ளமார்க்கமென்றுகேட்க
அவன் நல்லதாயிற்றென்று இருவ
ன்மீதில் மோகமாகிவந்தேனென்றுசொல்ல இந்தராசகுமாரத்தி யி
ருவருங் கூடியிருந்தார்கள் அப்படியிருக்கையில்

நபனையாயினுள் அந்நாளிலோர்மந்திரிகுமாரன் இராசாவைக்கண்டு உம்முடையகுமாரத்தியை எனக்குக்கலியாணம்பண்ணிக் கொடுமென்றுகேட்கஇராசனும்சம்மதித்து அந்தச்சித்தியோகி விட்டுப்போனபெண்ணைக் கலியாணம்பண்ணிக்கொடுத்தான் அப்படியேகலியாணம் பண்ணிக்கொண்டு தன்னுடையபடுக்கைவீட்டிலேபோய் பெண்சாதியையழைக்கஅவ ள்சொன்னதுஎன்மேரில் ஓர்பூசமிருக்கின்றதுஅது ஒருமாயுஞ்சேரவொட்டாதென்றுசொல்ல அதற்குசெய்யும்வகையேதென்றுகேட்க தீர்த்தயாத்திரைபண்ணிவந்தால் அதுவிட்டுப்போமென்னுசொல்ல அதுகேட்டுமந்திரிகுமாரன் யாத்திரைபோனான்அப்போது உலகதேவன் தன்னோர்சிஷனையழைத்துவந்து இராஜாவைக்கண்டு நான்விட்டுப்போனபெண்ணையனுப்பும் என்சிஷனுக்குகலியாணம் பண்ணவேண்டுமென்றுசொல்ல அதற்கிராசன்பயந்துஅவளைமந்திரிகுமாரனுக்குக்கலியாணம்பண்ணிக்கொடுத்து விட்டமையால்பதிலுக்குஎன்குமாரத்தியைத்தருகிறேனென்றான் நல்லதென்றுசம்மதித்துதன்சிஷனுக்கு இராசகுமாரத்தியைக்கலியாணம்பண்ணியழைத்துக்கொண்டுவருகையில் அவள்அந்தப்பிராமணனுக்குச்சொல்லியனுப்ப அக்கணமேயவன்வந்து தன்பெண்சாதியென்றுமறிக்கஇருவருக்குஞ்சண்டையாகி யுனக்கெனக்கென்பதால் இவ்விருவருக்குள்யாருக்கவள் ஸ்திரீயாகவேண்டுமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் பிராமணன்களவிலேகூடினான் தாய்தகப்பன்சம்மதித்துக்கலியாணம் பண்ணிக்கொடுத்தவனுக்கே பாரியாகவேண்டுமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடி முருக்கமரமேறிக்கொண்டது.

பகவதியின்கதை-முற்றிற்று.

---

## மகூ-வது-சர்ப்பத்திலுடைய-சரித்திரம்.

பின்னும்விக்கிரமாதித்தன் மரத்திலேறிவேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே பதும்புரமென்றொரு பட்டணமுண்டு அதிலே சிவமுதவாகனனென்றொரு இராஜனுண்டு அவன்யாசகருக்கெல்லாம் ஆதாரமானவன் மகாசதுரங்கவல்லவன்எந்நேரமும் இராச்சியபத்திரிசயம் பார்த்துக்கொண்டு திரிவான்அந்நாளில் ஒருவனத்தில்அநேகநாகங்களுண்டு அதைதனர்சருடன்கண்ணிற்கண்டபாம்பையெல்லாம் பிடித்துப்பட்சிக்கஒருநாள் அந்தவனத்திலுண்டானநாகமெல்லாங்கூடிக் கண்டுஎங்களுக்கோர் மனவுகொடுக்கவேண்டுமைய்யா வென்றுகேட்கநாங்களிந்தவனத்தில் உம்முடையபாதத்தி லிருக்கின்றோம்நீங்களித்தனைபேரைப்பிடித்துப்பட்சிக்கிறீர் இனிமேல்அப்படிச்செய்யாமல்வரிசையாய்நித்தம்ஒருவராய் வருகிறோம் வந்தபேரைப்பட்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுபோயிற்று அந்நாள் முதல்கொண்டு முறைமுறையாகப்புசித்து வருகையில்சங்கசூடனென்கிறசர்ப்பம் ஓர்தாய்க்கு ஓர்பிள்ளை அவனுக் கன்றைக்குத்தினம் முறைவந்தது அவன்தாய்தன் துக்கத்துடனே ஓர் மரத்தினிழலாய்கிழவல்ல ஓர் கன்னுசகன்னல்ல ஓர் பிள்ளையும் பிள்ளையல்ல

வென்றுகோவென்று புலம்புகிறவேளையில் அந்தவனத்தருகே புதுமைபா
ர்க்கவந்த சிலமூதவாகளென்கேட்டுவந்து இங்கேயேதுக்கமூகிறுயென்று
கேட்க அந்தநாகம்தன்னுடையவர்த்தமானமெல்லாஞ்சொல்லியழுதகை
க்கண்டு இராஜாவுந்துக்கப்படாதேயென்று தேறுதலைச்சொல்லி நான்கரு
டனுக்கு இரையாகிறேனென்றான் அதுகேட்டுநாகமானது என்விதினைநா
ன்தொலைக்கவேண்டுமேயால்லாமல் உமக்குக்காரியமென்ன நீர்உம்முடை
யபிராணனை அதற்குக்கொடுப்பானேனென்றுசொல்லிக்கொண்டிருக்கை
யில் கருடன்ஆகாரம்வேண்டி வெகுகோபத்துடனேவருவதுகண்டு இரா
ஜாவும்நாகத்துக்குப்பதில் என்னைப்பட்சித்துப்பசிதீரு மென்றுசொல்லக்க
ருடனுந்தன்னுடைய மனதிலேசத்தியபுருஷனிவனேயென்று சந்தோஷப்
பட்டு உமக்குவேண்டும்வரங்கேளுந்தருகிறேனென்ன ஆனல்இன்றுமுத
லாகஉயிரோடிருக்கிற பாம்பைப்புசிக்கவேண்டாம் விதிப்படிஇறந்துபோ
னபாம்பைப் புசியும்இந்தவரமெனக்குத்தரவேண்டுமென்றுஇராசன்கே
ட்ககருடனும் அப்படியேதந்தோமென்றுசொல்லிக் கருடன்தன்பதிக்குப்
போய்ச் சேர்ந்தான்பின்புஇராஜனும் சர்ப்பத்திடத்திலனுமதிபெற்றுக்
கொண்டுதன்பதியிற்போய்ச்சேர்ந்தான் இவ்விரண்டுபேரில் யாரதிகமெ
ன்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் இராசன்மனிதனு
கையால்சகலகாரியமும் தெரிந்தவனுனபடியினலே பிராணனைக்கொடுக்
கிறேனென்றான் கருடன் அகப்பட்டதைப் பட்சிக்கிற தாகையால் அத
ற்குத் தருமநினைவுவந்து பிரதிக்கினை சொல்லி விட்டதே யதிக மென்
றுவிக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக் கொண்டுபழையபடி
யோடிமுருக்கமரமேறிக்கொண்டது.

சர்ப்பத்தினுடையகதை-முற்றிற்று.

## ௨௰-வது-கோமுட்டிப்பெண்கதை.

பின்னும் விக்கிரமாதித்தன்வேதாளத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்
டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே கனகபுரமென்றொருபட்டணமுண்டு அ
திலேவிசாதரனென்றொரு ராசனுண்டுஅவனொருகோமுட்டிப் பெண்ணைக்
கண்டு அவள்பேரிலாசைகொண்டுஅவளைக்கல்யாணம் பண்ணிக்கொள்ள
வேண்டுமென்று தன்னுடையபுரோகிதனைக்கேட்க அந்தப்பெண்ணைநீர்க
லியாணம்பண்ணுவீராகில் உமது ராச்சியத்தை யிழந்து போவீ
ரென்றான் அதுகேட்டுஇராசன் அந்தப்பெண்பேரிலிருந்த ஆசையை
யொழித்துத்தன்பிரதானிக்கு அந்தப்பெண்ணைக்கலியாணம் பண்ணிக்
கொடுத்தான் அந்நாளில்அவள்உப்பரிகையின்பேரிலிருக்கையில் அவ்வரா
சன்கண்டு மோகித்துவிரகதாபமாகிறதைப்பிர தானிகண்டுதனதுபெண்
ஜாதியான கோமுட்டிப்பெண்ணையழைத்து இராஜனைக்கூடிச்சேர்ந்துவா
வென்றுசொன்னான் அப்படியேயவளும்இராசனிடத்திற்போனாள் அதை
இராஜனுங்கண்டு ஒருவன்பெண்சாதியைஒருவன்தொடலாகாதென்று அ
னுப்பிவிட்டுஅதுவேமனதில்விசாரமாகிச்சிவினைவிட்டான் அதுகண்டுபிர
தானியானவன்நம்முடையபெண்சாதியின்பேரிலுள்ளவிரகதாபத்தினலல்

ளவோபரித்தானென்றுவிசனமுற்றுஅவனுஞ்சீவனைவிட்டான் ஆகையால் இவ்விருவரில்பாதிகமென்றுவேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன் சொல்லுகிறான்அழகுடனிருந்தாலுந்தன்னுடையமோகத்தைப்பாராமல்அந்தப்பெண்ணைவேண்டாமென்று அனுப்பினதே யதிகமென்று விக்கிரமாதித்தன் சொல்லவேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டுபழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது,

கோமுட்டிப்பெண்கதை-முற்றிற்று.

## உக-வது-கானகமுனிகுமாரத்தியின்சரித்திரம்,

விக்கிரமாதித்தன்மறுபடியும் மரத்திலேறி வேதாளத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே சித்திபுரமென்னும்பட்டணத்துக் கதிபனுகியஇராஜன்வேட்டைமார்க்கமாகஓர்வனத்திற்போகையில்ஓர்ஸ்திரீயைக்கண்டுஅவள்பேரில்மையலாகி அவளைநோக்கியாரென்றுகேட்க கானகமுனியின் குமாரத்தியென்றுசொல்லஇராஜன்சந்தோஷப்பட்டு வேம்பின்கீழ் அவளுடனேபோகிக்கும்போது ஓர்இராக்கதன்கண்டுவளைத்துக்கொண்டு உங்களைவிழுங்கிப் போடுவேனென்பதுகேட்டு அரசன்பயந்துநடுநடுங்கி அவ்விராக்கதனுக்கு உபசாரவார்த்தைகளைச்சொல்லுகையில் மனமிரங்கியானுலுன்னை விழுங்காமலிருப்பதற்கோர்தாயுந்தகப்பனு மிருக்கிறபிள்ளையைக்கொண்டு வந்துஎனக்குஆகாரங்கொடுத்தால் சம்மதிப்பேனென்னஇராஜாவும்நல்லதென்று இராக்கதனுக்குபிரமாணிக்கம் பண்ணிக்கொடுத்துத் தன்பட்டணமேவந்து ஓர்பிராமணன்மிகவும்வறுமையுள்ளவனானபடியால் அவன்கேட்குந்திரவியங்களை அவனுக்குக்கொடுத்து அவன்பிள்ளையை வாங்கிஇராக்கதன்முன்னேவிட அவ்விராக்கதன் அவனைப்பொசிகொள்ளப்போகையில் அந்தப்பிள்ளைநகைத்தது அப்படிநகைத்தது என்னுலேயென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் பிள்ளையையொருவன்தெண்டித்தால் தாய்தகப்பன்கேட்கவேண்டும் தாயதகப்பன்தெண்டித்தால் இராசாவுடன்சொல்லவேண்டும் இராசன்தெண்டித்தால்தெய்வத்துடன்சொல்லவேண்டும் தெய்வமிப்படிசெய்தால் ஆருடன்சொல்லுவேனென்று நகைத்தானென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக் கொண்டுபழையபடியோடிமுருக்கமரமேறிக்கொண்டது.

கானகமுனிகுமாரத்தியின்கதை-முற்றிற்று,

## உஉ-வது-அறமகண்டன்சரித்திரம.

மறுபடியும்விக்கிரமாதித்தன் மரமேறிவேதாளத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில்வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே பிரதிசாலமென்கிற அக்கிராரத்திலே சிரோசனென்கிறபிராமணனுக்கு அறமகண்டனென்கிறகுமாரனுண்டுஅவன்நல்லபிராயத்தில்அபமிருத்தியாகச்செத்துப்போனான் அவன்தாய்தகப்

பன்வெகுதுக்கத்துடனே மற்றுமுள்ளபெயருமாகஅவனையெடுத்துப்போ
ய் மயானத்திற்கட்டையடுக்கையில் அந்நேரத்தில்வாமர்த்தன முனியென்
னுமசன்னியாசி அவ்வழியாகவந்துஅந்தச்சவத்தைக்கண்டு தன்னுடைய
பொந்தியைவிட்டு அந்தவுடலிலேபோகச்சொல்லி அந்நேரஞ்செத்துப்
போனவன்பழையபடிக்குநித்திரைதெளிந்தாற்போலெழுந்ததுகண்டு தாயு
ந்தகப்பனுமற்றுமுள்ள மனிதருஞ்சந்தோஷத்துடனே வீட்டுக்கழைத்
துக்கொண்டுபோகையில் அந்தப்பிள்ளைமுந்தியழுதான் பின்புநகைத்தா
ன்அவனழுததும் நகைத்ததுமேதுக்கென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதி
த்தன்சொல்கிறான் தாய்தகப்பன் வளர்த்தசரீரத்தைவிட்டு மறுஜென்மத்
துக்குட்புகுந்தோமென்றழுதான் மறுபடியுஞ்சரீரத்தைவிட்டு இளமையா
னசரீரத்திற்புகுந்தோமென்று நகைத்தானென்பதுகேட்டு வேதாளங்கட்
டவிழ்த்துக்கொண்டுபழையபடி முருக்கமரமேறிக்கொண்டது.

அறுமகன்கதை-முற்றிற்று.

உரு-வது-அவசத்திகாளெக்கிறசரித்திரம்,

பின்னும்விக்கிரமாதித்தன் முருக்கமரமேறிவேதாளத்தைப்பிடித்து
க்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே சேகரபுரமென்னும்பட்டணத்திலேசுட்
சத்திரஇராஜனென்பவன் ஒருநாள்வீதிமார்க்கமாகப்போகிறபோது அவ
சத்திகாளென்கிற பெண்ணைக்கண்டுமோகித்து அவளையழைத்துக்கொ
ண்டுமறுபட்டணத்துக்குப் போகிறபோதுவழியிலே கள்ளர்வளைத்துக்
கொள்ள அவர்களையுஞ்செயித்துக்கொண்டுபட்டணத்திலிருக்கும் ஓர்பா
ழுங்கோயிலில் இந்தப்பெண்ணைவைத்துப்பட்டணத்துக்குள்ளே போய்ச்
சமையல்செய்து வரும்படிபோனான் அவளையோர்தாதிகண்டு மஹாஅவ
போடுஅழைத்து அசனமிடுகிறேனென்றுசொல்லி அவளைக்கூட்டிக்கொ
ண்டுபோய் தன்னுடையநாயகிமுன்விடவே அவளிவளைக்கண்டு மோகித்
துத்தன்னிடத்திலே வைத்துக்கொண்டாள் அவளுடனேகூடியிருந்தபின்
புகோயிலிலேவைத்துப்போனவளை மறந்துவிட்டான் அசனங்கொண்டுவ
ரப்போன இராசன்இன்னம்வரவில்லையென்று விசனமாயிருக்கையில்அ
வளையோர்வைசியன் கண்டுதன்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் உ
டனேஅசனமிட்டு அவளுந்தானுமாகப்போகத்துடனே யிருக்கையில்
கௌளி ஓடுகிறதைக்கண்டுஅதையடித்துக் கொன்றுபோட்ட
அவனேகம்பிரதிக்கினைபுப்விம்புகளையும் சொன்னதுகேட்டுநீராஜா எவ
யைகொன்றதற்கித்தனை வல்லபஞ்சொன்னாய் முன்னாலேஎன்னையழைத்
துவந்தராஜன்கள்ளரைத்துணித்துப் போட்டுஎன்னையழைத்துவந்தார்அ
வரிப்படிபராக்கிரமஞ்சொன்னதில்லை நீஇப்படிசொன்னாயென்று மனதி
லெண்ணிஇனிநாம் இவனண்டையிலிருக்கலாகாதென்று சிவனைவிட்டாள்
அதுகண்டுவைசியனும் முன்னேவிட்டுவந்தஇராசன்கேட்டால் நமதுஆ
ஸ்தியெல்லாம பறித்துக்கொண்டுநம்மையுங்கொல்லுவா னென்றுபயந்து

தன்னுடைய ஆஸ்திகளையெல்லாந்தானதருமம் பண்ணிப்போட்டுத்தானுஞ்சிவனைவிட்டாள் பின்புமுன்னேவைத்துப்போன இராஜா அவளைநினைத்துமுன்விட்டுவந்தவிடத்திற போய்பார்க்கையில்காணாமையால் விசனமுற்றுசிவனைவிட்டான் இந்தச்சேதியெல்லாம் அந்தத்தாதிகேட்டுநம்மாலேயல்லோ மூன்றுபெயர்மரித்தார்களென்று அவளுஞ்சிவனைவிட்டாள் இந்தநாலுபேருக்குள் யாரதிகமென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் அவர்கள்மோகத்தினாலேமடிந்தார்கள் தாதிமடிந்ததேயதிகமென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடிமுருக்கமரமேறிக்கொண்டது.

அவசத்திகாளென்கிறபெண்கதை-முற்றிற்று.

௨௪-வது. முறைதெரியாச்சரித்திரம்.

பின்னும்விக்கிரமாதித்தன்மரமேறி வேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது,

கேளாயவிக்கிரமாதித்தனே கர்னாடமென்னும் ஓர்தேசத்தில்சேனாதிபதியென்னும்இராசன்பூமிப்பிரதட்சணமாய் வரவேண்டுமென்றெண்ணிதன்னுடைய ஸ்திரீயையுங்குமாரத்தியையும் விட்டுவிட்டுப்பூமிவலமாகப்போனான் அந்தஅரசன்பெண்சாதியும் குமாரத்தியும் அவனைத்தொடர்ந்து போகையில்வழிதப்பிஅவர்போனவழியறியாமல் வேறுவழியைப்பற்றிப்போகையில் மழைக்கோர்மண்டபத்திலிருந்து அப்பாற்போகையில்அவ்வழியாகத்தகப்பனும் பிள்ளையுமாகஇரண்டுபிராமணர்போகிறவர்கள் அவ்வடியைக்கண்டுஏதோபெண்களடிபோற் காணுகிறது ஆகையால்அதைத்தொடர்ந்துபோவோம் அவர்களகப்பட்டால்பெரிய அடிதகப்பனுஞ்சின்ன அடிபிள்ளையுமாக வைத்துக்கொள்வோமென்று பேசிக்கொண்டுதொடர்ந்துபோகையில்ஓர்விருட்சத்தின்கீழ் அவர்களிருக்கக்கண்டதினால் பெரியஅடிபெண்ணுஞ் சின்னஅடி தாயுமாயிருந்ததினாலே முன்பேசினபடியேதாயைப்பிள்ளையும் மகளைத்தகப்பனுமாகக்கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கிறநாளில் இருவருக்கும்பிள்ளைபிறந்து ஐந்துவயதாயிற்று இப்படியிருப்பதால் இவ்விரண்டுபிள்ளையும் முறைகொண்டாடுவதெப்படியென்றுகேட்க விக்கிரமாதித்தனுக்குத்தோன்றாமலிருப்பது வேதாளங்கண்டுசந்தோஷப்பட்டு விக்கிரமாதித்தனுக்கு வேதாளம்பிரசன்னமாய்ச் சொல்வதென்ன வெனில்வாருமையாவிக்கிரமாதித்தனே என்னுடைய நற்பு வளர்ப்பைச்சொல்லுகிறேன் கேளும்மாள்செல்வந்தி பீஸ்வரன்கோயில்ஸ்தானிகன்சுவாமிக்கு பூசைநைவேத்திய முதலானவைகளைபின்பு கோயிற்கதவைமூடிப்பூட்டிவிட்டு வெளியில்வந்தவுடன்நைவேத்தியமான சாதமுதலானவற்றையெடுக்கும்படி கோயிலைத்திறக்கப்போகையில் அக்கோயிலுள்ளேமனிதர்பேசுகிறது போலக்காணப்பட்டது அதென்னவென்று கதவின்துவாரத்திற்பார்த்தேன் அப்போதுசுவாமிமடியின்மேல் அம்மனிருந்துசொன்னதாவது பதினாலுலகத்திலுமில்லாமலிருக்கிற அபரூபமானகதை சொல்லவேண்டுமென்றுசொல்ல அதற்குசுவாமி இருபத்தா

ன்குகதைசொல்லி இருபத்துமூன்றுகதைக்குவிபரஞ்சொல்லி இருபத்
துநாலாவதுகதைக்கு அர்த்தம்ஒருவருக்குந்தெரியாது இதுமுறைதெரியாக்
கதையென்றுசொன்னார் அந்தஇருபத்துநான்கு கதையுங்கேட்டுநேரஞ்
சென்றுவீட்டிற்குவந்தேன் வந்தவிடத்தில் என்பெண்சாதியின்னேரந்தா
மதமாய்வந்ததென்னவென்றுகேட்டாள்பெண்ணேபரமசிவன் பார்வதிக்
குக்கதைகள்சொன்னார் அதைக்கேட்டதனால் இந்நேரமாயிற்றென்றேன் அ
வள்முயலுக்குக்கொம்பு கண்டவர்களில்லையென்றாற்போலச் சுவாமியைநீ
கண்டதில்லையென்றெண்ணுகிறேன் கண்டிருந்தாலவர் சொன்னகதைகளை
ச்சொல்லுமென்றாள் அப்போதுநான்என்பிராணநாயகியேசுவாமிசொன்ன
கதைகளைநான்சொல்லக் கூடாதுநீஎன்னுயிர்த்துணைவியானதால் சொல்
லுகிறேன்பிறருக்குச் சொல்லாதேயென்று இருபத்துநான்கு கதைகளையு
ஞ்சொல்லி அர்த்தமுந்தெரிவித்தேன் அவள்பொழுது விடிந்ததுடமெபி
த்துக்கொண்டு தண்ணீர்த்துறைக்குப்போய் அங்கிருந்தபெண்களிடத்தி
ல்கலந்துசுவாமி உமையவளுக்குச்சொன்னகதைகளைத் தன்னுயன்கேட்
டுவந்துதனக்குச் சொன்னதென்று கதைகளையெல்லாஞ்சொல்லி அர்த்த
மும்தெரிவித்தாள் அதனாலேஅக்கதைகளெங்கும் வெளிப்பட்டதைக்க
ண்டுபரமசிவனார் சந்நிதியிலுள்ளேனைக்குப் பிரத்தியட்சமாகத்தானப்ப
ட்டுஸ்தானிகாநான் இரகசியமாகஉமையவளுக்குச்சொன்ன கதையைநீஉ
ன்பெண்சாதிக்குச் சொல்லிவெளியரங்கமாக்கினபடியால் நீவேதாளமாகக்
கடவாயென்று சாபங்கொடுத்தார்.

அந்தச்சாபத்தையானேற்றுக் கொண்டுசிவாமியைத்தொழுது எனை
க்குஇந்தச்சாபம் எப்பொழுதுநிவர்த்தியாகுமென்று கேட்டேன்அதற்கு
ச்சுவாமிஉச்சினிபட்டணத்திற்குப்பத்துநாழிவழிதூரத்தில் ஒருஆரணி
யமிருக்கிறது அதில்படருந்துயர்ந்தஒருமுள்ளிலவமரம் நிற்கின்றது அந்த
மரத்தில்தலைகீழாகத்தொங்கிக்கொண்டுமுப்பது வருஷமிருப்பாய்அதற்கு
ப்பின்அவ்விடத்திற்சாந்தசீலரிஷியாகம்பண்ணிவருவான் அவனுக்குதவி
யாகவிக்கிரமார்க்கமகாராசன்உன்னைப்பிடித்துக்கொண்டு போகவருவான்
அவனால்தம்உன்னுடலிற்பட்டமாத்திரத்தில்உன்சாபம் நிவர்த்தியாகுமெ
ன்றுசொன்னார்விக்கிரமார்க்கனென்று நான்எப்படியறிந்துகொள்ளக் கூ
மென்றுகேட்டேன்சுவாமிசொன்னது நீமுள்ளிலவமரத்தில்தொங்கும்போ
துஉன்னைப்பிடிக்கவருகிறவனிடத்தில் இருபத்துநான்குகதைகளையுஞ்சொ
ல்லிஇவைகளுக்குஅர்த்தஞ்சொல்லென்றுகேள்எவன்சொல்லுகிறானோஅ
வனேவிக்கிரமார்க்கனென்றறிந்துகொள்ளென்றார்.ஆகையால்யென்கதைக
ளுக்கருத்தம் நீர்சொன்னபடியால்உமமைவிக்கிரமார்க்க பூபதியென்றுஇ
ப்போதுதானறிந்துகொண்டேன் என்னுடையசாபமும் உன்னுடையதிரு
க்கரங்கள்படநீங்கியது யானெப்பொழுதும்உமமிடத்திலேஅடிமைத்தொ
ழில்செய்துக்கொண்டு உமக்குவாகனமகா இருக்கிறேனென்றுசொல்லஅ
தற்குவிக்கிரமார்க்கன் வேதாளமேபிராமணனானதால் ஏவல்செய்யும்வா
கனமாகவிருக்கவுந்தகாதேயென்று சொல்லவேதாளம் இப்பிறவிப்பிராம
ணனானதால் ஏவல்செய்யும்வாகனமாகவிருக்க வுந்தகுமோஎன்னையாண்

டுகொண்டருளும் இனிஎனக்குநீர்எசமானானகையால் உமக்குவரும்ஆபத்தைக்காக்கவேண்டும்சாந்தசீலனென்கிறமுனிவன் தொளாயிரத்துத்தொண்ணூற்றென்பதுமகுடமன்னர்கள்தலையையடியோடே முடியோடேவெட்டிக்காளிகோயிற் கட்டிவைத்திருக்கிறான் இன்னமொருதலைகுறைவாகையால்அக்குறைவு நிறைவேறும்படிக்குஉமதுதலையைவெட்டவும் கட்டவுங்காத்திருக்கின்றான் நீரவனைக்குமிடத்திற்குநான்வருகிறேன் உமக்குஉண்மையானவார்த்தைசொல்லுகிறேன்கேளும் என்னைமிகவுங்கஷ்டப்பட்டுப்பிடித்துக் கொண்டுபோகிறீர்அந்தச்சாந்தசீலனென்கிற முனிவனிடத்திலேவிட்டால் அவன்வெகுசந்தோஷப்பட்டு உம்மைஸ்நானம்பண்ணச்சொல்லுவான் பண்ணினபின்புஉம்மைத்தெண்டம் பண்ணச்சொல்லுவான்நீர்தெண்டம்பண்ணுகையில் உம்மையாக்கினைபண்ண நினைத்திருக்கிறான்அப்படியவன்சொன்னபடி செய்யவேண்டாமமகாராசாதிபதியானபடியால்நீர்முன்னே முழுகிக்காட்டும்நான்பின்பு முழுகிறேனென்றுசொல்லும்மறுத்தவன் அப்படிச்செய்துதெண்டனிடுகையில் அவன்தலையைவெட்டிஅக்கினிகுண்டத்திலேபோடும் அப்போதுகாளிகாதேவி பிரசன்னமாகிக்கேட்டவரமெல்லாங் கொடுப்பாளென்றுசொல்ல விக்கிரமாதித்தனுஞ்சந்தோஷத்துடனே வேதாளத்தைக்கொண்டுபோய் சாந்தசீலன்முன்னேவிட்டான் அவரும்வெகுசந்தோஷப்பட்டு அந்தநதியில்முழுகிவாருமென்றார்அப்பொழுது நீர்முன்னேமுழுகும்நான்பின்னேமுழுகி வருகிறேனென்றார் கோயிலைவலம்வரச்சொன்னார் நீர்முன்னேவாருமென்றார் அப்படியவர்முன்னேவர இவர்பின்னேவந்தார்பின்பு தெண்டன்பண்ணுமென்றார்நான்இராசாதிபதியானகையால்எனக்குத் தெண்டனிடத்தெரியாதுநீர்முன்னேதெண்டம்பண்ணும்நான்பின்னேதெண்டம்பண்ணுகிறேனென்ன அப்படியேயவன்தெண்டனிட அந்தவேளையில் இராசன்தன்கையிலிருந்தகத்தியினால் அவன்தலையைவெட்டி அக்கினிகுண்டத்திலே போட்டாபின்புகாளிகாதேவியும் பிரசன்னமாகிவிக்கிரமாதித்தனைப் பார்த்துவாரும்மகாராசனேநீர் செய்தகாரியங்களைக்கண்டு மிகவுஞ்சந்தோஷமானேன் உமக்கென்னவரம்வேண்டும் அந்தவரத்தைக் கேளுந்தருகிறேனென்றுசொல்லவிக்கிரமாதித்தன் சர்வசிவதயாபரியேஎனக்கெப்பொழுதுந் தருமசிந்தையும் பரிசுத்தமானதையுஞ்சகலவல்லமையும் யானினைக்கும்போது உம்முடையதரிசனமும் உலகில்மாதமும்மாரியும் வருஷமும்போகவிளைவுதரவேண்டும் இதல்லாமலும்இங்குவெட்டுப்பட்ட மகுடமன்னர்கள்யாவரும் எழுந்திருக்கவும்அவர்களுக்கு வேண்டியவரமுங்கொடுத்து இரட்சிக்கவேண்டுமென்று கேட்ககாளிகாதேவி விக்கிரமார்க்கனுக்குவரமுங்கொடுத்து இராசாக்களையுமெழுப்பிஅவர்கள்கேட்ட வரமுங்கொடுத்தனுப்பினாள்விக்கிரமார்க்கன்வேதாளத்தைவாகனமாக ஏறிக்கொண்டுஉச்சினிபட்டணத்திற்குவந்து முப்பத்திரண்டு தர்மமுஞ்செய்து இந்தச்சிம்மாசனத்திலிருந்துசெங்கோல் கோணாதுஅரசுசெலுத்திய விக்கிரமார்க்கபூபதியைப்போலும் எல்லாசற்குணங்களும்பொருந்தியவர்களல்லவோ இந்தசிங்காதனத்தின்மேலேறவேண்டும் போஜமகாராசனே இப்பரிசுத்தகுணங்க

ன்உமக்கிருக்குமாகில் இந்தச்சிம்மாதனத்தின்மேல்வந்தேறுமென்று முதற்படிபதுமை சொல்லியது போஜராஜன் அதைக்கேட்டுவெட்கித் தலைகுனிந்துபோய்விட்டான்.

முதற்பதுமைசொல்கதை முற்றிற்று.

## இரண்டாம்படிக்குக்காவலாகிய
## சித்திரசிந்தாமணிப்பதுமைசொல்கதை

போஜமகாராசன் மறுநாள்ஸ்நானஞ்செய்து பூசைநியமங்களைமுடித்துப் பலவித தருமங்களைச்செய்துமந்திரிமுதலான பெரியோர்கள்சூழ்ந்துவரப்பகைமன்னர் தாழ்ந்துவாச சிங்காதனத்தை வலம்வந்துமுதலாம்படிகடந்து இரண்டாம்படியில்வலதுபாதத்தைத் தூக்கிவைத்தான் வைத்தமாத்திரத்தில் இரண்டாம்படிக்குக்காவலாகியசித்திரசிந்தாமணியென்னும்பதுமையானது இருகரங்களையுந்தட்டித் தலையசைத்துக் குலுங்கச்சிரித்துச்சொல்லுகின்றது ஓ போசமகாராசனே கருங்கல்லுக்கு நீர்மேலேறாததன்மைபோலநேர்ந்ததும் முதற்படிபதுமை சொன்னகதை உன்முடைய செவிக்கேறாதிருந்தகாரணமென்ன ஓட்டைக்குடத்தில் நீர்ஒழுகிவிட்டாற்போலும் நீர்கேட்டநல்லவிஷயங்களைபொழுகவிட்டீரோ நான்இன்றைக்கு உமக்குச்சொல்லுங்கதைகளைக்காந்தமானது இரும்பையிழுத்துக் கொள்ளுகிறதுபோலும் என்வாயில்வருநல்லவிஷயங்களை உமதுசெவி வழியாக வாங்கிக்கொள்ளும்இந்தச் சிங்காதனம் எல்லாநற்குணமபொருந்திய எங்கள்விக்கிரமார்க்க மகாராஜன் ஏறத்தக்கது உமக்குத்தக்கதல்லவென்று சொல்ல அதற்குப் போசமகாராசன்எல்லாநற்குணங்களும் ஒருவனுக்குப்பொருந்தமாட்டாது ஆகிலும்அக்குணங்களால்விக்கிரமார்க்கன்உலகத்தாருக்குஎன்னநன்மைசெய்தான் என்றுகேட்க பதுமைசொல்கின்றது.

விக்கிரமார்க்கன் காட்டிலாறுமாதம் நாட்டிலாறுமாதம் வாழ்ந்துவருங்காலத்தில் ஒருநாள்சிங்காசனத்தில் கொலுவீற்றிருந்து தனதுவாகனமாகிய வேதாளத்தையழைத்து இவ்வுலகத்தில் யேதாவது புதுமை யுண்டாவென்றுவிசாரித்து வரக்கட்டளையிட்டார் அவ்வேதாளம்போய்விசாரித்து வந்து எங்களரசனுக்குச் சொன்னதாவது சித்திரகூடத்தியொன்றொரு மலை அந்தமலையின்மேல் ஒருகாளிகோயிற்படிகத்திலேகட்டப்பட்டிருக்கிறது அந்தக்கோயிலின்முன்னேநெய்தாரைதாரையாகவிழுகிறது அவ்விடத்தில் ஒருபிராமணன் ஓமம்பண்ணிக்கொண்டிருக்கிறான் ஓமம் பண்ணினவிடத்தில் மௌனமாக விசாமல் மலைபோலேவிழுந்துகிடக்கிறது அப்பிராமணன்மௌனமாக விசாமல் ... இருக்கிறான் என்றுவேதாளஞ்சொல்ல விக்கிரமார்க்கனும்வேதாளமும் புறப்பட்டுவந்து நெய்தாரைதாரையாகவிழுகிறவிடத்திலேநின்றுஇது தேவிமகத்துவமென்றுஸ்நானம்பண்ணினார்கள் விக்கிரமார்க்கன் பரிசுத்தமான திருமேனியிற்பட்டநெய்யும் பாலாய்விட்டது அரசன் இதுவந்தேவிசெயலென்றுகும்பிட்டுஓமஞ்செய்கிறபிராமணனிடத்திற்போய் இந்தஓமம் எத்தனைகாலமாகப்பண்ணுகிறீரென்றுகேட்கபிராமணன் நாறுவருஷமாகப் பண்ணுகின்றேனெனக்குத்தேவிப்ரத்தியக்ஷமாக வில்லையென்றுசொன்னான்

அதுகேட்டுவிக்கிரமாதித்தன் அநுவக்கிரங்கிநதியிலேமுழுகிச்சிவ பூசைசெய்துகாளிசந்நிதிமுன்வந்து அவள்பிரத்தியக்ஷமாய்வரத்தோத்திரஞ்செய்துமகாளிவராதிருக்கக்கண்டுகையிலிருந்தஉடைவாளையுருவித்தன்கழுத்தைஅறுத்துக்கொள்ளுந் தருணத்தில் காளிவந்துகையைப்பிடித்துக் கொண்டுஉமக் கென்னவரம்வேண்டும் கேளுமென்ன விக்கிரமாதித்தன் இந்தப்பிராமணன் நூறுவருஷமாகயாகஞ்செய்துதவம்பண்ணியும் இவர்க்குவரங்கொடாதிருப்பது என்னவென்றுகேட்க காளிகாதேவி இந்தப்பிராமணன் தன்னுடையமனதைக் காற்றிலகப்பட்ட கப்பலைப்போல் அலையவிட்டு பலவிதசிந்தையாகத் தவம்பண்ணுகையால் யான்வரங்கொடுக்கவில்லை என்ன விக்கிரமார்க்கன் உலகமாதாவாகியஎன்தெய்வமேஎன்பொருட்டாக வரவது இந்தப்பிராமணன் கேட்டவரமெல்லாங்கொடுத்து இரட்சிக்க வேண்டுமென்ன காளியும்அப்படியேபிராமணன்கேட்டவரமெல்லாங்கொடுக்க அவன்வாங்கிக்கொண்டுபோகச்செய்வித்துவிக்கிரமார்க்கன்உச்சினி பட்டணத்திற்கு வந்துசேர்ந்தார்இப்படியுதவிசெய்யு நற்குணமுடையவர்கள் யாவரிருக்கிறார்கள் அல்லாமலும்இன்னுமொருகதை சொல்லுகிறேன்கேளும் போஜராஜனேஎங்கள்விக்கிரமார்க்கன் நீதிநெறிதவறாதுகிலேமையாக அரசுசெய்யுங்காலத்தில்மாலிகா புரியென்றொருபட்டணத்தையாளும்பிரசன்னனென்றொருஇராசன் அவனுக்குச் சித்திரரேகையென்றொருபெண்ணுண்டுஅவள்ஏழுநிலை மாளிகையின்மேலேறி விளையாடிக் கொண்டிருப்பாள்அவள்பெருமாளுக்கு வாழ்க்கைப்படுவதேயல்லாமல் மற்றொருவருக்கு வாழ்க்கைப்படுகிற தில்லையென்றிருப்பாள் அந்தச்சமயத்தில்சௌரியென்றொருபிராமணன் அவளைக்கண்டுமோகித்து இந்தப்பெண்ணைஎந்தவகையிலாகிலும்நாமேவிவாகம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்றுநினைத்து விஸ்வப்பிரமாவைக்கொண்டுமரத்தாலேஒருகருடவாகனஞ்செய்வித்து அதுபறக்கும்படிக்குஸ்திரமுளையாக்கிவித்து அவ்வாகனத்தின்மேலேறிக் கொண்டு போவோமாகில்பெருமாள்போலிருக்குமென்று அந்தப்பெண்ணிருக்கிற ஏழுநிலை மாளிகைக்குள் வந்திறங்கிஅன்னமேசொர்ணமே தேனே மயிலேகுயிலேசித்திரரேகையே நீமகாலட்சுமிவடிவாக இருக்கிற படியினாலே உன்னைவிவாகம் பண்ணிக்கொள்ளவந்தேனென்று சொன்னான் அப்பொழுது சித்திரரேகைதன்னுடைய பிதாவிடத்திற்கேசென்றாள் சௌரியென்னும் பிராமணன் பிரசன்னனென்னும்இராஜனிடத்திற்போய்நானே பெருமாள் உன்மகள் என்னையேவிவாகம்பண்ணிக்கொள்வேனென்றுஉறுதி கொண்டிருக்கிறபடியால் உமதுடையமகளை எனக்குவிவாகஞ்செய்து தரவேண்டுமென்றுகேட்கஅரசனப்படியேசெய்துகொடுக்க சித்திரரேகையும் சௌரியென்னும்பிராமணனை பெருமாள்தானென்றுறுதிகொண்டுசுகபோகமாய்வாழ்ந்திருக்குங்காலத்தில்தன்பிதா பிரசன்ன ராஜனுடையபட்டணத்தைக்கைக்கொள்ள பகைமன்னர்கள்வந்து கோட்டையைச்சூழ்ந்து சண்டைசெய்கையில் பிரசன்னராசன்சேனைகள் புறங்கொடுத்தோடுவதையரசன்கண்டு தன்மகள்சித்திரரேகையிடத்திற்போய்மகளேஉன் புருஷன் பெருமாளாகையால் அவனைக்கொண்டுவந்தசேனைகளைவெல்லச்சொல்லென்ன அவள்தன்புருஷனிடத்திற்போய்சுவாமி நீர்பெருமாளாகையாலென்

பிதாங்கரத்தில்வந்த பகைமன்னர்களைவென்றுவாரு மென்னசௌரியென்
னும் பிராமணன் ஐயோயிதென்னஅநியாயமினிநம்மைவெட்டப்போய் பூதம்
புறப்பட்டாப்போலு மாயிற்றேதெய்வமேயென்னசெய்வேனெப்படித்தப்பி
ழைப்பேன் கூத்தாடிச்சிலம்பைபடைவெட்டுக்குதவாதென்றதுபோல் நா
மெத்தற்குதவுவோமென்றுநடுங்கிஒடுங்கிவிசனங்கொண்டு தன்னைத்தானே
தேற்றிக்கொண்டு விக்கிரமார்க்கனிடத்திற்போனால் இந்தஆபத்தைத் தீர்
ப்பானென்று வாகனமேறிக்கொண்டுசீக்கிரம் விக்கிரமார்க்கனிடத்திற்போ
ய்த் தன்னுடையகுறைமுறையெல்லாம் சொன்னமாத்திரத்தில் விக்கிரமா
ர்க்கனும் வேதாளத்தைவாகனமாக ஏறிக்கொண்டுசௌரியென்னும் பிரா
மணனைக்கருடவாகனமேறிக்கொள்ளச் சொல்லித் தன்முன்னாகவும்பிராம
ணன்பின்னாகவும் ஆகாயமார்க்கத்தில்வந்துபகைமன்னர்களைச்செயித்த
ப்பிராமணனுக்கு வெற்றியையுண்டாக்கித்தான் உச்சினிப்பட்டணத்திற்கு
வந்துவிட்டான்இதுநிற்க இன்னுமொருகதை சொல்லுகிறேன்போஜமகா
ராஜனே எங்கள்விக்கிரமார்க்கராஜன் அஸ்வமேதயாகம்பண்ணத்தொடங்
கினார்அப்பொழுது திக்கெட்டிலுள்ள மன்னர்கள்வரும்படி திருமுகமெழு
தியனுப்பிவிட்டுச் சமுத்திர ராசனை அழைக்கும்படியொருபிராமணனை
விட்டார்அந்தப்பிராமணன் சமுத்திரக்கரையிற்போய்நின்று சமுத்திரரா
சனையென்றழைத்தான்அங்கொருவரும் காணப்படாமையால் நாமபுத்தி
யில்லாமல் ஜலத்தையழைத்தோமென்று வந்துவிட்டான் அதைச்சமுத்தி
ராஜன்கண்டு இவ்வுலகத்தைக்காக்கப்பட்ட விக்கிரமார்க்கனுடைய தூத
னென்றறிந்துபிராமணனைஅழைத்து அவன்கையிற்கொடுமென்று அந்த
ச்சமுத்திரராஜன் அவைகளின்பெருமைகளைச்சொல்லுகிறான் ஒருரத்தி
னம்சகலதனங்களையுங் கொடுக்கும் மற்றொருஇரத்தினம் சகலஆபரணங்
களையுங்கொடுக்கும்பின்னுமொருஇரத்தினம் சகலசேனைகளையுங்கொடுக்
கும் பின்னுமொருஇரத்தினம்இஷ்டபோககாரியங்களைக்கொடுக்குமென்
றுசொல்லக்கேட்டுப் பிராமணனும் இரத்தினங்களைவாங்கிக் கொண்டுவந்
துவிக்கிரமாதித்தன் கையிற்கொடுத்தான் விக்கிரமார்க்கன் பார்த்துச் சந்
தோஷித்துஒருரத்தினத்தைக் கொண்டுவந்தபிராமணனுக்குக்கொடுத்தா
ர் பிராமணன் மற்றமூன்று இரத்தினங்களையும் வீட்டிலிருப்பவர்களுக்கு
க்காட்டிவருகிறேனென்றுவாங்கிக் கொண்டுபோய்த் தன்பந்துசனங்கள்
கையிற்கொடுத்து அவைகளின்பெருமையைச்சொன்னான் அவர்கள்கே
ட்டுஆளுக்குஒவ்வொரு இரத்தினமாகயெடுத்துக் கொண்டுஒன்று என்னு
டையதுஅதுஅவனுடையதுஇவனுடையதுஎன்று ஒருவர்க்கொருவர் அடி
த்துச்சண்டைசெய்துக்கொண்டு விக்கிரமார்க்கனிராஜாவினுடைய சந்நி
முகத்தில்வந்து பிரியாதுசெய்தார்கள் அரசன்கண்டுநகைத்துச்சந்தோஷி
த்துஅவர்கள் இஷ்டப்படி எடுத்துக்கொண்டு இரத்தினங்களை அவரவர்க
ள்எடுத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டார்போஜமகாராசனே நீரும்இ
ந்தப்படிக்கு உபகாரமுமதானமும்பண்ணவல்லவரானால்இந்தச்சிங்காதன
ததின்மேல் வந்தேறுமென்று இரண்டாம்படிப்பதுமைசொல்லப்போஜரா
சன்வெட்கி அகம்வேறு முகம்வேறுபட்டுப்போய்விட்டார்.

இரண்டாம்படிபதுமைசொல்கதை முற்றும்.

௨

## மூன்றும்படிக்குக்காவலாகிய மாசிலாமணிப் பதுமைசொல்கதை.

மூன்றுநாள்காலையில் போஜமகாராசன் காலைக்கடமைகளை முடித்து ப்படிகம்போலும்பரிசுத்த மனமுடையவனாய்ச் சகலஅலங்காரத்துடனே சிங்காதனத்தின் முன்வந்துதான்வழிபடு கடவுளைவந்தித்துச்சிந்தித்துஇரண்டாம்படியைக் கடந்துமூன்றும்படியில் வலதுகாலைத்தூக்கிவைத்தபோது அந்தப்படிக்குக்காவலாகியமாசிலாமணியென்னும்பதுமைநகைத்துத்தலையசைத்துசொல்லுகின்றதுகேளும் போஜமகாராசனே அரியபாற் சோற்றினமதுரத்தைஅகப்பையறியாதவாறுபோலஇரண்டாம் படிக்குக்காவலாகியபதுமைசொன்னகதைகளை நீரறியாமல்முடவன்கொம்புத் தேனுக்காசைப்பட்டதுபோலும் இந்தச்சிம்மாதனத்தின்பேரிலேறஆசைபட்டுவந்தீர் நில்லும்நில்லும்யான்கேட்கிறகேள்விக்கு உத்தரவுசொல்லும்எங்கள்விக்கிரமார்க்கமகாராசனைப்போலும் தயவுஇரக்கமதருமம்தவம்உதவிபொறுமைசாந்தம்ஒழுக்கம்நீதிஅன்புபக்திவிசுவாசம்வீரம்உறுதிதுணிவுஆசாரம்முதலானவையுமக்கிருக்கின்றதாஇல்லையேஆகையால்இந்தச் சிங்காதனம்உனக்குத்தக்கதல்ல போய்வாருமென்னபோசராசன் மாசிலாமணியென்னும்பதுமையே, நீமுன்சொன்ன குணங்களாலே விக்கிரமார்க்கன் உலகத்துக்கு என்ன நன்மைசெய்தான் என்றுகேட்க பதுமை சொல்லுகின்றது வாரும்போஜராஜனே எங்கள்விக்கிரமார்க்கமகாராசாவானவர்இச்சிங்காதனத்தில் மண்டலாதிபதிகள் வணங்கவும்,பகைமன்னர்கள்இணங்கவும்வேசையராடவும், வித்துவான்கள்பாடவும்,வேதவேதியர்கள்கூடவும், வெண்சாமரைபோடவும், சகலவாத்தியமுழக்கவும்,காளங்கள்வழங்கவும்கொலுவிருந்து நாடாறுமாதம் ஆண்டு காடாறுமாதந்திரிகையில் உச்சினிபட்டணத்தில்சோமசுவாமியென்றொரு பிராமணன் அவன்பெண்சாதிகுணவதியென்கிறவள் அவளுக்குஇருபது வயதுமட்டும் புத்திர சந்தானமில்லாமையால்அவள் தன்புருஷனை யழைத்து என்பிராணநாயகா நீர் சகலசாஸ்திரங்களையுங்கற்றகல்விதிறத்தால்முக்காலவர்த்தமானங்களைச் சொல்லுவீர் ஆகையால்எனக்கு இவ்வளவுகாலமட்டும் புத்திரசந்தானமில்லாமற்போனகாரணமென்ன அதைஉள்ளங்கைநெல்லிக்கனி போலச்சொல்லும் என்னபிராமணன் புத்தியுள்ளவளுக்குச்சகலபாக்கியமுண்டு கடவுள்பூசைபண்ணினவனுக்குப் புத்திரபாக்கியமுண்டு என்றுசொன்னான் அப்பொழுதுகுணவதியானவள் தன்னாயகன்திருவாக்கின்படி தானும்தன்கணவனுமகடவுட்பூசைபண்ணினார்கள் அப்பொழுது அவர்களுக்குக்கடவுள்சொற்பனத்தில் வந்துசனிதிரயோதிசையில் சாத்திரசங்கற்படிபூசைபண்ணுங்கள் உங்களுக்குப்புத்திரபாக்கிய முண்டாகுமென்று சொன்னார் அப்படியேசெய்யக்கடவுள் சொற்படியேபுத்திரன்பிறந்தான் அப்புத்திரனுக்குப்பிதாவான பிராமணன் சகலகலையுங்கற்பித்து காசிக்குப் போய்விட்டான் அதன்பின்பு அந்தப்பிள்ளை காட்டிற்குப் போய்மலைசாரலில் தவஞ்செய்திருக்கையில் விக்கிரமார்க்க மகாராசன் காடாறுமா

த்திரியும்போது வேட்டையாடிக்கொண்டு பிராமணப்பிள்ளை தபசு செய்
ய்யுமிடத்திற்குவந்தார் அதுகண்டுபிராமணன் சர்க்கரைப்பந்தலிலே தே
ன்மாரிபெய்தாற்போலும்பழம் நழுவிப்பாலில்விழுந்ததன்மைபோலும்ச
ந்தோஷங்கொண்டு அரசனுக்குமவர்சேனைகளுக்குங்கந்தமூலபலாதிகளை
க்கொடுத்துத் திவ்வியமதுரம்பொருந்தியதீர்த்தமுள்ள தடாகத்தையுங்கா
ண்பித்துத் தாகந்தீரவுண்ணச்செய்துயாவரையுமிளைப்பாற்றிவைத்தான் அ
தைக்கண்டுவிக்கிரமார்க்கராசன் உராக்கணக்கியிலுப்பிட்டவனையுயிருள்
ளமட்டும் நினையென்றபழமொழிப்படிக்கு ஆபத்துவேளையிலுதவிசெய்த
அந்தப்பிராமணனையழைத்துக்கொண்டு உச்சினிப்பட்டணத்திற்கு வந்து
அவர்க்குஆசைதீரும்படி திரவியங்களைக்கொடுத் தனுப்பினார் பிராமணர்
திரவியங்களைக்கொண்டுபோய்வீட்டிலே சேர்த்துவிட்டுசிலநாள்பொறுத்து
இராஜாவினுடைய அரண்மனைக்குவந்து அரசன் மனதை அறியும்படிக்கு
விளையாடிக்கொண்டிருக்கும் இராஜன்பிள்ளையைத்திருடிக்கொண்டு போ
ய் ஒளித்துவைத்திருந்தானப்போதுவிக்கிரமார்க்கன் போஜனஞ் செய்யுந்
தருணத்தில் தன்னருமைத்திருமகனைத்தேடினார் அப்போது அங்கிருந்த
வர்கள் சுவாமிதங்களுடையபுத்திரனைத்தாங்கள் காட்டிலிருந்து அழைத்
துக்கொண்டுவந்தபிராமணன்கொண்டுபோய் கொலைசெய்துப் போட்டா
னென்றுசொல்ல அரசன்பிராமணனையழைப்பித்து பிராமணனே பிள்
ளையைநீகொலைசெய்தது மெய்தானோவென்றுகேட்டார் அதற்குஅந்தப் பி
ராமணன் என்னாண்டவனே உம்முடைய அருமைத் திருமகன் அணிந்தி
ருந்தநவரத்தின ஆபரணங்களை இச்சித்துதான் அறியாமையினாலே கொலை
செய்துவிட்டேன் என்குற்றத்தைப்பொறுத்தருளுமென்ன ஓபிராமணனே
என்னைக்கேட்டாலநேக ஆபரணங்களைக்கொடுப்பேனே நீகொலைசெய்
தது தருமசாஸ்திரத்துக்கு விரோதமல்லவா உன்னைத்தண்டிப்பது தருமந்
தான் அன்னமிட்டார்வீட்டிலே கன்னமிடலாகாதென்கின்ற பழமொழிப்படிக்
கும்ஒருநன்றிசெய்தவரை உள்ளமட்டும் மறவாதேயென்ற தருமசாஸ்திர
இப்படிக்கும் யான்பொறுத்துத்தண்டியாமல்விட்டுவிட்டேன் இவ்விடத்தி
ற்செய்ததுபோலும் இனிஎவ்விடத்துஞ் செய்யாதேயென்றுநற்புத்திசொ
ல்லிபின்னும் கனகஆபரணங்களையுங்கொடுத்தனுப்பிவிட்டார் உடனே
அந்தப்பிராமணன்கேளும் விக்கிரமார்க்கராஜனே உம்முடையமனதைஅ
றியும்படிக்குப்பிள்ளையை மறைத்துவைத்துக்கொலைசெய்தேனென்று வீ
ணாகச்சொன்னேன் பிள்ளையையொப்புக்கொள்ளும் உம்மைப்போலும்புண்
ணியவான்கள் திரிலோகங்களிலும் இல்லையாகவென்றுபுகழ்ந்துபோய்வி
ட்டான் ஆனபடியினாலே போஜமகாராஜனே இவ்வளவுஇரக்கமும் நன்கு
குணமும்பசகாயமும்சகாயமும் உமக்கிருக்குமாகில் இந்தச்சிங்காசனத்தில்
வந்து ஏறியிருந்து மதுரநீதிமுறைமைவழுவாது செய்கோல்செலுத்தி உல
கமெல்லாம் ஒருகுடைக்கீழாண்டுவாழ்ந்திருமென்று மூன்றாம்படிக்குக்
காவலாகியமாசிலாமணியென்னும் பதுமைசொல்லிற்று அதுகேட்டுபோ
ஜராசன்வெட்கி மனதுருகி முகங்கறுத்துமிகவெறுத்து அரண்மனைக்குப்
போய்விட்டான்.

மூன்றாம்படிபதுமைகதை-முற்றிற்று.

௨

## நான்காம்படிக்குக்காவலாகிய
## தெய்வசிகாமணிப்பதுமைசொல்கதை.

நாலாநாள் உதயகாலத்தில் போஜமகாராசன் எழுந்து ஸ்நானஞ்செய்துமலர்கொய்து கடவுளையெண்ணிப் பூசைபண்ணிச்சகல ஆபரணங்களையணிந்து சிங்காதனமேறத்துணிந்து மகுடமன்னர் மதிக்கவும், பகைமன்னர் துதிக்கவும் வெண்குடை பிடிக்கவும் வேசையர் நடிக்கவும் விருதுக்கொடி பறக்கவும்மேளவாத்தியஞ்சிறக்கவும் யானையோடியானை தொடரவுஞ்சேனையோடுசேனை படரவுங்கட்டியக்காரர் கூறவும்வீராதிவீரர்கள்மீறவும்வலஞ்செய்து சிங்காதனத்தின் முன்னின்று மூன்றும்படி கடந்து நடந்துநாலாம்படியில் வலதுகாலைத்தூக்கி வைத்தளவில் நான்காம்படிக்குக் காவலாகிய தெய்வசிகாமணிப் பதுமையானதுகண்டு இடங்கொண்டுமனம்மிண்டு அரசனைப் பார்த்துப் பகைத்து நகைத்து இகழ்ந்து தன்னரசனைப்புகழ்ந்துசொல்லுகின்றது வாரும்போஜமகாராசனே அவசரில்விட்டெறிந்தபந்தானது புறம்பேதானுண்டாம்போலும் நேற்றுமூன்றாம்படிக்குக் காவலாகிய மாசிலாமணிப்பதுமை உம்முடையசெவியிற்சொன்னகதை தன்னுண்டுபோக வேண்டுங்காரணமென்ன நீர்செவிடன்காதிற்சங்கூதினாற் போலு மானீர் ராஜசக்கிராதிபதியாகிய வெங்கள்விக்கிரமார்க்க பூபதிபோலும் எல்லாநற்குணங்களும் உமக்கிருக்குமானால் இந்தச்சிங்காதனமுமக்கு இடங்கொடுக்குமென்ன போசராசன் எல்லா நற்குணமுடைய விக்கிர மார்க்கன் உலகத்தாருக்குளென்ன உதவிசெய்தானென்று கேட்கதெய்வ சிகாமணிப்பதுமைச்சொல்லலுறுவது.

கேளும் போஜமகாராசனே, பட்டியென்னுமந்திரியும் சிக்கக்குட்டியென்னும் விக்கிரமார்க்கனுங்காடாறுமாதம்நாடாறுமாதமிருந்து இராசரிகஞ்செய்துவருநாளில் ஒருநாள் சம்புகாரியென்றொருபட்டணம் அந்தப்பட்டணத்திலே குபேரனுக்கொப்பாகிய தனதத்தனென்றொரு வைசியனாகிய பதைத்தவியாபாரியொருவனுண்டு அவன்விலையுயர்ந்த சிலநவரத்தினங்களையெடுத்துக்கொண்டுவந்து உச்சினிபட்டணத்துக்கதிபதியாயிருந்த எங்கள்விக்கிரமார்க்க ராசனைக்கண்டு காணிக்கையாகவைத்தான் அதைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு அளவில்லாததிரவியங்களைக்கொடுத்து இன்னும்விலையுயர்ந்த நவரத்தினங்கள் இருக்கின்றனவோவென்றுகேட்க அதற்குத்தனதத்தன் பிரபுவேவிலையுயர்ந்தஇரத்தினங்கள் எவ்விடத்திலிருக்கின்றன ஒவ்வொருஇரத்தினத்திற்கு விலையெவ்வளவென்று கேட்பீராகில்ஒரு இரத்தினத்தைப்பெருவிரலின்மேல்வைத்து ஆகாயத்தில்சுழற்றியெறிந்தால்அது எவ்வளவுயரம்செல்லுகின்றதோ அவ்வளவுசெம்பொன்கொடுத்தால் இரத்தினங்களைக்கொடுப்பேனென்றுசொல்ல அரசன் அப்படியேகொடுப்பேனென்று சம்மதித்துச்சிலவீரர்களைதனதத்தன்பின்னால் அனுப்பினான் தனதத்தன் பத்துஇரத்தினங்களையுங்கொண்டுவரகட்டளையிட்டார் வியாபாரியுஞ்சம்மதித்துவரர்வீரருடன் தன்னூருக்குப்போய்விட்டபின்

ந்தபத்துஇரத்தினங்களையும் எடுத்துக்கொண்டு வருகையில்வழியிலே பெரிதாகியஆறொன்று அந்தஆற்றில் இருகரையிலும் நீர்புரளும்படியாகப்பெருவெள்ளம் வருகையில்தனதத்தனும்வாள்வீரர்களும் எப்படிஐயோ என்னசெய்வோம் அரசன் எட்டுநாளையில்வரக் கட்டளையிட்டாரேயென்று அங்கிருந்தஓடக்காரனைப்பார்த்துவாருங்கள் ஓடம் விடுபவர்களேநாங்கள் இராஜாவுக்குப்பத்து இரத்தினங்கொண்டுபோகிறோம் உங்களுக்கு அரசனிடத்தில் வெகுமதிவாங்கித்தருகிறோம்ஓடம் விடுங்களென்ன அதற்கவர்கள் வாள்வீரர்களே ஓடங்கடந்தால்ஓடக்காரனுக்கோர் சொட்டென்ற உலகப்பழமொழிநீங்கள் கேட்டறியீர்களா வெள்ளமோ இருகரையும்புரளுகின்றது இப்போதுவெள்ளத்தில் விட்டால் நாங்களும் நீங்களும ஆற்றில்முப்பது நிச்சயமென்ன தனதத்தனுமவாள்வீரர்களும் எப்படியாகிலும எங்களை அக்கரையிற்கொண்டுபோய்விடுங்களென்ன ஓடக்காரர்கள் வீரர்களே அடுப்புநெருப்பும்போய்வாய்த்தவிடும்போன சம்பந்தம்போலவீணிலே நாங்களுமிறந்துஎங்கள்பெண்சாதிபிள்ளைகளையும் நாங்களிழந்துபோனால் எங்களுக்கென்னபலன் உங்களாலேஎங்களுக்குக்காணியாட்சி நடக்கின்றதா ஒன்றுமில்லையே ஆகையால் நீங்கள்கொண்டுவந்த இரத்தினங்களில் ஐந்துஇரத்தினங்கொடுங்கள் நாங்கள்எங்கள்பெண்சாதிபிள்ளைகளுக்குங்கொடுத்தனுப்பிவிட்டுஎங்கள்உயிர்போனால் ஒருமயிர் போனதுபோலேயென்றுஓடம்விடுகிறோமென்னவியாபாரியும்வீரர்களும் அதற்குச்சம்மதித்துஐந்துஇரத்தினங்களை ஓடக்காரருக்குக்கொடுத்துவிட்டு ஓடங்கடந்து இராஜனிடத்திற்போய் ஐந்துஇரத்தினங்களைக்கொடுத்தார்கள் இராஜன்இன்னும்ஐந்து இரத்தினமெங்கேயென்ன தனதத்தனும் வீரர்களும் பிரபுவே தாங்கள் எட்டுநாளைக்குள்ளேவரக்கட்டளையிட்டபடியால் தங்கள்கட்டளைக்குள்ளே நாங்கள்வரவேண்டுமென்றுநடுவழியில் உயிர்க்குத்துணிந்து ஓடம்விட்டவர்களுக்கு ஐந்து இரத்தினங்கொடுத்துவிட்டுவந்தோமென்ன விக்கிரமார்க்கன் மிகவும சந்தோஷப்பட்டுத்தனதத்தனுக்குச்சேரவேண்டியபத்து இரத்தினத்துக்குள்ளபொன்னையுங்கொடுத்து மற்றஐந்துஇரத்தினங்களையும வந்த வாள்வீரர்களுக்குக்கொடுத்தனுப்பிவிட்டார் ஆகையால் இப்படிப்பட்ட தயாளமுள்ள எங்கள்விக்கிரமார்க்கமகாராஜனைப்போல உதாரகுணம் உமக்கிருக்குமானால்தேசராஜர்போற்றும்போஜமகாராசனே இந்தச்சிங்காதனத்தில்வாருமென்றுநாலாம்படிக்குக்காவலாகிய செயவிசிகாமணியென்னும் பதுமைசொல்லப் போஜ மகாராசன் நாணிமுகங்கோணி தன்னுடையஅரண்மனைக்குப்போய்விட்டான்.

நான்காம்படிக்குக்காவலாகியபதுமைகதை-முற்றிற்று

## ஐந்தாம்படிக்குக்காவலாகிய மனோரஞ்சிதப்பதுமைசொல்கதை.

ஐந்தாநாள் உதயாதியில் போஜமகாராசன் பஞ்சணைவிட்டெழுந்து காலையிற்செய் கருமங்களெல்லாமுடித்து ஆதிசேஷனுஞ் சொல்லக்கூடாத ஆடம்பரத்துடனே பட்டணத்தைவலம்வந்து சிங்காதனத்தின்முன்

நின்று பேடிக்குத்தேவரம்பை கிடைத்தாலும் அவனுக்குப்பிரயோசனமில்லாததுபோல் இச்சிங்காதனங் கிடைத்தும் நமக்குப்பிரயோசனப்பட வில்லையென்று வாழ்கிற வீட்டிலிவன் மரநாய் கட்டிவைத்தாற் போலும்மாத்து நிழல்மிகவும சுகத்தைக்கொடுக்கிறதாகவிருந்தும் அம்மரத்தினிலேகளினுள் கூடுகூடாகக் கட்டிக்கொண்டிருக்கும் எறும்புகளாகியமுசலுகள் அந்தநிழலில் இருக்கவொட்டாம லோட்டுகிறது போலும்ஒவ்வொருபடிகள்தோறும் ஒவ்வொரு பதுமைகளிருந்தாசம்மையேறவொட்டாமல் ஓட்டுகின்றனவே இதுஎன்ன அனியாயம்தான்தேடியபொருளைச் சிலவழிக்கஅடுத்தவீட்டுக்காரனை உத்தரவுகேட்டாற்போலும் நாம்தேடிய சிங்காதனத்திலேற இப்பதுமைகள் என்னவுத்தரவுகொடுக்கின்றதென்றெண்ணியோசனைபண்ணிச்சிங்காதனத்தைத்தப்பணிந்து நாலாம்படியிலே ஐந்தாம்படியைமீறி வலதுதிருவடியைவைக்க அப்படிக்குக்காவலாகியமனோரஞ்சிதப்பதுமையானது இருகரங்களையுந்தட்டிக்கொட்டி அகங்குலுங்கச்சிரித்துமிகவும்தலையசைத்து இருவிழிகளாலும் நோக்கி அபிநயங்காட்டிக் கைநீட்டி அடுத்தடுத்துச் சொல்லுகின்றது-ஆ-ஆ-ஆ-பளாபளா நன்று விருத்ததுதேசராசர்போற்றும்போசமகாராசனே வாரும்வாரும் இரும்இரும் ஆண்டவன்சராசரங்களெல்லாம் படைத்தார் அவைகளுக்குள்ளேமக்களையும தேவனையும்மேலான அறிவுள்ளபொருளென்றுபிரித்தார் அப்படியிருக்கும்அறிவுள்ளபொருள்களில்நாமுமொருபொருளல்லவா நேற்றுநாலாம்படிக்குக்காவலாகிய தெய்வசிகாமணியென்னும் பதுமைசொன்னகதையானது கற்பாறையிலடிக்கும் மூளைக்குச்சானது அப்பாறையுளிறங்காதவாறுபோலஉம்முடைய செவிக்கேறுதிருந்த காரணமென்ன ஆனாலும் நீரெங்கள் விக்கிரமார்க்க மகாராசனைப்போலுங் கொடையானது கொடுக்குந்திறம் உமக்கிருக்குமானால்இந்தச்சிங்காசனம்இடங்கொடுக்குமென்னபோஜராஜன் அப்படிக்கு விக்கிரமார்க்கன் என்னகொடை கொடுத்தான் சொல்லென்ன பதுமைசொல்லுகின்றது.

கேளும்போஜராஜனே எங்கள் விக்கிரமார்க்கமகாராஜன் இந்தச்சிங்காதனத்திலிருந்து இவ்வுலகத்தில் குடிகளுக்குயாதொருகுறை முறை யில்லாமலும் தனக்குச் சத்துருக்களில்லாமல் ஒப்பற்றவுலகமெல்லாம் ஒருகுடைநிழலிலே அரசுசெலுத்தி வாழ்ந்துவருங்காலத்தில் ஒருநாள் மண்ணளவுதொட்டு விண்ணளவுமட்டும்வளர்ந்திருக்குஞ்சோலைகளையுடையநற்பலமரங்கள்நெருங்கியிருக்கும் பூங்காவனமாகிய சிங்காரத்தோப்பிலேவசந்தகாலத்திலே நவமணிகளாற்செய்யப்பட்ட வசந்தமண்டபத்துள்ளேவந்து மகுடமன்னர் போற்றவும் மாதர்கள் மலர்தூற்றவும் கட்டியர் மத்தளங்கொட்டவும் சிலர் கைத்தாளந்தட்டவும் நாட்டியப்பெண்கள்நடிக்கவும் பாவாணர் மதிகளைவாழ்த்திப் படிக்கவும் கனகனவென்று பேரிகை யறையவும் தணதணவென்று பூரிகைநிறையவும் அத்தர்புனுகுசாந்து ஜவ்வாது பனிநீர்பரிமளிக்கவும் மல்லிகைமுல்லை இருவாட்சி சண்பகமுதலிய மலர்களின்தேன்கள்துளிக்கவும் சகலருங்கண்டுகளிக்கவும் பலர் பாடவும் சாமரை சிலர் போடவும் கொலு வீற்றிருக்கும் போது உச்சினி பட்டணத் திலே இலட்சுமி தன்மான பெண்

ஒருபிராமணன் காளிகாதேவியைக்குறித்துநெடுநாளாகத்தபசுபண்ணிக்கொண்டிருந்தான் அன்றிராத்திரியில்காளிகாதேவியானவள் அந்தப்பிராமணன்சொப்பனத்தில்வந்து ஓபிராமணநீசெய்ததவத்தைக் கண்டுநான்மெச்சினேன் விக்கிரமார்க்கமகாராசன்சிங்காரவனத்திலே வசந்தமண்டபத்துள்ளே ஏகவைபோகமாகவிருக்கிறான் அவனிடத்திலேநீபோய்உனக்குஎன்னென்ன வேண்டுமோ அவைகளையெல்லாம் நீவாங்கிக்கொள்ளென்று சொல்லப்பிராமணன்விக்கிரமார்க்கராசனிடத்திற்போய்ஆசீர்வாதஞ்செய்ய விக்கிரமார்க்கமகாராஜன்பிராமணனுக்குத் தோத்திரஞ்செய்து தன்னுடைய தெய்வத்துவத்தினாலேபிராமணன் எண்ணிக்கொண்டுவந்தஎண்ணங்களையெல்லாமறிந்துஅவன்கேட்கு முன்னேகுறிப்பறிந்துகொடுக்கின்ற கொடையேகொடையென்கிறபழமொழிப்படிக்குவேண்டுவனவெல்லாங்கொடுத்துப்பிராமணன்மனமகிழச்செய்து அனுப்பிவிட்டார்அப்படிப்போல ஒருவர்மனதிலுள்ளிருப்பதைஅறிகிறஅறிவும் அவரவர்எண்ணப்படி கொடுக்கிறகொடையுமுமக்கிருக்குமானால்போசமகாராசனேஇச்சிங்காதனத்தில்வாரீரேனும் இல்லாவிடில்வந்தவழியே பாரும்பாருமகூடச்சிடில்அரண்மனையுட் போய்ச்சேருமென்றுஐந்தாம் படிக்குக்காவலாகியமனோரஞ்சிதப் பதுமைசொல்லப் போசராசன் அகம்வாடிமுகம்வாடிஇளைத்துக்களைத்துப்போய்விட்டான்.

ஐந்தாம்பதுமைசொல்கதை-முற்றிற்று.

## ஆறாம்படிக்குக்காவலாகிய
## அபராஞ்சிப்பதுமைசொல்கதை.

ஆறுநாள்போசராசன் நித்தியகருமானுஷ்டானங் களைமுடித்துப்பீதாம்பரபட்டாடைபுனைந்து மணிமகுடகேயூரகடக முதலானவைதொடுத்துமுத்துச்சிவிகையி லேறிக்கட்டியக்காரர்கள்கட்டியங்கூறி இருபக்கங்களிலும்வரவும் நாடகசாலைப்பெண்கள்நடனமாடிவரவும் நவமணிகளாலமைத்தஆயிரக்கால் மண்டபத்துள்சிங்காதனத்தின் முன்னேவந்துநின்று இளங்கிவணங்கி பணிந்துதுணிந்துபுதையல் எடுத்தவர் மனமகிழ்ச்சிபோலவும் திசைதப்பித்திவாந்தரங்களில் சென்றகப்பல்திரளான திரவியங்கள்கொண்டுவரப் பெற்றவர்கள்மனமகிழ்ச்சிபோலவும் மனமகிழ்ந்துஐந்தாம்படிகடந்து ஆறாம்படியில்நடந்துவந்ததை அப்படிக்குக்காவலாகிய அபராஞ்சிப்பதுமைகண்டு இடங்கொண்டுமறித்துச் சிரித்துச்சொல்லுகின்றதுகேளும்போசராசனே இராமுற்றும்இராமாயணங்கேட்டுப் பொழுதுவிடிந்தபின் இராமனுக்குச்சீதையென்னமுறையாக வேண்டுமென்றுகேட்டாற்போலும் சிறுகுழந்தைகாதிலேதிருமந்திரம் உபதேசித்தாற்போலும்நேற்றுஐந்தாம்படிப் பதுமைஉனக்குச்சொன்னகதை உம்முடையசெவிக்குப்பயன்படாமற்போய்விட்டதுநீஎன்காவலைக்கடக்காதீர்மீறிடக்காநீர்நில்லுமென்ன போஜராசன்கடன்பட்டார்நெஞ்சம்போலுங்கலங்கித்தேன்கூண்டில்மொய்த்திருக்கும் ஈக்களைப்போலும்இந்தச்சிங்காதனமுற்றும்மொய்த்திருக்கும் பதுமைகளைஎப்படிக்கடந்து போகலாமென்று

யோசித்து அவ்வரசன் அபரஞ்சிப்பதுமையே பணிமாத்திலிருக்கும்படி
தனைநக்கருக்குமடல்கள் அருக்கவொட்டாமல் நெருங்கித்தடுப்பதுபோலு
ம்நீங்களிந்தசிம்மாதனத்தில் என்னையேறவொட்டாமல் தடுப்பதுஎன்ன
காரணமென்றுகேட்க பதுமைசொல்லுகின்றது போசமகாராசனே நாங்க
ளும்தெய்வத்தன்மையையுடையவர் அவருக்கொப்பானவர் நீராகுல்சிங்
காதனமேறலாமென்னப் போசராசன்விக்கிரமார்க்கன் எனக்குமேலா
னவனென்பது எவ்விதத்திலே பதுமைசொல்லுகின்றது வாருமையா
போசமகாராசனே உச்சினிபட்டணத்தில் விக்கிரமார்க்கன்நீதிநெறிதவ
றாதுசெங்கோல்செலுத்திவருங் காலத்தில்அந்தப்பட்டணத்தில் தனபதி
யென்றொருசெட்டியுண்டு அவன்நூறுகோடிதிரவியந்தேடிவைத்திருந்தா
ன் அவன்இத்தனை கோடிதிரவியங்களைத்தேடிவைத்திருந்துங் கணவனில்
லாதகற்புள்ளபெண்ணின் கட்டழகுபயன்படாதுபோலும் தனக்கும்பயன்
படாதென்றெண்ணி உயிருள்ளபொழுதேபரகதிக்கு ஏதுவாகியநற்புண்
ணியங்களைச் செய்யவேண்டுமென்றுதிடங்கொண்டு திரவியங்களையெல்
லாமெடுத்துப்பலதிக்கிலும்சாலைகளும்சோலைகளும்கோயில்களும்திருவா
யில்களும்தடாகங்களுமடங்களுந்தண்ணீர்ப்பந்தல்களும் அன்னசத்திரங்
களும்இன்னம்பலவானதருமங்களையும்உண்டுபண்ணித்தான்சிலவியாபார
த்துடனேகாசிக்குப்போயசுவானத்திலேசரக்குகளெல்லாம்விற்றுவிட்டு
க்காசிபட்டணத்திற்கங்காஸ்நானஞ்செய்துவிஷ்ணுதரிசனைபண்ணிவைரவ
க்கடவுளையுங்கண்டுசேவித்துக்கொண்டு எழுந்திருக்கும்பொழுது அந்தஇ
டத்திலேஒருஓலைகவியெழுதப்பட்டுச்சுருளாகக்கிடந்தது.

அந்தச்சுருளைத் தனபதியெடுத்துக்கொண்டு கோயில்வலம்வருகை
யில்அவ்விடத்தில் பெண்ணொன்றும்பிள்ளையொன்றும் கழுத்தறுக்கப்பட்டுக்
கிடந்தன அவைகளுக்கடுத்தாற்போல ஒருபெரியநெய்க்கொப்பறைநெரு
ப்புவார்த்தெரியும் அடுப்பிலேற்றப்பட்டுத் தளதளவெனக்கொதித்
துக்கொண்டிருந்தது அங்குநின்றுதனபதி ஓலையைவாசித்துப்பார்க்கையி
ல்அதனுள்ளே எழுதப்பட்டிருந்ததென்னவென்றால் யாதொருவன்முப்ப
த்திரண்டுஇலட்சணங்களும் சகலநற்குணங்களும் பொருந்தியிருக்கிறா
னோஅவன் இங்கேகாய்கின்றநெய்க்கொப்பறையிலேகுதித்து இரண்டுநா
ழிகைபரியந்தம் விளையாடுவானாகில்இந்தப்பெண்ணும் பிள்ளையும்உயிரோ
டுபிழைத்தெழுந்திருக்குமென்று எழுதியிருந்தது அந்த ஓலையைத்தனப
திசெட்டிவாசித்துக்கையிலெடுத்துக் கொண்டுஉச்சினி பட்டணத்திற்குப்
போய்விக்கிரமார்க்கமகாராசனைக் கண்டுதிருமுகத்தைக்கொடுத்துநின்றா
ன்விக்கிரமார்க்கன் தனபதிசெட்டியே நீவியாபாரஞ்செய்யப் போனவிடத்
தில்யாதாமோரதிசய முண்டோவென்றுகேட்கதனபதியும் தான்கண்டஅ
திசயமெல்லாஞ்சொல்லி ஓலையைவாசித்துப்பாருமென்ன விக்கிரமார்க்
கன்ஓலையைவாசித்துப் பார்த்துஅதிலிருந்தசெய்திகளையெல்லாமறிந்துத
ன்னிடத்தில்முப்பத்திரண்டு இலட்சணங்களுஞ் சகலநற்குணங்களும்இ
ருந்தபடியால் உடனேகாசிக்குப்புறப்பட்டுப்போய்க் களகளவென்றுகொ
திக்கும்நெய்க்கொப்பறையில் விழுந்துஇரண்டுநாழிகை விளையாடினார் அ

ப்பொழுது அறுபட்டுக்கிடந்தபெண்ணும்பிள்ளையும் உயிரோடெழுந்து வந்தார்கள் விக்கிரமார்க்கன் அவர்களுக்கு அநேகம்திரவியங்களைக் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டுத்தான்உசசினிப் பட்டணத்திற்குவந்துசேர்ந்தார்போசமகாராசனே நீரும்அப்படிக்குத்தெய்வத் தன்மையினாலேபிறருக்குஉதவுசெய்யவல்லவராகியிருந்தசிம்மாதனத்தில்வந்தேறுமென்று ஆறும்படிக்குக்காவலாகிய அபராஜிதப்பதுமைசொல்லப போஜராசன்பாலகனைப்பறிகொடுத்தவர் மனம்போல்உள்ளம்பதைத்துத் தன்னரண்மனைக்குப்போய்விட்டார்.

ஆறும்படிக்குக்காவலாகிய பதுமைசொல்கதை-முற்றிற்று.

## ஏழாம்படிக்குக்காவலாகிய

## கருணாநிதிப்பதுமைசொல்கதை.

ஏழாநாள்உதயகாலத்தில் போஜராசன்செபதபம் முடித்துச்சுத்தசித்தமுள்ளவனாய் மன்னர்கள்முடிகளோடுமுடிகள் இடிபடவும்வாகுவலயங்களோடுவாகுவலயங்களடிபடவும யானையோடுயானை தாக்கவும் சேனையோடுசேனைநெருக்கவும் கடல்ஆரவாரித்தாற்போலும்வாத்தியம் சத்திக்கவும்தன்னெண்ணம் சித்திக்கவும்சபாமண்டபத்துள் வந்துஏழாம்படியைமிதித்துஏறும்போது அப்படிக்குக்காவலாகியகருணாநிதியென்னும் பதுமையானதுசொல்லுகின்றது கேளும்போசமகாராசனே சென்றமுறைமும் ஆறும்படிக்குக்காவலாகியபதுமையானது கைக்குக்கண்ணாடிபோலவும் உள்ளங்கைநெல்லிக்கனிபோலவும் சொன்னகதையைநீமறந்துகமறிலூற்றிய பாலைப்போலவும் யாதொருபயன்பெறாமல்விட்டுவிட்டு இன்றைக்குச்சற்றுமெண்ணமலும் யோசனைபண்ணமலும்சிங்காதனம்ஏறவந்தீர் சேற்றுச்சலத்திலேதேற்றும் வித்தையுரைத்தால்சேறுவேறு ஜலம்வேறுபிரிந்திருக்கும்அதுபோலஉம்முடைய அஞ்ஞானம்வேறு மெய்ஞ்ஞானம்வேறுபடும்படிக்குநானொருகதை சொல்லுகிறேன் அந்தகதையை நீர்தயைசெய்துஅன்னமானது நீர்வேறுபால்வேறுபகுத்துக்குடிக்கல்போலும் நீர்பகுத்துஅறியவேண்டும் எங்கள்விக்கிரமார்க்கன் இந்தச்சிங்காதனத்தில்கொலுவிற்றிருந்து உலகத்தைச்சமநீதியாக அரசாண்டுவருநாளில் ஒருநாள்அவர்தன்னுடையவாகனமாகிய வேதாளத்தைஅழைத்துகடல் புடைசூழ்ந்தஇவ்வுலகத்தில் தன்னைநல்லவனென்றுசொல்லுகிறார்களோ பொல்லாதவனென்றுசொல்லுகிறார்களோ என்னென்றுசொல்லுகிறார்கள் வேதாளமேநீபோய்விசாரித்துவாவென்றுசொல்லவேதாளம் அரசன்கட்டளைப்படிக்கு உலகமெங்குந்திரிந்து விசாரிக்கையிலேபலபுருஷர்கள் வீரசூரவிக்கிரமார்க்கமகாராஜனைப்போலும் நீதிமன்னரொருவருமில்லை அவராக்கினையினாலேகள்ளன்கொலைகளவு கட்குடிபொய்காமம்துன்மார்க்கம் அனியாயம்இவைமுதலியபாவங்கள் நீங்கினதருமம்தவம்நன்னடக்கை ஆசாரம்இவைகளோங்கின அவரிடத்தில்நீதிநிலைமைநன்னெறிநற்குணம் தைரியம்தானம்

சம்பத்துசன்மார்க்கம் விவேகம்வீரம்தெளிவுதெய்வதத்துவம் அழகுஅ
ன்புஆசாரம் இவைமுதலியனநீங்காதிருக்கின்றன ஆகையால்தருமமா
கிய்பெய்கின்றது வருஷமும்போகம்விளைகின்றதுஎன்று சொல்லக்கே
ண்டார்கள் சிலஸ்திரீகள்மன்மதனைப்பழிக்கும் அழகுள்ளவிக்கிரமார்க்க
ன்மதனைப்போலவும் வடிவுள்ளவர்கள் இம்மண்டலத்தில் இல்லையென்று
ஞ்சொல்லிக்கொண்டார்கள் வேதாளம்இவையெல்லாங் கேட்டுக்காசிதேச
த்திற்குப்போய் அங்குவிசாரிக்குமளவில்அக்காசிப்பட்டணத்தில் தரும
சீலனென்றொருசெட்டி நெடுநாளாகமிகவும் பெரிதானஒருகுளம்வெட்டி
அக்குளத்தில் தண்ணீர்சுரக்காமையினாலே அனேகதிரவியங்களைத்தானங்
கொடுத்துப் பின்னும்பொருளைச்செலவழித்துப்பாதாளமட்டும் வெட்டியு
ம்தண்ணீரில்லாமற்போய் விட்டது அதுகண்டுதருமசீலன் குன்மநோயா
ளிக்கு வயிறெரிகின்றவாறுபோலத்தான்வயிறெரிச்சல்பட்டுக் குளத்தைச்
சுற்றிவந்து இவ்வளவுபொருள்செலவழித்தும் ஆற்றிற்கரைத்தபுளிபோலா
ய்விட்டதேயென்று கட்குடித்தவன்போலுந்தியங்கிமயங்கிப் பெருமூச்சு
விட்டுவருத்தமடைந்து இனிஇங்குஉயிரைவிடுவோமென்று நிற்கையில்ந
டுக்கடல்வீழ்ந்தலைகின்றவனுக்கு ஓர்தெப்பமகப்பட்டவாறுபோல ஆகா
யத்திலிருந்து ஒருஅசரீரிவாக்கியம்பிறந்தது அதுஎன்னவென்றால் கேளு
ம்தருமசீலசெட்டியேநீர்என்விசனப்பட்டு உயிரைவிடயோசனைப
ண்ணுகிறீர்நீர்பூர்வசென்மத்திற்செய்தபாவத்தினாலேகுளத்திலே தண்ணீ
ரில்லாமற்போய்விட்டது இக்குளத்திற்குநடுவிலே முப்பத்திரண்டுஇலட்
சணங்களும்சகலசாத்திரங்களும் உடையவன்தலையைவெட்டி உதிரத்தை
பலியிட்டால்எப்பொழுதும வற்றாசமுத்திரம்போலமதுரமான சலமுண்
டாகுமென்றொருவாக்குப்பிறந்தது அந்தவாக்கைத் தருமசீலன்கேட்டுக்
கோடிதிரவியம்பெறத்தக்கதான ஒருதங்கப்பதுமைமுப்பத்திரண்டுஇலட்
சணங்களுடையதாகச்செய்வித்து அதற்குமுன்பாகஒருகோடிதிரவியத்தா
ல்பொற்கம்பஞ்செய்வித்து அத்தம்பத்தில்நவகோடிபொன்பெற்ற நவரத்
தினமிழைத்த பொற்பலகையை அறைவித்து அப்பலகையில் முப்பத்திர
ண்டுஇலட்சணமுடையஒருவன்தலையைவெட்டிஉதிரத்தைஇக்குளத்தின
டுவிலேபலியிடுவானாகில் அவன்சந்ததியார்இத்தங்கப்பதுமையும இத்தங
கத்தம்பத்தையும் இத்தங்கப்பலகையும் எடுத்துக்கொள்ளக் கடவர்களெ
ன்றுஎழுதிவித்துகுளக்கரையின் மேற்குக்கிழக்குமுகமாகநாட்டுவித்தான்
இவ்விசயங்களெல்லாம் வேதாளம்பார்த்துஉச்சினி பட்டணத்திற்குவந்
துதன்னுடைய அரசன்விக்கிரமார்க்கனுக்குஎல்லாமறிவிக்க விக்கிரமார்க்
கன்கேட்டு இவ்வளவுதருமசிந்தையுள்ள தருமசீலனென்னும் செட்டிமன
தைச்சந்தோஷப்படவேண்டுமென்று விக்கிரமார்க்கன்அனலைக்கண்டமெ
ழுகுஉருகுகிறதுபோலும் மனமுருகிவேதாளத்தை அழைத்துக்கொண்டு
காசிபட்டணத்தில் குளக்கரையருகில்வந்து பதுமையும்பட்டத்தையும்தம்ப
த்தையும்பார்த்துகுளமிருக்கிற ஆழமும்அகலமுங்கண்டு இதிலேஜலம்
நிறையுமானால் பலருக்கும்பிரயோசனப்படுமென்றும்தருமசீலன்செய்த
இவ்வளவு பெரிய தருமத்திற்காக தன் தலையைக் கொடுத்துக் கீர்த்தி
யைநாட்டலாமென்றும் யோசித்திருக்கையில்அங்கொ

கோவிலுக்குள்ளே தவயோகியொருவரிருந்து சொன்னதாவது விக்கிரமார்க்கனே இந்தச்சரீரம் நீரிலெழுந்த குமிழியைப்போலும் காலையிற் பூத்தமலர்மாலையில் வாடியதுபோலும் ஓடியநீரிலெழுதிய எழுத்தைப்போலும் அக்கினிக்குஞ்சாகாத தங்கத்தைப்போலும் நிலைநிற்கப்பட்டது ஆகையால் பூதவுடம்பழிந்தாலும் புகழுடம்பழியாது ஆனபடியால் உமது சிரத்தைத்துணித்து உதிரத்தை அக்குளத்திற்குப் பலியிடுமென்ன விக்கிரமார்க்கன் மூத்தோர்சொல் வார்த்தையமிர்தமென்று தவயோகிவாக்கைமேற்கொண்டு நடுக்குளத்திலிறங்கி உடைவாளையுருவித்தன் கழுத்தையறுத்துக்கொள்ளும்போது வசந்தகாலத்தில் நாட்டுமுருக்கம்பூ செந்நிறங்கொண்டு மலர்ந்ததுபோலும் சிவந்த உதிரமானது தாரைதாரையாகச்சொரிந்தது அப்பொழுது கடவுள் பிரத்தியட்சமாக வந்து விக்கிரமார்க்கன் வாளாயுதக்கையைப் பிடித்துக்கொண்டு அரசனே உனக்குஎன்னவரம்வேண்டும் கேளும் தருவேனென்று சொல்ல விக்கிரமார்க்கன் கடவுளைத்தொழுது அழுது என்தெய்வமே இக்குளத்தை வெட்டின தருமசீலன் என்னும் செட்டிமனது சந்தோஷிக்கும்படிக்கு திருக்குளம் எந்நாளும் வற்றாசமுத்திரமாக நீர்நிறைந்து இருக்கும்படிக்கு வரந்தரவேண்டுமென்ன கடவுள் அப்படியேவரங்கொடுத்துப்போகக் குளம்புட்களமாய்நிறைந்திருந்தது அதுகண்டு விக்கிரமார்க்கன் சந்தோஷங்கொண்டு உச்சினிபட்டணத்துக்குப்போய்விட்டான்.

மறுநாள்காலையில் தருமசீலன் குளக்கரையில்வந்துநின்றுபார்க்குமளவில் குளம் புட்கரமாகவிருந்தது அதுகண்டு நித்தியதரித்திரனுக்குநிறைசெல்வம் கிடைத்தாற்போலு மகிழ்ச்சியடைந்து இதென்ன ஆச்சரியம்நேற்று மழையில்லாதிருந்தும் இன்றைக்கு சலம்நிறைந்தது தெய்வச்செயலாகவிருக்கவேண்டுமென்று யோசிக்கையில் ஆகாயத்திலே அசரீரிவாக்கானது ஓ தருமசீலனே விக்கிரமார்க்கன் தன்னுடையசிரத்தையறுத்து உதிரத்தைப்பலியிடும்போது கடவுள்வரத்தால் குளம்நிரம்பிற்று விக்கிரமார்க்கன் உயிரோடு ஊருக்குப்போனானென்று பிறந்தது தருமசீலன்கேட்டுச் சந்தோஷப்பட்டு நமக்காகவிக்கிரமார்க்கன தலையைக்கொடுத்துத் தண்ணீருண்டாக்கிப்போனாரே அவருக்குநாமென்ன உதவிசெய்யப்போகிறோமென்றெண்ணித் தன்னிடத்திலிருக்கவிலையுயர்ந்த இரத்தினங்கள்பத்து ஒவ்வொரு இரத்தினம் ஒருகோடிபொன்பெறத்தக்கது இந்தப்பத்து இரத்தினங்களையும் தன்னுடையசேவகர்கள் ஐந்துபேரிடத்திலும் கொடுத்து இவைகளை நீங்கள் வீரமகாராஜாவிடத்தில் கொண்டுபோய்க்காணிக்கையாகவைத்துநாங் கோடிசரணஞ்சொன்னேனென்றுசொல்லி வாருங்களென்ன சேவகர்கள் ஐவரும் தன் எசமானன் கட்டளைப்படிக்கு விக்கிரமார்க்கனைக்கண்டு இரத்தினங்களைக்காணிக்கையாகவைத்து எங்களாண்டவன் தருமசீலன் இந்தப்பத்து இரத்தினங்களையும் தங்களுக்குக் காணிக்கையாகவைத்துத் தங்களுக்கு அவர் கோடிசரணஞ்சொல்லச்சொன்னாரென்று சொல்லிநாங்கள் வந்தவழியில் நூறுபேர் திருடர் வந்து எங்களை மடக்கிக்கொண்டார்கள்;

அப்போது இரத்தினங்களை நாங்கள் வாயிற்போட்டுக்கொண்டோ

ன்னங்களாடை யாபரணங்களை மாத்திரம்கள்ளர் பறித்துக்கொண்டு
போய்விட்டார்கள் இரத்தினங்களைப்பதனமாகக் காப்பாற்றிக்கொண
டுவந்தேனென்ன அரசன்சேவகர்களேகண்ணை இமைகாததல்போல்
நீங்கள்இரத்தினங்களைக்காத்துவந்தபடியால்உங்களுக்குஐந்துஇரத்தி
னங்களும்ஐந்துகோடி திரவியங்களுங்கொடுத்தேன் எடுத்துககொள்
ளுங்களென்றுசொல்லித்தனக்கு இந்திரனாற்கொடுக்கப்பட்டபசைப்
பட்டுப்பீதாம்பரத்தையும் தருமசீலனுக்குககொடுக்கும்படி கொடுத்த
னுப்பினார் அதைக்கொண்டுபோய்சேவகர்கள் தருமசீலனுக்குக்கொடு
க்கக்கண்டிருந்த ஏழைப்பிராமணர்கள் ஐந்துபேர விக்கிரமார்க்கன்
மாருதகொடையாளிஆகையால்அவனிடத்தில்நாம்போய்நம்முடை
யவறுமைகளைச்சொன்னால்நமக்குவேண்டுவனகொடுப்பானென்றுஅ
ரசனைக்கண்டார்கள் அரசன் பிராமணர்கள்மிகவும்எளியவர்களென
றெண்ணிமற்றஐந்து இரத்தினங்களையும் சிலதிரவியங்களையும் அவர்க
ளுக்குக்கொடுத்தனுப்பிவிட்டார் மேகமானதுஉலகத்தாருடையஉதவி
யைவேண்டாதுமழைபெய்கிறதுபோலும் எங்களரசன் விக்கிரமார்க்
கன்பலருக்கும் உதவிசெய்துவந்தார் அப்படிப்போல்போஜமகாராஜ
னே நீரும்பலருக்குஉதவிசெயவீராகில்இந்தச்சிங்காதனத்தில்வந்தே
றுமென்று ஏழாம்படிக்குகாவலாகிய கருணாநிதிப்பதுமைசொல்லப்
போஜமகாராசன்நடுப்படையிலே வில்லிறுணாறுந்துகையிழைத்துநின்
றவன்போலும்கலங்கித்தன் மாளிகைக்குப்போய்விட்டான்

ஏழாம்பதுமைகதை-முற்றிற்று.

## எட்டாம்படிக்குக்காவலாகிய சங்கநிதிப்பதுமைசொல்கதை.

எட்டாநாள் விடியற்காலத்தில் போஜமகாராஜன் சகலகருமங்க
ளையுமுடித்துத் தருமங்களைச்செய்துஅலங்கரித்துக்கொண்டுவெண்பு
ரவிமேலேறிவெண்குடைகவியச்சகலவேடிக்கையுடனேபலருந்தாழ
ந்துசூழ்ந்துவரச் சிங்காரமண்டபத்துள்வந்திறங்கிச் சிங்காதனத்தினு
டையஎட்டாம்படியிலேறும்போது அப்படிக்குக்காவலாகியசங்கநிதிப்
பதுமை போஜராஜனைப்பார்த்து உறுக்கிமுறுக்கிப்பற்களை நறநறவெ
னக்கடித்துக் கையைபடியிலடித்து, ஓஓ அரசனே நேற்று ஏழாம்படி
ப்பதுமைசொன்ன கதைகளைக்கடலிற்கிடக்கும் சிறிய துரும்புகளை அ
லைகளோடுதூக்கிக்கரையிற்றள்ளுகிறதுபோலும் தள்ளிவிட்டுஇன்றை
க்கும்சிங்காதனத்தில் ஏறவந்தாய்வான்கோழிமயிலைப்போ லாடினாலு
ம்மயிலாகாதல்லவா அப்படிப்போல நீஎங்களரசனுக்கு ஒப்பாகமாட்
டாய்அல்லதுநீ இந்தச்சிங்காதனத்திலேறினாலும் யானையிருந்தஇடத்
திலேபூனையிருந்ததுபோலாகுமென்றுசொல்லப்போஜமகாராசன் ஆ
ஆ, ஆ இதென்ன ஆச்சரியம்பணங்காத்த பூதங்கள்போலும்படிகள்தோ
றும்ஒவ்வொருபதுமைகள் இருந்துக்கொண்டுநம்மையேறவொட்டா
மல்செய்கின்றனவென்றுதன்னுள்ளேநகைத்துப் பகைத்துச்சொல்லு
கின்றன்வாருங்கள்பதுமைகளே கொடுக்கிறபுண்ணியவான்களைத்தடு
க்கிறபாவிகளைப்போ லிருக்கு என்னையேன் ஏறவொட்டாமல்தடுக்கிறீ

ர்கவென்னபதுமைசொல்லுகின்றது எந்தெந்தஇடத்திலேயவரவர்
கள்இருக்கவேண்டுமோ அந்தஇடத்திலே அவரவர்களிருக்கவேண்டு
மென்ன அரசன்சிம்மாதனம் இராசாக்களுக்கு உரித்தானபடியால்நா
ன்ஏறலாமென்றுசொல்ல அதற்குச்சங்கதிப்பதுமை ஒருகதைசொ
ல்லுகின்றது கேளும் போஜமகாராசனே வீரசூரபராக்கிரம விதரண
இலட்சணமுள்ள எங்கள் விக்கிரமார்க்கமகாராஜன் காடாறுமாதம்
நாடாறுமாதம்வாழ்ந்துவருகையில் நாட்டைப்பட்டியை யாளச்செய்
து அவர்வேதாளத்தை வாகனமாககொண்டு வனாந்திரக்களுக்குப் புற
ப்பட்டார் அவர்வரும்வழியிலே ஒருபெரிய பர்வதச்சாரலிலே ஆகாயத்
தையளாவியஒருபெரிய ஆலமரமிருந்தது அதனடியிலேஒருமண்டப
மிருந்தது அங்கே அரசன்வரும்போது அஸ்தமானமாய்விட்டது அத
னாலே அவர்அங்கேதங்கியிருக்கையில் அந்த ஆலமரத்தின்மேல் சஞ்சீ
வியென்னுங்கருடன்பட்சிகளுக்கெல்லாம் யிராஜாவாகவிருந்தது அத
னுடனே அநேகம்பறவைகளிருந்தன அவைகளைப்பார்த்துப் பறவைக
ளேநீங்கள்போனதிசையிலே புதுமைகளுண்டாவென்ன அவைகளில்
சடாயுவென்னும்பட்சிகேளும்எங்களிடராஜனே வடதிசையிலே உச்
சினிமாகாளிப்பட்டணத்திலேவிக்கிரமார்க்கன் இந்திரனாற்கொடுக்கப்
பட்டமுப்பத்திரண்டுபதுமைகளுடைய சிங்காதனத்தில் இருந்துபட்
டியைமந்திரியாகவும் வேதாளத்தை வாகனமாகவும் உச்சினிமாகாளி
யைத்தனக்குத்துணையாகவும் செய்துகொண்டு ஐம்பத்தாறுதேசத்
தரசர்களும் தனக்குப் பகுதிகட்டும்படிச் செங்கோல்கொளுத்து முப்
பத்திரண்டு தருமங்களையுஞ் செய்து தெய்வபத்தியுடனே இராஜரீக
ஞ் செய்து வருகிறார்.

அவர்நாட்டில் மாதமும்மாரிபெய்து வருஷமுப்போகம் விளைகி
ன்றது அவர்தன்னுயிரைப்போலு மன்னுயிரையெண்ணுகிறார் அவர்நா
ட்டில்பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் சத்துருக்களில்லை அவரைச்
சொர்ப்பனத்திலும் யாவருந்தோத்திரம் பண்ணுகிறார்கள் அவரைப்
போலும் அரசர்களுமில்லை அந்ததேசத்தைப்போலும் தேசமு மில்லை
யென்றுசொல்லக் கருடராஜன்கேட்டுப்பட்சிகளேநாமிருக்கிறஇக்கா
ட்டிலேஇராக்ஷதன்நண்டைச்சுட்டு நரியைக்காவல்வைத்தாப் போலு
ம்நாளொன்றுக்குநூறுபறவைகளையும் மிருகங்களையும பிடித்துத்தின்
றுபோடுகிறான் ஆகையால் இக்காட்டைவிட்டு நாமெல்லோரும்அவர்
நாட்டுக்குப்போய் அவரைச்சரணாகதியென்று அடைந்தோமானால் அ
வர்நம்மைக் காப்பாற்றுவார் அவரும்காக்காவிடில் எல்லோரும்இந்த
இராக்ஷதனுக்குத்தப்பித்தீவாந்திரங்களிற் போயிருந்துவிடுவோ மெ
ன்றுசொன்னதையெல்லாம்விக்கிரமார்க்கன்ஆலமரத்தின் கீழிருந்து
கேட்டுக்கொண்டு வெளியேபுறப்படுகையில் ஒருபசுவைப்புலி துரத்தி
க்கொண்டுவந்தது அப்பசுவுஅரசன திருவடியில் அடைக்கலமென்று
விழுந்ததுவிக்கிரமார்க்கன்மந்திரவாளையுருவிப் புலியைவெட்டியெறி
ந்துவிட்டுப் பசுவினிடத்தில்வந்து அதைத்தடவிக்கொடுத்து அதைஓ
ட்டிக்கொண்டுபோய் த்தண்ணீர்குடிக்கச்செய்து அனுப்பிவிட்டார்இ
தைப்பார்த்திருந்த பட்சிகள் இவர்மகாபுண்ணிய புருஷராயிருக்கவே
ண்டும் அல்லது விக்கிரமார்க்கனாகவேண்டும் என்றும் எல்லாப் பற

வைகளும்பறந்துவிக்கிரமார்க்கனை வலம்வந்து திருவடியில்விழுந்தன அரசனதைக்கண்டுமகிழ்ச்சி கொண்டு நீங்கள்எல்லாரும எவகாலில் வந்து ஏன்விழுந்தீர்களென்றுகேட்க கருடராஜன் ஐயா எங்கள் இக் கட்டுத்தீரவிழுந்தோமென்ன அரசன் உங்களுக்கென்ன இக்கட்டுச் சொல்லுங்களென்ன கருடராசன்பிரபுவேஇந்தப்பர்வதத்திற்கு வட வண்டையில் ஒருகுளக்கரை உண்டுஅக்கரையில்பிரகாசனென்றொரு இராட்சதனிருக்கின்றான் அவன்நாளொன்றுக்கு நூறுபறவைகளும நூறுமிருகங்களையும் பிடித்துத்தின்றுவருகிறான் அவனை யொருவரா லும் செயிக்கக்கூடாது தாங்களவனைச்செயித்துஎங்களைக்காக்கவே ண்டுமென்று சொல்லஅதற்குவிக்கிரமார்க்கன் அப்படியே உங்களைக் காப்பேன் நீங்கள்பயப்படவேண்டாமென்று பறவைகளுக்குச்சொ ல்லி வேதாளத்தின்மேலேறிக்கொண்டுஇராட்சதனிடத்திற்போய் அ ளவில்லாதசண்டைசெய்து அவனைசங்கரித்து வெற்றிகொண்டு பற வைகளிடத்தில்வந்து பறவைகளே இனிமேல் நீங்களபயமற்று வாழு ங்களென்றுசொல்லிப் பட்டணத்திற்குவந்து இசிங்காதனத்திலிருந் து நீதிநெறிதவறாது செங்கோல்செலுத்தி எல்லாவுயிர்களுக்குமஉத விசெய்துவாழ்ந்திருந்தார் போசராசனேநீயும் அப்படி உதவிசெய்ய க்கூடுமானால் இந்தச் சிங்காதனத்தில்வந்தேறுமென்று சங்கதிப்பது மைசொல்லப் போசராசன்வெட்கி மனதுருகிப்போனான்.

எட்டாம்பதுமைசொல்கதை-முற்றிற்று.

ஒன்பதாம்படிக்குக்காவலாகிய
பதுமமிதிப்பதுமைகதை.

ஒன்பதாம்நாட்காலையில் போசமகாராசன் செபதபம்பண்ணிச்சி ங்காதனமேறவெண்ணிச் சபாமண்டபத்துள்வந்துமனம்நொந்துஎட் டாம்படியைத்தாண்டி ஒன்பதாம்படியைவேண்டிவந்துநிற்கையில் அந் தப்படிக்குக்காவலாகிய பதுமமிதிப்பதுமைமுகங்கறுத்து அகம்வெறு த்துப்போசராசனை உருட்டிவெருட்டிச்சொல்லுகின்றது கேளும்போ சராசனே தாமரையிலையிலே தண்ணீர்சற்றும் பற்றாததுபோலும்நே றுச்சங்கதிப்பதுமை சொன்னகதைஉன் செவியிற் பற்றாதகாரண மென்ன ஈரமாத்திலேவைரஆணி கடாவிறைற்போலும்உன்செவிக்கு ஒருகதைசொல்லுகிறேன் அக்கதையைமுகட்டுப்பூசி உதிரத்தைக்கிர கிக்கிறதுபோலும்கிரிகிக்கவேண்டும் அக்கதைஎன்னவெனில்விசயநக ரமென்னும்பட்டணத்தில்திரிசாஸ்திரியென்றொரு சாஸ்திரியுண்டு அவனுக்குக்கமலசாஸ்திரிஎன்றொருபிள்ளையுண்டு அவன்நிறைசெல் வத்திலிழுமாந்துவேதாகமசாத்திரபுராணங்களைக்கல்லாதுவீண்கால மழிப்பதைப்பிதாவானவன்கண்டு அப்பாமகனே செல்வப்பொருளி லும் கல்விப்பொருள்மேலானது கல்வியானதுசகலசம்பத்தையுந ல்லார்சிநேகத்தையும் கீர்த்தியையும் சன்மார்க்கத்தையும தேவபக் தியையும் முத்திக்குவழியையுங்கொடுக்கும் நானென்னபுத்தி சொல வியுங் கல்வியைக்கற்காதுமிருகங்களைப்போலும் திரிகிறாய் இனி என் மூகத்தின்முனவராதே உன்னை எவ்வழியுமில்லாதகுட்டிச்சுவரா

க வெண்ணிலே னென்று வனைவெட்டிககல்வி கற்க வேண்டுமென்று பிதாவை விட்டு விந்தியாநகரத்திற்போய்ச்சேர்ந்து அங்குச்சாஸ்திரகுத்திரனென்னும்வித்துவானையடுத்துச் சகலகலையுங்கற்று தன்னூருக்குவருகையில் திருக்காஞ்சிபுரத்தைக்கண்டு வீதியில்வருகையில் அவ்விடத்தில் நரமோகினியெனவொருதேவதாசியார்த்துக்கண்காட்டிசைகைசெய்துமயக்கினாள் கமலசாஸ்திரி தேனில்விழுந்தஈயைப்போலும் மதிமயங்கிநிற்கையில் அவ்வூரார்சாஸ்திரியை நோக்கி வாரும்பிராமணரே இவளிடத்தில் ஒருஇராட்சதனிருக்கிறான் அவன் இவளைக்கூடுகிறவர்கள் எவர்களோ அவர்களைக்கொன்றுதின்றுவிடுகிறான் ஆகையால் இவளைவலைப்பிற்சிக்கிக் கொள்ளாதேபோய்விடுமென்னப் பிராமணன்கேட்டுப்பயங்கொண்டு தன்னூருக்குவந்துபிதாவைச்சேவித்துத் தான்போய்க் கல்விகற்றதும்வழியிற்கண்ட அதிசயமுஞ்சொன்னான் பிதமகிழ்ச்சியடைந்து இருக்க ஒருநாள் கமலசாஸ்திரிஎங்கள்விக்கிரமார்க்கன சபைக்குவந்தார் அதுகண்டுவிக்கிரமார்க்கன் கமலசாஸ்திரியே நீயெங்கேபோய்க்கல்விகற்றுவந்தாய்நீ போனவிடங்களில் என்னவதிசயங்கண்டு சொல்லென்னகமலசாஸ்திரியான்விசயநகரத்தில் சாத்திரகுத்திரனென்னும் வித்துவானிடத்தில்சகலகலையுங்கற்றுக் காஞ்சிபுரத்திற்கு வருகையில் நரமோகினியென்னுந்தேவதாசி என்னைக்கண்டு மயக்கினாள் நானஞ்சு மயங்கிநின்றேன் அப்பொழுது அவ்வூரார் இவளிடத்தில்எவன் சேருகிறானோ அவனை நடுராத்திரியிலே இராட்சதன்வந்து கொன்று போடுகிறானென்று சொன்னார்கள்.

அதைக்கேட்டு நான்பயந்துவந்துவிட்டேனென்று சொன்னான் இச்செய்தியை விக்கிரமார்க்கன் அறிந்துபிராமணனையழைத்துக்கொண்டுகாஞ்சிபுரத்தில்தேவதாசி நரமோகினிவீட்டுக்குவந்தார் அவள் சமயல்வீட்டுள் முயல்வந்தகப்பட்டாற்போலும் சந்தோஷப்பட்டுப் பொற்செம்பில்பனிநீர்கொண்டுவந்து அரசன் திருவடிகளைக்கழுவிப் பீதாம்பரங்கொண்டு தொடைத்துப்புட்பஞ்சூடித் தீபதூபங்கொடுத்துச் சாஷ்டாங்கமாகதெண்டனிட்டு இருகரங்களுங்கட்டிக்கொண்டு வாரும்மண்டலாதிபதியே தங்களையானகண்டபொழுதேசூரியனைக்கண்டபனிபோல் என்கலிவிட்டுநீங்கியதுஎன்றுசொல்லிஅரசனைச்சப்ரமஞ்சத்துள்வீற்றிருக்கச்செய்து வெண்சாமரைவெற்றிவேர்விசிறி கொண்டுவீசிச் சந்தனம்அத்தர்பனிநீர்தெளித்துப்பரிமளதாம்பூலங்கொடுத்துப் பின்னும்சொல்லுகிறாள் கேளும்சக்ரேஸ்பராயானையக் ... நீரோசகலசிவதயாபரர்என்று சொல்லுகிறேன் யானேமகாபாவி தேனை மேலதங்களுக்கு யாதொருபயனுமில்லைபாம்பின்வாயிலுள்ளே புகுந்தீர் குதித்துப்புகுந்தாற்போலும் கொடியவளாகியஎன்வீட்டுள் புகுந்தீர் கள்ளெட்டிக்கனிமேலேஅழகாயிருந்தும்அதனுள்ளிருக்கும்வஸ்துசொல்லுங்குணமுடையது அதுபோலும்நான்அழகாயிருந்து அனேகரைக்கொல்லுங்குணமுடையவளாய் இருக்கிறேனென்ன அரசன்நரமோகினியேநீஅப்படிச்சொன்னதென்னவென் றுவினவாநரமோகினி சொல்லுகிறாள்.

கேளும்என்னுண்டவனே யாராகிலும்ஒருபுருஷனை இச்சி
த்து அழைத்துவந்து இந்தச்சப்பிரமஞ்சத்தில்கொஞ்சிக் குலாவிக்
கூடிவிளையாடிப்பாடிக்கொண்டாடி ஏகவைபோகமாய் இருக்குந்தரு
ணத்திலே கோழிக்குஞ்சைப் பருந்தெடுத்துக்கொண்டுபோய்க் கொ
ன்றுதின்றுவிடுகிறதுபோலும் என்னிடத்தில்வந்தவனை ஓரிராட்சத
ன்எடுத்துக்கொண்டுபோய்கொன்றுதின்றுவிடுகிறான் அதனாலேஎ
ன்னிடத்தில் ஒருவரும்வருகிறதில்லையென்றுசொல்ல அரசன்பயப்ப
டாதே நான்விக்கிரமார்க்கன் அவனைச்சங்காரம்பண்ணுவேன் என்
று அங்கேயிருக்கையில் அர்த்தராத்திரியில இராட்சதன் புறப்பட்டவ்
விடத்தில்வர விக்கிரமார்க்கன்கண்டு வளாயுதங்கொண்டு அவனைக்க
ண்டதுண்டமாகவெட்டியெறிந்து நரமோகினிக்குஉண்டான துன்ப
ங்களைத்தீர்த்து கமலசாஸ்திரியும்நரமோகினியும் நரமோகினியும்இச்
சித்தபடியே இருவரையும்மருவசெய்து அவர்களுக்குவேண்டும்பொ
ருள்களையுங்கொடுத்து உச்சினிப்பட்டணத்திற்குவந்துவிட்டார்போ
ஜமகாராஜனே உமக்கப்படித்திறமிருக்குமாகில் இச்சிங்காதனத்தில்
வந்தேறுமென்று ஒன்பதாம்படிக்குக்காவலாகிய பதுமநிதிப்பதுமை
சொல்லப்போஜராஜன் அடங்கிப்போய்விட்டான்.

ஒன்பதாம்பதுமைசொல்கதை - முற்றிற்று.

### பத்தாம்படிக்குக்காவலாகிய

### சர்க்குணநிதிப்பதுமைசொல்கதை.

பத்தாநாள்போசராசன் சபாபண்டபத்துள்வந்துநவரத்தின சி
ங்காதனத்தினுடைய ஒன்பதாம்படியைவிட்டுப்பத்தாம்படியைத்தொ
டவெழுகின்றபோது அந்தப்படிக்குக்காவலாகியசர்க்குணநிதிப்பது
மையானது போஜராஜனைப்பார்த்து மிகவுந்தாழ்மையாகவும்எழ்மை
யாகவும் சொல்லுகின்றது.

கேளும்வீரசூரதீரகெம்பீர உதாரசிங்கார மாராகுபோரஐய்யார
வதிகாரபோஜமகாராஜனே நீர்எங்களரசன் விக்கிரமார்க்கனைப்போ
லும்சகலசற்குணமும் சகலவல்லமையும்பெற்று இச்சிங்காதனத்தில்
வந்தேறுவீராகில் பொன்மலர்வாசம்பொருந்தினாற் போலுமிருக்கு
மௌனபோசராசனை சர்க்குணநிதியென்னும்பதுமையே விக்கிரமா
ர்க்கன் யென்னிலும்வல்லவனு மிகவும்நல்லவனுமென்னப்பதுமைஅ
ரசனே தன்னைஒருவன்புகழ்ந்து சொல்லுதல் அக்கினியைவளர்க்க
வேண்டியவன் அதிலேநெய்யைவிடாது நீரைவிட்டவித்தாற்போலா
கும்ஒருவனைப்பிறர்புகழ்ந்து சொல்லுதல்மாசடைந்த மணிகளைச்
சாணையிற்கொடுத்துப் பிரகாசிக்கச்செய்தாற்போலாகும் ஆகையால்
விக்கிரமார்க்கன்அருமையும்பெருமையும் நான்சொல்லுகிறேன்கேளு
ம்நீர்வளமும்நிலவளமும் நிறைந்தமகாசிறப்பினையுடையஇந்தஉச்சினி
பட்டணத்திலே எங்கள்விக்கிரமார்க்க மகாராஜனவன்பட்டியெ

க்கிரமக்கிரியுடனும் வேதாசாரமென்கிறவாகனத்துடனும் தர்மசொரூ
பனுயிருந்துமகாசிறப்புடனே மனுநீதிவழுவாமல்மகுட மண்டலாதி
பர்களாகிய ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் தன்னைவணங்கும்ப
டியாக இராசியபரிபாலனஞ் செய்துவருங்காலத்தில் இந்தப் பட்ட
ணத்திலிருந்து நாராயண திட்சதரென்கிற ஒருபிராமணர்காசியாத்தி
ரைக்குப்போய்க் கங்காஸ்நானம் பண்ணிச் செபதபங்களை முடித்துக்
கொண்டு விஸ்வநாதஸ்வாமியையும் விசாலாட்சியம்மையையுந் தரிச
னம்பண்ணித் தம்முடையசங்கற்பத்தை நிறைவேற்றிக்கொண்டு திரு
ம்புங்காலையில் கங்காதீர்த்தக்காவடி யெடுத்துக்கொண்டு இக்குவிக்கி
ரமார்க்கமகாராசன் கொலுவீற்றிருக்கின்றசபையினிடமாகவந்து ஆ
சீர்வாதம்பண்ணினர் அதுகண்டுவிக்கிரமார்க்கனும்எழுந்திருந்து அவ
ருக்குநமஸ்காரம்பண்ணி ஒபிராமணரே நீர்காசியாத்திரைக்குப்போயிரு
ந்தவிடங்களில்ஏதாகிலும் அதிசயமிருந்தால் எனக்குத்தெரியச்சொல்
லவேண்டுமென்று கேட்டார்

அதுகேட்டு அந்தப்பிராமணரும் விக்கிரமார்க்கமகாராஜனைப்பா
ர்த்து ஒ இராசசிரேஷ்டா நான்வருகிறவழியில் அர்ச்சுனபுரியென்றொ
ருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்தை யாளப்பட்ட மகாவிரதனெ
ன்கிறஅரசனுனவன் தனக்குபிள்ளையில்லாமல்மகா தாபந்திரியத்து
டன்நெடுநாளாய்த் தபசுபண்ணினன் அதனால் பரமசிவனுடைய அனு
க்கிரகத்தினால அவனுக்குஒருபெண்பிள்ளைபிறந்தது அந்தப் பெண்ணு
க்குப்பேசாமடந்தையென்று நாமகரணமிட்டுத்தாயுந்தகப்பனும்மகா
சந்தோஷத்துடனே நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாக
வளர்த்துச்சகலவித்தையுங்கற்பித்துப்பருவகாலமடைந்தபின்புவேறே
ஒருஉப்பரிகைகட்டிவித்து அந்தஉப்பரிகையில சிலதோழிப் பெண்க
ளுடன்பேசாமடந்தையைவைத்து எந்தராசர்களாகிலும்உப்பரிகை
யிலுள்ளகாவலாள்களைக்கடந்துவந்துபேசாமடந்தையைக்கண்டு அவ
ளுடனேபேசிப்பிரசங்கம்பண்ணி அவளைப்பேசும்படி செய்வார்களா
கில்அவர்களுக்கு அவளைக்கலியாணம்பண்ணிக்கொடுக்கிறேனென்று
அரசாட்சிமணிகட்டி அரண்மனை வாசலில் அனேகங் காவலாளிகளை
வைத்துத்திட்டம்பண்ணி யிருக்கிறான் அது கேழ்விப்பட்டு அனேக
ராஜாக்கள்வந்து பேசாமடந்தையுடன் பிரசங்கம் பண்ணமுடியாமல்
அவமானப்பட்டுத் தோற்றுப்போனார்கள் அப்படித்தோற்றுப்போன
வர்களுடைய ஆடையாபரணங்களைப் பிடுங்கிக்கொண்டு தலையைச்சி
ரைத்துத்துறத்திவிடுகிறார்கள் ஆகையினாலே விக்கிரமார்க்கராஜனே
அப்படிப்பட்ட பேசாமடந்தையினுடைய அவயவ அலங்காரங்களைச்
சொல்லுகிறேன்கேளும்-

## பேசாமடந்தைவருணிப்பு

மேகத்தினையும கமுகம்பாளையையும் கொன்றைக்காயையுங்கூந்
தற்பனையையும் உகாந்தவிருளையும் கரிய மணலையும் கொடிப்பாசியி

லையும் வண்டுக்கூட்டங்களையும் பழித்து மயிர்சாந்துபூசி சம்பங்கியெ
ண்ணெய்தடவப்பட்டுமல்லிகை முல்லை இருவாட்சிமருகுகொழுந்து இ
வைமுதலியபரிமளங்களை யணிந்துவிளங்கிய கூந்தலையும் மூன்றாம்பி
றைச்சந்திரனைபழித்த நெற்றியினையும் மன்மதன்வில்லைப் பழித்தபுரு
வத்தினையும் வள்ளைக்கொடியினையும் கத்திரிக்கோலினையும் பழித்தகா
துகளையும்வேலையும்சேலையும் வாளையு நீலோற்பலத்தையும்தாமரை
யையும்மானையும்கடலையும் கருவிளமலரையும் அம்பையும் பாளை
யும்மாவடுவையும் விஷத்தையும்பழித்த கண்களையும் யெள்ளிளம்பூ
வையும்குமிழம் பூவையும் சண்பகப்பூவையும் பழித்த நாசியினையும்சா
ணைக்கல்லினையும் கண்ணாடியினையும் நீர்நிலையினையும்பழித்த கன்னங்
களையும் கொவ்வைக்கனியையும் இலவம்பூவையும் பவளத்தையும்மு
ருக்கமலரைப்பழித்த இதழினையும்முத்துக்களைப்பழித்த பற்களையும்
கருப்பஞ்சாற்றினையும்கற்கண்டினையும் மாங்கனியினையும்பலாக் கனி
யினையும் வாழைக்கனியினையும் குயிலோசையினையும் கிளிப்பிள்ளைச்
சொற்களையும் பாலையும் பாகையும் தேனையும் தேவாமிர்தத்தையும்ப
ழித்த மொழியினையும் பூரணச்சந்திரனையொப்பான திருமுக மண்ட
லத்தையும் வலம்புரிச்சங்கினையும் கமுகமரத்தினையும்பழித்த கண்ட
த்தினையும் மூங்கிலடியையிகழ்ந்ததோள்களையும் பொற்கரும்போவை
க்குரும்பையோ பம்பரமோ பர்வதமோ பூங்கமலமோ பூரணக்குட
மோ அற்புதமோ சொர்ணச்செப்போ சொக்கட்டான்காயோ தாள
மோ சக்கிரவாகமோ யானைமத்தகமோ யாதேதெரியாதென்றுபார்த்
தபேருக்கெல்லாஞ் சந்தேகத்தைத்தந்து கவிந்து குவிந்து சிறுத்துப
ருத்து உருண்டுதிரண்டு நிமிர்ந்துவளர்ந்து அண்ணாந்து இருமார்
புடைத்து பூரித்து புளகாங்கிதங்கொண்டு கமகமவென்று வாசம்
வீசவுஞ்சாந்து சவ்வாது சந்தம்கஸ்தூரிபுனுகுபனிநீரென்றுசொ
லத்தக்கசெழுஞ்சாந்து குழம்புதனிலே அன்னரேகை அரசரே
கை மயில்ரேகை குயில்ரேகை கிளிரேகைமுதலியசித்திரவிசித்திர
ங்கவெழுதி முத்துக்கச்சைபிட்டிறுக்கிப் பொற்சரிகைத் தாள்கொ
ண்டுபூட்டிவாகுமாலை வச்சிரமாலை பச்சைமாலைபவளமாலைமுத்துமா
லைமோகனமாலை இவைமுதலிய நவரத்தினமாலைகளையணிந்துவிளங
காநின்ற கனதனக்கலசங்களையும் ஆலிலைநிகர்த்தவயிற்றினையும்தா
மரைமலர்போன்ற சரங்களையும் மகிழம்பூவையொப்பாகியநாபியினை
யுஞ்சிறுசங்கிலிபோன்றஉரோமத்தாமரையினையும்சிங்கத்தினையும்சி
த்துடிக்கையினையும் மின்னற்கொடியினையும் பூங்கொடியினையும் பூங்
கொம்பினையும் மன்மதமதனுடலினையும் நூலிழையினையும் மூன்றாம்பி
ணைக்கொழுந்தினையும் தோற்கச்செய்யும் இடையினையும் இளவாழை
த்தம்பத்தையும் யானைத்துதிக்கையினை வென்றதொடையினையும்நண்
டைப்பழிக்குமுழங்காலினையும் வராலினையும் எக்காளத்தினையும் அம்
புருத்தூணியினையும் ஒப்பானகணைக்கால்களையும்தராசுக்கொப்பான
பரடுகளையும்அனிச்சமலரினுமெல்லிய செம்பஞ்சுக்குழம்புபூட்டியதா
மரைமலர்போன்ற பாதங்களையும் மயிலைப்போன்றசாயலையும அன்ன
த்தைப் போன்ற நடையினையும் தங்கம் போன்ற மேனியினையுமு
டையவள்,

நவகோடி கிரவியம்பெற்ற நவமணிகள்சேர்க்கப்பட்ட பீதாம்பர
ப்பாவாடையினையும் காசினியெல்லாம் விலைமதிக்கப்பட்ட முத்துக்க
ந்தினியையும் ஒருகோடிபொன் பெறத்தக்கபொற்சரிகைஉத்தரத்தை
யும்சர்ப்பத்தைநிகராகப் பின்னிவிட்ட சடையிலேஇளம்பிறைபோனு
மாணிக்கங்களாற் சமைத்த அணியணியான் தங்கப்பில்லைகளையும்சே
ட்சகலைகளையுடைய பூரணச்சந்திரனைத்தோற்கச்செய்யும் நவமணிச்
சடைபில்லையும், திரிலோகங்களையும்விலைமதிக்கும் நவமணிக்குச்சுக
ளும், சந்திரசூரியரைப்போலும் தலையாபரணங்களும்வைரத்தகட்டு
ற்றிசுட்டியும் சந்திரசூரியரைப்போல் இருட்டைநீக்கும் நவமணிக்க
ம்மல்களும்விளக்குச் சுடர்போலிருக்கும்விலையுயர்ந்த கொப்புகளும்
நாகரத்தினங்களாலேநத்துமூக்குத்திகளும், தரணியெல்லாம்விலைமதி
க்கும்சந்திராரமும் மண்டலத்தைமதிக்கத்தக்க மாதரணிப்பதக்கங்க
ளையும்திரிலோகங்களையும் விலைகொள்ளும்ஒட்டியாணமேகலாபரண
ங்களும் அளவிலாப்பொருள்பெற்ற அஸ்தகடகங்களும் விரலாழிகளு
ம்திகைகெட்டுமன்னர்கள்செங்கோல் விலைவாங்கத்தக்க பாடகபாதசர
தண்டைகாலாழிபீலிகளும் இந்திரலோகத்தையும் விலையாகவாங்கும்
வாகுமாலைகளுமதரித்துக் அணிந்தும்கலீர்கலீரென்றுசத்திக்கவும்அ
வள்தாய்தகப்பன்மார் உள்ளங்கண்டுமகிழ்ந்து ரசிக்கவும் பஞ்சணை
மித்காம்பரித்து பரம்பியமலர்களின்மேல உலாவுகின்றுள்.

கேளும்விக்கிரமார்க்கமகாராஜனே பேசாமடந்தையென்கிற வொரு
நாளும்எழுந்து அந்தர்பனிநீர்முழுகிச்செப்பமுடித்து அலங்கரித்து
க்கொண்டுகடவுளைஸ்தவாசித்துஉபசாரஞ்செய்துதேவபத்தி நீங்காத
வளாய்கற்புநிலையில் வழுவாதவள்ாய் அலங்கியதும் வேதாகமசாஸ்
திரபுராணங்களைவாசித்தும் பெரியோர்களைநேசித்தும்உலகமெங்கும்
பிரகாசிததும் மாணாபிசாக்களைத் தெய்வமென்றுயோசித்தும்அவர்க
ளைபூசித்தும் வருகிறதல்லாமல் சொக்கட்டான்சோழிசதுரங்கமு
தலியவிளையாட்டிலும் வல்லவள் யாவருக்குநல்லவள இப்படிப்பட்ட
பேசாமடந்தையினுடைய அழகைப்போலும் விலையுயர்ந்தஆபரணங்
களைப்போலும் அவள் குணத்தைப்போலும் அவள் கல்லலண்மகளைப்
போலும்நானெங்குங்கண்டதில்லை இந்தஅதிசயத்தை கண்டுவந்தே
னென்றுநாராயணதிட்சதர்சொன்னார் அந்தவார்த்தையைக்கேட்டுவி
க்கிரமார்க்கன் ஆச்சரியமடைந்துகொலுவைவிட்டெழுந்திருந்துஅப்
பிராமணனையும் அழைத்துக்கொண்டு வேதாளத்தின்மீதேறி அச்ச
ரபுரிக்குப்போய் அந்தப்பேசாமடந்தையிருக்கும் உப்பரிகையைக்க
ண்டுசற்றுநேரம்ஆலோசித்து காவலைக்கடந்துபோவதுஅரிதென்றெ
ண்ணிவேதாளத்தையெச்சரித்து ஆகாயமார்க்கமாயெழும்பிப்பேசா

டைக்குதற் கெதிராகப்போயிறங்கினான் அப்படியிருக்கிறதைப்பேசா
மடந்தைகண்டு இதுவரையிலொருவருமிப்படி வந்ததில்லையே இவனு
சோபாயாவனியாயிருக்கின்றான இவனிடத்திலேதோவொரு அதிசயமி
ருக்கின்றதென்றுநினைத்துத்தன்னுடையதோழிகளையழைப்பித்துதனை
க்கொருகட்டிலும் விக்கிரமார்க்கனுக்கொருகட்டிலும்போடுவித்துதன்
னுடசேடிமாரிடுவித்து திரைகளுப்பின்னாகட்டினான் விக்கிரமார்
க்கனையுட்காரசசெய்துதான்றன்னுடையகட்டிலின்மேலுட்காரத்து
கொண்டுமௌனமாயிருந்தாள் அப்படியிருக்கும்போது விக்கிரமார்க
னும்பேசாமடந்தையைப்பார்த்துபெண்ணேநான் உச்சினிமாகா
ளிபட்டணத்திலிருந்து வந்தேன் என்பேர்விக்கிரமார்க்கன் நானுன்னுடைய
அபிராதயபத்தைக்கேள்விப்பட்டு ஆச்சரியகரமாயுன்னுடனேசற்றே
பிரசங்கம்பண்ணிஉன்சாமார்த்தியத்தைத்தியலாமென்றுவந்தேன் ஆ
தலாலேதாகிலும் பிரசங்கம்செய்கிறாயா அல்லது ஒருத்தராகிலுஞ்
சொல்லுகிறாயாவென்றுகேட்க அதற்குப்பேசாமடந்தையும் தம்மை
மோசம்பண்ணவந்தவனேயல்லாமலவேறல்ல ஆகிலும்ஆகட்டுமென்
றவனுக்குத்தானே திட்டம்பண்ணிக்கொண்டுதிரைமறைவில்தானே
யிருந்து சதுரங்கப்பலகையைப்பரப்பிச்சதுரங்கமாட எத்தனம்பண்
ணினாள் அதுகண்டுவிக்கிரமார்க்கனும் இவள்தம்மைசதுரங்கத்தில்
தோற்பித்து அவமானப்படுத்தத்திட்டியோசித்திருக்கிறாளெ
ன்றறிந்துதன் அஷ்டதேவதையாகிய உச்சினிமாகாளியம்மை
யைத்தியானம்பண்ணிக்கொண்டு சதுரங்கமாடும்போது அந்தப்பேசா
மடந்தையேதோற்றுப்போனாள்.

## திரைச்சீலைசொல்கதை.

இப்பால்விக்கிரமார்க்கனும் இனியென்னசெய்கிறதென்றுயோசி
த்துவேதாளத்தாதயெச்சரித்து திரைச்சீலைக்குட்பிரவேசிக்கச்செய்
துதிரைச்சீலையைப்பார்த்துப்பேசாமடந்தைதான் பேசுகிறதில்லையே
நீயாகிலுமொருகதை சொல்லென்றுகேட்க அதற்குஅந்தத்திரைச்சீலை
யுமிராஜனேநானென்னகதை சொல்லப்போகிறேனென்னை நாலுமூ
லைக்கச்சைபட்டையாற்றைத்து மூலைக்கொருவளையம்போட்டுகயி
றுகோர்த்துக்கட்டிவைத்திருக்கையில் நானெப்படிப்பேசவேணுமென்று
சொல்ல அதுகேட்டுப்பேசாமடந்தையும் இதென்ன விபரீதமென்றும
னங்கலங்கி அந்தத்திரைச்சீலையை யவிழ்த்தெறிந்துவிட்டாள் அதன்
பின்பு அந்தத்திரைச்சீலையும் விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓ இராசேந்
திரனேஎன்னை ஒருபொருளாகயெண்ணிக கதைசொல்லசசொன்னீ
ரேயாதலால் எனக்குத்தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறேன்சற்றேசெ
விகொடுத்துக்கேளும் அஃதென்னவெனில்விஜயபுரமென்றொருப
ட்டணமுண்டு அந்தப்பட்டணத்தைஅரசாட்சிசெய்கின்ற வேதாந்த
கேசரியென்று ஒரிராசனுண்டு அவருக்குதர்மகேசரியென்றொருபுத்
திரனுண்டு அவர்பெண்சாதிபேர்மதனசே[illegible] அவன்பிரவிச்செல்வமா
ய்த்திரட்டியிருக்கதுயோலவேமாமிவி[illegible]லும் நாலுதோழிகளுட

னைக்கோரும் விளையாடிக்கொண்டிருப்பான் அதுகண்டுமாமியார் அவர்களன்னோரும் வீட்டுக்காரியம்பார்க்காமல் விளையாடிக்கொண்டே இருக்கிருனேயென்று மனஞ்சலிக்காதவளாய்க்கண்டித்து தன்புத்திரனுகிய தர்மகேசரியையழைத்து அப்பா மகனே நீ சிலகாலம் உன்பெண்ஜாதியுடனே பேசாமல் நீங்கியிருவென்று திட்டம்பண்ணிப்பின்பு அந்த மதனசேனைக்கு ஓரண்மனைவிட்டு அவ்வரண்மனை வாசலில் நாலுபேர்காவலாளிகளை வைத்துப் பத்திரப்படுத்திவைத்தான் இப்படி சிலநாளிருக்கையில் வேதாந்தகேசரியுந்தன் தாய்க்குப்படைத் துணையாகத்தனசேகம்பண்ணிக்கொண்டுதன்குமாரனுகிய தர்மகேசரியைப்பேசச்சொல்லித்திட்டம்பண்ணிருன் அதுகேட்டு தர்மசேகரியும் நல்லதென்றுபிதாவினுடைய உத்திரவின்படி பேசகலசேனுசமேதனுய்ச நமேதிக்கொண்டு பட்டணம்விட்டுப்புறப்பட்டு இரண்டு நாழிவழியிற்போயிருக்கி நாம்போமிடவிடத்தில்ளத்தனைநாள் செல்லுமோவென்று ஆலோசனைபண்ணிக்கொண்டு ஏகாந்தனுய் அதிகமோகத்துடனே மதனசேனையரண்மனைக்குமதாளிருக்கியிருக்குமிடத்திற்கும் ஓர் கிலவறையுண்டுபண்ணி அதற்கிலவறைவழியாக ஒருவருக்குந்தெரியாமற்போய்ப்பெண்சாதியைக்கண்டு சமாதானம்பண்ணி அவளுடன் மகாசரசசல்லாபவைபோகத்துடனே ஏகபோகமாய்ச் சுகமனுபவித்திருந்து திரும்புங்காலையில் அவளுக்கு வேகஞ்சமாதானவார்த்தைகள் சொல்லி அவளிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு அந்த கிலவறைவழியாகப்புறப்பட்டுத்தன்பாளையத்திற்குவந்து சேனையுடனே கலந்துகொண்டு பிரயாணப்பட்டுப்போனுன் இப்பால் அன்றுமுதல் மதனசேனைக்குக் கர்ப்பமுண்டாகி ஒதுமாதமாய்விட்டது அந்தச்செய்தியைமாமியாரறிந்து இவளைவிசாரப்பண்ணிப் பிள்ளையுண்டாயிருக்கிறதென்று தன்புருஷனுகிய வேதாந்தகேசரிக்குச் சொன்னுள் அதுகேட்டு வேதாந்தகேசரியும் நமதுமாயில் இப்படிப்பட்ட அபகீர்த்திவரலாமோவென்று விசனமடைந்து தன்மருமகளாகிய மதனசேனையையழைத்து கண்களைக்கட்டி சட்டிலேகொண்டுபோய்விட்டுவிடக் கட்டளையிட்டான் அதன்பின்பு மதனசேனையானவள் அந்தக்காடெல்லாம் அலைந்துதிரிந்து பிரதாயப்பட்டுக்கொண்டு அந்திராத்திரி பதினைந்துநாழிகைக்குமேல் வழிதெரியாமல்காட்டைவிட்டுவெளியேபுறப்பட்டுவந்துகிதானித்துப்பார்க்குமளவில் விசயபுரத்துச்சமீபத்தில் ஒருவெளிச்சந்தோன்றிற்று அந்தவெளிச்சத்தையேகுறிப்பாக நாடிக்கொண்டு நடந்தாள் அந்தவெளிச்சம் விசயபுரத்திலிருக்கின்ற மோகனனென்கிற தேவடியாளுக்குமகாகாமியெனெருபெண்ணுண்டு அவள் ஆறுமாசந்கெர்ப்பமாயிருந்து வெளிகண்டு அதற்குமேல் ஜன்னி பிறந்துமரித்துப்போனுள் அவளையெடுத்துக்கொண்டுவந்து தகனம் பண்ணிஞர்கள் அதனையறியாமல் மதசேனையும் சுடுகாட்டிற்போய் அந்தப்பிணத்திற்குசமீபத்தில் நின்ருள் அப்போது அந்தத்தேவடியாளும் மகள்பேரில்ளவைத்திருந்த [illegible] சயினுல் த

க்கமடைந்துமனஞ்சலிக்காமல் கடலைக்கரைவழியைப்பிரலாபித்துக்கொ ண்டுவருகையிலதிறமின்ற மதனசேனையைக்கண்டுமகளென்று நினைத் து அவளைக்கட்டியணைந்து முத்தமிட்டுக்கொண்டு அடிமகளே நீபோ னதென்ன வந்ததென்னவென்று கேட்க அதற்குமதனசேனையும் இதெ ன்ன அதிசயமாயிருக்குதென்று ஒன்றும்புரிந்துச்சொல்லாமலநான் ஒருகாரியமுமறியேனல்லவோ இவ்விடத்தில்நான்நிற்கவும் நீவந்த துமறியேனென்றுசொல்ல அதுகேட்டுதேவடியாளும் சந்தோஷகர மாய்எனக்கிஷ்டதெய்வமேஎனக்குதுக்கம்நிவர்த்தியாகும்படி இறந்தபோ னஉன்னைதிரும்பவும்இங்கேகொண்டுவந்துவிட்டது என்பாக்கியமே யாகுமென்றுமகாமகிழ்ச்சியுடனே மதனசேனையைஅழைத்துக்கொ ண்டுதனவளவுக்குப்போய் உட்கார்ந்து அம்மாமகளே நீகைலாயத்திற் குப்போனதும்வந்ததும் கேழ்விப்பட்டுஉனனுடனே இதுவரையிலசி னேகமாயிருந்தமாப்பிள்ளைமார் ஆச்சரியமாகக்கேட்டுவருவார்கள்அ வர்களுடனே இதவாகப்பேசி பத்துபணஞ்சம்பாதிக்க எத்தனம்பண் ணிக்கொள்ளென்றுசொல்ல அதுகேட்டுமதனசேனையும் ஆலோசித் துக்கொண்டுநல்லதம்மாஅப்படியேயாகட்டும் ஆனாலும்நான்கைலா யத்திற்குப்போனவிடத்தில் அங்குள்ளசிவகணங்களை எனனைப்பார்த் துநீகைலாயத்திற்குவந்து மறுபடியும் பூலோகத்திற்குப் போகிறபடி யால்நீ பன்னிரண்டுவருஷபரியந்தம் சத்தியமா யிருப்பாயானாலஉ னக்குதீர்க்காயுசுண்டு இல்லாவிட்டால்உனக்குஆயுசுகுறைந்துபோமெ ன்றுசொல்லினர் ஆகலாலநான்பன்னிரண்டுவருஷபரியந்தம ஓர்விர தமநுஷ்டிக்கவேண்டுமென்றுசொல்ல அதுகேட்டுஅந்ததேவடியா ளும்அம்மாநீ ஆயுசுடனேயிருந்தாலது்எனக்குப்பதினாயிரம்நீஒரு வருடனும்பேசாமல்சும்மா இருவென்றுதிட்டம்பண்ணினாள் சிலவரை செய்வித்துப்பூரணகெர்ப்பமாய்ப்பிரசவகாலஞ்சமீபித்துபிரசவவேதனை ...யப்பட்டுவருகையில் தேவடியாள் மருத்துவச்சியை யழைப்பித்து ஒபாட்டிஎன் மகள்வயிற்றிற் பெண்பிள்ளைபிறந்தால் இருக்கட்டும் ஆண்பிள்ளைபிற ந்தால்கொன்றுபோடென்று கட்டளையிட்டாள்.

அதற்குமருத்துவக்கிழவியுஞ் சம்மதித்து மதனசேனையினிட த்திலிருக்கும்போது மதனசேனையினுடையவயிற்றில் ஆண்பிள்ளைபி றந்தது அதுகோடிசூரியப்பிரகாசம் போலிருக்கிறபடியால் அந்தப்பி ள்ளையைக்கொல்லமருத்துவச்சிக்கு மனம்வராமலசற்றுநேரங்கவலை யடைந்து ஐயோ இவ்வளவு அழகுள்ளபிள்ளையை யெப்படிகொன்று விட்டுசெளுத்திதோஷந் தேடிக்கொள்ளுகிறதென்று கிலேசப்பட்டு க்கொண்டிருக்கையில் மோசமென்ன தேவடியாளும்மருத்துவச்சி யைப்பார்த்து என்னபிள்ளைபிறந்ததென்றுகேட்க ஆண்பிள்ளைபிறந்த துகொன்றுவிட்டேனென்றுசொல்ல அதற்குதேவடியாளும நீநல்லகா ரியஞ்செய்தாயதைக்கொண்டுபோய்சீக்கிரத்தில்ஒருவருக்குந்தெரியா தபடிக்குகுப்பைமேட்டிற் குழிபறித்துப்புதைத்துவிடென்று சொன் னாதற்கு நல்லதென அச்சமயமருத்துவச்சியும் அந்தப்பிள்ளையை

யெடுத்துக்கொண்டுபோய்அரசனுடையஅரண்மனைவாசலில்சாளரமு
கப்பில வைத்துவிட்டுமறுபடியும்எப்போதும்போலமதனசேனையிடத்
திற்குவந்திருக்கையில உடனேமதனசேனைக்குச் சோகந் தெளிந்து
கண்ணைவிழித்து மருத்துவச்சியைப்பார்த்து ஓபாட்டி பிள்ளைபிறந்த
தே அதுயெங்கேயென்றுகேட்டாள் அதற்குமருத்துவச்சியும் பிள்ளைபி
றக்கபொழுதே இறந்துவிட்டதே அதைக்கொண்டுபோய்ப் புதைத்
துப்போட்டேனென்றுசொல்ல அதுகேட்டு மதனசேனையும் மகாவி
சனமடைந்து ஐயோதெய்வமேநானபிறந்ததென்னவளர்ந்ததென்ன
எனக்குஇக்கதியாநேரிட்டதென்று ஒன்றும்தெளிவிடாமல் அழு
துக்கொண்டிருந்தாள் இவைகளைக்கும் நானறியேனென்று இரைசசி
லைசொல்லிற்று. இரைசசிலைசொலகதை - முற்றிற்று.

## இரவிக்கைசொல் கதை.

அதைக்கேட்டுவிக்கிரமார்க்கனுஞ் சந்தோஷசித்தனாய் பேசாம
டந்தைபோட்டுக்கொண்டிருக்கின்ற ரவுக்கையைப்பார்த்துப்பேசாம
டந்தைதான் நம்முடனேபேசுகிறதில்லையே நீயாகிலும்ஒருகதைசொ
ல்லென்றுசொல்ல, அதற்குஅந்தரவுக்கையும்விக்கிரமார்க்கனைப்பார்
த்துஓராஜசேகரா நானொருகதைசொல்லப்போகிறேன் நான்பருத்
தியாய்ப்பிறந்து பஞ்சென்றுபெயரெடுத்துப்பின்புஎன்னைப்பாடாதபாடு
படுத்தி நூலாய் நூற்றுப்பாவாகச்செய்து தறியிலேபூட்டி உண்டை
போட்டுநெய்துசுருட்டிப் பிடித்துக்கிழித்துத்தைத்து ரவுக்கையென்
றுமறுபேரிட்டு இந்தப்பேசாமடந்தையினுடைய ஸ்தனத்திற்போட்
டுஇறுக்கிக்கட்டியிருக்கிறதினால் இத்தனைஅரிதானவிடத்திலிருந்து எப்ப
டிநான்கதைசொல்லுவேனென்றுசொல்ல அதுகேட்டுப்பேசாமடந்தை
யுந்திடுக்கிட்டுநம்முயிரானது பூரணமாயிருப்பதைஸ்தனத்திற்போட்
டிருந்தோமே இதனால்நமக்குமானபங்கமாய்விட்டதேயென்றுநினைத்
து அந்தரவுக்கையைச் சுழற்றியெறிந்துவிட்டாள் அதன்பின்ரவுக்கை
யும்விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓராஜசிரேஷ்டா இனிநான்கதைசொ
ல்லுகிறேன் சற்றேசெவிகொடுத்துக்கேளும் அதென்னவென்றால்
முன்புதிரைச்சீலைசொல்லிவிட்டகதையில் மதனசேனைபெற்றபிள்ளை
யானதுஅரண்மனைவாசல்சாளரமுகப்பில்கிடந்து அழுதுக்கொண்டி
ருந்தது அந்த[illegible]யில் விஜயபுரத்தையாளப்பட்ட சர்வேஸ்வரராச
னானவர் இராத்திரிபதினைந்துநாழிகைக்குமேல் சேவகர்களுடனேநகரி
சோதனைவருகையில் அந்தப்பிள்ளை அழுகுரலைக்கேட்டு அதையெ
டுத்துவரச்சொல்லி இரண்டுகண்களாலும்பார்த்துமகாசந்தோஷசித்
தனாய் இரண்டுகையிலும் வாங்கிக்கொண்டு தன்னுடையஅரண்மனைக்
குப்போய்த்தன்பெண்சாதிகையிற்கொடுத்து வளர்க்கச்சொல்ல அவ
ளும்மனமகிழ்ச்சியாய் அந்தப்பிள்ளையை யெடுத்துக்கொண்டு அதினு
டையரூபவலங்காரத்தைப்பார்த்து மஹாசந்தோஷமடைந்து முலை
கொடுக்கஇதுவரையில் பிள்ளைபிறவாதவளாயிருந்தும்சிவகடாக்ஷத்
தினால்பாலுண்டாயிற்று இப்படிநாளொருமேனியும் பொழுதொருவ

வாழுமாகவளர்த்து ரதகேசரியென்றுநாமகரணமிட்டு ஐந்துவயதான பின்புசகலவித்தைகளையுங் கற்பித்துயானையேற்றங் குதிரையேற்றம் வில்வித்தைமுதலானவைகளையுங்கற்பித்துக்கொடுத்து மகா சந்தோஷமாய்வைத்திருந்தார்கள் இப்படியிருக்க அந்தராசகுமாரனும் உல்லாசமாய்ஒருநாள்பரிமேலேறிக்கொண்டு தேவடியாள் வீதி வழியே வருகையில் மோகனனென்கிறவிட்டிலிருக்கிற மதனசேனையைக்கண்டுமோகாந்திரக்கலுந்தன் கூடவே வருகிறசேவகரையழைத்து ஓசேவகர்களே அதோஅன்னம்போலுலாவிக்கொண்டிருக்கிறபெண் யாரென்று கேட்கஅதற்குஅவர்களும் ராசகுமாரனைப்பார்த்து ஐயா இவள்மோகனனென்கிறதேவடியாளமகள் இவள்பத்துவருஷத்துக்குமுன்னே இறந்துபோய்ச் சுடலையில் தகனம்பண்ணவிட்டபின்பு மறுபடியும்பிறந்துவந்து அதுமுதலிதுவரையுந்தாயும் விலைபடாமல் ஒருபுருஷர் முகம்பாராமல் தானொரு நோன்புநோற்றுக்கொண்டிருக்கிறாளென்றுசொல்ல அதைகேட்டுரதகேசரியும் அதிகவிரகதாபமடைந்து நாம் அப்படிப்பட்டஸ்திரியைக்கூடி அனுபவிக்கவேண்டுமென்று கருதி மோகனனையழைப்பித்து நான் உன்மகள்மேல்மோகங்கொண்டேன் ஆதலால் இராத்திரிக்கு வருகிறேனென்றுசொல்ல அதற்குமோகனனும் ஐயோ தேவரீர் வரும்படி நாங்கள்என்னதவம்புண்ணியம்பண்ணினோமோ இத்தமிருந்தால்அப்படியேஒருதடையுமின்றிவரலாமென்றுசொல்ல ரதகேசரியும் அப்படியே நல்லதென்று அரண்மனைக்குப் போனான் பின்பு மோகனனும் மதனசேனை வீட்டுக்கு வந்து அடியம்மா மகளே ராஜகுமாரனானவர் உன்மேலமோகங்கொண்டு இனறிராத்திரிக்குவருகிறதாகச்சொல்லிப்போனார் யேதுக்கடைசொல்ல வேண்டாம் நீசம்மதியாவிட்டால் இக்ஷணமேமங்கலம ஆக்கினை செய்விப்பானென்று மிகவுங்கெஞ்சி இரண்டுகாலையும்பிடித்து வேண்டிக் கொண்டான் அதுகண்டு மதனசேனையுந்துக்காக்கிராந்தியாய்ச் சோர்ந்துபூமியில் விழுந்துபுரண்டு ஐயோதெய்வமே நான்பிறந்தநாள்முதல் இதுபரியந்தமுக புருஷனையன்றி கே ஒருத்தரையுங்கனவிலுமறியேன் அவ்வகைப்பட்ட எனக்கு இந்தவிதி எவ்வகையோ நேரிட்டது இன்றோடே பதிவிரதாதமறியத்தக்க காலம்வந்து நேரிட்டதேயென்று புலம்பிக்கொண்டிருந்தாள் இதுவரைக்கும் நானறிவேனென்று ரவுக்கைசொல்லிற்று. இரவிக்கைசொல்கதை.

முற்றிற்று.

பாவாடைசொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கனுஞ் சந்தோஷித்தனுஞ் பேசாமடக்கைகட்டியிருக்கிற பாவாடையைப்பார்த்து வேதாளத்தைப்பிரவேசிக்கச்செய்து பாவாடையே பேசாமடந்தைதானநம்முடனேபேசுகிறதில்லையே நீயாகிலும்ஒருகதைசொல்லென்றுகேட்க அந்தப்பாவாடையும் விக்கிரமார்க்கமகாராசனைப்பார்த்து ஓராஜவல்லபா நான்சொன்ன கதைசொல்லப்போகிறேன் என்னைக்கலையென்னும் பெயரைமாற்றி பாவாடையென்றுமறுபேரிட்டு அவளிடுப்பில்கட்டியிருக்கிறபடி யே டிருக்கின்றேனென்றுசொல்லப்போகிறேனே அப்படிப்பட்ட

வேதனையிலிருந்து எப்படிநான்கதை சொல்லப் போகிறேனென்று
சொல்ல அதுகேட்டுப்பேசாமடந்தையுங்கிலேசமடைந்து வேதேவோ
ருசேலையெடுத்துஉடுத்திக்கொண்டு அந்தப்பாஷாணத்தை அவிழ்த்து
வெசிந்துவிட்டான் அப்போதுபாஷாணமும் விக்கிரமார்க்கனைப் பார்த்
துராசாவே இந்தப்பேசாமடந்தையும் என்வருத்தத்தைப் பார்த்து
சட்டிகட்டினதுக்கவிட்டதுமென்றதுபோலும் என்னை அவிழ்த்தெறி
ந்துவிட்டான் ஆனைபால்கதைசொலலுகிறேன்சற்றே செவிகொடுத்
துக்கேளும் அதுதென்னவென்றால் முன்புராவுக்கை சொல்லிவிட்ட க
தையில் அத்ராசனுகிரதகேசரியும் இராத்திரி இரண்டுசாமத்திற்குமே
லெழுந்திருந்துதிகனமூக்காடாய் துப்பட்டியையப்போர்த்துக்கொண்டு
புறப்பட்டுவெளியாகவரும்போது அவசரமாய்அவ்விடத்தில் கட்டியிருந்த
தபசுவின்கன்றைத் தாண்டிக்கொண்டுபோக அதையந்தக் கன்றானது
தெரிந்து பசுவைப்பார்த்து அம்மா இராசகுமாரன்என்னைத்தாண்டிப்
போகிறானே அவனுடையகெர்வத்தைப்பார்த்தாயாவென்று சொல்ல
அதற்குப்பசுவுங் கன்றைப்பார்த்து ஆமென்கண்ணேஎன் செல்வமே
நீஅஞ்சவேண்டாம் அவன்பெற்ற தாயைப்பெண்டாளப்போகிற படி
யால அவனுக்குப்புண்ணியமேது பாவமேதென்று சொல அந்தப்பா
ஷையும் இவனறிந்தவனாதலால் இதைமுழுதும்போயறியவேண்டுமெ
ன்றுமோகனுள்வனுக்குப்போனன் அதைமோகனுணர்ந்துதம்பிஉள்
ளேவாருமென்று அழைத்துக்கொண்டுபோய்த் தலைக்கடையிலுட்கா
ரவைத்துவிட்டு மதனசேனையிடத்திற்குவந்து ராசகுமாரன் வந்திரு
க்கிறசெய்தியை யெச்சரித்து அவளை ஆடையாபரணங்களாலலங்கரி
த்து திலதமிட்டுப் புஷ்பமுடித்துப் பன்னிலைறயுஞ் சிங்காரஞ்செய்
துபின்புராசகுமாரனை யெச்சரிக்க அவனுஞ்சந்தோஷமாய்கட்டிலின்
மேல்உட்கார்ந்தான் அப்பொழுதுமதன சேனையும் உருத்திரவீணை
யைகையிலெடுத்துக்கொண்டு அன்னப்பட்சிபோல் ராசகுமாரனுக்
கெதிரேவந்துநின்று அந்தவீணையைமீட்டிவாசித்தான் அப்போதுராச
குமாரனும்மதனசேனையைப்பார்த்துஉன்பேரென்னவென்றுகேட்க
மதனசேனையுந்தன்னுடைய பூர்வோத்திரஞ்சொல்லாத்தனம்பண்
ணுகையில் அவனுடையா இரண்டுஸ்தனமும்விம்மிப்பால்சுரந்து அவ
ளதுமுகத்தில் பனிநீர்விசினதுபோலத்தெரிக்க அதுகண்டுராசகுமா
ரனுந்திடுக்கிட்டு அங்கிருந்தநிலைக்கண்ணாடியில தன்முகத்தைப்பார்த்
துக்கொண்டு ஆலோசனைபண்ணும்போது அவன்முகமும் மதனசே
னைமுகமும் மாறுபாடின்றி ஒருமுகமாயிருக்க இதென்னஆச்சரியமெ
ன்றுநினைத்து மனதிற்கலக்கமாய மதனசேனையைப்பார்த்துநீயார் உ
ன்பிறப்பென்ன ஊரெவ்வெனநீபிரத்தியாமுக என்னையவமாக்கு
ம் உண்டானசெய்தியை நன்றுமஞ்சியாமல்விஸ்தாரமாகச்சொல்ல
வேண்டுமென்றுகேட்க மதனசேனையும் மகாதுக்கத்துடனேதான்பி
றந்ததும்வளர்ந்ததும் தர்மகேசரிக்குமாலையிட்டதும் தன்புருஷனைய

பேசவேண்டாமென்று மாமியார் கட்டுபண்ணினதும் இலவணாவில்சி
றையைவைத்ததும் இரகசியமாக அந்தஇலவணாவழியேவந்துதர்மகேசரி
கூடிப்போனது அதுவேகாப்பதாய் ஐந்துமாதமானதும் அதைமாமி
யாரறிந்து வேதாந்தகேசரிக்குச் சொல்லிக் கண்ணைக்கட்டிகாட்டிற்
கொண்டுபோய்விட்டுவிடக் கட்டளையிட்டதும் அந்தக்காடெல்லாந்தி
ரிந்துவழிதெரியாமல் அலைச்சற்பட்டு இராத்திரிபதினைந்துநாழிகையி
ல்காடுவிட்டுவெளிப்பட்டுச் சுடுகாட்டுவெளிச்சங்கண்டு அங்கேவந்துநி
ன்றதும் அப்போதுமோகனனும் தன்மகளென்று நினைத்து தலையைக்
கட்டிக்கொண்டு இறந்துபோனநீமறுபடியும் வந்தாயாவென்று புலம்
பினதும் அந்தசாடைதெரிந்துநான்கைலாயத்துக்குப்போனவிடத்தி
ல்பூலோகத்திற்போய்குருபுருஷர் முகமும் பாராமல் பன்னிரண்டுவ
ருஷபரியந்தம் விரதம்பண்ணினால் தீர்க்காயசாயிருப்பாய் இல்லாவி
ட்டால் இறந்துபோவாயென்று சிவகணங்கள்கட்டளையிட்டதாகத்தா
ன்சொன்னதும் நீஉயிரோடிருக்கதே பதினாயிரமென்று மோகனனா
ழைத்துக்கொண்டுவந்து வீட்டிலவைத்ததும் பின்புபிள்ளைபெற்றது
ம் அந்தப்பிள்ளையெங்கேயென்று கேட்டக ஆண்பிள்ளைபிறந்தது இறந்து
விட்டது அதைக்கொண்டுபோய்ப்புதைத்துவிட்டேனென்று மறுத்து
ரைத்திர்விசொன்னதும் அதன்பின்புசிலநாளைகழித்து இன்றைக்குராஜ
குமாரன் வருகிறானென்று மோகனன்சொன்னதும் அதற்குத்தான் சம
மதியாகமல்மனதுக்கமடைந்ததுமாமியார் இவைகளையெல்லாஞ்சவிஸ்
தாரமாகச்சொல்ல அதுகேட்டுராசகுமாரனும் இவள்நமதுதாயேயல்
லாமல்வேறல்லவென்று மனதில் ஆலோசித்துக்கொண்டு ஒன்றுஞ்
சொல்லாமல் பள்ளியறையைவிட்டு வெளியேவந்து அந்தமருத்துவக்
கிழவியையழைப்பித்து இந்தமோகனன்குமாரத்திக்குமருத்துவம்பார்
த்ததையே அப்போது பிறந்தபிள்ளையெங்கே அதை நீஉண்மையாகச்
சொல் அப்படிக்குச்சொல்லாவிட்டால் உன்னை ஆக்கினைசெய்து விடு
வேனென்றுசொல்ல அதுகேட்டுமருத்துவச்சியும்பயந்து வாய்பொ
த்திக்கைகட்டிக்கொண்டுஐயா ராஜஸ்ரேஷ்டா ஆண்பிள்ளையாகப்பிறந்
தால் கொன்றுவிடுவதுமோகனன் உத்திரவுபண்ணியிருந்தாள அதை
க்கொல்லமனமில்லாமல அரண்மனைவாசலில்சன்னாமுகப்பிலவைத்து
விட்டுவந்தேனென்றுசொல்ல அதுகேட்டுக்கொண்டு மருத்துவச்சி
யைஅநுப்பிவிட்டுஇராசகுமாரனும அரண்மனைக்குள்வந்து நிகளமுக்
காடாய் முக்காடிட்டுக்கொண்டு சப்பிரமஞ்சத்தின்மேலே படுத்து
க்கொண்டிருந்தான் அதுகண்டு வளர்த்த தாயும் வந்து இன்னமென
ன் தூங்குகிறாய் நீயெப்போதும் வெளியே போய்வந்தால் ஏதாகச்
செய்தியும் என்னோடு சொல்லுகிறவளைப்போலே இன்றையத் தினம்
ஏதிலும் ஒன்றாஞ் சொல்லாமல படுத்துக்கொண்டிருக்கிறாயென்
றுகேட்க அதற்கு இராஜகுமாரனும் அந்த அம்மானைப் பார்த்துதா
யே நான் ஒருசெய்தி கேட்கிறேன் அதை ஒளியாமல் உள்ளபடி
சொல்ல வேண்டுமென்று கம்பிக்கை பெற்றுக கொண்டு எழுந்திரு
ந்து ஓ அம்மா நான் பிறந்த தென்ன வளர்ந்த தென்ன என்னுடை
ய சகோதரிகளாயவர் அந்தபுள்ளபடி சொல்லவேண்டுமென

துவருந்திக்கேட்க அதற்கு அந்தம்மாளும் அப்பா நீசத்தியமாகக்கே
ட்கிறாயே ஆனால்சொல்லுகிறேனென்னவென்றால்உன்பிதாவாகிய சர்
வேஸ்வரராஜனும் இராத்திரிஇரண்டுஜாமத்தின் மேலநகரிசோதனை
வரும்போது அரண்மனைவாசலின் சாளரமுகப்பில் பிறந்து ஈரம்உல
ராமல்காகாவென்றழுதுக்கொண்டிருந்த உன்னையெடுத்துவந்தென்
கையிற்கொடுத்தார் நான்சந்தோஷகரமாய் நமக்குச்சிவகடாட்சத்தி
னால்உண்டான பிள்ளையிதுவென்று இரண்டுகையினாலும்வாங்கிஅன்
றுமுதல் இன்றையவரைக்கும்பெற்றபிள்ளையிலும் பெரியபிள்ளையாய்
அருமைபெருமைபாராட்டிவளர்த்தேன் இதுவல்லாமல்வேறேயொ
ன்றுமில்லையென்றுசொல்ல அதுகேட்டுக்கொண்டுமகாசந்தோஷத்து
டனே இராஜகுமாரன்காலையநுஷ்டானதிகளைமுடித்துக்கொண்டுபிதா
வினிடத்திற்குப்போய் தெண்டனிட்டுக்கைகளைக்கட்டிக்கொண்டுநிற்
க அதுகண்டு சர்வேஸ்வரராஜனுமிதென்ன அதிசயமென்று ஆச்சரிய
த்துடனே எழுந்திருந்து குமாரனை எடுத்துமார்போடணைத்துமுத்தமி
ட்டுமடிமேல் வைத்துக்கொண்டு அப்பாமகனே-நீஒருநாளும் ஆசார
வாசலுக்கு வந்தவனல்லவே இன்றைக்கு அத்திபூத்ததுபோல் வந்த
காரணமென்னவென்றுகேட்க, இராஜகுமாரனும்பிதாவைப்பார்த்து
ஐயாவெனக்கொருகாரிய மிருக்கின்றது அதைத்தீர்மானமாய்க்கண்ட
றியவேண்டும்ஆதலால் அதைத்தேவரீர்திருவுளம்பற்றியருளவேண்டு
மென்றுசொல்ல அதற்குஅரசனும்அப்பா நீஎன்னகேட்டபோதிலு
ம்உன்கருத்தின்படி தடையில்லாமற்சொல்லுகிறேனென்றுசொல்ல
அதற்கிராஜகுமாரனும் ஐயாநான்பிறந்ததும் வளர்ந்ததும் தங்கள்சித்
தத்திற்கு நன்றாய்த் தெரிந்திருக்குமே அதை வொளியாமல் எனக்கு
உரைக்க வேண்டுமென்றுகேட்க அதற்கிராஜனும் நானறிந்த வரையிற்
சொல்லுகிறேன் அதென்னவென்றால்என்னுடையபட்டணம்விஜ
யபுரம்என்பாட்டனார் வேதாந்தகேசரிஎன்தகப்பனார் தர்மகேசரி அ
வர் தமமுடைய தாய்வார்த்தையைக்கேட்டுஎன்தாயாருடனேபேசாம
ல்சிறையில் வைத்திருந்தாரென்றுஆதியோடந்தமாய் அதுமுதல் நா
ளதுவரைக்கும் நடந்தசெய்திகளை ஸவிஸ்தாரமாகசசொல்ல அதுகே
ட்டுசர்வேஸவரராஜனுமசந்தோஷித்தனாய் அப்படிச்சொன்னபுத்தி
ரனைப்பார்த்து,அப்பாஉன்கருத்தின்படியே யாகட்டும் இப்போதுஎன்
னாலாகவேண்டியகாரியமென்னவென்றுகேட்கராஜகுமாரன்பிதாவை
ப்பார்த்து ஐயாநான்விஜயபுரத்திற்குப்போய் என்பிதாவைக்கண்டுஎ
ன்தாயாரெங்கேயென்று கேட்கவேண்டுமென்றுசொல்லஅப்படியே
நல்லதென்று அப்போதோராயசக்காரரையழைப்பித்து நம்முடையகு
மாரன்ரதகேசரிவருகிறான் அவனைநாமாகப்பாவித்து அவன்பிறகே நீ
ரும்வரவேண்டுமென்று ஒருகிள்ளாச்செழுதுவித்து ஒருபாளயக்கார
னவசத்தில் அதையுந்தன்மோதிரத்தையும் முன்னதாகக்கொடுத்தனு
ப்பிவிட்டுக்குமாரனையும்போய்வரும்படி. ஆசீர்வாதம் பண்ணியனுப்
பிவைத்தார் அப்படியே ரதகேசரியும்சர்வாலங்காரமாய நால்வகைச்
சேனைகளுடனேரதாருடனாய்ப்பட்டணத்தைவிட்டுவிஜயபுரத்திற்குச்

சமீபமாகப்போய்த் தளங்களைவிட்டிறங்கினான் அதற்குள்ளேவேதாந்தகேசரியும் இந்தசெய்தியைக் கிள்ளாக்கு மூலமாயறிந்து சிலபெரியோர்களுடனே ரதகேசரிக்கெதிர்கொண்டுபோனார் அதுதெரிந்துரதகேசரியுமெழுந்திருந்து வேதாந்தகேசரிக்கு எதிர்போய்ஐயா நீரெனக்குப்பாட்டனாகவேண்டும்ஆதலால் உம்மை யெதிர்கொண்டு வந்தேனென்று அவருக்குத்தெண்டனிட்டுஅவரை ஒரு ஆசனத்தின்பேரிலுட்கார வைத்துதானும் ஓர் ஆசனத்தின்மேலுட்கார்ந்திருந்தான் அப்போது வேதாந்தகேசரியும் சற்றுநேரம் ஆலோசித்து ஐயங்கொண்டவனாகிய ரதகேசரியைப்பார்த்துஅப்பா உனக்கு நான் பாட்டனானமுறையெப்படி யென்றுகேட்கஅதற்குரதகேசரி ஐயா உமதுகுமாரன்தர்மகேசரியையும் உமதுபெண்சாதிமரகதவல்லியாளையும் ஊழியக்காரர்களையும் அழைப்பித்தால் அவர்களுமுன்னிலையில் தெரியப்படுத்துகிறேனென்றுசொல்ல அப்படியேஅவர்களெல்லாரையுமழைப்பித்தவுடன் ரதகேசரியும் பாட்டனாரைப்பார்த்து ஐயா உம்முடையகுமாரனுக்குக் கலியாணம் பண்ணினீர்களே அந்தப்பெண்ணெங்கே அவள்பிறந்ததெவ்விடம் அவள் எந்தராஜனுடையமகள் அவைகளையெல்லாஞ்சற்றேதெரியச்சொல்லவேண்டுமென்றுகேட்க அதற்குவேதாந்தகேசரியும்இதென்னகாரணமோவென்றுபயமும்ஆச்சரியமுமடைந்துரதகேசரியைப்பார்த்து நளினபுரமென்றொருபட்டணம் அந்தப்பட்டணத்தையாளப்பட்டவர் தாரந்தனென்கிறராசன் அவருடைய குமாரத்தி மதனசேனையென்பவளை என்குமாரனுக்குவிவாகஞ்செய்வித்துக்குடும்பத்தில்வாழ்க்கை பண்ணிவருங் காலத்தில் அந்தப்பெண்சமுசார வாழ்க்கையில் கவனமில்லாமல் எந்தவேளையிலுந்தோழிமார்களுடன் விளையாடிக்கொண்டிருப்பதைக்கண்டு அவள்மாமியார்மனம்பொறுமல் தன்பிள்ளையையழைத்து நீ உன்பெண்சாதியிடத்தில் பேசவேண்டாமென்று கட்டுபண்ணி அவளைவேறோரிடத்தில் சிறையாகவைத்து அவளிடத்தில்நூறுபேர்ஊழியப்பெண்களையும் நூறுபேர்காவற்காரரையும் வைத்திருக்க எப்படியோஅந்தப்பெண் ஐந்துமாதக்கெர்ப்பமுண்டாயிருக்கிறதென்று சொன்னார்கள் அதைகேட்டவுடன் இலைப்பழுப்பானாலும் குலப்பழுப்பாகாதே இதனால் உலைவாயை மூடினாலும் ஊர்வாயைமூடலாகாதேயென்று மனங்கலங்கி அந்தப்பெண்ணையழைத்துக் கண்ணைக்கட்டிக் காட்டிற்கொண்டுபோய்விட்டுவிடக்கட்டளை யிட்டேனென்றுசொல்ல ரதகேசரிதகப்பனாகியதர்மகேசரியைப்பார்த்துஐயா நீர் நடந்தகாரியம்ஒன்றும்ஒளியாமற்சொல்லவேண்டுமென்றுகேட்க தர்மகேசரியும் புத்திரனைப்பார்த்து அப்பாநான முன்புஒருபட்டணத்தைநோக்கிச்சிலசேனைகளுடனேபிரயாணப்பட்டுப்போகும்போதுஎன்பெண்சாதியைநினைத்துக்கொண்டுஒரிடத்தில் தன்சேனைகளை நிறுத்திவிட்டுஎன்பெண்சாதியிருக்குமிடத்திற்குப்போம்படி ஓர்வழியுண்டுபண்ணிஅதுவழியேபோய் அவளைக் கூடியனுபவித்துவிட்டுமறுபடியும் அந்தவழியையடைத்துப்போட்டு தன்சேனைகளோடுவந்துசேர்ந்துகொண்டு முன்குறித்த பட்டணத்திற்குப்போய் அந்தகாரியத்தை நிறைவேற்றிக்கொண்டுமறுபடியும் பட்டணத்திற்கு வந்துவிசாரிக்குமளவில அவள்சோரம்போய் ஐந்துமாதக்கெர்ப்பமாயா

ருந்தாள் அதுமாமியார்காமனுமறிந்து கண்ணைக்கட்டிக்காட்டிற்கொ
ண்டுபோய் விட்டுவிடக்கட்டளையிட்டார்களென்றுசொன்னார்கள் அ
துகேட்டு மகாஜக்காக்கிரந்தனும் அன்றுமுதல் இன்றையவரைக்கும்
ஒருவருடனுஞ் சொல்லாமல் குற்றமில்லாதவளே என்றுமதனசேனை
யைவினைத்துக்கிலேசப் பட்டுக்கொண்டு ஓர்பார்ப்பினிஉப்புகண்டங்கி
ருடினகதைபோலென்று உலகத்தார்சொல்லுஞ்சொல்லுக்குஉவமை
யாகஒருவரோடும்வாய்விட்டுச்சொல்ல இடமில்லாமல்மனங் கலங்கி
க்கொண்டு அந்தரமானகாட்டில் விட்டுவிட்டார்களே அவள்என்னமா
ய்ப்பயந்துநிற்கிறாளோ எப்படியலைகிறாளோ எந்தக்காட்டானசிங்கம்
காடிபுலிகள்விழுங்கிப்போட்டனவோவென்றுநினைந்து என்னேரமும்
மனோவியாக்கூலமாய்த் தேடித்திரிகின்றேனென்றுமிகுந்த துன்பமா
கச்சொல்ல அதுகேட்டுரதகேசரியும்பிதாவைப்பார்த்துஸ்திரீஹத்தி
தோஷம்வருமென்று சற்றுமிலும் எண்ணிப்பாராமல்காட்டிலோட்டி
விட்டதென்னவென்றுகேட்க அந்தவார்த்தையைக்கேட்டுவேதாந்த
கேசரியும் மரகதவல்லியாரும் அப்பாஉமது இராஜவம்மிசத்திற்கு அ
வமானம்வருமேயென்றுசெய்தோமென்றுசொல்ல அதற்குரதகேசரி
யும்பாட்டனைப்பார்த்து ஐயாஉமதுமருமகள மதனசேனையிருக்கிறா
ள்நீங்களெல்லாரும்எங்கள் பட்டணத்திற்குவரவேண்டுமென்றுசொ
ல்ல அதனைக்கேட்டு அவர்களெல்லாரும்பிரயாணப்பட்டுவந்தார்கள் அ
துசெய்தியைச்சர்வேஸ்வர ராஜனறிந்துசகலமேளவாத்தியங்களுட
னே எதிர்கொண்டுபோயழைத்துவரும்படி மந்திரியை யனுப்பிவிட்டு
பட்டணத்தையும் அலங்கரிக்கும்படி திட்டம்பண்ணினார் இதிலேரத
கேசரியும் சகலமேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கத்தக
கதாகதசப்பன் பாட்டன்பாட்டிமுதலானசகலசேனைகளுடனே மகா
வைபவமாய்க்கொலுச்சாவடியில் வந்திறங்கி அவர்களையெல்லாம்அங்
கேநிறுத்திவிட்டுத் தெண்டனிட்டுத்தான்போனதும் அவ்விடத்தில்
நடந்ததும் சவிஸ்தாரமாகச்சொல்ல அதுகேட்டுசர்வேஸ்வரராஜனு
ஞ்சந்தோஷப்பட்டு பிள்ளையையெடுத்து மடிமேல்வைத்துக்கொண்டு
வேதாந்தகேசரி முதலான சகலமானபேரையும் அழைப்பிக்க அவர்
களெல்லாரும்வந்து சர்வேஸ்வர ராஜனைக்கண்டு ஓராஜவல்லபாநீங்
கள்யென்னுடைய குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று தெ
ண்டனிட்டு நின்றார்கள் அதுகண்டுசர்வேஸ்வரராஜனும் யெழுந்தி
ருந்து அவர்களைத்தழுவிக்கொண்டு அவர்களுக்கெல்லாம் ஆசனம்
கொடுப்பித்து அவர்களையுட்காரச்சொல்லி கட்டளையிடமரகதவல்லி
யாரும் ராஜாவைக்கண்டு அரண்மனைக்குள்ளே போயிருந்தாள் இப்ப
டியிருக்குங்கருணத்தில் ரதகேசரியுந் தன்னைவளர்த்த பிதாவைப்பா

ர்த்துஐயாஎன்தாயாகியமதனசேனை மோகனாள்வீட்டிலிருக்கிறாள்அவளையிங்கேஅழைப்பிக்கவேண்டுமென்றுசொல்ல அப்படியேநல்லதென்றுமந்திரியாகிய மரகததேவனையழைத்து ஓமந்திரிசீக்கிரத்திற்போய்மோகனாளையும் அவள்வீட்டிலிருக்கிறமதனசேனையையும் ஆதிதேவியென்னும் மருத்துவக்கிழவியும் அழைத்துவாவென்றுசொல்லஅந்தமந்திரியும் அப்படியேபோயமதனசேனையைத் தண்டிகையின்மேல்வரவழைத்துக்கொண்டு மற்றவர்களையும் அரசனுக்கிணைப்படியே அழைத்துவந்தான் அதுகண்டுசர்வேஸ்வரராசனும்மதனசேனையைப்பார்த்து அம்மாஉன்பேரென்னஉன்புருஷன்யார் நீஇந்தமோகனாளவீட்டில்வர்தவரலாறென்ன இவைகளையெல்லாம் ஒன்றுமொளியாமல்சகலருமறியத்தக்கதாகச்சொல்ல வேண்டுமென்றுகேட்க.

அதுகேட்டு மதனசேனையும் மகாசந்தோஷத்துடனே பெருவிரலைப்பார்த்துக்கொண்டு ஐயாநான் நளினபுரத்துத்தாநதாராஜனுடையமகள்என்பேர்மதனசேனை என்தகப்பன் விசயபுரத்துராசகுமாரனுக்குஎன்னைப்பாணிக்கிரகணஞ்செய்துக்கொடுத்தார்நான்மாமியார்வீட்டில்வந்தும் வேலைசெய்யாமல்என்தாய்வீட்டைப்போல்செல்வமாகவிளையாடிக்கொண்டிருந்தேன் அதுகண்டுஎன்மாமியாரும்என்மேல்கோபமாய்த்தன்மகனையழைத்துஎன்னிடத்தில்பேசவேண்டாமென்றுதிட்டம்பண்ணி என்னைச்சிறையில் வைத்திருந்தாள் அப்படியிருக்கஒருநாள் என்புருஷன்எப்படியோஎன்னிடத்திற்குவந்துகூடிப்போனார்பின்புநான்கெர்ப்பமானதுதெரிந்துயென்னைக்கண்ணைக்கட்டிகாட்டிலோட்டிவிட்டார்களென்று விவரமாகச்சொல்லிஅதன்பிறகுநான் அந்தரமானகாட்டில் பாதவித்துநின்றதும்காட்டைவிட்டுச்சுடலைவெளிச்சங்கொண்டழுது தன்மகளென்று நினைத்து வீட்டிற்கு அழைத்துவந்ததுமநான் பிள்ளையைப்பெற்றும் அந்தப்பிள்ளையைக்காணமல் மருத்துவக்கிழவியைப்பார்த்து பிறந்தபிள்ளையெங்கேயென்று கேட்டதும்அது இறந்துவிட்டபடியால் யெடுத்துக்கொண்டுபோய்ப் புதைத்துவிட்டேனென்று மருத்துவக்கிழவிசொன்னதும் தான்வீட்டிலிருந்ததும் இராசகுமாரன்தன்னைச் சேரவேண்டுமென்றுவிரும்பிவந்ததும்மறுபடியும் வந்துவிட்ட தும் சவிஸ்தாரமாகச்சொல்லிநிறுத்தினாள் அவைகளையெல்லாம் ரதகேசரியும்விவரமாகக்கேட்டுக்கொண்டு அங்கிருந்தவர்களைப்பார்த்து நீங்கள் இந்தமதனசேனை சொன்னவார்த்தைகளைநன்றாய்க்கேட்டீர்களா வென்றுசொல்லிமதனசேனை புருஷனாகியதர்மகேசரியையழைத்து ஐயாநீருமநடந்தசெய்தியை ஒளியாமலசொல்லவேண்டுமென்றுசொல்ல அதற்குத்தர்மகேசரியும்ரதகேசரியைப்பார்த்து அப்பா சிலநாளைக்குமுன் என்தாயாராகிய மரகதவல்லியும்யென்னையழைத்து உன்பெண்சாதியானவள் பெண்ணுடை

யதிட்டப்படி நம்மால் தாய்வீட்டுப்பெண்போல விளையாடிக்கொ
ண்டிருக்கிறாள்.

அதனால் அவளிடத்தில் நீ சிலகாலம்பேசாமலிருவென்று திட்
டம்பண்ணியிருந்தாள் நானும் தாய்சொற்றுறந்தால்வாசமில்லையெ
ன்னும் பழமொழிப்படி என்தாய்சொல்லைக்கடந்து நடவாமலிருந்தே
ன் என்தாயாரும் தனியே ஒரு அரண்மனைகட்டுவித்து அந்தஅரண்மனை
யில் நூறுபேர் ஊழியப்பெண்களுடனே என்பெண்ஜாதியைச் சிறை
யாகவைத்து வாசற்படியில் நூறுபேர் காவற்காரரையும்வைத்துதிட்
டம்பண்ணியிருந்தாள் அப்படியிருக்குங்காலத்தில் சிலநாள் பொருத்
து நாகலபுரிக்குப்போகிறபோது நான் ஒருவருக்குந்தெரியாமல்நிலவ
றையுண்டுபண்ணி அந்தநிலவறைவழியாகப் போய் என்பெண்சாதியு
டனேகூடி சுகமனுபவித்துவிட்டு மருபடியும் அந்தவழியை மூடிவிட்
டு நாகலாபுரிக்குப்போய் அவ்விடத்துக்காரியங்களை நிறைவேற்றிக்கொ
ண்டுவந்து திரும்பிவந்துயென் தாயாரைக்கண்டு அம்மாள் உன் மருமக
ளெங்கேயென்றுகேட்க அதற்கு என்தாயாரும் அப்பா நான் அத்தனைக்
காவலில்வைத்திருந்தும் அவள் ஐந்துமாதங் கெர்ப்பமாயிருந்தாள் நா
ன் அதையறிந்து உன்தகப்பனிடத்தில் ஆலோசனைசெய்து விபசாரத்
துவம்பண்ணிக் கெற்பமுண்டாயிருக்கின்றவளை வீட்டில வைத்திருந்
தால் சூரியசந்திராளுள்ள பரியந்தம் நமதுகுலத்திற்குப்பழிச்சொல் வ
ருமேயென்று துணிந்து இரண்டுகண்களையுங்கட்டிக்காட்டில்கொண்
டுபோய்விட்டுவிடக்கட்டளையிட்டோமென்ன அந்தச்செய்தியைக்கே
ட்டுபோய்விட்டு விடக்கட்டளையிட்டோமென்ன அந்தச்செய்தியைக்
கேட்டுநமக்கும் இப்படிப்பட்ட விதியிருந்ததாவென்று எனக்குண்டானே
துக்கப்பட்டுநாம நமதுபெண்சாதியிடத்திற்குப்போய் கூடினநாள்மு
தல் கெர்ப்பமானதுபோல் இருக்கிறது இதுசெய்திநமதுதாயதகப்பனு
ம் அறியமாட்டார்களே நாமுஞ்சொல்லாமற்போனோமே இனி என்ன
செய்யலாமென்று அதிகதுக்காக்கிராந்தனாய்நின்று காட்டிலே போ
னவளை எந்தமிருகங்கள் கொன்றுவிட்டனவோவென்றுமகா விசன
மாய் ஆகாரநித்திரையில்லாமலிருக்கிறேனென்றுசொன்னான் அதற்கு
ரதகேசரியும் அங்கிருந்தவர்களைப்பார்த்து ஆ ஆ நீங்களெல்லோரும்
நன்றாய்க்கேட்டீர்களாவென்று எச்சரிக்கைபண்ணி பாட்டியாராகிய
மரகதவல்லியாரையழைத்து உன்மருமகள் உனக்காகாமலிருந்தசெய்
தியைச்சொல்லென்றுகேட்க அதற்குமரகதவல்லியும்அப்பா என்கு
மாரன் தர்மதேசரிக்கு மதனசேனையை விவாகம்பண்ணியிருக்கையில்
அவள கொஞ்சமாகிலும் மாமியாரென்கிற மரியாதையில்லாமல் நடந
துவருவாள் அதனால்நான் கோபமாய் என்குமாரனையழைத்து அவளுட
ன் பேசவொட்டாமல்திட்டப்படுத்தி அவளுக்குவேரொரு அரண்மனை
கட்டுவித்து அந்தஅரண்மனையில் அவளைசிறைவைத்திருந்தேன் அப்
படியிருக்கஐந்துமாதங் கெர்ப்பமென்று தாதிகள்சொல்லக்கேழ்விப
ட்டுஎன்குமாரன் போயிருந்தசெய்தி எனக்குத் தெரியாதபடியினால்
அவள்விபசாரத்துவம் பண்ணினாளென்றுநினைத்து என்புருஷனுக்கு
த்தெரிவித்து அவளுடையகண்ணைக் கட்டிக்காட்டிலேகொண்டுபோய்
விடும்படிசெய்தேனென்றுசொன்னாள். அதுகேட்டுரதகேசரியும்மோ

கனுளென்கிற தேவடியாளையுமழைத்து நீ நடந்தசங்கதியெல்லாமுண்
ளபடிசொல்லென்றுகேட்க அதற்கவளும் சுவாமி என்மகள்கா
மியென்பவள் ஐந்துமாதங்கெற்பமாயிருந்து மத்தியில் அந்தகெர்ப்ப
ம்பின்னமடைந்து அதனால் ஜன்னிகண்டு மரித்துப்போக அவளையெ
டுத்துக்கொண்டுபோய்த் தகனம்பண்ணிவந்த பின்பு அன்றிராத்திரியி
லென்மகளாசையினால் சவத்தையாகிலும் போய்ப்பார்த்துவருவோ
மென்றுசுடுகாட்டுக்குச் சமீபமாய்ப் போகையில் இந்த மதனசேனை
யைக்கண்டு என்மகளுடைய ரூபலாவண்ணியமும் மிருதுவானவசன
மும் ஒத்திருந்தபடியால் இவளைக்கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்
டுமனது துக்கத்தைப்பார்த்து மகளைமறுபடியும் சுவாமி அனுப்பிவிட்
டாரென்று சந்தோஷமாய் வீட்டுக்கழைத்துக்கொண்டுவந்துமோட
டிகெர்ப்பவெளியானபிறகு நமது ஜீவனத்திற்கு இடம்பண்ணிக்கொ
ள்ளலாமென்றுநினைத்து மதனசேனையைப் பார்த்து அம்மா நீ பிரச
வித்தபின்பு நல்ல புருஷனைச்சேர்ந்து திரவியம்சம்பாதிக்கவேண்டு
மென்றுசொன்னேன் அதற்குமதனசேனையும் அம்மாநான் யமபுரத்
திற்குபோயிருந்தவிடத்தில் யமதர்மராஜனும் என்னைப்பார்த்துனக்கு
இன்னமாயுசிருக்கின்றது நீபூலோகத்திற்குப்போய்பன்னிரண்டு
வருஷபரியந்தம் ஒருபுருஷர்முகம் பாராமல்விரதம் பண்ணிக்கொண்டி
ருக்கவேண்டும் அப்படிச்செய்யாமல் எங்கள்வசனந் தப்பிநடந்தால்
தலைவெடித்துச்சாவாயென்று சொல்லியிருக்கிறாரென்று சொன்னா
ள் அதுகேட்டுமகா சந்தோஷமென்று இவளை ஒருநிலவறையில்வைத்
து வளர்த்துப்பிரசவ வேதனையாயிருக்கின்ற சமயத்தில் மருத்துவ
சியையழைத்துப் பிள்ளைபிறந்தால் நமதுபிழைப்புக்கு பின்னமுண்
டாகும்பெண்பிறந்தால் நமதுதொழிலுக்குச் சாதகமாயிருக்கும் ஆகையி
னால்பெண்ணானால் வைத்துக்கொள் பிள்ளையானால் கொன்றுபோட
என்றுஉத்தரவுபண்ணியிருந்தேன் அப்படியேமருத்துவச்சியும்ஆண்பி
ள்ளைபிறந்ததாகவுங்கொன்று புதைத்துவிட்டதாகவுஞ்சொன்னாளெ
ன்றுசொல்ல அவைகளெல்லாம் ரதகேசரியுங்கேட்டு அங்கிருந்தவர்க
ளைப்பார்த்து நீங்களெல்லாம் நன்றாய்க்கேட்டீர்களாவென்று எச்சரி
த்துதன்னைவளர்த்த சர்வேஸ்வரராஜாவைப்பார்த்துஐயாநான்பிறந்
தென்னவளர்ந்ததென்னை என்னுடைய பூர்வோத்திரமெல்லாம்நன்றா
ய்ச்சொல்லவேண்டுமென்றுகேட்க அதுகேட்டுசர்வேஸ்வரராஜவும்
அந்தசபையாரைப்பார்த்துச் சகலமான பேருங்கேளுங்கள் நானொரு
நாள் இராத்திரிபதினைந்து நாழிகைக்குமேல் நகரிசோதனைவரும்போ
து ஆரைச்சவரி ஜோடாமாய்ச் சாளரவாசலில் குழந்தைஅழுகிறசத்தங்
கேட்டு அந்தக்குழந்தையைப் போய்யெடுத்துக்கொண்டுவந்துநமது
பத்தினிகையில்கொடுத்து வளர்க்கச்சொன்னேன் அவளும் இந்தக்குழ
ந்தையைக்கண்டவுடனே பிள்ளையில்லாதவளாகையால மகா அபேட்
சையாய் வாங்கி பெற்றபிள்ளையைப்பார்க்கிலும் அதிகப்பிரியமாய்வள
ர்த்துவந்தாளென்று சொன்னார் அப்போது இந்தச்சங்கதிகளை யெல்
லாம் அந்தச்சபையிலுள்ள சகலமானபேர்களுங்கேட்டு அச்சரியப்பட
ட்டார்கள் ரதகேசரியென்பவனால் வேதாந்தகேசரியினுடையவம்சமுழு
தும் பிரகாசமடைந்ததென்று தேவர்களெல்லாம்சலசலவென்றுபுகழ

பவருஷம்வருஷித்தார்கள் அதன்பின்பு ரதகேசரியுமெழுந்திருந்து பாட்டனாகிய வேதாந்தகேசரிக்கும் பாட்டியாருக்கும் தகப்பனுக்கும்வளர்த்தபிதாவாகிய சர்வேஸ்வரராஜாவுக்கும் தாயாரைவைத்துசம்ரட்சணைசெய்தமோகனுக்கும் மருத்துவச்சிக்கும் தாயாராகியமதனசேனைக்கும் சாஷ்டாங்கதெண்டன்பண்ணிகை கட்டிக்கொண்டுநின்றான் அப்போது மதனசேனையும் புத்திரனாகிய ரதகேசரியை அப்பா புத்திராவென்றெடுத்து மடியின்மேல்வைத்துக்கொண்டு மார்போடணைத்து உச்சியைமுகர்ந்து கன்னத்தில்முத்தமிட்டுக்கொண்டு அப்பாநீ சேற்றிலேசெங்கழுநீர்பூத்ததுபோல நீ என்வயிற்றில் பிறந்தபடியினாலெனக்குபதிவிரதாதர்மமும் உன் தகப்பனுடைய வம்சத்திற்குங்கீர்த்திப்பிரதாபமும் உண்டாயின உன்னைவளர்த்தெடுத்த சர்வேஸ்வரராஜனுடையஅருமைபெருமையும் அந்தச்சபையிலே சகலமானவர்களுக்குத்தெரியலாயின ஆதலால் சகலஜனங்களையும்சம்ரட்சணைசெய்துக்கொண்டுதீர்க்காயுசாய் சகலசம்பிரமத்துடனேபல்லாண்டுபல்லாண்டாய்வாழக்கடவையென வாழ்த்தினள் சர்வேஸ்வரராஜனும் அப்போதுரதகேசரிக்கு விவாகமுடித்துவைக்கவேண்டுமென்று உத்தேசித்து மிதுலாபுரிபட்டணம் பிரமதேவராஜனுடைய குமார்த்திசந்திரரேகையைக் கலியாணம்பண்ணுவித்துதன்னுடையபட்டணத்தையும் அவனுக்கே பட்டங்கட்டிவித்தார் பிறகு ரதகேசரியும்மகாசம்பிரமத்துடனே இரண்டு பட்டணத்திற்கும் அரசனாயிருந்து ராசநீதி வழுவாமல் ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தானென்று சொல்ல,

## சேலைசொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கனும் மஹாசந்தோஷப் பட்டுப்பேசாமடந்தைஉடுத்திருக்குஞ்சேலையைப்பார்த்து வேதாளத்தை யதனுள்ளேபோய்ப் பிரவேசிக்கச்செய்து இந்தப் பேசாமடந்தைதான் பேசுகிறதில்லையே இனியார் கதைசொல்லப்போகிறார்கள் நீயாகிலுமொரு கதைசொல்லென்றுகேட்க அதற்கு அந்தசேலையும்விக்கிரமார்க்கனைப்பார்த்து அய்யா இந்தபெண்ணானவள் தன்னுடைய இடுப்பிலென்னை மூன்றுசுத்தாய் வரிந்துகட்டியிருக்கிறாள் இவளுக்கு உட்பாவாடையுமில்லை இப்படிநானிருக்கிற வருத்தத்தைப்பார்த்து நீரென்னையெப்படி கதைசொல்லச்சொல்லு நீரென்றுசொல்ல அதுகேட்டுப்பேசாமடந்தையும் இதுவென்னவிபரீதகாலம் நேரிட்டதென்று பயந்துநடுக்கிஉடுத்து இரவல்ஸ்திரமே பாம்பாய்க்கடிக்குமென்கிற உலகவார்த்தை நமக்குமெய்யாயிற்றென்று வெட்கப்பட்டுவேறொருசேலையைஉடுத்திகொண்டுஅந்தச்சேலையை யவிழ்த்தெறிந்து விட்டால் அந்தச்சேலையும் வி

க்கிரமார்க்கராஜனை பார்த்து ஐயா நீர் என்னை ஒரு பொருளாக வெ
ண்ணிக் கதைசொல்லச் சொன்னீரே ஆகிலும் எனக்குத் தெரிந்த கதை
யைச் சொல்லுகிறேன் நீர் சாவதானமாய்ச் சற்றே செவி கொடுத்துக்
கேளும் அதேதென்னவென்றால் மல்லிகார்ச்சுனமென்னொருபட்டண
முண்டு அந்தபட்டணத்தையாளப்பட்ட பல்லவராயனென்னொருராஜனு
ண்டு அந்தராஜனானவன் பிள்ளையில்லாமல் வெகுநாள் தாபந்திரியப்பட்
டுப்பகவானை நோக்கித் தபசுபண்ணுகையில் அப்போது பகவானும் அவ
ருடையதபசுக் கிரங்கிப் புத்திரனுண்டாகும்படி வரங்கொடுத்த தருளி
னார் அதுலே கெர்ப்பமாய் அவரது பத்தினியாகிய பதமினியினுடைய
வயிற்றில் இரட்டை பிள்ளை பிறந்தது அதுகேட்டு ராசாவும் மகா சந்தோ
ஷசித்தனாய் அந்தப்பிள்ளைகளை நாளொருமேனியும் பொழுதொருவர்
ணமுமாக வளர்த்து ஒருபிள்ளைக்கு அட்சயகேசரியென்றும் ஒருபிள்
ளைக்குசத்தகேசரியென்றும் பெரியோர்களாகிய பிராமணர்களால் நா
மகரணமிடுவித்து அந்தப்பிள்ளைக்கு ஐந்துவயதானபின்பு பள்ளிக்கூ
டத்தில் வைத்துசசகல வித்தையாப்பியாசமுஞ் செய்வித்துச்செல்வ
த்துடனே வளர்த்துவந்தார்கள் அந்தப்பிள்ளைக்கும் நாளுக்குநாளது
ர்வபட்சசந்திரனைப்போல் விருத்தியடைந்து சகலசாஸ்திர சம்பன்ன
ராய்ப்பதினாறுவயதுள்ள பாலகுமாரர்களானார்கள்

அப்படியிருக்குங் காலத்தில் அந்தபல்லவராய மகாராஜாவின் இ
ளையபத்தினியாகிய மந்தாகினியென்பவளுக்கு ஐந்துமாதங் கெர்ப்ப
முண்டாயிற்று அதுதெரிந்து அந்தமந்தாகினியும் நமதுவயிற்றி லிரு
க்கின்றபிள்ளை ஆணாகப்பிறந்தால் அந்தப்பிள்ளைக்குப் பட்டமில்லாம
ற்போகின்றதே நமதுசக்களத்திப் பிள்ளைகளுக்கல்லவோ பட்டங்கி
டைக்கும் ஆதலால் அந்தஇரண்டு பிள்ளைகளையுங் கொன்றுவிட்டால்
நமதுபிள்ளைக்கே பட்டம்வருமென்று ஆலோசித்துப் புருஷனுந்தா
னுஞ்சையோகமாய் ரதிகேளி யனுபவக்குங் காலததில் புருஷனைப்
பார்த்துச் சுவாமி நீர் சுகமாயிருக்கும் பொழுதே பருவத்திற் பிறந்த
பிள்ளைக்கு இளவரசுபட்டங் கட்டிக்க ண்ணாரப் பார்க்கவேண்டும் இ
ந்தச்சரீரம் நீர்மேற்குமிழிபோல் நிலையாமையையுடைய தென்றுபெ
ரியோர்கள் சொல்லியிருப்ப தல்லமனும் காட்சிப் பிரமாணத்திலுங்
காண்கிறோம் ஆதலால் இந்தட்சணமே என்சக்களத்திப் பிள்ளைகளை
யழைத்துமூலவனாகியத்தஅட்சயகேசரிக்குப் பட்டங்கட்டி வைத்து இ
ளையவனையுன்னண்டைத்தில் தானேயிருக்கச்சொல்லி திட்டம்பண்ண
வேணுமென்றுசொல்ல அதைகேட்டுதானும் சந்தோஷசித்தனாய் அ
ப்படியேசெய்கிறேனென்று சொல்லிப் பிற்பாடு அட்சயகேசரியையு
ஞ்சத்தகேசரியையும் அழைப்பித்து அப்பா நீங்கள் உங்களுடையசிறி
ய தாயாராகியமந்தாகினி சொன்னபடி கேட்டுக்கொண்டு இவ்விடத்தி
ல் நாயேசுகமா யிருங்களென்றுசொல்ல அதுகேட்டு அப்படியே நல்ல
தென்று அந்தஇரண்டு பிள்ளைகளும் சிறியதாயா ரிடத்திற்குப்போ

ய்ச சாஷ்டாங்கதெண்டனிட்டுநின்றார்கள் அவர்களையுமந்தச்செட்டியும்
அதிகவிருப்பமுடையவனைப்போல வாரியெடுத்துமார்போடணைத்து
க்கன்னத்திலமுத்தமிட்டு அப்பாநீங்கள் பட்டங்கட்டிக்கொண்டு தீர்க்
காயுசாய்வாழ்ந்திருங்களென்றுசொல்லிப் பிற்பாடுசூக்ஷமபுத்தியுடைய பட்
சபகேசரியைப்பார்த்து அப்பாநீ உன்தமயர்பேச்சைக்கேளாமனான்
சொன்னபடி கேட்டுக்கொண்டிருந்தால் உனக்கேபட்டமுங்கட்டுவித்
து விவாகஞ்செய்கிறேனென்றுசொல்ல அப்படியேநல்லதுதாதா என்
று சிலகாலமிருக்கும்பொழுது அந்தப்பட்டணத்திலிருக்கும்வாசுதேவ
னென்கிற ஒருபிராமணர் தினந்தோறும்வந்து அந்தப்பிள்ளைகளுக்கட்ச
தைகொடுத்து ஆசீர்வாதம்பண்ணிப்போவார் அப்படியிருக்கும்நாளி
ல் ஒருநாளந்தப்பிராமணரும் அந்தராசகுமாரர்களையழைத்து அப்பா
நான்உங்களுக்குஒருஉபதேசஞ்செய்கிறேன்அவ்வுபதேசத்தின்படிநட
ப்பீர்களாகில்உங்களுக்குஅஷ்டஐசுவரியமுந்தீர்க்காயுசுமுண்டாகு
ம்சகலஆபத்துகளும்விலகிப்போம்நீங்கள் ஒருவரைவிட்டுஒருவர்பிரி
ந்திருக்கவேண்டாம் வசநாவிளைசாப்பிட்டேயொழிய அதுவனவாவது
முன்புகாகத்திற்குக்கொடுத்துப்பிறகுநீங்கள்சாப்பிடுங்கள ஒருவராய
த்தனிவழியேபோகவேண்டாமென்று உபதேசித்தருளினார்.

அன்றுமுதல் அதுவேவழக்கமாகக்கொண்டுநடந்துவருகையில்ஒ
ருநாள்மகராஜினியும் அவர்களையழைத்து அப்பாநீங்கள்காரகோட
வனத்திற்குப்போய் காவிளையம்பிறகத்தி ஒருகலைமான்பிடித்
துக்கொண்டுவந்துதரவேண்டுமென்றுசொல்லவே அதுகேட்டு அவர்களி
ருவரும்அப்படியேபிடித்துவந்துதருகிறோமம்மாவென்றுசொல்லிசக
லஆயுதங்களையுமெடுத்துக்கொண்டு அப்பொழுதேபிரயாணப்படுகை
யில்மகராஜினியும்அப்பாநீங்கள்பசியாய்ப்போவீர்களாகையாற்கட்ட
முதுகட்டித்தருகிறேன் அதையெடுத்துக்கொண்டுபோய்ஒருவருக்கும்
கொடாமல் பத்திரமாகவைத்துக்கொண்டுகலைமான்அகப்பட்டபின்புஇ
த்தக்கட்டமுதைச்சாப்பிட்டு ஆயாசந்தீர சற்றுநேரம் இளைப்பாறியிரு
ந்துவாருங்களென்று உபசாரமாகச்சொல்லி அந்தக்கட்டுச்சாதத்தில் வ
சநாபியைக்கலந்து கட்டிக்கொடுக்க அதைஅவர்கள் களங்கமில்லாமல்
மெய்யென்றுவாங்கிக்கொண்டு காரகோடகவனத்திற்குப்போய்அந்த
வனமுழுதுஞ்சுற்றியலைந்து அக்கலைமானைக்கண்டுபிடியாமல்வெசாரிப்போ
ய்ப்பசிதாகந்தணிருக்கடையாமல் எங்குந்தேடி ஒருமலையிலுள்ள சு
னையைக்கண்டுபிடித்து அந்தக்கட்டுச்சாதத்தை பகிர்ந்துப் புரோகித
ருபதேசப்படி ஒருபிடிசாதத்தையெடுத்துக்காகத்திற்குமுன்னேவை
த்தார்கள் அந்தச்சாதத்தைக் காகமானதுசாப்பிட்டவுடனே கிறுகிறு
வென்றுசுழன்றுவிழுந்து இறந்துவிட்டது அதைக்கண்டுஅந்தஇரண்
டுபிள்ளைகளும் ஒருவரையொருவர்பார்த்து நம்முடையசிறியதாயார் செய்
தவஞ்சனை சற்பனைநமக்குத்தெரியாமற்போய்விட்டதல்லவா நாம்இ
னிமேல்பட்டணத்திற்குப்போனால்கட்டுச்சாதத்தில்வசநாபிகலந்திருக்

செய்தியை நாம்தெரிந்துக்கொண்டோமென்று ஆலோசித்து எந்தவிதத்திலும் நம்மைகொல்லுகிறதற்கே எத்தனம்பண்ணுவாள் நமதுபிதாவிடமுலவராசாவும் இளையபெண்சாதிமோகத்தினால் அவள் சொல்லையே முக்கியமாகக்கேட்டு நடப்பார் ஆகையினால் நாம் எங்கேயாகிலும்போய்ப்பிழைப்போமென்று நடக்கும்போது அவர்களிருவரும்பசிதாபத்தினால் மூர்ச்சையடைந்து ஒருவடவாலவிருட்சத்தி னிழலில் போயிருந்தார்கள்,

அப்போது அட்சயகேசரியும் இளைப்படைந்துசத்தகேசரின் மடியின்மேல் தலையைவைத்துக்கொண்டுநித்திரைபண்ணினான் அந்தஆலவிருட்சத்தின்மேலேசொர்ணமேகப்பட்சிகளானவை ஆணும்பெண்ணுமாய்கூண்டுகட்டிக்கொண்டு வெகுகாலமாயிருந்தன அந்தப்பட்சியின் ஜெரகைசாப்பிட்டவனுக்கு நகைக்கும்போதெல்லாம்வாயிலிருந்து மாணிக்கங்கள்விழும், பெடையைச்சாப்பிட்டவனுக்கு மகத்தாகியபோகபாக்கியங்களுண்டாகும், அந்தமகிமைதெரிந்து இராகவனென்கிறவேடன் கெவிடோளாய் அந்தப்பட்சியைப் பிடிக்கிறதற்கு கன்னிவைத்து இடைவிடாமல்காத்திருந்து அன்றையதினம்வீட்டுக்குப்போய்ச் சாப்பிட்டுவரவேண்டுமென்றுபோனான் அச்சமயத்தில் அந்தப்பட்சியுங்கன்னியிலகப்பட்டு அந்தக்கன்னியைச்சுற்றிக்கொண்டு பூமியில்விழுந்தது அதைச்சத்தகேசரிகண்டுபட்சியைமாத்திரம்பிடித்துப்பட்டிக்குள்மறைத்துவைக்கையில் அந்தவேடனும் மகா அபேட்சையாய்வந்துபார்த்தான்வைத்துப்போனகன்னியைக்காணாமல் வெகு தாபத்திரியமடைந்து ஐயோ நான்பத்துவருஷமாகக்காத்திருந்து வீணாய்ப்போய்விட்டதென்றுபுலம்புகிற அந்தவேடனைச்சத்தகேசரியும்அழைத்து அடாவேடா நீயேன் இப்படிபுலம்புகிறாயென்றுகேட்க அவனும்சுவாமிநான்பத்துவருஷமாய்ஒருபட்சியைப்பிடிக்கக்கன்னிவைத்துக்காத்திருந்தேன் அது இன்றைக்குக்கன்னியிலகப்பட்டு அந்தக்கன்னியையுந்தூக்கிக்கொண்டு பறந்துபோய்விட்டதையாவென்றுசொல்லஅதுகேட்டுசத்தகேசரியும் அடாவேடா நீபத்துவருஷமாய்க்காத்துக்கொண்டிருக்கையே அந்தப்பட்சியிடத்தில் என்னமகிமையென்றுகேட்க சுவாமி அந்தப்பட்சியின் ஜோடிச்சாப்பிட்டவர்கள் நகைக்கும்போதெல்லாம்வாயிலிருந்து மாணிக்கங்கள்விழும், பெடையைச்சாப்பிட்டவர்கள் ராஜபோகங்களையனுபவிப்பார்கள் ஆகையால் நான்தாபத்திரியப்படுகிறேன் எனக்குப் பிராப்தியில்லாமற்போய்விட்டதென்று அழுதுக்கொண்டுபோனான் அவன் போனவுடனே அட்சயகேசரியும் நித்திரைவிட்டெழுந்திருந்து சத்தகேசரியைப்பார்த்து அப்பா தம்பி சூரியனஸ்தமனவேளையாகின்றதே நீஇந்நேரம் என்னையெழுப்பாமல் இறுபின்னே புத்தியாயிருந்துவிட்டாயேஇந்தமாத்திரம் நம்மிருவருடையகாலடிமாத்திரந்தானேயிருக்கவேண்டும் வேறே செருப்புக்காலடியாயிருக்கின்றதே இதுவென்னவென்றுகேட்க அண்ணா நீர் நித்திரைபண்ணினவேளையில் ஒரு சொர்ண

மேகப்பெட்டி கண்ணியிலகப்பட்டு என்முன்னேவிழுந்தது அதைநான் பிடித்துப் பத்திரப்படுத்திவைத்தேன் பிற்பாடு அந்தக்கண்ணியை வைத்திருந்தவேடன்வந்து இப்படியெல்லாஞ்சொல்லியழுதானென்று அந்தமகிமைகளைச்சொல்லி அந்தப்பட்சியைக்காட்டினன் அதுகேட்டு அட்சயகேசரியும் மகாசந்தோஷத்துடனே தழுவிக்கொண்டு அவ்விடம்விட்டுப்புறப்பட்டு அப்பால்நடந்துபோயிருக்க அந்தப்பட்சியைக் கட்டி மூத்தவனிடத்திலும் ஒருபவனசிரமமாகச்சாப்பிட்டுப் பசிதணிந்தபின்பு மூத்தவனும் இளையவனைப்பார்த்துத்தம்பி எனக்குதாகமாயிருக்கிறது தண்ணீர்வேண்டுமென்றுசொல்ல அப்படியேகொண்டுவந்துதருகிறேன் நான்வருமட்டும் இவ்விடத்திலிருவென்று சொல்லிச் சத்தகேசரியும் ஒருசெம்பையெடுத்துக்கொண்டு தண்ணீர்தேடப்போனான் இப்படியிருக்க யமுனாபுரியென்னும் பட்டணமொன்று அப்பட்டணத்தையாளப்பட்ட இந்திரசேனனென்கிற அரசன் சந்திரராசனென்கிற மந்திரியுடனே நெடுங்காலம் ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்து அந்தராசனுக்குப் புத்திரசந்தானமில்லாமற்போனபடியால் பகவானைநோக்கித் தவஞ்செய்யப் போனவிடத்திலே இறந்துபோய்விட்டார் அதுதெரிந்து மந்திரிமுதலான சகலபேர்களும் ஆலோசனைபண்ணிப் பட்டத்துயானையைச் சிங்காரித்துவிட்டு அதுயாரையெடுத்துவருகின்றதோ அவனையே அரசாக்கிக் கொள்ளுகிறதென்றுநிச்சயித்து யானையைச்சிங்காரித்துவிட்டார்கள் அந்தயானையும் பட்டணத்தைச்சுற்றிக்கொண்டு கார்க்கோடகவனத்திற்குப்போய் அட்சயகேசரியைக்கண்டு அவனைமூன்றுதரம்பிரதட்சணம்பண்ணி அந்தராசகுமாரனையெடுத்துத்தன்னுடையமத்தகத்தின்மேல்வைத்துக்கொண்டு யமுனாபுரிக்குவந்து சபாமண்டபத்தின் சிம்மாதனத்தின்மேல் கொண்டுவந்துவைத்துத் தனதுதும்பிக்கையினால் அபிஷேகத்தைமுகர்ந்தது அதுகண்டு மந்திரிமுதலான சகலமானபேர்களும் மகிழ்ந்திருந்து அட்சயகேசரிக்குத்தெண்டனிட்டுக்கைகட்டிவாய்பொத்திநின்றார்கள் அப்போது அட்சயகேசரியும் அவர்களெல்லாரையும் ஆதரணைபண்ணி மனுநீதிவழுவாமல் முன்னிலும்மேன்மையாக அதிகமாய் அரசாட்சிசெய்துகொண்டிருந்தார்.

முன் பட்டத்துயானை எடுத்துவந்தபோது தண்ணீர்கொண்டுவரப்போன சத்தகேசரி தேடிவரவேணுமென்று அடையாளமாய் வருகிறவழியில் தழைகளையுருவிப்போட்டுக்கொண்டேபோனார் இப்பால் சத்தகேசரியும் தண்ணீர்கொண்டுவந்து தமையனைக்காணாமல் என்னவிபரீதமென்றுசிந்தாக்கிராந்தனாய்ப்புலம்பிநிற்கையில் அவ்விடத்தில்யானை அடியைக்கண்டு அந்தவழியேநடக்கையில்தழைகளுருவிப்போட்டிருக்கும் அடையாளத்தைக்கண்டு அந்தவழியேபோகும்போது பட்டணத்திற்குச்சமீபத்தில் ஒருஆலவிருட்சமிருந்தது அந்தவிருட்சத்தினிழலிற்போய் உட்கார்ந்து கால்கள்நொந்ததும் வளர்த்ததம்பியதாயார்

செப்புக்குடம்பிலைகளுடனும் சாக்கோடைகளுடனத்தில் அகப்பட்டதும் தீ மையனைப்பிரிந்து தானதனிப்பதின்றதுமகினைத்து ஒவிதப்படியே இப்ப டியுப்விதியிருந்ததாவென்றுசுசைத்தான் அப்படிசைத்தமாத்திரத்தி ல்சொர்னமேதகப்பட்டிவின்றிரவைத்தின்னமையிடைமிலுள்பத்துப்படி மாணிக்கங் குயிலருசிலென்றுவிருந்தன இந்தஅதிசயம் பகவதசங்கற் பத்தினன் வேடமொசல்லிவித்தத்தல்று அந்தமாணிக்கங்களையெடுத் துமூட்டையாகக்கட்டிக்கொண்டு பருமையுபட்டணத்துக் கடைவீதி யிலேபோகும்போது அங்கேஒருகோமுட்டி முதன்மையாக்கடைவை த்திருந்தான் அவன் அஷ்டதரித்திரனாகையால உடுக்கவஸ்திரமுமில்லா மல் கந்தையைச்சுற்றிக்கொண்டுஜக்காமசொற்றப்பாக்குமதுராண்டு பழஞ்சாப்பாடுமலைத்துக்கொண்டிருந்தான் அந்தக்கோமுட்டியைக் கண்டு ஐயாசெட்டியாரே நான்சாப்பிட்டுவருந்தமட்டும் இந்தஅரிசிமூ ட்டையைப் பத்திரமாகவைத்துவையுமென்று மாணிக்கமூட்டையை க்கொடுத்துவிட்டு அந்தப்பட்டணத்திலிருக்குமொருஒளவையார்வீட் டிற்குப்போய் ஒருபணத்தைக்கொடுத்து அம்மாஎனக்குப்பசியாயிரு க்கிறபடியால சாதம்போடென்றுகேட்டுச்சாப்பிட்டுப்பின்பு அந்த அவ் வையாரையழைத்து அம்மாஇந்தப்பட்டணத்தில் ஏதாகிலும் அதிச யமுண்டோவென்றுகேட்க அவளுமதற்குச்சேதியைப்பார்த்து அப்பா, மற்றொருஅதிசயமுமில்லை இந்தப்பட்டணத்துராசனிறந்துபோய்ச்சி லநாள் இராசனில்லாமலிருந்து பட்டத்துயானையைச் சிங்கா ரித்துவிட்டார்கள் அந்தயானையானதுபோய் யாரோஒருஇராஜகுமார னைக்கொண்டுவந்து சிங்காதனத்தின்மேல்வைத்தது அந்தஇராசகுமா ரனுக்குதகாம் பட்டங்கட்டியிருக்கின்றது அவர் வெளியேவருகிறதி ல்லை சந்திராயனென்கிறமந்திரிதான் சகலகாரியமும்நடப்பித்துவரு கிறானென்றுசொல்ல அதுகேட்டுச் சந்தோசமும் மகாசந்தோஷமா யாய் நமது தமையன்தானென்று சிந்தைபடுத்திக்கொண்டு எப்போ து நமது தமையன் வெளியில் புறப்படுவாரோ அப்போது காணலா மென்று நினைத்து ஒளவையார்வீட்டிலேதானேயிருந்தான்.

அப்படியிருக்க ஒருநாள் அட்சயரோசரியும் சிங்காதனத்தின்மேல் கொலுவாயிருக்கும்போது பட்டணத்திலிருக்கப்பட்ட காரியக்காரர் வர்த்தகர் முதலானபேர்களும் புதுஇராஜாவுக்கு காணிக்கைகொண்டு வந்துகொடுத்துக்கண்டுகொண்டார்கள் இந்தச்செய்தியைத்தெரிந்து அந்த மாணிக்கமூட்டையைவைத்துக்கொண்டிருக்கிறஅற்பசிரோமணியாகி ய கோமுட்டியும் தன்பெண்சாதியாகிய மூக்கியென்பவளையழைத்து அடி நானும்போய்புதுராசாவைக்கண்டுவாரேன் நீசீக்கிரமாயெங்கே யாகிலும் ஆழாக்குப்படியரிசிகடன்வாங்கிச் சமையல் பண்ணிவையென்று சொல்ல அவளும்சுவாமிநமக்குயாவர்கள் அரிசிகடன்கொடுக்கப்போகி றார்கள் உம்மிடத்தில் ஆரோஒருவன் வழிப்போக்கன் கொடுத்துவைத்த [illegible]மூட்டையிருக்கிறதே அ[illegible]டுத்துச்சமைக்கிறேனென்று அ[illegible] [illegible]ட்டையையவிழ்த்தமாத்திர[illegible] [illegible]ளுகளெல்லாம் மாணிக்கமா

யிருந்ததை அதுகண்டு ஆச்சரியப்பட்டுத் தன்புருஷனுகிய கோமுட்டி யிடத்திற்சொல்ல அக்க அற்பமூடனும் செலவுக்கென்று சிலபணங்க ளைத்தவைத்துக்கொண்டு மற்றவைகளெல்லாம் தன்வீட்டில் ஒருகுழிப றித்து அதில்பத்திரப்படுத்திவிட்டுப் பத்துமாணிக்கங்கொண்டுபோய் இராசாக்குக்காணிக்கையாகவைத்துக் கண்டுகொண்டான் இராசாவும் அற்பமூடனுகிய கோமுட்டியோடு சந்தோஷப்பட்டுச்சோடசவுபசா ரமும்பண்ணிப் பல்லாக்குக்கொடுத்துப் பட்டணசெட்டியென்னும் பெயருமவைத்து மகாசம்பிரமத்துடனே யனுப்பிவைத்தார் அந்தமூட னும் இராசாவினிடத்தில தன்மதிகைகேகுபானம பெற்றுப்பெவேண சுபகொவத்தினுல் பட்டணமேதையெல்லாயநாதுவிட்டு அண்டைவீடு அயல்வீடு எதிர்வீடுகளிலிருக்கிறகுடிகளையெல்லாந்துரத்திவிட் டு அந்தவீடுகளையெல்லாம் இடித்து அரண்மனையாகக் கட்டிக்கொண் டு பட்டணத்திலிருக்கிற வர்த்தகர்களெல்லாரும் கொள்ளல் விற்றல்மு தலிய வியாபாரங்களில தன்சொற்படிசெய்துக்கொண்டுவர வொருவ ன் தனக்கெதிரில்லையென்று சொலித்திருக்கின்றகாலத்தில் இவ்விடத் தில் சத்தகேசரியும்நாம ஒருவையார்வீட்டிலிருக்கிறானுல் ப்ரயோச னமென்ன உமதுதமையனுரும் எங்கேயிருக்கிறுமென்று விசாரி யாமற்போனுமே நாமாகவுங்காணலாமென்றால் அரண்மனையிலிருந்து வெளியேபுறப்படவில்லையே ஆகையால் சுருபகளெல்லாரைப்போலக்கா ணிக்கைக்கொண்டுபோய்க் கண்டுவரலாமென்றுநிச்சயித்துக்கொண்டு கோமுட்டியைத்தேடி வருகையில் அந்தக்கோமுட்டி வீடுவாசலும் அ ரண்மனையுமாள்தானமாயிருப்பதைக்கண்டு அங்கிருந்தவர்களைப்பா ர்த்து இதேதுவீடென்றுவிசாரிக்குமளவில் எங்களுரிலிருக்கிற காம் இ ராசாவும் அற்பமூடனுகிய ஒருகோமுட்டிகொண்டுபோய் கொடுத்த மாணிக்கத்தைக்கண்டு சந்தோஷப்பட்டு அவனுக்கு வெகுமதிக்கொ டுத்து பட்டணசெட்டியென்றுபேர்வைத்தார் பின்பு அந்தவெகுமதி யையாக்கிக்கொண்டுவந்து பட்டணத்திலுள்ளவர்த்தகரெல்லாரும் இ வன்சொன்னபடிகேட்கத்தக்கதாக அதிகாரபட்டம்வாங்கிக்கொண்டிருக்கி றுன் இப்போது அவனை பட்டணசெட்டியென்றுசொல்லுகிறதேயல் லாமல் அற்பமூடச்செட்டியென்றுயாராகிலுமொருவர்சொன்னுலும் ஆ க்கினைபண்ணப்போகிறானென்று சொன்னார்கள்.

அதுகேட்டுச் சத்தகேசரியும் நல்லது வர்த்தகனிடத்தில் அடைக் கலமாகவைத்தபொருளை எடுத்துக்கொள்ளுகிறதோவென்றுகேட்டா ன் அங்கிருந்தவர்கள் பட்டணச்செட்டியாருக்கு எப்படி சமயமியோ அப்படிக்கும் அதற்கு எதிருத்தரஞ்சொல்லத்தக்கனபேரில்லையெ ன்றுசொன்னார்கள் சத்தகேசரியுந்திரும்பிவந்து அற்பமூடன் பெண் சாதியாகிய மூக்கியென்பவளைக்கண்டு அம்மாளுங்களிடத்தில் அரிசி மூட்டையைவைத்துப்போனேனே அந்தமூட்டையையிப்போது கொ டுக்கவென்றுகேட்டான் அந்தமூக்கியென்பவள் நல்லது அரிசிமூட் டையைத்தருகிறேன் இங்கேயிருமென்றுசொல்லித் தன்புருஷனுகிய

அற்பமூடச்செட்டிக்கி சொல்லியனுப்பினன் அவனும்வந்து சந்தகேசரி யைப்பிடித்து ஒரு அறையில்விட்டுப் பூட்டிப்போட்டான் இப்படியிருக்க ஒருநாள் அற்பமூடச்செட்டி சந்தோஷமாயிருக்கும்போது சந்தகேசரியும் செட்டியைப்பார்த்து என்னையேன் காவலில்போட்டுக்கொண்டீர் நீர்சொன்னபடி கேட்டுக்கொண்டிருக்கிறேனென்று சொன்னான், அதற்குச்செட்டியானவன் மெய்தான் இதனால் என்ன காரியமாகப்போகிறது நம்முடைய கையில் ரத்தினங்கொடுத்தாலென்று சொன்னால் யாவருக்கும் அதிசயமாயிருக்காதா அதைநாம் தள்ளிப்போடமாட்டோமாவென்று பெண்சாதியுங்காலும் யோசனைபண்ணிக்கொண்டு சந்தகேசரியைவெளியேவிட்டு நமக்கு ஊழியம்பண்ணிக்கொண்டிருவென்றுசொன்னார் அதற்குசந்தகேசரியும் நம்முடைய தலையெழுத்து இப்படியுமிருக்கின்றதாவென்று அற்பமூடச் செட்டிக்கு ஊழியஞ் செய்துக்கொண்டிருக்கிறபோது அந்தப் பட்டணத்திற்கு அதிபதியான அட்சரகேசரியென்கிற இராசாவுக்குக் கலியாணம்பண்ணவேணுமென்று அவாரகாபுரிபட்டணத்தையாளுகிற மகேந்திர இராசாவினுடையமகள் கோமளாங்கியென்கிறபெண்ணைக்கேட்டுக் கலியாணமுகூர்த்தமும் நிலவரம்பண்ணிக் கலியாணத்திற்கு சரக்கு சாமான் தட்டுமுட்டுவேணுமென்று அற்பமூடச்செட்டியையழைப்பித்து நீர் சமும யாழ்ப்பாணத்திற்குப்போய் இவ்விடத்திலே கிடையாத அபூருவமான சரக்குகளைவாங்கிக்கொண்டு வரவேணுமென்றுசொல்லியனுப்பினார்.

அந்தட்சணமேசெட்டியானவன் தன்னுடையசாக்கிரிப்பயவாகிய சந்தகேசரியையழைத்துக்கொண்டு தனக்குவேண்டிய திரவியங்களையுமெடுத்துக்கொண்டுகப்பலேறி சமுத்துறையிலிறங்கி அபூருவமானசரக்குகள்வகைகளையெல்லாம்வாங்கிக்கப்பலிலேற்றிக்கொண்டிருக்கிறபோது சமுமாளப்பட்டராஜாதிராஜனாகிய ஆதிபராசன்பிள்ளையில்லாதிருந்து சிவனைநோக்கித்தவம்பண்ணி சிவனுடைய கடாட்சத்தால் ஒருபெண்பிள்ளைபிறந்தது அந்தப்பெண்ணைநாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துச் சமுத்திரவல்லியென்றும் பெயருமிட்டுப் பதினெட்டுபாஷையும் ஆயுதபரிட்சையும் அப்பியாசம்பண்ணிபன்னிரண்டுவயதாயிருக்கிறகாலையிலே ஆதிபராஜராஜனவர் தம்மகள்சமுத்திரவல்லி ரூபலாவண்ணியத்தையும் கல்விவல்லமையுங்கண்டு இந்தப்பெண்ணுணத்திற்குத்தகுந்தமாப்பிள்ளை யெங்கேயிருந்துவரப்போகிறானென்றுசிந்தனைசெய்து ஒப்பாகிளவன்தன்னுடைய குதிரைலாயத்திற்கட்டியிருக்கிறஆகாயபுரவியென்கிறபுரவியைப்பிடித்து அதிற்கட்டிவைக்கிறதே அவளைசமுத்திரவல்லிக்குநாயகனென்று ஆராட்சிமணிகட்டிவைத்திருக்கிறான் அந்தச்செய்தியைப் பட்டணசெட்டியிடத்திலூழியம்பண்ணியிருக்கிறசந்தகேசரிகேட்டு இராத்திரி பதினெட்டுநாழிகைவரையில்கோட்டைக்குள்பணிவிடைசெய்துவிட்டு அவன்

சித்திரைபோனபிறகு ஒருவருக்குந்தெரியாமல்வெளிப்புறப்பட்டுராசாவினுடைய குதிரைலாயத்திற்குள்நுழைந்து அந்தஆகாயபறவையென்னும்புரவியினிடத்திற்குவந்து அதுஒருவராயுஞ்சேரவொட்டாமல் பாய்கிறதைப்பார்த்துஅந்தக்குதிரையின்மேல்பாய்ந்தேறிக்கொண்டு நிமிஷநேரத்தில்அந்தப்பட்டணமுழுதுஞ்சாரிவந்து மறுபடியுங் குதிரைலாயத்திற்கட்டிவிட்டுப்பட்டணசெட்டிபடுத்திருக்கும்வீட்டதிற்குப்பின்னாகப்போய்ப் படுத்திருந்தான்.

இப்படியிருக்கநிற்கச்செய்தியை அந்தராசனறிந்து குதிரைலாயத்திற்குவந்து குதிரையைப்பார்த்து அந்தக்குதிரைமுன்சரீரமெலாம்வேர்த்திருப்பதுங்கண்டு வாயில்நுரைதள்ளுவதுங்கண்டு குதிரைக்காரர்களை இந்தக்குதிரையைநடத்தினவனார் அவன்பேரென்னவாமென்றுகேட்க அவர்களும் சுவாமீ நாங்கள் இராத்திரிபதினைந்து நாழிகையில் விழித்திருந்துப்பிறகு நித்திரைபோய்விட்டோம் அந்தசமயத்தில் எவனோ இந்தகுதிரையைச்சோதித்து வந்திருக்கிறானென்று சொல்லஅதுகேட்டுஇராசனும் அடாநேற்றுவந்தவன் இன்றைக்கும்வருவானல்லவா நீங்கள பத்திரமாய்விழித்திருந்து அவனைப்பிடித்துவாருங்களென்றுதிட்டம்பண்ணிவிட்டுத் தன்னுடையஅரண்மனைக்குப்போய் குமாரத்தியையழைத்துநடந்தசெய்தியைச்சொல்லஅதுகேட்டு அவளும்சந்தோஷமாய்தகப்பனைப்பார்த்து நமதுகுதிரையைநடத்தவல்லவன்யாரோவொருஇராசகுமாரனாயிருக்கவேண்டும் ஆகையால் அவனையெவ்விதத்திலுங்கண்டுபிடித்தழைத்துவரவேண்டுமென்றுசொல்ல அப்படியேயாகட்டுமம்மாவென்று இராசாவும் அரண்மனையிற்போயிருந்தான் அப்பால்மறுநாளும் சத்தகேசரியானவன் இராத்திரிபதினைந்து நாழிகைக்குமேல் குதிரைலாயத்திற்குவந்து அந்தக்குதிரையைப்பிடித்த சிறிதுபோதையில்குதிரைக்காரர்கள் கண்டுபிடித்துக்கொண்டுபோயிராசாவின்சமுகத்திலவிட்டார்கள்.

இராசனும் சத்தகேசரியைப்பார்த்து அப்பா நீயாருடையபிள்ளையென்றுகேட்க ஐயா நான் ஒருசுவிட்டுச்செட்டிமகன் இப்போது பட்டணச்செட்டியாருக்குஊழியஞ்செய்துக்கொண்டு அவர் வார்த்தைகளுக்கிணங்கிக்குடித்துக்கொண்டிருக்கிறேனென்றுசொல்லஅதைக்கேட்டுஇராசாவும் தன்மகளையழைத்துச் சத்தகேசரிசொன்ன வர்ணமுறையைச் சொல்ல அதுகேட்டு அவளும்சத்தகேசரியைப்பார்த்து நீயாருடைய குமாரன் உன்பெயரென்ன உள்ளபடி சொல்லென்றுகேட்க அதற்கவனும் நான்ஒருசுவிட்டுச்செட்டிமகன்தானென்றுசொல்ல அதுகேட்டு சமுத்திரவல்லியும் இவன்சொல்லுகிறசொல்கபடமாயிருக்கிறதென்றாஆலோசித்துக்கொண்டு தன்தகப்பனைப்பார்த்து ஐயாஇவனெவனானாலும்இருக்கட்டும் நான் இத்தட்சணம் இவனையேமாலையிடவேண்டுமென்றுசொன்னாள்.

அதுகேட்டு நந்தராசனும்பட்டணச்செட்டியாரையழைப்பித்து நீசெட்டியாரே உம்மிடத்தில் ஊழியஞ்செய்துக்கொண்டிருக்கிற பிள்ளையை நீரெப்பொழுதிட்டிறக்குப்போதுஉப்பரிகைமேலுலாவிக்கொண்டிருந்தஎன்குமாரத்திகண்டு அக்கப்பிள்ளைக்கே என்னைகலியாணம்பண்ணிக்கவேண்டும் அப்படிசெய்யாவிட்டால் பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளுகிறேனென்றுபிரதிக்கினைபண்ணியிருக்கிறாள் ஆகையால் அவனுக்குசமானாகியநீர் உத்தரவுசெய்யுமென்றுகேட்க அதுகேட்டு அவனும்அற்பசந்தோஷியாகையால் தன்னூழியப்பயலுக்குகலியாணஞ்செய்வித்தால் அவனுந்தனக்குஊழியஞ்செய்வானென்றுநினைத்துச் சந்தோஷமாகத்தானே இராசாவைப்பார்த்துஐயாஉமது இஷ்டப்படியேஉமதுகுமாரத்தியின்பிரதிக்கினைதப்பாமல்எமது ஊழியப்பயலுக்குக்கலியாணமுடித்துச்சீக்கிரமாய் என்னிடத்திலனுப்பிவிடுங்களென்றுசொல்லிப்போய்க்கோமுட்டியுந்தன்இடத்திற்குப்போய்விட்டான்.

பிற்பாடுஇராசாவுஞ்சந்தகேசரியைக்கூட்டிக்கொண்டுபோய்மகளிருக்கும் அரண்மனைவாசலில்விட்டுத் தன்னுடைய அரண்மனைக்குப்போனார், அப்பால்சமுத்திரவல்லியுஞ்சந்தகேசரியைப்பார்த்து நீர்உமதபூர்வசரித்திரத்தை உள்ளபடிசொன்னால் நானுயிரோடிருப்பேன் இல்லாவிட்டால் நான்பிராணத்தியாகம்பண்ணிவிடுவேனென்று உறுதியாகச்சொல்ல அதற்குசந்தகேசரியும் இவளநமது ஸாமலோபற்றிற் றுஉடன்பட்டவளல்லாமல் வேறல்லவே ஆதலால் இவளிடத்திற்சொல்லவேண்டும் அப்படிசொல்லாதிருப்போமானால் ஸ்திரீஹத்திதோஷம் உண்டாகும்போல இருக்கின்றதென்று ஆலோசித்துக்கொண்டு அந்த சமுத்திரவல்லியைப்பார்த்து நீஇவ்வளவுநிர்ப்பந்தமாகக்கேட்கின்றபடியாலே உண்மையைச்சொல்லுகிறேன் கேள் அதென்னவென்றால் என்னுடையபட்டணம்மல்லிகார்ச்சுனபுரம் என்பிதா பல்லவராஜமகாராஜன் என்தாயார்பதுமினி என்சிறியதாயார்மந்தாகினி என்தமயன் அட்சயகேசரி இப்படியெல்லாமிருக்க என்சிறியதாயாராகியமந்தாகினி புர்ச்சகளத்திப்பிள்ளைகளென்னிறவிரோதத்தினால் மகாடோய்த்தான் விளையாடுகிறதற்குக்கவரிமான்பிடித்துத்தரவேண்டுமென்று என்னையும் என்தமயனையுமழைத்துவசனாபிகலக்ககட்டமுதுகட்டிக்கொடுத்துஉபசாரமாகச்சொல்லக்காக்கோடகவனத்திறகனுப்பநான்கள்போயவன் அலைந்துஉக்கவனமுழுதுந்தேடிக்கவரியானைக்காணாமல் வேசரப்பட்டிருக்கிச்சாதத்தையவிழ்த்தபோது எங்களுக்குஒருபிராமணர்உபதேசித்திருந்தபடி ஒருபிடிசாதத்தையள்ளி காக்கைமுன்னேவைக்க அதைத்தின்றஅந்தகாக்கைஇறந்துபோனதினால் கட்டுசாதத்தையெறிந்துவிட்டு நம்முடையசிறியதாயார்செய்தவஞ்சனையைபார்த்தையாவென்றுஎங்கள்விதியைநொந்துக்கொண்டு அப்பால்கொஞ்சத்தூரங்கடந்துபோய்ஒருஆலவிருட்சத்தினிழலிலிருந்தோம் அங்கேஒருபட்சி

யகப்பட்டது அந்தப்பட்சியின்மகிமை வெளியால்தெரிந்துக்கொண்டு
அவர்சொன்னபடி காண்ஈரகும் எங்கமயனுட னுயோகப்புசித்தோம்
பற்பாரென்தமையனுக்குத்தண்ணீர்கொண்டுவரும்படி அவனைவிட்டுப்
பிரிந்துபோயிருந்தேன் அவ்வேளையிலயமுறுபுரியிலிருந்து பட்டத்து
யானைவந்து அவனையெடுத்துக்கொண்டுபோய் ராசாவாக்கவைத்தது

அவர்போகும்போது எனக்கடையாளந்தெரியும்படி வழிமுழுது
ந்தழைகளை புருவிப்போட்டுக்கொண்டுபோனர் நானும் உடனேவந்து
அண்ணனைக்காணாமல் துயரப்பட்டு இப்படியும்விதியிருந்ததாலென்
று அழுதுக்கொண்டு தழைபடையாளப்படி நடந்துபோய் அந்தப்பட்
டணத்திற்குச்சமீபத்திலொரு ஆலவிருட்சநிழலில் உட்கார்ந்துகொண்
டேன்சகல பூர்வசாத்திரமெல்லாம்நினைத்துக்கைத்தேன் அந்தப்பட்சியி
ன்சிறகைதின்னமகத்துவத்தினால் என்வாயிலிருந்துபத்துபடி மாணிக்
கம்விழுந்தன அவைகளைச் சந்தோஷமாயெடுத்துமூட்டைகட்டிக்கொ
ண்டு யமுறுபுரிகடைத்தெருவிற்போய் இந்தக் கோமுட்டியிடத்தில்
அந்தமாணிக்கமூட்டையை அரிசிமூட்டையென்று சொல்லி வைத்து
விட்டு காண்று நலனவையார்வீட்டிலிருந்தேன் பிறகுசிலநாள்பொறுத்
து அக்கயமுறுபுரிக்கு என்தமையனுடைய அச்சயகேசரியைக்காணவே
ண்டி இந்தகோமுட்டியிடத்திற்குவந்துமேம்படிமூட்டையைக்கேட்ட
மாத்திரத்தில்என்னைப்பிடித்துச்சிறைச்சாலையில்வைத்தான் அப்படிஒ
ருவருஷகாலமிருந்து ஒருநாள்கோமுட்டியைப்பார்த்து ஐயாநீர் என
னைவிடுவித்துவிட்டால் நீர்சொன்னவேலையை செய்துக்கொண்டிருக்கி
றேனென்றுசொல்ல அவனும்அதற்குச்சம்மதியாய் என்னைவிடுவித்து
விட்டான் அன்றுமுதல அவனுக்கு வழியக்காரனு யிருக்கிறேன்.

இப்படியிருக்க அந்தக்கோமுட்டியும் பெண்தமையனுடைய கலி
யாணத்திற்காக சிலசாமான்கள்கொள்ளவேண்டி இந்தப்பட்டணத்தி
ற்குக்கப்பலேறிவந்தான் நானும்வந்திருக்கிறேன் இவ்விடத்திலேநடந்தபி
றகு நடந்தசங்கதிதான் உனக்குத்தெரிந்திருக்குமேயென்று சத்தகே
சரிசொல்ல அதுகேட்டுசமுத்திரவல்லியும் சந்தோஷசமுத்திரத்தில்
முழுகினவளாய்ப்பரவசப்பட்டிருந்தாள் அப்பால்சத்தகேசரியு மாரண்
மனைக்குள்ளிருக்க சிங்காரவனத்தைச்சுற்றிஉலாவிக்கொண்டிருக்கும்
போது அவ்விடத்திலுள்ள குளத்திலிருக்கும் ஒருமுதலையைப் பெரு
ம்பாம்புபிடித்துக்கொள்ள அந்தமுதலையும் சத்தகேசரியைப்பார்த்து
இந்தவேளை என்பிராணனைகாப்பாற்றினால்நான்ஒருவேளைஉன்னுடை
யஆபத்திற்கு உதவிசெய்வேன் என்றுசொல்லஅவன் அதனுடையபா
ஷை தெரிந்தவனுகையால் மொதாமென்று தன்னுடைய தொடைச்ச
தையையறுத்து அந்தப்பெரும்பாம்புக்கு முன்போட்டான் அந்தப்
பாம்பும் இந்தச்சதையைக்கவ்விக்கொண்டு முதலையைவிட்டுவிட்டது
அப்பால்சத்தகேசரியும் அரண்மனைக்குள்ளே சமுத்திரவல்லியிடத்

நிற்குப்போக அவனுக்கிடையிலே காயமென்னவென்றுகேட்க அந்தக்கவன் ஒருமுதலையைப் பெரும்பாய் பிடித்துக்கொண்டது அதற்கு இந்தச்சதையை யறுத்துப்போட்டு முதலையை விடுவித்தேன் என்று சொல்ல அதுகேட்டு இதுவும்சிவகாருண்ணியந்தானென்றெண்ணிக் கொண்டு சமுத்திரவல்லியுஞ் சத்தகேசரியைப்பார்த்துநீர்மறுபடியும் உம்முடையபூர்வோத்திரத்தை நன்றாய்ச்சொல்லுமென்றுகேட்க அவன்சொல்லும்பொழுதே ஒன்றுவிடாமல் ஒரு சிறியபுத்தகத்தில் எழுதிக்கொண்டு தானுடுத்திருக்கிற சேலையின் தொங்கலத்தில் வைத்துப் பத்திரம்பண்ணினாள்.

இப்படியிருக்க பட்டணசெட்டியும் தான்வாங்கவேண்டியசாமான்களெல்லாம்வாங்கிக் கப்பலேற்றிக்கொண்டு தானும் பிரயாணமாய் ஊழியப்பயலாகிய சத்தகேசரிக்குச்சொல்லியனுப்ப அவனும்தன்பெண்சாதியாகிய சமுத்திரவல்லியையழைத்துக்கொண்டுதன்மாமனாகிய ஆதிபராசனுக்கும்மாமியார் கெங்காபவானிக்கும் மச்சினன்சகாதேவனுக்கும் மற்றுமுள்ளசனங்களுக்குஞ்சொல்லி அவர்களிடத்தில்உத்தரவும்பெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டுப் பட்டணசெட்டியிடத்திற்குவந்து அவனோடுகூடக் கப்பலேறிச் சிலதூரம்வருகையில் அந்த மூடசிகாமணியாகிய பட்டணசெட்டியும்பதிவிருதாசிரோமணியாகிய சமுத்திரவல்லியினுடைய சௌந்தரியாதிகுணங்களைக்கண்டுமோகாந்தகாரனாய் அந்தக்கப்பலின்இரண்டாந்தட்டிலிறங்கிச் சத்தகேசரியையழைத்துக் கபடசித்தனாய் அடாபயலேஇச்சமுத்திரத்திலொருசெம்புஜலம்மொள்ளென்றுசொல்ல அவனும்மொண்டெடுக்கிறசமயம்பார்த்து இந்தநன்றியறியாப்பாதகனாகிய கொடும்பாவியும் சத்தகேசரிக்கும் பின்னலிருந்து திடுமென்று சமுத்திரத்திற்றள்ளிவிட்டான் அதுகண்டுசத்தகேசரியும் மனஸ்தாபப்படாமல் முன்சொல்லியமுதலையைநினைக்க அப்பொழுதே அந்தமுதலையானது ஓடிவந்து அவனை தன்னுடையமுதுகின்மேலேவைத்துக்கொண்டு யமுனாபுரிப்பட்டணத்திற்சமீபத்திற்கரையோரமாய்க் கொண்டுபோய்விட்டது அப்பால்சத்தகேசரியுஞ்சமுத்திரத்தைவிட்டுக் கரையேறி முன்சொல்லியஔவையார்வீட்டிற்போய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

இவ்விடத்தில் சமுத்திரவல்லியும் தன்புருஷன் சமுத்திரத்தில் விழுந்துபோனதைக்கண்டு ஐயோதெய்வமே நான் இந்தராசகுமாரனைநம்பிவந்தேனே யென்தலைவிதி இப்படியாயிருந்தது எனக்குமங்கலியென்று ஜோதிஷவல்லவர்களெல்லாருஞ்சொல்லியிருக்கிறார்களே அப்படியிருக்க இப்படிப்பட்டகாரணம்வந்து நேரிட்டதென்னவென்று தனக்குத்தானே துக்கித்துக்கொண்டிருக்க பட்டணசெட்டியுஞ்சமுத்திரவல்லியிடத்திற்கு வந்து உன்செய்தி யென்னவென்றுகேட்க அந்தப்பதிவிரதாசிரோமணியும் இவன் எண்ணத்தைத் தெரிந்துகொண்டு ஐயா இனியென்னசெய்கிறது நான்உமதுஊழியப்பயலைவேண்டிச் சந்

கோஷமாய் மாலையிடவில்லை அவன்குதிரைநடத்தினதைக்கண்டோ ந
கருகிய என்தகப்பன் அவன்பிறகேயனுப்பிவைத்தான் அதுவுமல்லா
மல்அவன்றமுத லவனைக்கண்டால் எனக்குமெத்தவும் அருவருப்பாக
வேயிருந்தது இதுவரையிலும் அவன்முகத்தையேதிருப்பிப்பார்த்துநா
ன்பேசினதேயில்லை மேலுமவன் இறந்துபோனதேநல்லதாயிற்று அவ
ன் உம்மைப்பார்க்கிலும் அழகிலும் ஐசுவரியத்திலும்மிகுந்தவனோனா
ன் நீர்சொன்னபடியேகேட்கிறேன் ஆனாலும் எனக்கொருநோன்புண்
டு அந்தநோன்புமுடிய ஆறுமாதஞ்செல்லும் அது முடிந்தவுடனுட
மேபேசுகிறேன் அதுதப்பினாலென்தலை ஆயிரஞ்சுக்கலாய்வெ
டிக்குமென்றுசொல்ல அதற்கந்தமூடனும் அப்படியே யாகட்டுமென்
றுசம்மதித்து யமுனாநதியின்கரையில்வந்துசேர்ந்து கப்பலைவிட்டிறங்
கிமகாசந்தோஷத்துடனே தன்னுடையவரண்மனைக்குப்போய்சமு
த்திரவல்லியை வேறேஒருஅரண்மனையில்வைத்துபத்துபேர்தாதிமார்
களைவைத்துச்செலவுக்குலட்சம்பொன்னுங்கொடுத்தனுப்பித்துவரு
கிறகாலத்தில் சத்தகேசரியும் ஒருநாள்ஒளவையாரையழைத்து அம்மா
இப்போது இந்தப்பட்டணத்தில் ஏதாகிலு மதிசயமுண்டாவென்று
கேட்க அவளும்அப்பாவேறொதிசயமுமில்லை யிந்தப்பட்டணசெட்டி
யார்தான் சமுத்திரத்திற்குப்போயிருந்தவிடத்தில் யாரோஒருகன்னி
கையைக்கொண்டுவந்து ஒருஅரண்மனையில்ராணிவாசமாய்வைத்திரு
க்கிறார் அவளைப்பார்த்தால தேவகன்னிகைபோலிருக்கின்றது அவள்
பேரோசமுத்திரவல்லியாம் அவளுக்குச்சண்பகவதனியென்கிறஆண்
டிச்சி புஷ்பச்செண்டுகட்டிக்கொண்டுபோய்க்கொடுக்கிறாள் அந்தஆ
ண்டிச்சிக்கு ஒருசரிகைசேலையும்நூறுவராகனும் இரண்டுதினத்திற்கு
முன்பு அந்தக்கன்னிகையானவள் வெகுமதிசெய்ததென்றுசொல்ல
அதுகேட்டுச்சத்தகேசரியும் தன்பெண்சாதியானவள்உயிரோடேவந்து
சேர்ந்தாளேயென்று சந்தோஷப்பட்டு நாம்இவ்விடத்தில் உயிரோடி
ருக்கிறசெய்தி யவளுக்குத்தெரியவேண்டுமென்று நினைத்து அந்தப்பூ
வாண்டிச்சி வீட்டிற்குப்போக தம்பிநீயார் என்வீட்டிற்குவந்த காரிய
மென்னவென்றுகேட்க சத்தகேசரியும் அம்மா நான் உத்தரதேசம் எ
னக்கொருவருமில்லை எனக்குப் புஷ்பமாலை கட்டத் தெரியுமென்று
சொன்னதுகேட்டுஅவளும் ஆனால்நல்லதாயிற்று எனக்கும்வேறேபிள்
ளையில்லாதபடியால் நீஎன்னிடத்தில்தானேயிருந்தால் உனக்குக்கலி
யாணஞ்செய்வித்து என்கையிலிருக்கிற ஆஸ்தியையுங் கொடுக்கிறே
னென்று ஆதரவாகச்சொல்லி சாப்பாடுபோட்டு பிற்பாடு புஷ்பத்தை
யெடுத்துகொடுத்துச் செண்டுகட்டச்சொல்லசத்தகேசரியும்மகாஉன்
னதமாக ஒருசெண்டுகட்டிக்கொடுக்க அதனைவந்தப்பூவாண்டிச்சியெ
டுத்துக்கொண்டுபோய் சமுத்திரவல்லியிடத்திற்கொடுக்கயவளும்அ
தைப்பார்த்து ஓயம்மா இதுவெகு நேர்த்தியாயிருக்கின்றதே இதுயார்
கட்டியதென்றுகேட்க ஆண்டிச்சியும் ஓ அம்மா இதுவரையில் என்மக

னொருவன் கங்காயாத்திரைக்குப்போயிருந்து இப்போதுவந்திருக்கிறா
ன் அவன்கட்டிக்கொடுத்தானென்றுசொல்ல அதுகேட்டுஅவளும் சந்
தோஷமாய் அம்மாநித்தியமும் அவனையேகட்டித்தரச்சொல்லிவாங்
கிக்கொண்டுவாவென்று அப்பட்டிப்பாவை-தங்கக்கன்-மோதிரம்- ஆஸ்
திகடகமுதலான வெகுமானங்கள்கொடுத்தனுப்பினுள் ஆண்டிச்சியு
ம் அவைகளைச்சந்தோஷமாய்வாங்கிவந்து சத்தகேசரியிடத்திற்கொடு
த்து அய்யா இன்னமும்நேர்மையாகக்கட்டித்தாவென்றுசொல்ல சத்
தகேசரியுஞ்சந்தோஷமாய்ச் சமுத்திரவல்லிக்குத் தன்மோதிரத்தைப்
புஷ்பச்செண்டில்வைத்துக் கட்டிக்கொடுக்க அதை ஆண்டிச்சிவாங்கி
க்கொண்டுபோய்ச் சமுத்திரவல்லியிடத்திற்கொடுக்க அவளும்அதை
வாங்கித் தன்புருஷன்மோதிரத்தைக்கண்டு இரண்டுகண்களிலுமொற்
றிக்கொண்டு ஆண்டிச்சியையழைத்து அம்மா உன்மகன் கெட்டிக்கா
ரன் அவனுக்கு ஸ்நானத்திலும் போசனத்திலும் குறைவுபடுத்தாமல்
சௌக்கியமாய் நடப்பித்துவாவென்றுசொல்லியனுப்பிவிட்டுச்சந்தோ
ஷமாய் நமதுபுருஷன்சமுத்திரத்தில்விழுந்து பிழைத்துவந்தாரல்ல
வா நமதுபாக்கியமேபாக்கியமென்றுநினைத்துக்கொண்டு பட்டணசெ
ட்டியையழைப்பித்து ஐயா எனக்குநோன்புமுடியவேண்டும் நான்
எத்தனைநாளைக்குச்சிறையிருப்பேனென்றுசொல்ல அதற்குப்பட்டண
செட்டியும் சந்தோஷப்பட்டு உன்னுடையநோன்புமுடிகிறதற்குஎன்
னலாகவேண்டியதென்னவென்றுகேட்க அதற்குஉத்தமியாகியசமுத்
திரவல்லியும் அந்தமூடனைப்பார்த்து ஆயிரம்பிராமண போசனமும்
ஆயிரமயேஸ்வரபூசையுஞ்செய்வித்து சிவாலயம் பிர்மாலயங்களுக்கு
அபிஷேகம்பண்ணுவித்துக் கோதானம் பூதானங்கன்னிகாதானமுத
லிய சோடசதானங்களுஞ்செய்வித்துப் பிறகுநான் காவேரிக்குப்போ
ய் ஸ்நானஞ்செய்து சிவதரிசனமும் விஷ்ணுதரிசனம்பண்ணிக்கொண்டு
அரண்மனைக்குவந்து அந்தவிரதமகிமையை வாசிக்கவேண்டும் அதை
வாசிக்கும்போது இந்தயமுனாபுரிக்கதிபராகிய இராசாமந்திரிபிரதானி
முதலிய சகலமானபேர்களையும்வரவழைக்கவேண்டுமென்றுசொல்ல
ப்பட்டணசெட்டியும் அப்படியேநல்லதென்று பொக்கிஷத்தைத்திற
ந்துநாலுலட்சப்பொன்னெடுத்துமுன்சொல்லியநானாமகாதானங்கள்
சத்தகருமங்களையெல்லாஞ்செய்வித்துப்பின்பு சமுத்திரவல்லியும் கா
வேரிஸ்நானஞ்செய்து சிவதரிசனமும் விஷ்ணுதரிசனமுஞ்செய்துமு
டித்துக்கோமுட்டியைப்பார்த்து நான்இப்போதுவிரதமகிமையைவா
சிக்கவேண்டும் அதைக்கேட்கிறதற்குச்சகலமானபேர்களையும்நான்சொ
ன்னபடியழைப்பித்திராவென்றுகேட்கக் கோமுட்டியும் இந்தக்ஷண
மேபோய் அழைத்துவருகிறேனென்று பத்துமாணிக்கத்தை யெடுத்
துக்கொண்டு அட்சயகேசரிமகாராசனானவர்கொலுவாயிருக்கும்போ
து அவருடையசமுகத்தில் காணிக்கையாகவைத்துசுவாமிராசசேகரா
எனக்கொருவிண்ணப்பமிருக்கின்றது அது யென்னவென்றால் என்

பனைவியாகிய சமுத்திரவல்லியாரும்ஒருவிரதம்அனுஷ்டித்திருந்தாள் அந்தவிரதம் இன்றோடேமுடிந்தது அந்தவிரதமகிமையைக் கேட்பதற்கு தேவரீர்முதலானசபஸ்தானத்திலுள்ள அனைவரையும் அழைப்பிக்கச்சொன்னாள் ஆகலால்தாங்களெல்லாரும்வரவேண்டுமென்றுசொல்லஅதகேட்டுஅட்சயகேசரியும் அப்படியேவருகிறோமென்று சம்மதித்துச் சகலமானபேரும்வந்துசேர்ந்தார்கள்.

அதுகண்டு சமுத்திரவல்லியும் குறைச்சேதிரைபோடச்சொல்லி அந்தத்திரைமறைவிலதான்உட்கார்ந்துக்கொண்டுதிரைக்குப்புறப்பாக ஒருகட்டில்போடுவித்து அதன்மேல்இராசாவைஉட்காரச்செய்து பந்திப்பிரதானிகள்முதலான சகலஜனங்களையுங்கீழேஉட்காரப்பண்ணித் தன்னெதிரேஒருதீபமவைத்துக்கொண்டு முருகுதன் சொப்பசத்திக்வைத்திருக்கும் புத்தகத்தையெடுத்துச் சந்தோஷமாய்அவிழ்த்துத்திடத்தின்முன்பாகவைத்துக்கொண்டு அந்தசபையைப்பார்த்துஐயா இராசசேகரா நீர்சகலசனங்களையும் இரட்சித்து வருகின்றபடியால நீரேசகலருக்குந் தாயுந்தகப்பனுமானபடியால் எனக்கும் நீர்பாரமுகமாயிராமல் ஏகபனதாயதைரியத்துடனேயிருந்துசற்றேசெவிகொடுத்துக்கேட்டருளவேண்டும்அதுவல்லாமல் இப்போதுஇவ்விடத்திலவந்திருக்கிறசனங்களில் ஒருவரையும்வெளியிற்போகவொட்டாமல் கதவைச்சாத்திமுத்திரைவைத்து அக்கமுத்திரையடையாளத்தைநீரேவைத்துக்கொள்ளுமென்று திட்டப்படுத்தி அப்பாலந்தப்புத்தகத்தை அதியோட்க்கமாய் வாசிக்கத்தொடங்கினாள் கேளுமையாராசாவே மல்லிகார்ச்சுனபுரமென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்தைப் பரிபாலனம்பண்ணப்பட்ட பல்லவராயனென்றொருஇராசாவுண்டு அந்த இராசாவுக்கு இரண்டுதேவிமார் அவர்களில் மூத்தவளுக்கு அட்சயகேசரியென்றும் சத்தகேசரியென்றும் இரண்டுபிள்ளைகளுண்டு இப்படியிருக்க அந்தராசாவினுடையஇளையபெண்சாதி மங்காங்கினியும் வெகுநாள் கெர்ப்பமில்லாமலிருந்து பகவத்சங்கற்பத்தினால் ஐந்துமாதக்கெர்ப்பவதியாயிருந்தாள் அப்போது அவளும் மூத்தவள்பிள்ளைக்குப்பட்டங்கட்டுவதேயல்லாமல்தன்வயற்றில்பிறக்கப்போகிறபிள்ளைக்குப்பட்டங்கட்ட[illegible]ென்றுயோசித்து நாம் அந்த இரண்டுபிள்ளைகளையுங்கொன்றுவிடவேண்டுமென்று உபதேசித்துக்கொண்டு ஒருநாள் இராசனுந்தானும் ரதிகேளியிலிருக்கும்போது இராசனைப்பார்த்து நீர்சுகமாயிருக்கும்போதே உமதுபிள்ளைக்குக்கலியாணஞ்செய்வித்துக்குடாபிஷேகஞ்செய்து கண்குளிரப்பார்த்து சந்தோஷமடையாமல்சும்மாயிருக்கிறது தருமமாவென்று கபடமாகச்சொல்ல அந்தக்கபடவார்த்தையைக்கேட்டு இராசாவும்மெய்தானென்று சந்தோஷத்துடனே அந்தப்பிள்ளைகளையழைத்து அப்பா நீங்கள் இன்றுமுதல் உங்கள்சிறியதாயார்சொற்படி நடந்துக்கொண்டு அவளிடத்திலதானேயிருங்களெ

ன்று திட்டம்பண்ணி அந்தப்பிள்ளைகளும் அப்படியே நடந்துவருங்கா
லத்தில் ஒருநாள் மந்தாகினியும் கபடமாய் அந்தப்பிள்ளைகளிடத்தில் வ
சமாயிகலந்த கட்டமுதைக்கட்டிக்கொடுத்து அக்கவிமான்கொண்டுவரும்
படி காரக்கோட்டவனத்திற்கு அனுப்பிவைத்தாள் அவர்களுமதை வா
ங்கிக்கொண்டு சிறிய தாயாரிடத்தந் செலவுபெற்றுக்கொண்டு சகல ஆ
யுதமுன்னிட்டாளுடனே புறப்பட்டுக்காரக்கோட்டவனத்திற்குப்போய்
களியாளைக்கண்டுபிடியாமல் வேசாறினவர்களாய் அந்தக் கட்டமுது
மூட்டையையவிழ்த்து ஒருபிடிசாதத்தையெடுத்துச் சிறுவயதில்ஒரு
பிராமணர் தங்களுக்குபதேசஞ்செய்தபடி ஒருகாக்கைமுன்வைக்க
அதைத்தின்றமாத்திரத்தில் அந்தக்காக்கை யிறந்துபோனதைக்கண்டு
அந்தச்சாதத்தையெறிந்துவிட்டு அப்பால் இரண்டடிதூரம்போய்ஒரு
ஆலவிருட்சநிழலிற்படுத்திருக்கும்போது ஒருபட்சிஅகப்பட அந்
தப்பட்சியின்மயிலை வேட்டுவலகைக்கு அதினைச்சரைசஒருவருமுட
லொருவருமாகப் புசித்துப் பசிதணிந்து மூத்தப்பிள்ளையானவர் தண்
ணீர்கட்க இளையவரும் தண்ணீர் காண்கவரும்படி தனியேபோயிரு
க்கப் பட்டணத்து யானையானது யமுனாபுரியிலிருந்துவந்துபட்சியின்
உடலைப்புசித்திருக்கிறமகிமையினால் அட்சயகேசரியையெடுத்துக்கொ
ண்டுபோய்ச் சிம்மாசனத்திலவைத்து இராசாவாகச்செய்தது இவ்வி
டத்தில் சத்தகேசரியுந்தண்ணீர்கொண்டுவந்து தமையனைக்காணாமல்
விசனப்பட்டுபிற்பாடுஅட்சயகேசரிபோகும்போததம்பிக்குத்தெரிய
வேண்டுமென்று உருவித்தெளித்துக்கொண்டுபோனதழைகளை அடை
யாளமாய்ப்பற்றிநடந்துபோய்யமுனாபுரிக்குச்சமீபத்திலிருக்குமொரு
ஆலமரத்தடியில்உட்கார்ந்துத் தாங்கள்பிறந்ததும் வளர்ந்ததும் சிறிய
தாயார்செய்ததும்நினைத்து விதிப்பயன்இப்படியாயிருக்கதென்றுக
ணைத்தமாத்திரத்தில் கவர்மையேகப்பட்சியினுடலேதின்னமகத்துவத்தி
னால் வாயிலிருந்து ஒத்தபடிமாணிக்கம்விழுந்தன அவைகளையெடுத்து
மூட்டையாகக்கட்டிக்கொண்டு யமுனாபுரியின்கடைவீதி வழியேவந்து
சொற்னைறப்பாக்குவிற்றுக்கொண்டிருக்கிறஅற்பமூடசெட்டியையும் அ
வன்பெண்சாதி மூக்கியுங்கண்டு அந்தமாணிக்கமூட்டையை அரிசிமூட்
டையென்று அவர்கள்கையிற் கொடுத்துவிட்டு ஒளவையார் வீட்டிற்
போயிருந்துதன்தமையன்ராசாவாயிருக்கறசங்கதியைத்தெரிந்துகொ
ண்டுசிலநாள்கழித்துத் தன்தமையனைப்போய்க்காணவேண்டுமென்கிற
அபேட்சையால் கொமுட்டியிடத்திற்குப்போனார்ஐபாசத்தகேசரியும்
கொமுட்டியிடத்திறகுப்போய் அவன் அரண்மனையும் ஆஸ்தானத்தை
யுமாவடு அதிசயப்பட்டு அவனுக்குமுன்னிருந்தசிறுமையும்இப்போ
தண்டாயிருக்கிறபெருமையும் நினைத்து ஆச்சரியப்பட்டானென்றுவா
சிக்கையில் மட்டணசெட்டியும் மயாதுபோனன்அட்சயகேசரியுந்திடு
க்கிட்டுச் சமுத்திரவல்லியைப்பார்த்து அந்தமாணிக்கமூட்டையென்
கேதம்பியென்கேயென்றுகேட்கமாணிக்கமூட்டையவாங்கிக்கொண்டம

னி தனிக்கேயிருக்கிறான் மாணிக்கமூட்டையு மிருக்கிறது தம்பியெங்கெபோனூரோவென்றுசொன்னமாத்திரத்தில்தம்பியைக்காணுமென்றுவிசனப்படுகையில் சமுத்திரவல்லியுமிராசாவைப்பார்த்து நான் முன்னேதானேதைரியமாயிருந்துகேட்கவேண்டுமென்று மனுவுபண்ணிக்கொண்டேனே இப்படி நீர் விசனப்படலாமோ கோமுட்டியைமாத்திரம்பயனப்படுத்துங்களென்றுசொல்ல அப்படியே அவனை ஒருஅறையிலடைக்கச்செய்து அப்பால் அட்சயகேசரியும் சடங்கசெபதி யென்னவென்றுகேட்க சமுத்திரவல்லியுஞ்சொல்லத்தொடங்கினாள்,

ஐயா சத்தகேசரியும் இந்தமூக்கியையக்கண்டு அரிசிமூட்டையைக்கேட்க அதுதெரிந்து கோமுட்டிவந்துசத்தகேசரியைப்பிடித்துச்சிரச்சாலையிலதெருவருஷகாலம் அடைத்துவைத்திருக்க அப்போதவொருநாள்கோமுட்டிசந்தோஷமாயிருக்கும்போது ஐயாநான் உமக்கு என்ன அபசாரஞ்செய்தேனென்று சிறையிலடைத்திருக்கிறீர் என்னைவிட்டுவிட்டால் உமக்குஊழியஞ்செய்கிறேனென்ன அவன் விட்டுவிட்டான் இப்படியிருக்கச் சிலநாள்கழித்து அட்சயகேசரி ராசாவினுடையகலியாணத்துக்குவேண்டியசரக்குகள்வாங்கும்படி சத்தகேசரியை யழைத்துக்கொண்டு அந்தமூட்டைச்செட்டியாரவர் ஒருகப்பலேறி சமுத்திரத்திற்குவந்து சாமான்கள் ஜாக்கிரதையாணிக்கொண்டிருந்தான் அப்படியிருந்ததும்தேசத்துராசனும் வெகுநாள்புத்திரனில்லாதிருந்தது பாபலத்தினால் ஒருபெண்ணைப்பெற்றுச் சமுத்திரவல்லியென்றுபேரிட்டுப்பிறவிச்செல்வமாகவளர்த்துப் பருவகாலமானபின்பு அந்தப்பெண்ணைத்தன்குதிரைலாயத்திலிருக்கிறஆகாயப்பறவையென்கிறபுரவியின்மேலேறிநாலுவீதியும்நடத்துகின்றவனுக்குமாலையிடுகிறதென்றுஆராட்டிமணிகட்டியிருந்தார் அந்தச்செய்தியைச்சத்தகேசரியுங்கேள்விப்பட்டு கோமுட்டியையறியாதபடி இராத்திரிஇரண்டுசாமத்திற்குமேலதி ராசாவின் குதிரைலாயத்திற்புகுந்து ஆகாயப்பறவையின்மே லேறிக்கொண்டு பட்டணமுழுதுஞ்சாரிவந்து ஒருவருக்குந்தெரியாமல் குதிரைலாயத்திற்கட்டிவிட்டுக் கோமுட்டிமடத்திருக்குந்திரைச்சீலைக்குள்ளின்னுகப்போய்ப்படுத்திருந்தார் இந்தச்செய்தி அர்காசனறிந்துதன்மகளிடத்திற்சொல்ல அவளுமப்படிப்பட்டகுதிரைநடத்தினமகாபுருஷனைவரோ அவனைநான்பார்க்கவேண்டும் அவனை என்னிடத்திற் கழைத்துவாருங்களென்றுசொல்ல அந்தப்படியேஇராசனுக்குதிரைலாயிலங்காத்திருக்கிறவர்களுக்குத்திட்டம்பண்ண அவர்களும் மறுநாள்கண்டுபிடித்துஅழைத்துக்கொண்டுவந்து இராசாவின்சமுகத்தில்விடஅவரும்தன்மகளுக்கெதிரேவைத்துக்கொண்டுசத்தகேசரனைப்பார்த்து நீயாருடையகுமாரன் உன்பெயரென்னவென்றுகேட்க அதற்குசத்தகேசரியும் நான் ஒருதவிட்டுச்செட்டிமகன்பட்டணச்செட்டியினுடைய ஊழியனென்றுசொல்லப்பிற்பாடுசெட்டிசமாதிவின்பேரில்சமுத்திரவல்லியை விவாகம்பண்ணிக்கொடுத்தவுடனே சரக்குகளெல்லாஞ்சேர்ந்

துக்கொண்டு கோமுட்டி கப்பலேறும்போது சொல்லியனுப்பச் சமுத்திரவல்லியும் சத்தகேசரியும் வந்து கப்பலேறி நடுச்சமுத்திரத்தில் வரும்போது கோமுட்டியும் மேக்கர்த்தகாரனுக்குக் கபடமாகச் சத்தகேசரியைத் தண்ணீர்மொள்ளச்சொல்லிச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டானென்று வாசிக்க அந்தச்சொல்லும்போது அக்ஷயகேசரியுந் திடுக்கிட்டு ஐயோ தெய்வமே தம்பியைக்கொன்றுவிட்டானேயென்று எழுந்திருந்து கோமுட்டி வீட்டைக்கொள்ளையிடுவித்து அந்தக்கோமுட்டியை மொட்டையடித்து அவனைக் கழுதைமேலேற்றிப்பட்டணத்தைச் சுற்றிவித்துக் கழுவிலேற்றும்படி செய்து நானுஞ் சந்திரசயுகத்தைத் தழுவிக்கொண்டு வெட்டிக்கொள்ளப்போகையில் சமுத்திரவல்லியுந் திடுக்கிட்டெழுந்திருந்துபோய் இராஜாவினுடைய கையைப்பிடித்துக்கொண்டு நான் முன்னுலேதானே திடச்சித்தமாய்க்கேட்கவேண்டுமென்று சொல்லியிருக்க இப்படிச்செய்யலாமா உம்முடைய தம்பி சத்தகேசரி இராஜாவும் முன்பு அமிர்தவல்லியென்னும் ஒளவையார்வீட்டிலிருந்து இப்போது சவ்வபகவதியென்கிற பூவாண்டிச்சிவீட்டில் சுகமேயிருக்கிறார் நீர் அஞ்சவேண்டாமென்று சொல்ல அதுகேட்டவுடன் சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கினவனாய்த் தகுந்தசேவகரையனுப்பித் தம்பியையழைத்து வரச்சொல்லி வந்தபிற்பாடு தம்பியைப்பார்த்து அப்பா தம்பி நீ எப்படிப் பிழைத்துவந்தாயென்று வாய்விட்டழுது அவனை மார்போடணைத்துக்கொண்டு நீ இதுவரையிலெங்கேயிருந்தாய் சகலசெல்வமும் உன்னால் வந்திருக்க முட்டாளாகிய கோமுட்டியைப்போல நானும் துற்புத்தியினால உன்னை நினையாமல் ஐஸ்வரியத்தினால் கெர்வித்திருந்தேன் உன்னைச்சமுத்திரத்தில் தள்ளிவிட்டானே நீ எப்படிப் பிழைத்துவந்தாய் சற்றே உன் வாயைத்திறந்து சொல்லுமென்று கேட்க சத்தகேசரியுந் தமயனைப்பார்த்து அண்ணா முன்னமே நான் ஒரு முதலைக்கு உபகாரஞ்செய்திருந்தேன் அந்த முதலையினுதவியால் பிழைத்துக்கரைசேர்ந்து சவ்வபகவதி வீட்டில் வந்திருந்து சமுத்திரவல்லி என்கையிற்கொடுத்திருந்த மோதிரத்தைப் பூச்செண்டில் வைத்துக் கட்டியனுப்பினேன் அதைத்தெரிந்துகொண்டு சமுத்திரவல்லியும் என்னையழைப்பிக்கும்படி உங்களெல்லாரையுமழைப்பித்துப் பிரசங்கம்பண்ணினாள் உங்களுடைய முகத்தைப்பார்க்க இத்தனைநாள் சென்றது இனிமேலாகிலும் நமது மல்லிகார்ச்சுனபுரத்திற்குப்போகலாமென்று சொல்ல அதைக்கேட்டு அட்சயகேசரியும் நல்லதென்று சமுத்திரவல்லியைப்பார்த்து அம்மா பாக்கியவதி உன்னுடைய பதிவிரதாதர்மத்தினால் என் தம்பியும் பிழைத்துவந்தான் எங்கள் வம்சமும் கீர்த்தியடைந்ததென்று அநேகவிதமாக உபசரித்து அப்பால் தம்பியையும் சமுத்திரவல்லியையுமழைத்துக்கொண்டு மந்திரிபிரதானிகளுடனே அரண்மனைக்குப்போய்ச் சந்தோஷமாயிருந்தார்கள்.

இப்படியிருக்கவொருநாள் சமுத்திரவல்லியும் தன் புருஷனாகிய சத்தகேசரியைப்பார்த்து உம்முடைய தமையனாகிய அட்சயகேசரிராஜா

வுக்குக் கலியாணம்பண்ணவேண்டுமென்று தானுஞ்சத்தகேசரியம்புறப்பட்டுத் துவாரகாபுரிக்குப்போய் மகேந்திரராசாவையும் அவர்தேவியாகிய கர்ப்பூரவல்லியையுங்கண்டு உங்களுடையகுமாரத்தி சோமராங்கினியை யழுனுபுரிபட்டணமாளப்பட்ட அட்சயகேசரிராசாவுக்குக் கொடுக்கிறோமென்று சம்மதித்துச் சொல்லி யனுப்பிவைத்திராளாகையால் கலியாணத்திற்குவேண்டியசகலசாமான்களும் முஸ்திப்புசெய்து சகலதேசங்களுக்கும் முகூர்த்தநிலவாம்பணனி ஓலையெழுதியிருக்கின்றது இப்பொழுது காலைமுகூர்த்தம் பெண்ணை யழைத்துக்கொண்டுபோகவராம்வரவேண்டுமென்றுசொல்லியழுனுபுரிபட்டணத்தில் அட்சயகேசரிஇராசாவின் சமுகத்திற்குவந்து துவாரகாபுரிக்குப்போனதும்கலியாணமுகூர்த்தம் நிலவாம்பணனிக்கொண்டுவந்ததுஞ்சொல்லி அந்தட்சணமேபுரோகிதனையழைப்பித்து முகூர்த்தக்கால்நாட்டி ஆகாயமளாவிடத்தக்கதாய்ப் பந்தலும்போட்டு மேற்கட்டுங்கட்டிச் சித்திரத்திருவிலேகோலமிட்டு அரசாணிக்கால்நாட்டு முஸ்திப்புசெய்து மல்லிகார்ச்சுனபுரிக்கு மனுஷனையனுப்பித்தகப்பனாகிய பல்லவராயஇராசாவையும் தாயார்பத்தினியாளையுஞ்சிறியதாயார்மங்காகினியையும்அழைத்துவரச்சொல்லி ஓலையனுப்பிவைத்தார்கள் அவர்களும் அவ்விடத்திற்குப்போய்ப் இக்காரியத்தைப் பல்லவராயமகாராசாவுக்குத்தெரிவித்து மந்திரிபிரதானிகாரியக்காரர்களாசகலமானபேரையும் அழைத்துக்கொண்டுவந்தார்கள்.

அவர்கள்வந்தவுடனே அட்சயகேசரியும் சத்தகேசரியும்சமுத்திரவல்லியும்எழுந்திருந்து தகப்பனாகிய பல்லவராயஇராசனுக்கும், தாயார்பத்தினி, சிறியதாயார்மங்காகினி, இம்மூன்றுபேருக்கும்இவர்கள் மூன்றுபேரும் சாஷ்டாங்கமாகத்தெண்டன்சமர்ப்பித்தார்கள்.

பல்லவராயஇராசா தன்பிள்ளைகளிரண்டுபேரையுங் கட்டிக்கொண்டு உச்சியைமுகர்ந்துமுத்தமிட்டு அப்பா இதுவரைக்குமெங்கேஇருந்தீர்களென்றுகேட்க மல்லிகார்ச்சுனபுரம் விட்டகாலமுதல் இன்றையவரைக்கும் நடந்தசங்கதிகளெல்லாம் அட்சயகேசரி விபரமாய்ச்சொல்லஅதுகேட்டு இந்தப்பெண் யாரென்றுகேட்க இந்தப்பெண்சுத்த ஆதிபராசாவினுடையமகள சமுத்திரவல்லியென்றுபெயர் இவளைத் தம்பிசத்தகேசரிகலியாணம்பண்ணக்கொண்டுவந்தானென்று சொல்ல அதுகேட்டு வஞ்சனைபண்ணின சிறியதாயாராகிய மங்காகினி பயக்கலங்கிக்கொண்டிருந்தாள் அட்சயகேசரியும் ஏன் பயப்படுகிறாய் எங்களுடைய அதிஷ்டத்திற்கு நீயென்னசெய்தாய் நீ செய்தசகாயத்தைக் கழுத்திற்றாலிகட்டிக்கொடுக்கப்படியினால் உன்பாக்கியத்தினாலெங்களுக்கு இவ்வளவு ஐஸ்வரியமும்வந்தது நீபோய் உன்பிள்ளைகட்டக்கட்டிக்கொண்டிருமென்றுசொல்லித்தைரியப்படுத்தினான் பிறகு முகூர்த்தநாளைத்தினம்பண்ணிப்பிராமணுள் இராசாக்கள சகலமானபேரையும் அழைப்பித்துமணப்பெண்களிடம் ஓமசாந்தியும்பண்ணி அக்கினிசாட்சியாக அட்சயகேசரிக்கும், கோமளாங்கினிக்கும்,கலி

பாணம்பண்ணிமுடித்தது தகப்பனையும் சிறியதாயாரையும் மல்லிகார்ச்சுனபுரத்திற்கு அனுப்பிவிட்டு அட்சயகேசரியும் கோமளாங்கினியும் மதனும்இரதியும்போல வாழ்ந்துகொண்டிருந்தார்கள் இப்படியிருக்கும்பொழுது சத்தகேசரியும்சமுத்திரவல்லியும்உறவின்முறையாருக்கும்கலியாணவிருந்துசெய்யவேண்டுமென்று சகலபேரையும் அழைப்பித்துநளபாகத்துடனே சமையல்செய்து சாப்பாடும்போட்டுத்தாம்பூலமுங்கொடுத்து அவரவர்களரண்மனைக்கு அவரவர்களை அனுப்பிவிட்டு அட்சயகேசரியும்சத்தகேசரியும்இராமலட்சுமணரைப்போலேயும் சமுத்திரவல்லியும் கோமளாங்கினியும் வள்ளியம்மை தெய்வானைபோலேயும் சுகமாய்வாழ்ந்துகொண்டிருந்தார்களென்று பேசாமடந்தையுடுத்திருந்த சேலையானதுசொல்லிற்று.

சேலைசொல்கதை முற்றும்.

———— ※ ————

## கட்டிலின் முதலாவதுகால்சொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கராசாவும் வேதாளத்தைப்பார்த்துபேசாமடந்தைகட்டிலின்முதற்காலுடன்பிரவேசிக்கச்செய்து தான்கட்டிலின்முதற்காலைக்குறித்துப் பேசாமடந்தைநான் உம்முடனேபேசுகிறதில்லையே அவளுக்குமனதுவந்தாலல்லவோபேசுவாள்நீயாகிலும்ஒருகதைசொல்லென்றுகேட்க அதுகேட்டு கட்டிற்காலும்ஒருகதைசொல்லும் பேசாமடந்தைஎன்மேலேறிக்கொண்டிருக்கிறாள் எனக்குநிற்பருகைறந்து நானென்படி கதைசொல்லுவேனென்றுசொல்ல அதுகேட்டுபேசாமடந்தையும் வெட்கிப்போய் கட்டிலைவிட்டெழுந்திருந்து நம்முடையமானம்போயிற்று விக்கிரமார்க்கராசாவுக்குநாம்அடிமையாகிப்போனோம் நம்முடையவிதிப்பயன் இப்படியிருந்ததோவென்று யோசனைசெய்துகொண்டிருக்கும்போது கட்டில் முதற்காலும் விக்கிரமார்க்கராசாவைப்பார்த்து என்னைஒருபொருளாக வெண்ணிக் கதைசொல்லச்சொன்னீரே நான்சொல்லுகிறேன் சற்றேசெவிகொடுத்துக்கேளும் அதெங்ஙனமென்றால் அஸ்திநாபுரமென்றொரு பட்டணம் அதையாளப்பட்டசுந்தவீரஇராசனென்றொருஇராசா அந்தஇராசாவுக்கு சித்திரசேனையென்றொருதேவி அவளுக்குப்பிள்ளையில்லாதிருக்கில் ஒருநாள் சுந்தவீரஇராசா புரோகிதராகியசோதிடர்களையழைப்பித்துத் தமக்குப்பிள்ளையுண்டோ இல்லையோவென்று சாதகம்பார்த்துச்சொல்லச்சொன்னார் அதுகேட்டு ஜோசியர்கள் சாதகத்தைப்பார்த்து உமக்குஏழுபெண்சந்ததியென்றிருக்கிறது ஆகையால் ஒருபிக்க இன்னமுடைய பெண்விசாரித்துக்கலியாணம்பண்ணிக்கொள்ளென்றுசொன்னார்கள் அந்தக்ஷணமே மந்திரியாகியசம்பிரமசேனனையழைத்துப்பெண்கள்விசாரித்துவரச்சொல்லியனுப்பினார் அதுகேட்டுமந்திரியும்அக்ஷேரமேபிரயாணபட்டுமகாராசபுரமென்றொர்பட்டணம்

அந்தப்பட்டணத்தையாளப்பட்ட மதுரேந்திரனென்றொருஇராசர் அ
ந்தஇராசாவுக்குச் சந்தபற்மினியென்றொருதேவி அவளுக்குஆறுபெ
ண்ணுண்டு அந்தப்பெண்களினுடையபெயர் உமாபதி பதுமாபதிரூ
தபதி சாதுமதி சிரோமணி ஆதிபதியென்று ஆறுபெண்களிருந்தார்
களாகையால் அந்த இராசாவைக்கண்டு நம்முடைய இராசனுகிய சுந்
த்வீராசனுக்குப் பெண்களைவேணுமென்றுசொன்னான் அதுகேட்ட
மதுரேந்திரராசனும் நீபெண்களைவேணுமென்றுகேட்கிறதொருபெண்
கேட்கிறவசனமாய்க் காணவில்லையேயென்றுசொன்னார் உமக்கு ஆறு
பெண்பிறந்திருக்கிறதென்று சமாச்சாரங் கேள்விப்பட்டு இராசாவும்
அமரிக்கைபண்ணிக்கொண்டு வரச்சொன்னாரென்றுசொன்னான்

நல்லது ஒருத்தருக்கு ஆறுபெண் ஏழுபெண் கொடுப்பார்களா
நீ உலகத்திலகடவாதகாரியமாய்க் கேட்கலாமோவென்றுமதுரேந்திர
ராசன்சொன்னார் அதுகேட்டு மந்திரியாகியசம்பிரமலோலனும் சுந்த
விராசாவுக்கு ஏழுபெண்விவாகம்பண்ணுகிறதாய் அவருக்குச் சாத
கமெழுதியிருக்கிறது அதற்கு ஒருபெண் கலியாணம்பண்ணியிருக்கி
றார் இனைநாகுறை ஆறுபெண்ணைக்கலியாணம்பண்ணினுல் அப்பா
ல் ஏழுபிள்ளைகள்பிறக்குமென்றுசோசியர்கள்சொல்லியிருக்கிறார்கள்
ஆகையால் உமதுபெண்கள் ஆறையுங்கொடுத்தால் உமக்குவேண்டிய
திரவியமும் சீமையுங்கொடுக்கிறேமென்றுசொன்னார் அதற்கு அப்ப
டியேதருகிறேமென்று மதுரேந்திரராசன்சொல்லஅந்தட்சணமேசெய்
சயதாம்பூலமாற்றிக்கொண்டுபோய்இராசாவுடனேசமாச்சாரஞ்சொ
ன்னுன் அதுகேட்டு சுந்தவீரஇராசாவும் மகாசந்தோஷகாரமாயஅந்த
ட்சணம்கலியாணத்திற்குவேண்டியசாமான்களெல்லாஞ் சீக்கிரதயா
சேகாஞ்செய்யச்சொல்லி மந்திரிக்குத்திட்டமபண்ணப்புரோகிதரை
யழைப்பித்து கலியாணமுகூர்த்தமிலவைாம்பண்ணச்சொல்லித் தேசத்
துராசாக்களுக்கெல்லாம் தாம்பூலம்வைக்கும்படியனுப்பி உறவின்மு
றையாருக்கெல்லாம்தாம்பூலமவைக்கச்சொல்ல அப்படியே தாம்பூல
ங்கொண்டுபோய்வைத்தார்கள் அப்பொழுது உறவின்முறையார்உற்று
ச்சகலமான பேரும்வந்தார்கள் அதன்பின்புமுகூர்த்தத்திற்குப்பந்தக்
கால்நடுகிறநிமித்தம் சமுத்திரத்திற்குப்பத்துகப்பலனுப்பி ஆச்சாவும்தேக்
குமரமும் அழைப்பித்துப் புரோகிதரையழைத்து முகூர்த்தக்கால்நட்
டு மருக்கொழுந்துகளினுல் பந்தலும்போட்டு முத்துப்பவளத்தினுலே
சிங்காரித்து மகரதோரணமுங்கட்டி அரசாணியுநட்டு மணப்பொங்க
லுமிட்டு மந்திரியாகியசம்பிரமலோலன் மகாராசாபுரத்திற்குப்போய்
மதுரேந்திரஇராசனைக்கண்டு பெண்களுக்குப்பரியங் கோடிதிரவியமு
ங் கோடிபொன்சீமையுங்கொடுத்துப் பெண்களைத்தண்டிகையின்மே
லேற்றிக்கொண்டு மதுரேந்திரஇராசனையும் யானைசேனை பரிவாரத்து
டனேகூட்டிக்கொண்டுவந்தான் வந்தவுடனே மாப்பிள்ளைக்கும் பெ
ண்களுக்கும் கலங்கிட்டு மாப்பிள்ளைக்கு ஒருகட்டிலும் பெண்கள் ஆ
றுபேருக்கும் ஒருகட்டிலும்போட்டு ஒமசாந்திபண்ணலிச் சுந்தவீர

இராசனும் மூத்தபெண்சாதியாகியசித்திரரேகையைப் பக்கத்திலிருவை
த்துக்கொண்டு அந்த ஆறுபெண்களுக்கும் அக்கினிசாட்சியாக திருமா
ங்கிலியந்தரித்துப் பிறகுவந்தஇராசாக்களுக்கும் உறவின்முறையாரு
க்கும் சாப்பாடுபோட்டுச் சாப்பிட்டவுடனே மாமனார் மற்றுமுள்ளோ
ரையெருக்கும் வெகுமதிபண்ணி அனுப்பிவிட்டுப் பிறகு தனபெண்சா
திமார்ஏழுபேருடனே சுத்தவீரராசாவும்சுகமாய்வாழ்ந்துக்கொண்டி
ருக்கும்போது சுத்தவீரராசனிடத்தில் ஏழரைநாட்டுச் சனியன் பிர
வேசமாய் அவருடையதர்மமும் பொறுமையும்பார்த்துப்பயந்துவிள
ஞன் அதுகண்டுஇராசனும் சாஷ்டாங்கதெண்டம்பண்ணிவாய்பொற்
றிக்கைகட்டிக்கொண்டுநின்றுர் அப்போது சனிபகவானுக்குச்சந்தோ
ஷப்பிறந்து நான் இளமையில்வரவோ முதுமையில் வரவோவென்று
கேட்க அதற்குத் தன் தாயாகிய உச்சாதேவியையழைத்து இப்போது
சனிபகவானுக்கு எங்கேஸ்தயவுவந்து இளமையில்வரவோமுதுமை
யில்வரவோவென்று கேட்கிறுரென்றுசொன்னுர்.

அதற்குத்தாயாரும் இளையவர்கள் ஆறுபேரும்இதற்குசேல்பெ
றவும் வளர்க்கவுமாயிருக்கிறுர்கள் ஆகையினலே முதுமையிலேவந்தா
ல்நல்லதென்றுசொன்னுள் அதுகேட்டு மூத்தபெண்சாதியாகியசித்தி
ரரேகையும் நான்கெர்ப்பமாகவிருக்கிறேன்எனக்குப்பிள்ளைபிறந்தபின்
வருவதாய்தயவுசெய்யவேண்டுமென்று சனீஸ்வரனைத் துதிக்க அவ
ருந்தயவுபண்ணிஞர் பின்புசித்திரரேகையும் புருஷனைப்பார்த்துச் ச
னிபகவான் இளமையில்தானேவரட்டும் முதுமைமேலேவந்தால் உமக்
குத்தளர்ந்தவயதாயிருக்கும் பெண்கள்ஏழுபேருக்கும் பிள்ளையும்பெ
ண்சனும் சமுசாரம் பெருத்திருக்கும் உமக்குத் தளர்ந்தகாலமாகிப்
போமே இளமையில்வந்தால்நிர்வகித்துக்கொள்ளுவோமென்றுசொன்னுள்,
அதுகேட்டுஇராசாவும் சனிபகவானுக்குத் தெண்டம்பண்ணி நீர் மு
துமையில்வந்தால் நிருவாகஞ்செய்யமாட்டேன். இப்போது இளமை
யிலேதானேவந்தால் நிருவாகஞ்செய்வேன் ஆகையால்என்பெண்சாதி
சித்திரரேகைகெர்ப்பமாயிருக்கிறுள் அவளுக்குப்பிள்ளைபிறந்தபிறகு
வந்து என்னை இரட்சிக்கவேண்டுமென்றுசொல்ல அதுகேட்டுச்சனிப
கவானும் உனக்குப்பிள்ளைதானேபிறக்கும் அந்தப்பிள்ளைக்குக்கலியா
ணம்பண்ணினபின்பு வருகிறேனென்றுசொல்லிப்போஞர் அதன்பிற
கு சுத்தவீரராசனுக்குப்பிள்ளைபிறந்தது அந்தப்பிள்ளையை நாளொரு
மேனியும் பொழுதொருவண்ணமுமாகவளர்த்துச் சகலமான வித்தை
களும் ஆயுதபரிட்சையுங்கற்பித்து அதிவீரராசாவென்று பேருமிட்
டு அந்தப்பிள்ளைக்குக்கலியாணம்பண்ணவேண்டுமென்றுயோசனைப
ண்ண அஸ்தமாபுரமென்றொருபட்டணம் அந்தப்பட்டணத்தையாள
ப்பட்ட அர்ச்சுனகேசரியென்றொருராசன் அந்தராசனுக்குச்சிரோமணி
யென்றொருபெண் அந்தப்பெண்ணைக்கேட்டு அதிவீரராசனுக்குக்கலியா
ணம்பண்ணி அதிவீரராசனும் சிரோமணியும் மதனும் ரதியும்போல

வாழ்ந்துக்கொண்டு இளியபாணம்பண்ணின நாள்முதல் சிரோமணியை விட்டுப்பிரியாமல் ஒருவருஷம்வரைக்கும் அந்தப்புரம்விட்டு வெளியே புறப்படாமல் காமசிந்தையிலே முழுகிப்போயிருந்தான் இந்தச்செய்தி தகப்பனாகிய சுத்தவீரராசனறிந்து பிள்ளை காமவிகாரத்தில் முழுகிப் போயிருக்கிறான் இதைத் தெளியப்பண்ணவேணுமென்று பிள்ளையாகிய அதிவீராசனையழைத்து நாம்வேட்டைக்குப்போகவேண்டும்வா வென்றுசொல்லி அழைத்துக்கொண்டுபோனான் அந்தவேளையிலே மாயாவதியென்கிற இராட்சதன் சந்நியாசிவடிவாய்வந்து சிரோமணியை பிச்சைகேட்கச் சிரோமணியும் வெளியிலேவந்து பிச்சையிடவரத்தான் அதிகண்டு இராட்சதன் ஆகாயமார்க்கமாய்ச்சிரோமணியை யெடுத்துக்கொண்டுபோய்ச் சமுத்திரங்கடந்து இமயகிரிபர்வதத்திலே வைத்துச் சிரோமணியைப்பார்த்துநானிராட்சதனென்று யோசனைபண்ணுதே என்னுடையசொரூபத்தைப் பாரென்றுசொல்லி பதினாறு வயதுள்ள பாலகுமாரனைரூபத்தைக்காண்பித்தான் அதைச்சிரோமணியும்பார்த்து இவன் மாயாவதியெனகிறதற்குத் தப்பிதமில்லையாம் என்னசெய்யப்போகிறோமென்று பயந்து நடுங்கிக்கொண்டு நம்முடைய விதியின்படியிருந்ததோ மூப்பதுநாளகுழந்தையைவிட்டுவந்தோமே அதனைப்படிப்போய்விட்டோமென்று யோசனைபண்ணி இராட்சதனைப்பார்த்து உம்முடைய அழகும் வல்லமையும் யாருக்கு வரப்போகிறது உம்மைப்போலேநாயகன் எனக்குக்கிடைக்குமா ஆனால் எனக்குப்பத்து வருஷத்திற்குஒரேநோன்புண்டு அந்தநோன்பு முடிகிறவரைக்கும் புருஷர்முகம் பார்க்கப்போகாதென்றுசொன்னாளல்லது அப்படியே நோன்புமுடிகிறவரைக்கும் உன்முகம்பார்க்கிறதில்லை நீசுகமாயிருவென்றான் சொல்லிச் சிரோமணிக்குத் தேவையானவஸ்துக்களெல்லாம் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருக்கிறான் இதுமட்டும் நானறிவேனென்றுகட்டிலின்முதற்கால் சொல்லிற்று.

கட்டிலின் முதற்கால்கதை முற்றிற்று.

——o——

11689

கட்டிலின் இரண்டாங்கால்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கனும் வேதாளத்தைக் கட்டிற்காலிற்பிரவேசிக்கச்செய்து கட்டிலின்இரண்டாங்காலைப்பார்த்து நீயாவது ஒருகதைசொல்லென்றுகேட்க அதற்குஇரண்டாங்காலும் வாருமையா விக்கிரமார்க்கராசனே நான்சொல்லுகிறதைக்கேளும் அந்தச்சிரோமணியை இராட்சதனெடுத்துக் கொண்டுபோன செய்தி சுத்தவீரராசனுங் கேள்விப்பட்டுச் சிரோன்மணிக்குக் குழந்தைபிறந்து ஒருமாதமாகவில்லையே அந்தக்குழந்தை எப்படிப்பிழைக்குமென்று அதிககோபமாய்த் தளசேகரம்பண்ணிச் சகலமானபேரையுங் கூட்டிக்கொண்டு இராட்சதனிருக்கிற இமயகிரிபர்வதத்திற்குப் போனார்கள் அங்கேநி இராட்சதனும் சுத்தவீரர்களையும் அதிவீராசனையும் யானைகுதிரை சகலமானபேரையும் கல்லாய்ச் சபித்துப்போட்டான் சுத்தவீரராசனும்

அவனுடையபிள்ளையும் அவனுடையசனமும் முழுகிப்போனசெய்தி அவனுடைய எதிராளியாகிய அஸ்திநாபுரி பட்டணத்திற்குப்படை யெடுத்து புறப்பட்டுவந்து பட்டணத்தைச் சுற்றிக்கொண்டான் அதை ப்பார்த்துஉச்சாதேவியும் சுத்தவீரராஜனுடைய தேவிமார்ஏழுபேரு ம் குழந்தையை யெடுத்துக்கொண்டு இராவிலேதானே புறப்பட்டுச்சிங் காரபட்டணத்திற்குவந்து ஒருதர்மச்சாவடியிலே இருந்தார்கள் அந்த ப்பட்டணத்தையாளப்பட்ட மானபராஜா இராத்திரிபதினைந்துநாழி கைக்குப்புறப்பட்டு நகரிசோதனைப் பார்த்துவருகிறபோது தர்மச்சாவ டியிலேயிருக்கிற சுத்தவீரராஜனுடையதேவிமார் ஏழுபேரும்தாம்பி றந்ததும்வளர்ந்ததும் இராஜாவும்பிள்ளையும்முழுகிப்போனதும் அந்த ப்பட்டணத்தில் தர்மச்சாவடியில்வந்திருக்கிறதும் குழந்தைக்குப்பா லில்லாமல்அழுகிறதுஞ் சொல்லி மெத்தகலங்கியழுது இப்படி யிருக்கிறபோதவன்றுஒருத்தருக்கொருத்தர்விசனப்பட்டுக்கொண்டிரு க்கிறபோதுமானபராஜா கேட்டுக்கொண்டு அரமனைக்கு வந்து பொழுதுவிடிந்தவுடனே மந்திரியையழைத்து தர்மச்சாவடியிலிரு க்கிறசுத்தவீரராஜன்தேவியார் ஏழுபேருக்கும் உச்சாதேவியாருக்கும் எட்டுபேருக்கும் எட்டுபல்லக்கு அனுப்பி அழைத்துவரச்சொன்னார் அப்படியேயழைத்துக் கொண்டுவந்தார்கள் அதன்பின்புஅவர்களுக்கு ஒருவீடுவிட்டு அவர்களுக்குவேண்டியதெல்லாங்கொடுத்துக் குழந் தைபாலுக்குப பத்துபசுவுங்கொடுத்து குழந்தையைப் பத்திரமாய் ப்பார்த்துக்கொண்டுவரச்சொன்னார் அப்படியேகுழந்தையைநாளொ ருமேனியும் பொழுதொருவர்ணமுமாக வளர்த்து அகாசூரனென்று பெயருமிட்டுப்பதினெட்டு பாஷையும் சகலகலைவித்தையும் ஆயுத பரீட்சையுங்கற்பித்து சாமர்த்தியனாக்குவித்தார்கள் அப்படிச்சாமா ர்த்தியனுப்பத்துவயதாயிருக்கும்போதுஒருநாள்பாட்டிமார்ஏழுபே ரையும் அழைத்து என்னுடையதாயாரெங்கே தகப்பனாரெங்கே நீங்க ளேழுபேரும் சபக்கிலேகளா யிருக்கிறீர்களே ஆனபடியால் என்னு டையபாட்டனெங்கேஉள்ளபடிசொல்லுங்களென்றுகேட்கஅதுகேட் டுச்சித்திரரேகையும் நம்முடையபட்டணம் அஸ்திநாபுரிஉன்பாட்ட ன்பேர்சுத்தவீரராஜன் உன்தகப்பன்பேர் அதிவீரராசன்உன்னுடைய தாயார்சிரோன்மணி நாங்களேழுபேருமுனக்குப்பாட்டிமார் உன்னு டையதகப்பன் அதிவீரராஜனும் உன்பாட்டன் சுத்தவீரராஜனும்சே னைகளையழைத்துக்கொண்டு ஒருநாள் வேட்டைக்குப்போனார்கள் அந் தவேளையிலேமாயாவதியென்கிறராட்சதன் சத்தசமுத்திரமுங்கடந்து வந்துஉன்தாயாகிய சிரோன்மணியை ஆகாயமார்க்கமாகஎடுத்துக்கொ ண்டுபோய்விட்டான் வேட்டைக்குப்போனராஜனும்அவர்குமாரனுங் கேட்டு அதிககோபமாய் அரமனைக்குவந்து எங்களுடனேசொல்லி விட்டுத் தநிசசாரம் பண்ணிக்கொண்டு மாயாவதியென்னும் இராக் சதனிருக்கிற இமயகிரிபர்வதத்தை நோக்கிச் சத்த சமுத்திரமுங்க டந்துபோனார்கள் அந்தராட்சதன்கண்டு அதிபெலவானை உன்னுடைய

பருஷன்யாமன் இன்னுஞ்சகலமானபேரும் ஆயுதமுன்னிப்படியே சேனை
ளைசேகரம்பண்ணிக்கொண்டுவருகிறார்கள்பார்த்தையாவென்றுசொல்
லிப்புறப்பட்டு அவர்களுக்கெதிரேவந்து சகலமானபேரையும் கல்லாய்
ச்சபித்துப்போட்டான் அதைச்செய்தி தாயாதிகள்தெரிந்து படையெடுத்
துப்புறப்பட்டுவந்து எங்களைத்துரத்திவிட்டுப் பட்டணத்தைச்சுற்றி
க்கொண்டான் அதைக்கண்டுநாங்கள் உன்னையெடுத்துக்கொண்டு வெளி
யேவந்துவிட்டோம் அப்போதுநீ மூப்பதுநாளையகுழந்தையாயிருந்
தாய் இந்தப்பட்டணத்தில் ஒரு தர்மசாலையிலே வந்துசேர்ந்து அழு
துக்கொண்டிருக்கும்போது இந்தப்பட்டணத்தையாளப்பட்டவரான ப
ராஜா இராத்திரிபதினைந்துநாழிகையில் நகர்சோதனைப் பார்க்கவந்த
வர்நாங்களெட்டுபேருந் தாபத்திரியப்பட்டுக்கொண்டிருக்கிறதைக்கே
ட்டு இன்னாரென்றுதெரிந்துகொண்டு அரண்மனைக்குப்போய்ப்பொழு
தவிடிந்தவுடனே எங்களுக்குப் பேருக்கொருபல்லக்கனுப்பிஅழைத்
துவரச்சொல்லிஒரு அரண்மனையும்விட்டு அன்றுமுதல் இன்றையவரை
க்கும்ஒருகுறைவுமில்லாமல் நடப்பித்துவருகிறாரென்று பாட்டியாகி
ய சித்திரரேகை சொன்னாள் அதாகுமாரனும்அதைக்கேட்டுமகாதுயரம்
பட்டு சவ்வரனைத்தோத்திரம்பண்ணி முகங்கவிழ்ந்துபடுத்துக்கொண்
டிருக்க அதைக்கண்டுபாட்டிமார் எழுபேரும்வந்து தம்பிஅப்பாநின்னை
க்கேன் கிலேசமாய்ப்படுத்திருக்கிறாயென்று தட்டியெழுப்பி சாப்பிட
ச்சொன்னார்கள்.

அதைக்கேட்டு அதாகுமாரனும்பாட்டிமாரைப்பார்த்து சாங்கித்தியமா
செய்யும்போது ஒருசொப்பனங்கண்டேன் அதென்னவென்றால் நா
னொருவனாக வடதிசைக்குப்போய் அந்த இராட்சதனைக்கொன்று இரா
ச்சியத்தையும் என்வசப்படுத்தி என்தாயாரையு மழைத்துக்கொண்டு
எனதகப்பன்பாட்டனை சகலமானபேரையும் எழுப்பிக்கொண்டு உங்க
ளையழைத்துக்கொண்டு நம்முடையபட்டணத்திற்குப்போய் இராச்சி
யபரிபாலனஞ்செய்யும்படி கண்டேன் ஆகையால்என்னைப்பிரயாணஞ்
செய்து அனுப்பிவையுங்களென்றுசொன்னான் அதைக்கேட்டு பாட்டிமா
ரும் நீராட்சதனைசெயிக்கப்போவதும் வருவதும் உன்னாலாகுமோ நீ
யோசிறுபிள்ளை ஆகையால்உனக்குச்சயத்தண்டாகுமோ நம்முடைய பட்
டணத்தைப்பிரதேசத்தான் ஆண்டுகொண்டிருக்கிறானே அவனைச்செ
யித்துப் பட்டணத்தை அரசாட்சிசெய்யும்படி வல்லமையுண்டானால் அ
தற்குப் பிரயத்தினஞ்செய்யென்றுசொன்னார்கள் அதைக்கேட்டு நானக
த்தியப் இமயகிரிபர்வதத்திற்குப்போய் என்தாய்தகப்பனைப் பார்க்கா
மலென்பிராணனை வைத்திருக்கிறதில்லையென்றுசொன்னான் நல்லது
இதைநமக்கு அன்னங்கொடுத்துவருகின்றமகாராஜாவினிடத்தில்
போய்ச்சொல்லி அவருடையஉத்தரவுபெற்றுக்கொண்டுபோவென்று
சொன்னார்கள் அதைக்கேட்டுஅப்படியே மகாராசனிடத்திற்குப்போ
க அவரும்அதாகுமாரனென்கிற ராசகுமாரனைப்பார்த்து மகாசந்தோஷ
மாயெங்கேவந்தாயென்றுகேட்க அதற்குஎன்தாய்தகப்பன் பாவிசெ

னைபரிவாரங்களெல்லாமழிந்து தங்களி த்தில் எத்தனேகரேளக்குப் ப டிவாக்கிச்சாப்பிடுகிறது பத்துவருஷமாய் எங்களைக்காப்பாற்றியிரட்சி த்தீரே யிப்பவுமக்காக இமயகிரிபர்வதத்திற்குப்போய் வருகிறவனுக் கும இவ்விடத்திலிருக்கிறபேரை யிரட்சித்து என்னையும்பயணப்படுத் தியனுப்பிவையுமென்றுசொன்னான் அதுகேட்டு மாணபாராசனும் அ தாருடைய மிருக்கவல்லமைக்கு மகாசந்தோஷப்பட்டு தீர்க்கயா ய்ப்பாய்வாருமென்று அனுப்பினர் அதுகேட்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டுவந்து தன்பாட்டிமாரெழுபேரையும்பார்த்து மாணபாராச னிடத்திலுத்தரவுபெற்றுக்கொண்டுவந்தேன் ஆகையால்நான் இமயகி ரிபர்வதத்திற்குப்போய் வருமளவுக்கும் நீங்கள்பத்திரமா யிருக்க வென்றுசொல்லி அவர்களிடத்தில்விடைபெற்றுக்கொண்டு புறப்பட் டானிதுவரைக்குங்கண்டதேவென்று இரண்டாங்கால்சொல்லிற்று.

கட்டிலின் இரண்டாங்கால்சொல்கதை முற்றிற்று.

கட்டிலின்மூன்றாங்கால் சொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கராசாவும் இனிமேலாகிலும் பேசாம டன்னைத்தேசப்போகிறானே அதினாலே ஆகையால்வேதாளத்தைதம்பார்த் து கட்டிலின் மூன்றாங்காலிற் பிரவேசிக்கச்செய்து நீயாவதொருகதை சொல்லென்றுகேட்க அது கேட்டு மூன்றாங்காலும் விக்கிரமார்க்கனை ப்பார்த்து நீர் என்னைஒருபொருட்டாகஎண்ணிக் கதைசொல்லச்சொ ன்னீர் நான்சொல்லுகின்றகதையைச் சற்றேசெவிகொடுத்துக்கேளு ம் அதெப்படியென்றால் அந்த அதாருனை அப்படியே இமயகிரிப ர்வதத்திற்குப்போக பயணப்புறப்பட்டு செண்பக வனத்திற்குப்போ னான் அவ்விடத்திற்குப்போகும்போது இவனுக்குமெத்தஆயாசமும் இளைப்புமுண்டாகிக் கேரிட்டது அவ்விடத்திலிருந்த பத்திரகாளிகோவில் முன்பாக ஒருமாமரநிழலிற் படுத்துக்கொண்டிருக்கையில் பத்திரகா ளிபிரசன்னமாய்வந்து நித்திரைபண்ணுகிறராசகுமாரனைப்பார்த்து ம காயோகசாலியாயிருக்கிறாயென்று சந்தோஷப்பட்டுஎழுப்பி நீயெம்மு டையசந்நிதிக்கு வந்ததேதென்றுகேட்டாள்.

அதுகேட்டதாருநனும் அம்மனுக்குசாஷ்டாங்கமாகதெண்டன் பண்ணிகைகட்டிக்கொண்டுநின்று தான்பயணமாய்ப்போகிற சங்கதி யைசசொல்லி அம்மாஉனதுகடாட்சத்தினாலேயானிந்தக்காரிய மெல்லாஞ்செயமாகவேணுமென்றுசொன்னான் அதுகேட்டுபத்திரகா ளியும் நீபோகிறகாரியமெல்லாஞ்சித்திக்கும் அதற்கொருஉபாயஞ் சொல்லுகிறேன்கேள் அதெப்படியென்றால் ஒருகுளிகைதருகிறேன் அதைப்போனத்தால் பயமாயிருக்குமென்று ஒருகுளிகைகொடுத்து அப்படிப்பட்ட இடையூறுவந்தாலும் அதனிடத்தில்பொருட்டெழும்பனி யாமப்பருக்கை கைக்கொடுத்தால்அதுஇடர்கெடுக்கும்போதும் அதற்கெ ல்லாமொருகாலுமலைப்பாடில்லாமற்போகுமென்றுசொல்லிஒருதங்க க்குதிரைகொடுத்துஇந்தகுதிரையேறிக்கொண்டுசீக்கிரமாய்ப்போய்வரு

வாவென்றுபத்திராசாவேயம்மன்சொன்னபடியே அவைகளையெல்லா
மலாக்கிக்கொண்டு அம்மனிடத்தில்விடைபெற்றுத்தங்கக்குதிரைமே
லேறிவலதுகரத்திருந்தான்அப்பொழுதுஅந்தக்குதிரையானதுஆகா
யமார்க்கமாய்ப்பறக்கஅப்போதுஇமயகிரிபர்வதத்தைக்கண்டு அந்தப்
பர்வதத்தின்உச்சியிற்போய்க்குதிரையைவிட்டிறங்கிமேல்சுற்றுமுற்று
சுற்றிப்பார்த்துஒருகுகையில்ஒருகன்னிகைதன்தாயாகியசிரோமணி
யிருந்தாள்அந்தஅம்மாளைக்கண்டு இந்தப்பர்வதத்திலிருக்கிறமாயாவதி
யென்கிறராணிதான் அஸ்தினபுரியையாளப்பட்டசுத்தவீராசனுடைய
மருமகளாகியசிரோமணியம்மாளை இந்தராட்சதன் [illegible]
த்துக்கொண்டுவந்திருக்கிறானே காணவில்லையோ நீயென்றுகேட்
டானதற்குச்சிரோமணியும்நான்தான்சுத்தவீராசனுடையமருமகள்
என்பேர்சிரோமணி அப்பாநான்தான்உன்னுடையதாயார்என்னைஇரா
ட்சதனெடுத்துவந்தபோதுநீயப்பதுமைகுழந்தையென்றுசொல்லும்
போதுசிரோமணியின்தன்னியமிரண்டிலும்பால்சுரந்துஅதாகுமாரன்முக
த்தில்விசிறியதுஅதைக்கண்டுஅதாகுமாரனும் இவள்நம்முடையதாயார்தா
னென்றுதெரிந்துஎன்னுடையதகப்பன்பாட்டன்இன்னமுஞ்சகலமான
பெருங்கல்லாய்ச்சமைந்திருக்கிறார்களே அவர்களெங்கேயென்றுகேட்
டான்அவர்கள்தென்திசையிலேகல்லாய்ப்போயிருக்கிறார்கள் மேலும்
என்னைப்போலநூறுபேருடையராசகன்னிகைகளையெடுத்துக்கொண்டு
வந்துஇப்பேர்ப்பட்டகுகையிலடைத்துவைத்திருக்கிறான்அந்தகன்னி
கைகளுக்குரியவர்கள்தளமெடுத்துவந்தவர்களையெல்லாங்கல்லாய்ச்
சபித்துப்போட்டானவனைச்செயிக்கத்தக்கவனொருவருமில்லை ஆகையா
லிப்போது இராட்சதன்வருகிறவேளையாயிற்று நீஇருக்கிறதைக்கண்
டால்உன்னைக்கொன்றுபோடுவானென்றாள் இராட்சதனைவெல்லுகிறது
க்காகுமோபோவென்றுசொன்னாளிப்படிதாயார்சொன்னவார்த்தை
யைக்கேட்டுஅம்மாபத்திரகாளிகிருபையினால்ராட்சதனைவென்றுபோ
டுவேனின்றைக்கிராட்சதன்வந்தாலவனைக்கண்டு எந்தவிதத்திலாவது
அவனுடையஉயிர்நிலையையறிந்துசொன்னால் நானெப்படியாகிலுமவ
னைச்செயிக்கிறேனென்றுசொன்னானதுகேட்டுத்தாயாருமப்படியேய
றிந்துசொல்லுகிறேன் நீஇப்போதிவ்விடத்திலிருக்கவேண்டாம் கண்
மறையப்போயிருந்துநாளைக்குவாவென்றுமகனையனுப்பிவைத்தாள்அ
ப்படித்தாயார்சொன்னபடியே மதுரவனத்திற்குப்போயிருந்தா னிப்
படியிருக்கஇவ்விடத்தில்சிரோமணியானவள்முக்காடிட்டுபடுத்துக்
கொண்டிருந்தாள் சாயுங்காலம்ராட்சதன்வந்துசிரோமணியைப்பார்த்
துதினகாலம்நான்வருகிறவேளைபார்த்து முன்னதாகவேஎதிர்கொண்
டுவருவாயே இன்றைக்குமுக்காடிட்டுப்படுத்திருக்கிறதென்னவென்று
கேட்கஅதைக்கேட்டுசிரோமணியும் நானுன்னைநம்பியிருக்கிறேனே

காலமேபோனால்சாயுங்காலம்வருகிறீர்நீர்வருகிறவரைக்கும்வழிபார்த்
துக்கொண்டிருக்கிறேன்ஆகையாலுமக்கும்எனக்கும்உயிரிருக்கிறதுநீ
ர்வருகிறதும்வராதும்அறிகிறதற்குஉம்முடையஉயிர்நிலையைச்சொல்ல
வேண்டும்அப்படிநீர்சொல்லாமற்போனால் என்னுடையஉயிரைமாய்த்
துவிடுவேனென்றுசொன்னபடிசொன்னசிரோமணியைப்பார்த்
து நாம்வஞ்சனையாய்ச்சொல்லலாகாதென்றெண்ணி நல்லதுபெண்ணே
என்னுடையஉயிர்நிலைவடதிசையிலே சிங்காரவனத்தில் ஒருதிருக்குள
முண்டுஅக்குளத்தினடுவேஒருமண்டபமிருக்கிறது அந்தமண்டபத்து
வாசற்படிக்குசமீபத்தில்பூட்டியிருக்கும்அந்தக்கதவைதிறந்துபார்த்தால் உள்ளே
கிளிகூண்டிருக்கும்அதில்பஞ்சவர்ணக்கிளியிருக்கிறதுஅந்தக்கிளிதான்
என்னுடையஉயிரென்றுஉண்மையாகச்சொன்னவைகளைக்கேட்டுச்
சிரோன்மணியும்நீர்சொன்னதுமெய்தானென்றுகேட்டாள்அதற்குநா
ன்தப்பிதமாய்ச்சொல்வேனென்றுசத்தியம்பண்ணிக்கொடுத்துஇரா
ட்சதனும்காலமேபுறப்பட்டுவெளியேபோனானச்சமயத்தில் அதாரு
ரன்வந்துதாயாரைக்கண்டு ராட்சதனுடையஉயிர்நிலையை யறிந்தாயா
வென்றுகேட்டானதற்குச்சிரோன்மணியும்ராட்சதன்சொன்னஉயிர்நி
லையைஅடையாளப்படிசொன்னதுகேட்டு நல்லதுநான்போய்வருகி
றேனென்றுசொல்லித்தாயாருடையஅநுமதிபெற்றுக்கொண்டு தங்கக்
குதிரையின்மேலேறி வடதிசையைநோக்கிப்போகும்போது மல்லிகார்
ச்சுனமென்றொருபட்டணமந்தப்பட்டணத்தையாளப்பட்டவல்லம
கேசரியென்றொருராசன்அந்தராசனுக்குஇந்திரசேனையென்றொருபெ
ண்அந்தப்பெண்ணுக்குசகலவிற்பன்னனுமிருக்கிறமாப்பிள்ளையைத்தே
டிகலியாணம்பண்ணிகொடுக்கவேண்டுமென்றுஒருஉப்பரிகையில்வை
த்துநூறுபேர்தாதிமாரையும்ஊழியஞ்செய்யவைத்தானவள்குளிக்கிற
நீர்ஒருஆறாய்ப்போகிறதந்தஆற்றங்கரையிலேசிலராசாக்கள் காமமோ
யினுடைக்குஅந்தஆற்றில்சோகஸ்நானஞ்செய்கிறபேரும் குளி
க்கிறபேரும்தண்ணீரையள்ளிமுகத்திலேஅணைகிறபேரும் இப்படிவெ
குபேரிருக்கிறதைக்கண்டு அதாருரனென்கிறராசகுமாரன்குதிரையி
னிறுத்திப்பார்த்துஇந்தஆற்றிலேமஞ்சள்வர்ணமாகதண்ணீர்வருகிறதுஇ
தல்லாமல்முல்லையிருவாட்சிசெண்பகப்புஷ்பங்களும்வெட்டிவேர்மரு
க்கொழுந்துஎலுமிச்சம்பழங்களுமாய்தண்ணீரெல்லாம்மயிர்கலந்துவ
ருகிறதேஇதென்னஅதிசயமென்றந்த ஆற்றங்கரையிலிருக்கிறபேரை
க்கேட்டான்அதுகேட்டு அவர்கள் இந்தஜலம்இந்திரசேனைகஸ்நானம்ப
ண்ணினபரிமளகஸ்தூரமிதுவென்றுசொன்னார்களதுகேட்டுசந்தோஷப்
பட்டுஒருபெண்ணாகப்பிறந்தகன்னிகைஸ்நானஞ்செய்ததில்நாம்காணகி
றதாவென்று சொர்ணக்குதிரையின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்க
மாகஆறுகடந்துஅக்கரையிற்போய்ஒருதடாகத்தினருகேயிறங்கிஸ்நா
னஞ்செய்துசெபதபமுடித்துக்கொண்டிருந்தானப்படியிருக்கும்போது

இந்திரரேகையானவள் அந்தராசகுமாரன் ஆகாயமார்க்கமாய்ப்போனதைப்பார்த்தால் மெத்தவும் வல்லமைசாலியாயிருக்கிறானாகையா லவனுக்கேமாலையிடவேண்டுமென்றுமகாசந்தோஷமாகத் தகப்பனாகிய வல்லமைகேசரியினிடத்திற்குப்போய்த்தெண்டம்பண்ணித் தகப்பனைப்பார்த்துச்சொல்லுகிறாள், ஓ ஐயா ஒரு இராசகுமாரன் சொர்ணக்குதிரையின்மேலேறிக்கொண்டுபட்டணத்திற்குமேற்புறமாகச்சத்தளத்தடாகத்தருகேயிறங்கியிருக்கிறான் அந்தராசகுமாரனுக்கேநான்மாலையிடவேண்டும் ஆகையால்இதற்குத்தடைசொல்லாமல் நீரிந்தட்சணமேபோய் அழைத்துவரவேண்டுமென்று சொன்னாள் மகள்சொன்னதைக்கேட்டு அப்படியே அந்தராசகுமாரனையழைக்கப் போகும்போது அதுகண்டு அதாகுரான் நாம்வந்ததைஇந்திரரேகைபார்த்துநம்மையழைத்துவரும்படி மனுஷரையனுப்பிவைத்தாளென்று யோசனைபண்ணிப்பத்ரகாளிதனக்குக்கொடுத்தமணியாம்பருக்கைக்கல்லையெடுத்து தன்குதிரைக்குக்கொடுத்துத் தானுஞ்சாப்பிட அதைச்சாப்பிட்டவுடனே நூறுவயதுசென்றகிழமானார்கள் இப்படியிருக்கவல்லமைகேசரிராசன் வந்துபார்க்கும்பொழுது கிழவனும் கிழக்குதிரையா யிருக்கிறதைக்கண்டு நம்முடையகுமாரத்திஇந்தக்கிழவனுக்கு மாலையிடவேண்டுமென்றுசொன்னாளே இவனைப்பார்த்தால்அசங்கியமாயிருக்கிறதேயென்று திரும்பிப்போய்த் தன்மகளையழைத்துஅம்மாநீநல்லயோசனைசெய்தாய் நீசொன்னஅந்தராசகுமாரனைப்போய்ப்பார்த்தால் மெத்தவும்விருத்தாப்பியமாயிருக்கிறான் வாயில்நீர்வடிகிறது கண்ணாறுல் கிளைவிளைப்போல் இருக்கிறது அவன்ஏறுகிறகுதிரையோமெத்தவுந்தள்ளாமையாயிருக்கிறது நடக்கமாட்டாது இதன்றியில் மெத்தவும்அசங்கியமாகவுமிருக்கிறானென்று சொன்னான் அதுகேட்டுத் தகப்பனைப்பார்த்து அவனெப்படியிருந்தாலுஞ்சரி அதெல்லா மாயசித்தாயிருக்கும் நானதிலேன் நீர்போய்அழைத்துவாருமென்றுசொல்லி ஒருபெரியபல்லக்குக்கொடுத்து அனுப்பிவைத்தாள் அப்படியே அந்தப்பல்லக்கையெடுத்துக்கொண்டுபோய் அந்தராசனைப்பார்த்து ஓகிழவனாரே நம்முடையகுமாரத்தியாகிய இந்திரரேகை உம்மையழைத்துக்கொண்டு வரச்சொன்னாள் வாருமென்றுஅழைக்க அதுகேட்டு அதாகுரான் நம்மையேயென் அழைக்கிறீர் உம்முடையகுமாரத்திசிறுபெண் நானோவிருத்தாப்பியம் என்னைஅவள்கண்டால் அசங்கிதப்படுவாளென்றுசொல்ல அதுகேட்டு வல்லமைகேசரியும் நீரென்னமாயிருந்தாலுஞ்சரி இந்தப்பல்லக்குமேலேறிக்கொண்டு நம்முடைய அரண்மனைக்கு வந்துபோகவேண்டுமென்றுசொன்னார் அதற்கு நான் இதுவரைக்கும்பல்லக்குமேலேறினதில்லை. இந்தக்குதிரையின்மேல்என்னைத்தூக்கிவையுங்களென்றுசொல்ல அப்படியேதூக்கிவைத்துநடக்கும்பொழுது குதிரைஇரடிவிழுக்கிட அதைராசன்கண்டு பத்துபேரைவிட்டுக் குதிரையுங்கிழவனையும் விழவொட்டாமல்பிடித்துக்கொண்டு அரண்மனையிற்சேர்த்தார்கள்.

அதுகண்டுஇந்திரரேகைசந்தோஷமாகஎதிரேவந்துகைலாகுகொடுத்துஅழைத்துக்கொண்டுபோய்ச் சிங்காதனத்தின்மேரில் உட்காரவைத்து அவருக்குக்கர்ச்சிடித்துஉபசாரம்பண்ணிக்கொண்டிருக்கையில்தாதிமார்கள்வந்து சமையலாச்சுதென்றுசொன்னார்கள் அதுகேட்டு இந்திரரேகையும் கிழவனைப்பார்த்து குளிக்கவெழுந்திருமென்றுசொல்ல அதற்குநானெழுந்திருக்கமாட்டேன் எனக்குத்தள்ளாதென்றுசொன்னான் அதுகேட்டுஇந்திரரேகைஎழுந்திருந்துநாற்காலிபோட்டு அதன்மேரில்கிழவனைத்தூக்கிவைத்துவெந்நீர்விட்டு தேகமுழுதுஞ்சுத்திபண்ணி இந்திரவர்ணப்பட்டாலே சரீரமெல்லாந்துடைத்து மேல்வர்ணத்துகிலுடுத்திக்கொண்டுவந்து ரத்தினக்கம்பளியின்மேரிலுட்காரச்செய்து பொற்பள்ளயத்தில்கல்லபதார்த்தங்களுடனேசாதம்பரிமாறிசாப்பிடுமென்றுசொன்னாள்குத்திரும்பலாய்த்திரும்பிக்கொண்டு வாயில்நீர்வடியசாப்பிட அதிலேகொஞ்சம்சாப்பிடாமல்வைத்துவிட்டார் அதுகண்டுஇந்திரரேகை அவருடையவாயைக்கழுவி ரத்தினக்கம்பளியின்மேரில் உட்காரவைத்து தாம்பூலம் மடித்துக்கொடுத்தாள் அதைப்போட்டுக்கொண்டுநித்திரைபண்ணினான் அதன்பிறகு இந்திரரேகையெழுந்திருந்து கிழவனார்சாப்பிட்டு மீதமிருந்த சாதத்தை அசங்கியமில்லாமல் தான்சாப்பிட்டிருக்கையில்கிழவனார்நித்திரைநீங்கியெழுந்திருந்து இந்திரரேகையைப்பார்த்து அடிபெண்ணே நீராசகுமாரத்தி மேலும்சிறுபெண்ணாகவிருக்கிறாய் நான்விருத்தாப்பியமானகிழவனாயிருக்கிறேன் நீஎனக்குச்சமமாயிட வேணுமென்றுசொல்லுகிறாய் இதென்னஅதிசயமென்றுசொன்னார், அப்படிச்சொன்ன பெரியவனைப்பார்த்து நீபரிமளசுகந்தகாசிக்கரையில்வந்து அதிலிறங்கப்போகாதென்று சொன்னக்குதிரையின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப்போனதும் இப்போது வேஷமாற்றியிருக்கிறதுங்கண்டேன் ஆகையால் நீருள்ளபடிசொல்லுமென்றுகேட்க அதுகேட்டுஅந்தராசகுமாரன் மகாசந்தோஷமாக அன்னமேஉன்பார்வைக்கு அப்படிதோற்றியிருக்கும் நானிருக்கிறதுஇப்படிதானென்றுசொன்னார் அப்படியிருக்கும்பொழுது வல்லமைகேசரிராசா வேட்டைமார்க்கம்போகவேணுமென்றுயோசித்து அரண்மனையிலிருக்கும் கிழவனாரையழைத்துக்கொண்டுவரச்சொன்னார் அப்படியேபோய்அழைத்தார்கள் அதுகேட்டுகிழவனாரும் நாமிருக்கிறஇருப்பைப்பார்த்து நம்மைப் பரிகாசஞ்செய்கிறதற்காக அழைத்துவரச்சொல்லியனுப்பினார் என்றாலே என்னஆகட்டும்போகிறதென்றுசொல்லி குதிரையின்மேலேறிக்கொண்டு ராசாவினிடத்திற்குவர ராசாவும் தண்டோராப்பண்ணி பெரியவனையும் கூட்டிக்கொண்டு வேட்டைக்குப்புறப்பட்டுச் சிங்காரவனத்திலே ஒரிடத்திற்குப்போய் வல்லமைகேசரிராசாசகலமானபேரும் வேட்டையாடும்போது விருத்தாப்பியவேஷமாயிருந்த அந்தக்குமாரனென்னிற இராசகுமாரன் அந்தவேஷத்தைநீக்கி திருப்பிவிடுத்துச்சொர்ணக்குதிரையின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாகப்புறப்பட்டுவனத்

இவடுவேயிருந்து மிருகங்களைச்சம்மாரஞ்செய்து மலைபோலேகுவித்து விட்டுவரும்போது அதைவல்லமைகேசரிஇராசன்பார்த்து இவனுமோர ஆகாயமார்க்கமாகப்புறப்பட்டுவருகிறான் இவன்ராட்சசனோதெரி யாதென்றுபயந்து பட்டணம்வந்துசேர்ந்தார்கள் அதன்பின்பு அதாரு ரனென்கிற ராசகுமாரன் முன்போலவேஷமாய் தத்திதத்திக்கொண் டு பட்டணம்வந்துசேர்ந்தான்.

அதுகண்டு இந்திரரேகையும் எதிரேபோய்கைகொடுத்து அ ரண்மனைக்கு அழைத்துக்கொண்டுவந்து பஞ்சணைமெத்தைகள்மேல உட்காரவைத்துக்காலைப்பிடித்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் இ ந்திரரேகையைப்பார்த்து அடிபெண்ணே உன்னுடையதகப்பனார் வே ட்டைக்குப்போனதென்ன பயந்துஓடிவந்ததென்னவென்றுகேட்டா ர் அதுகேட்டுஇந்திரரேகையுமென்னுடையதகப்பனார்வேட்டைக்குப் போனவிடத்தில ஆரோஒருவர் சொர்ணமயமான புரவியின்மேலேறி க்கொண்டுவந்தாராம் அவரைப்பார்த்துபயந்து ஓடிவந்துவிட்டார் அ வரார் பெரியவரோமே மேலும்உமக்குத்தெரியாதகாரியமல்லவே ஆனை யாலதையெனக்குத்தெரியச்சொல்லவேண்டுமெ நீர்சொல்லாமற்போனு ல்இப்பொழுது உமக்குமுன்பாகத்தானே யென்னுடையவுயிரை மாய த்துக்கொள்வேனென்றுசொன்ன இந்திரரேகையைப்பார்த்து அடிபெ ண்ணே நீ பேதைபிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளுகிருய் அவராரும ல்லநான்தான் சிங்காரவனத்திற்குள்ளேமுல்லைச்சுனையருகேயிருக்குமி ருகசாதிகளை சம்மாரஞ்செய்து மலைபோலேகுவித்துவந்தேனெ ன்றுசொல்ல அதுகேட்டுஇந்திரரேகையானவள் சாஷ்டாங்கமாகநமஸ் காரஞ்செய்துசுவாமிஉமதுடையநிஜரூபத்தை அடியாளுக்குக்காண்பிக் கவேணுமென்றுசொன்னுள் அப்படியேபெரியவராகியராசகுமாரன் தன்னுடையநிஜரூபத்தைக்காண்பிக்க அதைப்பார்த்து இந்திரரேகை யும் நாம்பண்ணினபூசாபலனோ இப்பேர்ப்பட்டபிராணநாயகர் கிடை த்தாரென்று சரீரமெல்லாம் புளகாங்கிதப்பட்டு ஆனந்தசந்தோஷம டைந்துதகப்பனண்டைக்குப்போய் நமஸ்காரம்பண்ணிதேவரீர் இரா ட்சதனென்றுபயந்துவந்தீரே அவர்ராட்சதனல்லகாண்சொல்லிநீர்போ யழைத்துவந்தீரே அந்தப்பெரியவர் இப்பொழுதுபதனுடையபிள்ளை பாலகுமாரராஜர் ஏதுநிமித்தியமோவேஷமாயிருந்தார்மேலும்நீர்வே ட்டைக்குப்போனபோது அந்தப்பெரியவரும் உம்முடன்கூடவந்து சிங்காரவனத்திற்குள்ளே முல்லைச்சுனையருகேயுள்ளமிருகசாதிகளை ச்சம்மாரம்பண்ணி மலையைப்போலேகுவித்துக்கிடக்கிறது அதைக்க ண்டு எடுத்துவரச்சொல்லுமென்றுதகப்பனுக்குச்சொல்லிவிட்டு அவ் விராசகுமாரனண்டைக்குவந்து மகாபயங்கரத்துடனே இரண்டுகை களையுங்கட்டிக்கொண்டு எதிரில்நின்றுசுவாமிஉம்முடையநாமதேயமு ம் தாய்தகப்பன்பெயரும் ராச்சியத்தின்பெயரும் இதுகளெல்லாம் தேவரீரடியாளுக்கு அருளிச்செய்யவேண்டுமென்றுகேட்கவுங்கேட்டு

ராசகுமாரனுஞ்சொன்னுனிருங்கேளாய்பெண்ணே என்னுடையநாம தேயம் அதசூரன் என்பட்டணத்தவிராசன் எனக்குப்பாட்டிமார் ஏழுபேர்எனதகப்பன் அதிவீரராசன் எங்கள்பட்டணம் அவந்திபுரி அதிலிருந்து ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் என்பட்டணுந்தகப்பனும் வேட்டைகாணப்போனுர்கள் அந்தத்தருணத்தில் இராட்சதன்வந்து என்னுடையதாயாராகிய சிரோன்மணியை ஆகாயமார்க்கமாய்த் தூக்கிக்கொண்டுபோய்இமயகிரிபர்வதத்தின் ஒருகுகைக்குள்ளே அடைத்துவைத்தான் அதைதெரிந்து என்பட்டணுந்தகப்பனும் தளசேகரமெடுத்துக்கொண்டுஅந்தராட்சசன்பேரில் யுத்தத்திற்குப் பிரயாணப்பட்டுப்போனுர்கள் அதுவன்றி அந்தராட்சதன் அவர்களைவெல்லாங்கல்லாய்ச்சபித்துவிட்டான் இதுசேதி சத்துராதிகளறிந்து எங்களுடையராச்சியத்தைப்பிடித்துக்கொண்டுஎன்பாட்டிமார் ஏழுபேரையுந்துரத்திவிட்டான் அப்போது நான் முப்பதுநாளையகுழந்தை என்னையெடுத்துக்கொண்டு சிங்காரபட்டணம்வந்துசேர்ந்தார்கள், அப்பொழுது அந்தப்பட்டணத்தை யாளும்பட்ட மானபாராஜன்கண்டு பாட்டிமார் ஏழுபேரையும் அழைத்துவரச்சொல்லி அவர்களுக்கு ஒருஅரண்மனைவிட்டு அதிலிருக்கச்செய்து அன்னவஸ்திரமுங்கொடுத்தும் யாதொரு குறைவில்லாமல் காப்பாற்றிக்கொண்டு வரும்போது எனக்குப்பத்துவயதாகி விவேகம்வந்தபிறகு என்னுடையபாட்டிமாராலே என்னுடையவிருத்தாந்தமெல்லாஞ்சொல்லக்கேட்டுபிறகு நான் மானபாராஜாவைக்கண்டு அவரிடத்தில்விடைபெற்றுக்கொண்டுவட திசையைநோக்கிவருகையில் அந்தவழியில் ஒருமந்திரகாளிகோயிலிருந்தது அவ்விடத்திற்குவந்து அந்தஅம்மனைத்தோத்திரஞ்செய்து அந்தஅம்மனுடையவரப்பிரசாதத்தினுலே சத்தசமுத்திரங்கடந்து இமயகிரிபர்வதத்திற்குப்போய் என்னுடையதாயாராகிய சிரோன்மணியம்மனைக்கண்டு அவளுக்குத்தெரியஞ் சொல்லிவிட்டு அந்தராக்ஷதன் உத்தரதிசையிலிருக்கிறுன அவனைச் சம்மாரஞ்செய்து என்னுடைய பாட்டன்தாய்தகப்பனையுஞ்சிதையில்லாமலெழுப்பிக்கொண்டுஎன்னுடையபட்டணமேபோய்ச்சேரவேண்டி வந்தேனென்றுசொன்னுன் இதுகளெல்லாஞ் சித்திரரேகைகேட்டு அதிகசந்தோஷமாய் தன்தகப்பனுகிய வல்லமைகேசரியண்டைக்குப்போய்த்தேவரீரழைத்துவந்தகிழவனுடையசரித்திரம் இன்னவிதமென்றுபுருஷன்சொன்னவசனப்படிதகப்பனுருக்குத் தெரியப்படச்சொன்னுள் அதைராஜன்கேட்டுமிகுந்தசந்தோஷத்தையடைந்து அசசூரனுகிய ராசகுமாரனிடத்திற்குவந்து அவனைத்தழுவிக்கொண்டு உம்முடையமுகத்துவந்தெரியாமல் அசத்திதப்பட்டுக்கொண்டிருந்தோம் இப்போது எங்களுக்குமிகவுஞ்சந்தோஷமாயிற்று ஆகையால் நம்முடைய குமாரத்தியாகிய இந்திரசேனையை விவாகஞ்செய்துக்கொண்டு நம்முடைய ராச்சியமெல்லாம் பரிபாலனஞ்செய்து நம்மையுமரட்சித்துக்கொண்டிருமென்றுசொல்லி தன்னுடைய சொருக்கசிம்மாசனத்திற்குவந்து தன்னுடையபட்

இரிப் பிரதானிதனை யழைத்து இந்தக்ஷணம் நம்முடைய சேனாபதி
கியவதியர்க்கு குமாரத்திக்கு சுபமங்கள கலியாணமுகூர்த்தங் கட்டப்பிக்
கவேணுமென் னாஞ்ஞையால் அதற்குவேண்டிய சாமக்கிரியங்களும் சீக்கிரத்
தில் சாக்கிரதைபடுத்துமென்று வேதபுரோகிதனை யழைப்பித்து முகூர்த்
தத்திற்கு நாளிட்டு அரசாணியும் நட்டு ஆகாயமளாவிடத்தக்கதாக பந்தலு
ம்போட்டு ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களுக்கும் தாம்பூலம் வைத்தழை
ணவனையுஞ்சோடித்து மணப்பொங்கலிட்டு பெண்ணுக்கும் பிள்ளைக்கு
கலங்கிட்டு ஸ்நானஞ்செய்து சுகந்தபரிமளாதிகளுடனே ஆடையாபரண
ங்தரித்தபிறகு மணவறையின்பேரிலுட்கார்ந்து அக்கினிசாட்சியாகவும்
ஐம்பத்தாறுதேசத்துராசாக்களுமறிய இந்திரரேகைக்கு அதாகுராச
ன் திருமங்கிலியந்தரித்து யானையின்பேரில் பட்டணப்பிரதிஷ்டைவந்து
அரண்மனைக்குப்போய் பிள்ளையும் பெண்ணும் மதனுமிரதியும்போலே
சுகபோகமாயிருக்கும்போது அதாகுராசன் இந்திரரேகையைப்பார்த்
து அடி பெண்ணே நான் சிங்காரவனத்திற்குப் போய்வரவேண்டுமென்
று சொல்ல அதுகேட்டு சந்தோஷமாய்த் தன்னுடைய சொர்னக்குதிரை
மேலேறிக்கொண்டு ககனமார்க்கமாக மும்பசிங்காரவனத்தின் கனையரு
கேசென்றுபார்க்கும்போது அந்தச்சுனை ஒருகாழ் கைவழிவிஸ்தீரணமாய
ந்தச்சுனையினடுவே மண்டபமிருக்கிறது அந்தமண்டபத்திற்குப்போக
வேண்டுமென்றால் ஜலமானது மிகுதியாயிருப்பதுகண்டு பூமியைக்கண்
டுபிடிக்கக்கூடாதாகையால் இதற்கெப்படியென்று யோசனைசெய்து பத்
ரகாளிகொடுத்த மணியாம்பருக்கையையெடுத்து சுனைக்குள்ளே போட்
டிரக்கிமண்டபத்தினருகேபோய்ப்பார்க்கமண்டபத்தினுடைய கதவை
ச்சாற்றிமுத்திரைபோட்டு மகாபலத்துடனிருக்க அந்தக்கதவைத்திறக்
கக்கூடாதென்றெண்ணி பத்ரகாளிகொடுத்த மணியாம்பருக்கையில் ஒ
ன்றையெடுத்துக்கதவின்மேற்போட அந்தக்கதவானது திறந்தவுடன் உ
ள்ளே நுழைந்துபார்க்கையில் ஒருகிளிகூண்டில் பஞ்சவர்ணக்கிளியிருக்
கது அந்தக்கிளியைப்பிடித்துக்கொண்டுபோதாளச்சுனையைவிட்டுக்கரை
யேறிவந்து சொர்னக்குதிரைமேலேறிப்புறப்பட்டு இமயகிரிபர்வதம்வரு
கிறதற்குமுன் அர்த்தராட்சதனுக்குசுரங்கண்டு வெருத்தமாயிருக்கிறபோ
து அதாகுராசனவன்முன்னேபோய்நிற்க அதுகண்டுராட்சதன் நீயார
டாமனிடன் என்னுடையபர்வதத்திற்குள்ளாகசற்றுகிலும் பயப்படா
மல்வந்திருக்கிறாயென்றுகேட்க அதுகேட்டு அதாகுராசனும் அடாராட்ச
தாவென்னுடையபட்டணத்திற்குவந்து எண்ணமில்லாமல் சிறையெடு
த்துக்கொண்டுவந்தாயே உன்னைநான் விடுகிறதில்லை உன்னுடைய யுயிர்க்
கிளி என்கையில்பட்டதென்று கிளியைக்காட்டி நீ தேசத்துராசாக்களை
யெல்லாம் கல்லாய்ச்சபித்தாயே என் வீட்டிலுஞ் சிறையெடுத்தாயே ஆ
கையால் இத்தட்சணம் கிளியைக்கொன்றுபோடுவேன் நீயும் மிருதாவா
ய்செத்துப்போவாய் ஆனபடியால் என்சிறையை விட்டுவிடென்றுகேட்

அதற்குராட்சதனவன் உன்னையாரென்றுகேட்டான் அந்தராபாலி யசிரோமணியம்மாள்தான் அவளைவிட்டேனென்றுசொல்ல அதுகே ட்டராட்சதன் உன்தாயாரைநாக்குவைத்தியல்லமல்லேவென்றுட்டு றியமாட்டேன்மேலுமக்கசிரோமணியைக்குப்பத்தவருஷத்திற்கு றுகொள்ளுவேனென்றுசொன்னாள் அவள்சொன்னபடிக்குக்காப்பாற்ற வைத்திருக்கேன் இப்பொழுதுஅகுகைக்குள்ளிருக்கிற சிரோமணியை யழைத்துவந்துகட்டிவைக்கிறேன் என்னுடையஉயிர்க்கிளிமாத்தி ரம்விட்டுவிடேனென்றுசொல்ல அதற்கு அதாகுமாரனுங்கிளியைவிட்டுவி டுகிறேன் என்னுடையதகப்பன்பாட்டன்சகலயாரையுங்கல்லாய் ச்சபித்துப்போட்டாயே அவர்களையெல்லாங்கண்ணெழுப்பிக்கொண்டுபோ கிறதற்கு அந்தமந்திரத்தை எனக்குச்சொல்லவேண்டுமென்றுகேட்டா னதற்குராட்சதனும்சம்மதித்துக்காப்போமென்று அதாகுமாரனு க்குக்கண்மந்திரத்தைக்கற்பித்துக்கொடுத்தான்.

அதைராசகுமாரனும் கிரகித்துக்கொண்டு பரீக்ஷைபார்க்க வே ண்டுமென்று ஒருதிசையில்அனேகம்ராசாக்கள் கல்லாயிருக்கிறதைப் பார்த்துஅக்குராட்சதன்சொலிக்கொடுத்தமந்திரத்தைச் சொன்னான் அதைச்சொன்னமாத்திரத்தில்கல்லாயிருந்தராசாக்களெல்லாம்பிழைத்த மானார்கள் அதைகண்டுஅதாகுமாரனும்மந்திரஞ்சித்தித்ததென் றுமகாசந்தோஷமாகக்கிளியைக்கொண்டுபோட்டான்கிளியைக்கொன் றுபோட்டவுடனே ராட்சதன்விழுந்திருந்துஅலறிக்கொண்டு மலையைப்போ லவிழுந்திறந்தான்,

அதுகண்டுஅதாகுமாரன்தாயார்தன்மகனைக்கட்டிக்கொண்டுஅப்பா நீஇறந்துபோனவர்களுக்கெல்லாமுயிர்கொடுத்தாயேயென்று வாழ்த் தினாள் அதற்கதாகுமாரனும் தாயாரைப்பார்த்து அம்மணிஎன்தகப்பன் பாட்டன்மந்திரிப்பிரதானிசகலமானபேருங்கல்லாய்ப்போயிருக்கிறார் களே அவர்களெங்கேயிருக்கிறார்களம்மாவென்றுகேட்க அப்படியேமக னையழைத்துக்கொண்டுபோய் அவர்களெல்லாரையுங்காண்பிக்க அதை கண்டு அதாகுமாரனும் மந்திரத்தைச்சொன்னான் அதைச்சொன்னவுட னேசகலமானபேரும் எழுந்திருந்தார்கள் இதுவரைக்கும் நாளறிவே னென்றுகட்டிலின் மூன்றுங்கால்சொல்லிற்று,

கட்டிலின்மூன்றுங்கால்சொல்கதை-முற்றும்,

---

கட்டிலின்நாலாங்கால்சொல்கதை,

அதுகேட்டுவிக்கிரமார்க்கராசனும்இனிமேலாகிலும்பேசாமடந்தை பேசப்போகிறாளோ, இனிமேலாராகதைசொல்லப்போகிறார்களென் றுவேதாளத்தைகட்டிலின்நாலாங்காலிற் போகச்செய்துநாலாங்காலை ப்பார்த்துநீயாகிலுமொருகதைசொல்லென்றுகேட்க, அதுகேட்டுநாலாங் காலும்விக்கிரமார்க்கராசனைப்பார்த்துநீஎன்னைஒருபொருட்டாகவெ ண்ணிக்கதைசொல்லச்சொன்னீர்காண்சொல்லுகிறதைக்கவனமாய்க் கேளும் அம்மதென்னவென்றால், அந்த அதாகுமாரராஜகுமாரன் கல்லாய்ச்

சந்தோஷகரமாய்ப் போய்வாவென்றுவாழ்த்தி ஒருபளிக்குவல்லாக்கு
ம் சகலதோஷபரிகாரகுளிகையுங் கொடுத்தனுப்ப அந்தயாகசாலியிட
த்தில் விடைபெற்றுக்கொண்டு தன்பாளையத்துடன் சிங்காரபட்டண
த்திற்குச்சமீபத்தில்வந்திறங்கி அந்தப்பட்டணத்துச் சேனைகள் அ
போசத்ராரிவந்திறங்கினுனென்றுபயந்தோட அதாசூரனும்அவர்களை
ஓடவிடாமல்நிறுத்தி தன்மனுஷரையனுப்பி மானபராசனுக்கு தன்
வரலாறுமுழுதுந்தெரிவிக்கச்சொன்னுன் அதுகேட்டு மகாசந்தோஷ
மாய் தான்காப்பாற்றின அதாசூரன்பாட்டியார் எழுவருக்கும்கோலம்
பாட்டிக்கும் அதாசூரன் சகலமானபேரையும் அழைத்துக்கொண்டு
தாமும் தளசேகரத்துடன் புறப்பட்டு அதாசூரன் பாளையத்திற்குப்
போகையில் அதாசூரன்எதிர்கொண்டுவந்துதெண்டம்பண்ணிஅழைத்
துக்கொண்டுபோய்த் தன்பாட்டன்முதலான சகலமானபேரையுங்கா
ண்பித்து தங்களுடையகடாட்சத்தினுலே வந்துசேர்ந்தேனென்றுவி
ண்ணப்பஞ்செய்தான் அவைகண்டு அதாசூரனைக் கட்டியணைத்துக்
கொண்டு சுத்தவீரராசனையும் அதிவீரராசனையும்பார்த்து ஐயா அதா
சூரனென்று உங்கள்வமிசத்திலொருபிள்ளையிருந்தபடியினுலே நீங்க
ளெல்லாரும்பிழைத்துவந்தீர்கள் இப்படிப்பட்ட பிள்ளையைப்பெற்ற
வர்களுடைய யோகமேயோகமென்றுசொல்ல அதற்குச்சுத்தவீரராச
னும் அதிவீரராசனும் எல்லாந் தங்களால்வந்தயோகமேயல்லது வே
றல்லவென்று ஸ்தோத்திரம்பண்ண அதுகண்டு மானபராசன் சகல
மானபேரையும் தன்பட்டணத்திற்குஅழைத்துக்கொண்டுபோய் அவ
ர்களுக்குச்செய்யவேண்டிய மரியாதைகளைச்செய்து அரண்மனைக்க
னுப்பிவிட்டு தானுந்தன்னரண்மனைக்குப்போனுர் பிறகுஅதாசூரனுக்
குக்கோலப்பாட்டியாகிய உச்சாதேவியும்பாட்டிமாரெழுவர்களும் அ
தாசூரனைக்கட்டியணைத்துக்கொண்டு நாங்களெழுவரும்விதவையாயி
ருந்தோமே எங்களுக்குச்சுபமங்கிலியமிருக்கும்படி இரட்சித்தாயே
யென்றுவாழ்த்தி சிரோன்மணியைப்பார்த்து உன்னுல்வந்தஆபத்திற்
கு உன்மகன்அதாசூரனும் சகலமானபேரையுமிரட்சித்தான் சகலருமா
மானபராசாவினுடையதருமமாகையால்அவர்பேரைச்சொல்லிக்கொ
ண்டு சுகமாயிருப்போமென்றுசொல்ல அப்போது அதாசூரன்தேவி
யாகிய இந்திரரேகை பாட்டிமாரெழுவருக்கும் தெண்டம்பண்ணினு
ளதுகண்டு இந்திரரேகையைவாழ்த்திச் சகலமானபேரும் சந்தோஷ
மாயிருந்தார்கள் இதுவரைக்கும் காலறிவேனென்று கட்டிலின்காலா
ங்காற்சொல்லிற்று.

கட்டிலின் காலாங்கால்கதை முற்றிற்று.

## கட்டில்சொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கனுஞ் சந்தோஷப்பட்டு இனிமேலாகி
லும் பேசாமடந்தை பேசப்போகிறுளாவென்று வேதாளத்தைக் கட்
டிலிற் பிரவேசிக்கச்செய்து கட்டிலைப்பார்த்து உன்கால் நாலுங் கதை

சொல்லிற்ற இனிமேல் நீதான் குறைகளையுஞ் சொல்லவேண்டுமெ
ன்றுசொல்ல அதுகேட்டு பட்டியும் விக்கிரமார்க்க ராசனைப்பார்த்து
ஐயாநீர் என்னையொருபொருட்டாகயெண்ணி கதைசொல்லச்சொன்னீ
ரே நான்சொல்லுகிறதைக்கேளும் அஃதென்னவென்றால் அந்தச் சுத்
தவீரராசன்குமாரனாகிய அதிவீரராசன் அவர்குமாரன் அதாசூரன் இ
வர்கள் மகாபராசன் அரசாண்மையிலிருக்கும்போது. சனியீஸ்வரப
கவானவ்விடத்திற்குவந்து சுத்தவீரராசனைப்பார்த்து நான் உன்னைப்
பிடித்து வெகுசாய்த்தொந்திரவுபடுத்தினேன் நீர்மகா தர்மிஷ்டி என்
மேலில் கோபம்வைக்கவேண்டாம் இப்பவும் நீர்சகலமும் ஒப்பித்துக்
கொண்டு இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருமென்று சனிப
கவான்சொல்ல அதைஅதாசூரன்கேட்டுச் சனிபகவானுக்குத் தெண்
டம்பண்ணி இனிமேல் இப்படிதான்பிடித்து இம்சைபண்ணுவீர் எங்
களுக்கு அந்தராச்சியம்வேண்டாமென்று அதாசூரன்சொல்ல அதற்
குச் சனிபகவான் முன்னாலே உம்முடைய காலாம்பாட்டன் நம்மை
சோதித் நிலஞ்செய்தான் நம்முடைய அதிகாரம் நம்மாலேயும் நிறுத்
தக்கூடாது ஈஸ்வரன்கிருபையினாலேவருகிறது தேவர்கள் சொன்ன
படி நாம்கேட்கிறது ஆகையால் என்னாலேஆகவேண்டியதை ஒருவித
மாய் நடப்பித்தேனென்றுசொன்னார் அதுகேட்டு அதாசூரன் என்னு
டையகாலாம்பாட்டனைநீர்பிடித்த அம்மொருவிதமாய்நடப்பித்ததும் அவ
ர்பெருமைகளும்சொல்லவேணுமென்றுகேட்க அதற்குச்சனிபகவான்
வாரும்பிள்ளாய்அதாசூரா உன்னுடைய காலாம்பாட்டன்பேர்உக்கிரபா
ண்டியராசா அவருடையதேவிமார் மாணிக்கவல்லி மரகதவல்லிகோ
மேதகவல்லி வைடூரியவல்லி தங்கவதனை புஷ்பகெந்தி முத்துமோகை
பவளகெந்தியென்றழைன்பதுபேர் அவருடையபுத்திரிகள் சகலவிற்பன்
னர்கள இப்படி அஸ்தினாபுரியை நீதிவழுவாமல் ராச்சியபரிபாலனம்ப
ண்ணிக்கொண்டிருக்கும்போது அவருக்குநம்முடையயோகம்வருங்கா
லமாச்சுதப்போதுதான் அஸ்தினாபுரிபட்டணத்திற்குப்போய்உக்கிரபா
ண்டியராசனைக்கண்டுகேளிகொண்டுஎனிப்போதுவாரோவாபின்னிட்டு
வாரோவென்றுகேட்டேனதற்குஉக்கிரபாண்டியராசன்என்தாயார்ரூ
பகெந்தியையும் தேவிமார்ஒன்பதுபேரையுங் கேட்டுவந்துசொல்லுகி
றேனென்றரண்மனைக்குள்ளேபோய்தேவிமாருடனேசொல்ல இவர்க
ளும்சனியீஸ்வரரிப்போதுபிடித்தால்எங்களுக்குப்பிள்ளையில்லை உங்க
ள்தாயாரோவயதுகாலமாகிபிள்ளைகளைப்பிறக்கவும். வளர்க்கவுமிருக்கிற
படியாலிளமையிலேவந்தாலாகாது முதுமையிலேவரச்சொல்லுங்களு
மென்றுசொன்னார்களவர்களின்னொன்பதாந்தேவியாகியபவழகெந்திமு
துமையிலேவந்தால் எங்களுக்கெல்லாம்குழந்தைகள் பிறந்திருக்கும்உ
ம்முடையதாயார்மெத்தவும்விருத்தாப்பியமாயிருப்பாருமக்குஞ்சரீரந்
தளர்ந்துபோகும் ஆகையால்இளமையில்தானேபிடித்தால்நிருவாக
ம்பண்ணலாமென்றுசொல்ல அப்படியே அவருஞ்சம்மதித்துவந்து ந
ம்முடனேசொன்னார் அந்தப்படியேநாம்வந்து சண்டைபண்ணினோம்
உக்கிரபாண்டியராசன்தோற்றுப்போய் தாயாரையுந்தேவிமாரையுந்

சமைந்திருந்த தகப்பன்பாட்டன் சகலராணபேரையுமெழுப்பிவிட்டு
க் அவர்களெழுந்திருந்து பார்க்கும்போது சொர்ணமயமாயிருக்கிறா
ச்சபையையும், குதிரையையும்பார்த்து இவனேர தேவனோ-இராட்
சதனோ-பிரம்மாவோ விஷ்ணுவோவென்றுமயங்கி நிற்கின்றபோ
ருக்கோது அதுகண்டு சிரோன்மணியானவள் தன்புருஷனுகிய அதி
வீரராஜனுடைய கையைப்பிடித்துக்கொண்டாள், அப்பொழுது பெண்
சாதியைப்பார்த்து உன்னை ராட்சதனெடுத்துக்கொண்டுபோனனே இ
ப்பொழுது நீவெளிப்பட்ட வயணமென்ன மேலும்ராசாக்களெல்லாரும்
கல்லாய்ப்போனவர்கள் இப்போது நிஜரூபமானதென்னவென்றுகே
ட்க அதுகேட்டுச்சிரோன்மணியும் என்னை ராட்சதன் எடுத்துக்கொ
ண்டுபோனவுடனே நீங்கள்புறப்பட்டு யுத்தத்திற்குவந்தீர்கள் அதுக
ண்டு அந்தராட்சதன் உங்களையெல்லாங்கல்லாய்ச்சபித்துவிட்டு என்
னிடத்திற்குவந்து பலவந்தாரம்பண்ணினான் அதற்கு நான் எனக்கொ
ருநோன்புண்டு அந்தநோன்புமுடிகிறதற்குப் பத்துவருஷஞ்செல்லு
ம் இதற்குள்ளாக நீ பலவந்தாரம்பண்ணினல் நான்பிராணத்தியாகம்
பண்ணிக்கொள்வேனென்றுசொன்னேன் அதுகேட்டு அப்படியேயல்ல
து இவள்நம்மைவிட்டு எங்கேபோகப்போகிறாளென்றுஎண்ணிக்கொ
ண்டு அந்தமலையிலிருக்கப்பட்ட குகையில் என்னையடைத்துவைத்தா
ன் அன்றுமுதல் இன்றையவரைக்கும் அந்தசிறையிலிருந்தேன் அப்
படியிருக்க முன்னுலே நம்முடையபட்டணத்தில் நம்மிருவருக்கும்பி
ள்ளையிறந்ததே அந்தப்பிள்ளையைப் பாட்டிமார்வளர்த்து அதாகுமார
சனென்று பெயருமிட்டு அவனுக்குப் பத்துவயதானவுடன் நம்மு
டையபூர்வோத்திரமெல்லாங் கேள்விப்பட்டுப் பத்திரகாளிசந்நிதிக்கு
ப்போய்த் தெண்டனிட்டு அவள் வரப்பிரசாதத்தினுல் சொர்ணகுதி
ரைமேலேறிக்கொண்டு சத்தசமுத்திரங்கடந்துவந்துராட்சதனைக்கொ
ன்று உங்களையுமெழுப்பினன் அதற்குநீங்கள் பயப்படுவதென்னவெ
ன்றுசொல்ல அதிவீரராசனும் ஆச்சரியப்பட்டு அதாகுமாரனிறங்கியிரு
க்குமிடத்திற்குப்போய் அப்பாமகனேயென்று முத்தமிட்டுத் தன்தக
ப்பனுகிய சுத்தவீரராசனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோக அவ
ரும்பேரனைக்கண்டு அப்பா உன்னுடையபாட்டிமாரெழுவருமெங்கே
யிருக்கிறார்கள் உன்தாயார் எங்கேயிருக்கிறாள் நீஇங்கேவந்த வயண
மென்னவென்றுகேட்க அதாகுமாரனும் பாட்டனுக்குநமஸ்காரம்பண்ணி
ஐயா என்தயாரை ராட்சதனெடுத்துப்போனதும் அதுதெரிந்து நீங்
கள் தளமெடுத்துவந்ததும் ராட்சதனுங்களைக் கல்லாய்ச் சபித்துவி
ட்டதும் அதைச்சத்திராதிபதியிந்த நம்முடையபட்டணமுழுதும்பிடி
த்துக்கொண்டு என்பாட்டிமாரெழுவரையும் என்பெரியபாட்டியாரு
ச்சாதேவியையும் துரத்திவிட அன்றுராத்திரி பதினைந்துநாழிகையில்
அவர்களெழுவரும் மனங்கலங்கி குழந்தையாகியவென்னையுமெடுத்துக்
கொண்டு சங்கராபட்டணம்வந்துசேர்ந்து அந்தப்பட்டணத்துக் கதி
பதியாகிய மானபரராசாவின் ஆதரணையினுல் கானதுவரையில்சுகமே
யிருந்தோம் இப்படியிருக்க ஒருநாள் நமதுபூர்வோத்திர மென்னவெ

ன்று என்பாட்டிமாரைக்கேட்க அவர்களால்தெரிந்து நமதுதலைவிதி இ
ப்படியிருந்ததாவென்று பத்திரகாளிசந்நிதிக்குப்போய்ஸ்தோத்திரம்
பண்ணி அந்தஅம்மனுடைய வரப்பிரசாதத்தினால் சொர்ணக்குதிரையு
ம் இஷ்டசித்தியையும்பெற்றுக்கொண்டு சத்தசாகரமுந்தாண்டி இந்த
ப்பர்வதத்திற்குவந்து என்தாயாரைக்கண்டுபேசி ராட்சதன் உயிர்க்கி
ளியையுங்கொன்று அவனையுஞ்சம்மாரம்பண்ணி உங்களையு மெழுப்பினே
னென்றுசொல்ல அதுகேட்டுச்சுத்தவீரராசனும் சந்தோஷமடைந்து
அப்பா எங்களைப்போல அநேகமகாராசாக்கள் கல்லாயிருக்கிறார்கள் அ
வர்களையுமெழுப்பி அவர்களுடையசிறையும்விடுவித்தால் உனக்குகீர்த்
தியுண்டென்றுசொல்ல அப்படியேநல்லதென்று அவர்களையெல்லாம்
எழுப்பிவிட்டு பாட்டன்முதலாகியசகலமானபேரையும் அழைத்துக்
கொண்டு மல்லிகார்ச்சுனபுரத்திற்குச்சமீபத்தில்வந்துபாளையமிறங்கி
வல்லமைகேசரிராசனுக்குத்தெரியப்படுத்த அதுகேட்டுஅந்தராசனு
ம் சந்தோஷகரமாய் தன்மகளாகியஇந்திரரேகையுடனேஎதிர்கொண்
டுவந்து சுத்தவீரராசன்முதலிய சகலரையும் வரிசைப்படி மரியாதை
செய்து அழைத்துக்கொண்டுபோய் விடுதிவிட்டு சகலசம்பிரமத்துட
னே விருந்துசெய்வித்தார்கள்.

இப்படியிருக்க இரண்டுநாளைக்குப்பிறகு அதாசூரனும் இந்திரரே
கையைப்பார்த்து நாம் நமது பட்டணத்திற்குப் போகவேண்டுமென்
றுசொல்ல தகப்பனைக்கண்டு தெண்டனிட்டு என்னைப்பெற்றுவளர்த்
து இதுவரையில் உங்களிடமிருந்திழைத்துக்காப்பாற்றி இப்பொழுது
ஒருவருக்குப் பாணிக்கிரகணஞ்செய்துகொடுத்தீரே அவர் ஊருக்கு
ப்போகவேண்டி என்னை அழைக்கிறார் ஆதலால்நீங்கள் சந்தோஷமா
யனுப்பிவையுமென்றுசொல்ல அதுகேட்டுத்தாயுந்தகப்பனும் சந்தோ
ஷமாய்ப் பெண்ணுக்குக்கொடுக்கவேண்டியபலவரிசைகளுங்கொடுத்
துத் தாங்களும் அஸ்தினாபுரியைப்பார்க்கவேண்டுமென்று புறப்பட்டு
இருவர்சேனையும் ஒருமுகமாய்வருகையில் அதாசூரனுமந்திரபலத்தி
னால் இவர்களெல்லாரையும் சொர்ணக்குதிரைமேலேற்றிக்கொண்டு
சத்தசாகரமுங்கடந்து பத்திரகாளிகோயிலுக்குமுன்வந்திறங்கி அந்
தமகாகாளியைக்கண்டு அம்மா உன்கடாட்சத்தினால்சகலஜெயமும்பெற்
றேனென்று விண்ணப்பஞ்செய்ய அந்தத்தேவியும்சந்தோஷமா
ய் அப்பா அதாசூரா எல்லாரும்பசியாயிருக்கிறபடியால் சகலரையும்
சாப்பிடச்சொல்லென்று ஒருகுளிகை கொடுத்தமாத்திரத்தில் எல்லா
ரும் பதினெட்டுவகைபச்சடியுஞ் சாப்பிட்டுத் திருப்தியடைந்திருந்
தார்கள் பிறகு அதாசூரன் பத்திரகாளிக்கு நமஸ்காரஞ்செய்து நாம்
ஊருக்குப்போகவேண்டுமம்மாவென்று உத்திரவுகேட்க காளியும்

கூட்டிக்கொண்டு காண்டவனத்திற்குப்போய் பட்டினியாய்ப்படுத்து
க்கொண்டு நித்திரைபண்ணும்பொழுது உக்கிரபாண்டியராசனுக்கு ம
திகலங்கிப்போய் நாமிவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு காப்பாற்
றுகிறதற்கு நம்மாலேயாகாதென்று யோசித்து பாதைதப்பட்டு ஆபு
த்ருஸதிப்பானதுகளை சகலமும்வைத்துவிட்டுதன்தாயாரையாத்திரம்
முதுகின்மேலெடுத்துக்கொண்டு அப்பொழுதே அயோத்தியாபுரிபட்
டணத்தில் ஒருத்தர்மச்சாவடியில் வந்துதன்தாயாரைவிட்டுவிட்டு அந்த
ப்பட்டணத்திற்போய்ப்பிச்சைவாங்கித் தாயாருக்குவட்டநிறைய சா
ப்பாடுபோட்டுத் தானுஞ்சாப்பிட்டுக்கொண்டிருக்கான் இப்படியிருக்
கின்றநாளையில் உக்கிரபாண்டியராசனுக் குஷ்டரோகம்வந்து கை
காலுகுறைந்து அங்கவீகாரமாய்யிருந்தான் இப்படியிருக்கையில்உ
க்கிரபாண்டியன் காண்டாவனத்திலே விட்டுவந்ததேவிமார்கள் நித்தி
ரைதெளிந்தெழுந்திருந்துபார்த்தார்கள் இராசனையும் மாமியாரையுங்
காணாதபடியா லிதுவுஞ் சனிபகவானுடைய மகத்துவந்தானென்று
யோசனைபண்ணினார்கள் அதில்பவழசெந்தியாரும்தன்சக்களத்திமா
ர்எட்டுபேரையும்பார்த்து வேறொன்றுக்கும் யோசனை பண்ணவேண்
டாம் சனிபகவான்நமக்குதயவுபண்ணுவாரென்று தைரியஞ்சொல்லி
ராசன்தரித்திருந்தஆடையாபரணமெல்லாந்தான்தரித்துக்கொண்டு ப
ஞ்செட்டாயுதமுமெடுத்துக்கொண்டுதானொருபுருஷனுமிருந்துக்கொ
ண்டுசக்களத்திமாரெட்டுபேரையும்காத்துக்கொண்டிருந்தாள்.

அன்றிராத்திரிபோய் பொழுதுவிடிந்தது சூரியோதயமானதுஅந்
தவேளையில் அயோத்தியாபுரியைபாளப்பட்ட அயிராவதராசனிறந்து
போனான் பிறகு அந்தப்பட்டணத்திற்கு அவனுடையதாயாதிகள் பத்
துபேருண்டு அவர்களைச் சிங்காரஞ்செய்து ஆசாரத்திலிருக்கவைத்து
பட்டத்துயானையைசிங்காரித்துவிடுவோம் அந்தயானையும் யாரையெ
டுத்துக்கொண்டுவந்து சிங்காதனத்தில்வைக்கிறதோ அவர்களுக்குத்
தான் பட்டமென்றுயோசனைபண்ணி பட்டத்துயானையைச்சிங்காரி
த்துவிட்டார்கள் அந்தயானைகாண்டவனத்தை நோக்கிப்போய் அந்த
க்காட்டிலிருக்கிற உக்கிரபாண்டியன்தேவிமார் ஒன்பதுபேருக்குள்
புருஷவேஷமாயிருக்கிற பவழசெந்தியென்பவளை யெடுத்துமத்தக
த்தின்பேரில்வைத்துக்கொண்டு அரண்மனைக்குள்ளேபோய சிங்காதன
த்தின்பேரில்வைத்து கையைமுகர்ந்தது அதுகண்டு ராசமகாமந்திரி
முதலாகிய சகலமானபேரும் தெண்டம்பண்ணிகைகட்டிவாய்பொத்
திக்கொண்டு அப்போது பவழசெந்தியென்கிற ராஜனும் மந்திரியை
யழைத்து நம்முடையதேவிமார் எட்டுபேர் காண்டாவனத்திற்குள்
ளே அமிர்ததனையருகேயிருக்கிறார் அவர்களெட்டுபேருக்கும்எட்டுப
ல்லக்கனுப்பி அழைத்துவாருங்களென்றுசொல்ல அப்படியேஅவர்க
ளை அழைத்துவந்து அரண்மனையில்விட்டுராஜனுக்கு அறிக்கைசெய்
தார்கள் அதுகேட்டுமந்திரிமார்முதலாகிய சகலமானபேரையும்அவர்
கள்அரண்மனைக்கு அனுப்பிவிட்டுத் தன்னரண்மனைவந்து சக்களத்
திமாரெட்டுபேரையும்பார்த்து நீங்கள்பயப்படவேண்டாம் நமக்குசனி
பகவான்தயவுசெய்துகாப்பாற்றினார் ஆகையால்நான் உங்களுக்கு

ய்புருஷனும் நீங்களெனக்கும் பெண்சாதியுமாக நடந்துகொண்டிரு
ங்கள் அப்பால்சன்மாங்கிருபையால் உள்ளபடி நடக்குமென்று சக்கர
வர்த்திமாருக்குத் திட்டஞ்செய்து அன்றுபோய் மறுநாள்கொலுவைச்
சிங்காரஞ்செய்யச்சொல்லி சிங்காதனத்திலிருந்து இராச்சியபரிபால
னம் பண்ணிக்கொண்டிருக்கும்போது பவழகேதியார் தன்புருஷனை
யும்மாமியாரையுங் கண்டு பிடிக்கவேண்டுமென்று தன்பட்டணத்தில்
யார்வந்தாலும் தடைபண்ணாமல் சாதம்போட்டு அவர்களுக்குப்போ
ட்ட சாதத்திற்பாதியாவெடுத்துவைக்கிறார்களோ அவர்களைவெள்ளிமே
த்திற் கழைத்துவாருங்களென்று திட்டம்பண்ணியிருந்தா ளப்படியி
ருக்க ஒருநாள் உக்கிரபாண்டியராஜன் தாயார்மகளைப் பார்த்து அம்மா
இந்தப்பட்டணத்தில் அன்னசத்திரத்திலன்னம்போடுகிறார்களாம் இ
க்கவேளை எனக்குமெத்தபசியாயிருக்கின்றது நீபோய் அன்னம்வாங்கி
காவென்று வருந்திச்சொல்ல அதைக்கேட்டு அப்படியேபுறப்பட்டுச்ச
த்திரத்திற்குவந்து அங்கிருக்கிறவர்களைப்பார்த்து ஐயாமாரொருகோ
யாளினைக்குமெத்த பசியாயிருக்கின்றது இன்னோரந் தாங்கள் தயவு
செய்யவேண்டுமென்றுசொல்ல அதிலொருவன் நீயுமொருபக்கத்திலி
ருந்து சாப்பிடுமென்றுசொல்லி எல்லோருக்குமிலைபோட்டுச் சாதமு
தலானதும்பரிமாறினவுடனெல்லோருஞ்சாப்பிட்டார்கள் அதில் உக்கிரபாண்
டியராசன் தனக்குப்போட்டசாதத்திலும் பதார்த்தத்திலும் பாதியெ
டுத்துவைத்துமற்றபாதியைத்தான்சாப்பிட்டான் சத்திரத்தில் சாப்பிடுகிற
வர்களில் யாதாமொருவர் பாதியெடுத்துவைத்துச் சாப்பிடுகிறார்களோ
அவர்களையழைத்துவரும்படி ராசனுத்திரவுபண்ணியிருக்கிறபடியா
லப்படியே அன்றாடம் சோதித்து விடுகிறபடிக்கு அன்றைக்குமணி
யக்காரன்பார்த்துவரும்போது உக்கிரபாண்டிய ராசன் மாத்திரம்பாதி
யெடுத்துவைத் திருக்கிறதைக்கண்டு அழைத்துக்கொண்டுபோய் ராஜ
ன்முன்னேவிட்டார்கள் அதை இராசன்பார்த்து தன்புருஷனென்று
தெரிந்து சிங்காதனத்தைவிட்டிறங்கி பஞ்சவர்ணக்கிளியுடன் பேசுகிற
துபோல் நீயாரென்றுகேட்க நானொருபரதேசி என்தாயாரிருதாப்பி
யம் அவள் அன்னத்திற்கும் பதார்த்தத்திற்கும் ஆசைப்பட்டு சத்தி
ரத்திற்குப்போய் வாங்கிவரச்சொல்ல நானிங்கேவந்து எனக்குப்போ
ட்டசாதத்திலும்பதார்த்தத்திலும் பாதியெடுத்துவைத்துக்கொண்
மற்றதைநான் சாப்பிட்டேன் இப்படியிருக்க சாதத்தைத்திருடினு
னென்று பிடித்துவந்தார்களென்ன அதுகேட்டு நல்லது உங்கள்தாயா
ரெங்கேயிருக்கிறாளென்றுவினவ அக்கம்பாள் சாவடியிலேயிருக்கிறா
ளென்றுசொல்ல அத்தக்ஷணமே பல்லக்கனுப்பினைத் தமாமியாரைய
ழைத்துவரச்சொல்லிப் புருஷனை வண்டைசாலையிற் கொணக்போ

விட்டுத் தலைமுழுகவைத்துச் சுகபோசனத்துடன் சப்ரட்சணை செய்வி
த்தவருக்காலத்தில் குஷ்டரோகமுமநீங்கிப்போயிற்றுபிற்பாடுநான்
உக்கிரபாண்டியராசனிடத்திற்குப்போய் அவ்விராசனை இதுவரையில
நான்உங்களை வெகுவருத்தப்படுத்திவைத்தேன் இனியுங்களுக்கு நல்
லகாலம்வந்தபடியால் நீங்கள்சுகமாய் உங்கள்ராச்சியத்திற்குப்போய்
சேருங்களென்றுசொல்லிவந்தேன் பிறகுபவழக்கொடியும் வண்டகரா
ளைக்குப்போய் புருஷனையும்மாமியாரையும்பார்த்து சந்தோஷப்பட்டு
சகளத்திமார்கிட்டத்திற்குவந்து அவர்களையழைத்து நமதுபுருஷனும்
மாமியாரும்வந்தார்கள் நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாமெ
ன்றுசொல்ல அதுகேட்டுஎழுவரும்சந்தோஷமாய் அவர்களெட்டுப்பேரும்வ
ந்துசேர்ந்தார்களம்மாவென்றுகேட்க நான் அன்னசத்திரம்வைத்தது
ம்அதில் நம்புருஷன்வந்துசாப்பிட்டதும் பிறகுநடந்தசேதியும் விவா
ரமாகச்சொல்லக்கேட்டு அவர்களெட்டுபேரும் பவழக்கொடியைக் கட்
டிக்கொண்டு அம்மாஉன்னுடையபுண்ணியத்தினாலெங்களுக்கு மங்கி
லியபிட்சைகிடைத்ததென்று வெகுவாய்த்தோத்திரம்பண்ணினார்கள்
பின்பு பவழக்கொடியும் மாமியாரையும் புருஷனையுமழைப்பித்தாள் அ
வர்களாகிய அவர்களெட்டுபேரும்வந்து புருஷனுக்கும்மாமியாருக்கு
ந்தெண்டனிட்டு ஒருவரையொருவர்தழுவிக்கொண்டு நாங்கள் அஸ்தி
னபுரியைவிட்டுப் புறப்பட்டநாள்முதல் பட்டபாடுகளையெல்லாம்
சொல்லிப்பிரலாபித்து இன்றோடேநமதுசனிவியோசனமாயிற்றென்
றுசொல்ல உக்கிரபாண்டியனுஞ் சந்தோஷமாய்த்தேவிமாரைப்பார்த்
துநேற்றையதினம் சனிபகவான்என்னிடத்திற்குவந்து இனிமேலுங்
களுக்கொரு தொந்திரவுமில்லை உங்கள்பட்டணத்திற்குப்போய்ச்சுக
மாகவாழ்ந்திருக்கவென்றுசொல்லிப்போனார் ஆதலால்இனி நமக்கோ
ருபத்திரமும்வராதென்றுசொல்ல அதுகேட்டுபவழக்கொடியும்நீங்களி
ங்கேதானேயிருங்கள் நான் கொலுச்சாவடிக்குப்போய பட்டணத்து
க்கொருவனை நேமித்துவிட்டு நமதுபட்டணத்திற்குப்போவோமென்
றுசொல்லி புருஷனிடத்தில்விடைபெற்றுக்கொண்டு போய்வராவண்
டும ஆதலால் அயிராவதராசன் மக்காளிகளாகிய பத்துபேரையும் அ
ழைப்பிவையுங்களென்று திட்டம்பண்ணி அவர்கள்வந்தபிறகு அவர்
களில் மூத்தவனுக்குப்பட்டங்கட்டி மற்றஒன்பதுபேருக்குமிளவர
சுபட்டங்கொடுத்து மந்திரிமுதலான சகலமானபேருமஅவர்கள்சொ
ற்படி நீதிவழுவாமல் நடக்கும்படி திட்டப்படுத்திவிட்டு அரண்ம
னைக்குவந்து புருஷனைக்கண்டு தெண்டனிட்டு இனிநமதுபட்டணத்
திற்குப்போகலாமென்று நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டு புரு
ஷனையானைமேலேறச்செய்து நாமுஞ்சகளத்திமாரும் ஒவ்வொருப
ல்லக்கிலேறிக்கொண்டு டங்கெட்டோத்தியங்களும் தாம்தாமென்று
முழங்கசத்தக்கதாகச் சர்வசம்பிரமத்துடனே அஸ்தினபுரிக்குப்போய்
ச்சேர்ந்திருந்தார்கள்.

கேட்டீரோ அதாருராசனேயென்றுசனிபகவான்சொல்ல அதை
கேட்டு அதாருராசனும்சந்தோஷமாய் சனிபகவானைப்பார்த்துதேவரீர்
கிருபையுள்ளவரையில் எங்களுக்குக் குறையென்னவென்று தோத்தி

ரம்பண்ணி சனிபகவானுக்குசந்தோஷமாய் அப்பாதிதின்றைநினைமே டன் தகப்பன் முதலானவர்களுடனே அஸ்திநாபுரிக்குப்போய்சேர்ந்து சுகமாய்வாழ்ந்திருவென்று ஆசீர்வதித்துப்போனார் பிறகு அந்தராஜனும் யானைபாராசனைக்கண்டு பூரிப்புகொண்டு தெண்டனிட்டு ஐயாவிந்து வணையில் உங்கள்கெர்ப்பத்தில் வைத்து எங்களைக்காப்பாற்றினீர் நாங்களினிமேலெங்கள்பட்டணத்துக்குப் போய்வருகிறோமென்றுவெகுவாய்த்தோத்திரம்பண்ணி அவரிடத்தில்விடைபெற்றுக்கொண்டுநளசேகரத்து ன் தகப்பன் முதலானபேருடனேபுறப்பட்டு அஸ்திநாபுரிக்குப்போய்ச்சேர்ந்து சுகமாயிருந்தானென்று கட்டில் சொல்லிற்று.

கட்டில்சொல்கதை முற்றிற்று.

---

## கிளிக்கதை.

அதுகேட்டு விக்கிரமாதித்தன் சந்தோஷமாய் வேதாளத்தை அழைத்துப் பேசாமடந்தை பக்கத்திருக்கிறாள் அவள்பயந் தெளியத்தக்கதாய் நீயொரு பஞ்சவர்ணக்கிளியாய் அவள் மடியிலிருந்து ஒருகதை சொல்லென்று சைகைபண்ணிவிட்டு தான் பாராமுகமாயிருக்க வேதாளம் பஞ்சவர்ணக்கிளியாயுருவுகொண்டு பேசாமடந்தையைக்கண்டு திரேவந்திறங்கிமெள்ளமெள்ள உலாவிக்கொண்டிருந்தது அதைக்கண்டு பேசாமடந்தையும் தாதிகளைவிட்டு அச்சக்கிளியைப்பிடித்து வரச்செய்து மடிமேல்வைத்து விநோதமாக விளையாடிக்கொண்டிருந்தாள் அப்படியிருக்கவிக்கிரமார்க்கனுங்கிளியைப்பார்த்துபேசாமடந்தைதான் உன்னுடனேபேசிக்கொண்டு சுகமோகமாயிருக்கிறாளோதான் ஆருடனேபேசப்போகிறாள் நீயாகிலுமொருகதைசொல்லென்று கேட்க அந்தக்கிளியும் ஐயா உம்முடைய வரும்பேருந்தான் சொன்னால் அப்படியேகதைசொல்லுகிறேனென்றுசொல்ல உச்சினிமாகாளிபட்டணம் என்பேர்விக்கிரமார்க்கன் இந்தப்பேசாமடந்தையானவள் ஒருவரிடத்திலும் பேசுகிறதில்லையென்று வெற்றிக்கொடி கட்டிவைத்து வந்தராசாக்களையெல்லாஞ் சவுக்கடித்தோட்டப்பண்ணிமொட்டையுஞ்செய்தனுப்புகிறாளென்று சேதிகேட்டு நானும்வந்துகாத்திருக்கிறேனென்றுசொல்ல அதுகேட்டு அந்தக்கிளியும் விக்கிரமார்க்கராசனைப்பார்த்து ஐயா. உம்முடைய அழகுக்கும் வல்லமைக்கும்மற்றராசாக்களீடாவார்களா உம்முடையமகத்துவம் யாருக்குத்தெரியும் இவள் சிறுபெண்ணாகையாலும் இவளைச்சனிபிடித்திருப்பதினாலும் தெரிந்துகொள்ளவில்லை அந்தச்சனியினுடைய மகிமையையார்சொல்லுவார்கள் ஏகசக்கிராதிபத்தியம் பண்ணின சக்கிரவர்த்தியல்லவோ அந்தச்சனியினிடத்திலகப்பட்டு பலவருத்தமடைந்து பிறகுராச்சியபரிபாலனம் பண்ணினானென்று சொல்ல அதுகேட்டு பேசாமடந்தையு மாச்சரியப்

யாட்டு அந்தக்கிளியைப்பார்த்து அந்தச்சகஸ்திராதிபசக்கிரவர்த்திவர
லாறுமுழுதுஞ் சற்றேதெரியச்சொல்லென்றுகேட்க கிளியும்பேசாம
டதைகளைப்பார்த்து அய்யா தருமாபுரியென்றொரு பட்டணமுண்டு
அந்தப்பட்டணத்தையாளப்பட்டவர்சகஸ்திராதிபசக்கிரவர்த்திஅவர்
தேவி பஞ்சலட்சணகெந்தி அவர்நீதிவழுவாம ராச்சியபரிபாலனஞ்
செய்துவருங்காலத்தில் அவருக்குநெடுநாள் பிள்ளையில்லாமலிருந்து
பிறகு ஈஸ்வரகடாக்ஷத்தினாலே இரட்டைப்பிள்ளைபிறக்க அதுகளை நா
ளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகவளர்த்து சூரதேவன உக்
கிரதேவனென்று பேரிட்டுச் சகலவித்தையும் கற்பித்துவைத்தார்கள்
அப்படியிருக்க சகஸ்திராதிபசக்கிரவர்த்திக்கு ஏழரைநாட்டுச்சனிபிர
வேசகாலமாச்சுது அதுதெரிந்து சனிபகவானும்வந்து சகஸ்திராதிபச
க்கிரவர்த்தியைப்பார்த்து நா னிளமையில் வரவோ முதுமையில் வர
வோவென்றுகேட்க அவரும் சனிபகவானுக்குத்தெண்டனிட்டு சுவா
மிநீர் முதுமையில்வந்தால் நாங்கள்நிருவாகம்பண்ணமாட்டோம்இள
மையில்வந்தால் நிருவாகம்பண்ணுவோமென்று அவரிடத்தில் அனும
திபெற்றுக்கொண்டு பெண்சாதியிடத்திற்குவந்து சனிபகவான் சொ
ன்னதும் தான்சொன்னதும்விபரமாகச்சொன்னார் அதைக்கேட்டபஞ்
சலட்சணகெந்தியும் பயந்துநயந்து சிவன்செயலெப்படி நடக்கிருக்
கின்றதோவென் றெதிர்பார்த்திருந்தார்கள்இப்பால்சத்திராதியும்தள
மெடுத்துவந்து தருமாபுரிக்குச்சமீபத்திலிறங்கினான் அதைக்கண்டு ச
கஸ்திராதிபசக்கிரவர்த்தியும்பயந்து இதுவுஞ் சனிபகவான் மகத்துவ
க்காலமென்றெண்ணி திட்டம்பண்ணிக்கொண்டு பெண்சாதியையும் பி
ள்ளைகளையுமழைத்துக்கொண்டுபுறப்பட்டுச் சாமான்யபுறத்திற்குவந்
துசேர்ந்து அந்தப்பட்டணத்துப்பத்திரகாளிகோவில் திருப்பணிசெ
ய்கின்ற நூறுபேருக்கு மேஸ்திரியாகிய சகலவிற்பன்ன ஆசாரியென்
பவனைக்கண்டு ஐயாநாங்கள்ராசவம்சம் நாங்களிருப்பது உத்தரதேச
ம்சனிமகத்துவத்தில் சகலஐசுவரியத்தையும் சத்ராதிக்குத்தோற்றுவி
ட்டுவந்தோம் எனக்கொருவேலையுஞ்செய்யத்தெரியாதுநீர்பத்துவேலை
க்காரரைவைத்து சம்ரட்சணைசெய்கிறபடியால் எங்சமுசாரத்தையுங்
காப்பாற்றுவீரென்று என்குறையைச் சொல்லிக்கொண்டேனென்று
சொல்ல. அதுகேட்டு விற்பனஆசாரியும் மனமிரங்கி நீரும்எங்களோ
டேகூட ஒருவீட்டுக்காரராயிருமென்று தங்கள்குடிசைகள் பக்கத்தில்
ஒருகுடிசை கட்டிக்கொடுத்து ஒருகுறைவுமில்லாமல் காப்பித்துவந்
தான் இப்படியிருக்க ஒருநாள அந்தப்பட்டணத்தையாளப்பட்ட சத்
துருசேனனென்பவன் பத்திரகாளிதரிசனத்திற்குவந்து அரண்மனைக்
குப்போகையில் இராசன்வருகிறதைக்கண்டு சகலசெனங்களும் பார்
த்தார்கள் சகஸ்திராதிபசக்கிரவர்த்திபெண்சாதியும் குடிசைக்குள்ளி
ருந்து எட்டிப்பார்த்தாள் அதைராசன்கண்டு ஆசைகொண்டுமோகா
ந்தகாரனும் மேஸ்திரியையழைத்து இந்தக்குடிசைக்குள்ளே தேவரம்
பையைப்போலொரு பெண்ணிருக்கிறுளே அவளாரென்றுகேட்டமா

த்திரத்தில் மேஸ்திரியும் அரசனைவாரெடுக்கவொட்டாமல் ஐயா, அந்த ம்மாளெங்கள் குருபத்தினியென்றுசொல்ல அதுகேட்டராசனும்அப் படியாவென்று தலையசைத்து மற்றத் தச்சர்களையழைத்து உங்க ள்பெண்டுகளை அரண்மனைக்கனுப்பிவைத்தால் அரிசிபடிமுதலானபல வெகுமதியுந் தருகிறோமென்று சொல்லிப்போனான் அப்படியே மறு நாள் பஞ்சலட்சணகெந்தினியையும் அழைத்துக்கொண்டு அந்தப்பெண் டுகளெல்லாரும் அரண்மனைக்குப்போனார்கள் அதுகண்டு சத்துருசேன னும் சந்தோஷத்துடனே பஞ்சலட்சணகெந்தினியைமாத்திரம் நிறுத்தி மற்றவர்களுக்குப்படிகொடுத்தனுப்பிவிட்டு அந்தப்பதிவிரதாசிரோம ணியைப்பார்த்து நீயேன் தச்சனுக்குள்ளிருந்து வீணாய் வதிப்படுகி றாய் என்னோடேகூடியிருந்தால் சகலபோகங்களையுமனுபவிப்பாயென்று மோககாந்தனாகவெழுந்திருக்க அந்தம்மாள்கண்டு நாமிப்போதிருந்தா ல்கற்பழிந்துவிடுமேயென்றுயோசித்து சிவத்தியானஞ்செய்து தன் கையிலிருந்தகூடையைத் தலைமேல்கவிழ்த்துக்கொண்டு நான்பதிவிர தாகர்மமுடையவளானால் என்புருஷன்வந்துதேடுகிறபரியந்தம்இந்த க்கூடையும் நானும் ஒருகுண்டுக்கல்லாயிருக்கவேண்டுமென்றுசொல் ல அப்படியேகுண்டுகல்லாயிற்று அதுகண்டுசத்துருசேனனும் பயந் கொண்டந்தக்கல்லையுருட்டிப் பொக்கிஷத்தில்போட்டுவிட்டானிப்ப டியிருக்க சகஸ்திராதிபசக்கிரவர்த்தியும்சாயுங்காலமட்டும்மனைவிவரு வாளென்றுவழிபார்த்து சத்துருசேனன்பிடித்துக்கொண்டானென்று நிர்மாணித்து இனிநாமிருந்தால்நம்மையும்பிடித்துவெட்டுவானென்று அந்தட்சணமேபிள்ளைகளையழைத்துக்கொண்டு விந்தைநகரத்தைநோ க்கிவருகிறவழியில்ஓராற்றைக்கண்டு நீந்தமுடியாமலதின்கரையிலிருக் கிறபிள்ளையார்கோயிலிற் பந்தற்காலில்ஒருபிள்ளையைகட்டிப்போட்டு இருப்பிவரலாமென்று ஒருபிள்ளையைத்தோளில்வைத்துக்கொண்டு ஆ ற்றிலிறங்கி அக்கரையில்வைத்துவிட்டுத்திரும்பிவருகையிலவ்வாற்றில் வெள்ளம்வந்து இராசனையடித்துக்கொண்டுபோய்ஒருதிட்டிலேதூக்கி விட ராசன்சோர்வமாய்க்கிடந்தார் அந்தச்சமயத்தில்சாமானியபுரத்தி ல் சத்துருசேனனரண்மனையிலகன்னமிட்டுத்திருடிக்கொண்டுவருகிற சிலகள்ளர்களைச் சேவகர்கள் துரத்திவர அவர்கள் ஆற்றிலிறங்கிவரு ம்போது இந்தராசன்மேலில்சிலநகைகளைஎறிந்துவிட்டுப்போனார்கள் பிறகேவந்தசேவகர்கள் அதைக்கண்டு இவன்தான் திருடனென்று கட்டி சகஸ்திராதிபசக்கிரவர்த்தியை சத்துருசேனனெதிரே கொண்டுபோய் விட்டார்கள் அதுகண்டு சத்துருசேனனுமிவனைப்பார்த்து அடா கள் ளா உன்னுடனேவந்தகள்ளரெல்லாம் எங்கேபோனார்களென்றுகேட் க இவர்சும்மாயிருக்க அந்தத்தலையாரிகளைப்பார்த்து இவனைக்கொண் டுபோய் ஒருகாலையுங்கையையும்வாங்கி விடுங்களென்றுசொல்ல அப் படியேசெய்துவிட்டார்கள் பிறகு சகஸ்திராதிபசக்கிரவர்த்தியும் ஒரு கோலை யூன்றிக்கொண்டு ஆறுகடந்து விந்தைநகரத்திற்குப்போய்ஒரு

காதன்வீட்டிேனாசற்படியில் இலேசமாய்நிற்க அவனிவளைக்கண்டுஐயா
நீயார் உமக்குக்காலுங்கையும்போனவிதமென்னவென்றுகேட்க அப்போ
தான் வயத்திற்கில்லாமற் சாமான்யபுரத்திற்சத்துருசேனனென்னுமவனி
யிலிருடக்கண்டு கைகால்வாங்கிவிட்டார்களென்றுசொன்னுர் அந்த
த்தருமதாசரியும் இவரைப்பார்த்தாலிராஜவடிவாயிருக்கிறதுஇதென்
னகாரணமோ தெரியவில்லையென்றுநினைத்து அந்தக்காய மாறும்படி
செல்தருகிறேன் நீரொன்றுக்கும்விசனப்படவேண்டாமென்றுசொல்
லி அப்படியேயாதரித்துவந்தா னிப்படியிருக்க அவ்வூர்றங்கரைவழி
யாக இரண்டிடையர்பெண்கள் மோர்விக்கவந்தார்களவர்களுக்குப்பி
ள்ளையில்லாததா லந்தப் பிள்ளையார்கோயிற்காலில் கட்டியிருந்தபிள்
ளையைஆசையோடுயெடுத்துத் தனக்குப்பிள்ளையார்தயவுசெய்தாரென்
று மூத்தவளெடுத்துக்கொண்டு சந்தோஷமாய் கரையருகில்வந்து இந்
த கயிருந்தபிள்ளையை இளையவள்கண்டு எடுத்துக்கொண்டுமுத்தமிட்டு
இருவருஞ்சந்தோஷத்துடனே வீட்டிற்குப்போய்ச்செல்வமாய்வளர
த்தார்க ளந்தப்பிள்ளைக்கு எட்டுவயதானபின்பு ஆட்டுமந்தைக்குப்
போகச்சொல்ல அவர்கள்போகாம லையடும்வில்லும் எடுத்துக்கொண்
டுவிளையாடிவர அதுகண்டவர்களையழைத்துக்கொண்டுஓடித்துறைமரி
ல்சேவகம்வைக்க அவர்களப்படியேசெய்துவந்தார்கள்இப்படி அந்தப்
பட்டணத்தையாளப்பட்ட சத்துருசங்காரராசனுக்குப் பிள்ளையில்லா
மலுமையாயொருபெண்பிறந்தது அந்தப்பெண்ணைசெல்வமாகவளர
ர்த்து அன்னவதனியென்றுபேரிட்டு பத்துவயதாயிருக்கையில்மாலை
யிடவந்தராசாக்களையெல்லாம் அந்தப்பெண் இகழ்ச்சிபண்ணித்தொ
ண்டுவந்தா ளிப்படியிருக்க அந்தப்பெண்ணுக்குக்கல்யாணஞ்செய்யா
மல்வைத்திருக்கலாகாதென்று தாயுந்தகப்பனும்யோசித்துசகலராசா
க்களுக்கும்ஓலையனுப்ப அவர்களெல்லாரும்வந்து சேர்ந்தார்கள் அந்த
வனத்தைக்காத்துக்கொண்டிருந்தசகஸ்திராதிபசக்கிரவர்த்தியும் கோ
லேபூண்டுக்கொண்டு வேடிக்கைபார்க்கவந்திருந்தாரிப்படிச்சகலதேச
த்திராசாக்களும் வந்தவுடன் சத்துருசங்காரராசனும் பெண்ணைச்சிங்
காரித்து அந்தச்சபையி லழைத்துவந்து ஒருபுஷ்பமாலையைக்கொடுத்
து அம்மா இதைச் சுழற்றியெறிந்தால் அதுயார்கழுத்தில் விழுகின்ற
தோ அவர்தானுனக்குநாயகனென்றுசொல்ல அதற்கிந்தப்பெண் சம்
தித்து சிவத்தியானஞ்செய்து அந்தமாலையைச்சுழற்றியெறிய அதுபோ
ய் முடவனுகிய சகஸ்திராதிபசக்கிரவர்த்திகழுத்தில்விழுந்தது அதை
த்தாயுந்தகப்பனுங்கண்டு மனம்விண்டு ஐயோ எவ்வளவோபட்டராசா
க்களையெல்லாம்பழித்தமகளுக்கு இவ்வகைப்பட்டமுடவன்வாய்த்தா
னென்றழுது சுவாமியைத்தொழுது அன்னவதனியைமுடவனிடத்தி
ல்விட்டுப்போனுர்கள்.

அன்னவதனியும் முடவனைப்பார்த்து ஐயா நமதுவீட்டிற்கு நா
ம்விட்டுக்குப்போகலாம் வாருமென்றழைக்க அவருஞ்சம்மதியாமல் நீ
யோராசகுமாரத்தி நானோமுடவன் நானொருநந்தவனத்தைக்காத்துக்
கொண்டு ஒருபடிநெல் கூலிவாங்கிச் சீவனஞ்செய்கிறேன் நீயெல்லாம்

த்திலிருக்கத்தகாதென்றுதடுக்க அதுகேட்டு அன்னவதனையுந்தானு
னக்குமாலையிட்டபொழுதேஉமதுசுகதுக்கத்துக்குமுரியவளென்றெ
ழுந்திருந்து அவர்கையைப்பிடித்துக்கொண்டு நந்தவனத்திற்குப்போ
யக்குடிசைக்குள்ளிருந்தநெல்லையெடுத்து அரிசியாகச்சமைத்துக் கல
வைக்கீரையும்பறித்துச்சமைத்து வென்னீர்வைத்து புருஷனைக் குளி
ப்பாட்டி சாதம்பரிமாறி அவர்சாப்பிட்டமீதியைத் தானுஞ்சாப்பிட்டு
விருந்தாள் இந்தச்சேதிதருமதாசரியறிந்து ஐயாசமுசாரம்பலக்கபடி
யால் தினமிரண்டுபடிநெல் வாங்கிக்கொள்ளுமென்று கொடுக்க அ
தைச்சந்தோஷமாய்வாங்கி புருஷனைப்போஷித்துக்கொண்டு தானுட
த்திலிருந்தசேலையில் பாதிகிழித்துக்கொடுத்து சவரட்சனைசெய்து
வந்தாள் இப்படியிருக்க ஒருநாள்இராத்திரிபதினாலுநாழிகையில்நித்
திரைவேளையில்சனிபகவான்குடிசைக்குப்புறம்பேநின்றுஇவர்பேரை
ச்சொல்லிக்கூப்பிட்டார் இவர்காலைப்பிடித்திருந்த அன்னவதனை கே
ட்டுப் புருஷனிடத்திற்சொல்ல அவர்ஆரென்றுகேட்கச்சொன்னார் அ
ப்படிகேட்டவள் நான்சனிபகவான் அவருக்குக் காலுங்கையும்வரும்
எழுந்துவரச்சொல்லென்றுசொல்ல அதுகேட்டுச்சந்தோஷமா யெழு
ந்துபோய் தெண்டனிட்டு இதுவரையில் படவேண்டிய துன்பமெல்
லாம் பட்டுத்தீர்த்தேன் இனியாவது தேவரீர் இரங்கிக்கவேணுமென்
றுசொல்ல சனிபகவானுஞ்சந்தோஷமாய் இன்றோடே உங்கள் துக்க
ம்போச்சுது இனிஉன்பெண்சாதியும் பிள்ளைகளும்வந்துசேருவார்கள்
சுகமாய் உன்பட்டணத்திற்குப்போய்வாழ்ந்திருக்கவென்று ஆசிர்வதி
த்துப்போனார் பிறகு அன்னவதனையும் புருஷனைப்பார்த்து ஐயாஇந்த
மட்டும் உம்முடைய சவிஸ்தாரத்தைச்சொல்லாமற்போனீரே இப்போ
தாவதுசொல்லுமென்றுகேட்க தன்னுடைய ஊரும்பேருஞ்சொல்லி
த் தன்னைச்சனிபன்பிடித்த நான்முதல் பட்ட பாடுகளையும்விபரமாகச்
சொல்ல அன்னவதனைகேட்டு சந்தோஷசமுத்திரத்திலமுழுகியவளா
ய்ப் புருஷனிடத்தில்விடைபெற்றுக்கொண்டுபோய்த்தாய்தகப்பனைக்
கண்டு மகிழ்ச்சிகொண்டு இந்தச்சேதிமுழுதுஞ்சொல்ல அவர்கள்கே
ட்டுச்சந்தோஷமாய் மருமகனிடத்திற்குவந்து ஐயா நீர் எங்கள்பெண்
ணைமாலையிட எவ்வளவுபாக்கியம்பெற்றோமென்று மனதிலெண்ணிப் பல
விதமாகத்தோத்திரம்பண்ணி மகளையும் மருமகனையு மணமனைக்கு
அழைத்துக்கொண்டுபோய் சர்வாலங்காரமுஞ் செய்வித்து பட்டண
முழுதுஞ்சிங்காரித்து ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களையு மழைப்பித்
து அக்கினிசாட்சியாய் சகஸ்திராதிபசக்கிரவர்த்திக்கு அன்னவதனை
யைத் தாரைவார்த்துக்கொடுத்தார் பிறகு அன்னவதனையும் சகஸ்திரா
பசக்கிரவர்த்தியும் அவ்விடத்தில்தானே மன்மதனும் ரதியும்போல்
சுகமாய்வாழ்ந்திருந்தார்கள்.

இந்தச்சேதியெல்லாஞ் சத்துருசேனன்கேள்விப்பட்டுமெத்தவும்பயந்து தன்மொக்கிஷத்திலிருந்த குண்டுக்கல்லைகொண்டுபோய் ஆற்றில்போட்டுவிடச்சொல்ல அவதையெடுத்துறைக்கிறபிள்ளைகள்கண்டெடுத்துக்கொண்டுபோய்வைத்துப் பொழுதுவிடிந்தவுடன் ராசனுக்குத்தெரிவிப்போமென்றுயோசித்துத் தலையாட்டியில்வைத்துப்படுத்துக்கொண்டிருந்தாரப்படியிருக்க மூத்தவனுந் தம்பியைப்பார்த்து அப்பா எனக்கு நித்திரைவரவில்லையே நீ ஒருகதைசொல்லென்று கேட்க நானக்கென்னகதைதெரியும் நீதான்சொல்லென்றுசொல்ல அப்பா எனக்குத்தானென்னதெரியும் நம்முடையகதை சொல்லுகிறேன் கேளென்று தாங்கள்பிறந்ததும் வளர்ந்ததும் சனிபிடித்தான்முதலாக இதுவரையில்நடந்த சேதிமுழுதுஞ்சொல்லி அப்பா நீ நமது தாயுந்தகப்பனையுங்காணும்படி ராத்திரிதான் சொற்பனங்கண்டேனென்றுசொன்னான் இதுகளெல்லாங் குண்டுக்கல்லிலிருந்த பஞ்சலட்சணகெந்திகேட்டு நம்முடையபிள்ளைகள்தானென்று சந்தோஷமாயிருந்தாளிப்படியிருக்கப் பொழுதுவிடிந்தவுடன் அவர்களிருவருங்குண்டுக்கல்லையெடுத்துப்போய்ச் சகஸ்திராதிபசக்கிரவர்த்தி சமுகத்தில்வைத்து அதுவந்தவழியைச்சொல்லிப்போனார்கள் பிறகுசகஸ்திராதிப சக்கிரவர்த்தியும் அந்தக்கல்லைத் தொட்டுப்பார்த்தவளவில் அந்தக்கல்நிமிர்ந்து பஞ்சலட்சணகெந்தியும் வெளியேவந்து புருஷனுக்குத்தெண்டனிட்டுநிற்க அதைக்கண்டுராசன் மிகவும் ஆச்சரியப்பட்டு உனைச்சத்துருசேனன்பிடித்துக்கொண்டானே நீ இந்தக்குண்டுக்கல்லிலிருந்து புறப்பட்டவயணமென்னவென்றுகேட்க அந்த அம்மாளும் புருஷனைப்பார்த்து தான்படிவாங்கப்போனதும் அவன் சொன்னதும் தான்சபித்துக்கொண்டதும் விவரமாகச்சொன்னவுடனே ராசன் பெண்சாதியைப்பார்த்து அதுமுதல் தான்பட்டபாடுகளையும் பிள்ளைகள்போனசேதியையுஞ்சொல்லிப்பிரலாபிக்க பெண்சாதியும் புருஷனைப்பார்த்துநீரொன்றுக்கும்விசனப்படவேண்டாம் இந்தகுண்டுக்கல்லையெடுத்துவந்தவர்கள்தான் நம்முடையபிள்ளைகளென்று சொன்னாள் அதைக்கேட்டுராசன் அந்தபிள்ளைகளையும் அவர்களைவளர்த்த இடைச்சியையும் அழைப்பித்து இந்தப்பிள்ளைகள் உங்களுக்கு அகப்பட்ட வரலாறு சொல்லுங்களென்றுகேட்க அவர்களும்ராசனைப்பார்த்து ஒருசேதியும் ஒளிக்காமல்நடந்தபடிசொல்ல அதைக்கேட்டுராசனும்சந்தோஷமாய்ப்பிள்ளைகளையெடுத்து மடிமேல்வைத்துக்கொண்டு அந்தஇடைச்சிகளுக்குப்பல வெகுமதிகள்செய்து சந்தோஷமாயனுப்பிவைத்துத் தம்மையாதரித்ததாசரியையும் அழைப்பித்து அவனுக்குப்பல வெகுமதிகள்கொடுத்தனுப்பினார் அதன்பின்பு அந்த ராசனும் மகாசந்தோஷத்துடனேயாமனுஷாக்கண்டு தம்முடைய பட்டணத்திற்குப் போகவேணுமென்றுசொல்லிப் பலவரிசைகளும்பெற்றுக்கொண்டு சதுரங்கபலசேனைகளுடன்புறப்பட்டுச் சாமன்யபுரத்தைநோக்கிவருகையில்இந்தச்சேதி சத்துருசேனன்கேட்டு அப் பட்டணத்தைவிட்டு ஓடிப்போய்விட்டான் பிறகுசகஸ்திராதிபசக்கிரவர்த்தியும் அந்தப்பட்டணத்திற்போயின்கி முன்னால் தனக்குஉதவிசெய்த சிற்பன ஆசாரியை யழைப்பித்து

அவமரைக்கப்பட்டணத்திற்கு ராசாவாக்கி அவரிடத்திற் செலவுபெற்றுக்கொண்டுதனசேகரத்துடனேபுறப்பட்டுத் தர்மபுரியைநோக்கி வருகிறபோது இதுதெரிந்துஅவரிடத்தில்முதல்மந்திரியாயிருந்த புத்திசாலியென்பவன் எதிர்கொண்டுவந்து ராசனைக்கண்டு தெண்டனிட்டுநிற்க ராசனும்அவனையாதரித்து மகாசந்தோஷத்துடனே தம்முடையபட்டணத்திற்குப்போய் சத்துருசெயம்பண்ணிப் பட்டணத்தையரசாட்சிசெய்துகொண்டிருந்தாரென்றுசொல்ல அதைக்கேட்டுப் பேசாமடந்தையும் கிளியைப்பார்த்து இனியெனக் கென்னகெதியென்று கேட்க அம்மா இன்றோடே உன்சனியன்விமோசனமாச்சுது நீகர்வம் விட்டு விக்கிரமார்க்கனுடையபாதத்தில் சரணுகெதியென்று விழுந்தாலவர் உனக்குக்கெதிசொல்லுவாரென்றுசொல்ல அந்தட்சணமேயெழுந்திருந்து விக்கிரமார்க்கராசனுக்குத்தெண்டனிட்டுத் தேவரீருக்குநானடிமையானேன் என்னை விவாகம்பண்ணிக்கொள்ளுமென்று சொல்லநீமக்குஅடிமையானபோதே காமுவைக்குச்சகப்பனுச்சுது ஆதலால்இன்னொருவருக்குக் கலியாணம்பண்ணி வைக்கிறேனென்று சொல்லிப் பேசாமடந்தையையழைத்துக்கொண்டு விக்கிரமார்க்கனும் உச்சினிப்பட்டணத்தை நோக்கிவருகையில்ஒருராசகுமாரன் குறுக்கே வந்துஐயாநான் சிந்துதேசம் என்பேர்மன்மதசிங்கன் எனக்கிஷ்டமானபெண்கிடையாமல் காமநோயால்வருந்துகிறேன் இந்தப்பேசாமடந்தையைக்கொடுத்தால் உயிரோடிருக்கிறேன் இல்லாவிட்டால்இறந்துபோகிறேனென்றுசொன்னவுடன் விக்கிரமார்க்கன்பேசாமடந்தையைப்பார்த்து உனக்குச்சம்மதியாவென்றுகேட்க ஐயா அவர்பிராணத்தியாகஞ்செய்துக்கொள்ளுகிறேனென்றதோஷம் எனக்கும்வேண்டாம் தங்களுக்கும்வேண்டாம் என்னையே கலியாணம் பண்ணிக்கொடுமென்றுசொல்ல அவ்விடத்திற்றானே அவர்களிருவருக்குங் கலியாணமுடித்துவைத்து பத்துகோடி இராச்சியமுஞ்சீதனமாகக்கொடுத்து பின்பாடுவிக்கிரமார்க்கராசனவர்தம்முடையபட்டணத்திற்குவேதாளத்துடனேவந்துசேர்ந்து நடந்தசமாச்சாரமெல்லாம்பட்டியாகியமந்திரியுடனேசொல்லிக்கொண்டுதேவசிம்மாசனத்திலிருந்து நீதிவழுவாமல்இராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தார்போசராசனே உமக்கப்பேர்க்கொத்தவல்லமையிருக்குமாகில் இச்சிங்காதனத்தில்வந்தேறுமென்று பத்தாம்படிக்குக் காவலாகிய சற்குணசித்திப் பதுமை சொல்லப் போசராசன் அகம்வாடி முகம்வாடி இறங்கிக் களைத்துப் போனான்.

பத்தாம்பதுமை சொல்கதை முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினோராம்படிக்குக் காவலாகிய

# சகலகலாவல்லிப்பதுமைசொல்கதை.

—— * ——

பதினோராநாள் காலையில் போஜமகாராசன் ஸ்நானஞ்செய்து செபதபம் தானதருமம்பண்ணிச் சிங்காசனத்துக்கும் பூசைநைவேத்தியங்கொடுத்து இன்றைக்காகிலும் எப்படியாகிலும் சிங்காதனமேறவேண்டுமென்கிற ஆசையினாலே சிங்காதனத்தண்டை வந்து நமஸ்கரித்து நின்றான் அப்போது கொலுநிறைந்த ராசவர்க்கமும் மகுடவர்த்தனர் மன்னர் மண்டலீகர் பெரியோர்கள் மந்திரிப்பிரதானிகள் சகலமானபேரும் கூடியிருக்க மேளவாத்தியங்கள் முழங்கவும் நாடகசாலைப்பெண்கள் நாட்டியமாடவும் கின்னரர் கிம்புருடர் சித்தவித்தியாதரர் கெருடகாந்தருவர் பாடவும் இப்படி வெகுசம்பிரமத்துடனே கொலுநிறைந்திருக்கும்போது போஜராஜன் வலதுகாலைத்தூக்கிப் பதினோராவதுபடியில் வைத்தான் அப்படிக்குக்காவலாகிய சகலகலாவல்லியென்னும்பதுமையானது கைகொட்டிக் குலுங்கக்குலுங்கச்சிரித்துச் சொல்லுகின்றது;

வாராய்போஜமகாராஜனே சம்பாபுரியென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்திலே பத்திரசேனனென்றொரு செட்டி அவனுக்கு அனேககோடி தனமுண்டு அவனும் தானதருமம்பண்ணி தன்னுடைய பிள்ளை சுபசேந்திரனென்கிறவனுக்கு இருபதுகோடி திரவியம் வைத்து அவன் காலங்கழித்துப்போனான் அந்தப்பிள்ளையும் தானதருமம்பண்ணாதவன் மனிதனல்லவென்றெண்ணி இருக்கிறதனமெல்லாமெடுத்துக்கான தருமம்பண்ணினான் பெரியோர்களாயிருக்கிறபேர்கள் இப்படிச்செலவுபண்ணலாமோ பிதாவானவன்தேடிவைத்ததிரவியத்தைப்பத்திரம்பண்ணிக்கொண்டு தான்தேடியதனமெல்லாம் தானதருமஞ்செய்துக்கொண்டு இதுவல்லாமல் தான்தேடினலாபத்திலே தானதருமங்களைப்பண்ணவேண்டுமேயல்லாமல் முதலைச்செலவழிக்கப் போகாதென்றெண்ணிப் புத்திசொன்னார்கள் சொன்னபுத்திகேளாமல் செலவுசெய்து அழித்துக்கொண்டிருந்தான் பின்பு எல்லாருங்கூடிக்கொண்டு தகப்பன்வைத்தபொருளை செலவுபண்ணிவிட்டு கெட்டுப்போனானென்று எல்லாருஞ்சொல்லத்துவக்கினார்கள் அவனும் பெரியோர்கள்சொல்லைக்கேளாமல் இப்படிவந்ததேயென்று இனியிந்தப்பட்டணத்திலே இருக்கப்போகாதென்று புறப்பட்டு தேசாந்திரியாய்ச்சஞ்சரித்தான் இப்போது மதுராபுரியென்கிற பட்டணமேலநாள் அங்கேஒருபிராமணன்வீட்டிலே அசனம்பண்ணி அன்றையத்தினம் பட்டணத்திலேயிருந்தான் கிஜராத்திரியிலே ஒருபெண்ணானவள் ஒத்தைக்காலாக அபயமிட்டழுதாள் அதுகண்டு மற்றநாள் உச்சினியெல்லைவந்து விக்கிரமார்க்கனைக்கண்டு தன்னுடைய வர்த்தமானமெல்லாஞ்சொல்லி தேசாந்தி

ய்ப்போய் இரிக்கவயணமுஞ்சொன்னவுடனே ராசாவே நீப்போய்வந்த தேசங்களிலே அதிசயங்களுண்டாமென்று கேட்டார் அதற்குச்செட்டி சொன்னது நான் வருகிறவழியிலே மதுராபுரியென்கிறபட்டணத்திலேயும் அதிசயமுண்டென்றுசொன்னான் அப்பொழுது விக்கிரமார்க்கனெழுந்திருந்து அந்தச்செட்டியைக் கூட்டிக்கொண்டு மதுராபுரி பட்டணமேவந்து ஒருபிராமணனை வீட்டிலேயிருந்தார்கள் அன்றிராத்திரியும்அந்தப்பட்டணத்திலே ஒருபெண்ணானவள் அழயிட்டழுதாள் அதைக்கேட்ட விக்கிரமார்க்கன் ஒருவனாகப் புறப்பட்டுப்போனான் அந்தருணத்திலே மேகம்போலே ஒருராக்ஷதன்வந்து ஒருபெண்ணினுடையதலைமயிரைச் சுற்றிப்பிடித்துக்கொண்டு அடிக்கிறதைக்கண்டு வாராய்பெண்ணே நீயழவேண்டாம் உன்னைரட்சிக்கிறேன் பயப்படாதேயழவேண்டாமென்றுசொன்னார் அந்தவார்த்தையைராக்ஷதன் கேட்டுகோபாக்கினியாய்க் கண்களில் நெருப்புப்பொறிபறக்க விக்கிரமார்க்கனுடனே சண்டைக்குவருகிறபோது அப்போது அந்தராட்சதனை இரண்டுதுண்டாக வெட்டியெறிந்துவிட்டான் அப்பொழுது ஆச்சரியகரமாக ஆகாயத்திலே அசரீரிவாக்காக ஒருவார்த்தைபிறந்தது அதேதெனில் அந்தராட்சசனானவனை தேவேந்திரனுடனே எதிர்த்துநின்று தாக்கலாகும் பண்ணினவன் அப்படிப்பட்டதேவர்களுக்குப்பயப்படாதவன் அப்பேர்க்கொத்தராட்சதனைக் கொன்றுவிட்டியென்றுசொல்லிற்று.

அப்பொழுது விக்கிரமார்க்கன் அந்தச்செட்டியைக் கூட்டிக்கொண்டு மதுராபுரிப்பட்டணம்வந்து ஒருபிராமணன்வீட்டில்போசனஞ்செய்திருந்தார்களே அன்றிராத்திரியும் அந்தப்பெண்ணானவள் அழுததைக் கேட்டு விக்கிரமார்க்கனுக்குச்செட்டிசொல்லவுடனே விக்கிரமார்க்கன் மந்திரவாளையுருவிக்கொண்டு தனியேபுறப்பட்டு ஒருவருக்குந்தெரியாமல் அந்தப்பெண்குரலோசையையாடிப்போய் ஒருபக்கத்திற்பதுங்கிப்பார்த்துக்கொண்டிருக்கும்போது செவ்வானங்கலந்ததைப்போல்சிவந்தமயிரும் கறுத்தவுருவமும் கோரப்பல்லும்வெடித்தகுரலும் நெருப்பாகியகண்களுமுடைய ஒருராட்சதன் அழகியவோர்பெண்ணின்தலைமயிரைப்பிடித்துத் தரையிற்றள்ளிக்கொண்டுவாளாலடிக்கிறதை விக்கிரமார்க்கன்கண்டு தயிரியத்துடன்எதிர்சென்று ஏனடிக்கிறபடிக்காரே அப்பா இந்தப்பெண்பேரிலென்னகுற்றமென்று அரசன்கேட்க இராட்சதன்கோபித்து பல்லைக்கடித்துவெறித்துவிழித்து என்பெண்சாதியையாணடித்தால் நீயாரடா கேட்கிறவனென்றுராசன்பேரில் எதிரிட்டபோது சிலம்பசாகசமும் பாணுமுதலிய வாள்வாக்குவரிசையுந் தேர்ந்த விக்கிரமார்க்கராசனொட்டியபதங்கி துஷ்டனைஇரண்டுதுண்டாகவெட்டியெறிந்து அந்தப்பெண்ணைப்பார்த்து அம்மா நீ பயப்படாதேயென்று திட்டஞ்சொல்லும்போது அந்தராத்திரியில் ஆச்சரியமாய்ஆகாயத்திலிருந்து அசரீரிவாக்கியமொன்றுபிறந்தது.

அஃதென்ன வெனில், ஓ, திடகாத்திரதேக விக்கிரமார்க்கனே கேளும் இந்தஅரக்கன்தேவர்களுக்குக்கொடுமைகளைச்செய்துமகா

னுங்களுடையதவத்தையழித்துயாகாதிகிர்த்தியங்களைக்கெடுத்துஎவர்களுக்கும் பயப்படாமல் அக்கிரமமென்னும்மூட்டையைக்கட்டிக்கொண்டுதிரிந்தவன் இவனெப்போ தொலைவா னென்றுஎல்லோருஞ்சாபஞ்செய்து அவனுக்குநடுங்கிக்கொண்டிருந் தார்கள் அப்பேர்ப்பட்ட கொடியபாவியை நீகொன்றுவிட்டபடியால் அவனுடையபலங்களும் வரங்களும் உன்னைச்சேரக் கடவதென்று இந்தவாக்கியம் பிறந்தபோது தேவர்கள் புஷ்பமாரிபொழிந்து வாழ்த்தினார்கள் அவர்களைப்பணிந்துகொண்டு அரசனானவன் அந்தப்பெண்ணை நோக்கிஅம்மணிநீயார் உன்பேரென்ன இந்தப்பாவியின் கையி லகப்பட்டுஇப்படி வருத்தப்படுவானேன் உன்னுடைய விர்த்தாந்தத்தைச்சொல்லுமென்று வேந்தன் கேட்க அந்தப் பெண்ணானவள் ராஜனை வணங்கி என்றந்தையாகியதேயாசும்ம விந்தமாகரமென்னும் இந்தப்பட்டணத்தில்முக்தியிருவர்க்கவித்துவான் தர்மனென்பவரொருவருண்டு அவருக்குப் அவர்பெண்சாதி சந்திரசேனைக்கும் பெண்ணாகப்பிறந்து பருவபக்குவமாகைகணத்தில் என்தாயாகிய சந்திரசேனைக்குத் தெரியாமல் மனவஞ்சமாகிய சோரதோஷஞ் செய்தேன் அந்தத்துர்நடத்தைதெரிந்து கோபங்கொண்டஎன் தாயானவள் நீராட்சத னிடத்திலகப்பட்டு இதற்குத் தகுந்த தண்டனைநீ யனுபவிக்கக் கடவையென்று சபித்தாள் உடனே நான்பயந்து அவள்காலடியில் விழுந்துதாழ்ந்து அம்மாசேய்செய்தபிழையைத் தாய பொறுக்கவேண்டுமென்று வேண்டினேன் பெற்றமனம் பித்தாகையால்மனமிரங்கிப்பிரதிசாபமிட்டாள் அதாவது என்னுடைய வாக்குதப்பாமல் நீசிலகாலம் வருத்தப் பட்டுக்கொண்டிருக்கும்போது உச்சினிமாகாளி புரத்தை யாளாநின்ற விக்கிரமார்க்கராஜன் ஒருவகையினால் அந்தகாட்டுக்குவந்து நீ வருத்தப்படுவதைக் கண்டு இரக்கப்படுவார் அப்போது அந்தராட்சதனுக்கும் அவருக்கும் சண்டைவிளைந்து அந்தராஜனால்ராட்சதன் னிறந்துபோவான் அந்த புண்ணியவானுடைய கண்ணைருட் பட்டவுடனே நானிட்டசாபம்நீங்கும் அப்பால் என்னிடம்வந்து சேருவாயென்று எங்கள்தாயார் சொல்ல அன்றுமுதலின்றைய வரையிலும்மாதாமனமெரியவாழாளொருநாளுமென்னும் பழமொழிக்கிணங்கப் படாதபாடும் பட்டுக்கொண்டிருந்தேன் பாக்கியவானேஉம்மாலேயின்றுபேர்க்கியமானேன்மேலும்இந்த அரக்க னுடைய அனியாயங்களை வாக்கினாற் சொல்லப்படாது அனேகம்அரசைசழித்து அவர்களுடைய பொக்கிஷங்களை யெல்லாங்கொள்ளையடித்த கோடான கோடிதிரவியங்களை இவ்விடத்திற் புதையற்செய்திருக்கிறான் அந்தத் திரவியங்களை யெடுத்து உமதிஷ்டப்படிக்குச்செலவுசெய்துக்கொள்ளுமென்று அந்தஸ்திரீயானவள் சொல்ல அதைக்கேட்டு அரசனானவன் அந்தத் திரவியங்களை யெல்லாமெடுத்து இந்தப்பெண்ணுக்குப் பாதியும் தன்னையழைத்துவந்த செட்டிக்குப்பாதியுங்கொடுத்து இந்தப்பெண்ணை அவளுடையதாயிடத்திற்கனுப்பிவிட்டு செட்டியைக்கொண்டுபோய் அவனுடைய பட்டணத்தில் விட்டு அவனுக்குக்கொடுத்த திரவியத்தை வேதாளத்தால் கொண்டுபோய் கொடுப்பித்து தானும் உச்சினிமாகாளி பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

தான் ஓ போஜ ராஜனே கேளும் சரீர சகாயமும் பரவுபகாரமும்பிற
ருடைய துயரமும் தன்துயராகவும் பார்த்து பெண்ணாசையும்பொ
ன்னாசையு மற்ற எங்களிறையாகிய விக்கிரமார்க்க மகாராஜனைப்போ
ல செய்யத்தக்க வல்லமை உம்மிடத்திலிருக்குமாகில் இந்தச்சிங்கா
தனம் உம்மைத்தாங்கும்உமக்கிந்தகுணங்களெல்லா மில்லாவிட்டா
ல் நீர்பின்வாங்குமென்று சொல்லிப் பதுமைஉள்ளடங்கிப் போக அ
தைக்கேட்ட போஜமகாராஜன் விக்கிரமார்க்கனுடைய புகழைக்கொ
ண்டாடி தனக்கிவ்வளவு தன்மையில்லையே யென்றுமனந்தளர்ந்துவெ
ட்கிப்போனான்.

பதினோராம்பதுமைசொல்கதை-முற்றிற்று,

———— 0 ————

## பன்னிரண்டாம்படிக்குக்காவலாகிய
## விவேகசிந்தாமணிப் பதுமைசொல்கதை.

பன்னிரண்டாநாட்காலமே போஜமகாராஜனெழுந்து ஸ்நான
சந்தி செபதபமுதலிய கருமங்களை முடித்துசோடசமாதானங்களு
ங்கொடுத்து சாஸ்திரிகள் தவமுனிஸ்வரர் மந்திரிசாமந்தர் காரியஸ்தா
ன்படைவீரர் முதலாகிய பேர்களுடன் சகலவிருதுகளும் பிடிக்க
சகலவாத்தியங்களு முழங்கவந்து சிங்காதனத்துக்கு பூசைநைவேத்தி
யங்களும் நடத்திதங்களிஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்து இன்றைக்
கெப்படியாகிலுஞ் சிங்காதனமேற வேணுமென்றுசிந்தைதனிற்கொண்
டு சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளும்வழங்கிசெயம்செயமென்றுகட்டிய
ர்பட்டுவான்கள் புகழும்படியாய தனதுவலது காலையெடுத்தப்படிமீ
துவைக்கப்போம்போது பன்னிரண்டாம் படியைக் காத்திருந்த வி
வேக சிந்தாமணியென்னும் பதுமை கலீரெனக்கைகொட்டிநகைத்து
சரோவென்று தடையில்லாமல் சிங்காசனமேறவந்த நீரபோஜனே இந்
தசிங்காதன மேறுவதற்குஎன்ன துணிவுகொண்டுவந்தீர் எங்கள் விக்கிர
மார்க்கராசனொருவரை தாங்குகின்ற இந்தச் சிங்காதனமானது இன்
னொருவரைத் தாங்காது அதேதென்றால் அந்தவிக்கிரமார்க்கமகாரா
ஜனைப்போல் புருஷ லட்சணங்களும்எல்லா நற்குணங்களும்அமைந்
திருந்தவர்கள் யாருமில் லாமையால்தாங்காதெனச்சொன்னேனென்
அப்பதுமை சொல்ல அந்தப் பதுமையைநோக்கி ஓவிவேகசிந்தாமணி
யே அந்தஉத்தமனுடைய நற்குணங்களையும்நல்ல சரித்திரங்களையும்
என்காதாறக்கேட்கச் சொல்லுமென்று போஜராஜன்விசுவாசத்துடன்
கேட்க பிரதமைசொல்லுகின்றது,

வாராய் அரசனே எங்கள் மகாப்பிரபுவாகிய விக்கிரமார்க்கரா
ஜன்காடாறு மாதந்திரியவேண்டியகாலத்தில் சகலபாவங்களையுந்தீர்க்
கும் கங்கைக் கரையில் போயிருந்து சகலவிக்கைதயும் பார்த்துக் கொ
ண்டிருக்கும் நாளையில் தர்மபுரியாகிய பட்டணத்தை யாண்டமந்தி
சேனனென்னும் மகாராசன் தனது சேனைசயினங்களுடன் கங்காஸ்நா
னத்துக்குவந்து வஸ்திர முதலாகிய நவமணித்தானங்களுஞ்செய்துச

ஷ்கர்பம் பக்ஷணிக்கொண்டு ஸ்நானமாடி நித்திய விதிகள் முடித்து வழக்கப் பிரகாரம் புராணமுதலிய தர்ம்மநூல்களை சாஸ்திரிகள்படிக்க அவர்களை நமஸ்கரித்து ஆசிர்வசனத்துடன் அட்சதைவாங்கிக்கொண்டு சித்த ரசனத்தி லிருந்து தர்மங்கேட்டுவரும்போது அந்தப்புராணத்திற் சொல்லி வருந்தர்ம்மமாவது மனிதசென்மமெடுத்த வர்கட்கு சிங்கம்போன்ற தீரமும் தர்ம்மமுதலியசத்தியமும் பிராமணர் பசுக்கள் சிசுக்கள் ஸ்திரீகள் முதலாகிய பேர்களுக்கு ஆபத்து வருமாகில் பிராணனைக் கொடுத்தாகிலும் ரட்சிக்கவேண்டுமென்று சாஸ்திரிகள் படித்துக் கொண்டுவருஞ்சமயத்தில் ஸ்நானஞ்செய்துக்கொண்டிருந்த ஒருபிராமணனை முதலை பிடித்துக் கொண்டிழுக்குதென்று அந்தப் பிராமணனுடைய பெண்சாதியானவள் இராசனிருக்கு மண்டபத்திலோடிவந்து ஐயோ அநியாயமோ அபயம் அபயமென்று அழுது மணவாளனையும் மஞ்சளையும் மங்கிலியத்தையுமிழந்தேன் ஐயா அரசர்கூட்டங்களே எனக்குத்தாலிபிட்சை கொடுக்கவென்றுதரையில் விழுந்து புரண்டு எழுந்து மிகுந்த துன்பப் படுகின்ற அந்தஸ்திரீயைப் பார்த்துக் கொண்டிருந் தார்களேயன்றி ஆபத்துக்குதவவேணுமென்று கேட்ட சாஸ்திர தர்மமும் மனதிரக்கமும் தீரத்துவமும்யாவருக்கு மில்லாதிருப்பதை அந்த பிராமணஸ்திரீ கண்டு ஓ தர்மங்கெட்டுத் தாழ்மடைகளே நீங்கள் ஆணுடன் பெண்ணுடன் பிறக்கவில்லையோ வென்று வயிற்றி லடித்துக் கையைநெரித்து முகத்திலறைந்து கொண்டு புண்ணியந்தேடவந்த புருஷனை யிழந்தே னென்று புலம்பி வருவதை விக்கிரமார்க்கன் கண்டு கஜேந்திரனாகியயானை முதலைவாயிலகப் பட்டு பிழைத்துவர வகையறியாமல் சிலநாளுழன்று ஆதிமூலமே யென்றழைக்க அப்போது வந்துமுதலையைச் சங்கரித்து யானையைக் காத்தருளிய கசேந்திர வரதனைப் போல கால்விரைந்தோடி கங்கையிற் குதித்து கராவைமடித்து பிராமணனை விடுவித்து கரையேற்றி அவருடைய பெண்சாதிகையிலொப்பிவைத்தார் அப்போது அந்தப்பிராமணஸ்திரீயானவள் என் மங்கிலியம்போல் உன்மனைவியின் மங்கிலியம் நீடித்திருக்கக்கடவதென்று ஆசிர்வதித்தாள்.

அந்தவேளையில் முதலை வாயினின்று மீண்டவேதியன் வேந்தனை நோக்கி ஆசிர்வதித்து சந்தோஷமடைந்து முதலைவாய்ப்பிள்ளையை மீட்ட மூர்த்தியைப் போல் எனக்குப்பிராணபிட்சை கொடுத்த புண்ணியனே உன்னுடையதர்ம்மத்தினாற் பிழைத்தேன் நீர்செய்தஉதவிக்கு நானென்ன செய்தாற்றகும் வையகத்தார் மழைக்கு என்னஉதவி செய்யலாம் அதுபோல் எந்தந்தை தாய்க்கும்ஆசாரியருக்கும் என் கடவுளுக்கும் உமக்கும் நான் நித்திய வந்தனம் செய்வதுபேதமில்லை நீர் ஒருவனுக்குபகாரியே யல்லது ஒருவருபகாரத்திற்கு நீர்காக்கிறவரல்ல ஆகிலும் என்னுடைய ஆசையைக் கெடுக்காமல் நான்செய்யப் போகிற உபகாரத்தைஉபகாரமாய்ப்பெற்றுக்கொள்ளுமென்றுபிராமணன் சொல்ல அரசன் வெகுண்டு ஐயரே நானொருவருடைய உதவி பெறுவதற் காகசெய்ததல்ல கடவுளொருவன் அவனன்றியெனக்குதவிசெய்ய வேணுமே யல்லது நீங்கள்செய்யவுங்கூடாது நானதைப்

பெறவுங் கூடாது என்றுவிக்ரமார்க்கன் தடுக்கஅதற்கந்த பிராமண
ன் முஸ்தாபமடைந்து நானென்ன மகாபாவியா னான்கொடுத்தஉ
பகாரத்தை நீர்பெறமாட்டேனென்றுதள்ளி விடுகிறது நான் மாத்
திரம் நீர்காப்பாற்றிவிட்ட தேகத்தைவைத்துக்கொண் டிருக்கிறதாஇ
தோ அந்த நதியிலுலவுகின்ற முதலைக்கே இரையாகவிழுகிறேனென்
று வேதியனோடே இந்த அரசனானவன் அவனைப்பின்னேயோடிப்பிடித்து
வந்து ஓ சுவாமிஎன்பேரில் கிருபைநீருக்கு இஷ்டமிருந்தால் உலகமதி
க்கும் படியாகிய ஒருமந்திரம் உபதேசித் தருளுமென்றுகேட்க அப்
படிக்கே அந்தப் பிராமணன் தவத்தி னாலும் செபத்தி னாலும் தன்
னுயிர்க் குயிராய்ச் சம்பாதித்து வைத்திருந்த மந்திரத்தைஉபதேசித்
தருளி ஓ மகாராஜனே இந்தமந்திரத்தை ஒன்பதுதரம்செபிப்பை யா
கில் தேவேந்திர விமானமும் உனக்கிஷ்ட மாகியபொருளும்வரும் அ
வைகளை நீ ரனுபவித்து விமானத்தி லேறிக்கொண்டால் எந்தஇடம்
நினைக்கிறீரோ அந்த இடங்க ளெல்லாம கண்டுவரலாமென்று மங்கள
வசனஞ்சொல்லவாழ்த்திவிடைபெற்றுக்கொண்டு தங்கள் நகரத்தை
நோக்கி மனைவியும் மறையவனும் போனார்கள்.

இப்பால் விக்கிரமார்க்கமகாராசன் அவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டு
ச் சந்திரசூரியகிரணம் நுழையாம லடர்ந்து படர்ந்த கொடிதழைத்து
செடிகணிறைந்த ஒருமலைமீதேறி வேடிக்கையாய்உலாவிக்கொண்டிரு
ந்து அவ்விடத்திலிருந்தபெரியஅரசமரத்தைக்கண்டு அந்தமரத்தினடி
யிற்சென்று காற்றுக்கொதுங்கியிருக்கும்போது அந்தமரத்திலிருந்து
ஒரு பிர்மராட்சசனிறங்கினான் அவனைக்கண்டு பயப்படாமல் நானே
விக்கிரமார்க்கனென்னுமரசன் அரசென்னும் பேர்கொண்ட இம்மரத்
தினிறங்கின நீயாரென்று அரசனதட்டிக்கேட்க பிர்மராட்சதன்பய
ந்து தேவர் முனிவர்முதலியயாவரும் என்னைக்கண்டு பயப்படும்படி
யாயிருக்க நீபூமியிலிருக்கும்ராசன் என்னைமிரட்டுகிறாயோவென்று
கண்ணுமுகமும் கருக்கச்சிவக்க கையையோங்கிக்ககனமளாவியுமு
யர்ந்து கருவி நிற்கின்ற பிர்மராட்சதனை நோக்கி உனக்குக் காலனு
சமீபித்ததென்று மன்னனெழுந்து மந்திரவாளைவீசிவரும்போது அப்
பாவியிவன்தைரியசாலிதேவதா அனுக்கிரகமுடையவனென்றுதிகில்கொ
ண்டு பிர்மராட்சதனடங்கி திவ்விய உருவாய்வந்துராசனுக்கு
முன்னேநிற்கப்பார்த்து நீயப்பா முன்னேராட்சதரூபமாயிருந்தாய்
இப்போது திவ்யஉருவமாய்வந்தாய் உன்னுடையவரலாற்றைச் சொ
ல்லென்றுமன்னவன்வினவஇந்தப்பிரமராட்சதன்சொல்லுகிறான் அர
சனே நானிந்தவுலகத்தில் செவ்வையாய்ப்படித்துக்கொண்டுகற்றதன்
மைக்கிணக்கமாகிய நடையில்லாமற் சர்வங்கொண்டு நல்லோர் பெரி
யோரையிகழ்ந்து சமயமுதலியதெய்வங்களைப்பழித்து வாழ்நாளை வீ
ணாகக்கழித்த மகாபாவியாகியஎன்னை ஆயிரம்வருஷம் ஆகாரநித்தி
ரையில்லாமல்அலக்கழியக்கடவதென்று மகாமுனீஸ்வரர்கள் சாபமிட்
டார்கள் அவர்களைப்பணிந்து தவமேற்கொண்ட அநகர்களே இந்தச்
சாபத்தைபனுபவிக்க என்னால்முடியாது தயைசெய்யவேண்டுமென்

தீர்ந்துவேண்டிக்கொண்டேனப்போதவர்கள் அருள்செய்ததாவது உ
ன்னைக்கல்லுப்போயப்படக்கச்சமனிதர்களைக்கண்டு நீயப்படிப்படியாகி
டகாலமெப்போது வருமோ அப்போதுனக்குச்சாபவிமோசனமென்று
சாற்றினார்கள் அதுமுதற்கொண்டு என்னைக்கண்டவரெல்லோரும் திகி
லையும்படியாய் இந்தஅரசமரத்திற்சேருந்திக்கொண்டிருந்தேன் என
னைமிரட்டிய உம்மைக்கண்டவுடனே சூரியனைவிருள்நீங்கிய தன்மை
போல் என்சாபமாகியகன்மமனையின்று நீங்கக்கடத்தேனேன் என்
னைக்காப்பாற்றியபுண்ணியவான் உம்மைவிடவேறொருவருமில்லை ஆ
கையாலினிமேல் நான்பிழைக்கும்விதமின்னதென்றறியேன் அதற்கும்
நீரோவழிசொல்லவேண்டும் ஐயனேயென்றப்பிர்மராட்சதவுருவமாயிருந்
தநீங்கியஉத்தமன்கேட்க அரசன்சந்தோஷமடைந்து எந்தவிதத்தால்
நீபிழைக்கலாம் என்றாலுனக்காகவேண்டியதைக் கேளென்று ராசன்
சொல்ல ராட்சதரூபன் நாவடக்கிகோவேந்தர்குலமணியே செளும்கன்
கையின்முதலையைவெட்டி பிராமணனைக்காப்பாற்றியபலத்தையுமந்த
ப்பிராமணனுமக்குபதேசித்த அருமையாகியமந்திரத்தையும் எனக்கு
க்கொடுத்தால் நான்சவுக்கியமாகப்பிழைப்பேனென்று ராட்சதரூபன
சொல்ல அதற்குடன்பட்டு மனப்பூர்வமாய்மகிழ்ந்து விக்கிரமார்க்கன்
அதுகளைக்கொடுக்க அதைப்பெற்றுக்கொண்டு ஒன்பதுதரஞ்செபிக்க
வுடனே தேவவிமானம்வந்தது அந்தபிர்மராட்சதனுமிருந்தமுத்தமிழ்
வித்துவான் அந்தவிமானத்திலேறிக்கொண்டு உபயசாமரைமுதலிய உ
பசாரங்களுடன் மன்னவாய் விக்கிரமார்க்கமகாராசனைவாழ்த்தி தேவ
ர்லோகங்களிற்சஞ்சரித்து சவுக்கியமடைந்திருந்தான் இவ்விடத்தில்
அரசன்பேரில் தேவர்கள்புட்பமாரிபொழிந்து தேவதுந்துமி முழக்கி
வாழ்த்தினார்களிப்பேர்ப்பட்டதிராணியும் ஔதாரியமும்பொறுமையு
ம்பேராசையுமில்லாதகுணமும் இருப்பவர்களெவர்களோ அவர்களிச்
சிங்காதனமேறலாம் உமக்குண்டாயிருந்தாலேறுமென்று பன்னிரண்
டாம்படிப்பதுமை உளனேதலைவாங்கக்கொள்ள போஜராஜன் நாமவ்
வளவுபுண்ணியம்பண்ணுமற்போனேனென்று விக்கிரமார்க்கனுடைய
புகழைநினைந்து நினைந்துருகி அரண்மனைக்குப்போனான்.

பன்னிரண்டாம்பதுமைகதை முற்றிற்று,

---

பதின்மூன்றாம்படிக்குக் காவலாகிய

நீதிசிந்தாமணிப்பதுமைசொல் கதை.

---

பதின்மூன்றாநாட்காலமே போஜராசனெழுந்து ஸ்நானஞ்செய்து
செபதபமுதலாகிய நித்தியவிதிமுடித்துக்கொண்டு கோதானபூதான
ங்கன்னிகாதானங்களுங்கொடுத்து தவமுனிவர்கள் வித்துவான்கள்சா
ஸ்திரிகள்படைத்தலைவர் உழையர்முதலியபேர்களுடன்பேரிமுழக்கச்
சென்றுசிங்காதனத்திற்குப் பத்திரபுஷ்பங்களாலர்ச்சித்துப்பூசைசெ
வேத்தியம்புரிந்து தீர்க்கதெண்டமாகப்பணிந்தெழுந்து ராசதுரந்தரனி
ன்முடியேலிருந்துங்காலேசிங்காசனப்படிமேல்வைத்தது நாட்டப்போம்

போது பதின்மூன்றாம்படிப் பிரதமையானது ஓ-ஓ-அரசனேபொறும் பொறுமென்று பயாடுவதுபோற்றலையாட்டி புன்னகைகாட்டி கரங் கொட்டிவாரும்போசமகாராசனே எங்களாண்ட வனுகியவிக்கிரமார்க் கமகாராசனென்னும்பாண்டியனைச் சுமந்தகாங்கள் இன்னொருவனைச் சுமக்கோம் அஃதெதினாலென்றால் கல்வியிலும் செல்வத்திலும்வில்லி லுஞ்சத்தியச்சொல்லிலும் வீரத்திலும்திட்டிரத்திலும்கலவியிலுங்கல விக்குரியபுலவிலும் ஈனத்திலுங் கனத்திலுஞ்சனத்திலும் உதவிதா னத்திலுஞ்சிறந்த மன்னனாகலால் அவனைப்போன்றஅரசர்கள் யாரிருக் கிறார்கள் அருள்வடிவாய்யபோசராசனேயென்று பதுமைசொல்ல அ தைக்கேட்ட அரசன்நாளுக்குநாள் தன்னுடையகாதுகள் நிரம்புவதைக் கேட்டுக் கண்ணீர்சொரிந்து முக்கண்ணனுருவென்றுகருத்துவந்த து நெளித்ச்சிவசாதனைப்படியேறவிட்டாலும்இதைத்தரிசிக்கவும் அ ந்தப்புண்ணியவானுடையபுகழைக்கேட்கவும் பாக்கியஞ்செய்தேனாக லால் அவருடையபிரதாபத்தைச்சொல்லுமென்று போசராசன்வின வ பிரதமைசொல்லத்தொடங்கியது.

கேளும் ராசசிரேஷ்டனே ஆக்கினாச்சக்கரஞ்செலுத்திவாக்கினு ல்மனுக்களைத்திருத்தி சகலமனுவிக்கியானநீதியுடன் உலகம்காக்குநா ளையில்ஒருநாளசப்தபுரியிலுஞ்சிறந்தகாஞ்சிபுரத்திற்குவந்து கம்பாநதி யிற்றீர்த்தமாடி கச்சியப்பனைப்பணிந்து காமகோஷ்டிபீடத்தைத் தரிசி த்துகாமாட்சியம்மையுங்கடுந்தளகாம்பாகாதனையேத்திப்போற்றிக் குருவடியக்காட்சியளித்துத்திருவடியேயென்று ஸதவுத்தியஞ்செய்துக் கொண்டிருக்கும்போது அந்தக்கடவுளினுடைய சிரத்தின்மேற்கவிந்தி ருக்கும்மாமரத்தின்மீது ஒருயோகீஸ்வரனிருந்து ஓஅரசேநீஎங்கிருப் பது உன்பெயரென்ன நீஇவிடத்தில்வந்த காரியம் யாதென்றுகேட்க ஐயாநானிருப்பது உச்சினியோங்காளிபட்டணம்என்பேர்விக்கிரமா ர்க்கன்இங்குமுக்கிய ஸ்தலத்தில் எதாகிலும்அதிசயங்களும் விநோ தங்களும் புதுமைகளும் உண்டாயிருந்தால்பார்க்கலாமென்று வந்தே ன்சுவாமியென்ன அந்தமொழியைக்கேட்டயோகீஸ்வரன்நகைத்து அ ப்பா இவ்விடத்திலென்னபுதுமையுண்டு ஒன்றுமில்லைஉன்னாட்டிலில் லாதவிநோதமா இந்நாட்டிலிருப்பது இல்லையென்றுரைக்க அதைக் கேட்டஅரசன் ஐயயோகீஸ்வரரே என்னாட்டிலென்னவிநோதம என்ன அதிசயம் தேவரீர்கண்டிருப்பது அதையாவதெனக்குத்தெரியப் படுத்தவேண்டுமென்றுகேட்க யோகீஸ்வரன்சொல்லுகிறார் முற்கால த்திலே இந்தத்தமிழ்நாட்டிலேவீரசேனனென்றொருராசனிருந்தா னவனுக்குஊழ்வினையினால் வருத்தகாலம்வந்து பதினெண்பாளையமன் னரும் பகைத்துமேல்விழுந்து சண்டையிட்டு நாட்டையும் பிடிங்கிக் கொண்டதுமல்லாமல் காராக்கிரகத்தில்போட்டுவைக்கநினைத்தார்கள் அந்தச்சங்கதியை அரண்மனைதாதியறிந்து ராசபத்தினிக்குச்சொல்ல அந்தவார்த்தையை ராசனுக்குத்தெரிவித்து நாம்பிழைக்கப்பிழைப்புக் கு காவல்நீக்கப்படவேண்டுமோ என்றுண்டவனே காட்டிற்றண்டி விடுவதே யோக்கியமென்றுராசாவுக்குச்சொல்லி இரவில்தானேபுறப் பட்டு புருஷன்பெண்சாதிஇருவரும்பொழுதுவிடியும்போது மூனு

யோசனைதூரங்காட்டிலேவழிநடந்துபோய் அவ்விடத்திலோ ராலமர
மிருக்கக்கண்டு இளைப்பாறவுட்கார்ந்து பெண்சாதிமடியிற்றலைவைத்து
ப்படுத்து பெருமையையுடைய அரசனானவன் பெண்ணேநாம் ஆரு
க்குமனியாயஞ்செய்ததில்லையே அதிதிபரதேசிகளை அடித்ததில்லையெ
யாருக்கு அபகாரம்புரிந்ததில்லையே ஊரார்க்குப் பகைவைத்ததில்லை
யே பழையமோசத்தைப்பகைத்ததில்லையே பார்ப்பாரைச்சவிருமாக்கு
றைத்ததில்லையே பாவஞ்செய்யாத எனக்குஇந்தத்துன்பமெப்படிவ
ந்ததோ தெய்வமே நாலுபேர்நடக்கும் பாதையிலிருக்கும் ஆலமரமே
யென்று பத்தினியுடனும்மெத்தவருந்திக்கொண்டிருக்கும்போது அ
ந்தமரத்திலுற்றிருந்த ஒருசடாமுனியானது மனதிரங்கிஇவர்களைமகா
ராசாவாக்கவேண்டுமென்றுநினைத்து அவர்களிருவருக்குந்தூக்கமயக்
கமுண்டாக்கி அவர்களைத்தூக்கிக்கொண்டுபோகும்போது விநதமாந
கரமென்னும் பட்டணத்துராசன் இறந்துபோய் வேறுபிள்ளைகளுமில்
லாமையால் தர்மதேவதையால் அரசனைப்பெறவேண்டுமென்றுபட்ட
ணத்துயானையை அலங்கரித்து நவரத்தினகசிதகுடத்தில்சலமும்புஷ்
பமாலையும் பிடரியில்வைத்து பதினெட்டுவாத்தியங்களுமுழங்கப்
பதினெட்டுவிருதுகளுந்தயாநகைகுடைபடை முதலாகியசருவுபசுழுழந்துவ
ரும்போது அவர்களுக்கெதிரில்இவர்களைக்கொண்டுபோய்வைத்துயா
னையுந்திக்கையில் சடாமுனிப்பாயிருந்து அந்தச்சலத்தைஅந்தரா
சன்பேரிற்கொட்டி மாலைசூட்டி மத்தகத்திலெடுத்துக்கொள்ள மந்திரி
பிரதானிமுதலிய பெரியோர்களுஞ்சேனைநமகிழ்ந்து இந்திரசேகரரா
சனென்று சுதந்திரப்பட்டாபிஷேகஞ்செய்துராசபத்தினியையும்ராச
னையும் வெகுசேனைகள்வந்து வணங்கிப் பூசிக்கும்படியாய்ச்செய்து
பழையஆலமரத்துக்குச் சடாமுனிபோனபிற்பாடு அந்தநகரத்தை இ
ந்தராசன் சிலநாள்துரைத்தனம்பண்ணிக்கொண்டுவரும்போதுபாதல
த்திலிருந்து சிலராட்சதர்வந்து மலையாமுதலியதைப்பிடுங்கி எதிர்த்த
எவர்களையும் அண்டவொட்டாமற்சண்டை செய்கிறார் அதனாலந்தராச
ன்மெத்தவருந்திச் சித்தம்நொந்து கர்த்தனேயென்று யுத்தம்பண்ணி
இளைத்து கோட்டையைவிட்டுவிட்டு காட்டிலோடிக்கொண்டிருக்கிறா
னென்றுபாமரத்திலிருந்தயோசபுருஷன்சொல்ல அதைக்கேட்ட விக்
கிரமார்க்கமகாராசன் அதிதீவிரத்துடனே விநதமாநகரம்போய்ச்சேர்
ந்துஇந்தநகரத்தையாண்ட அரசனெங்கேயென்றுவிக்கிரமார்க்கன்கே
ட்க ராட்சதரெல்லாமேபேசிட்டு நீஅவனுக்குப் படைத்துணை வந்தா
யோவென்றுஅரசனைமடக்கிக்கொண்டபோது சத்தியமேநித்தியம்சர்
மமெசெயமென்று மாகாளிகொடுத்த வடிவாளைஎடுத்து மண்டியிட்டுக்
கண்டகண்டவிடத்தில் அரக்கரைத்தண்டதுண்டமாக்கி எண்டிசையு
ம்புகழ அண்டர்மகிழ புண்டரீகனுகியபெருமாள்வாழ்த்த சட்டியாம
ந்திரியர் தந்திரியர்முதலாகிய தொண்டர்கள்போற்ற அவ்விடத்திலிரு
ந்தராட்சதப்பிணங்களெல்லாம்வாரிக் கடலிற்கொட்டிவிட்டு பட்ட
ணத்தைப்புண்யாசனஞ்செய்து தேவாலயம் விஷ்ணுவாலயம் பிராம
ணனுடையஅக்ராரம் தர்மசத்திரம் சாவடி மண்டபம்யாவற்றும் புது
க்கு குடிபடைகளைநிலைக்கப்பெய்து காட்டிலோடிப்போன இந்திரசே

காமகாராசனை அவனுடையபத்தினியுடன்கைப்பிடித்துக்கட்டிக்கொ
ண்டுவந்து அரண்மனைவீட்டிற்செலுத்தி நன்னகையால்வீரபட்டங்கட்
டி அந்தப்பட்டணத்தை அவருக்குச்சொந்தமாக்கி இனிமேலும்எந்த
விதத்தாலும் பகைவரில்லையென்று விக்கிரமார்க்கராசனுடைய அதி
லைணஸ்தலமென்று கோட்டைவாசலிற்கொடிபோட்டுவைத்த கொள்
கையை இன்னொருதேசத்தரசனாகிய சிந்துவாகனனென்பவன்கேட்டு சி
ந்தைமகிழ்ந்து மண்டலத்தையாளும்மன்னவர்கள் மண்ணாசை மனை
யாசை பொன்னாசை இந்தமூன்றும் யாவரையும்விடாது அப்படியிருக்
க உமக்குத்தக்கவசப்பட்ட இந்தநகரத்தைநீர் ஆசைவைக்காமலிந்தரா
சனுக்குஉதவிசெய்த நன்மையைக்குறித்துநான்புகழுகிறேன் எனதுஉள்
ளமகிழுகிறேன் அரசனே உம்முடையஉதவியைநினைக்கநினைக்கனக்
கு ஆறவில்லை ஆதலால்நான்கொடுக்கிறவஸ்துவை நீர் அங்கீகரிக்கவே
ணுமென்றுஉபசரித்து சந்திரகாந்தக்கல்லினாலமைந்த ஒருசிங்காதன
த்திலிருமென்று தன்கண்ணாரக்கண்டு ஒருவரையொருவர்தழுவிசெல
வுபெற்றுக்கொண்டு சிந்துவாகனன்நகரம்போய்ச்சேர்ந்தான் இந்தநக
ரத்தையாளும்இந்திரசேனராசன் விக்கிரமார்க்கனைப்பணிந்து தாழ்ந்
து நின்ற அரசனைத்தவிசியப்படுத்தி அவ்விடத்தில்நிலைநிறுத்தி செல
வு பெற்றுக்கொண்டு அந்தப்பட்டணத்துச் செனங்களும் மந்திரிபி
தானிவரும்வந்துதொழுதகலந்து சிந்தைமகிழ்கொண்டு இந்த அரசைக்
காத்திருங்களென்று அவர்களுக்குமினியவசனங்களைச்சொல்லிவிடை
பெற்றுக்கொண்டுவரும்போதுகாஞ்சிபுரத்தில்மாமரத்திற்கண்டயோ
கபுருஷர் எதிர்வந்துதடுத்து நான்யோகபுருஷனல்ல சடாமுனியாக்
களும் இந்தராசனுக்குப்பட்டங்கட்டிவைத்தவன்நான்தான்ராட்சதாள்
வந்தெதிர்த்தபோது என்னாற்கூடியவரையிலும்ராசனுக்குச்சகாயமா
ய்ப்போர்புரிந்துமாளாமல் நீர்காஞ்சிபுரம்வந்திருக்கிறீரென்றுகேள்விப்
பட்டு பரோபகாரியாகிய உம்மிடத்திற்குவந்துசொன்னவனும்நான்தா
ன் அரசனே இவ்வளவுசகாயபுருஷனாகிய உமக்குநானென்ன செய்ய
ப்போகிறேன் உமக்குநான்அடிமையென்பதற்குமிஞ்சியஉபகாரமொ
ன்றுமில்லையென்றுஉபசரித்துநான்இந்தவழியிலிருக்கும்ஆலமரத்திற்
குப்போகிறேனென்று அரசனிடத்தில்விடைபெற்றுக்கொண்டுசடாமு
னிபோனபிற்பாடு விக்கிரமார்க்கன் தன்னுடையநகர்நோக்கிப் போம்
போது வருகிறமார்க்கத்தில் ஒருஏழைப்பிராமணன் மிகுந்தவிர்த்தன்
அனாதையாய் அழுதுபுலம்பிக்கொண்டிருந்தான்,

அவனைப்பார்த்து ஐயரே நீரார் எங்கிருந்துவந்தீர் உமதுபேரெ
ன்ன உமக்கு ஏனோது நீரிவ்விடமிருந்து துக்கப்படுவானேனென் சொல்
லுமென்று விக்கிரமார்க்கன்கேட்க அந்த வேதியன் சொல்லுகிறான்
என் குலதெய்வம்போன்ற கோவே நான்பிறந்ததுமாயாபுரி என்பேர்
பாலேக்கண்ணன் வளர்ந்தது வேதியககரம் நான்பிறந்து தொண்ணூ
றுவயதாயவிட்டது இதுவரையிலும்முஷ்டியெடுத்து நித்தியதரித்திர
னாய அண்ணுடன் சேவைஞ்செய்து வந்தேனேயன்றி ஒருபொழுதா
கிலும் உண்டென்று புசித்ததில்லை இப்பேர்ப்பட்ட பாவஜென்ம இ

ருந்தென்ன இறந்தென்னவென்றெண்ணி இத்தவனத்தில் உயிர்விடவ
ந்தேன் பிறர்துயர் தன்றுயரென்று பார்க்கும் புண்ணியசீலனாகிய உம்
மைக்கண்டேன் என்குறையெல்லாம் விண்டேன் விக்கிரமார்க்கமகா
ராஜனே பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்கவென்று ஆசீர்வதித்து தன்
குறையைச்சொல்லிக்கொண்ட அந்தஏழைப்பார்ப்பானுக்குவேதாள
மெடுத்துவந்த சந்திரகாந்தகற்சிங்காசனத்தையும் சகலசம்பத்தையுங்
கொடுத்து ஆலமரத்திலிருக்கும் சடாமுனியையழைத்து ஐயா இந்த
ப்பார்ப்பானிடத்தில் அன்பெரில்வைத்தபட்சத்தைவைத்தாளுமெ
ன்று கைப்பிடித்தொப்பிவைத்து தன்னுடைய பட்டணஞ்சேர்ந்தான்
இப்பேர்ப்பட்ட உதாரகுணமும் பொறுமையும் தீரமையும் பரவுபகா
ரமும் மன்னுயிர்த்தன்னுயிரென்னும் பட்சமும மறமுந்திறமும் அற
முங் காத்திறமும உடைய அரசர்கள் ஆராகிலுமுண்டோ தேசவிசுவாச
போஜனே உமதுமனதிற்குத் திர்ப்திபாவிருக்குமாகில் இந்தச் சிங்கா
தனமேறலாமென்று வெடுக்கெனச்சொல்லிப் படிக்கனத்தலையை உ
ளேவாங்கிக்கொள்ள அதைக்கண்ட போஜராஜனத்த வெட்கமுடை
யனும் ஒருபட்சம்காமப்படியில்லையேயென்று மிகுந்ததுக்கமுடையவ
னாய் விக்கிரமராஜனுடைய சரித்திரத்தைப் பூரணமாய்க்கேட்டுவிடு
வோமென்று பொழுதுபோமவேளையில் தனது வீடுபோய்ச்சேர்ந்தான்

பதின்மூன்றும்பதுமை சொல்கதை முற்றிற்று.

---

## பதினான்காம்படிக்குக் காவலாகிய
## மநுநீதிப்பதுமைசொல்கதை.

---

மறுநாட்காலையில் போஜமகாராஜனெழுந்து ஸ்நானசந்தி செப
தமனித்திய பிதர்க்கருமங்களையு முடித்துக்கொண்டு அஜதானங் கஜ
தானங்களுங்கொடுத்து வேதவேதியர் ஆசாரியர் மனுநீதியுணர்ந்தம
ந்திரியர் சாமந்தியர் சேனாதலைவர் யானைத்தலைவர் வந்திப்போர் சிந்
திப்போர் யாவரும்நெருங்கி வர அனேக சத்திரங்கவிக்க மணிமுர
சு காளம் கொம்பு-சின்னம்-பூரி-சாமரை-வீராணைபேரி உடுக்கை பறமி
தவண்டை மல்லரி சங்கரிசங்கு கோணக்கொம்பு முழங்கிவர கூடக்
கொப்புநெருங்கிவர சிங்காதனத்தண்டையில் வந்து பூசாவிதியெல்
லாநடத்தி பிரதட்சணம்வந்து நமஸ்கரித்துப் பெரியோர்களுக்கெல்
லாம் முத்துக்களைவாரி மாரிமாரிபோற்பொழிந்து அவர்களுடைய ஆ
சீர்வசனங்களும் அட்சதையும் பெற்றுக்கொண்டு வழிபடு கடவுளையு
ம்வணங்கிவலதுகாலைத்தூக்கி சிங்காசனப்படியில்வைக்கப்போம்போ
து அந்தச்சிங்காதனத்தின் பதினான்காம் படியிலிருக்கும் மநுநீதி பது
மை பட்டபடவென்றுகைகொட்டி எழுந்து பற்பலமேருட்டினைந்துதி
ற்கின்ற போசராசனைப்பார்த்து ஓ அரசனே நீ தரித்தசிங்காதனமேறு
வதற்குத் துணிவீராகில் சுகமாயேறலாம் ஆனால் ஒருகாரியஞ்சொல்
லுகிறேன் அதாவது இந்தச்சிங்காதனத்தில் முன்னம் வீற்றிருந்த வி

க்ரமார்க்கமகாராசனைப்போல நீர்மேன்மைக்குணமுள்ளவராகில் இந்தச்சிங்காதனம் உம்மைச்சுமக்கும் இல்லாவிட்டால் பூமியிற்றள்ளி அமுக்குமென்று பொம்மைசொல்லக்கேட்டு உடல்பூரித்துஓபிரதமையே அந்தவிக்கிரமார்க்கமகாராசனுடையசகாயமேன்மைக்குணங்களைஎனக்குவிரித்துரைக்கவேண்டுமென்று போசராசன்கேட்க பதுமைசொல்லத்தொடங்கிற்று.

தேசக்ஷேமமாயாளும் போசராசனேகேளும் எங்கள் விக்கிரமார்க்கமகாராசனிடத்தில் வெகுகாலமாய் அவருடைய அன்பையும்அருளையும்பெற்ற சூரசேனனென்னும்புரோகிதன் புத்திரமித்திரகளத்திராதிபந்துக்களுடனே யோகபாக்கியத்தை யனுபவித்து வெகுகாலங்கழித்து சாஸ்திரவிசாரணைசெய்து ஈஷணாத்திரயத்தை விடுத்து அறுபகையையறுத்து அரசனிடத்திலசெலவுவாங்கிக்கொண்டு துறவியாய்ப்புறப்பட்டு பூமிப்பிரதட்சணஞ்செய்துவரும்போது தெய்வப்பிரயாகைகமனிகாணிகையமுனைமுதலிய தீர்த்தங்களில் அநேகம்பெரியோர்கள் ஸ்நானம்பண்ணி பிண்டங்களிட்டு காவடிகட்டிக்கொண்டு இராமேஸ்வரத்திற்குப்போம்படியாக வேடிக்கையை இந்தப் புரோகிதர்கண்டு தனக்குஇதுஒருவிளையாட்டாகக்கொண்டு தானும் ஸ்நானஞ்செய்து காவடிகட்டியெடுத்துக்கொண்டு மனம்போம்வழியேவழியாகக்கொண்டு திரும்பிவரும் வழியிலே சிங்காரபுரமென்னும்பட்டணத்தைக்கண்டு உள்ளேபுகுந்துபோம்போது அந்தப்பட்டணத்துக்கு ஈசானியத்தில் ஒருகோயிலிருந்தது அந்தக்கோயிலின்சந்நிதானத்திற்குநேரே செப்புக்கொப்பரைநிரம்ப எண்ணெய்விடுத்து இருதிகுதளதளவென்றுகொதிப்புடனேகாயக்கண்டு இதென்னவதிசயமென்றுயோசித்துஅவ்விடத்திலிருக்கின்ற மந்திரிமுதலாகியகாரியஸ்தனாக்கண்டு இந்தக்கொப்பரையில்எண்ணெய்காயுங்காரணமென்னவென்றுகேட்டானதற்கவர்கள்சொன்னதாவது ஐயாஇவ்வுலகத்தையாளும்விரதசீலராசனுடைய தவத்திற்பிறந்த ஒருபெண்கொடிக்கு சயமரநாட்டுந் தன்மைபோல திருமுகமெழுதியனுப்பினார்கள் அந்தஓலையைக்கண்டுதேசதேசத்துராசாக்களும் பிராமணர்கள்முதலியபேர்களும்வந்துநெருங்கினார்கள்எந்தப்புருஷன் உனக்கிஷ்டமென்றுகேட்டாலுஞ்சொல்லவில்லை தான்சுதாவில்வரித்து மாலைசூட்டிக்கொள்ளவுமில்லை இந்தப்பெண்ணினுடையதந்தையோ கலவியையுடையவனுக்குக் கொடுக்கவேணுமென்றான் ஒருவருக்கொருவர் சேஷ்சாயியாயிருக்கிறார்கள் தமயனானவன் மகாராசனுக்குகொடுக்கவேணுமென்றான் என்னெனினால் எளியவரொருவருமில்லை ஆகையா லிந்தகொப்பரையில் எண்ணெய்க்காயவைத்து இதில்மூழ்கிவந்தவர்களுக்குஇந்தராச்சியப்பட்டாபிஷேகமும் ஆணிமாற்றுயர்ந்தபொன்தண்டிகையு மாசனுடையகுமாரத்தியையும் கொடுப்பேனென்று எங்கள்ராசனேர்ப்படுத்தி எங்களையுமிவ்விடத்திலிருக்கவைத்தார் அப்படி எக்குலத்தான்மூழ்கியெழுந்தாலும் அப்போதேவிவாகநடப்பதற்குச் சந்தேகமில்லையென்று சொன்னார்கள்.

அந்தப்பிராமணன் இவ்வசனத்தைக்கேட்டு திகிலடைந்து இன்னொருவனால் ஆகத்தக்கதோ அசாத்தியமான காரியமென்று உச்சினி

யோக்காளி பட்டணத்திற்குப்போய் விக்கிரமார்க்கனுடைய ராசசபைக்குப்போய்போது அந்தவிக்கிரமார்க்கமகாராசனுனவன் தேசாந்திரியாய் வந்தவர்களுக்கு இஷ்டபாக்கியங்களுங்கொடுத்து இருபது கோடிதிரவியம் பூரியுங்கொடுத்து அரண்மனைக்குப்போகஎத்தனித்திருக்குங்காலத்தில மந்திரவசனனென்னும் ஒருபிராமணன் ஒருபெண்ணைக் கையிற்பிடித்துக்கொண்டுவந்து மகாராசனே இதுஎன்னுடைய பெண்ணுக்கும் இந்தப் பெண்ணுக்குக்கலியாணஞ் செயயவேண்டிப் பருவகாலம்வந்தபடியால் என்னிடத்திற்றிரவியமில்லை மேலும் இந்தப்பெண்ணுக்குக் கார்றசோங்கலென்றுஞ்சொல்லுகிறார்கள் இந்தக்குறைகளை திர்க்கத்தக்கயோர் உம்மைவிடவேறொருவருமில்லையென்று சொல்லிக்கொள்ள அதைக்கேட்ட அரசன் அந்தப் பெண்ணினுடைய முகத்தைப்பார்க்கும்போது போறேன்போறேனென்று அலறியழுத காலையில் தன்னிடத்திலிருக்கும் வேதாளத்தையழைத்து அந்தப்பெண்பேரிலிருந்த பேயைஅகற்றச்செய்து அவர்களுடனே இணையாகப்போய் விவாகமுடித்துவைத்துவாக்கடவதென்று உத்தரவுசெய்து அந்தப்பெண்ணுக்கும்அந்தப்பெண்ணுக்குரியமணவாளப்பிள்ளைக்கும் வேண்டியஆபரணங்களும் ரொக்கமுங்கொடுத்து தானணிந்திருக்கும் கண்டசரத்தையு மந்தப்பெண்ணின்கழுத்திற்போட்டார் அப்போது ஆலமரத்திற்கண்டு அடிமையாகியசடாமுனி பெண்ணின்முடியைவிட்டிறங்கி மகாபிரபுவே காளிச்சசைவைத்தும்பிடித்தஇந்தகன்னிக்கு தேவரீரணிந்த திருவாபரணத்தைப்பூட்டியபடியால் நான்இனியிருக்கமாட்டேனென்று தன்னுற்கூடிய உபசாரமுஞ்செய்துராசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சடாமுனிபோய்விட இந்தப்பிராமணன்பெண்ணையழைத்துக்கொண்டு சகலசந்தோஷத்துடனே வேதாளத்தையுங்கூட்டிக்கொண்டு தன்பட்டணஞ்சேர்ந்து விவாகம்நிறைவேற்றி வேதாளத்துக்கும் மரியாதைசெய்து அனுப்பிவைத்தான்.

அந்தச்சங்கதிகளையெல்லாம் வேதாளம்வந்து சொல்லக்கேட்டுமிகுந்தசந்தோஷத்துடனே சங்கீதங் கேட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில் புரோகிதன் காசிக்காவடியுடன்வந்து ஆசீர்வதிக்கக்கண்டுவாரும் கேசவிசுவாதரே காசிக்குப்போனீரா கங்கைகொண்டுவந்தீராஇராமேஸ்வரருக்குப்பூசைமுடித்தீராவென்று க்ஷேமங்களையெல்லாம் விசாரித்து தேசங்களிலுள்ளஅதிசயங்களைக் கண்டிருப்பீராகிற்சொல்லுமென்றுகேட்க அப்போது புரோகிதன்சொல்லுவான்அரசனே தேவரீருடையபுண்ணியவசத்தால் சகலதேசமுங்கண்டேன் தேவாலயங்களெல்லாந்தெரிசித்தேன் ஆனால் சிங்காரபுரியென்னும் பட்டணத்திற்குவந்தேன் அவ்விடத்தில்ஒருகாளிகாதேவியம்மன் கோயிலுக்கெதிரில் எண்ணெய்க்கொப்பரைக்காய்ந்துகொண்டிருக்கக்கண்டு விசாரிக்குமிடத்தில் இந்தக் கொப்பரையில் மூழ்கியெழுந்து வந்தவர்களுக்கு பொன்சிவிகையும் பட்டாபிஷேகமும் கிராமமும் பெண்ணுங்கொடுக்கிறதாய்ச் சொன்னார்கள் எனக்கொன்றுந் தோணுமல் வந்தேனென்று புரோகிதன் சொல்ல அவனை யழைத்துக்கொண்டு உடனே புறப்

விட்டு சிங்காபுரஞ் சேர்ந்து அந்தக்கோவிலுக் கெதிரிலிருக்குங் கு
ளத்தில்மூழ்கி நித்தியவிதிகளைமுடித்துக்கொண்டு அந்தக்கோவிலை வ
லமாகச்சுற்றிவந்து தேவியைப்பணிந்து ஆவியைத்திரணமாயெண்ணி
அந்தக்கொப்பரையிற்குதித்துமூழ்கினர் அந்தவெண்ணெய் தண்ணீர்
போற் குளிர்ந்திருக்க அதிற்குதித்துவிளையாடும்போது அந்தநகரத்து
அரசன்முதலியயாவரும்வந்துவணங்கி எண்ணெயிற்குதித்த இவருக்
கும் பொற்றண்டிகையும் அந்தராச்சியபட்டாபிஷேகமும்பெண்ணையு
ங்கொடுத்தார்கள் இயாவற்றையுந்தீண்டாச்சுக்கிரமாகப்பெற்று காசி
க்காவடிகொண்டுவந்ததுறவியாகியபுரோகிதனுக்குக்கொடுத்துதன்கை
யாற்பட்டமுங்கட்டிவைத்துப்போட்டுதன்பட்டணம்வந்துசேர்ந்தார்
இப்பேர்ப்பட்ட கொடியசூரனைவரே அலைத்தாங்குகின்றஇந்தச்சி
ம்மாசனம் உம்மைத்தாங்குமாதேங்கமழுமாலையணிந்தசெயபோசனே
யென்று தலையைஉள்ளேவாங்கிக்கொண்டது பதினான்காம்படிப்பது
மையைக்கண்டு இன்றுநன்றாயிருக்குதென்று இறைவனாகிய போசன்
தன்னுடையஅரண்மனைக்குப்போனான்.

பதினான்காம்பதுமைகதை முற்றிற்று.

---

## பதினைந்தாம்படிக்குக் காவலாகிய
## சுந்தரமணிப்பதுமைசொல் கதை.

---

இராத்திரிமுழுவதும் நித்திரையில்லாமல் எண்ணமிட்டுக்கொண்
டிருந்த போசராசனானவர் உதையாதியிலெழுந்து விதிமுறைகடன்மு
டித்துக்கொண்டு அதிபதிமுதலாகிய அரசரும் மந்திரிபிரதானியமந்
திரிமார்களும் கவிவிரும்பியபெரியோர்களுங் கற்றுணர்ந்தவித்வான்களு
ம் சுற்றிவரும்படியாய் தக்கிடிதாவென நிர்த்தனமிட்டுப் பரத்தையய
ராடிவரவும் சந்திரவட்டக்குடை நிழலில்வந்து சிங்காதனத்துக்கு தீப
தூபமுதலாகிய உபசாரங்கள்செய்து அன்னதானஞ் சொர்ணதானங்க
ளுங்கொடுத்து மனமகிழ்ச்சியுடனேநெருங்கிய படிமீது காலைப்படிய
வைக்கும்படி தூக்கியபோது பதினைந்தாம்படியிலிருந்த பதுமையான
து தலையெடுத்துப்பார்த்து தகாதுதகாதுபோசராசனே சகலலோகத்
திற்குந் தாய்போன்றவிக்கிரமார்க்கமகாராசனுடைய மேன்மையைச்
சொல்லுகிறேன்கேளும் அவருடையசரீரகாயமும் தர்மமும் பொறு
மையும் பெருமையும் நூறிலொருபங்கு ஆருக்காகிலு முண்டென்று
நான்சொல்லமாட்டேன் நீர்சொல்லுவீரா நீதியாளனேவிக்கிரமார்க்கம
காராசன் மேதினியாண்டகாலையில் நேர்ப்பாளதேசத்துராசனும் விக்
கிரமார்க்கனைப்போல் தானும்மேன்மையையடையவேணுமென்றுபெ
ரியோரைப்பணிந்து நித்தியமும்தானங்கொடுத்துவரும்போது உத்தரா
தியிலிருந்து ஒருதார்க்கீகன்வந்தான் அவனைக்கண்டு வணங்கி அவரு
டைய தர்க்கசாஸ்திரங்களைக்கேட்டு சந்தோஷமடைந்துஇவருக்கெவ்
வளவு வெகுமதி செய்யலாமென்றுதன்னாசாரியனையும்மந்திரியையுங்

கேட்க ஆசாரியர்யோசித்து இப்போது அந்த தார்க்கீகன்பேரிலிருக்கும்இஷ்டத்தால் எவ்வளவு கேடுக்கச் சொன்னாலும் அரசன்கொடுத்துவிடுவான் அதனால் நமக்கென்னலாபம் அந்ததர்க்கம் படித்தவனுடன் பேரம்பேசிக்கொண்டால்மேர்பாதியாகிலும் அடித்துக்கொள்ளலாமென்றுகணக்குள்நினைத்து கேர்பாளராஜனைநோக்கி கிருபரோ அருமைதெரிந்ததேவரீர் என்னைஆலோசிக்கபடியால் நான்நாளைக்குச் சொல்லுகிறேனென்று ரகசியமாய்ச்சொன்னார் மந்திரியானவர் வந்தவர்களுக்கெல்லாம் கொடையாகக் கொடுத்துவிட்டால அரசாட்சிநொந்துபோமேயென்றுதன் சிந்தைவருந்திஇப்போது வந்தவனுடன் நாமகலந்துபேசிராஜன்எவ்வளவு கொடுத்தாலும் இவ்வளவுவெகுமதி பெற்றுக்கொள்ளுகிறதென்று நிச்சயம்பண்ணிக் கொண்டால் மற்றவெகுமதியை பொக்கிஷத்திற்சேர்க்க விடலாமென்றுநினைத்து ராஜனைவணங்கிஐயாசொல்லுகிறேனென்றான்.

அரசனும்அதற்குச்சம்மதித்துக்கொண்டுவந்தவித்துவானைப்பார்த்து நாளைக்குவாருமென்று விடைகொடுத்தனுப்பினான் அந்தஉத்தரவின்படி தார்க்கீகன்சென்று ஒருசத்திரத்திலிறங்கியிருக்க அன்றிராத்திரிஆசாரியன்போய் நான்எங்கள் ராசனுக்குச்சொல்லி உமக்குவேண்டியவெகுமதி வாங்கித்தருகிறேன் உனக்குக்கிடைத்ததில் எனக்குப்பாதிகொடுக்கிறையாவென்றுகேட்க அதின்பேரில் தார்க்கீகன்கொடுக்காவிட்டாலோ கொடுக்கஉன்னாலாமோ தான்படித்ததர்க்கம் தர்க்கமோ கேட்குஞ்செவிபடைத்தஇறையோவென்று ஆசாரியனைவிடாபல்படக்கிக்கொண்டுசிலதர்க்கம்பண்ணும்போது ஆசாரியன்பயந்துநாமசெய்த இசைப்புத் தாசிரிவோம்ராசனுக்குத்தெரிந்தால் யானைக்குழையும் தான்பிழைக்கும்சீவனுள்ளியும் பிராணவேதனையும்வருமே தெய்வமேயென்று இந்த தார்க்கீகனுடைய கால்ல்வீழ்ந்து என்னை வெளிப்படுத்தாதேஎன்னுடஸ்திரியிற்பாதிதருகிறேன் என்னுயிருள்ளவரையிலும்உனைமறவேன் என்குலதெய்வம்நீயென்று விளக்கேற்றிவைத்துத்தொழுகிறேன் ஐயாஉயர்ந்தவன் அம்பதினைவை நினைத்தால் உடனேகெடுமென்றவாக்கியம்பலித்தது என்னைக்காப்பாற்றுமென்றான் இப்படிபேசிக்கொண்டிருக்கும்போதே மந்திரியும்வந்திறங்கினான்.

அவனுக்குஆசீர்வதித்து உளுக்காரவைத்தபோது ஆசாரியருங்கண்டுவாருமென்றுபசரிக்கச்சற்றுநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்தப்பால்மந்திரியானவர்தார்க்கீகனைத்தனிமையிலழைத்துஉனக்கெவ்வளவுகொடுத்தாற் போதுமென்று மந்திரிகேட்க மூனுவிரலைக்குவித்து இவ்வளவுகொடுத்தாற்போதுமென்றுவந்தவித்துவான்சொல்ல அதென்னவென்றுமந்திரிகேட்க அதுதானதுவென்றுதார்க்கீகன்சொல்ல மந்திரியானவன்மதிமயங்கிஇன்னதென்று தெரிந்துக்கொள்ளாமல் இவனைக்கேட்கவும் வெட்கமடைந்துஆசாரியனிடத்திற்சொல்லி கலந்துபேசிக்கொண்டு காலமேவருகிறோமென்றுபோனார்கள் இந்தத்தார்க்கீகன்காலமேயெழுந்து நித்தியசெபதபங்களைமுடித்துக்கொண்டு இராசனுடைய அரண்மனைக்குவந்தார்இராசனுடன் சிலநேரம்பேசிக்கொண்டிருந்து இருவருக்குப்பரிசுகொடுப்பதற்கு ஆசாரியனைப் பார்

த்தார் ஆசாரியன்தன் கழுத்தக்குக்கயிறுமாட்டிக்கொண்டானேயென்று தன்கையைக்கழுத்திலவைத்துக் குறிப்பாகக்காட்டினன் அதைஅரசன் அறிந்துகொள்ளமாட்டாமல் மறுபடியுங்கேட்டார் றனக்கு மூட்டான்தனம் வருமென்றுதெரிந்துகொண்டவனைப்போல் தலையாட்டி மந்திரிமுகத்தைப்பார்த்தான் மந்திரியானவன் மூனுவிரலைக்குவித்துதார்க்கிகன்காட்டியபடி காட்டினன் அச்செய்கைராசனறிந்துகொள்ளமாட்டாமலும் தெரிந்துகொள்ளவில்லையென்று மூடத்தனத்தைவெளிக்குக்காட்டாமலும் தெரிந்துகொண்டவனைப்போலிருந்து தன்வெக்கிஷக்காரனைப்பார்த்து ஆசாரியர்காட்டிய குறிப்பின்படி கழுத்தைக்கைமற்றுவிக்காட்டி மந்திரிகாட்டியசைகைபின்படி மூன்றுவிரலைக்குவித்துக் காட்டி தனதுசைகைதலையையசைத்தார் இக்குறிப்பையறிந்த தொழிலாளிகள் கண்டத்தைக் கழிவிப்படியாலும் மூன்றுவிரலைகுவித்துக்காட்டியதன்மையினாலும் எலுமிச்சங்காயத்தனை விஷமெடுத்துக்கொண்டு பொற்றட்டில்வைத்து சால்வைமுதலிய சாதராவினால் மூடிக்கொண்டுவந்தார்கள் அந்தத்தட்டடனே இக்க வித்துவானுக்குக்கொடுக்க அதைவாங்கிவிசேவகருனிபர்கள்கொடுத்த வெகுமதியென்று சாதராவைக்கிளப்பிப்பார்க்கும்போது விஷமிருக்கக்கண்டுமனம்வெகுண்டு அருமைதெரியாதஅரசனை பதினுயிரம்கோடினாலும் ஒருசிங்கமாகாது பதினையிம்கோடினாலும் சிறுவாகிய கடலாகாது ஆகலால் கீர்த்திமானாகிய விக்கிரமார்க்கனுக் குறைப்பாகியபேர்கள் இப்புவியிலுளதென்பது தப்பு இதற்கு ஆமென்றுசொல்லாமல் அல்லவென்று சொன்னால் அவர்கள்மப்பு என்ற வார்த்தைபாடி அருமைதெரியாமல்விஷமிட்டவேந்தனென்றுபேரிட்டு அந்தத்தார்க்கிகன் உச்சினியட்டணமகோக்கிப்போனன்.

இவ்விடத்தில் இந்தராசனானவன் மெத்தப்பயந்துவருந்தி காட்டுக்குப்போய ஒருமகாமுனியையடுத்து ஐயா நரிலோகத்திலும் விக்கிரமார்க்கனுக்குமிஞ்சினபேரில்லையென்றுசொல்லுகிறார்களே நான்அவனைவிட மேலாகியபுகழையும் பிரபலத்தையுமுடையவனாகத் தழைபுரியவேண்டுமென்று சாஷ்டாங்கமாகவிழுந்துவணங்கியபோது அந்தப்பெரியவர்சொல்லுகிறார் ஓவேந்தனே நீஅந்த விக்கிரமார்க்கனைப்போலாகவேணுமென்றால் யானையுயரம் குழிவெட்டி விசேஷமாய்வன்னி அந்தஅக்கினியில் உன்னுடைய முப்பத்திரண்டுறப்பையும் அறுத்துப்போட்டு மனந்தளராமல் கண்ணீர்விடாமல் ஓமஞ்செய்வையாகில் அளவிறந்தபாக்கியமும் சத்தியகீர்த்தியும் சகலகாரியவசியமுமுண்டாக்குண்டாமென்று ஒருமந்திரத்தையுபதேசித்தருளினர் அந்தராசன் ஒரேவுறுதியாய் தன்சரீரத்தையறுத்துப்போட்டு அந்த முனிசிரேஷ்டரையுபவைத்துக்கொண்டு ஓமம்பண்ணிவரும்போது பிராமணாள்முதலியசாஸ்திரிகளும் ஆச்சரியப்படும்படிக்கு நாளொன்றுக்குநாற்பது மறக்கால்பொன்வருமபடிநேரிட்டது அந்தத் திரவியங்களையெல்லாம் காலைக்குவேண்டுமென்றுவைக்காமல்தான தருமத்தியாகங்களுக்கொடுத்துக்கொண்டுவருநாளையில்முன்சொல்லிவந்த தார்க்கிகனென்னும் வித்துவான் விக்ரமார்க்கனிடத்திற்குவந்து தன்னுடைய விர்த்தாந்த

ஊதக்கய்டியபோது மகாசந்தோஷமடைந்து ஐயாநீரெந்ததேசம்எப்
போது புறப்பட்டீரென்றுகேட்டார் அரசனே நான் பொன்வரைநாட்
டாய்புறப்பட்டு ஒருவருஷமாச்சுது ஆனால்வழிகளிலிருக்கும்பட்டண
ங்களுக்குப்போய்அரசர்களைக்கண்டு பரிசுபெற்றுக்கொண்டுதாமிசமா
ய்வந்தேனென்று தார்க்கிகன்சொல்ல நல்லதுவந்தவழியில்எந்தராசன்
என்னவெகுமதிசெய்தான் அந்தநகரத்தின் அதிசயங்களேதாகிலுமு
ண்டானால்சொல்லும் வித்வமாணிக்கமேயென்று மிகுந்தஉபசாரமாக
க்கேட்க வித்வான்சொல்லுகிறார் புகழ்ப்பிரதாபனேகேளும் சேர்பா
ளதேசத்தில்வந்தேன் அந்தராசன் மந்திரிவார்த்தையும்ஆசாரியன்பே
ச்சையுங்கேட்டு விஷங்கொடுத்தானென்றுஅவனுடைய வினைவுகளைச்
சொன்னார்.

அதைக்கேட்டு விக்கிரமார்க்கன் வேதாளத்தைவழைத்துஅதன்
பேரில்தானும்தார்க்கிகனும்ஏறிக்கொண்டுசேர்பாளதேசத்திற்குவந்து
அந்தராசனுடையசெரியைவிசாரிக்கும்போது ஓமம்பண்ணிசரீரத்தை
யறுத்து நெருப்பிற்போட்டு நித்தியகதிரவியஞ்சம்பாதித்துச் செலவு
செய்கிறானென்றுகேள்விப்பட்டு அந்தவூரில் மசானியமூலையிலிருக்கு
ம் பத்ரகாளிகோயிலுக்குப்போய்ஸ்நானம்பண்ணி அவ்விடத்திலொரு
ஓமகுண்டம்ஏர்ப்படுத்தி அந்தஓமகுண்டத்தில் விக்கிரமார்க்கராசன்
குதிக்க அதைக்கண்டுதார்க்கிகன் அழுது ஐயோஇதற்காகவோநான்பா
விவந்தேனென்றுஏங்கும்போது அந்தகோயிலிலிருந்தமாகாளி வெளி
வந்து தீயிற்குதித்ததிடவாளைப்பார்த்து அருள்புரிந்து அப்பனே என்
னுடையசந்நிதானத்துக்குமுன்னே தீவளர்த்தி நீயேன்விழுந்தாய் இ
ப்படிசெய்யப்போமோவென்று காளிகாதேவிகேட்க அவளைவணங்கி
அம்மணி அருமைதெரிந்துபெருமையுணர்ந்து கிருபையுணர்ந்து பிற
ருக்குஉபயோகமில்லாத தேகம்பெற்றிருந்தென்னஇறந்தென்னஇந்
த்தார்க்கிகன் மெத்தவுங்கற்றவன் இவருடையவறுமைதீரவும்இவ்வுல
கக்கராசன் சரீரத்தையறுத்து அக்கினிக்குத்தத்தபண்ணி தனம்தே
டுகிறாராம் அவருக்கந்தகொடுமைதீரவும் நீவெளிவரவும் நானிந்தத்தீ
யிற்குதித்தேனென்றுவிக்ரமார்க்கராசன்சொல்லநாராயணிகைக்கூ
ண்டிருந்தென்ன உனக்குவேண்டிய வரமென்னவென்று திரிபுரதகனி
கேட்க விக்கிரமார்க்கன்சொல்லுகிறார் அக்கரவம்பூண்ட ஆயிமகமாயி
இந்தத்தேசத்தராசன் தினயானஞ்செய்யும்ஓமத்தினால்வரும் காற்ப
துமாக்கால்திரவியமும் இவருடையசொக்கிஷத்தில் சேர்ப்பித்து இவ
ருடையதேசத்தையறுத்து ஓமம்பண்ணாமல் என்போலொத்தவர்களி
ன்பெருமையும்புகழும இவர்பெற்றவச்ரதேகமாயிருக்கும்படி வாமரு
ளவேண்டுமாதங்கியென்றுவணங்கி அந்தராசனுடைய ஆசையெவ்வ
ளவோ அவ்வளவுசெல்வம் அந்ததார்க்கிகருக்குங் கொடுத்தருளவேண்
டுமென்று கொண்டாடிநிற்கும்போது அந்ததேசத்துராசனும்மந்திரிபி
ரதானியர்முதலியபேர்களும இந்தசேதிகேட்டுவந்து விக்கிரமார்க்கம
காராசனையுங் காளிகாதேவியையும் தர்க்ககற்றவித்துவானையுங்கண்
டு ஆச்சரியங்கொண்டு நிற்கும்போது தார்க்கிகனானவன் அந்தராசனை
ப்பார்த்து விக்கிரமார்க்கராசனுக் கிணையாகதலைகிழிருந்தவஞ்செய

தாலும்வராதே விஷங்கொடுத்துவேசுவே உனக்குத் தினமொன்றுக்கு நாற்பதினாயிரம் சுவர்ணம்கொடுக்கவந்த வடிவேலற்கங்கண்ணாகிய இந்த ராசனைப்பாருமென்றுகாட்ட அந்தராசனும்இந்தராசனும்ஒருவரொருவர்தழுவி அணைத்துக்கொண்டு பரசுத்திக்கொடுத்தவரத்தைச்செல்வமாகப்பெற்று தாரகிகேனுக்குகொடுப்பித்து ஆசாரியனுடைய ஆசைமோசத்தையும் மந்திரியின் எண்ணத்தையும் அவளின் சகுக்குமியினுடைய விபரீதத்தையும் பரபலகடாப்பவெளிப்படுத்தி எல்லோருக்கும் நன்மைசெய்தபோது அந்தஊராசனெழுந்து விக்கிரமார்க்கனுடைய காலில்விழுந்து உனக்கிணையாகும்படி நினைத்த என்னுடைய பேதமைத்தனத்துக்குத்தான் விசனப்படுகிறேனென்று தன்னைத்தானே நொந்துவிக்கிரமார்க்கனுக்குவிடைகொடுத்து தன்னரண்மனைக்குப்போனான்.

இப்பால்தாரகிகேனை சம்பிரமத்துடனனுப்பிவைத்து வேதாளத்துடன் நேபாளதேசத்தைவிட்டு உச்சினியோங்காளி பட்டணம் வந்துசேர்ந்தார்கள்கேட்டாயோ போசராசனே இந்தவுபகாரஞ்செய்தவிக்கிரமார்க்கனுடைய வஞ்சகமற்ற நெஞ்சமுதலிய நன்மைகளைப் பாரும் இரவில்கன்றுமேயாந்துதோர்ந்துநாளைக்குவாருமென்றுபதுமைதலைசாய்க்கவேபோசராசன் திரும்பி அரண்மனைக்குப்போனான்,

பதினைந்தாம்பதுமைசொல்கதை-முற்றிற்று,

---

## பதினாறும்படிக்குக்காவலாகிய சத்தபரிபூரணைப்பதுமை சொல்கதை.

பதினாறுசட்காலமே போசராசனெழுந்து தீர்த்தமாடிசிவார்ச்சனைபண்ணிக்கொண்டு தேவதாஸ்தானம்தர்மசத்திரம் ஊர்விசாரணை தானதர்மம் எல்லாம்நடத்துவதற்குத்திட்டப்படுத்திசிங்காதனம்மேறவேணுமென்னுஞ்சிக்கையும்அத்தமன்னனுடையகீர்த்தியை கேட்கலாமெனனும்வாஞ்சையும்மூண்டுச்சொல்லவுக்கம்பதிவைத்துபூசைசெய்வித்துயமர்த்திபூமியில்தீர்க்கதெண்டமாய் விழுந்தெழுந்துவீரகல்லைகட்டியகாலையெடுத்து படிமேல்வைக்கப்போம்போதுமேட்டிலிருந்து பார்ப்பவளைப்போல் பார்த்த சத்தபரிபூரணைப்பதுமை தலையெடுத்து பலைபுடைக்குஞ்சத்தம்போல்கூவி ஓபோசராசனே பதினைந்தாம்படிக்குக்காவலாகிய எங்களினமானபதுமைஇந்தச்சிங்காதனம் உமக்குக்காதுநீரேறவேண்டாமென்று சொல்லியிருக்க ஒருவனைப்பார்த்தவிட்டெழுந்திருவென்றால் இலைபொத்தவனென்னுந்தன்மைபோல் இச்சசிங்காதனமேறவருகிறீர் ஐயோ விக்கிரமார்க்கராசனுடைய திறமும் அறமும் உமக்கிருக்குமானால் அதிகசொல்பமாயேறலாம் அப்படிக்கில்லாமையால் நீரேறத்தகாது மிஞ்சியேறினாலோ இந்தச்சிம்மாதனம் உமக்குமத்தகாருகர்து எட்டாப்பழத்திற்குத்தொறட்டி எட்டியாப்போல் எவ்வினைகாரியத்தில் முயலுகிறீர் அரசனைகான்சொல்லுகிறேனென்று உமக்குக்கோபமவேண்டாம் எங்கள்நீதிபராறிய வி

க்கிரமார்க்கராஜனுடைய சரித்திரத்தைச்சொல்லுகிறேன்நீரேகேளும்
போசந்துபாருமென்று சொல்லத்தொடங்கியது.

பாசமாலைபணிந்தபோஜராஜனேகேளும்எங்கள்விக்கிரமார்க்கரா
ஜன்இந்தச்சிங்காதனத்திலிருந்துபசுபதியாகியசிவபெருமானைப்போ
லும்பாற்கடற்றுயின்றோனாகியமகாவிஷ்ணுவைப்போலுந் தர்மநீதிக
ளானவராய் துரைத்தனம்நடத்திவருநாளையில்ஒருசித்தபுருஷன்வந்து
ஆசீர்வதித்தான் அவனைக்கண்டவுடனே மெத்தவருந்தி உபசரித்துவ
ணங்கி அர்க்கியபாத்தியஆசமனீயங்கொடுத்து அவர்கொடுத்தவிபூ
தியை வாங்கித்தரித்துக்கொண்டு மேலாகியநிலையினையுடையதேவரீர்
திருவடிபெயர்த்தபடியால் இக்கப்பட்டணத்துக்குயாதொருகுறைவு
மில்லையென்றுபோற்றிஇவ்விடம்வந்தகாரியம்யாதென்று விக்கிரமார்க்க
வேந்தன்கேட்கசித்தபுருஷன்சொல்லுகின்றார் வெற்றியைப்பெற்றவீ
ரனேநான் புத்திபுனர்ந்தபூலோகத்திற்பிரவேசித்தநாள்முதல்இதுவ
ரையிலுங்காணாதஅதிசயமொன்றுகண்டேன் அதைப்பரிசோதிக்கவே
ணுமென்று என்னுடைய வகையிலும் பார்த்தேன் என்புத்திக்கெட்
டாமையால் உம்மிடத்திற்சொல்லி அந்தச்சந்தேகத்தைஉம்மால்நிவா
ரணம்பண்ணிக்கொள்ளலாமென்றுவந்தேன் நான்சொல்லுங்காரியத்து
சொற்பமாயினும் விற்றலுடையவேந்தனேநீர் விசாரிக்கவேணுமெ
ன்று சித்தபுருடன்சொன்ன திரத்தைப்பார்த்துதேவரீர் திருவடிக்கழு
மையாகிய வினையென்னறியத்தக்க தொன்றுண்டோ இறைவனே
எல்லாருமிவன்செயலாதலால் தேவரீர் திருவாய்மலர்ந்தருளுமென்று
விக்கிரமார்க்கமகாராஜன் வினவ சித்தபுருடனகைத்துச் சொல்லுகிறா
ன்சுத்தசைதன்ய செரியைமலவாக துயமேவகேளும் உதயகிரியோரத்
தில் பிரகாசமந்தரகிரியென்ற ஒருபட்டணம் அந்தப் பட்டணத்தில்ச
மயவாத நாராயணன்கோவிலும் சமயப்பிரயாகையென்றொருகுளமு
மிருக்கின்றது உதயகாலத்தில் அந்தக்குளத்திற்கு நடுவே ஒருபொற்க
ம்பமெழுந்துமத்தியானத்தில்சூரியனுடையதேரைக்கிட்டி அஸ்தமான
த்தில் குளத்துக்குள்ளே யமுந்திப்போகுது இதனுடைய தன்மைஇப்
படிப்பட்டதென்று எனக்குத்தெரியவில்லை இறைவனேயென்று சித்
தபுருடன்சொல்லஅந்தவார்த்தையைமெத்தவருந்திக்கேட்டுதிருந்திய
மனத்தில்பொருந்தியசந்தோஷங்கொண்டு அருந்தவமேற்கொண்ட வி
க்கிரமார்க்கராஜன் தனதுமந்திரியாகிய பட்டியையழைத்து சித்தபுரு
டன் சிந்தையாய்ச்சொல்லிய விந்தையைத்தெரிவித்து நான்போய் அ
தைஇன்னதென்று அறிந்துவருகிறேன் நீர் அரசாட்சியைப்பார்த்துக்
கொள்ளுமென்று அவர்வசத்திலொப்பிவைத்து விடைபெற்றுக்கொண்
டுவேதாளத்தையழைத்துமேலேறிக்கொண்டு கௌனகுளிகைகைவல்
லமில்லாதசித்தபுருஷனும்தன்னைத்தொடர்ந்துவரும்படியாய் உதயகி
ரிச்சாரலில் பிரகாசமந்தரகிரியென்னும்பட்டணத்திற்போயிறங்கி சம
யப்பிரயாகை யென்னுங்குளத்தைக்கண்டு அந்தவூரின் வளங்களையும்
விசாலங்களையும்பார்த்து அந்தக்குளத்தில்ஸ்நானஞ்செய்துசமயவாத
நாராயணனையும்வணங்கிப்பணிந்துஉபவாசமாய் அன்றிராத்திரிமுழு

வதம்விக்கினையில்லாமலிருந்தார் பொழுதுவிடிந்தவுடனே அந்தக்கு ளத்திலிருந்து பொற்கம்பமெழுந்தது அதைப்பார்த்துக்கொண்டிருக் கும்போது கொஞ்சங்கொஞ்சமாகவளர்ந்தது அப்போதவிக்கிரமார்க் கமகாராஜன்வெகுவிசனத்துடன் சலத்தினின்றுநீங்கிக்கரையேறி அ ந்தக்கம்பத்திலேறிநன்றாய்ச்செல்லும்போது சூரியனுஞ்சமீபித்தஉச்சி யிலேவந்தார் அந்தக்கம்பமும் அசைச்சலில்லாமல் சூரியனுக்குச் சமீபத்தி ற்சென்றபோது சூரியவெப்பத்தால்தளர்ந்தனனென்றறுபொற்றும்பா மெய்வருகும்போது அக்கினிகட்டிமுதலியபெரியோர்களின் அருளும் பெற்றிருக்கிற மகாராசனுக்கையால்பட்டபடாமலிருந்து சூரியமந்திரத்தை உ ச்சரித்துசூரியவேதத்தைச்சொல்லிஸ்துதித்தியஞ்செய்யும்போது சூரிய ன்மகிழ்ந்து ஆ ஆ அரசனேஎப்பேர்ப்பட்டகல்லும்இருப்புமென்னு ம்என்கின்றகிரணங்களிலேயிருக்கும்படியாயிருக்கும்போது எனக்குச்ச மீபத்தில்வந்திருக்கப் பொற்கம்பமும் உருகிப்போகிறதைக்கண்டு பய ப்படாமல் தேகாபிமானம் பிராணாபிமானம் யாவற்றையும்விட்டுமேல சோபகாரமாய் வந்த உன்றனுடைய தயிரியத்துக்கு நான் மெத்தசந் தோஷப்படுகிறேனென்று அருள்புரிந்து திடவானுக்கு யெல்லாகாரி யங்களுஞ் செயமாமென்றுதன் காதிலணிந்திருந்தகவசக் குண்டலத் தைக்கழட்டிக்கொடுத்து வாழ்ந்திருப்பாயென்றுரைக்க சுவாமி இந்த க்குளத்திலெழுந்த பொற்கம்பத்தின்காரியமொன்றுந்தெரியவில்லை க ட்டளையிடவேண்டுமென்று காவலன்கேட்கசூரியபகவான் சொல்லுகி றார் ஓ அரசனே நான்தாமரைக்குளக்குநாயகனுகையால் இந்தத்தடாக த்தில்ஒருபொற்றாமரையிருக்குது அதனுடையகாரணம் உதயத்திலெழு ந்து என்னைக்கண்டு மத்தியானத்தில்என்னைக்கலந்து சாயங்காலத் தில் தண்ணீர்க்குள் அடங்கிப்போம்இதுவெகுகாலமாயிருக்கின்றதெ ன்றுசொல்ல அதைஅரசன்கேட்டு சந்தோஷமடைந்து அந்தக்கம்பத் தின் தன்மையை அறிந்துக்கொண்டுசூரியபகவானிடத்தில்விடைபெ ற்றுக்கொண்டுசூரியபகவான் தேவியாகிய சாயாதேவியைப் பணிந்த போது பிள்ளைகளைப்பெற்றுத்தம்பியாதலால் இராசனே அடாமகனேயெ ன்று மகிழ்ந்து நீ நினைத்தவிடத்திற்குப்போகும்படியாய்உனக்கொரு குளிகைகொடுக்கிறேனென்றுதயவுசெய்தாள் அந்த அம்மனைப்பணிந் து அதையும்பெற்றுக்கொண்டுசூரியனுடையசாரதியாகியஅருணனைத் தொழுதபோது அவன்புகழ்ந்து அஸ்வமேதிக்னென்னும் மந்திரத்தையுப தேசிக்க அதையுங்கற்றுக்கொண்டுமுதபடியும் கம்பத்தின்வழியேகுள த்திலிறங்கி சம்மதத்தையுங்கும்பிட்டு இவ்வுலகத்திற்குக் கண்டகர்த்தா வாயிருக்கிறசூரியநாராயணனுடையதொந்தமே உத்தமன் தயவினால்இக் தப்பவங்கனெல்லாமன்பெற்றேனென்றுசிந்தையாரவனைக்கி இந்த மகாராஜனுக்கு சலத்துக்குள்ளெந்தலோகம் போகவேணுமென்றாலும் போகும்படியாகசருகந்தியும்அதற்கிசைந்தயந்திரமும் அனேகமணிமு தலியனகமுங்கொடுத்துமங்களாசனஞ்சொல்லிவிடுக்க அவ்விடம்வி ட்டுப்புறப்பட்டுஅந்தப்பட்டணத்திலிருக்கும் சமுத்திரநாராயணன் கோயிலுக்குஉச்சவதிருமுதலியது நடத்திநித்தியபூசை நடக்கும்படியா ய்வேண்டியதிரவியங்களும்வைத்து இருவராயானைகளும் கூட்டி அந்த வூரிலிருக்குங்குடிபடைகளையெல்லாஞ்சவுக்கியப்படுத்தி அவ்விடம்வி

ட்டுத்திரும்பும்போது சித்தன்வந்து உத்தமனே பொற்கம்பத்தின் பூர்வோ
த்திரந்தெரிந்துகொண்டாயாவென்றுவினவ, அரசன்தான்தெரிந்துகொ
ண்டபெருமையைச்சொல்ல சித்தன் ஒருநாள்நான் தேசசஞ்சாரமாய்
இந்தவழிவரும்போது என்னுடையபையாய்த்தவறிகவனகுளிகை இத்தடாக
த்தில்விழுந்து மறுகட்காலமே இந்தப்பொற்கம்பம் புறப்படும்போ
து இதினைமத்தியிலகப்பட்டுக்கொண்டுபோய்சூரியபகவானிடத்திற்சே
ர்ந்தது அவர் அதைப்பார்த்து சாயாதேவியாரிடத்திற்கொடுத்தார் அந்
த அம்மாள் அதைத்தன்வாயிற்போட்டுக்கொண்டிருந்தார்கள் நான்மன
ம்வருந்திவாழ்நிலையில்லாச்செல்வத்தை நம்பிநிலை கெட்டவிர்ப்புடையோ
ப்போல்சிலகாலஞ்சந்தோஷமடைந்து மேலேநிகடத் துன்பகாலந்துக்
க்கப்படாதின்றேன் மகாப்பிரபுவாகியஉன்னால் வைக்குபையவருந்த
ம்நீங்கவேணுமென்றுவணக்கமாய் கேட்கவிக்கிரமார்க்க மன்னவன் க
ண்டு ஆச்சரியங்கொண்டு சித்தனே நீயிழந்தகுளிகைபெறநிமித்தம்என்
க்கனையனுப்பிஇவ்வளவுபெருமை நான்பெறும்படியாகச்செய்துவைத
தஎன்குலதெய்வமாதலால் தேவருடைமை தேவரீருக்கேயென்று அந்த
கவனகுளிகையை அந்தச்சித்தபுருஷனுக்குக் கொடுத்து நீர்க்கதனை
மாகவிழுந்தபோது அந்தச்சித்தபுருஷன் அனேகவாழ்மொழியைத்தெரி
வித்து குளிகைப்பெற்றுஇராஜனலபுப்பவித்துக்கொண்டு போய்விட்
டார்.

இப்பால் விக்கிரமார்க்கமகாராஜன் பட்டணம்நோக்கிவரும்போ
து ஒரு ஏழைப்பிராமணனும் அவன்பெண்சாதியும் உஜ்ஜனிநகரத்துக்கு
ச்சமீபத்தில் ஆற்றங்கரையிலிறங்கியிருக்கிறார்கள் அத்தவிடத்தில்இந்
தராஜன்போயிறங்கித்தியவிதிமுடித்துக்கொண்டுவரும்போது அந்த
ப்பிராமணன்இவரைக்கண்டுதம்மைப்போல் இவரும்பிராமணனாக்கும
ென்று நினைத்துசுவாமி உஜ்ஜனியோக்காளிபுரத்தையாளும் அரசனி
டத்திற்குப்போய்எமதுதரித்திரத்தை அதம்பண்ணிக்கொள்ளலாமெ
ன்று உத்தராபூமிகுருக்கண்டத்திலிருந்துவந்தோம் அந்தஉத்தமராஜனு
டைய தரிசனமெமக்குக்கிடைக்குமா நாங்களேழைகளாச்சே அரண்ம
னைக்குள்ளேபோகவிடுவார்களா தேவரீர்எம்மேப்போதீர் நாங்கள்தவ
ருமல்ல பதியுமல்ல எங்களுக்கு ஒருவழிசொல்லிப் போமென்று அவாம
டக்கிக்கொள்ள அரசனைக்கது ஐயாநான்தான்விக்கிரமார்க்கனென்ப
வன் இக்காருங்குண்டலம் இதுசூரியபகவானெனக்குக்கொடுத்தார்கா
ண்உமக்குக்கொடுத்தேன்நீர்எடுத்திக்கும்பிரகாசிக்கும்படிவாழ்வுபெ
ற்றுக்கொண்டிருமென்று வணங்கிவேதாளத்தையழைத்து இவர்களிரு
வரையும்இவர்களுடையபட்டணஞ்சேர்ப்பித்துவாருமென்றனுப்பிநா
ன்சால்நடையாய்ப் போகும்போது வழியிலசிலவித்துவான்களும்ஞீன
ஞ்சிலமனிதர்களும்வருகிறார்கள் அவர்களை இருதுஷ்டர்கள்மடக்கிக்
கொண்டார்கள் அவர்களெப்பேர்ப்பட்டவரென்னில் சாதியினர்மெத்
தவுந் சிறுமையிற்சிறுமைப்பட்டவர்பெருங்குடியர் சூதாடுகிறவர்தா
சிமுதலிய ஸ்திரீகளைமுடையவர்கள்சிகேசமாயிருந்துகொலைகாரரை
ப்போல் தீங்குசெய்பவர்கள் திருட்டுக்கையெழுத்துப்போட்டுபணக்
கைத்தேடிக்கொள்ளுகிறவர்கள அசத்தியர்இஷ்டருடைய பொருளை
வைத்துக்கொண்டு நன்றிகெடுசெய்யும்படி மறுதிசொன்று வாகஞ்சொ

ன்றுமாய் வைத்துக்கொண்டு விடுவாசனெல்லாம்வேறொருவர்மோசம் வைத்துவிட்டுநமதுமூக்காய்ப்புழுதி விடவேணுமென்று வெளிச்சம போட்டுக்கொண்டிருக்கும்முழுமூடர்இரண்டுபேர்பெரியமெட்டகப்பு றப்பட்டுவைக்குவழியில் வருபவர்களைவம்புவிளைத்துக்கும்படிக்க டைந்துபுத்திமயக்கத்தால்தங்களுக்குள்ளே சேட்டைத்தாக்களியாம ல்கத்தளிக்கச் செய்யும்போது விக்கிரமார்க்கன்கண்டுகோவைப்போன்ற குலமினரைஓரேவெட்டில் துக்கிகாசமடையடியெறிந்து வந்தவித்துவா ன்களை ஆதரித்துவாதப்பொருளாகப்பரவற்றையுஞ் சொத்தைமுழுயும்வி டுத்துதன்னைசாம்வக்குசேர்ந்து வாழ்விற்றிருந்தான் இப்பேர்ப்பட்ட இ ராஜனை நீயெங்கேயாகிலும்கண்டதிருந்தண்டா போஜராஜனே இவ்வ லவுநன்மைகளும் உமக்குண்டாயிருக்குமாகில்இந்தச்சிங்காசனமேற லாமென்றுபிரதமைசொல்லி அம்மம்மாவென்றுசிரித்துப்பறந்தது அ தைக்கண்டபோஜராஜன் அடங்காமலிட்டியுடையவனும் தன்னுடைய அரண்மனையைப்போய்ச்சேர்ந்தான்,

பதினாறாம்படிப்பதுமைகதை-முற்றும்,

---

## பதினேழாம்படிக்குக் காவலாகிய அணிமணிப்பதுமைகதை.

மறுநாட்காலமே போஜமகாராஜனெழுந்து வாசநீர்குடைந்து ஆசாரபூசைவிதிமையைமுடித்துக்கொண்டு சூரியநமஸ்காரஞ்செய்து ஆரியருக்குபசாரதானங்களும் தியாகங்களுங்கொடுத்து சிங்காதனத்திற்குதாபதியங்கள் சத்ரசாமரஉபசாரங்கள் செய்துவலம்புரியாய வந்துபணிக்கசக்கருட்சதை அணிந்து தர்மமேஜெயமென்றுதுணிந்துமாணிக்கப்படியின்மேல் வலதுகாலெடுத்து வைக்கப்போம்போது பதினேழாம்படியிலிருந்த அணிமணிப்பதுமையார்த்தியனைத்தலையெடுத்துப்பார்த்து பாராளும்விசுவாசபோஜனேகேளும்பராக்ரமசாலியாகிய எங்கள்விக்கிரமார்க்க மகாராஜனைப்போல்நீரும்பக்குவசாலியாகயிருப்பீராகில் இந்தச்சிங்காதனமேறலாம் அப்படிக்கில்லாமற்போனால் உமது அரண்மனைக்குப்போகலாமென்றுபதுமைசொல்லபோஜராஜன்கேட்டுவிக்கிரமார்க்கமகாராஜனுடைய பராக்ரமபக்குவத்தைஎனக்குக்கொஞ்சஞ்சொல்லவேணுமென்றுபோஜராஜன்கேட்கஅணிமணிப்பதுமைசொல்லத்தொடங்கியது

வாரும்போஜராஜனேஎங்கள்ருமைபதித்துரையாகியவிக்கிரமார்க்கமகாராஜன் அரசாட்சிசெய்துவருநாளையில் உச்சினிமாகாளிநகரத்தைச்சார்ந்த காட்டில்ஒருகாட்டுப்பன்றிவந்து விழுந்துபயிர்ப்புலங்களையெல்லாங் களையெடுப்பதுபோற்பறித்துஇழுக்குறதலாகிய கரும்புகளையும் குத்துச்செடிகளையுங்குழிப்பயிர்க்கொடிகளையும்பாழாக்க ஏரிகுளங்களையும் பறித்திழுத்து ஜலமிருக்கும்படியாகியமிருகக

ளையெல்லாம்கொன்று மாடுகன்றுகளைக்கொம்பினுற்கீறி மாய்த்து அரு
ஹல் அவைகள்மாய்ந்துபோனதை இந்த அலங்கோலத்தை அங்குள்ளோர்கே
ட்டுத்தடிகாப்புகளுடன் வரக்கண்டு அவர்களைப் புறஞ்சாய்த்து காட்டிற்கு
டியோட்டும்போது சிலநாட்டார் பலவாசிகளாகிய வேடர்களைப் பழைக்
குறித்தப்பன்றியைக்கொன்று விடுங்களென்றுசொல்ல அவர்கள் அந்
தப்படியே உண்டைவில்பாணவில்பாசாபல்லயம் வாங்குசவளக்கோ
ல்குடிதடிகுண்டாந்தடிதளைதடிஎறிதடி முதலியவெல்லா ஆயுதங்களும்
கொண்டுவந்து பன்றியைமடக்கிக் கொல்லும்படியாய் அணைமேல்வ
ரும்போது அவர்கள் பெண்டுகள்பிள்ளைகள் கண்டழும்படிக்குவேடர்
களைக்கொன்று ஒருவர்கையிலுஞ்சிக்காமற்றிரியும்போது சிலவலைய
ருவலைபுலிவலைமுதலியதுங்கட்டி படுகுழிகளும் வெட்டிவைத்துக்கொ
ண்டு காட்டக்கலைத்து நாட்டைவளைத்துத் தோட்டக்காரற் புகுந்து
பன்றிவருங்கூழியில் வாட்டமாகயிருந்து கூட்டங்காட்டும்போது அந்
தப்பன்றியானதுஓட்டமாகவந்து தாவடிகளைப்பனங்குலைகளையறு
த்துமலைகளிலேபாய்ந்துவிடுத்தாலும் இளைக்காமலிருக்கிறதை வேடி
க்கைபார்க்கவந்த வெகுஜனங்களும்பயந்து இப்ரமைகொண்டுநிற்க
கிலிகொண்டபாலகத்தக்கதிலேகமக்குப்பக்குவமாகியவிக்கிரமார்க்கனிட
த்திற்குப்போய் அழுதுதொழுதுமுறையிட்டுக் கொண்டார்கள் அப்
போதுராஜனானவன் வெகுஜனங்களின்வருத்தத்தையும் பயிர்ப்புலம்
போய்விட்டபாட்டையுங்கேட்டு மனந்தாளாமல் காற்றிலும் கடுவேக
முள்ள குதிரைகொணடுவரச்சொல்லி அதின்மேல் ஆரோகணித்து
ச்சென்றுகொடிப்படைகளும்வேட்டுக்குமபுகளுஞ்சூழ்ந்துவரும்படியா
ய்காட்டுக்குப்போய் விசாரிக்கும்போது பொழுதஸ்தமிக்கப்பத்துநாழி
கையாய் விட்டபடியால் காட்டுக்குப்போய்விட்டதுகருப்பன்றியென்
றுநாட்டாருரைக்க அதைக்கேட்டராசன்காட்டிற்குப்போயதப்பட்டை
முதலாகிய வாத்தியமுழக்கி வேட்டை நாய்களை முடுக்கி அந்தப்பன்றி
யைத்தேடி சேனைக்குழுக்களுடனே திரியும்போது ஸ்ரீராமருடைய அம்பு
போலெழுந்துபடைக்கும்பிளவக்குவிழுந்தசிலம்பனாக்கிழித்துசிலப்
டையழித்துவெகுபேரைமாய்த்துவெகுபேரைத்தேய்த்து வெறுத்துப்
பார்த்துவரும்பன்றியை விக்கிரமார்க்கமகாராஜன் கண்டு வேலாயுத
மெடுக்கும்போது காலகோலஞ்செய்வராகமானதுகாற்றிலுங்கடுவே
கமாகச்சென்றோடியகாலத்தில எங்களிறையவனானவர் அந்தப் பன்றி
யைவிடாமற்றொடர்ந்து குதிரையைவிட்டுக்கொண்டோடுங்காலையில்
காடுகள்மேடுகள் செடிகள்முதலாகியஇடங்களெல்லாங்கடந்துபோம்
போது சேனைகளும்வேடர்களும் பின்னுமுன்னுமாய்பின்தங்கிவிட்டார்க
ள் அந்தவேளையில் மன்னனானவன் விட்டேன் தொட்டேனென்று தன்னை
த்துரத்திக்கொண்டு வருவதை அந்தப்பன்றிகண்டு ஆர்ப்பரிக்கவந்தாலு
ம் பெரிதல்ல இக்கனுண்டவன் பகையாகாதென்று பூண்டுகளைமுனைக்
தபொந்தில் விழுந்துஒருசாணடிற்போய் சந்திராகிரியென்னும் பெரு
மலைக்குகைச்சிறபுகுந்தது அதைக்கண்ட விக்கிரமார்க்கராஜன்குதிரை
விட்டிறங்கி சேனைகளையெல்லாம் இங்கே யிருங்களென்று நிறுத்திப்
போட்டு மகதிரவாளையுருவிக்கொண்டு அந்தமலைக்குகைவழியே சில
ம்பணஞ்செய்துகொண்டு கெடுந்தூரம் போய்ப்பார்க்கும்போது நன்

நாகலோகனுடைய சர்ப்பலோகம் அவடத்திலிருக்கு இந்தத்துவாரத்திற்பு
குக்கபன்றி திரும்பிவரக்காலேயும் இந்தக்குகைக்குள்ளாக இரண்டொரு
இச்சத்தக போக்குக ளொன்றுமில்லை பத்திலிறங்கி யிருக்கு கம்
பைக்கலக் எதிர்த்துவரவுங்கூடுமாகையால் அந்தப்பக்கத்தில்வழி
யிருக்கவேணுமென்று நிதானித்துக்கொண்டு மறுபடியுமெழுந்து மூ
ப்பதுயோசனை தூரம்போம்போது கோடிசூரியப்பிரகாசம்போலசோ
திகண்டு இதேது இவ்விடத்தில்சூரியனுதயமானது இதென்னவிந்தை
யாயிருக்கின்றது,

இத்தவழியானது மறுபடியும் பூலோகத்துக்குக்கொண்டுபோய்
விடுமோ வென்று பின்னையும் பத்துயோசனை தூரம்போம்
போது அவ்விடத்தில்பொன்மயமாகிய சுவர்களிட்டு மாணிக்க தீபங்
கள் வைத்திருப்பதைக்கண்டு அந்தவாசலின் வழியே உள்ளேநுழைக்க
போது அநேகக்கோபுரங்களும் விமானமேடைகளும் மிகுந்த அழகாகி
யமண்டபங்களும் தண்ணீர் துறைப்படிகளும் சலசலவென்றுபறக்கு
ங்கொடிகளும் தகதகவென்று சொலிக்கும்படிகளும் தெய்வலோகச்செ
டிகளும்பேரிகைமுழக்கத்திறனுடையதாகிய இடிகளும் சித்திரவீதியும்உ
த்திரவீதியும்பொன்மலைகளும்வெள்ளிமலைகளும் இன்னம்பற்பலவித
சிங்காரங்களுமுடைய ஒப்பற்ற ராசமண்டபத்தோடுங் கூடத்தைக்
கண்டான்.

அந்தமண்டபத்திநடுவிலே கட்லைபக்கிரியும்மசமேருவும் இவ்வி
டத்திலெங்கு எழுந்ததோ அல்லது விழுந்ததோவென்றுசொல்லும்ப
டியாய் ஒருசிங்காதனமேடையிருக்கது அதின்மேல் ஒருநாகச்சதராச
ன்தேவேந்திரபோக வைபவத்துடன் வீற்றிருந்தான் கட்டியக்காரர்பட்
டேவான்கள்வந்திப்போர்சிந்துப்போர்புகழ்வோர்மகிழ்வோர்தூதர்மந்தி
ரிசேனைத்தலைவர்முதலாகியபேர்களுஞ்சூழ்ந்திருக்க குடை கொடிசாம
ரமகரதோரணம் பேர்கட்டியமுதலாகிய இன்னமுளவிருதுக்கொடி
களும் நிறைந்திருக்க இக்கோட்டாலகங்களெல்லாம் எங்கள் ராச
ன்கட்டு என்னத்தையுமனதிலெண்ணாமல் அந்தசபாமண்டபத்
தைநோக்கி வரும்போது காட்டிலிருந்திரபன்றியாய்வந்து பயிர்ப்ப
ண்ணைகளையும் உயிர்ப்புலன்களையும் அழித்தஒருநாகசதன் பன்றிருபத்
தைவிட்டு அரக்கனுருவங்கொண்டு சிங்காதனத்திலிருக்கும் நாகராச
ராஜனுடைய காதுக்குநேராக வாயைவைத்துக்கொண்டு ஓ ராட்
சதமகாராஜனே காண்பனோதிருபமாய்ப் பூலோகத்திற்குப்போயங்கு
நஷ்டப்படுத்திய தன்மையைச்சுறித்து என்னைக்கொல்லவந்தவிக்கிர
மார்க்கமகாராஜனுடைய கையிலகப்படாமல் அதுசந்திரகிரிவாசலால்
காளவந்துவிட்டேன் அந்தவிக்கிரமார்க்கராஜனென்னைத்தூரத்திக்கொ
ண்டு இப்போவருகிறானென்றுசொல்லக்கேட்டு மிகுந்தசந்தோஷத்துட
ன அந்தராட்சதனெதிர்கொண்டுவந்து விக்கிரமார்க்கராசனைத்தழுவிக்
கொண்டு ஐயாமூன்றுநாள் இவ்விடத்தில்சிலநாள் பேசிக்கொண்
டிருக்கும்போது உம்முடைய கீர்த்தியைக்குறித்து மெய்யார்த்தைகளா
கக்கொண்டேயம் உம்மைப்பார்க்கவேணுமென்றும் இச்சையையுடை

யவர்களாய் மெக்குச்சொல்லி அனுப்பினால் வாமாட்டீரென்று வல்ல
மையாகிய ஒருபூதியாய் ராட்சசனைவிடுத்து உம்மையடித்து அழை
த்துவரச்செய்தோம் நீர்கோபஞ்செய்ய வேண்டாம்குபதியாகிய போ
லெக்கினிட்சிக்குந் தேவேந்திரனுக்காகவேயென்று வச்சிரபு
ரிக்கு அந்தராஜனை அழைத்துக்கொண்டுபோய்ப்பாதலங்காட்டியபோ
து அந்தஇடத்தில் தெய்வசன்மூர்த்தியிருக்கக்கண்டு மிகவுநோக்கித்தெண்ட
ஞ்செய்து அருட்பிரசாதம்பெற்று அப்பால்போகும்போது மாவலி
ச்சக்கிரவர்த்தியைக் கண்டகாலத்தில் அவரும்எழுந்திருந்துவந்துவிக்
கிரமார்க்க மகாராசனைத்தழுவி புயத்துடன் புயம்முகத்துடன்முகம்
வைத்து உம்மைப்பார்க்கவேணுமென்று பேராசையால் மற்றொருவித
த்தில்வாமாட்டீரென்று இவ்விதத்தழைப்பித்தோம் எங்கள்பாக்கிய
மேயிதுபோலக்கூடுமேசத்தியவாக்கியமோ ஆசாரசிவபூசையின்யோக்கிய
மேயென்றுபுகழ்ந்துமகிழ்ந்து உமக்கு நாங்கள்என்னஉபசாரஞ்செய்ய
ப்போகிறோம்காசன்செய்வது செல்வமாயிருந்தாலுங்கின்னவையன்
கொள்ளவேணுமென்றுபத்துவிஷாமிர்தகலசங் கொடுத்துஇந்த அமிர்
தத்தைத்தினமானங்கொஞ்சம்புசித்தால் தேகத்தில்வலுவுண்டு நரை
திரைமூப்பில்லாவியாதியிட்டாது செல்வமானசம்பத்துமுண்டாம் போ
கபலஞ்சித்தியாகுமென்றுசொல்லி சிலநவரத்தினங்களுங் கொடுத்து
விடையுங்கொடுத்து ஒருஆரக்கனைக்கூட்டி வழிகாட்டிவாவென்று ஒ
ட்டி இந்தஅரசனுடையபட்டணத்தியைதுஜஸ்தம்பத்தில்கொண்டுவிட்டார்கள்.

இப்பால் விக்கிரமார்க்க மகாராசன் அந்தப்பாதலத்தில் இன்னமி
ருக்கும்விநோதங்களைப்பலவிதமான முதலிய அரக்கரெல்லாரையும்
பார்த்துக்கொண்டு சந்திரகிரியின்குகைவாயிலுக்குவந்து குதிரையே
றிக்கொண்டு சேனைகளுடனே பட்டணம்நோக்கிவரும்போது
அந்தவழியில் ஒருஏழைப்பிராமணன் அவனுக்கொருபிள்ளை அங்கப்பி
ள்ளையோ பெருவியாதியினால் உடலெல்லாமுருகிரணமாயழுந்துஉ
கிரமும் சீழும்வழிந்தொழுகும்படியாகவாடி உருக்கி யிருக்கும்படியானவ
ர்களைக்கண்டு மனதிரக்கங்கொண்டு விஷாமிர்தகலசத்தில் ஒன்றுகொ
டுத்து அதைப்புசிக்கும்படிக்குவழுஞ்சொல்லி அநேகமாணிக்கமுங்கொ
டுத்தனுப்பிவிட்டு தன்னுடையகோட்டைக்குவந்து பன்றியாளந்த பசுப
ட்சிமுதலிய மனிதரையுமுயிர்களையும் பழையபடியுண்டாக்கி மற்றவொ
ன்பதுகலசத்தையும் மாணிக்கத்தையுங் குடிபடைகளுக்கெல்லாங்
கொடுத்து அவர்களைச் சவுக்கியப் படுத்திவைத்து தானும் உச்சினி
போய்ச்சேர்ந்தார்.

இப்பேர்ப்பட்ட தன்மை உம்மிடத்திலுண்டாயிருக்கு மாகில் இ
ந்தசிங்காசன மேறலாமென்று பிரதமைசொல்லதன்மனதுக்கரைந்துவ
ன்மனதுக்கச்சென்றான் காவலனாகியபோசராஜன்.

பதினேழாம் படிப்பதுமைகதை-முற்றிற்று.

## பதினெட்டாம்படிக்குக்காவலாகிய பரிபூரணகலாநிதிப் பதுமைசொல்லியகதை.

பதினெட்டாநாட்காலமே போசராஜனெழுந்து ஸ்நானஞ்செய்து திருமுடித்துக்கொண்டு பூதானங் கோதானங்களுங்கொடுத்து பெரியோராகிய புண்ணியர்களைப் பணிந்து சூரியநமஸ்காரஞ்செய்து சுற்றத்தார் முதலிய பரிவாரங்களுஞ் சூழ்ந்துவரச்சென்று சிங்காதனத்தைத் தெரிசித்து வணங்கி வழிபடுதெய்வத்தை வாழ்த்தி மகிழ்ச்சியுடன் சிங்காசனமேறப்போம்போது பதினெட்டாம் படிப்பதுமை போசராஜனைநோக்கிப்பார்த்து இப்போது ஆர்த்தநிகரமாகிய எங்கள் முதல்வன் வீற்றிருக்கச் சிங்காசனத்தில் ஏறும்படியாய் என்னிடத்தைக்கடந்து வந்தீர் எங்கள் விக்கிரமார்க்கனுடைய மேன்மை குணத்தில் வெள்ளத்தனையேனும் உம்மிடத்திலிருக்குமாகில் காக்கைகள் மிக்கவேண்டியதில்லை அப்படியில்லாதிருந்தால் உம்மைத்தடுக்கிறேனாகிலுங் கொஞ்சம் எங்கள் ராசனுடைய ஔதாரியகுணமும் அறம்திறம் பொறுமை இந்திரம் தயைதாந்தயம் எதாகிலும் கொஞ்சமிருக்குமாகில் சொல்லுமென்று பிரதிமை தடுக்க அதைக்கேட்டுப் போஜமகாராஜன் வெட்கிப்பொம்மையை நோக்கி உங்கள் அரசனுடைய அன்டமுதலிய யாவற்றையும் எனக்குச் சொல்லுங்களென்று போஜமகாராஜன் நேசமாய்க்கேட்க அசனுக்கொப்பாகிய விக்கிரமார்க்கராஜனுடைய தன்மைகளை பரிபூரண கலாநிதிப் பதுமை பேசத்தொடங்கியது ஐயா, போசனுடைய சமூகத்தில் பிரதானம்பெருமென்னும் புண்ணியமெறி பெற்றகண்ணியனே கேளும் எங்கள் விக்கிரமார்க்கமகாராஜன் காடாறுமாதம் அனுபவிக்கும்படியாய்ப் புறப்படும்போது வேதாளத்தின்மேலேறிக்கொண்டு பதுமாபுரியென்னும்பட்டணத்திற்குப்போய் அவ்விடத்திலிருக்கும் பரமேஸ்வரனைத் தெரிசித்து அங்கிருக்கும் புஷ்கரணியதீரத்தில் ஸ்நானம்பண்ணித்திரும்பி வரும்போது தேசாந்திரியாய் நாலுபேர் பிராமணாள் வந்தார்கள் அவர்களை அரசன்கண்டு வணங்கி சுவாமிகளே நீங்கள் எங்கிருந்து வருகிறீர்களென்று கேட்க ஐயா நாங்கள் இமயகிரியிலிருந்து புறப்பட்டோம் இதுகாசமாச்சுது இதன் மத்தியிலிருக்கும் தேசங்களையும் பார்த்துதீர்த்தங்களும் ஆடிவருகிறோமென்றார்கள் அந்த இமயகிரியில் ஏதாகிலும் அதிசயமுண்டோவென்று அரசன் கேட்க ஐயா, அதிசயமனேகமுண்டு ஆனாலும் அந்த இமயமலைச்சாரலிலிருக்கும் ஒரு குகையில் திரிகாலஞானியென்று ஒருபெரியவரிருக்கிறார் அவரே அவருக்குக் காரியம் வந்தகாரியம் வந்துபோனகாரிய மூன்றுஞ்சொல்லுகிறாரென்று கேள்விப்பட்டோம் நாங்கள் போனோம் அவ்விடத்தில் மகாநாகங்கள் வாசமாயிருக்குதாம் எப்பேர்ப்பட்டவர்களையும் அக்குகைமேலேற வொட்டாமல் மறித்துக்கடிக்குதாம் அந்தப்பெரியவரைச்சொல்லி உத்திரவுசெய்தால்மாத்திரம் போகலாமாம் இல்லாவிட்டால் சாகலாமாம் இப்படிக்கு வெகுசனங்கள் காத்திருக்கிறார்கள் நாங்களுஞ் சிலநாளிருந்துபார்த்தோம் வெகுபாடுபட்டும் கைப்பேர்த்தோம் காரியசித்தியில்லையென்று வந்துவிட்டோம் இதைச

க்ஷதியென்று தோத்திரியர்சொன்னார்கள் அவர்களுக்குவேண்டியதிர வியமுதலாகியதுங் கொடுத்தனுப்பிவிட்டு வேதாளத்தின்மீதேறிச்சென்று சவுரியவிரபுருஷனுதலால் தயிரியமாகப்போய் மலைமேலேறும்போது ஐந்நாகசர்ப்பங்கள்புறப்பட்டது நாலுலட்சம் ஐந்துலட்சம் பத்துலட்சம் இன்னம்பற்பலலட்சம் கிருஷ்ணசர்ப்பங்களும் நாலுவிதமாகிய பாம்புகளின்பேதங்களும்வந்து விக்கிரமார்க்கனைச் சுற்றிக்கொண்டு விடமாட்டோமென்று கடித்து விஷங்களைக்கக்கியபோது அவன் அந்தப்பெரியவருடைய மாயைகளாதலால் நிஜமாகியகடியுமல்ல விஷந்தலைக்கேறவுமில்லை இப்படித்துணிந்தவர்களிதுவரையிலுமில்லை பாம்பென்றால்படைநடுங்கும் அதனால்பாம்பைக்கண்டவுடனே எல்லாரும்பயந்துபோய்விட்டார்கள்.

இவன் அக்ராரதனக்கொண்ட துணிவால் பயப்படாமல் பாம்புகளையெல்லாஞ்சேர்த்துமாட்டிக்கொண்டு தான்கீழும்பாம்புகளமேலும் பாம்புகள்கீழுந் தான்மேலுமாய்த் தட்டித்தடமாடிக்கொண்டுபோய் அந்தமலைக்குகையிலிருக்குந் திரிகாலக்கியானியைக்கண்டான் அந்தஞானியானவர் அரசனைப்பார்த்து மகா சந்தோஷமடைந்து மகாராசனே ஏது இவ்வளவுதூரம்வந்ததென்று முனிவன்கேட்க ராசன்சொல்லுகிறார் தேவரீர்திரிகாலக்கியானியென்று பிராமணர்சொன்னார்கள் அதைக்கேட்டு சுவாமிகளைத்தரிசித்துக்கொள்ளவந்தேனென்று வெகுவினயநமஸ்கரிக்க பெரியவர்சொல்லுகிறார் பெருமைபெற்றவிக்கிரமார்க்கராசனே நீர்சாகசிலனுடைய தவத்தைதைமேற்றிவந்தீர் அசுரன்வந்தபலன்களையெல்லாம்பெற்றீர் இரண்டாயிரவருஷம் பட்டம்பெற்றீர் சகலபுண்ணியமுந்தவமும் திரிகாலக்கியானமும்உமக்குண்டாயிருக்கும்போது இவ்வொருவரிடத்திலிருப்பதை நீர்விசாரிக்கவேண்டுமா உமக்கருமையானதல்லவோ போகட்டும் இவ்வளவுதூரம் பிரயாசையெடுத்துக்கொண்டு இந்தமலைக்குகைக்குவந்து பந்த பாசமபோற் சேர்த்து உம்மைக்கடித்தபாம்புகளுக்கும் பயப்படாமல் நம்மைக்கண்டபடியால் நீர் சும்மாய்ப்போவது ஞாயமல்ல ஆகையால்இந்தாருளளிடத்திலிருந்தமாத்திரக்கோல் ஒப்பில்லாதஒருகுளிகை இந்தஇரண்டையும் நீர்பத்திரமாய்வைத்துக்கொள்ளும்இதனுடையகுணமென்னவென்றால் இந்தமாத்திரக்கோலைவலதுகரத்திற்பிடித்தால்ஆகாயத்திற்கொண்டுபோம்இடதுகரத்திற்பிடித்தால்பூலோகத்திற்கொண்டுபோம்இந்தக்குளிகையைக் கரத்தில்வைத்துக்கொண்டிருப்போம் இந்தக் குளிகையைக்கரத்தில்வைத்துக்கொண்டு நீசொன்னநினைக்கிறா அவைகளெல்லாந்தெரியும் நூறுவருஷத்திற்குமுன்னே நடந்தசங்கதிகளெல்லாந்தெரியும் நூறுவருஷத்திற்குப்பின்னே நடக்கப்போகிறகாரியங்களெல்லாந்தெரியும் இப்பேர்ப்பட்ட இந்தமாத்திரக்கோலையுங்குளிகையையும்நீர்கொண்டுபோமென்றுகொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு அவனைப்பணிந்து செலவுவாங்கிக்கொண்டு வேதாளத்திலேறிஉச்சினியோங்காளிகோயிலுக்கெதிரில ஒருபர்மாண்டமாகிய அக்கினிகுழியை ர்ப்பந்த்திக்கொண்டு ஆரோஹநபிள்ளை மஞ்சள்வஸ்திரங் கட்டிக்கொ

ண்டு நீயிஷ்விழப்போருமென்று அக்கப்பட்டணக்காவற்காரர்கள்வந்து இராசன்சமுகத்திற்சொன்னார்கள் உடனேமந்திரிபிரதானிமுதலாகிய பேர்களுடன்போய் அந்தப்பிள்ளையைக்கையைப்பிடித்துக்கொண்டு நீ யாரப்பா ஏன் அக்கினியில்விழுகிறாய்சொல்லென்று அரசன்கேட்க அந்தப்பிள்ளை முறையோவென்றழுது என்தந்தையாகியதெய்வமேகாவிருந்தது அழகாபுரிபட்டணமென்பதகப்பனிறந்துபோனார் அவருக்குச்செய்யவேண்டியகடன்களைமுடித்து மந்திரிமுதலிய பெரியோர்களால் காண்பட்டங்கட்டிக்கொண்டுவாழ்ந்துவருகாலையில் பெருந்துடிக்கரம் வேபார்த்தன்போரக்கவனென்னுந் துஷ்டான் வாகனுநிகளுடன் வந்து என்னுடையசேனைக்குப்பாளிலவிழுந்து கலகஞ்செய்து என்னைகத்தைதப்பிடுங்கிக்கொண்டு என்னைக்காட்டிலோட்டினார்கள் நான் தெய்வமேகதியென்று அக்கினியில்விழ எத்தனித்தேன் தேவரீரைக்கண்டபடியால்எனக்குத்தயிரியம்வந்தது அந்ததுஷ்டாளிருவருஞ்சாபமடைந்து வேலுங்குலைந்து கண்கெட்டு பழிச்சொற்புண்பட்டுவெட்டிமுந்து துஷ்டத்தனத்தாலழிந்துபோம்படிசெய்து என்னுடையசுகத்தைஎனக்குகொடும் சத்துருசங்காரவேலுக்கொத்த உத்தமனேயென்றுவணங்கியபோது விக்கிரமார்க்கராசன்மெத்தவியசனப்பட்டு தனக்குநிரிகாலக்கியானிகொடுத்தமாத்திரக்கோலையுங்குளிகையையுங்கொடுத்து அதனுடையகுணநிசயங்களுஞ்சொல்லித் தன்னுடைய சேனைகளுடன் தன்னெடுத்துக்கொண்டுபோய் அழகாபுரியில்இப்போதிருக்கும்துஷ்டாளாகியவேபார்த்தன் போரக்கவனென்னும்இருவரையும்வெட்டிமடித்து கஷ்டப்படுத்தி அவன்புத்திரமித்திரகளத்திராதிகளையெல்லாங்காலன்கைக்கொள்ளும்படி சமர்பித்து இந்தப்பிள்ளைக்கு தன்கையினாற்பட்டங்கட்டிவைத்து தானுந்தன்னகர்வந்துசேர்ந்தார்.

இப்பேர்ப்பட்ட அருமையாகிய வஸ்துக்களையும் அலட்சியமாகப்பார்த்து பரோபகாரஞ்செய்த பார்த்திபனைப்போல் உமக்குண்டாயிருக்குமாகில் இந்தச்சிங்காதனமேறுமென்று பதுமைசொல்ல போஜராஜன்பதிற்சொல்லவிதியில்லாமல்மதிமருண்டுமாளிகைக்குப்போனார்

பதினெட்டாம் பதுமைகதை முற்றிற்று,

---

## பத்தொன்பதாம்படிக்குக் காவலாகிய
## சாசசலாப உலாச விலாச குலாச பதுமைசொல் கதை.

---

பத்தொன்பதாம்நாட்காலமே போசராசனெழுந்துவிசேஷதீர்த்தமாடி சிவபூசைமுதலியதுமுடித்துக்கொண்டு ராசசபைக்குவந்து மாசற்றபெரியோரைவணங்கி வண்டமிழ்ப்புலவருடனிணங்கிஎண்டிசையிலுமிருந்துவராநின்ற மகுடிப்பணமுதலியதுகண்டு அண்டர்கின்று தொண்டர்கள்புகழ மண்டலத்துள்ளமன்னுயிர்மகிழசண்ட

ப்ரசண்டதூர்த்தஸ்ட கோதண்டஜயவீரர்களுடன் மந்திரிப்ரதானி
யருஞ்சூழசிங்காசனத்தினிடத்துக்குவந்துஎங்கோனுயெமசனைப்பணி
ந்துப் பூசைகளையேத்தியபுட்பஞ்சாற்றி வாசவனருளுமணிசிங்காதன
மேல்யேறவேணுமென்று இச்சைமேற்கொண்டுவேலதுகாலெடுத்துவை
க்கும்போது கலகலகலியென்று நகைத்து விலையில்லாச் சரசவிலாச
ப்பதுமை படியிலைப்புரக்குமபார்த்திபமோறேபடியிசையேறும்பாக்கி
யமுண்டோ கொடிகளுங்கீர்த்திக்கிரீடியோகீர்த்திமுடிபொருந்தாண்ட
முதன்மைகொள்சீமான் பூமான்கோமான்புண்ணியதீரன்விக்ரமார்க்
கவேந்தனைப்போலமக்குவா பக்குவம் பட்சம் அபட்சம் சத்தியம் கன்
னெறி தருமம் கருமம் திடபற வீரம்தேவாபத்திஅறமுதல்யாவும்அதி
க்தவருளரேல் இறங்கொளுஞ்சிங்காதனமேறலாய்வாருமராசேமகாரா
ஜன் பெருமையை கேருறச்சொல்வேன் நீர்கின்றுகேளும் ஆசைவெட்
கமறியாதென்னும்தேசப்பழமொழி செவியுற்றதில்லையோ போஜராஜ
னே போகாதே போகாதே நேசமாம் விக்கிரமார்க்கனுடைதிருமன்கல்வி
யுஞ்செல்வமுமக்கனவளம்பெற்றகாசினியாளுங்காலையிலொருநாள்வா
சவிநிறைந்த மந்திரிமார்களில்புத்தசேகரனென்றொருமந்திரியுண்டு அ
வனுக்குப் புத்திரனில்லாமல் மெத்தவும்வருந்திகோவிற்குளங்கள்வா
விகூபங்கள் மடம்அன்னசத்திரம் தண்ணீர்ப்பந்தல்தர்மகல்யாணம்த
ர்மப்பிணைஞ்சுடுதல் அதிதிபரதேசிகளைஆதரித்தல் பெரியோரைப்பூசி
த்தல்விரதம்நோன்பு தவஞ்செபம் மந்திரஓமம்அதர்வணமந்திரங்கள்
கிரகதோஷநீக்கல் தகடெழுதிக்கட்டல் தரைமெழுகியுண்டல்மலையே
றிஅடிப்புக்கட்டல் முக்கூடற்புல்லுமுடித்தல் தொட்டியும் பொம்மை
யும்வைக்கப்பிரார்த்தித்தல் காசிராமேஸ்வரமுதலியதீர்த்தமாடல்திரு
வனந்தல்சேவித்தல் குழந்தைமடம்புசித்தல்காப்புகஞ்சுண்டல் புத்ர
தானம்பெறல் மால்எல்லோவார்க்கல்அரசுமுதலாகிய நந்தவனம்வை
த்தல் ஆவுரஞ்சுதறிநாட்டல் சாகதானம்செய்தல் கர்ப்பத்திற்கு மரு
ந்துண்டல் கர்ப்பவேதனையாற்றல் பட்சிமுதலியஉயிர்காத்தல்புராண
காலக்ஷேபக்கேட்டல் நோய்க்குமருந்தளித்தல்முன்சிரங்கைபோட்டு
ப்பொங்கிப்பின்கைகட்டிக்கவிழ்த்துவாயிறுலுண்டல் இவைமுதலாகி
யதன்மைகளெல்லாஞ்செய்து தெய்வானுகூலத்தால்இருபுத்திரனைபெ
ற்றுக்கொண்டு பத்தினியுந்தானு மெத்தவுஞ் சந்தோஷமடைந்து புத்
ரோச்சவஞ்செய்து சாதகன்நடத்தி கோகுலவர்தனென்றுநாமகன்ம
ஞ்செய்து ராஜோபசாரஞ்சிதமாய்வளர்த்து வருநாளில்சாஸ்திரமுத
லாகிய சதுர்வேதங்களைப் படியாமல் தோத்திரத்திற்குரிய குணங்களை
யறியாமல்உன்மத்தனாகிஇருக்கக்கண்டு தந்தைதா யிருவருஞ் சிந்தைவ
ருந்திலங்கைதயே ஈசனே எங்கள்பாவமோஇத்தனைதவங்களிருந் தொ
ன்றுமில்லை புண்ணியருக்குநல்லபிள்ளையாயக்கும் பாவியர்தமக்குப்ப
வியாதுபிள்ளை பண்ணியபவிரிற்புண்ணியந்தெரியும்புண்ணியமில்லாப்
பிழையையாம்செய்தோம்என்றிவர் சொக்தி இருக்குங்காலையில்பிள்ளை
வளர்ந்துபெரியவனாகியவெள்ளையாய்ச்சன்னையாயவிதியில்வந்தாள்ப
திரிபிள்ளை மடையனென்றோர் பேர்வந்ததனாலே மனஞெனந்தெழுந்து
தேசாந்திரமாயசென்றனன்திகைக்கி ஆசாரமாய்ப்புசிக்கஞானாலம்போ

க்கும் கோதாவிரியைக்கண்டு ஸ்நானஞ்செய்து அந்தஆற்றின்கரைமே
ல் அரசமரமும் ஒரு ஆலயமுமிருக்கக்கண்டு அந்தஆலயத்துக்குள் நு
ழைந்துபார்க்கும்போது அவ்விடத்தில பெரியஆறொன்றுஓடக்கண்டு
அந்தஆற்றுக்கு ஸ்படிகத்தால் படிக்கட்டுகட்டி பாவுகல்பரப்பிப்பரிசுத்த
ஞ்செய்திருப்பதைப்பார்த்து அந்தஆற்றின்சலமானது கையாற்றொட்
டால் வெந்துபோம்படியாகிய கொதிப்பினையுடையதாயிருப்பதினாலே
அந்தச்சலத்தில் அரிசியைத்தண்ணீரிலாவது பாத்திரங்களிலாவது வை
த்தால் வெந்துசோறாயிருக்கும் அந்தவிந்தையைக்கண்டு வேடிக்கைப்
பார்த்து வெப்பமாகப்பொங்கிவருமதை நதிக்குள்ளாகப்போட்டு எல்லா
ம்பசபசவென்று வெந்துஎரிந்துவிழவும் இப்படியாகயிருக்கிற அந்தந
திக்கரையிற்சிலநாள் வாசம்பண்ணிக்கொண்டிருக்கும்போது அந்தக்
கோயிலுக்குத்தினமானதேவகன்னிகள் எட்டுபேர்வந்து ஒருத்தி ஆட
ஒருத்திபாட ஒருத்திகைத்தாளம்போட ஒருத்திமத்தளஞ்சாட ஒருத்தி
மலரெடுத்துவந்துதொடுக்க ஒருத்திதீர்த்தமாடிவைக்க ஒருத்திநைவே
த்தியம்வைக்க ஒருத்திதீபதூபங்கொடுக்க இந்தப்படிக்குப்பஞ்சதாளங்
களுடன் அஞ்சுகாலபூசையுடன் நடத்திவருவதை இந்தமந்திரிகு
மாரன் ஐம்புலன்களையுமடக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான் அப்படி
யிருக்குங்காலையில் ஒருநாள் இரண்டுநாள் மூன்றாநாளையில் அகப்பட்
டான் தும்பட்டிக்காய்பத்தனென்பதுபோல இந்தத் தேவகன்னியரு
டைய கண்ணிலகப்பட்டான் அவர்கள் இவனையாரென்று விசாரித்து வ
ந்தவரலாறுந்தெரிந்துகொண்டு நாங்கள்வருகிற இடத்திற்குத் தேவர்
முதலாகியபேரும்வரக்கூடாது வந்தால்எரிந்துப்போய்விடுவார்கள்.

உங்கள்தாய்தந்தைசெய்ததவத்தால் நீஇவ்விடத்தில்வந்திருந்து
ம்பிழைத்தாய் உமக்குஏதோ கொஞ்சநற்காலமிருக்கிறதுநல்லதாகட்
டும் எங்களுடன்எங்கள்ஊருக்குவாருமென்றுமோகங்கொண்டழைத்
தார்கள் அந்த தேவகன்னியரின்வார்த்தையைக்கேட்டு நான்பூலோகத்தி
லிருப்பவன் நீங்கள்தெய்வலோகத்திலிருப்பவர்கள் உங்களுக்குமெனக்
கும்பொருந்தாது மேலும் காளிந்தரமைமுதலிய மோகங்களெல்லா
ம்விட்டுப்போயிருக்கிறேன் விலங்கைவிட்டுத்தொழுவில்மாட்டுந
ன்மைபோல நீங்களென்னை மோகவலையில்மாட்டவேண்டாமென்றும
னவுறுதியால் மறுத்துச்சொல்லிவிட்டான் அந்த வார்த்தையைக்கேட்
டயெட்டுகன்னியரும் இவனுடையபூர்வோத்திரம்விசாரித்துக்கொண்
டு இவர்மெத்தவும்புத்திசாலியென்று சந்தோஷமடைந்துசகலசாஸ்தி
ரங்களும் சதுர்வேதங்களும் இராசநீதியும் இவருக்குண்டாகும்படி
யாய் அனுக்கிரகஞ்செய்து அனேகபாக்கியங்களுக்கிடைக்கத்தக்கதா
யோக்கியத்துடன் அருளபுரிந்து சிலாக்கியப்படுத்திவிட்டுப்போனார்க
ள் அவர்களெட்டுபேரும்போனபிற்பாடு அவ்விடம்விட்டுப்புறப்பட்டு
உச்சினிமாகாளிபட்டணம்வந்துசேர்ந்து தாய்தந்தையாரைப்பணி
ந்து அவர்களாற்பெருமையடைந்து எல்லாத்திறங்களிலும்வல்லவனெ
ன்றபேர்பெற்று எங்கள் விக்கிரமார்க்கராசனுடைய கோயிலுக்குவந்தா
ன் அந்தப்பிள்ளையை ராசன்கண்டு இதுவரையிலும் எங்கேபோயிருந்
தாய் என்னெந்ததேசம்பார்த்தாய் நீபோனபட்டணங்களில் என்ன அதி

யைக்கண்டாய் உனக்குஇவ்வளவுவித்தையும் ஐசுவரியமும்நிறைமெள ப்படிவந்தது எனக்குச்சொல்லென்று எங்களரசன்கேட்கதான்புறப்ப ட்டகாலமுதல் இதுவரையிலும் நடந்தசங்கதிகளும் தான்கண்டவித் தையாகியசமாச்சாரங்களையும் அவனுக்குச்சொன்னான்.

அதைக்கேட்டுஇந்தமந்திரிகுமாரனையழைத்துக்கொண்டு வேதா ளத்தின்மேலேறிஅந்தக்கோயிலுக்கருகாமையாயேலோடிவராநின்ற தியா நத்திற்போயிறங்கி அங்கனம் வாசஞ்செய்துக்கொண் டிருக்கும்போது தேவகன்னியரெட்டுப்பேரும்வந்து யாமமூலப்பிரகாரம்பஞ்சகாட்டிய க்கனும் சகலவிதஉபசாரங்களுஞ்செய்யக்கண்டுமகிழ்ச்சியடைந்து அ ந்தயுவதிகளெட்டுபேரும்எந்தவழிபோனார்களோ அந்தவழியேவிக் கிரமார்க்கராசன் முன்னும்பின்னுமாய்ப்போய்ப்பார்க்கும்படி அந்த ப்பெண்களெனமரும் அஷ்டசித்தருக்கும்அன்பாகஉபசாரம்பண்ணி க்கொண்டு ஆனந்தத்துடனிருக்கக்கண்டு அரசன்போய்ப் பணிந்தான் அவர்களெல்லோரும் அரசனைப்பார்த்து ஆச்சரியங்கொண்டு நீரோ இவ்விடத்திலவர்தது எப்படிவந்தீரென்றுகேட்க அதற்குஎங்கள்வேத தன்சொன்னது ஐயா அனல்தீர்த்தத்தில் அடைகன்னியரும்ஸ்னானஞ் செய்துஅகோரவீரபத்திரனைபூசித்துஆபகட்டங்களாடிவரும்போ து நானுங்கூடவந்துவிட்டேனென்று அடிமேல்முடிபடத்தொழுதான் அவர்கள்சந்தோஷமடைந்து அஷ்டசித்தருமெட்டுரத்தினங்கள் கொடுத் தார்கள் அஷ்டபாதகரும் இஷ்டசித்திவித்தைகள அவைகளையெல்லா ம்பெற்றுக்கொண்டு திரும்பும்போது சுவாமிகளே அக்கினிதீர்த்தம்பெ ருப்பாயிருப்பானேனென்றுகேட்க அதனல்பானுடையசடாபாரத்தி லிருந்துவழிந்தகங்கைநெற்றிக்கண்வழியேவிழுந்தநெருப்பாகிய இவ னையாதாளவக்கினியென்றுசொல்ல அந்தவெல்லவர்களைப் பணிந்தெ ழுந்து உச்சினிபட்டணம்வந்துசேர்ந்துமந்திரிகளுக்குமாணிக்கமளி த்துமகாராசனுகயிருந்தார்

நீரும் இப்பேர்ப்பட்ட தயிரியமும்தயாளுவாகியகுணமுமுடை யவராயிருப்பீராகில் இந்தச்சிங்காதனமேறுமென்றுதெரிவித்தது அரு விபோரம்படிக்குப்பிரதமையைப்பார்த்துபோசராசன்வெட்கிப்போனான்.

பத்தொன்பதாம்பதுமைசொல்கதை-முற்றிற்று.

---

## இருபதாம்படிக்குக்காவலாகிய

## இந்திரவீலாவதிப்பதுமை சொல்கதை.

---

இருபதாம்நாட்காலமேயெழுந்து போஜராஜன் இந்திரசிங்காசனமேற க்கிச் சந்திரபுஷ்கரணியில் ஸ்நானம்பண்ணி மந்திராட்சதை முதலிய மணிப்பணிகணிந்து சொந்தலர் மாலைபுனைந்து கற்பூரம்போரால் மகி ழ்ந்து செங்கழுநீர்வேள்ளிவளர்களுக்கு அநேகதானதருமம்பண்ணி மிகுந்த தனத்தருகிலைக்கி கன்கைதாவதம்சாமூதலத்து சுவாமித்தாசபடி

74

ந்து சுவமுனியாகியராசன் மரகதமணிப்படிமீது வலதுகா லெடுத்து வைக்கப்போம்போது சுந்தரவடிவமைந்த இந்திரலீலாவதிப்பதுமை மந்தரபுபசோமன்னனே கேளும் தேவேந்திரற்சிறந்தவிக்ரமார்க்கன் வாழ்ந்துவருநாளவனத்திற்சென்று காடாறுமாதங்கடக்கப்போனார் சித்திரைமாதங்கத்திரிகாலம் மேகப்பொழியுமெச்ச லில்லாமையால் மெத்தவுக்காச்சல்காய்ந்து காடெல்லாங்கமர்வெடிப்புவெடித்துவாவியில்குளத்தில்மலைய நுவியில்சலமில்லாமையால் ராசனுடையநாக்குவரண்டு விடாய்ப்பட்டுதண்ணீர்தேடித்தவிக்கும்போதொரிடத்திலொருமண்டபமும் தாமரைத்தடாகமும் இருக்கக்கண்டு சமீபத்தில் நெருங்கிதாகவிடாய்தீர்ந்து சௌக்கியமாயிருக்கும் போது அந்தமண்டபமும் தாமரைக்குளத்திற்குப்படித்துறையும் ஒன்பதுவகைரத்தினங்களால் அழகாக அமைந்திருப்பதை விக்கிரமார்க்கவேந்தன்பார்த்துசந்தோஷித்திருக்கையில் ஒருபிராமணன் சகலவேதசாஸ்திரங்களைகற்றுதேசசஞ்சாரஞ்செய்து அம்மண்டபத்தின்வந்திறங்கினர் அந்தப்பிராமணன் இராசாவைப்பார்த்துச்சொன்னது வாரும்இராசனே உம்மைப்பார்த்தால்முப்பத்திரண்டுலட்சணமுளளவராயிருக்கிறீர் நீர்எந்ததேசம் இவ்விடம்வந்தகாரியமேதென்றுகேட்டார் அதைக்கேட்டுவிக்கிரமார்க்கன்பிராமணனைநமஸ்கரித்துச்சொல்லுகிறார் நானிருப்பதுஉச்சினிநகரம்என்பேர் விக்ரமார்க்கனென்றுசொல்ல அதைக்கேட்டுஅந்தப்பிராமணன்சொல்லுகிறான் அரசனே சகலவளங்களுந் தருமமும்நிறைந்த உச்சினிபட்டணத்தைவிட்டு இந்தக்காட்டிலொண்டியாய் வந்திருப்பதேனோ தனிமையாயிருப்பதினால் உமக்குப்பயமில்லையாவென்றுகேட்க சுவாமிகளே என்னிஷ்டதெய்வமாகிய ஓங்காளியென்னும்பராசத்தியுந்தேவரியைப்போன்ற மகானுக்களுடைய ஆசிர்வசனமும்இருக்கும்போது எனக்குயாதொருபயமுமில்லையென்றுசொல்லி ஐயா நீங்களெங்கிருந்துவருகிறீர்கள் உங்கள்பேரென்னவென்றுகேட்க அந்தப்பிராமணன்மெத்தவும்வருந்தி புத்திமானாகியராசனே நானிருப்பதுதர்மபுரிசிறுவயதிலே அவ்விடம்விட்டுப்புறப்பட்டுதேசசஞ்சாரஞ்செய்துமாகேஸ்வரி வராகி சங்காளி ஓங்காளி நாராயணியென்னும்பராசத்தியைப்பூசிக்கும்படி இச்சைகொண்டு தில்லைமாகாளியின்சந்நிதானத்துக்குப்போய் பொய்கையில் ஸ்நானம்பண்ணி நித்தியஜெபதபவிரதமுடித்துக்கொண்டுசர்வலோக காரணியைப்பூசித்து வணங்கித்தொழுது பத்மாசனத்திலிருந்து பன்னிரண்டுவருஷமாய்ப் பராசத்தியைக்குறித்து வருந்தித்தவமிருந்தேன் அந்த அம்பாளானவள் எனக்குப்பிரசன்னமாகாததினால் மனவருத்தமடைந்து பாவியாகியசனனம் இந்தக்குளத்தில்விழுந்துஇறந்துபோகலாமென்றுவந்தேன் வந்தயிடத்தில்உம்மைக்கண்டேன் சிந்தைகளிகொண்டேன் உமதுகுளிர்ந்த சந்திரபிம்பமுகத்தைக்கண்டோர்களுடைய அண்டையிலும் தான்வம்பிறகாது மண்டலாதிபனேயென்று மறையவன்சொல்ல இறையவன்கேட்டு பயம்படாமல் வாருமென்று அந்தப்பிராமணனைஅழைத்துக்கொண்டுதில்லைமாகாளி சந்நிதானத்திற்போய்த் தீர்த்தத்தில்முழுகி கோயிலைச்சுற்றி கும்பிட்டுப்பணிந்து அவ்வி த்திசிருக்கும் ஒருகுகைக்குள்ளேபோய்முழு

நாள்வரைக்கும் மௌனத்திலிருந்து ஞானப்பிரசூரானே கன்னிவருந்தபிரத்தியட்சமாக அம்மன் மெய்யாதிருக்கக்கண்டு தாயேசரணம் ஆயேசரணம் அம்மாள்சரணம் நாவேதுக்கோர்வரம் நல்காதென்னவென்றுபணிந்திருக்கும்போது அசரீரிவாக்யமொன்றுபிறந்தது ஓஅரசனேமுப்பத்திரண்டுலட்சணமுள்ளமுடித்தலையாவதுகடைத்தலையாவதுனக்குபலிகொடுத்து அந்தஉதிரங்கள் என்கோயிலில்பாளுமாகில் நானெதிர்வருவேனென்றுசொல்ல அதைக்கேட்ட விக்கிரமார்க்கன்முடித்தலைநாமிருக்க கடைத்தலையைஎங்கேதேடப்போகிறோமென்று அரையிற்கட்டியமந்திரவாளையுருவிக்கொண்டு தன்கழுத்தில்வைத்திழுக்கும்போது திரிபுரதகனிசிங்கவாகனி திரிசூலியென்னுந்தேவிபிரசன்னமாய்வந்து அரசனுடையகையைப்பிடித்துக்கொண்டு சொல்லுகிறாள் அதிதீரவிக்கிரமார்க்கனேகேளும் உம்மைப்போல் இவ்வளவுமனவுறுதியாய்த் தவஞ்செய்யுந்திறமில்லாத சபலசித்தப்பிராமணனாதலால் அவனுக்குநான பிரசன்னமாகவில்லை நீசெய்தஉறுதியின்பேரால்பிரசன்னமானேன் உமக்குவேண்டியவரத்தைக்கேளும் தருகிறேனென்று சாம்பவிசொல்ல அரசன்றொழுது அம்மாள் உன்னுடையதிருவருளனுக்கிரகத்தாலெனக்கெல்லாமிருக்கின்றதுபின்னொருகுறைவுமில்லை இந்தவேதியர் பன்னிரண்டுவருஷந் தவஞ்செய்துபலனில்லாமற்போனதேனென்றுசொல்லவுங் குறைவு ஒன்றுமாத்திரம் இல்லாமற்செய்யுந் தாயே யென்றுவேண்டிக்கொள்ள அப்படியே நல்லதென்று அந்தவேதியனைப்பார்த்து உனக்கென்னவேணுமென்றுகேட்க அவரும்பிரதட்சணம்வந்து நமஸ்கரித்துயெப்போதுந்தன்னுடையஇருதயத்திற்பொருந்தியிருக்கவும் நானுன்னைநித்தியகாலம்பூசிக்கவுந் தயவுசெய்வாய்ஜகஜ்ஜனனியென்று சரணம்புரிந்தபோது சங்கரிமகிழ்ந்து மங்களகரமாகி வாழ்வையுமளித்து அவர்கேட்டவரமுங்கொடுத்துமறைந்துபோனாள்

அப்பால் விக்கிரமார்க்கராசன் அந்தப்பிராமணனை அழைத்துக்கொண்டு உஜ்ஜினிபட்டணம்வந்துசேர்ந்து வேண்டியபாக்கியங்களுங்கொடுத்து அவருடையபட்டணம்போய்சேரும்படிக்கு விடைதந்தனுப்பிவிட்டு தான்தன்னரண்மனையில் சம்பிரமசந்தோஷமாயிருந்தார்கேட்டீரோ போஜராஜனேயென்றுசொல்லி கிலுக்கென்று வளையலைஆட்டி குலுக்கென்றுநகைத்து பலுக்கென்றுபடுத்த பதுமையைநோக்கிப் போசராசன்சிவுக்கென்று தன்மாளிகைக்குப்போய்ச்சேர்ந்தார்.

இருபதாம்பதுமை சொன்னகதை முற்றிற்று.

---

## இருபத்தோராம்படிக்குக் காவலாகிய குணபூஷணிப்பதுமை சொல்கதை.

---

இருபத்தோராநாட்காலமே போசராசனெழுந்து சமுத்திரஸ்நானஞ்செய்து தானங்களும் சிவபூசை வேள்விமுதலிய யாவுஞ்செய்து

சிங்காதனம்பமேல் வைக்கப்போம்போதுதனிச்சென்றதின்னுத்தன்
யைப்போல்குணபூஷணிப்பதுமையெழுந்து முராசவார்த்தியாமுடையவ
ங்களவிக்கிரமார்க்க ராஜனைப்போலக்கீருநியவாளுக யிருப்பீராகிலிந்த
ச்சிங்காதனத்திலேறு இல்லாவிட்டால் நான்சொல்லப்போகிறவிங்க
ள்ராசனுடைய சரித்திரத்தைக்கேளுமென்றுசொல்லப்போசராஜனை
யாதொருணைப்ப நீசொல்லவேண்டியதைச் சொல்லிவாவென்றுகேட்
க பிரணமை சொல்லத் தொடங்கியது கேளும் போஜராஜனே விக்கி
ரமார்க்க மஹாராஜன இந்தச்சிங்காதனமேறித்தானத்தனுஞ்செய்யநா
ளையில் தினமானச்சாலமேயெழுந்து நித்தியகடன்கள் முடித்துக்கொ
லுவில்வந்திருந்து கோடிகோடிதானங்கொடுத்து பெரியோர்களுடை
ய ஆசிர்வசனம் பெற்றுக்கொண்டு அட்சனந்தமுதலிய யாவும்பெற்று ஆ
றிவாரு சட்டம்பலகொண்டு சதுரங்கபடைகளை சமரஞ்சனை செய்து தன்னு
யிர்போல் மன்னுயிர்காத்து அன்பத்தாறுதேசத்துராசர்களும்வந்துப
ணிந்து கப்பமைக்கட்டும்படிபாய்சகலசெயமும் பயமும் பேருமுடை
யவராய் நீதிகுன்றாமல் ராச்சியபரிபாலனஞ்செய்துவருநாளில்வேதா
ளத்தை யழைப்பித்து காடாறுமாதம் போவதற்கு இன்னிங்காலிருக்
கிறபடியால் நீபோய் காடுகளிலிருக்கும்வலங்களை அறிந்துவாருமென்
று அனுப்ப அப்படியே சென்றுவிசாரித்துக்கொண்டுவந்து சொல்லு
கின்றது என்னையாளும் மன்னவனே கேளும் வாரணபுரியென்னும்ப
ட்டணத்தை ஏகசக்கிராதிபதியாய் ஆண்டுவந்த சோவிந்சொருப
னென்னும் ராஜன் சகலபோகபாக்கியங்களுமுடையவனாய் வாழ்ந்து
வருகாலையில் புத்திரனில்லாமல் மெத்தவருந்தியத்திவிமார்களுக்கும்
புத்திரனைப் பெற்றவர்களுக்கும் பாதபூசைமுதலிய போசனதாம்பூல
வஸ்திரங்களுங்கொடுத்து விசுவாசித்து வருங்காலத்தில்ஈஸ்வராநுக்கி
ரகத்தால் ஒருபெண்பிறந்தது அந்தப்பெண்ணுக்குச்செய்யவேண்டிய
சடங்குகளெல்லாஞ் செய்துபதுமைரேகையென்று பெயரிட்டு ராசோப
சாரமாகவளர்த்து வந்தார்கள் அப்பெண்ணானவள் வேதம்சாஸ்திர
ம்-ஆகமம்-புராணம்-தர்க்கம்-உபநிடதம்கைவல்யம்கொக்கோகமுதலி
யசகலநூல்களையும் படித்துவிவேகத்திற்சிறந்தவிடைகாயகியாயிருக்
கும்போது மன்மதன் வந்து கருப்புவில்லைவளைத்து கரும்புநாணேற்றி
அரும்புகளைத்தொடுக்க ஆரம்பித்தபோது அந்தப்பெண்ணின்தமைத
யானவர் எழுப்பரிகைகட்டி அந்த உப்பரிகையில் பெண்காவலுடனே
மெத்தப்பத்திரமாய் வைத்திருந்தார் அப்படிச்சிலகாலிருக்கும்போது
ஒருநாள் அந்தராசன் வனவேட்டைக்குப்போய்மிருகங்களையடித்துப
ட்சிகளைப்பிடித்துமகாசந்தோஷத்துடன் வனமெல்லாந்திரிந்து தடாக
ங் குளங்கள் காட்டாறுகள் மலையருவிகள் தீவுகள்இந்தஇடங்களெல்
லாஞ்சஞ்சரித்துக்கொண்டு வரும்போது ஒருதடாகத்தில்மகாபதிவிர
தையாகிய ஒருரிஷிபத்தினி ஸ்நானம்பண்ணிக்கொண்டிருந்தாள் அக்
தஸ்திரீயைக்கண்டுமோகங்கொண்டு காமவிடாயாற் கருத்தழிந்து நெ
றிகுலைந்து காமனுடையாதியோ சேடசகலைகொண்ட மதியோ இந்
திரபுரியோ அழகியசந்திரகிரியோமாமலைமானோமா துரியத்தேனோமா
சற்றலக்கமேகோதற்றகனியோ மலரின்மணமோமனத்தின்குணமோ
மாலைசேர்மயிலோ சுந்தரக்குயிலோ நீருறைமகளோ நிலத்துறைமவ

ளோ என்றனைநாடி எழிலெலாம்பாடி விண்டோ குழலோ வண்டோ
விழியோ பூச்செண்டோ முலையோ வாழைத்தண்டோ தொடையோ
ஞெண்டோ முழங்காலோ கற்கண்டோ மொழியோ இடையுண்டோ
இலையோ இன்னதென்றுஉணர்விலையென்று அந்தப்படிக்குப்பு பரி
சைகைமுதலியதுஞ்செய்துபார்த்து அந்தப்பத்தினிக்குச் சமீபத்திற்
போய் தொந்தரவுபடுத்தி பலவந்தமாயழைத்தான் அந்தமகாபதிவிர
தைக்குக் கோபம்வந்து உன்னுடையபட்டணம்நிர்ச்சிவியாய்ப்போகக்
கடவதென்று சாபமிட்டுப்போய் விட்டாள் அந்தமகாபதிவிரதையாகி
ய உத்தமியின் சாபப்படிக்கு பகற்காலமெல்லாம்நிர்ச்சிவனாய்ப் பாத
ளைபோலிருந்துராக்காலமெல்லாம்பிழைத்தெழுந் துலாவிக்கொண்டி
ருக்குமறுபடியும் பொழுதுவிடியற் காலத்தில் பிணமாய்ப் போய்விடு
கிறது இதல்லாமல்அந்தராசனுடைய பெண்ணான பதுமைரேகையெ
ன்பவள் ராத்திரியிலெழுந்து ஸ்நானஞ்செய்து கந்தசுகந்தபரிமளமலர்
களும் சதம்பப்பொடி சவ்வாதுபுனுகுபன்னீர்முதலியதுஞ்சகலாபர
ணங்களும் அணிந்துகொண்டு இராவில்உலாவும்போது இம்மாப்ப
ர்வதக் குகையிலிருக்கும் ஒருராட்சதன் செம்பட்டமயிரும் கறுக
தேகமும் கோரசங்கமுங்கொடுமையுங்குடிகொண்டிருக்கும் குலபாத
கன் மாமிசமுதலியபாவுந்தின்று மதயானைக்கொண்டுவானவர்களையுந்
தவஞ்செய்வோர்களையும் வருத்தப்படுத்தி தெய்வலோகத்தைக் கொ
ள்ளைகொண்டு யாகாதிதர்மங்களையுங்கெடுத்து கெர்வங்கொண்டுலக
மெல்லாம் நடுநடுங்கும்படி விக்ரமபராக்கிரமத் தக்காட்
டு கடலினைக்காலிட்டிளாத்தூட்டி அண்டமுகட்டைத் தலையாலிடி
த்து மலைகளையெல்லாம்பொடியாயப்படுத்தி மலைக்குகைபோன்ற வா
யைத்திறந்துவடவாமுகாக்கினியையொத்தகண்களைவிழித்து அரம்பா
ஸ்திரீகளையும்நாககன்னியரையுஞ்சிறைபடுத்திஅவர்களுடையவயிற்றெ
ரிச்சலைக்கொட்டிக்கொண்டு எவர்களுக்கும்பயப்படாமல்எந்தஆயுதங்
களாலும் இறப்பில்லாமல் பொய்பேசுக்கொண்ட புத்தியையுடையவ
னாய் பூமியெல்லாந்திரிந்து காடுகளையெல்லாங் கலக்கி மலைகளைத்தூக்கி
மலைமேலெறிந்துவிளையாடி மதம்பொருந்தியயானைகளைப்பிடித்துமலை
ப்பாம்புகளில் வரிசையாய்க்கோர்த்தணிந்து தாரகைமுதலிய நவக்
கிரககங்களையெல்லாம கலக்கிக்கொண்டு மடமடவென்றுபெருங்காற்றி
னோசையுண்டாகும்படி தடதடவென்றுகேசரிமார்க்கமாய்வரும்போ
து பூலோகத்திலிரைச்சலும் சந்தடியும்தீபப்பிரகாசமுங்கண்டுதெ
ன்னவசூரியனஸ்தமித்தபிறபாடு இப்பேர்ப்பட்டகூச்சலுண்டாயிருப்ப
தென்னவென்று சற்றுநேரநிதானித்து தன்புத்தியைத்ஸ்திரப்படுத்தி
க்கொண்டு தானகொண்டுவந்த கடாக்களை வரிசைகள்மிருகங்கள்முதலியவ
ற்றையும் பூலோகத்திற் போட்டுவிட்டு நாலுபக்கத்திலுங் கோபுரங்
ளுயர்ந்த மாடமாளிகையுடன் மதிற்சுவர்பொருந்தியநிர்ச்சிவபட்டணத்
திற்கு சேரகவரும்போது பதுமைரேகையென்னும்பெண்ணானவள் உ
ப்பரிகையின்மேலில் உலாவிக்கொண்டிருப்பதை இந்தராட்சதன்கண்
டு அதேகமோகங்கொண்டு அந்தப்பெண்ணைமாயமாகத்தூக்கிக்கொண்
டுபோய்தானிருக்கும்இம்மாபர்வதத்தின்குகைக்குள்வைத்துக்கொ

ண்டு அந்தப்பெண்ணுக்கு அநேகங்கனிவர்க்கங்களுந் தேன்களுங்கொ
டுத்து யானைக்குட்டி சிங்கக்குட்டி-புலிக்குட்டி-கௌரிமான்குட்டி மயி
ல்குட்டி-அன்னமுதலியயாவுங்கொண்டுவந்துவிளையாடக்காட்டி என்
கண்ணாட்டி விண்ணாட்டின்மாதரழகிற்சிறந்தபேட்டி கிள்ளைமயிற்பேட்
டி உனக்குநான்காமாட்டி எந்நாளு மாண்டுகொள்ளுஞ் சீமாட்டியென்று
காலில்விழுந்து கொண்டானைப்போற்பெண்டாளப்போனான் அந்தச்
சண்டாளனைக்கண்ட பதுமைரேகைப்பெண்ணானவள் பூனைவாய்ப்பட்
ட கிளிபோல்நடுங்கி தனதுபுத்தி சாதுரியத்தால்ஒருயுத்திசொன்னாள்
நுபரிசுத்தனே எப்பனானைக் கைக்கொண்டுவந்தீரோ அப்போதேஉ
மக்குநான்சொந்தமாய்விட்டேன் இனிதப்பிப்போகிறதில்லை ஆனைவா
யிலகப்பட்டகரும்புமீளுமா பாம்பின்வாயிலகப்பட்டதேரைதேறுமா
எமன்கையிலகப்பட்டஉயிர்மீளுமா அதுபோல்உம்மைவிட்டுத்தப்பிப்
போகப்போகிறதில்லை உமக்குநானே எனக்குநீயே இனிமேலும் காமச
ௌக்கியப்படவேண்டியிருப்பதால் ஆத்மவிரதமென்னும் ஒருவிரதமு
ண்டு அந்தவிரதத்தைமூனுமாசகாலமாய் அநுபவித்துவந்தேன் இ
ன்னம் மூனுமாதமிருக்குது இந்தமூனுமாதமும் போனபிறகு ஸ்நா
னஞ்செய்து ஒருகோவிலுக்குப்போய்பிராமணபோசனஞ்செய்வித்து
நானும்பாரணைபண்ணினபிற்பாடு நீயுநானும்பார்த்துக்கொள்ளுவோ
மென்று அவனுடையமனதுக்குச்சந்தோஷம்வரும்படியாய்ச் சொல்
லி அரக்கனைச்சமாதானப்படுத்தி தன்னைஅந்தராட்சதன் தீண்டாதிரு
க்கச்செய்துகொண்டாள் அந்தப்பெண்ணினுடைய தாயுந்தகப்பனும்
சாயங்காலம்பிழைத்தெழுந்துபொழுதுவிடிகிறவரைக்கும் பெண்ணை
க்காணாமல் புலம்பி மனவேதனையடைந்துபோஜனமுதலியது மில்லா
மலிருக்கிற பொழுது விடிந்தவுடனே இறக்கிறதுமாய் இப்படி கிலே
சத்தையனுபவித்துக்கொண்டிருக்கிறார்களென்று வேதாளஞ்சொல்
லஅந்தவார்த்தையைவிக்ரமார்க்கமகாராசன்வெகுவிந்தையாகக்கேட்
டு சிந்தைமகிழ்ந்துசொந்தமந்திரியாகியபட்டியினிடத்தில்பட்டத்தை
ஒப்பித்துவிட்டுவரசிரமுடிகலசம்சேகபந்துமந்திரவாள்முதலியதிருநீ
ற்றுக்காப்புமணிந்துவேதாளத்தின் மீதேறிப்புறப்பட்டு அந்தசிற்சிலிப
ட்டணம்போய்ச்சேர்ந்து அந்தபட்டணமெல்லாஞ் சுற்றிப்பார்த்து
அந்தராசனுடைய அரண்மனைக்கும்போகும்போது சிற்றெறும்புமுத
லாகியசீவன்களும் செத்தாப்போற் கிடப்பதைக்கண்டு ஐயோபாவம்
இப்பேர்ப்பட்ட ஆபத்தென்று இரக்கமடைந்து ஆகிலும் ஈஸ்வரியிருக்
கிறாளென்று அந்தப்பட்டணத்துக்கு தென்பக்கத்திலிருக்கும் ஒருத
டாகத்தில் தீர்த்தமாடி நித்தியவிதிகளைமுடித்துக்கொண்டு சித்திராச
னமமைத்து பத்மாசனத்திலிருந்து தனக்கிஷ்டதெய்வமாகிய உச்சினி
மோங்காளியைச்சிந்தித்து உருச்செபித்தான் அப்போது அந்தத்தேவி
பிரசன்னமானாள் அரசனைவிழுந்துஅடிமலரைப்பூசித்துக்கொண்டு அ
ஆதி அம்மா எனக்கொருகுறைவுமில்லை என்காதுகேட்டகுறை இந்த
பட்டணத்தைக்காவென்று வேந்தன்சொல்ல விஷ்ணுசகோதரிகேட்
டு உனக்கிஷ்டமிருந்தால்எழுப்பிவிடுமென்று விபூதிக்கிளியுந்தீர்த்தமு
மபிரம்புகொடுத்து அப்பாமகனே எப்பேர்ப்பட்டவல்லபமுனக்கி
ருந்தாலும ஏறியமரத்தில்நக்கவேணும் போகட்டுமிட்டுத்திற் றேடவே

ண்டுமென்று யொருவனுக்குத்தெரியாதா இப்பவும் இந்தப்பட்டணத்தையாண்டராசன் மெத்தகெட்டவன் ஒருஸ்திரீபத்தினியைச்செய்த அநியாயத்தினால் இந்தச்சாபம்வந்தது இப்பவும்அந்தவுத்தமியைக்கொண்டிராத்துக்கொண்டால் மெத்தவுத்தமம் இல்லாவிட்டால் இன்னுஞ்சிலநாளையில் இந்தப்பட்டணத்துக்குப்பின்னம்வருமென்று சொல்லி விக்கிரமார்க்கமகனனுக்கு வேண்டியவாறுங் கொடுத்து அங்ஙனேவிட்டுநீங்கி கன்னியாகியசிங்கவாகனி தன்னிலேபோய்ச்சேர்ந்தாள் அதன்பின்பு விக்கிரமார்க்கராசன் நாற்பிருபது வயதுசென்றவொருவனைப் பிராமணனைப்போல் வடிவமெடுத்துக்கொண்டு அந்தரிஷிபத்தினியிருக்கும் வனத்துக்கருகாமையில்வேதாளத்தினுதவியினால்பிரமாண்டமாகிய அக்கினிக்குழியேர்ப்படுத்தி அந்தக்குழியைச்சுற்றிச்சுற்றி ஆகாசம்போவென்றிரைந்து ஒரு அடியெடுத்துவைக்க ஒருநாழிகை செலவும்படியாய் தள்ளாடித்தடுமாடிக்கொண்டுவந்து அக்கினிக்குழியில்மெய்யாய்விழப்போறதன்மையைப்போல விழவருமபோது அந்தரிஷிபத்தினியானவள் திடுக்கிட்டுசஞ்சலமடைந்து ஐயோ இந்தப்பிராமணர் விர்த்தப்பிராமணராயிருக்கிறார் இவருடையதேககாந்தியோ ஆயிரத்தெட்டுமாற்றுஅபரஞ்சிப்போலுமிருக்குதுகுறைவில்லை ரூபமுமந்திரம்விளங்குதுஆகிலும்சந்திரமுகவிம்பமுண்டவராயிருக்கிறாரிவர் அக்கினியில்விழவேண்டியகாரியமென்னமோகாந்திரந்தெரியவில்லை,

இதையின்னதென்றறிந்து பிராமணனுக்குவந்த ஆபத்தை நீக்கவேணுமென்று அக்கினிக்குழியண்டைக்குவந்து அந்தப்பிராமணனைப்பார்த்து மிகுந்தபயபத்தியுடன் உபசரித்துவணக்கமடங்கின்ற ஓ மகாசுவாமி இந்தத்தீக்குழியில்நீர்விழப்போகிற காரணமென்ன நீரெந்தவூர் உமதுபெயரென்னசொல்லுமென்று குறுக்கேபோய் தடுத்துக்கேட்க அப்போதந்தப்பிராமணன் அடக்காததுக்கங்கொண்டவனைப்போல் ஆறாத துயரத்துடன் அழுது பூரணச்சந்திரவிம்பமுகத்தை நோக்கி நாரணிச்சொர்ப்பாகிய பூரணவிளக்கமணிபோன்றஅம்மணிஅபத்தைநீக்கிக்காக்கும் அருள்வடிவாகிய மகேசன்மணி மகாபதிவிரதையாகிய சிந்தாமணிவேண்டியபாக்கியந்தரும்குங்குமணி அமைதிப்பில்லாமலரும் நவமணியே என்னுடைய துயரத்தீர்க்காசனனுமாகிலே இந்தத்தேசத்தில் நான்பழிக்கச்சொல்லார்க்கும்படியாயப்பிறந்த மாபாவியாக்கும் நீரொத்த உத்தமனுடைய பத்தினியோதெரியாது நீயிவளையாளுகியயென்னைநோக்கி நீரோன்பிரயாசைப்பட்டுத்துக்கொள்ளுகிறீர் நீர் சுகமாகப்போயவாரும் அம்மாவென அப்பிராமணன் தீக்குழியைச்சுற்றி வலம்வந்து பாயப்போனான் அப்போதுதன்னுடையகையால் அந்தப பிராமணனைத்தடுத்து எனனுலானமட்டும்உமக்குபகாரம்பண்ணுகிறேன் உம்முடையகுறைதனைச்சொல்லுமென்றுஉறுதிசொல்லிக்கேட்க அந்தவேதியனானவர் மிகவுமனமருண்டு மகாரிஷிபத்தினியாகியமாசிலாமணியேகேளும் நானிருப்பதுசாஸ்வதிபட்டணம் என்பேர்சக்குபட்டன் நான் சகலசாஸ்திரங்களுங்கற்று ஆசாரியபட்டமாயிருந்து அனேகபாக்கியங்களை அனுபவித்துக்கொண்டு வருநாளையில் நாமிருவருக்கும் எனக்குப்புத்திரனில்லாமல் கஷ்டாஸ்தானஞ்செய்துவிக்கேஸ்வரருடைய அனுக்கிரகத்தினால் ஒருபிள்ளைபிறந்தது அந்தப்பிள

னைக்குச் சட்கர்மமுஞ்செய்து சாஸ்திரபுராண ஆகமநீதிதருமநூல் உ
பநிடத சதுர்வேதமுங்கற்பித்து ஈரேழுலகத்திலும் இவனுக்கொப்பாகி
யபேர்களொருவர்களுமில்லையென்றுகலைவல்லோர்களும் சொல்லும்படி
யாய்வளர்ந்துவருங்காலையில் அந்தப்பிள்ளைக்குவிவாகமகோற்சவஞ்செ
ய்வதற்காகநிச்சயித்து புத்திசாலியாகிய பெண்ணைவிசாரிக்கும்போது
நிற்சிவிபட்டணத்தில் வேதசாஸ்திரபட்டருடையகுமாரத்தி கீதசாஸ்
திரவதியைக்கேட்டு இராமுகூர்த்தம்வைத்துக்கொண்டேபாணிக்கிரஹண
க்கலியாணம்பண்ணிவைத்து பெண்ணும்பிள்ளையும் நமதுவீட்டிலேவந்
திருந்து மறுபடியும்மருவுண்ணுவதற்கு மாமியார்வீட்டுக்குப்போனா
ன இராத்திரிமுழுமையுமசௌகரமாயிருந்து பொழுதுவிடியும்போது
மாமம்புமுதல்யாவருஞ்செத்துப்போயிருந்தார்கள மறுபடியுஞ்சா
யுங்காலமெல்லோருமெழுந்திருந்தார்கள் இந்தஆச்சரியத்தைகண்டபிள்
ளையானவன் மனநடுநடுங்கி ஐயோஇந்தபட்டணத்துக்கு இப்பேர்ப்ப
ட்டஆபத்துகள்சம்பவித்தால் வந்ததென்றுவிசாரமடைந்து நல்லகுண
சாலியாகியதன்பெண்சாதியையும் அவளைப்பெற்றமாமன்மாமிமுதலி
ய மச்சினிமைத்துனனையும்விட்டு வரமனமில்லாமையால் இவர்களுக்
கொத்ததுமைக்குபெண்ணுமாமியார்வீட்டிலேயிருந்துவிட்டான்.

அப்போது நானந்தபிள்ளையையுமபெண்களையும்அழைக்கப்போ
னேன் அந்தப்பட்டணத்திலுண்டாகிய யாவர்களும் தீபாவளிப்பண்
டிகைபோல் இராத்திரிமுழுமையும்தீபஅலங்காரம்பண்ணிக்கொண்டு
சிந்தைகலங்கியிருந்தார்கள அந்தவகைகளை நான்தெரிந்துகொண்டுஇந்
தப்பட்டணத்துக்கு இப்பேர்ப்பட்டபொல்லாங்கு வரவேண்டியதெ
ன்னவென்று எங்கள்சம்பந்திகளைக்கேட்கும்போது பக்கத்திலிருந்தபி
ராமணர்களும் மற்றபேர்களும் ஐயோமுறையோவென்று கூவி அ
டயாளி இதுவரையிலும்ஒருவருக்கும் ஒருயிக்கட்டில்லாமல பரமப
தம்போலிருந்த இந்தப்பட்டணத்தில் எங்கள்வேதசாஸ்திர பட்டரு
டைய பெண்கொடியை உன்பிள்ளையாகியநிற்பாக்கியபாவி இட்டென்
றடிவைத்துத் தொட்டுதாலிகட்டியவுடனேபொட்டென்றவிக்கைபோ
ல் இந்தப்பட்டணங்கெட்டுப்போயவிட்டது அவனுடையபோதனைபி
லகப்பட்டுக்கொண்டு ராசனும்புத்திகெட்டுப்போனான் இனிமேலறியோ
சனைபென்னவிருக்குதென்று ஆளுக்கொருவார்த்தைசொல்லி நிந்தித்
தார்கள அந்தவார்த்தையைக்கேட்டிருந்த என்குமாரனை வன்சொல்
தாளாமல்காளிகாதேவிகோவிலண்டைக்குப்போய் கழுத்தையறுத்து
க்கொண்டுசெத்தவிடத்திலேயே அவனும்படையாளாகியகீதசாஸ்
திரவதியும்தீப்பாய்ந்திறந்தாள அந்தப்பெண்ணுக்குரிய தாயுந்தகப்பனும்
புத்திரமித்திராதிமுதலியபேர்களும்ஒன்றைப்பற்றிஒன்றாய் மாண்டுபோ
னார்கள என்னுடையவள் தானையாகிய அம்மாள் இத்தனைபேர்களும்புத்தி
மானாகியஎன்பிள்ளையுமிறந்துபோயிருக்கநானினிச்சிறந்திருந் தவுடைய
ப்போறலாயமென்னை அவர்களுடையசிலைப்பார்க்கிலும் என்சிவன்க
ருப்புட்டியோ தாயேஎன்னைநீக்கிருக்காலுமழியும்பாண்டமிதுகெட்டு
தென்றுஅக்கினிபாயத்துணிந்தேன் ஆயினீயெனதடைசெய்தனையப்புற
ம்போமம்மாவென்று அந்தப்பிராமணனலறிவிழுந்தபோதுசிவபத்தி

ளியானவள்எடுத்தணைத்துஆயாசந்தீர்த்து ஐயரேநீர் பயப்படவேண்
டாமென்றுதயிரியஞ்சொல்லி சற்றுநேரம்யோசித்து வேதவேதியரே
கேளும் அந்தநகரத்தையாண்டராசன் காமதிரு மாலுக்கு சங்கா
ம்போல் மயங்கி என்பேரில்மோகங்கொண்டு அடுத்துனைகொன்றுந்து
இழுக்கான் அடமே தெனக்கு ஒருவருந் துணையில்லாமல் மனமரு
ண்டு கர்மமேஜெயமென்று ணி உன்பட்டணம் திறவிலாய்ப்போ
கக்கடவதென்று சபித்தேன் அந்தச்சாபத்தால்இப்பேர்ப்பட்ட தன்
மையுண்டாயிருக்கின்றது ஐயா அப்படியிருந்தாலும் எமது பிள்ளைக்
கும் மருமகளாகிய பெண்ணுக்கும் மற்றய பேருக்கும் யாதொரு தீ
ங்குமில்லை நீர்கொடுப்பில விழவேண்டாம எப்போதும்போல அ
தப் பட்டணம் சுகசீவியா யிருக்கவும் உன்குடும்பங்கிடித்தழைக்கவு
ம்உடத்துமுடுகவேண்டியதென்று வரங்கொடுத்தாள் உடனேவிக்கிரமா
ரக்கமகாராசன் தீர்க்கதண்டமாய்வணங்கிதாயே மகாபதிவிரதைகளி
ன்மகத்துவங்களை எவர்களாலுஞ்சொல்லி முடியாது மும்மூர்த்திகளு
க்கு மேற்பட்டதென்று வணங்கி விடைபெற்றுக்கொண்டு அந்தப்பட்
டணத்தைபோய்ப்பார்த்து சகலஉயிர்களுடனே சந்தோஷமாகச் சுகசீவி
யாயிருக்கக்கண்டு தானுஞ்சந்தோஷமடைந்தார் அந்தவேளையிலங்கப்
பட்டணத்துராசனுடையவருடைய பத்தினியும் தங்கள புத்திரியைக்காணு
மல்கண்கலங்கும்போது அந்தசமாசாரத்தைக்கேட்டறிந்த விக்கிரமார்க்
கமகாராசன் காளிகாதேவியை சிந்தித்து வேதாளத்தை வரவழைத்து
அதின்மீதேறிக்கொண்டு அந்தப்பெண்ணையெடுத்துப்போனராட்சச
னிருக்கும் இமோற்பர்வதக்குகைக்குட்போய் அக்குகைக்குள்ளிரு
ந்த பெண்ணைக்கண்டு அழகியபெண்ணே யாவளிந்த அபலைச்சக்குளனீ
ஒண்டியா யிருக்கவேண்டியகாரணமென்னவென்று அரசன் கேட்க அ
ந்தப்பெண்கொடியானவள் கண்ணீருகுத்து ஆமோ வைசிரா ராட்சச
மாய்கைரியாவென்று பரமைகொண்டு தனதுவேகத்தினால்விக்கிரமா
ர்க்கனென்றுணர்ந்து ஐயாஎன்னைக்காக்குந்தெய்வமே எனக்கு இப்பே
ர்ப்பட்டதென்று தனக்குநேரிட்டசஞ்சலங்களைச்சொல்லி அழ
ப்போது உன்னுடையதுக்கந்தீரச்செய்து உங்கள் தாயதந்தையினிட
த்துக்குக்கொண்டுபோய் விட்டுவிடுகிறேன் உன்தாயுந்தகப்பனும் சுகசீ
வியாயிருக்கிறார்கள் உன்தகப்பனுடைய பட்டணத்துக்குவந்தசாபத்தை
யுந்தீர்த்தேனென்று வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது ஆகார
த்துக்குப்போன அந்தராட்சசன்வருவானே வந்தால உம்மையும் என்
னையுங்கொன்றுபோடுவானே எனக்காகிய இவையே அவன்வருவத
ற்குமுன்னே என்னை அழைத்துக்கொண்டுபோய்விடுமென்று பெண்
ணாசசொல்ல அந்தவசனத்தை இந்த விக்கிரமார்க்கராசன்கேட்டு ஐ
யோ அம்மா அப்படித்துட்டத்தனமாய்ச்செய்தால் எனதுபெருமைக்கு
குறைவு ஏற்படும் உனக்குந்துயர்வு ஆகையால் அவனை சங்கரித்துக்கொண்டு
அவனைக்கொன்றுசெயம்பெறவென்று உன்னைக்கொண்டுபோவதனூ
யமென்று ராசன்சொல்ல அந்தவார்த்தையைக்கேட்டு அந்தப்பெண
சொல்லுகிறாள் அரசனே அந்தராட்சதன்தேவர்கள்முதலிய யாவர்க
ளாலுஞ் சாவில்லாவரம்பெற்றிருக்கிறான் அவனைநீயப்படி வெல்லு

யென்றுசொல்லகல்லது நீ இன்றைக்கன்னுடன்சந்தோஷமாகப்பேசி உன்னுடைய உயிர்நிலையெவ்விடத்திலிருப்பதென்று கேட்டறிந்துகொண்டால் பிற்பாடுபார்த்துக்கொள்ளுவோமென்று அவ்விடம்விட்டு நீங்கவெளியேவந்து ஒருவனத்திலிருந்து காய்கனியைத் தின்றுக்கொண்டு அவ்விடத்திலன்றைக்கிருந்தார்.

இவர்வந்துவிட்ட சற்று நேரத்திற்குள்ளே அந்தராட்சதன் கனி தேன் புஷ்பங்கள்முதலியயாவுங்கொண்டுவந்துதனதுகாதலியைநோக்கி யென்கண்ணே என்பிராணனே என்பட்சமேயென்று கூப்பிட்டான் அதற்கவளொன்றும்பேசாமலிருக்க அந்தராட்சதன்கிட்டநெருங்கி கலம்பப்போம்போது திடுக்கென்றெழுந்து திகைத்துநிற்கக்கண்டு என்ன இன்றைக்கு உன்முகம்வேறுபட்டிருக்கின்றது ஒருவிதமாயிருக்கிறாய் என்பேரில் உனக்குவெறுப்பதாயவுண்டோ இன்னமுனக்குவிரதநீங்கவில்லையோவென்று ராட்சதன்கேட்டான் அதற்கு அந்தப்பெண் சொல்லுகிறாள் எனக்குவிரதம்நீங்கிவிட்டது இனிமேல்உம்முடையஉயிர்க்குயிராகிறகாலந்தான் ஆனாலும்உம்மைநான்நம்பமாட்டேன் அதேனென்றால் ராட்சதாள மெத்தவும்வஞ்சகமனத்தாரொருவேளையிருக்கும் ஒருவேளையிராது உம்முடையமனது என்னிடத்தில் உண்மையாய்வைத்திருப்பது நிசமானால் உமக்குரியஉயிர்நிலையைச் சொல்லும் பார்ப்போமென்று அந்தப்பெண்கேட்க அடி பயித்தியக்காரி என்னுடையஉடல்பொருள்ஆவி மூன்றும் உனக்குத் தத்தம்பண்ணியிருக்கிறேன் அதை உண்மையாய்த்தெரிந்துகொள்ளவேணுமானால் சொல்லுகிறேன்கேளும் மல்லிகார்ச்சுனபுரமென்று ஒருமலையுண்டு அந்தமலையின் அடிவாரத்தில் ஒருவிநாயகருண்டு அவரைத்தள்ளி அப்புறம்போனால் சாண்யகுகையென்றொரு பிலத்துவாரமுண்டு அந்தபிலத்துவாரத்தில் கூர்மதியென்றொருஆமையுண்டு அந்த ஆமையின்வயற்றில் என் பொழியாகையென்றொருபுழுவுண்டு அந்தப்புழுவின் தலையிலிருக்குது என்னுடையபிராணன் எப்பேர்ப்பட்டவர்களாலும் என்னைக்கொல்லமுடியாது நானிதுவரையிலும்ஒருவருக்குச்சொல்லவுமில்லை அந்தப்புழுவின்தலையயறுத்து என்முன்னேபோட்டால்அன்றைக்கு எனக்குக்கேடுவரும் இதன்மத்தியிலெல்லோரும் என்னாற்கெட்டுப்போவார்களல்லது நானொருக்காலும் அழியேனென்று சொன்னான் அதைக்கேட்டு இந்தப்பெண்ணானவள் இத்தன்மைதானோவென்றாள் உன்னுடனே உண்மையென்றானதனால் ஆனால்எனக்குப் பயமில்லையென்று ராஜபுத்திரிசொல்ல ராட்சசன்கேட்டு அன்றிராத்திரி அங்குதங்கியிருந்து மறுநாளகாலமேயெழுந்து இந்தப்பெண்ணுக்கு ஆகாரங்கொண்டுவரப்போனான் அப்போது எங்கள்விக்கிரமார்க்கராசன் அந்தப்பெண்ணிடத்துக்குப்போய் அவளால் அந்தராட்சசனுடையபிராணநிலையை அறிந்துகொண்டு மல்லிகார்ச்சுனமலைக்குப்போய் தன்னிட்டதேவதையாகிய காளியைவருந்தி வணங்கி ஓம்மகேஸ்வரியென்றுபாதத்திறங்கி அவ்விடத்திலிருக்குஞ்சுனையைக்கண்டு அந்தச்சுனையிலிறங்கி காலுபுறமும்தேடிப்பார்த்து அங்கிருக்கபிள்ளையார்கோயிலைக் கண்டு கோவிலுக்குட்புகுந்து விக்னேஸ்வரனைவணங்கிப்போற்றி தோத்திரஞ்செய்து தான்வந்தகாரியத்தைச்சொல்லிக்கொண்டபோது அவ்

டமிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்யவந்த விக்கிரமார்க்கவேந்தன்வை யால்விசாயசமூர்த்திமேல்கோபகாரத்தைக்குறித்துவழிகாட்டிவிட்டார் அந்தவழியே பிலத்துவாரத்திட்புகுந்து தேடிப்பார்க்குப்போது கருமலைபோல்ஒரு ஆலையமிருக்கக்கண்டு மந்திரவாளினாலே ஓரேவெட்டாகவெட்டி அதனுடையவயிற்றைக்கிழித்து குடல்களையொழித்துப்பார்க்கும்போது ஒரு கொம்பேர்லுக்கஙைப்போன்ற சிலப்புருஷவொ ன்றிருக்கக்கண்டு அந்தப்புருஷனை இரண்டாய்வெட்டி யெடுத்துக்கொண்டு பிலத்துவாரத்தைவிட்டு வெளியேவந்து மல்லிகார்ச்சுனமலையைச்சேர்ந்து வழிகொண்டுவரும்போது இவ்விடத்திலிருந்த ராட்சசனுக்குப்பலமொடுங்கி ஆட்டலும் புரட்டலும்கொடுத்து படுத்தவிடத்திற்றானே பிராணமூர்ச்சைபோனான் அந்தவேளையில் விக்கிரமார்க்கராஜன் இந்தமலைக்குகைக்குவந்து சோதித்துக்கிடந்த ராட்சதனைக்கண்டு தான்கொண்டுவந்த புருஷனை அவனுக்கெதிரிலேபோட அந்தப்புருஷனை அடிப்பதுபோல் அடிஅடித்து இடிமுழக்கம் இடித்து போம்படியாயசாவுக்கச்சவிட்டுக்கொண்டிருந்தான் உடனே அந்தப்பதுமரேகையென்னும்பெண்ணும் தானும்வேதாளத்தின் மேலேறிக்கொண்டுஉச்சினிபட்டணத்தைநாடிவரும்போது வழியிலே ஒருதடாகத்தில்தங்கிஇளைப்பாறி தாகவிடாய்தீர்ந்து ராட்சதனுடைய சவுரியங்கெட்டதைக்கேட்டுச்சந்தோஷங்கொண்டிருந்தார்கள் அந்தவேளையில் கந்தைத்துணிகட்டிக்கொண்டிருக்கும் ஒருபிராமணன் இந்தப்பதுமரேகையைக்கண்டுமோகங்கொண்டுதெரியாமல் மயங்கி காமத்தால்வாடி தூரத்திலோடி தனக்குள்ளே விழுந்து மூர்ச்சைபோனான் அந்த அதிசயத்தை விக்கிரமார்க்கன்கண்டு பிராமணனைத்தேற்றி உமக்கென்னவேக்கம்ஒருவிதமாய்பயித்தியம் பிடித்தவரைப்போ லிருக்கிறீரேயென்றுகேட்க அரசனே நான் ஏழையெனக்குப் பருவம்வந்தநாள்முதல் இதுவரைக்கும மன்மதவிரகத்தில் வறுமையடைந்து விகாரம்பிடித்துவைத்திருக்கிறேன் இப்போது இந்தப்பெண்ணைக்கண்டேன் மோகங்கொண்டேன் நமக்குக்கிட்டுமோவென்று கிலேசங்கொண்டு எட்டிவந்து இளைத்தேனையாவென்றுவேதியன் சொல்ல.

வேந்தனகைத்து ஐயோபாவமென்று அங்கலாபித்து ஐயோ உமக்கு இந்த அணங்கைத் தாறேன் வைபகட்டிக்குவாழுமென்று அந்தப்பதுமரேகையை அவனுக்குச்சகலாலங்காரகன்னிகாதானமாகக்கொடுத்து அனேகம்திரவியங்கள் ஆபரணங்கள் அரண்மனைகள் பட்டண முதலிய யானை சேனை பரிமளங்களும் சீதனமாகக்கொடுத்து அனுப்பிவைத்து தன்னுடைய பட்டணம்போய்ச்சேர்ந்தார் ஓ போசராசனே இப்பேர்க்கொத்தசாமார்த்தியமும் உதாரகுணமும் உமக்கிருக்குமாகில் இந்தச்சிங்காதனத்தி லேறத்தகுமென்று இருபத்தோராம்படிப்பதுமைசொல்ல அதைக்கேட்டுபோசராசன் அன்புமேற்கொண்டுஆச்சரியமடைந்து தன்னரண்மனைக்குப்போய்விட்டான்.

இருபத்தோராம்பதுமை சொல்கதை முற்றிற்று.

---

## இருபத்திரண்டாம்படிக்குக் காவலாகிய
## வெள்பார்த்த இரத்தினப்பதுமைசொல்கதை,

இருபத்திரண்டாநாட்காலையில் போசராசனெழுந்து ஸ்நானஞ்செய்து புட்பமெடுத்து வழிபடுகடவுளைபெண்ணி மனதுக்கிசையப் பூசைகளைபண்ணி சகல பரணங்களும்பூண்டுசுகமாய்ச்சிங்காசனமேறத் தவிர்ந்து மகுடமணைவர்மதிக்கவும் பாகவதோர்ணனித் துதிக்கவும்வெண்கொற்றக்குடைவிரித்துப் பிடிக்கவும் வேலையர்பாதகவிக்குடிக்கவும் விருதுகொடிபறக்கவும் பேணவாசகியத்துசிறக்கவும் யானையுடன் தேர்கள்சொடரவும் சேனையுடனபரிகளாடவும் கட்டியங்கூறவும் காவல்வீரர்கள்ஈறவும் சிங்காதனத்தருகேவந்து இன்றைக்காகிலும் ஏறலாமென்று எண்ணித்தணிபுமனை இருபத்திரண்டாம்படிக்குக்காவலாகிய பதுமைகண்டு தட்டுகொண்டு மனம்விணவிப்போசராசனைப் புகழ்ந்து தங்களுடையவிக்கிரமார்க்கராசனை மகிழ்ந்துசொல்லத்தொடங்கியது.

கேளும் போசமகாராசனே எங்கள் விக்கிரமார்க்கமகாராசன் இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கும் நாளையில் அனகாபுரியென்னும்பட்டணத்தில் நீறபாமெனனுஞ்செட்டியொருவனிருந்தானந்தச்செட்டிக்கு பருசத்தன் பருக்ககன்குணதத்தன் தனதத்தனென்று நாலுபிள்ளைகளுண்டு இவர்களுடைய தந்தைதாயிருவருஞ் சிலநாளிருந்து இறந்துபோனார்கள் அவர்களுக்குரிய கடன்முறைகளையெல்லாமுடித்து கர்மஸ்தானஞ்செய்தபிறபாடு அவனுடைய பிள்ளைகள்நால்வரும் பொருத்தவாழ்ச்சம்மதமில்லாதவர்களாய்நால்வருக்கொருவர்சண்டையிட்டுப் பங்குபிரித்துக்கொள்ள எத்தனித்து, ஆஸ்திகளைப்பரிசோதிக்கும்போது விசுவாசமனைதவிர வேறொன்றுமில்லாதிருக்கக்கண்டு மிகுந்தவிசனங்கொண்டு கலக்கப்பார்த்தார்கள் அதிலெழுதியிருக்க விபரமானது இந்தக்கட்டிற்காலிராதின்ற செப்புதகடுகளைப்புழுக்கலெல்லாமற்பதுக்கிவைக்கொண்டு செம்பொன்னைத்திறவாமெடுத்துக்கொண்டு பசுக்களைதானங்கொடுத்துவிட்டுப்பலிசீர்ப்பாலேதிருக்களென்று எழுதியிருக்கக்கண்டு பிள்ளைகள்நாலுபேருங்கூடி தங்கள் தகப்பன்படுத்திருந்த கட்டிலையெடுத்து அப்பால்போட்டுவிட்டு அந்தக்கட்டிலினுடைய முன்கால் வைத்தவிடத்தைவெட்டிப்பார்க்கும்போது அந்தக்குழியில் பத்துசெம்புகரியும் இரண்டாங்காலிருந்தவிடத்தைவெட்டிச்சோதிக்கும்போது அவ்விடத்தில் பனிரண்டு மூன்றாங்காலிருந்தவிடத்தைச்சோதிக்கும்போது ஒருமொக்கையில்பெருமணலும் நான்காவதுகாலிருந்தவிடத்திலொருமொக்கைபெலும்பும் இருக்கக்கண்டு இவைகளையெல்லாமெடுத்து வெளியேவைத்து விசனப்பட்டு என்னடாநமதுதகப்பன் மெத்தவுஞ் செல்வவந்தனாயிருந்தானே இதென்னஆச்சரியமென்றுமனவெறுப்புடன் வருந்தி இதனுடையசங்கதியொன்றுந்தெரியாதவர்களாய் விக்கிரமார்க்க

ராஜனிடத்துக்குவந்து தன்தகப்பனெழுதிவைத்த கணக்கையுக்காட்டி அந்தப்படிகட்டிலின் காலில்வைத்த இடங்களை வெட்டிப்பார்த்து அவ்விடத்திலிருந்த டண்டங்களையுங்காட்டி தங்களுடையவாயைவயிற்றையுங்காட்டி வருந்தி எங்களைப்பொருந்தச்செய்யும் பூபதியென்று போற்றினார்கள் அப்போது விக்கிரமார்க்கராசன் ஆலோசித்து அப்பாபிள்ளைகளே உங்கள்தகப்பன் செவ்வையாயெழுதிவைத்தாலுநீங்கள் அதைத்தெரிந்துகொள்ளமாட்டாமற் றியங்கினீர்கள் இப்போதுகாண்பிக்கச்செய்கிறேன் பாருங்களென்று அவர்கள்வீட்டுக்குப்போய்ஒருமொந்தையிலிருந்த எலும்புகளையெடுத்து எண்ணிப்பார்த்து இத்தனைபசுக்களையும் தன்போரால்தானஞ்செய்துவிட்டச்செயதிருக்கிறாரவரிஷ்டப்படியே உத்தமப்பிராமணருக்குதானங்கொடுத்துவிடுங்கள ஒருமொந்தையிலிருக்கமணல்களையெடுத்துப்பார்த்து இவ்வளவுவெணகலம்பித்தளையிலைகளினுலாகிய இத்தனைசாமான்களிருக்குது அவைகளை நீங்கள்காலவரும்பங்கிட்டுக்கொள்ளுங்கள் ஒருசெம்பிலிருந்த கரிகளைப்பார்த்து இத்தனைபொன்காசுகள் கருநிறங்கொண்டிருக்குது அவைகளையெடுத்துச் செலவுபண்ணுமல் காண்தேடும்பொருளை ஆண்டுசேர்க்கிற மூத்தபிள்ளையினிடம்ஒப்பித்துவிடுங்கள் நீங்கள் காலையபரும் பனிநீர்போலலேசாகயிருந்து வெகுதேட்டையாய்சூரியனைப்போல காய்வார்களுக்கெதிரிலகில்லாமல் வியாச்சியவில்லங்கத்துக்குப்பலுவாகக்காட்டாமல் மோரங்களைப்போலபொரிந்துபோகாமல் மேலப்பார்த்தனைப்போல் கண்கெட்டுவெந்துபோகாமல்மனக்குளிர்ச்சியாயிருங்களென்று குறிப்பினுல்தெரிவித்தால்உங்கள்தகப்பனென்று விக்ரமார்க்கராசன்சொல்ல அந்தப்படியேகட்டிலில்வைத்திருந்தபூமியை வெட்டிப்பார்த்து அதற்குள்ளாகயிருந்தபொருள்களையெடுத்துக்கொண்டு பூரமென்னுகரிலிருந்தபசுக்களைத்தானங்கொடுத்துவிடும்படிஉத்தரஞ்சொல்லி தமையன்றம்பிகள்காலவருஞ்சந்தோஷமடைந்துவாழ்ந்திருந்தார்கள் எங்களவிக்கிரமார்க்கராசனை வாழ்த்தினார்கள் அப்படி நீரும்புத்திமானுகயிருந்து பூமியிலிருந்த பொருள்கள் ராசனுக்குப்பாதயென்றிருக்க அதையும்விட்டுச் சந்தேகப்பொருளுக்குச்சாமபிரதாயமுஞ்சொல்லி பிறருடைமைக்குஆசைப்படாமல் நீதிசெலுத்தும்நெறியுமிடத்திலிருக்குமாகில் இந்தச்சிங்காதன மேறத்தகுமென்றுபதுமைசொல்லிச்சிரிக்கும்போது போஜராஜன் உள்ளம்பதைத்துவள்ளலாகிய விக்கிரமார்க்கமகாராஜனை வாழ்த்திப்புகழ்ந்துதன்னரண்மனைக்குப்போய்விட்டார்.

இருபத்திரண்டாம் பதுமைகதை மூற்றிற்று,

———✻———

## இருபத்துமூன்றும்படிக்குக் காவலாகிய
## மாணிக்கவாசகவல்லிப் பதுமைசொல் கதை,

———✻———

இருபத்துமூன்றுநாட்காலமே போஜராஜனெழுந்து சக்காஸ்நானம் பண்ணி கடவுளைவணங்கி சூரியவெண்காரஞ்செய்துக்கொண்டபோ

லைப்போலும் பளிங்கைப்போலும் பரிசுத்தமுடையபெரியோர்களுக்கு மட்டுப்பட்டாவளிமுதலிய பீதாம்பரமுந்தானங்கொடுத்து சகலவித அலங்காரபரிசுத்தமாய் சதுரங்கப்படைகளும் சூழ்ந்துவரும்படியாய் வந்துசிங்காதனத்துக்கு யதனந்துமந்திரிபிரதானியர்முதலிய மகாஜனங்களுக்கும்சிக்ஷையீந்து சிங்காசனமேறப்போம்போது இருபத்துமூன்றும்படியிலிருந்து போஜராஜனையிறைஞ்சி கேளும்அரசனே எங்கள்விக்கிரமார்க்கராஜன் இந்தச்சிங்காதனமேறி உலகாளும்போது சோதிப்ரகாசசுந்தரநாராயணரிஷியென்பவரொருவர்வந்தார்அவரைக்கண்டு எதிர்கொண்டுசென்றுநமஸ்கரித்துநின்றுஸ்தவுத்தியஞ்செய்யும்போது அந்தமகாரிஷிமனமகிழ்ந்து ஆசீர்வதித்துஓராஜசிங்கமே இவ்வுலகத்திலுன்னைப்போல் அறிவிலும்திறமையிலும் நீதிமுறைமையிலும் செல்வத்திலுங்கல்வியிலும் வல்லமையிலும்பரோபகாரத்திலுமிருக்கவல்லவர்கள ஒருவருமில்லை ஆனாலுனக்கொருஇக்கட்டு வருவது அதனாலுன்னுடையமன மெத்தவருத்துமென்று சொல்லவந்தேனென்றார் அதற்குராசன் முடியால்வணங்கிபடிமீது நெடிபோலு கிய திருமாலைப்போன்றசுவாமி அப்படிவாரகின்றவருத்த மின்னதெனும் அடியேனுக்கு அதினுடையவருத்தமில்லாமலிருக்கஅருள்செய்ய வேண்டும் ஐயனேயென்று கையிரந்துகேட்கவையகங்காக்கும் விக்கிரமார்க்கனேக்கேளும் இனிவரப்போகிற பனிக்காலத்திற்சனியானவன் ரோகணிநட்சத்திரத்துக்குவரப்போறான் அவன்வந்தால் துவாதசாமம் வந்துசேரிடும் அப்போதுதபம்செபம் ஓமம்யாகம்சத்தியம்நெறிஉத்தமமுதலியஇவைகளெல்லாம்செத்துப்போம் மன்னுயிர்கள்மெத்தவுங்கசங்கிவருந்துவார்கள் அதனாலுன்னுயிருமொடுங்கிவருந்துமென்றுமகாரிஷிசொல்லவே அவரைப்பணிந்துஆண்டவனேஇதற்கெப்படிபரிகாரமேதாகிலுமுண்டாதங்களுடையதிருவடிபெயர்த்தருளியஇந்தப்பட்டணத்துக்கிப்பேர்ப்பட்டபொல்லாங்கும்வரப்போகுமா தங்களுடையகடாட்சவீட்சண்யம்பட்டநான்சஞ்சலப்பட்டுதளரலாமோஇதற்கு ஒருதந்திரஞ்சொல்லுஞ்சுவாமியென்று சரணக்கமலத்தில்தாழ்ந்தெழுந்துநிற்கமகாமுனிவர்நோக்கிமனமகிழ்ந்துசொல்லுகிறார் மகாராஜனேகேளும் எதோசனடியாரைக்குறித்து மகாபூசைபண்ணிப்பாரும் தானதர்மமுஞ்செய்யும் ஒருவேளைமங்கிமுவந்தால்வருமென்று ஆசீர் வாழ்த்தி விடைபெற்றுக்கொண்டுபோனார்.

அந்தமகாமுனிபோனபிற்பாடுஅவன்அதுமுதற்கொண்டு விசேஷமாய்த் தேவாலயம்பிர்ம்மாலயம் பூசைமுதலியதும் சிவனடியார்களுக்கு உபசாரமுஞ்செய்துக்கொண்டுவந்து பனிரண்டுவருஷமழையில்லாதயோகமவந்தது அதனாலுலகந்தத்தளிக்கிறதைப்பார்த்து எங்கள்விக்கிரமார்க்கராசன் வெகுவிசாரங்கொண்டு மேன்மையோர்சொல்லும் விருதாவாச்சே அடியார் பூசையாலாவதொன்றில்லையேயென்று விசாரங்கொண்டு இப்பேர்ப்பட்டதன்பத்தை உலகம்அநுபவிக்க நாமுடயிருடனிருப்பதுஞாயமல்லவே நாமிருக்குஇப்படிவந்ததென்று ஒருபேரவென்று தன்னுயிரைத்தானேவிடயோசித்து எழுந்தகாலத்தில் அசரீரிவாக்கியமொன்றுபிறந்ததுரட்சகனாகியராசனேகேளும்எங்கு

க்குதிக்கும் தேவகெங்குவென்பவனிடம் நேசமாயிருக்குமோசஞ்செய்து காசாசையாற்கண்கெட்ட வேள்பார்த்தனென்னும் ராட்சசனொருவன் உலகத்திற்சிறந்தவனென்று யாகசாலைவீதியில மேற்பட்டிருக்கிறுன் அவனை நாசப்படுத்தி உயர்ந்தபெரியமேட்டில் போரக்குராவென்னும் பொய்யனிருக்கிறான் அவனையுமழித்து ஆசைபுரியென்னுந்தேசத்தில் வாசவசேனாபதியென்னுமொருதேவனிருக்கின்றார் அந்ததேவனைக்குறித்துப் பூசைமுதலியது நடத்தி விசுவாசிப்பையாகில் அவர் பிரசன்னமாய்வந்து ஒருதேரும்பாரியவில்லும் அதற்குத்தகுந்த அம்புருத்தூணியுங்கொடுப்பார் அவைகளைப்பெற்றுக்கொண்டு ஆகாயமார்க்கமாகப்போய் வில்லிலேத்துநாணேற்றிட்டு திவ்வியாஸ்திரந்தொடுத்து ரோகணியிற்பிரவேசித்த சனீஸ்வரனை அடிப்பையாகில் அந்தக்கதியைவிட்டு அப்பால்விலகிப்போய்விடுவார் அப்போது தாராளமாய் மழைபொழியும் உலகமெல்லாம்செழிக்கும் அக்கிரமிகளும் அழிந்துபோவார்களென்றுசொல்லக்கேட்டு விக்கிரமார்க்கராசன்விரைவாகச்சென்று வேதாளத்தின்மேலேறிக்கொண்டு யாகசாலைவீதியிற்சென்று அவ்விடத்திலிறுமார்ந்து ஒருவருநிகரில்லையென்றுவெகுபேரைமோசம்பண்ணி நல்லோர்பெரியோர்மனநோவச் செய்திருக்கும் துஷ்டமகாபாவியாகிய இராட்சதவேள்பார்த்தனைவெட்டிமடித்து நாய்நரிபேய் காக்கைகழுக்களுக்குஇரையாக்கிவிட்டு அவனிருந்தவிடத்தையும் இடித்துப்பொடியாக்கி இடிவிழுந்தபள்ளம்போற்செய்து அவ்விடம்விட்டுப் புறம்பட்டுஉயர்ந்தபெரியமேட்டிலிராநின்றபோரக்குராப்புளுகனையுங்காசமாக்கி அவனிருந்தவிடத்தையுமிடித்து நிரவி ஈயெறும்பு மொய்க்கும்படியாய்ச்செய்து அப்பால்கடந்து ஆசைப்புரியென்னுந்தேசத்திற்சென்று வாசவசேனாபதிவாழுந்தலத்தைகண்டுஸ்நானசந்திஜெபமுதலியதுமுடித்துக்கொண்டபிஷேகமுதலியபூசாவிதிகளெல்லாங்குறைவில்லாமற்செய்து தானும்நிஷ்டையிலிருந்து நேர்ப்பாகியதவத்தைப்புரிந்தார்.

அப்படித் தவஞ்செய்யுநாளையில் இந்தராசனுடையமனோதிடத்தைக்கண்டு இவன்மெத்த வுறுதியையுடையவன் பிடித்தகாரியஞ் சாதிக்கத்தக்கவனென்றுவாசவச்சேனாபதிபிரசன்னமானார் அவரைக்கண்டு அரசனெழுந்துவிழுந்து வணங்கியபோது அந்தஅரசனைப்பார்த்து ஓராசனே பயப்படாதீர் நீர்மகாதீரன் உன்னாலாகாதகாரியமொன்றுமில்லை லோகோபகாரமாய்ப்பாடுபட்டீர் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ்செய்தீர் ஆசைபால் நீர்கிளைத்துவந்த தேரும் வில்லும் பாணமும் இதோதந்தேன் இவைதக்கொண்டு லோகரட்சகனென்னும் பேர்பெற்று துவாதசசட்சாமத்தை நீக்கக்கடவீர்போமென்றுவிடைகொடுத்தனுப்ப அப்படியேவணங்கிப்பெற்றுக்கொண்டு வேதாளமூர்த்தனும் ரதத்தினமீதேறிக்கொண்டு ஆகாயத்திற்சென்றுரோகணியிற்பிரவேசித்து ஆட்சிப்பாயிருக்கிறது சனிக்கிரகத்தையடிவிட்டடித்தபோது சனீஸ்வரனுனவர்சந்தோஷமடைந்து எதிர்வந்துநின்றுஉத்தமனே தேவர்களைச் செயிப்பவரொருவருமில்லை அப்படியிருந்தபோதிலும் நவக்கிரகங்களை அலைத்துக்கலையச்செய்பவர் ஆருமில்லைஇப்போது

உம்மைக்கண்டேன் ஆதலால் நீர்மெத்தவும்வல்லமைசாலி நல்லருளைப்பெற்றிருக்கிறீர் உமக்குவேண்டியவரத்தைக்கேளுந்தருகிறேனென்று சனீஸ்வரன்சொல்ல அந்தவார்த்தைதனைக்கேட்டமகாராசன் தனக்கொருவரமும் கேட்டுக்கொள்ளாமல்சுவாமி இனிஎக்தெக்காலத்திலும்நீரெங்கிரகத்திற்பிரவேசித்தாலும்மழையைமாத்திரம்வரச்செய்யாதிருக்கவும் மாதமும்மாரி பொழியவும்துஷ்டாளிடஞ்சேரவும் இஷ்டரீனை ரட்சிக்கவும்நீவரனுமென்று வரம்பெற்றுக்கொண்டு உச்சினிபட்டணம்வந்துசேர்ந்து சுகத்தாளையாய்மழைபொழியக்கண்டுமனமகிழ்ந்துவாழ்ந்தார் எங்கள்விக்கிரமார்க்கராசன் அவனைப்போலவே சோபகாரமும் பிராண அலட்சயமும் அவர்வாகிய ஆசையில்லாமையும் தன்னுயிர்போல் மன்னுயிர்காக்கும்வல்லமையும் உமக்குண்டாயிருக்குமாகில் இந்தச்சிங்காதனமேறலாமென்று இருபத்து மூன்றாம்படிப்பதுமைசொல்லக்கேட்டு போஜராஜன் தலையிறக்கிக்கொண்டு தனதுடைய அரண்மனைபோய்ச்சேர்ந்தான்.

இருபத்துமூன்றாம்பதுமை சொல்கதை முற்றிற்று.

## இருபத்துநாலாம்படிக்குக் காவலாகிய கரதலீலைபுரியும் மரகதவல்லிப் பதுமைசொல்கதை.

மறுநாட்காலமேயெழுந்து மங்களஸ்நானஞ்செய்துமலர்கொண்டுசூரியனைப்பணிந்து மாதவர்முதலிய ஆதுலர்க்குதானதர்மங்களும்பண்ணி மந்திரிபிரதானியர்முதலிய நால்வகைச்சேனைகளுஞ் சூழ்ந்துவரும்படியாய்வந்து சிங்காசனமேறத்துணிந்தபோது இருபத்துநான்காம்படிக்குக்காவலாகியபதுமைபார்த்து ஓபோஜமகாராஜனே கேளுமென்று சொல்லத்தொடங்கிற்று.

ஐயா அரசரே முதற்படிமுதல் நானிருக்கின்றபடிவரைக்குங்காவலாயிருக்கும் பதுமைகள்சொன்ன சங்கதிகளைமனதில்வைத்திரா யோசித்துப்பார்த்திரா செவ்வையாய்க்கவனித்திருப்பீராகில் மறுபடியும் இந்தசிங்காதனத்தினிடத்தில் வரமாட்டீரே நீர் யோசிக்கவில்லை போலுமிருக்கிறது ஆ - ஆ அரசனே இதென்ன ஆச்சரியம் எங்கள் ராஜனுடைய தயாளகர்மகுணத்தைச் சொல்லுகிறேன் கேளும் எங்கள்விக்கிரமார்க்கராசன் இந்தச்சிங்காதனத்திலிருந்து நீதிகுன்றாமல் நெறிமுறை தப்பாமல் சத்தியவானாகத் துரைத்தனஞ்செய்து வரும்போது காட்டாறுமாதம் அனுபவிப்பதற்கு காலம் நேரிட்டபடியால் தான்புறப்பட்டு கானகத்துக்குப்போய் சந்தோஷத்துடன் காலங்கழித்து வருங்காலத்தில் ஒருநாள் தெய்வலோகத்தில் தேவேந்திரன்சபைகூடியிருக்கும்போது தேவரிஷிகள்முதலிய முனிவர்களைப்பார்த்து அய்யா வையகமென்னும் சொர்க்கமத்தியபாதாளத்தில் நவஇராக்கம்

பசியாதாமம் பூததயவு-பண்ணும் நீதிபொறுமை - பக்தியுக்தி இவை
முதலியதுமுடைய அரசர்கள் ஆராகிலு மிருக்கிறார்களாவென்றுதே
வேந்திரன்கேட்க அவர்கள்சொல்லுவது ஆகண்டலனாகிய ஐயனே இக்கா
லும் பூலோகத்தில் விக்கிரமார்க்க ராஜனென்றொருவ னிருக்கிறான் அ
வனுக்கு மிஞ்சினபேர்க ளொருவரு மில்லையென்று முனீஸ்வரர்கள்
சொல்ல அதைக்கேட்டு காமதேனுவை அழைப்பித்து நீபூலோகத்துக்
குப்போய் விக்கிரமார்க்கராஜனுடைய மேன்மைகுணத்தை அறிந்து
வாவென்று அனுப்ப அப்படியே காமதேனுவும் பூலோகத்துக்கு வந்து
எங்கள்விக்கிரமார்க்கராஜன் திரிகிறகாட்டுக்குச்சமீபத்தில்ஒருபசுவசே
ற்றில் கால்புதைந்துஅகப்பட்டுக்கொண்டிருந்தது அதினுடைய துன்
பத்தைஎங்கள்ராஜனாகண்டு அதிசீக்கிரமத்திலேயோடி அந்தப்பசுவைப்
பிடித்துத்தூக்கவெளியேகொண்டுவந்து தண்ணீர்தடாகத்தில குளிப்
பாட்டித்தன்னுடைய பீதாம்பரவஸ்திரத்தால் துடைத்துபசுவுக்குவா
யிக்கிரைகொடுத்துபட்சமாயிருக்கும்போது அசோதனையாய்மழைபொ
ழியக்கண்டு தன்னுடைய உத்தரியத்தை பிடித்து மேலேபோட்டு ஒரு
துளிமழை அந்தப்பசுவின்பேரில் விழவொட்டாமல் காத்தாட்சித்தா
ர்அப்பால்அந்தப்பசுவானது சந்தோஷமடைந்து தன்னுருவங்கொண்
டுவிக்கிரமார்க்க வேந்தனுக்கெதிர்நின்று ஓ-ஓ ராஜனே தெய்வலோகத்
தையாளுந்தேவேந்திரராஜன் உன்னுடையநற்குணங்களைவிசாரித்துவ
ரச்சொல்லி என்னையனுப்பிவைத்தார் அதற்காகநான்வந்தேன் நான்கா
மதேனுவாக்கனும் உன்னுடையசீலமுதலிய நன்னெறியைச் சோதித்
துப்பார்த்தேன் திரிலோகத்திலும் உனக்குமிஞ்சியதோர்நல்லருமரு
ராஜனுமொருவருமில்லை ஆகையால் நான்போய்வாரேன் உமக்குவேண்
டியவரத்தைக்கேளுந் தருகிறேனென்று காமதேனுசொல்ல அரசன்வ
ணங்கி அம்மாஉன்னைக்கண்டு தரிசித்தவரமே எனக்குப்போதுமென்
றுராஜன்சொல்ல உடனேஅந்தக்காமதேனுவானது சந்தோஷமடைந்து த
ன்னைப்போல் ஒருபசுவைச் சிருஷ்டித்துக்கொடுத்து என்னைப்பார்த்த
தைப்போல இதைநீர்வைத்துக் கொள்ளுமென்று கொடுத்துவிட்டு வி
டைபெற்றுக்கொண்டு விண்ணுலகத்துக்குச்சென்று இந்திரன்முதலிய
பேர்களைக்கண்டு இவ்விடத்தில் நடந்தசங்கதிகளையெல்லாஞ் சொல்ல
தேவேந்திரனுந் தேவரிஷிகளுங்கேட்டு ஜெயங்கூறி விக்கிரமார்க்கமகா
ராஜனுக்கு நினைத்தகாரியங்களெல்லாங் குறைவில்லாமல் முடியக்கட
வதென்று ஆசீர்வதித்து புஷ்பமாரிதூற்றினார்கள்.

இப்பால் விக்கிரமார்க்கமகாராஜன் அந்தகாமதேனு வினால் கொடு
க்கப்பட்ட பசுவைவாங்கிக்கொண்டு வரும்போது வழியில்ஒருஏழைப்
பிராமணன் ஒருசிறியகுருத்துக் குழந்தையைகையிலெடுத்துக்கொண்
டுவழியேபோகும்போது இந்தராசன் அந்தப்பிராமணனையழைத்து இ
தேதுகுழந்தை உமதுபேரென்ன நீரெங்கிருந்துவருகின்றீர் சொல்லுமெ
ன்றுகேட்க அந்தப்பிராமணன்கண்ணீர்சொரிந்து ஐயாநான் மகாபா
விஎன்பெண்சாதியும்நானும் பனதர்மையாய் வாழ்ந்துக்கொண்டுவரு
நாளையில்பிள்ளையில்லாமல் மெத்தவும்வருந்தி தெய்வானுகூலத்தால்
இந்தப்பிள்ளைபெற்றான் இவள்பிறந்த ஆறுநாள். என்பெண்சாதியிறந்தா

ள் அதுமுதல் நாலுமாசக்காலமாய் இந்தக்குழந்தையைப்பெத்துக்கொ ண்டு வருத்தி தியங்கிறேன்; இது தாய் அன்னைப்பால் குடிக்கமாட்டாது நல்லபசுவின்பால்கொடுத்தால் பிழைக்கும் பசுவாங்குவதற்குஎனக்கு பணமில்லை நானேஏழைப்பார்ப்பாத்திவார்க்கலாமென்றால் ஒருநாளைப் போலஆர்கொடுப்பார்கள இப்படி இருக்குது என்னுடையவருத்தமென் றுசொல்லவேதனக்குக்காமதேனுகொடுத்தபசுவைஅந்தப்பிராமணனு க்குக்கொடுத்து அநேகதிரவியமுங் கொடுத்தனுப்பிவிட்டுதன்னுடை டஉச்சினிபட்டணம் போய்ச்சேர்ந்து சுகமா வாழ்ந்திருந்தான் ஆகை யால்பெருதற்கருமையாகிய பொருள்களை லட்சியமடன்ணுமல் பரவு பகாரமாய்க்கொடுத்து ரட்சிக்குந் தயாளுவாகிய எங்கள்விக்கிரமார்க் கமகாராஜனைப்போல் நீரும்நற்குணமுடையவராயிருந்தால் இந்தச்சி ங்காசனம்மேறலாமென்று பதுமைசொல்ல அந்தவார்த்தையைக் கேட் டுபோஜராஜன் வெட்கித் தன்னரண்மனை போய்ச்சேர்ந்தான்.

இருபத்துநான்காம்பதுமைசொல்கதை-முற்றிற்று,

## இருபத்தைந்தாம்படிக்குக்காவலாகிய கர்ப்பகவல்லிப்பதுமைசொல்கதை.

மறுநாட்காலமே போஜராஜனெழுந்து ஸ்நானசந்தி செபதபமுத லியகருமங்களை முடித்துக்கொண்டு தொழுங் கடவுளைத்தொழுது சேயூர்குண்டலம்மணிமகுடம் பீதாம்பரமுதலிய அலங்காரங்களெல் லாந்தரித்துக்கொண்டுகெற்சகுலம்பார்த்துபிராமணர்முதலியபேர்களு க்குதானதர்மம் பரவுபகாரமுகட்டித்திகட்டியர் பட்டுவான்கள்-மந்திரிசா மந்தர்மகுட்வர்த்தனர் பட்டவர்த்தனர் முதலியபேர்களெல்லாம் இஷ் டமாய்நெருங்கிவர பத்துபேர்சுமக்கும் முத்துப்பல்லக்கி லேறிக்கொ ண்டுபாதகாட்டியக் கணிகையராட சங்கீதம்பாட சித்திரவிசித்திரமா யிபசிங்காசனத் தண்டையில்வந்து நிதிகண்டசெம்பொருள்போலு ம்நெஞ்சப்பயிர் மழைகண்டதுபோலும்மைந்தனைப்பெற்றமலடியின்ம னமகிழ்ச்சிபோலுமஇன்றைக்குச்சிங்காதன மேறலாமென்றுபல்லாக் குவிட்டிழிந்து சிங்காசனத்தை வணங்கிப்பணிந்துஇணங்கியெழுந்து மனைநிதானித்து சிங்காசனமேறப் போகும்போது இருபத்தைந்தாம்ப டிக்குக்காவலாகிய பதுமையெழுந்து கைகொட்டி-ஓ-போஜமகாராசனே கேளுமெங்கள விக்கிரமார்க்கமகாராஜன் இந்தச்சிங்காசனமேறிஅரசு செலுத்திதன்னுயிர்போல் மன்னுயிரைக்காப்பாற்றிவரும்போது தரும மகாலயாகத் தடைநடக்கவும் வர்ணாசிரமதர்மந்தப்பா திருக்கசிறியோர் பெரியோரைப்பணிந்து வாழ்த்திப்போற்றவும்தேவாலயம்விஷ்ணுவா லயம்சிறக்கவும் தீங்கனாகிய சத்துருக்கள் பறக்கவும் மாதமும்மாரி பொழியவும் காடாறுமாகம் நாடாறுமாகமிருந்துநீதிசெலுத்திச்செ ங்கோற்செலுமலானடிவந்தார் அந்தக்காலத்திலசகரபுரியென்னும்ப ட்டணத்தை ஆண்டுக்கொண்டிருந்த சாதுரியவாளனென்னும்ராசன பா ம்புசடிதகிறந்தானென்னும் அவனுடையபெண்சாதி அக்கினிக்குழியில்

விழப்போறளென்றும் வேதாளத்தால் சமாச்சாரந்தெரிந்துக்கொண்
டஎங்கள் விக்கிரமார்க்கராஜன் அந்தப்பட்டணத்துக்குப்போய் அக்
கினியில்விழப்போகிற அந்த அரசபத்தினியைக்கண்டுசங்கதிவிசாரி
த்தல்லது அம்மாசற்றுநேரத்தில உன்புருஷன் எழுந்துவரும்படிசெ
ய்வோம் அதுவரைக்கும்நீர்மனம்பொறுமென்று நிறுத்திஉச்சினிமாகா
ளிதனக்குக் கொடுத்திருந்த மாத்திரைக்கோலையெடுத்து இறந்துகிடக்கி
றஅந்தராஜன்பேரிற்றட்டி அவனையெழுப்பி அவருடைய பத்தினியைக
யிலொப்பிவைத்தார் உடனே அவர்களிருவரும் இவரைப்பணிந்துஎங்
கள் குலதெய்வமேயென்று உபசரித்து கடுங்காரங்களையெல்லாம இரு
வருக்குத் தத்தஞ்செய்தார்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டு மறுப
டியும் அந்தராஜஸ்திரீயாகிய பெண்ணுக்குப் பெண்காணியாய்க் கொடு
த்து அந்தராஜனுக்குபட்டங்கட்டி வைத்துப்போட்டு அதுவேதெரியா
ய்க்காட்டுக்குப்போய் சம்பகுரியனென்னும் ஒருநகரத்தைக்கண்டு அ
ந்தப்பட்டணத்துக்குள்ளாகப்பிரவேசித்து அவ்விடத்திலிராகின்றஒ
ருகோயிலும் ஸ்ரீராஜிமண்டபமுடைய ரெரியதடாகமும்ஆயிரக்கால்ம
ண்டபமும் இருக்கக்கண்டு அந்தமண்டபத்திற் போயிருந்து தேவஸ்
தானத்தில்நித்தியபூசை பஞ்சபர்வங்களிலுச்சவம் பிரமோச்சவமுதலி
யசம்பிரமங்களை விசாரித்துக்கொண்டு அதற்குவேண்டிய உபசாரங்க
ளெல்லாந் தன்னாற்கூடியவரைகிலுஞ்செய்து மனமகிழ்ச்சி யுடையவ
ராய்த் திரும்புங்காலையில் ஒருராஜபுத்திரனை பின்கட்டாக்கட்டி நாலு
பேரிழுத்துக்கொண்டு வந்தார்கள அந்தராசகுமாரனை எங்கள்விக்கிர
மார்க்கராசன்கண்டு இவாார் இவரையேன் கட்டிக்கொண்டு வந்தீர்கள்
இவருடைய விர்த்தாந்தத்தைச் சொல்லுங்களென்றுசேவகரைக்கேட்
கஅவர்கள் இவரைவணங்கி ஐயாராசபுத்திரனே இந்தமகாராசன்கேட்
கிறகேள்விககு உத்தரவுசொல்லுமென்றுசொல்ல அப்போது அந்தரா
சன்வணங்கி கண்ணீர்விட்டழுது ஓசுவாமிதேவரீர் இன்னாரென்று எ
னக்குத்தெரியவில்லையேகொஞ்சந் தெரிவிக்கவேண்டுமென்றுராசபுத்
திரன்கேட்கஅதற்குஎங்கள் விக்கிரமார்க்க மகாராசனைத்தந்நாலொ
ன்னில் உச்சினிபட்டணம் விக்கிரமார்க்கன்காடாறுமாதங்கழிப்பதற்
காகவந்தேன் உன்னுடைய சேதியைச்சொல்லெனவும் என்னுண்டாவ
னோநான்புனிதனானேன் எனக்கு இனிப்பயமில்லை என்னுடையபல்ல
காலம் தவராயனைப்போல்வந்து கிடைத்தீரென்று மனமகிழ்ந்து உ
வகைகொண்டு சொல்லத்தொடங்கினான்,

அக்கிரமத்தைபழித்து சுக்கிரமத்தைநிறுத்தி உக்கிரமஞ் செலுத்
திய விக்கிரமார்க்கராசனேகேளும் ராமசேத்திரத்தில் வாழும்படியாகி
யசிங்காரவீரனென்னும் ராசன் என்பேர் எனக்குச்சத்துருக்கள்வெகு
பேருண்டு அவர்களுக்கு இடங்கொடுக்காமலிருந்து வாழ்ந்துக்கொண்
டிருந்தேன் அவர்களாலான மட்டும்பார்த்தவேதேது இவனைச்செயிக்கமு
டியாதென்று ஒருதந்திரஞ்செய்தார்கள் அதாவது நான்சதுரங்கம்ஆடு
மிடத்தில் மெத்தக்கெட்டிக்காரன் எனக்குமிஞ்சியபேர்களொருவருமி

ல்லே அப்போ்ப்பட்ட என்னை சதுரங்கமாடலாம் வாருமென்று என் ச
த்துருக்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து ஒருபிராமணனை என்னிடத்துக்
கனுப்பி மாறுபாடாய் என்னைத்தோற்கச்செய்து என்னுடைய நாடுந
கரங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டு என்பெண்சாதி பிள்ளைகளையும்
பிடித்துக்கொண்டு யென்னை யிந்தச்சம்பு சூரியனென்னுங் கோயிலிற்
கொண்டுவந்து அடைத்துவிடும்படிக்கு அனுப்பிவைத் திருக்கிறார்கள்
என்னுடையகதி இப்படியிருக்குது என்தெய்வமே என்னைக்காப்பாற்
றவேணுமென்றுரைத்து அழும்போது விக்கிரமார்க்கன் அந்தராசகு
மாரனுடைய கட்டுகளை அவிழ்த்துவிடச்சொல்லி அவனை யழைத்துக்
கொண்டு அவனுடையநகரம்போய்ச்சேர்ந்து இவனுக்குப் பகையாளி
களையெல்லாம் வரவழைத்து மறுபடியும் சதுரங்கம் ஆடச்செய்துவே
தாளத்தின்சகாயத்தால் இந்தராசனைக் கெலிக்கப்பண்ணி அந்தராச்சிய
த்தை அவனுக்கேகொடுத்து மற்றசத்துருக்களையெல்லாம்பார்த்து இ
து என்னுடையநகரம் இந்தச்சிங்காரவீரனென்னுமராசனைப் பட்ட
ங்கட்டிவைத்திருக்கிறேன் நான் விக்கிரமார்க்கன் நீங்களென்ன சொல்
லுகிறீர் பகைத்துச்சண்டை போடவருகிறீர்களா அல்லது கைகலந்துக
லந்துவாழ்ந்து கப்பங்கட்டிவருகிறீர்களா உங்களெண்ண மென்ன
வென்று விக்கிரமார்க்கன் கேட்க அவர்களெல்லாம் மண்மேல்விழுந்து
புரண்டழுது ஆண்டவனே உம்முடனெதிர்த்தபேர்கள் உருத்தப்பய
றைப்போலழிந்து பொன்னைப்பொருளை யிழந்துபோவார்கள் ஆகையா
ல் நீ இன்றுமுதல் எங்களுக்குகுலதெய்வம் போலிருந்து எங்களெல்லா
ரையும் ரட்சியும் இதுமுதல் நாங்கள் பகையில்லாமற் கலந்துவாழ்கிறோ
மென்று வணங்கப்பணிந்து சிங்காரவீரராசனுடன் கூடிபோசனமுத
லியது முடிந்து தங்கள் தங்களிடம் போய்ச்சேர்ந்தார்கள் இப்பாலெங்க
ள் விக்கிரமார்க்கராசன் சம்பசூரியனென்னுந் தலத்துக்குவந்து இந்திர
சித்தென்னும் ஒருமலைமீதேறி அவ்விடத்திற்சூழ்ந்துபார்க்கும்போது
ஒருமாகாளியுடைய கோயிலும் எட்டுவயிரவமூர்த்திகளின்காவலுமாக
யிருக்கக்கண்டு இதென்னவென்று யோசிக்குங்காலத்தில் அவ்விடத்
திலொருபாறையிலெழுதியிருந்தது இதென்னஎழுதியிருக்கிறதென்று
வாசித்துப்பார்க்கையில் இந்தப்பராசத்தியின் பீடத்தில்வேண்டியசம்
பத்துக்களிருக்குது இந்தப்பாக்கியம் வேணுமென்கிறபேர்கள் தன்தலை
யாவது ஒருவன்தலையாவதுவெட்டி உதிரப்பலியிட்டால் அவர்களுக்கு
க்கிடைக்குமென்று எழுதியிருக்கப்பார்த்து இனியொருவனையெங்கே
தேடுவது மன்னனாகிய நாமேபலியாவோமென்று மாகாளிக்குஅபிஷே
கஞ்செய்துவைத்து தானுஸ்நானம்பண்ணி நைவேத்தியம்வைத்துசந்
நிதிக்கு எதிரில்வந்துநின்று தன்தலையைவெட்டி மாகாளிபாதத்தில்வை
ப்பதற்கு உத்தேசித்து குறிப்புமுதலியதும் பார்த்துக்கொண்டு மந்
திரவாளையுருவி வெட்டிக்கொள்ளப் போம்போது மாகாளியம்மனுங்
காளிபிரசன்னமாயோடிவந்து விக்கிரமார்க்கனுடைய கையைப் பிடி
த்துக்கொண்டு அடமகனே இதோ நானிப்பால் வந்துவிட்டேன் இனி

விருச்சம் பாக்கியங்களையெல்லாம் நீயேஒப்புக்கொள்ளென்றுவேண் டியவரமுங் கொடுத்துப்போய்விட்டாள்.

இப்பால் வேதாளத்தைக்கொண்டு புதையலாகவிருந்ததிரவியங் களையெல்லாமெடுத்து அந்தச்சிங்காரவீரனென்னுமராசனுக்குக்கொ டுத்து அவன்புத்திரனுடன் பத்தினியுடன்வழிபட்டுவாழும்படியாகச் செய்துதானும்வேதாளத்தின்மேலேறிக்கொண்டுஉச்சினிபட்டணம்வ ந்துசேர்ந்துவாழ்ந்தார் இப்பேர்ப்பட்டதிடகாத்திரதீரகுணமும்பரோ பகாரமும் உம்மிடத்திலிருக்குமாகில் இந்தச்சிங்காசன மேறலாமென் றுஇருபத்தைந்தாம்படிப் பதுமைசொல்ல போசராசன்கேட்டு வெட் கமுற்றுத் தலையிறங்கி படியிறங்கி தன்னரண்மனைக்குப் போய்விட் டான்.

இருபத்தைந்தாம் பதுமைகதை முற்றிற்று,

---

## இருபத்தாறும்படிக்குக்காவலாகிய
## அமிர்தவல்லிப் பதுமைசொல் கதை.

---

மறுநாட்காலமே போசமகாராசனெழுந்துநித்தியவிதிகளைமுடித் துக்கொண்டு சோடசமகாதானங்களுஞ்செய்து சிங்காதனத்தண்டை க்குவந்து பூசைநைவேத்தியங்களும்புரிந்துபெரியோர்களுடையஆசி ர்வசனங்களும்பெற்று சிங்காதனமேறும்போது இருபத்தாறும்படிக் குக்காவலாகியபதுமையெழுந்துவந்துபோசமகாராசனைநேற்றையதி னம் இருபத்தைந்தாம்படிப்பதுமை சொல்லியதன்மைகளைமறந்துஇ ன்றைக்குப்படியேறவந்தீர் ஆசைவெட்கமறியாதென்பதுபோல விருக் கின்றது ஆகிலும் எங்கள் விக்கிரமார்க்கராசனுடைய விதரண குணத் தைச்சொல்லுகிறேன்கேளும் எங்கள்விக்கிரமார்க்கராசன்பூமியையா ளும்போது திங்கள்மும்மாரிமங்குல்பொழியவும் எங்குமங்களசம்பிர மடைக்கவும் தேசங்கள்செழிக்கவும் பூசைகள்தழைக்கவும் செங்கோல் செலுத்திவந்தார் அந்தக்காலத்தில்ஆசுமதுரம் சித்திரவித்தாரமுதலிய நாற்கவிபாடியபாவலனொருவன்நாடெலாந்திரிந்துவறுமையால்மெலிந் து உச்சினிபட்டணத்துக்குவந்துவிக்கிரமார்க்கமகாராசனைக்கண்டுவா துப்பாவாகியவண்ணப்பாமுதலிவெண்பாகுறட்பாகொச்சகப்பா தா ழிசைப்பாகலிப்பாசந்தப்பாவிருத்தப்பாவெல்லாம்பாடிப் பிரசங்கித் து ஐயா நான்பிறந்தநாள்முதலிதுவரையிலும்என்னைவிட்டு நீங்காதிடர் செய்துகொண்டிருந்தகலியனென்பவன்தங்கள்சமுகநோக்கிவரும்போ தென்னைவிட்டுவிட்டோடினவன்மகாதுன்மார்க்கன்இன்னம்ஆரையா கிலும்பிடிப்பான் அவனைஇவ்வுலகத்திலாரையுந்தொடாமற்றெண்டி க்கவேண்டுமென்றுசொல்லஅந்தவார்த்தையைக்கேட்டஎங்கள்ராசன்உ லகத்தில் தரித்திரமென்னும்வியாதியிலகப்பட்டவரியாரோ அவர்களெ ல்லாம்வருகிறதென்றுபறையறைவித்து அவர்களுக்குவேண்டியபாக்கி யங்கள்கொடுத்து முதல்வித்துவானுக்கு நித்தியமங்கள சுபசந்தோஷ

ழுண்டாக்கி இந்திரபோகமனுபவிக்கும்படி வைத்தான் அப்போது ம
நடவித்தவர்களெல்லாம் அரசைப்புகழ்ந்து அவரவர்களிஷ்டப்படி
கற்பனை அலங்காரவித்துவஞ்சொல்லி-ஓ-ஓ அரசனே [illegible]
[illegible] புஷ்ப[illegible] ஒருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்தை
யாளும் மஹாராஜன் [illegible] ன்பலவங்சத்துயாதவனை [illegible]
ன் [illegible] கட்டிலின் [illegible] தேவர்களெல்லாஞ்சேர்ந்து அலங்கா[illegible]
வித்தைகளில் [illegible] சமய ஆசாரங்களையும்பாராமல் [illegible]
றிப்பான் [illegible] சேர்ந்த கர்த்தன் [illegible]
மல் [illegible] செய்தான் [illegible] தெரியாத [illegible]
அவனிதிகழ் [illegible] புகழ்க்காரர்கள் அப்போது ராஜாதிராஜன்
உபமுறை கீர்த்தியை மெத்தவுங்கொண்டாடி [illegible] வித்வான்க
ளெல்லோரும் விளம்பவிட்டபெறுமக்காணக்கேர்னார்கள் அப்பால்
இவைசாகங்கண்டு தப்பளைக்க நின்ற காரியத்தவர் [illegible] விக்கிரமார்க்
காராஜனைப்பணிந்து ராஜாதிராஜனே ராஜ கப்பிரானே இன்றைய நினம்
வித்துவான்களுக்கு கொடுத்தநிரவியம் ஐம்பதினாயிரம்பொன் செல
வச்சுசன் [illegible] க்குக்கொடுத்தார்கள் அதைக்கேட்டு அரசன்மெத்
வஞ்சந்தோஷமடைந்து அந்தக்காரியஸ்தருக்கு நல்லவெகுமானஞ்
செய்து இப்படியே தினம் வித்வான்களுக்குக் கொடுத்துக் கணக்
குச் சொல்லுங்களென்று கட்டளையிட்டருளினார் ஆதலால் இப்போர்ப்ப
ட்ட உதாரகுணசீலத்தாருக்குள் கொடையாளியாகியபேர்கள் எவர்க
ளோ அவர்களே இந்தச்சிங்காசனத்துக்குமன்னர் இருபத்தாறும்படி
[illegible] மைசொல்லவட்ட சாலட்சணக்கொடுக்கும்போசமகாராசனான
[illegible] வெனநின்று [illegible] அரண்மனைக்குப் போய்விட்டார்.

இருபத்தாறும்பதுமை சொல்கதை முற்றிற்று.

## இருபத்தேழாம்படிக்குக் காவலாகிய
## சிவஙாக்கியவல்லிப் பதுமைசொல் கதை.

மறுநாட்காலமே போசராசனெழுந்து ஸ்நானசந்திசெபதபமுமு
டித்துக்கொண்டு தானதர்மங்களுஞ்செய்து [illegible] சிங்காசன
மேறவேணுமென்றுபோனபோது இருபத்தேழாம்படிப் பதுமையான
து போசராசனைத்தடுத்து ஐயா எங்கள் விக்கிரமார்க்கமகாராசன் ஒருநாள்
மந்திரி தந்திரி பிரதானிப்பிரியோர்யாவருஞ்சூழ்ந்திருக்கும்போது கங்
காஸ்நானத்துக்குப்போகவேணுமென்றுபோய் கங்கையில்மூழ்கி விஸ்
வேசர்விசாலாட்சி காளபயிரவர்முதலிய ஸ்தலங்களெல்லாந் தரிசித்து
க்கொண்டு ஒருபெரியசோலையிலிறங்கியிருந்தார்கள் அப்போது இந்
திரசாலமயேந்திரசாலந்தெரிந்த ஒருவன் வந்து விக்கிரமார்க்கராசனை
கண்டு அரசனே தேவரீர் அணிமாகிரிமாமுதலிய அறுபத்துநாலுகலைகளுக
லக்ஷியமாயுமுந்தெரிந்த உத்தமராகையால்தேவரீரிடத்திலிருந்து என்னு

டைய அருமையைக்காட்டவேணும் மற்றோரிடத்திற்காட்டினல்லென்
னருமையை அறியமாட்டார்களென்றுசொல்லி தோவருகிறேனென்
றுபோய்விட்டான் இவனாவன் பயித்தியக்காரனாயிருக்கிறானென்று
யாவரும்பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு சித்தபுருஷன் வெள்ளைக்
குதிரைமேலேறிக்கொண்டு ரதிதேவிக்கொப்பாகிய ஸ்திரீயுடன்வந்து
அரசனுக்கெதிரிலிறங்கி நமஸ்கரித்து சகலவித ஆயுதங்களுடனிருந்
தீயாரப்பாவென்றரசன்கேட்கஐயா நான்பாட்சாவிடத்திலிருக்கின்
றபதினாயிரங்குதிரைக்குச்சறதாராயெகுசாலபாலைத்திலிருந்தேன்
இப்போதுஅவர் என்மேற்கோபமாய் உத்தியோகம்நீக்கிவிட்டார் உ
ங்களுடையபேரும் பராக்கிரமுங்கேட்டுவந்தேன் நானுமென்பெண்சா
தியும் நாங்களிரண்டுபேர்களிராவேறில்லை எனக்கேதாகிலுமொரு உத்
தியோகத்தில்வைத்துக்கொண்டு ரட்சிக்கவேணுமென்றுவணங்கினான்
அப்போது இவனைப்பார்த்து இவன்நல்லசிபாயென்று சந்தோஷித்து
க்கொண்டிருக்கும்போது வடதிசையிலிருந்து பதினாயிரங் குதிரைக
ளுடன் மனனனுமவினனுமென்னுந்தம்பதி பகைவர்வந்து விக்கிரமா
ர்க்கராசனைநகரையைறுக்கடுகிறார்கள் அந்தச்சேதிராசனைநந்து நம
க்கேதுபகைவர் இதென்ன ஆச்சரியமாயிருக்குதென்று யோசிக்குங்கா
லையில் எதிர்நின்றசத்தவீரன்பணிந்து ஐயா இந்தப்பகைவர்பேரில் எ
ன்னையனுப்பினவர்களைக் காணும்படிவருகிறேனென்றான் அந்தப்ப
டியேசெய்யென்றரசன் உத்தரவுகொடுக்க அப்போதுதன்பெண்சாதி
யை ராஜ்ஜியத்திலிருத்தி மகாப்பிரபுவே தாயுந்தங்கையுமதேவரீரா
கையால் நான்வருமளவும் என்பத்தினியைஉமதுபுத்திரிபோல் பத்திர
மாகக்காருமென்றுசொல்லிவிட்டுப்போட்டுத் தன்னுடைய குதிரையி
ன்பேரிலேறிக்கொண்டு வடதிசைபோகும்போது சேனைகளெல்லாம்
ஆயுதத்தில்வந்தவிட்டது அவர்களைவிடாமற்றுரத்திக்கொண்டுபோ
ய்யுத்தஞ்செய்துயானைத்தலைகளுயஉடல்களும் குதிரைத்தலைகளுங்கு
டல்களும் வீரனுடையதலைகளுமுடலங்களும்வெட்டப்பட்டுப்பூமி
யில்விழுந்தமயமாய்பொழிய இரைச்சலும்புழுக்கமுமுண்டாயிருக்க
இப்படியிருக்கும்போது இங்கிருந்துபோனவீரனுடைய வெள்ளைக்கு
திரையும்வீரனும்வெட்டுப்பட்டுதுண்டமிரண்டாகப்பூமியில்விழுந்தான்
அதைகாராசனிடத்தி லேவபய்வைத்திருந்த அந்தஸ்திரீயானவள்கண்டு
ஐயோவென்புருஷனுடைய குதிரையிது என்புருஷனதலையிது என்பு
ருஷனுடலிதுவென்றுபுரண்டழுதுபிழைக்கக்கூடியவிடத்திலவெ மோ
சம்வந்ததே இனிநான் பிராணனை வைத்துக்கொண்டிருக்கமாட்டே
ன் அக்கினிக்குழியில்விழுவேனென்று அக்கினிகுழிவளர்க்கச்சொன்
னாள் அரசன் முதல்யாவருமாட்டாமென்றார்கள் அந்தஸ்திரீயானவள்
ஆவென்றலறினாள் உடனே ஆகாயபரியந்தம் அக்கினிவளர்த்தது என்
புருஷனிறந்தபாவம் இராசனைச்சேரக்கடவதென்று அந்தத்தீக்குழியி
ல்விழுந்தெரிந்துபோனாள் அவளுடையசொல்லைக்கேட்டுமெத்தவுஞ்ச

ஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும்போது முன்னேபோனசுத்தவீரன் சத்துருக்களைவெட்டிச்செயித்து வெள்ளைக்குதிரையுடன்வந்திறங்கி தான்போய்ச்செயித்தசங்கதிகளைச்சொல்லி சந்தோஷமடைந்தபிற்பாடு என்பெண்சாதியெங்கேயென்றான் இவ்விடத்தில்நடந்தசங்கதியையராசன்சொல்லக்கேட்டு நகைத்து அழகாயிருந்தாளே ஆகையால் அவளைநீர் மோசஞ்செய்தீரோவென்றான் இத்தன்மையாகிய சங்கதிகளெல்லாந் தெரிந்துகொண்டவிக்கிரமார்க்கமகாராசா மந்திரிபிரதானிமுதலாகிய மற்றவர்களைப்பார்த்து என்னசொல்லுகிறீர்களென்று கேட்டார் எல்லோரும்பசபசவென்றுமுழிக்கிறார்கள் இப்போப்பட்டசமயத்தில்பாட்சாவிடத்திலிருந்து ஐயாயிரங்குதிரையும் அன்னூறுயானையும்ஐம்பதுலட்சம்பொன்னும் முத்துச்சரங்களனேகமும் அரம்பாஸ்திரிபோன்றஒருஸ்திரீயும்விக்கிரமார்க்கனுக்குக்காணிக்கை கொடுக்கச்சொன்னதென்றுவந்தது அவைகளையெல்லாம்விக்கிரமார்க்கராசன்கண்டு கண்களித்துமனமகிழ்ந்து பாட்சாவுக்குமரியாதைசொல்லி யனுப்பிவிட்டுஅந்தக்காணிக்கைமுழுமையும் இந்தவீரனுக்குக்கொடுத்துநீ அருமையானவித்தை கற்றுக்கொண்டாயென்றுசொன்னார் உடனே அவன்மகாபிரபுவேயென்று முதலிலேவந்தவனைப்பயித்தியக்காரனைப்போல்நின்றுவணங்கினான் யாவர்களும் ஆச்சரியப்பட்டார்கள் இதுதான் இந்திரசாலமென்னும்வித்தையென்று அவர்களுக்குஅரசன்தெரிவித்தார் அந்தசாலக்காரன் உடனேதன்பத்தினியையழைத்துக்கொண்டு சந்தோஷத்துடன் விடைபெற்றுக்கொண்டுபோனான் இராசனும்மற்றபேர்களும் உச்சினிபட்டணம்வந்துசேர்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

இப்போப்பட்டகுசலையும்புத்தியும் ஔதாரியமும்உமக்கிருக்குமாகில் இந்தச்சிங்காசனமேறலாமென்று பதுமைசொல்லப்போசராசன்தலையிறக்கமாய்த் தன்மனைபோய்ச்சேர்ந்தார்.

இருபத்தேழாம்பதுமைசொல்கதை-முற்றிற்று,

## இருபத்தெட்டாம்படிக்குக் காவலாகிய பூங்காவனப்பதுமைசொல்கதை.

இருபத்தெட்டாநாள் போசராசனெழுந்து நித்தியசெபதபங்களை முடித்துக்கொண்டு வித்துவான்கள்முதலியமேலோர்களும் சுற்றிலுநிறைந்தமதிவல்லோர்களுநெருங்கும்படிக்குச் சிங்காதனத்தண்டைக்குவந்து புங்கானுபுங்கமாய்த்தானங்கள்செய்து எங்கோனாகியஇறைவனைப்பணிந்து சிங்காதனத்துக்குச்செய்யும் பூசாவிதிமுதலிய புணர்பெல்லாம்புரிந்து தானும்வணங்கி படியிற்காலைவைத்தேறும்போது அந்தப்படிக்குக்காவலாகிய பூங்காவனப்பொற்பதுமைகையைக்கொட்டி கலகலென்றுநகைத்து அவனுடையசங்கதிகளெல்லாஞ்செயப்படும்படியாச் சொல்லத்தொடங்கியது.

ஓ போசமகாராசனே கேளும் நீர் மகாபிரக்கியாதியுடையவரானாலும் எங்கள்விக்கிரமார்க்கமகாராசனுடைய புகழைப்போல் பெற்றவரொருவருமில்லையாதலால் அவருடையபெருமையைச் சொல்லுகிறேன் கேளும் இந்தச்சிங்காசனமேறி தத்துவார்த்தனஞ்செய்துவருநாளையிலோர்நாள் நான்குதிக்குந் தூதர்களைவிட்டு அதிசயமேதாகிலுமுண்டாசில் அறிந்துகொண்டுவாருங்களென்றார் அதில்கிழக்குமேற்குதெற்கு இக்கமூன்றுதிசையிலுஞ்சென்றவர் திரும்பிவந்துஎங்களாண்டவனே நாங்கள்காணத்தக்க அதிசயமொன்றுமில்லையென்றார்கள் வடதிசையிற்சென்ற ஒருவன்வந்து வணங்கி ஐயா மகதபுரியென்னும் பட்டணத்தையாளுகிறசோமப்பிரகாசனென்னும்ராசன் தானதர்மம்பரோபகார முதலிய பூசைகளெல்லாஞ்செய்து சதுரங்கசேனையுடன்யானைமேற்பவனிவந்து அரண்மனையிலிறங்கியபோது அரம்பாஸ்திரீக்கொப்பாகியலட்சம்பெண்கள் முத்தாலாத்திபவழாலாத்தி அன்னலாத்தி முதலியதீபாலாத்திகளுமெடுத்துவந்து அரசனைச்சுற்றி ஊருக்கு ஈசான்யமூலையில்கொட்டிவிட்டுப்போனார்கள் அவ்விடத்திலென்ன அதிசயமென்றுபார்க்கப்போனேன் அங்கேஅநேகம்பூதங்கள்வந்து சாதங்களைத்தின்றுகொழுத்து மற்றரத்தினங்களைக்கைப்பற்றிக்கொண்டு ஒருஆலமரத்திலேறிப்போய்விட்டதுகள் அப்பாலொன்றுந்தோன்றவில்லையென்றுதான் சொல்லக்கேட்ட விக்கிரமார்க்கராசனவர்பட்டணத்தைப்பட்டிவசத்திலொப்பிவைத்துப்போட்டு வேதாளத்தைநினைத்து அதன்மேல் ஆரோகணித்துக்கொண்டு உத்தரதிசையிலிருக்கும் அந்த பட்டணத்துக்குவந்து அன்றைக்கு அவ்விடத்தில்நடந்த ஆலாத்திமகுத்துவங்களைப்பார்த்து அந்த ஆலாத்திகொட்டிய ஈசான்யதிசையிற்போயிருக்கும்போது அநேகபூதங்கள்வந்து அந்தஆலாத்திசோற்றைத்தின்று முத்துமுதலியமணிகளைக்கொண்டுபோவதை அரசன்கண்டு பின்றொடர்ந்துபோம்போது அந்தபூதங்கள்வழியிலிருக்கும் ஒரு ஆலமரத்திலேறி அப்பால்மறைந்துபோனதைக்கண்டு சற்றுநேரமவ்விடத்திலிருந்து உச்சினிமாகாளியைமனதுட்கொண்டுமந்திரவாளையுருவிக்கொண்டு மனத்துணிவுகொண்டுபோம்போது சுவர்க்கலோகத்துக்கொப்பாகத் தெய்வகன்னியர்களின் சலக்கிரீடைதடாகமிகுதியுஞ்சுகந்தமிகுந்தபரிமளமுறைந்துநிறைந்த மலர்வனங்களுங்கஸ்தூரி கதம்பங்களின் மணமுங்குணமுங்குலாவிக்கொண்டிருப்பதைப்பலவிதயோகங்களுமுணர்ந்த விக்கிரமார்க்கராசன்கண்டுவீதிவீதியாய்த்திரிந்து அவைகளிற்சிறந்தபாடமாளிகை கூடகோபுரங்களுமுடையசொலுக்கூடமண்டபச்சாலையரண்மனையொன்றைக்கண்டு அநேகநவமணிச்சிங்காரங்களையுடைய இந்தஅரண்மனையானது இவ்விடத்திலிருக்கும் எல்லாருக்கும்எசமான்வீடுபோலிருக்குதென்றுயுக்தியினால்நிதானித்து உள்ளேநுழைந்தாரிவர்போனவழியிற் செப்புத்தொட்டியில் வெந்நீர்காய்க்கொண்டிருப்பதைக்கண்டு பக்கத்தில்வைத்திருக்கும் பரிமளப்பொடிகளையுந்தேய்த்துக்கொண்டு ஸ்நானம்பண்ணி அப்பாற்போனார் அவ்

விடத்தில் கதம்பகஸ்தூரிசக்தனபாளித குங்குமம்பன்னீரும் வைத்திருக்க அதையெடுத்துசரித்துக்கொண்டு அப்பாற்போகும்போதுகச்சாயமர்க்கழமலைத்திருக்க அவைகளைப்பூசித்து தாம்பூலமணிந்துகொண்டுகதூண்டாவிளக்குமுதலியமணிவிளக்குகளேற்றியிருக்கும் அபரஞ்தூளிகாசயனத்தைக்கண்டு அதன்மேற்படுத்துவிளைப்பாறிநித்திரைபோய்விட்டான் அச்சமயத்தில் அந்தவீட்டுக்கதிகாரியாகிய கலியோகமஞ்சரியென்னும் கணிகைவந்து அந்தபரிமளங்களைப்பார்த்துவெங்கீர்முதலியகச்சாயவர்க்கங்களும் தாம்பூலமும் சிலவழிந்திருப்பதால்இதென்னவய்ஷெட்டென்று படுக்கையறைக்குள் வந்துபார்த்தாள் அவ்விடத்திலொருமகாபுருஷன் முப்பத்திரண்டிலட்சணமுடையவராய் நித்திரைபோறதைக்கண்டு பூலோகத்தில்வாழும்நரமனுஷன்பயப்படாமல் இவ்வளவுதூரம்வந்து நமதுவீட்டில்நுழைந்தானல்லவாவென்று கோபித்துதனனிடத்திலிருக்கும் யேவற்பூதத்தையழைத்து இந்தமனிதனைத்தூக்கிக்கொண்டுபோய் நமதெல்லைக் கெல்லையாகிய ஆலமரத்துக்கப்பால்யெறிந்துவாவென்றனுப்ப அப்படியே அந்தப்பூதம் தூக்கிக்கொண்டுபோகிறபோது விக்கிரமார்க்கராசன் விழித்துக்கொண்டு மந்திரவாளைக்கையிலுருவி அந்தப்பூதத்தையோரேவெட்டாக வெட்டியெறிந்துமறுபடியும்புறப்பட்டு அந்தமோகினியிருக்கிற வீட்டுக்குப்போய் அவ்விடத்திற்காவலிருக்கின்ற பூதங்களையெல்லாங்காணாகாணையாய் விசிலேதாளத்தையழைத்து இந்தமோகினிபடுத்திருக்கும்விந்தையாகியமஞ்சத்துடன் நமதுபட்டணத்துக்குக்கொண்டுவாவென்றுசொல்லிக்காணும் அந்தமஞ்சத்திலிருந்தபோதுவேதாளமானது ராசனையும் அந்தமோகினிஸ்திரீயையுங்கொண்டுவந்து உச்சினிபட்டணத்தில் அரண்மனையின்நசிங்காரவனத்திலிறக்கியவுடனே ராசனெழுந்துமந்திரவடிவாளைத்தாங்கி இந்திரபோகமிருப்பதைவிந்தைக்கொப்பாகிய மோகினிவிழித்துப்பார்த்து ஐயோஇதென்னஆச்சரியம் இந்தநரமனிதனையெதிர்த்துவரும்படி நமதுசேவகர்பூதத்தையனுப்பினேனே அந்தமனிதன்காம்படுத்திருந்தமஞ்சத்துடனேநம்மையிவ்விடத்திற்கொண்டுவந்துவிட்டானே இனியெப்படிபிழைத்துக்கப்பிப்போகலாம்கூடாதுகூடாது என்று சற்றுநேரம்யோசித்து நமதுவினைவசத்தால்இந்தப்பூலோகத்தமனிதருடன் இணங்கி இருக்கும்படியாயேர்ப்பட்டதுபோலாம் ஆகையாலெனாம்வேறுநினைக்காமல் இவ்விடத்திலிருந்துவிடுவதே காரியமென்றெண்ணிவிக்கிரமார்க்கமகாராசனுடையதாஷ்டீகமும்மன்மதகிர்த்தயாகிய அழகுமலங்காரமும் சவுரியபராக்கிரமமும் அனேகபூசாவலிருந்ததன்னை அபகரித்துவந்தஆண்மிக்கையுங்கண்டு ஆனந்தங்கொண்டு அரசனைப்பலவிதமுகமனைவனைப்போற்பரிந்து தேவரீர் ஆரென்று கேட்டாளாக இவ்வுலகுக்கிறையாகியவிக்கிரமார்க்கராசனென்றுசொல்ல அதைக்கேட்டவுடனேஅவ்மோகமஞ்சரிமனமகிழ்ந்துஇருவருமனமொத்துப்புகழ்ந்து அரமனைக்குப்போகும்போதுபட்டிமுதலியம

க்திரிகளையழைத்து ஆயிரம்பிராமணர்களுக்குச்சோடசமகாதானங்கொடுக்கச்சொன்னகாலத்தில் ஒருபிராமணனோடிவந்துஐயாநான்வெகுநாளாயநல்லபெண்சாதி அகப்படாமையால் கலியாணம்பண்ணிக்கொள்ளாமல் காமத்தினால்வெந்துபோனேன் இப்போது தேவர்கைப்பிடித்த தேவகன்னிகையின்மேலிற்சிந்தைவைத்தேன்நானொருஏழைப்பிராமணன் தேவரீருக்கு இப்பேர்ப்பட்டபெண்வேண்டியதகப்படும் எனக்குக்கிட்டாது ஆகையால்என்னிச்சையைத் தட்டாமற்கொடுக்கவேணுமென்றுசொல்லவே அரசன்சந்தோஷமடைந்து அநேகதிரவிய ஆபரணங்களுடன் அந்தமோகமஞ்சரியைக்கொடுத்துப்பட்டணப்பிரவேசங்காட்டி சகலவிதசம்பிரமத்துடன் சுபஞ்செய்துவைத்தார்.

கேளும் போசமகாராசனே உலகத்திற்பெண்ணென்றால்பேயுமிரங்குமென்பார்கள் அதிலேயும்இவ்வுலகத்துப்பெண்ணுமல்ல மேலுந்தன்னையெறிந்துவிடும்படி பூதத்தினிடத்திற்கொடுத்தனுப்பியஅவளைமறுபடியும் அவமானப்படுத்தக்காமேகூடவேணுமென்றுசஷாத்திரங்கொண்டெடுத்துவந்தார்இப்படியெல்லாமிருந்துந்தேகியென்றபிராமணனுக்குக்கொடுத்துவிட்டதையோசிக்குமிடத்தில்ஆராகிலுமிப்பேர்ப்பட்டதிடதயிரியவுதாரகுணசீலரிருப்பார்களாநீரேசொல்லும் போசமகாராசனேஇந்தக்குணமுதலிய நன்மைகளெல்லாமுமக்குண்டாயிருக்குமாகில்இந்தச்சிங்காசனமேறலாம் இல்லாவிட்டால்இறங்கிப்போகலாமென்று பிரலிக்காமற்பூங்கிரவனப்பொம்பதுமைசொல்லப்போசராசன்திரும்பித் தன்னரண்மனைபோய்ச்சேர்ந்தான்.

இருபத்தெட்டாம்பதுமைகதை முற்றும்.

## இருபத்தொன்பதாம்படிக்குக்காவலாகிய சிரோமணிப்பதுமைசொல்கதை,

மறுநாட்காலையிலெழுந்து வேலையில்விழுந்து ஸ்நானஞ் செய்து தொழுங்கடவுளைத்தொழுது உதித்தசூரியநமஸ்காரஞ்செய்துசொர்ணமுதலியதானங்கள்கொடுத்து இன்றைக்காகிலும்படியேறவைக்குமோ என்னுடையவினைப்பயனெப்படியோவென்று சோதிடநூல் வல்லோர்முதலியபரிசுத்தவான்களுடையசொல்லுறுதியைக்கேட்டு வருந்திவந்துபடியேறும்போது அப்படிக்குக்காவலாகிய சுபாதீபச்சிரோமணிப்பதுமையானது கைகொட்டிக்குவித்துசிரமாட்டியழைத்து கனைத்து நகைத்துவாரும்போசமகாராசனேயென்று விசுவாசத்துடன்சொல்லத்தொடங்கியது,

எங்கள்விக்கிரமார்க்கராசன்இந்தச்சிங்காசனமேறி அரசாளுகையில்திங்கள்மும்மாரிபொழியமக்கள்கல்யாணவைபவங்களோடுசுகஆதிலொருகடமைகொண்டுஅரசாளுகையில்தக்கபுரியென்னும்நகரத்தில

யாளுகின்ற தர்க்கேஸ்வரனென்றொருராசன்சகலசுகபோக வைபவத்துடன் வாழ்ந்துவரும்போது எல்லாபாக்கியமுமிருந்தும் புத்திரபாக்கியமொன்றில்லாமையால் மெத்தமனம்வருந்திசித்தமுஞ்சிந்தைபட்டு தர்மபத்தினியுந்தானும்பராசத்தியாகியமகாகாளியைக்குறித்துத் தவமிருந்தார்கள் அந்தபராகாளிபிரசன்னமாகவே இவர்களிருவரும்பணிந்துவணங்கித்தோத்திரம்பண்ணும்போது அந்தஅம்மன் மனமகிழ்ந்து நீங்களெத்தனைவிததவஞ்செய்தபோதிலும் உங்களுக்கு ஓர்பெண்பிறக்குமென்று அநுக்கிரகம்பண்ணிப்போய்விட்டாள் அப்பால்இவர்கள்தங்களுடையபட்டணம்வந்து பராசத்தியைவணங்கி யிருக்குங்காலையில் அதுவேகுளியாயிருந்துபத்துமாதமுஞ்சென்றுஒருபெண்பிறந்தது அந்தப்பெண்ணுக்கு புத்திரோச்சவங்கொண்டாடி சாதகன்மஞ்செய்து நாமகர்ணமிட்டுதொட்டிலேற்றி கைகொட்டிவிளையாடிகன்னடமுதலியபாஷைகளெல்லாங்கற்பித்து விற்பத்தியுடையவளாய் விசித்திரகலையென்றுயாவருங்கொண்டாடியழைக்கும்படியாய்ப்புத்தியதிந்திருந்தாள் அத்தருணத்தில்இப்பெண்ணுக்குரியபுருஷன்வேணுமென்று லோகமெல்லாந்தேடித் திரியும்போது அந்தப்பெண்ணாகிய விசித்திரகலையானவள் பொன்னாமுதலியபூவாரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அநேகம்பாங்கியர்தாதியர்தோழியர்சேடியருடனேவேடிக்கையாகிய அம்மனைகழங்கி நிலாச்சோறுக்கல்முதலிய விளையாட்டுகளில் அதிசஆசையுடையவளாயும் அலர்பறித்தல்நீராடல்அலங்கரித்தல்அதுமுதலிய தன்மைகளிலுஞ்சிறந்திருந்ததை தாய்தந்தையர்கண்டு விந்தையாய்ச்சிந்தைகளிந்திருந்தார்கள் அக்காலையில் மல்லிகார்ச்சுனமென்றொரு மலையுண்டு அந்தமலைக்குகையில்வெகுகாலமாய்வாழ்ந்துவருகின்ற மிர்காங்கிதனென்னுமொருராட்சசன் அவன்பிர்மாவினாலனேகவரம்பெற்று ஒருவருந்தனக்குநிகரில்லாமலுலகமெல்லாஞ்சஞ்சரித்து அனேகம்உயிர்களைவதைத்துக்கொண்டுதிரிவான் அப்பேர்ப்பட்டராட்சசன்ஒருநாள்இந்தஸ்திரியாகியவிசித்திரகலைபாங்கியருடன் விளையாடிக்கொண்டிருக்கும்உப்பரிகைக்குநேராகப்போகும்போது இந்தப்பெண்ணைக்கண்டுகண்ணைக்கவிழ்ந்துக்கொண்டுஇவளைக்குலபித்தசென்றுமோகித்து எவ்விதத்திலுமிவளைக்கைக்கொள்ளவேணுமென்று சற்றுநேரம்நின்று கலங்கிகவலைகொண்டு காலைக்காலதுகொண்டுபோகவேணுமென்று எண்ணுதமெண்ணிப்போனான்,

அந்தராட்சசன்மோகித்துக்கலங்கியகுறிப்பினை இந்தப்பெண்கொடியறிந்துஇதேதுமோசம்வந்ததென்றேங்கி தன்பாங்கியர்முதலியபேருடன் அன்றிரவில்நித்திரைசெய்து மறுநாட்காலையிலெழுந்து தாய்தந்தையரடியில்விழுந்துவணங்கிஐயாநேற்றுசாயங்காலம்நான்உப்பரிகையில்விளையாடிக்கொண்டிருக்கும்போது ஒருராட்சசன்கண்டு கலங்கிமோகங்கொண்டுகதறிப்போனான் மறுநாளையில்வந்துகைப்பற்றுகிறேனென்றுஉறுமிப்போனான் ஆகையால்நான்பிழைப்பதற்கேதுவெப்படியென்று பெண்ணரசியான்சொல்லக்கேட்டு தாய்தந்தையிருவருக்கு

ஞ்சலித்து ஐயா அந்தராட்சதன் மூவுலகுக்கும் வலித்தவனாச்சே அவனை வெல்லவேலுமென்றால் யாவருக்கும் பெருமூச்சே அம்மா அவனை செயிக்கசும்மாவில்லை நீ சும்மா போய் நமது கிராமதேவதையாகிய எல்லம்மாவிடத்தில் முறையிட்டுக்கொண்டால் அச்சம்மன் உன்னைக் காப்பாற்றுவாளென்று தாய் தந்தை சொன்ன வார்த்தையைக் கேட்டு அந்தப்பெண்ணானவள் ராத்திரி பகலைக்கு நாலு காலவேளையில் மந்திரவாளையுருவிக்கொண்டு காளிகாதேவியூருக்கு வக்காளப்போது காளிவெளியேபோயிருக்கபடியால் உள்ளே நுழைந்து கதவைச்சாத்திக்கொண்டிருந்தாள் பின்னுஞ் சிலநாழிகை கழித்து காளிகாதேவி கதவைத் தட்டியபோது திறவாமலிருக்க அதற்கந்த அம்மன் கோபித்து அ, ஆ, ஆரவர்கள் என்கோவிலுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டு திறவாமலிருப்பதென்று அதட்டிக்கேட்க அதற்கந்த ராசஸ்திரீயானவள் அம்மா நானொரு பக்கிரி என்பேர் விசித்திரகலை ஒரு ராட்சதன் காரியத்தால் என்னிடத்திலாசைக் கலம்வந்தென்னைக் காப்பாற்றவையாகில் உனக்குக் கோழி பூசனிபழமிட்டு காவுமிக்கத்தக்கதை செய்து வசிக்கிறேனென்று சொல்லக்கேட்டு அம்மனே நீ பயப்படாதே ஆனால் நீ வந்த அடைக்கலமென்னவென்று கேட்க மல்லிகார்ச்சுனபர்வதத்திலிருக்கும் ராட்சதன் என்னை எடுத்துக்கொண்டுபோகவிருக்கிறானென்று சொல்ல அம்மனானவள் அதைக்கேட்டு அம்மா நான் சொல்வதைக் கேள்.

அந்தப்பாவியராக்கன் ஆராலுஞ் சாகான் எந்த ஆயுதக்கூராலும் போகான் அக்கினியே போட்டுக்கொளுத்தினாலும் வேகான் அப்பேர்ப்பட்ட சாவானானபடியால் அவனுக்குயிர் உச்சினிபட்டணம் ஆளுகிற விக்கிரமார்க்கராசனிருக்கிறார் அவரோமெத்தவுஞ் சத்தியசௌச ஆசாரத்தில் பூசாவித்திரியினையுடையவர் அவரிடத்தில் அடைக்கலம் புகுந்தால் அவர் உன்னையுமென்னையுங் காப்பாற்றுவார் இல்லாவிட்டால் உனக்கிடங்கொடுக்க எனக்கோயிலும் காணுங் கட்டமாச்சுவாராகச்செய்வான் மகாதுஷ்டனாகையால் நீ தயவுசெய்து விக்கிரமார்க்கனிடத்தில் அடைக்கலமாகப் போவென்று வயது தோன்றாமல் கிழவிபோலிருக்கும்படி ஒருசர்ப்பத்தால் மூடிமறைத்துக் காளிகாதேவி புனுப்பிள்ளைகவே அந்தப்பெண்கொடியானவள் தன்னுடைய தாய் தந்தையரின் அனுமதிபெற்றுக்கொண்டு அவாளுத்தாரவின்படி உச்சினிபட்டணத்துக்குப்போய் விக்கிரமார்க்கமகாராசனைக் கண்டு தரிசிக்கும்படி நினைத்து அந்தப்பட்டணத்தில் அன்னையிருக்கைக்கு பைம்பவன் வீடுத்போய் இறங்கிப் பணம் செலுத்தி போசனம்பண்ணிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் ராத்திரி உல்லாசமாகியே நிலவில் வீணையைமீட்டிக்கொண்டு அந்த சங்கீதக்கியானத்தோடு கானங்களைக்கூட்டிப் பாடும்போது அன்று ராத்திரி நகரிசோதனைக்கு வந்த விக்கிரமார்க்கராசன் கேட்டு பிர்மானந்தமடைந்து பொழுதுவிடிந்தது தெரியாமல் மதி மயங்கிப்போய் மந்திரியையழைத்து ராத்திரி அவ்வழி ரங்கைவளவில் இருந்து வீணைக்கானத்தால் என்மனதைக் கவர்ந்திட்ட கன்னிகையாரோ அவளை யிங்கே சீக்கிரமே கொண்டுவரச் செய்யுமென்று சொல்லி மன்னவர்பெருமானந்தத்தியஸ்தானபூசைமுடித்துவரப்போனார் அ

தற்குள்ளாகவக்கிரிவானவர்காரியசித்திஎன்னுங்காரியக்காரனையழைத் துராசன்சொன்ன அடையாளப்படி வீட்டைக்கண்டுபிடித்து அந்தவீ ட்டிலேயிருக்கிறபெண்ணையழைத்துவாவென்றனுப்ப அப்படியேஅ வன்போய் அந்த அன்னையிடங்கங்கையைக்கண்டுவார்த்தையாடி பதிதா ய்விருக்கும் பெண்ணையுங்கண்டுபேசிராசனழைத்துவரச்சொன்னு சென்று அவர்களனுமதியால்அழைத்துவந்துராசசமூகத்தில்விட ராச னானவன்கொலுக்கூடத்திலுட்காரவைத்து பாட்டுச்சொல்லியபோதுது ம்புருநாரதர் கந்திருவர்முதலியபேரும் தங்களைத்தாங்கள் மறக்கும்ப டியாய்ப்பதங்களைப்பாடினாள் அதைக்கேட்டுவிக்கிரமார்க்கராசன்மெத் தவும்மகிழ்ந்து இப்பேர்ப்பட்டபத்திபத்திவித்தை கல்விசையுள்ளவி ளுக்கானமுதலியபாவற்றையுங்கொடுத்ததெய்வம்சரீரத்தைமுதலை ப்படுத்தவேண்டியதென்ன இந்தப்பெண்ணுக்குவயதோ பதினாறுபரு வயதிலேயுடையபுட்பவதியென்னலாம் இப்படியிருக்க இவளுக்குக் கிழத்தனம்வந்ததைப்பரிசோதிக்கவேணுமென்று அந்தப்பெண்ணைத னிமையிலழைத்து நீஎந்தவூர் உன்பேரென்ன உன்தாய்தந்தையார் யா வர்கள் நீஇவிடம்வருவானேன் இந்தக்கிழத்தோலுடம்பிற்றரிப்பானே ன் என்னிடத்திலுண்மையைப்பேசுமென்றுராசன்கேட்க விசித்திர கலையென்னும் பெண்சொல்லுகிறாள்,

ஐயா சத்துருக்களைச்செயித்துமித்துருக்களைப்பரிக்குதசரித் த்தியவாதியாகிய உத்தமவராசசேகரனும் கானுமொனறால் தர்க்கபுரியை யாளும் தர்க்கேஸ்வரனுடையதவத்திற்பிறந்த விசித்திரகலையென்ப வளென்னைமிர்காங்கிதனென்னும்ராட்சசன்கொண்டுபோக நினைத்தப டியால் காளிகாதேவியம்மனிடஞ்சொல்லிமுறையிட்டுக்கொண்டேன் அந்தஅம்மன்என்தேகத்தைமறைத்துதேவரிடத்திற்குப்போகச்சொ ன்னாள் அதனால்வந்தேனென்றாள் விக்கிரமார்க்கராசன அந்தப்பெண் ணினுடையவார்த்தையைக்கேட்டு இனிமேல்நீஏதொன்றுக்கும்பயப் படாதே உன்னுடையகிழத்தனத்தைப்போக்கிவிடு இப்போததெட் சணாயனமாகையால் உத்ராயணம்பிறந்தவுடனே உன்னைநான்கலியா ணம்பண்ணிக்கொள்ளுகிறேனென்றார் உடனே அந்தப்பெண்ணானவ ள்காளிகாதேவியைச்சிந்தித்துவந்தித்து அவளால்மறைக்கப்பட்ட கிழ த்தனத்தைவாங்கிவிட்டாள் அப்போதந்தப்பெண்ணரசியினுடையசு ந்தரவுருவத்தைப்பார்த்து மெத்தவுஞ்சந்தோஷமடைந்துபடுக்கைவீ டொன்றுயேர்ப்படுத்தி அனேகதாதியர்முதலியபேரும்ராசோபசாரம் நடக்கும்படியாய்த் திட்டப்படுத்தி வீணுக்கான முதலியதுங்கேட்டு வெகுகாவலுடனே வைத்திருந்தார் அப்படியிருக்க நாடாறுமாதமாய் காடாறுமாதம்போம்போது பட்டியையழைத்துபட்டணத்தைப் பா துகாக்கும்படி திட்டப்படுத்த இந்தவிசித்திரகலையென்னும் பெண்ணா யகமானவள்ஒருராட்சசனுக்குப்பயந்து நம்மிடத்திலடைக்கலமாயி ருப்பதினால் ஒருவேளை அந்தராட்சதன் மோசம்பண்ணி யெடுத்துக் கொண்டுபோயவிடுவான் அவனுமகாமாய்கைவல்லபமுடையவனானு னதால்மெத்தவுஞ்சாக்கிரதையாய காக்கவேணுமென்று பத்துதாபாக வுசதாஞ்சொல்லிப்போட்டு விசித்திரகலையினிடத்திலும் சொல்லிவாச க்கொண்டுவேதாளத்துடனேகாடாறுமாதத்திற்குப்போயவிட்டார்

இவ்விடத்திலிப்படியிருக்க மிருகாங்கிதனென்னும்ராட்சசன் மறுநாட்காலமே தூர்க்கேஸ்வரனுடையபட்டணம்வந்து விசித்திரகலையைப்பார்க்கும்போது காணுமையால்மெத்தவும்வருந்திநாம்கண்டவேற்படிதினமேகொண்டுபோகாமல் நாளைக்காகட்டுமென்று பேரனபடியால மோசம்வந்தது ஆனாலுமென்ன இந்தஐம்பத்தாறுதேசத்திலும் பதினாலுலோகத்திலும்.ஏழுசமுத்திரத்திலும இதற்குள்ளாகஇருப்பாளேயன்றி மற்றெங்கேபோகப்போகிறாள் சித்தியமொருவிடயாகத்தேடி அவளைக்கண்டுபிடிக்கிறேனென்று புகைநுழையாவிடங்களிலும் கடைநுழையாவிடங்களிலும்காற்றுநுழையாவிடங்களிலும்தேடிக்கொண்டுவரும்போது விக்கிரமார்க்கனுடையபட்டணத்தில நுழைவதற்கு அச்சமுடையவனாய வளையற்காரனைப்போல்வேஷமெடுத்துக்கொண்டு நாலுவளையல்காலுலட்சம்வராகனென்றுவிலைகூறிவரும்போது அந்த வளையலைப்பார்த்தஸ்திரிகளெல்லாம்இவ்வளவுவிலைகொடுத்துஆர்வாங்கிப்போட்டுக்கொள்ளப்போறார்கள் ஆனால்விக்கிரமார்க்கராசன் புதுசாய்விவாகம்பண்ணிக்கொள்ளும்படியாய்விசித்திரகலையென்னும்பெண்ணை ஆதரித்துவருகிறார் அவர்வாங்கி யந்தப்பெண்ணுக்குத்தரிக்கலாமென்றுசொன்னார்கள் அவர்களால உளவறிந்துக்கொண்ட ராட்சதனானவன் ஆசாரவாசலுக் கெதிரிற்போய்நின்று இந்தவளையல்வாங்கிக்கொள்ளுவார்களாவென்று விசாரிக்கும்போது அந்தச்சங்கதியைப் பட்டிமகாது அந்தவளையலைவாங்கிப்பார்த்து வெகுசந்தோஷப்பட்டு அந்தப்புரத்துக்கனுப்பிவைத்தான் பட்டபுஸ்திரியாகியபாக்கியரேகை பார்த்து எனக்குவேண்டாமென்றுசொன்னாள் விசித்திரகலைக்குக் காண்பிக்கபோது எனக்குஇதுவேண்டியதென்றுசொல்லியனுப்பினாள், உடனேபட்டியானவர்விலைகொடுத்துவாங்கி விசித்திரகலையினிடத்திலனுப்பிவைத்தபோது இந்தராட்சசவளையற்காரன்ஐயா இதுமெத்தவுயர்ந்தவளையல் இதினுடைய அருமைஎனக்குத்தெரியுமாகையால் நான் போயபோட்டாற்போடலாமேயன்றி இன்னொருவர்போடப்படாதென்றுசொன்னான் இவனுடையசொல்லுறுதியைபட்டிபார்த்து இவன் மொழியிலென்னமோசந்தேகந்தோன்றுதுமேலும்ராட்சசனொருவனிந்தப்பெண்ணின்பேரில் இச்சைவைத்திருக்கிறானும் அவன்பொல்லாதமாய்கையையுடையவனுதலால் நீர்வெகுசாக்கிரதையாயிருக்கவேணுமென்றுநமதுராசன்சொல்லிப்போயிருக்கஇவனைநாமந்தப்புரத்துக்கு அனுப்புவதுதகாதென்றுவேறுயுக்திசெய்து அப்பாஉன்பேரென்னவென்றுகேட்கவளையற்காரபோரங்கனென்றுசொல்லஙல்லதுநீகொண்டுவந்தஉடைமைமெத்தவிலையுயர்ந்தது இவ்வளவுவிலைகொடுத்துவாங்கப்பட்டது எங்களரசனிருந்து வாங்கவேணுமாகையால் நீவாங்கியபணத்தைக்கொடுத்துவிட்டு உன்னுடைமையைவாங்கிக்கொண்டுபோவென்று சொன்னான் வளையற்காரபோரங்கனானவன் என்னையாநீங்களேவாங்காவிட்டால் பின்னையார்வாங்குவார்களென்றுகேட்க ஆனால்எங்கள்விக்கிரமார்க்கராசன் காடாறுமாதம்போயிருக்கிறார் அவர்வந்தபிறபாடு நீவந்தால் அவர்வாங்கிக்கொள்ளுவாரென்றுபட்டிசொல்ல அச்சந்த வளையற்காரன் காண்பிராய்ராசனைக்கண்டு உத்தரவுகொண்டுவரட்டுமாவென்றுகேட்க அப்படியேசெய்யென்றுபட்டிசொல்லிவிடுக்க அந்தவே

அத்துடன்விக்கிரமார்க்கராசனிருக்குங்காட்டுக்குவலையற்காரன்வந்து பட்டணத்தில்நடந்த சங்கதிகளையெல்லாஞ்சொல்லிவலையைக்காட்டி விலைகொடுத்துவாங்கினவலையைக்கொடுத்துவிட்டாரையாபட்டியானவனென்றும்சாலவர்ம ராசன்போசித்து எல்லாச்சுந்தரமுடைய பட்டியானவா எனிவனையிவ்விடத்துக்கழைப்பித்தார் கொடுத்தவிலையையேன்வாங்கிக்கொண்டார்இவ்விடத்திலேதோ ஒருவிதசந்தேகங் கண்டாப்போலுமிருக்குதென்று தன்புத்தியினாலறிந்து நடைநோடியானைத்தேடி இவன்மிருகாங்கனென்னும்ராட்சசனைப்போலு மிருக்குதெனன்றெண்ணிக்கது இக்காலத்தியானிப்படிச்சேவகாளத்தையழைத்துஇவனுடைய ரகசியமாய்க்கேட்டபோது இவனதான்மிருகாங்கனென்னுமராட்சசனென்று சேவகாளு சொல்லவேஅதைக்கேட்டுப்பச்சினியைதகாளியைவணங்கி மந்திரவாளையுருவிக்கொண்டு ஒரேவெட்டாக வெட்டியெறிந்துபபோட்டு காடாறுமாதம்முடிந்து நாட்டுக்குசகலமானசம்பருமெதிர்க்காணடவாய்த்துஅரண்மனைக்குக்கொண்டுபோம்படியாய்ச்சென்று பட்டிமுதலியம்பருக்குங்காடுநடந்தஆறுமாசத்துவேடிக்கையுஞ்சொல்லி ராட்சசனைவென்றதையுந்தெரிவித்து விசந்திரகலேயையுங் கல்யாணம்பண்ணிக்கொண்டு சுகசீவியாயிருந்தார்இவ்வளவு யுத்தியும் புத்தியும சாமார்த்தியமும் உமக்கிருக்குமாகிலிந்தசிம்மாசனமேறலாமென்று இருபத்தொன்பதாம் படிப்பதுமை சொல்ல அதைக்கேட்டுப்போசராசன் வெட்கப்போனான்.

இருபத்தொன்பதாம்பதுமை சொல்கதை முற்றிற்று.

## முப்பதாம்படிக்குக் காவலாகிய மணிமந்திரதந்திர சுந்தரப்பதுமைசொல்கதை.

முப்பதாநாட்காலமே போசராசனெழுந்து நித்தியஸ்தானஜெபதபபூசைமுதலிய யாவுமுடித்துக்கொண்டு தேவாலயவிஷ்ணுவாலயங்களையுந்தொழுது ஆசாரியனைவணங்கி ஐயோஎன்னுடைய பாக்கியமிப்படியாய்ப்போச்சுதோவென்று மிருக்கவிசனமடைந்துதருந்தமுமற்றும் பண்ணிக்கொண்டு தர்மதானங்களெல்லாங்கிரமமாகமுடித்து சிங்காசனத்தையும்பூசித்து கிழத்திசைநோக்கிவிழுந்துவணங்கி தெய்வமே இனியாகிலுமென்மேலிரங்கி இந்தச்சிங்காசனமேறும்படி செய்யவாயென்று இஷ்டதேவதையைப்பிரார்த்தனைசெய்துகொண்டுசிங்காசனமேறப்போமபோது அப்படிக்குக் காவலாகிய மணிமந்திர தந்திரசுந்தரிப்பதுமையெழுந்து காத்லைநீட்டிதடுத்து -ஆ-ஆ-அரசனே சரசமாகச்சொல்லுகிறேன விரசமாகக்கொள்ளாமல்ரசமாகக்கொள்ளும்எங்களரசனாகியவிக்கிரமார்க்கராசன் புரசனங்கள்மகிழும்படியாய்த் துரைத்தனம்நடாத்திவருங்காலத்தில் ஒருநாள்ஆரியதேசத்திலிருந்துவி

நீயொருவன்வந்து இலகாரியங்களைச்சொன்னான் அந்தக்காரியத்தை
விக்கிரமார்க்கனென்னுஞ் சூரியன்கேட்டு வேதாளத்தின்மீதேறிக்கொ
ண்டுபாதாளத்திற்குப்போமபோது வேதபூதாளகரத்தைக்கண்டாரெ
ன்றுபதுமைசொல்லிக்கொண்டுவரும்போது போசராசனை பொம்மை
யைநோக்கி ஆ ஈ தேசத்திலிருந்துவந்த வீரனையேயொருகாரிய
ஞ்சொன்னானென்னையே அந்தக்காரியமென்னவென்றுகேட்க அப்பது
மைகைகொட்டிக்கலீரெனநகைத்து இதுதெரிந்துகொள்ளுகிறவாராரு
ம்மனப்பொறுமையில்லாத மன்னவனே நீரெப்படி இந்தச்சிங்காசன
மேறப்போறீர் போம்போமென்றுசொல்லி மேலுஞ்சொல்லத்தொட
ங்கியது.

அவனென்னசொன்னானென்றால் ஒருதாசியிருக்கிறாள் அவளைக்
கண்டால சபுஞ்சகன்கூட அவளிடத்திற்படுக்க விரும்புவானென்னும்
அழகைப்படைத்தவள் அவளுடையபேரென்னவென்றுகேட்டால்கம
லரேகைக்கணிகையென்பவள் அவளிடத்திலராத்திரிக்குப்போய்ப் ப
டுத்திருக்கின்றவனெவன் விடியற்காலத்திலிருப்பதில்லை இப்படிச்சொர
னையாயிருக்கின்றமையால் இந்த அதிசயத்தை நீர்வந்துபார்க்கவேணு
மென்றுசொல்லி யழைத்துப்போனான் அப்படியேயரசன்போய்விசா
ரித்தபோது அவளுடையபாரியாரம்வழுதற்கொண்டு இதுவரையிலு
ம் அவளிடத்திற்போனவர்கள் போரங்கன்போனான்பொழுதுவிடிந்து
செத்தான் வேள்பாத்தன்பேவினான்விடிந்தவுடனேமுழிந்தான் வண்
டிக்காரன்மாண்டான் சாலேரக்கினிஞ்சாமிந்தான் மாலேமுத்துப்பண
ணான் பேரடிராமன்கேடானான் புகலும்விஜ ண்டையற்றான் குரு
ட்டுக்கண்ணன்மகன்குன்றினான் திருட்டுமாலையன் நீராவையிவ்வி
தமாக அவளால்இறந்துபோனவர்கள் சுமார்ஆயிரத்துக்குமேலிருக்
குமென்றறிந்துக்கொண்டு அன்றிராத்திரிக்குத்தானவருகிறதாய்ச்சொ
ல்லியனுப்பிவைத்தாரென்று பதுமைசொல்லவேபோசராசனப்பதுமை
யைப்பார்த்து ஓபிரதமையேயித்தனைபேரிறந்திருப்பதையுங்கேட்டுஇ
ந்தவிக்கிரமார்க்கராசன் தானிவருகிறதாயேசொன்னனென்று போச
ராசன்கேட்க பொய்மையானதுகம்யென்றிருக்க ஓராசீர்செத்தானு
ஞ்சாகிறோமென்று அவளைச்சேருகிறில்லையெப்பதாய்முன்னமேயசொ
ன்னேனே அதைமறந்துபோய்விட்டீரோ நீர்தான் இந்தச்சிங்காசன
மேறவந்தீர் நல்லதுமுதற்படிபதுமைமுதல் இருபத்தொன்பதாவதுப
டிப்பதுமைவரைக்கும் உம்மைத்தடுத்திருக்க நீர்என்மறுபடியும்வந்தீ
ர் ஆசைவெட்கமறியாதென்னும்பழமொழிக்கிணங்கவலைவந்தீர் அ
துபோல்யாவரும் அவள்பேரில்மோகங்கொண்டு வந்தார்களென்று ந
கைத்து மேலுஞ்சொல்லத்தொடங்கியது.

ஓ அரசனே எங்கள்விக்கிரமார்க்கராசன்சொல்லியனுப்பினவந்த
வார்த்தையைக்கேட்டு கமலரேகைக்கணிகைபாவையைகட்டிமெத்தைத
முதலியயாவுந்திருத்தி சிற்றுண்டிப்பன்னீர்வெண்ணீர்தாம்பூலாதிபாஸ
பதிமுதலியவெல்லாங்கிட்டப்படுத்திமூலைக்குமூலைதூண்டாமணிக
றத்தைவைத்து அரசன்வரும்வழியைப்பார்த்திருந்தாள் இராத்திரியதி

நாழிகைக்கு ராசன்புறப்பட்டுவந்து அந்தத்தாசியின் வீட்டுக்குட்புகு
ந்தார் இவரைக்கண்டவுடனே அவளெழுந்து எதிர்கொண்டுவந்துகா
லில்விழுந்து அம்சதூளிகா மஞ்சத்தின்பேரில் உட்காரச்சொன்னாள்.
அதற்குராசன் சொன்னது நானிக்கட்டிலின்பேரிற்படுத்தறிபாதகன் ஒரு
வனைப்படுத்தால மயக்கந்தலைக்கேறி கீழேவிழுந்து இறந்துபோனவன்
ஆகையால் எனக்குப்படுக்கை பூமியிற்போடென்றான் அதைக்கேட்டு
அந்தத்தாசியானவள் கலுக்கென்று நகைத்தாள் அவள்நகைத்தகாரணத்தை
விக்கிரமராசன் அறிந்துகொள்ளுமுன் ஒன்றுந்தெரியாதவர்போற் பூமியில் அ
வளுவிரித்தபடுக்கையிற்படுத்தாரென்று சொல்லிவரும்போது போஜ
ராசன் அவளேன் நகைத்தாள் உங்கள்ராசனறிந்தகருத்தென்னவென்
றுகேட்க ஐயா உமக்கு இந்தச்சிம்மாசனம்தகாதென்று சொல்
லி அவள் நகைத்ததற்குக்காரணம் விஸ்தரிக்கிறேன்கேளுமென்றுசொ
ல்லியது,

அதாவது பொழுதுவிடிந்தாலிறந்துபோகிறவன் கட்டிலிலிருந்து
மயக்கமேறி கீழேவிழுந்திறந்துபோவேனென்றேனபவிஷ்டத்துக்குக்
கொண்டுபோகஆடையைத்து ஒரு சன்னதியிலிருக்கிறதனையைக்கண்டு தா
ன்இன்னவாழலாமென்று ஆசைகொண்ட அப்பிள்ளையைப்போலிருக்
குதேயென்று அவள்நினைத்ததைப்பார்த்துக்கொண்டாரென்றுசொல்லி அ
ப்பால் இராத்திரிபதினைந்துநாழிகையானவுடன் சிங்காரமுதலியவைகளும் ப
டிவாடிகளைக்கொண்டு மெத்தைமேற்பட்டுவிரித்து பன்னீர்குளித்துப்பச்சைமஞ்சட்
பூசிப்புஷ்பமாலையணிந்துக்கொண்டு பஞ்சவர்ணடையமணிந்து அரச
னுக்குப்பக்கத்திலவந்துபடுத்தாள் அவனுக்குக்கொடுக்கவேண்டியது
ஈரம்பொலனுங்கொடுத்தான் ஆகிகளைஞ்செய்து அணைத்தாருமுக
இகொடுத்தாள அதையுங்கொடுத்தான்கலவிக்கிரீடைகொடுத்தாள் அதை
யுமரசன்விடுத்தான் இப்படியிருக்கும்போதுராவிடியுமுன்னமே காம
நதர்பணிசெய்வோனை அம்பட்டனெல்லவனுடன்சலவாதிவெட்டியான்மு
தலியகொழிலாளிகளும் பாடைக்கொப்புபச்சோலைபட்டுத்தாப்பா ப
ரம்பச்சைவளசந்தனக்கட்டை கெந்தப்பொடிபுஷ்பம்கட்டி பொரிமு
தம்வெற்றிலைதோண்டி தாரைபூரிதப்பட்டைமுதலியயாவும் மாழலா
க்கொண்டுவருகிற குத்தகைக்காரர் கொண்டுவந்துவைத்து வாசலிற்
காத்துக்கொண்டிருந்தார் இதுயிப்படியிருக்க ராத்திரிமுழுமையுநித்
திரையற்றிருந்த ராசனுக்குப்பக்கத்திலபலவிதபாடல்களைபாடிக்கொ
ண்டிருந்த கடைசரேகைக்குறைவிதமயக்கமவந்துபடுத்துகண்ணூடிநித்
திரைபோனாள் அப்போது அரசனெழுந்து ஒருகலைக்கண்ணாடியை அவளு
க்குருகாமையிலவைத்துவிட்டு தான்சற்றப்புறம்போய்மறைந்து பார்த்
துக்கொண்டிருந்தார் அந்தவேளையிலஅவளுடையமூக்கிலிருந்துமாற
நுயாகநு சொர்ணநிறசிறுபாம்பு புறப்பட்டுபடுக்கையிலிருந்து பக்கத்திலி
ருந்தகலைக்கண்ணாடியை ஓங்கி யாகெயடித்து வெடுக்கென்று கடிப்பதை
விக்கிரமார்க்கராசனுணர்ந்து இதுவரையிலும்இறந்துபோனவர்களு
க்குக்காரணமதெரிந்துகொண்டு தன்னுடையமந்திரவாளையுருவி ஒரே
வெட்டாகவெட்டியெறிந்து அவளுடன்படுத்து கலவியமளிக் கரீடை
கொடுத்துமுடித்துக்கச்சாயவர்க்கழுக்குடித்துகாலையிலெழுந்து ஸ்நா

னைசந்திசெபதபமுதலிய யாவுமுடித்துக்கொண்டு போசனமுண்டு புஷ்ப
முடன் மகிழ்ந்து வெளியில்வருவதைக் கமலரோகையும்மற்றவர்களுங்க
ண்டு ஆச்சரியங்கொண்டு பிணத்துக்குவந்த பொருள்களையெல்லாம்
போக்கி அரசனையடுத்துப்பணிந்து அபா இந்தக்கமலரோகை புத்தியறி
ந்து சோபனம்பண்ணியநாள்முதல் நாளதுவரைக்கும் இவளிடத்திற்
போனவர்களோ அத்தனைபேரும் இறந்துபோனார்களேயல்லது பிழை
த்தவரில்லை அப்படியிருக்க நின்றுநீர் பிழைக்கக்கண்டோம் இதனுடை
யவரலாறெங்களுக்குச் சொல்லவேண்டுமிறைவனேயென்றுயாவருங்
கரத்தைச்சிரத்திற்குவித்து வணங்கியபோது திருக்கியோ ஞானாசிங்
காசனத்திற்பொருந்தியிருந்து இவளிடத்திலிருந்த குணதோஷத்தையு
ங்குமுதமலர்போன்ற அவளுடையமூக்கிலிருந்து புறப்பட்ட பாம்பினு
டையசெய்கையும் மாற்பயர்த்ததற்சம்போன்ற அப்பாம்பைத்தா
ன்வெட்டியெறிந்துவிட்ட விதத்தையுந் தெரியப்படுத்தி அந்தநாகப்பா
ம்பினுடலத்தையுங் காட்டினார்.

அப்போ எல்லோரும்புகழ்ந்து மகிழ்ந்து இறைவனைப்பணிந்தேயே
ற்றிப்போற்றி வாழ்த்தினார்கள் கமலரோகைபானவள் என்குலதெய்வ
மே இன்னுளிடத்திற்போய் இறந்துபோவார்களென்னும் வசைமொழி
சாற்றி இசைமொழிவணக்கத்தக்க பேக்கியமென்று இரண்டு திருவ
டிகளையும் சிரத்தில்வைத்துக்கொண்டிறைஞ்சினள் அந்தத்தாசிகளும் வ
ணங்கவெகுமதியுஞ்செய்து அவ்வூரார்யாவரும் வழிகொண்டுவக்துவி
டைக்கவிடைபெற்றுக்கொண்டு உச்சினிபட்டணம்வந்துசேர்ந்து உலக
த்தைபரிபாலித்திருந்தார் சேனும் போசமகாராசனே தேவரீர் இப்பேர்ப்ப
ட்டதிடவானுகல் இந்தச்சிங்காசனமுமக்குத்தகுமென்றுபதுமை
சொல்ல அதைக்கேட்டு மறுமொழிசொல்லாமல் மதிமயங்கிக்கொண்
டு வாழ்மனையைநோக்கி மன்னன் நடந்தான்.

முப்பதாம் பதுமைகதை முற்றிற்று.

—— ✻ ——

முப்பத்தோரும்படிக்குக் காவலாகிய
மின்னொளிப் பதுமைசொல் கதை.

—— ✻ ——

மற்றநாட்காலமே விக்கிரமசிரோன்மணியாகிய போசமகாராசனெ
ழுந்து ஸ்நானஞ்செபதபபூசைமுதலிய சகலகருமங்களும் முடித்துக்கொ
ண்டு சகலட்சணசகிதாயுத பூலதூபதீபம் நைவேத்தியங்களுங்கொண்டு ச
கலசம்பிரமனைபவத்துடன்வந்து சிங்காசனத்துக்குப் பூசைசெய்து மு
கமலர்ந்து அகமகிழ்ந்து பெரியோர்களைப்புகழ்ந்து பணிந்து மனதுணரி
து படிமேலடிவைக்கப் பார்க்குஞ்சமயத்தில் முப்பத்தொருபடிக்குக்காவலா
கியபதுமையானது போசராசனைநோக்கி ஓயாபொறுபொறு இந்தச்
சிங்காதனமேற்செங்கோல்செலுத்திய விக்கிரமாதித்தமகாராசர்க்கும
கராசன் காடாறுமாதத்திற்கண்ட அதிசயம்போலக் காடாறுமாதத்தில்

நான்குதிசையிலுந்தூதனையனுப்பி அதிசயச்சங்கதிகளைத்தெரிந்துகொ
ண்டுள்ளசெங்கதசகாரியங்களை எப்படிநடத்தவேண்டுமோ அப்படிநடத்
தி ஆனந்தம்பெற்றிருக்குநாளையில் ஒருநாள்நடத்திய அதிவிக்கிரமத்
தைக்கேளுமதி நமால்புரியென்னும்பட்டணத்தையாண்டுவந்த தரும
ராயனென்னொருராசனுண்டு அவருக்குத் தொண்டுசெய்துவரக் கொ
ண்டபெண்டு சமுத்திராதேவியென்பவளுண்டு இவர்களிருவருங்கலந்
து பெற்றலத்தாற்பெற்ற விமாசூரன் சூலக்குடிசூரன் மகாசூரனென்று
மூன்றுபேர்பிள்ளைகளும் அபரஞ்சிரனைக்கலையென்ற பெண்ணுமு
ண்டானவர்களாய் அகண்டசாம்பிராச்சியத்தைப் பரிபாலித்துவந்தார்கள்,
இந்தப்பெண்ணும் பிள்ளைகளும் நன்றாகவாசித்துத் தருமசாஸ்திரமுதலி
ய சகலவித்தையிலுத்தமராவார்கள் இந்தப்பாக்கியத்தைப் பெற்றவர்க
ள் பெருமையாய்மகிழ்ந்து அற்றவர்தமக்குவிவாகநடத்திப்பத்துவ
ருஷம் பாங்குடனிருந்து பேரன்பேத்திப்பெருக்கமுங்கண்டு மரும
கன் மருமகள்வாஞ்சையுங்கொண்டு மைந்தர்களல்லமைமனதுங்கொ
ண்டு தனையாங்கொண்டும் திரையம்மறைப்பும் இருமலாமயினையான
பேரிழுக்கமும் கட்டெல்லாம்விட்டுகாலனுங்கெட்டுதென்பதுவாசனு
மொழிபெறத்திறந்து நானோர்போர் நாற்றமாமுடலே என்றுவிடுத்துள
பபர்பின்போய் நன்றதிதிணைநும் நாள்வந்தழைக்க அரசனும் அரசி
யும்அகன்றனரந்தோ புத்திரரெல்லாமெத்தவரும் மந்திரிமார்களால்ம
ணமதலுவேறு ஈமவிதிக்கடனெல்லாமுடித்து படியுளோர்புகழமுடிபு
னைந்திருந்து பாரினையாண்டசிறிபோர்மூவருந்தங்களுக்குள்ளதளத்தி
னெல்லைகளும் அங்குள்ளகுடிகளும் ஆசாரப்பங்களும் மலையுங்கோ
ட்டமமானிடக்கூட்டமும்பார்த்தறிந்துகொள்ளவேண்டுமென்றுபஞ்
சகல்யாணிக்குதிரையின்மேலேறிக்கொண்டு கிழக்கு தெற்கு மேற்கு
மூன்றுதிக்கையும்பார்த்து சிலநாளக்கிருந்து வடதிசைநோக்கிப்பார்க்
கும்படியாய் அனேகநாட்பிரயாணம்கடந்து பிரமாண்டமாகிய மலைக
ளும் வனங்களும் கடந்துபோம்போது திவ்வியமாகிய வாசஸ்தலமு
மமூன்றுமண்டபமும் மூன்றுகுளமும் மூன்றுசோலையும்மூன்றுசாலை
யும் ஓரிடத்திலிருக்கக்கண்டு இன்றிராத்திரிக்கு இவ்விடத்திற்றங்கியி
ருக்கவேண்டுமென்றுமங்களகரமாகியமனமகிழ்ச்சியுடன் அவ்விடத்
தின் அலங்காரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் அவ்விடத்திலி
ருப்பவர்களியாரென்னில் மூன்றுபேர்தேவகன்னிகைகள் பகற்காலங்க
ளில் தேவலோகத்திலிருந்து நாட்டியமுதலிய குடவரிசைகளுமுடி
த்து ராத்திரிவேளையிலிவ்விடத்தில்வந்து வாசம்பண்ணிக்கொண்டி
ருப்பார்கள் அந்தக்கன்னிகைகள் இன்றையதினஞ்சாயுங்காலந்தாங்க
ளிருக்கும் இவ்விடத்திற்குவந்துபார்க்கும்போது ராசகுமாரர் மூவரு
மிருக்கப்பார்த்து அந்தரத்திலாகிய சுந்தரமோகனரமைக்குமேலா
கியபெண்கள் இந்தராசகுமாரர்பேரில் ஆசைகொண்டு தேவனோடனி
கனே சித்தசனெனவனுதிபக்கியேங்கிமயங்கி முயக்குமிச்சையுடை
யவர்களாய் லச்சையிட்டுமூத்தவள்மூத்தவனையும் இளையவள்இளையவ
னையும் நடுப்பிறந்தாள் நடுப்பிறந்தோனையுங்கூடிக்கலந்து குளுலமிப்
டணல்வி சந்தன பாளித குங்குமம் சபிரமங்கள் விங்கித வங்கனமூன்

கொண்டு மனதுக்கிசைந்தபோகமெல்லாம்ராத்திரிமுழுமையுமநுபவித்துகாலையில் கற்றுன்றுகச்சமைத்துத் தெய்வலோகத்திற்போயிருந்து சாயுங்காலம்வந்துஎப்போதும்போலெழுப்பிக்கொண்டு சம்பங்கித்தைல ஸ்நானஞ்செய்வித்துதிவ்வியபோசனம் சிறந்ததாம்பூலம்சுகந்தபரிமளமாலை முதலியதுங்கொடுத்து ராத்திரிக்கனுபவித்து விடியற்காலையிற்கல்லாக்கிவிட்டுப் போவார்கள் இப்படியிருக்கஒருநாள்இராத்திரி இளையகாளையாகிய மகாராசன் தோப்பில்வந்து மலபாதைக்கிருந்துகுளத்திற்கா லலம்பிமண்டபத்தின்வழிவரும்போது அம்மண்டபத்துத்தூணிலிருக்கும் மணிப்பிரதமைகளானதுமனஸ்தாபத்துடனழுது ஆ ஆ அநியாயமாவென்றுசொன்னசொல்லைதிடுக்கிடக்கேட்டு திரும்பிப்பார்த்தபோது ஒருவரையுங்காணாமல் இதென்னவிந்தையென்றுசிந்தைநொந்து வருகின்றவனை அந்தோ அரசேஇங்காருமென்றுஅழைக்க அந்தஓசை வழியேவந்துபார்த்தால் இந்தப்பொம்மையிருக்கண்டுஎன்ன காரியமென்று இறைவன்கேட்கபிரதமைசொல்லுகின்றது.

ஐயா நீங்களார்பெற்றபிள்ளையோ ஆருடையசெல்வமோ அனங்கராசனைப்போல் அழகாயிருக்கிறீர்கள் உங்களையிந்தகன்னியர்கள் காமவலையிற்போட்டுக்கொண்டு இராத்திரிக்குமாத்திரம் மோகத்தையுந்தேகத்தையுங்காட்டி பகலிற்றுங்களை கல்லாகவிட்டுத் தெய்வ லோகம் போகுறார்கள் ஆகையால்உங்களுக்கு வந்திருக்கும்அவதியைக் குறித்து அவஸ்தைப்பட்டு அழுததேயென்று பொம்மைச்சொல்ல அதையந்தமகாராசன்கேட்டுநாங்களதப்பிப்போகும் உபாயமுண்டாவென்று கேட்கஉண்டென்று பிரதமைசொல்ல அவ்வளவுஉதவிசெய்தால்நாங்கள்மறக்கோமென்றுஅரசனபொம்மைக்கு உபசாரஞ்சொல்ல அதனால்சந்தோஷமடைந்து எழு குளிகைக்கல்தாறேன் அந்தக்கல்லைக்கையில்வைத்துக்கொண்டு இராத்திரிக்கு அவளிடத்தில் நன்றாயின்பமுடித்து அந்த அலட்டலினால அவளயர்ந்துநித்திரைபோகுஞ்சமயத்தில் நீங்கள்மூவருமெழுந்து குதிரைமேலேறி குறுக்குவழி விழுந்துபோங்கள் அந்தக்கன்னியர்கள் உங்களைவிடாமற்பின்றொடர்ந்துவருவார்கள்நீங்களவர்களுடன் பேசிமகிழ்ந்தால் என்றென்றைக்குங்கல்லாய்ப்போகசபிப்பார்கள் ஆகையால் அவர்கள்கிட்ட நெருங்கப்பார்த்துஒருகல்லைப்போடுங்கள் அந்தக்கல் அவர்களைத்தடுக்கும் அதற்குள்ளாக நீங்கள் அப்புறம்போகலாமென்று குளிகைக்கல்லைக் கொடுத்துஉங்கள்பட்டணத்தையுந் தாய்தகப்பன்மார்களிடத்திற்போய்ச் சேருங்களென்றுஅநேகம்புத்திமதிகளைச்சொல்லி விடுக்கபிரதமையாகியபிராணதேவதையென்று வணங்கிவிடைபெற்றுக்கொண்டுமூவரும் ஒரேமனதாயெழுந்துகுதிரையேறிப் புறப்பட்டு வேகமாய்வரும்போது அந்தகன்னியர்மூவரும்விழித்துப்பார்த்து தங்கள்தங்கள் கணவரைக்காணாமையால் கண்மூடிகண்திறப்பதற்குமுன் அந்தக்காவலர் போம்வழியைக்கண்டுபிடித்துப்பின்றொடர்ந்தார்கள் இவர்கள்வருவதை அவர்கள்நின்றுஒருகுளிகைக்கல்லை விட்டெறிந்தார்கள் அந்தக்குளிகையின்மகத்துவமான அடர்ந்தசெடியும்பூண்டும்புல்லுங்கல்லுஞ்செல்லவொண்ணாவனமும் ஆறுந்தூறுமாயடர்ந்திருப்பதைத் தாண்டி அந்தப்பெண்கள்வருகுமுன்

னமேறியவர்கள்மூவரும் நெடுந்தூரம்போனார்கள் அந்ததேவமாதர் மறுபடியுந்தொடர்ந்து இதோவந்தோம் விட்டமாவுங்களையென்றுவரக்ணமெறுபடியும் ஒருகுளிகைக்கல்லை யெடுத்தெறிந்தார்கள் அந்தக்குளிகையானது கருங்கடல்வெண்கடல் செங்கடல் பெருங்கடலென்று நாலுகடலாச்சுது சேச்சீமார்க்கத்திலெழுந்து அதையுங்கடந்துகடுவேகமாகடந்து தொடர்வதைக்கண்டு பின்னொருகுளிகையைப் போட்டார்கள் அதாவது கரடிபுலி காட்டானைசிங்கம் பன்றியாளிமுதலிய கண்டபேரண்டங்களுமாய் நிறைந்துமறித்தபோது அதுகளைக்கடந்துவருவதற்குச்சற்றுநேரஞ்சென்றது இதற்குள்ளேகொஞ்சதூரமிஞ்சிப்போனார்கள் இக்கன்னியரும் அஞ்சாமறந்தொடர்ந்தபோது பின்னையுமொருகுளிகையைப்போட்டார்கள் அதாவதுபாம்புதேள்கட்டுவாய்க்காலிபூரான் முதலிய விஷசெந்துக்களெல்லாமுண்டாய் அவர்களைத்தடுக்க அவைகளெல்லாம் நீக்கிவருவதற்கு முன்னே அரசர்கள்வெகுதூரம்போனார்கள் இந்தகன்னியரும் விடேன்றொடேனென்று வேகமாய்வருமபோது இளையவனாகியமகாசூரன் இன்னொருகுளிகைகல்லையெடுத்துவீசினான் அதைவீசினவுடனேகன்னிகைகளுக்குக்கண்கெட்டாற்போற்றடுமாறி காலநடுங்கிமெய்சோர்ந்துகண்ணீருகுத்துக் காலெழாமல்பொழுதுவிடிந்துபோச்சுதே என்னசெய்வோமென்றுநின்றுவிட்டார்கள்காவலர்மூவரும் காதவழிபோய்விட்டார்கள் அப்போது சரஸ்வதியைப்பாடி அந்த அம்மனருளால் கண்முதலியதுந்தெரிந்து சௌக்கியப்பட்டுமேனதுக்க முடையவர்களாய் கன்னியர்மூவருங்கலந்து மூத்தவள் சொல்லுகிறாள்நம்மிடத்திலிருந்த நாயகர்மூவரும் இளையவனுடையஆகாவிற் போனார்களேயல்லது அவர்களிடத்தில் குளிகைகல்லில்லை இளையவனிடத்தில் இந்தக்குளிகைக்கல்லேது இந்தக்கல நம்மிடவீட்டில்குளிகை மாடத்திற்றானேயிருந்தது இதைஇளையவளெடுத்துதன்மாப்பிள்ளைக்குக் கொடுத்துஇந்த வளவுசொல்லியனுப்பினாள் இவளைவிடவேறொருவருமில்லையென்று மூத்தவளிருவருஞ்சேர்ந்து ஆக்கிரப்பட்டுமகாசூரனை வைப்பாக்கிய ரூபகன்னிகையைமயிரைப்பிடித்திழுத்துமண்மேற்றள்ளி இடித்துஎலும்பையொடித்து காலவேறுகைவேறாகக்கிழித்தெறிந்து போட்டு அக்கன்னியரிரண்டுபேரும் தெய்வலோகச்சனமக்கு காலப்பிரமாணந் தப்பாமற்போய்த் தாளப்பிரமாணந் தப்பாமல்நாட்டியமாடினார்கள் இப்பால்மகாசூரன் தனக்குரிய நாயகியாகிய ரூபகன்னிகை யிறந்ததைக்கண்டு அதிகவிசாரங்கொண்டு அண்ணமாரிருவரையும்நோக்கி எனக்கிந்தக்குளிகையினாலேவைச்சொன்னவளிவளையும் அநியாயக் கொன்றுவிட்டார்கள் என்னிமித்தியமாய்அவளிறந்தது அல்லாமலும் எனக்குமுன்னேவிரித்தின்பங்கொடுத்தாள் அவள் துன்புறும்படிக்கு நான்கண்டுஎன்பிராணனை வைத்திருக்க மாட்டேன் அவளுடன் கூடகாலுமிறப்பேனென்று சொல்லிப்போகின்ற தம்பியை தமயனிரண்டுபேருந்தடுத்து அப்பாஐயா அந்தககன்னியர்கள்மெகத்தொட்டவர்கள் உன்னைக்கண்டால் கல்லாய்ச்சமைத்துவிடுவார்கள் நீ போகவேண்டாமென்றானந்தனை விததருமங்களைச்சொன்னாலும் அவைகளொன்றுங்கேளாமல்சாகத்துணிந்தவனைச்சமுத்திரமுழங்காலென்றுந்தன்மையாயுடையவென்னைநீங்கள் தடுக்கக்கூடுமோசொல்லிக் தடுக்கவே

ண்டாமென்று அவர்களை வாயடைக்கச்செய்து அவர்கள் பேச்சைக்
கேளாமல் அந்தரூபகன்னி விழுந்துகிடக்கும் இடத்திற்குவந்து கை
வேறுகால்வேறா யிருப்பதையெடுத்துப் பொருந்திதன்பேரில் போர்
வையாயிருந்த பச்சைவடத்தால் அவளைமூடி இவள்பக்கத்திலிருந்து
கொண்டு அவளிருந்துதந்த யின்பத்தையும் தனக்கு அவள்அகாரண
க்கந்தத்தையும் அவளுடைய அந்தத்தையும் தன்னுடைய போகபாக்கிய
சொந்தத்தையும் அவளிப்போது பட்டதுன்பத்தையும் தாங்கள்வந்த
தையும் இப்போதுநடந்ததையும்அண்ணமார்பட்டணம் நோக்கிப்போ
ய் விட்டதையும் நினைத்துகரைந்து நெடுமூச்சுவிட்டழுது மனம்வெ
றுத்தெழுந்து கட்டைமூட்டைகள் சேர்த்து அவளைத்தகனம்பண்ணி
தானுமிறந்துவிடுவதென்றுதேறி சகலமும்நிட்டப்படுத்தி நெருப்புமூ
ட்டப்போகிற சமயத்தில் கயிலாயபதியானவர் ரிஷபவாகனரூடராய்
பார்வதிசமேதராய்வந்து ஏனப்பா விசனப்படுகிறாய் யென்றுகேட்டுத
ன்னைமறந்து ஆனந்தபாஷ்யம் பெருகும்படியா யழுது அடிவணங்கி
தொழுது ஆதியே அனாதியே சோதியேபரஞ்சோதியே நீதியேஉமை
யாள்பதியே ஜகப்பிரக்யாதியே சட்சமயவாதியே எல்லாவுயிரையும
பெற்றயின்பமேயென்றுபணிந்து தன்குறைதனைசசொல்லிக் கொண
டான் பரமேஸ்வரன்மனமிரங்கி மகிழ்ந்து அந்தரூபகன்னிகையை எ
ப்போதும்போ லெழுந்திருக்கச்செய்தார்.

அந்தப்பெண்ணும் நித்திரைசெய்து விழித்தவளைப்போலெழுந்து
கர்த்தரையும் கடாட்சவீட்சண்ணியகமலக்கண்ணியையும்வணங்கிவா
ழ்த்தியபோது அவர்களாசிர்வதித்துப் போய்விட்டார்கள் அப்போ
து இந்த ரூபகன்னிகையானவள் தானடிப்பட்டிறந்ததும் இப்போது பி
றந்ததும் இதுகளையெல்லாந் தெரிந்துகொண்டு இந்தமகாகுருவை வ
ணங்கி ஏதோசிலநாளிணங்கிருந்தோம் இன்றைக்குப்பிணங்கிப்பிரிந்
தோமென்றுபோய்விடாமலவணங்கிவந்து குணங்கெட்டகன்னியர்க
ள்என்னைக்கொன்றதறிந்துபிணம்பட்டபாடினையுடைய வென்னுடல்
உடன்கட்டை யேறத்துணிந்த உமதுபாக்கியத்தால்சகதிசனருளைப்பி
ழைத்தயான் இனிமுதற்கொண்டு உமக்குரியஆசைநாயகியானேன
நீ யென்க்குரிய நேசபுருஷ தெய்வமென்றுவிளம்பி ஆனால்நான் இர
வும்பகலும் உம்மிடத்திற்றானே யிருக்கலாகாது இந்திரலோகத்துக்கு
ப்போகவேண்டியிருப்பதால் ஒருதந்திரஞ்செய்கிறேன் அதாவது என
னுடைய மந்தாரசுந்தரமிகுந்த வீணையைவரவழைத்துத்தந்தேன் நான்
வரவேணுமென்னும் இஷ்டம் உனக்கெப்போது தோணுதோ அப்
போது அந்தவீணையைமீட்டு நீ என்னை உம்மிடத்திலிட்டும் நான்வ
ந்துகலந்துபிரிந்துபுணர்ந்து போகிறேன்மற்றக்காரியங்களும்கலந்து
பேசிக்கொள்ளலாமென்று ஒருதாஞ்சொல்லிதன்னுடையவீணையை
வரவழைத்துக்கொடுத்து பகிரமபத்திரம் பிறர்கைபடாமற் கொடாமற
காபாற்றிக்கொள்ளலாமென்று தேவேந்திரனுடையசபைக்கு நாட்டி
யமாடப்போனாள் அவ்விடத்திலிருந்த மற்றயிரண்டுகன்னியரும் இவ
ளைக்கண்டுஆச்சரியங்கொண்டு இவளுடன்பேசவெட்கமாயிந்தார்கள
இவள்மாமூலப்படிக்கி எல்லாரிடத்திலும்பேசிவேடிக்கையாயிருந்தா

ள் இப்படியிருக்க இந்தமகாசிலனுகிய ராஜகுமாரன் அவள்பிரிந்துபோன தைக்குறித்துகொஞ்சமனமைநந்து நமதுகையில்வெண்ணையிருக்க நெய்க்கழுவானேனென்று உடனேசந்தோஷங்கொண்டுதங்கள்பட்டணத்தைநோக்கிச்சிலதூரம் நடந்து அவ்விடத்தில் இவனுடையபிரயாசங்கொண்டு சாயுங்காலவேளையில் ஓரிடத்திற்றங்கி வீணையைமீட்டினன் அப்போதவ்விடத்தில் ஒருதடாகமுந்தங்கப்படிகட்டுகளுஞ்சிங்காரமண்டபமுந்நீண்டமாசசோலைகளுந்நேத்தியாகியசாலைகளுஞ்சவுக்கடிமேடைகளுஞ்சாப்பானத்திண்ணைகளும்பளிங்குமணிமண்டபமும்பறபலவிசித்திரவேலைகளுமாக அமைந்திருக்கக்கண்டு அந்தமண்டபத்திற்போய் மகாரூரனிறங்கியிருக்கும்போது தேவகன்னிகையாகியருபகன்னியானவள் பஞ்சகச்சாயபாமாநமும்விருப்புறும்படியாகிப் பருப்புநெய்யும் பாலுந்தயிரும்பாக்குவெற்றிலையும் பஞ்சவிடையங்களும்புட்பசந்தனகஸ்தூரி சவ்வாது இன்னம்பலவிதபக்குவபண்டங்களுடன் அந்தமண்டபத்தில் வந்திறங்கி நாயகனுக்குஸ்நானமாட்டிவைத்து தானுங்குளித்து சந்தனஞ்சிந்திஅட்சதைப்பொட்டிட்டுபுஷ்பமுடித்துபோஜனமூட்டி தாம்பூலந்தரித்து தாங்களிருவருந்தனித்துசரசஞ்செய்யுங்காலையில் அந்தமண்டபத்தின்பக்கத்திலே ஆலவிருட்சத்தடியில் ஒருமுனிவராய்த் தவசுசெய்துகொண்டிருந்த ஒருபெரியவர் இந்தப்பெண்ணைக்கண்டு மோகங்கொண்டு காமாக்கினியாற்கலங்கிஎரிந்து கண்ணீர்சொரிந்து தவத்தையவத்தில்விடுத்து பலத்தையடுத்துபடபடத்துவிடவிடத்து மனங்கசிமகாரூரனுக்கெதிரில்வந்து அண்ணலே இன்னைக்கென்னைக் காத்திரட்சிக்கவேணும்நீர்தயைசெய்யாவிட்டால மன்மதனென்னும்வியாதியால ஆவிபிழப்பேன் ஐயா உமக்கோருசிதமாகியவச்சிரவாளதருவேன் என்னிச்சைதீர இந்தப்பச்சைக்கிளி போன்ற கன்னிகையைத்தாருமென்றுகாலடியில்விழுந்துவேண்டினர் அந்தவசனத்தை மகாரூரன்கேட்டுநல்லதையா நீர் கொடுக்கும்வச்சிரவாளினுடையமகிமை யென்னவென்றுகேட்க இந்தவாளையுருவி உன்மனதுக்கொகாதபேர்கள் பேரில்விடுத்தால் உடனே அவர்களைசசங்கரித்து உன்னிடத்தில்வந்து உறையிலுறையுமென்று சொல்ல அப்பேர்ப்பட்டவச்சிரவாளைத்தாரும் பார்ப்போமென்றுகரத்தில்வாங்கி அந்தவாளாயுதத்தைஉறைவிட்டுருவிவிடுப்பிக்கேட்டசந்நியாசியையவெட்டென்று விடுத்தான் அப்படியேசந்நியாசியையிரண்டுதுண்டாகவெட்டிப்போட்டு வந்துஉறையுட்புகுந்தது அப்பால் இந்தமகாரூரன்மனமகிழ்ந்து ரூபகன்னியுந்தானும் நுண்மையாகிய கல்வியமலியிற் கலந்திருந்துவிடிந்தவுடனெழுந்து விடைபெற்றுக்கொண்டு தெய்வலோகம்போனள்

இந்தராஜகுமாரன் மறுநாள்வழிநடைகொண்டுவரும்போது சூரியஸ்தமானங்கண்டு நடுக்காட்டிலிறங்கிவீணையைமீட்டினன் அவ்விடத்திலும்நேற்றையதினங்கண்ட விதம்போலமண்டபங்கள் முதலிய தோப்பையும்பார்த்து அதிலிறங்கியிருந்தான் அந்தரூபகன்னியானவள்தேவாமிர்தத்திற் கொப்பாகியசுவைதருந்திவ்வியகனிவர்க்கமுங்கொண்டுவந்து கணவனையலங்கரித்து தன்னுடையகண்குளிரப்பார்த்து மோகனுறியுமூட்டிபுட்பசந்தனமிப்பொருந்தியபூரணச்சந்திரோதயத்

தில் புணரப்போம்போது அந்தயிடத்தில் யோகஞ்செய்துக் கொண்
டிருந்த ஒருபெரியவர் இந்தப்பெண்ணினுடைய வாசனையையும் தே
ககாந்தியையும் முகவிலாசத்தையும இவளுடையஉல்லாசத்தையும்வி
லாசத்தையுங்கண்டு தலைமயக்கங்கொண்டு உனக்குநான்தொண்டு
ரிவேனென்று மகாசூரனிடத்திலவந்து ஓராஜபுத்திரனே நான்செக
துப்போகிறேனகோபமில்லமல என்னுபத்தைத்திர்க்கவேணும் பூபா
லனேஉமக்கொருசோளிப்பை தருக்றேன் அதனாலுமக்குமெகுசவுக்
கியமுணடு எனகிந்தக்கன்னிகையைக் கொடுமென்றுகேட்டான் அ
ப்போதுமகாசூரன் சந்தோஷமடைந்து நீர்கொடுக்குஞ்சோளியாலே
துஎன்னலாபத்தைத்தருமென்று கேட்க யோகபுருஷன் சொலலுகி
றார் அரசனேஇந்தச் சோளிகையிற்கையைப்போடுவையாகில்உமக்கு
வேண்டியசொர்ணமணிப்பாக்கியங்களும் வருமென்றுசொன்னான்வெ
தோ அந்தப்பையையெடுமென்று கேட்டுவாங்கிக்கொண்டு மூனிரு
ருந்தவசிரவாளையுருவிபிச்சைக்காரயோகபுருஷனைவெட்டிநங்வே
அவனை அப்படியேதுண்டாகரெண்டாக்கி விட்டுவந்தது அப்போது இ
ந்தக்கன்னியுமமனனனுமநனயமாககலந்து பொழுதுவிடியளவுமி
ருந்துபுணர்ந்த. விடைப்பெற்றுக்கொண்டுபோனாள் இந்தபூபதியும்வ
ழிப்பிரயாணமாய்வரும்போதுசாயுங்காலம்வரைக்கும்நடந்துஇராக்கா
லமஙெகிங்காலையி லோரிடத்திலிருந்து மந்திரசித்திவினையை மீட்டினா
ன் அவ்விடத்திலும்முன்சொன்னவண்ணம் அலங்காரமமண்டபம் அ
மைநதிருக்க அந்தயிடத்திற்சிற்றுண்டில்முதலியதிவ்யபோசனங்கண்
டுரூபகன்னிகைவந்து நாயகனுக்குத்தந்து உண்டுமகிழ்ந்துபுசழ்ந்து
இருவருந்தவழ்ந்து விளையாடளததனிததபோது அவ்விடத்திலொரு
அகிகிவந்துஐயாமதப்படிலனைவ வாட்டுறான் உயிரோட்டுறான் இந்
தப்பெண்ணை எனக்குக் கொடுப்பீராகில் உனக்கொருவித்தை காட்
டுறேனென்று சிந்தைநைந்துரைத்தான் அந்தவார்த்தையை இந்தமகா
சூரன்கேட்டு அதென்னவித்தையென்று கேட்டான் என்னிடத்தி
லொருமிதியடியிருக்குது அதின்மேலேறிக்கொண்டு யெவ்வளவுதூரம
போகநினைத்தாலும அந்தயிடத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கு யென்
றுசொல்லவேஎங்கேயந்த மிதியடியைப்பார்ப்போமென்றுகேட்டுவ
ாங்கிக்கொண்டுவச்சிரவாளையுருவி சற்கலைந்தைநாடியவிதிவழிதப்பிஅ
திபதிகாலேல்வீழ்ந்தஇந்தஅகிகியைவெட்டி யெறியென்று விட்டுவிட்
டுபதிகாலேல்வீழ்ந்த இந்தஅகிகியைவெட்டி யெறிந்தமன்னனிடத்திலவந்தடை
டான அப்போதேஅவனைவெட்டியெறிந்துமன்னனிடத்திலவந்தடை
ந்தவாளைக்கண்டுமன்மதலீலை வேண்டிக்கிளம்பக்கால நேரமறுவந்த
ஆலகாலம்போன்றயிருள்சுழும் வரைக்குந்தேய்க்கப்பாய்ந்தஅமிவினை
யுடையவன அவ்விடத்திலதுயிலவைத்துக்கொண்டு அன்றுமுப்பதாக
டந்து தன்பட்டணத்துக்கருகாமையிலவந்திறங்கி அந்தவேளையில கி
ந்தனைசெய்துவிினையைமீட்டினான்எங்கும்புகழ்க்குந்திகள் சிங்கார
சாலையுஞ்சித்திரமணிமேடையும் திருக்குளமுமதோப்புமமைந்திரு
ப்பதைக்கண்டு அந்தயிடத்திற்போயிருந்தான் அதுகாலையிந்தரூபகன்
னிகை யானவள் ஆமிர்தமுதலாகி அலங்காரஆபரணமணியணிகளுங்
கொண்டுவந்து அலங்காரஞ்செய்து இருவருமிளைப்பாறியுண்டு இங்கி

கவ சொண்டிருக்கும்போது ஒருசித்தபுருஷன்வந்து மெத்தவருந்தி
சித்தகன் பாணத்தாம யிடுக்கிட்டயர்த்து தேசராஜபிரபு டிகாமாகா
ருாவல்லாசனே நான்ஒருபிரம்பு தருகிறேன் அதனுடைய செய்கை
யென்னவெனில் சிதைக்கருபட்டுப்போனபேர்க ளெவர்களானாலும்
அவர்களைச்சேர்த்து இந்தப்பிரம்பால் தட்டினால் உயிர்பெற்றெழுவர்க
ள் இந்தபிரம்பைநான் வெகுஅருமையாய்ச் சம்பாதித்தேன் பிராண
னுக்கு மிஞ்சியபொருளில்லாமையால் இந்தப்பெண்ணாலென் பிராண
ன்போகுது ஆகையாலந்தப்பிரம்பைக் கைக்கொண்டு என்க்கொருவ
ரங்கைக்கொடுமென்றால் அப்பொதந்தமகாராஜன்சந்தோஷித்துஎன்
னவரம வேண்டுமென்றான் அப்பொதந்தசித்தன் இந்த பெண்ணைவ
ரமாகத் தாருமென்றான அ-ஆ-நல்லதுஎங்கேயந்தப்பிரம்பெனறுகே
ட்க அந்தசித்தன்சித்தபிரமையாலெடுத்துக்கொடுத்தான் அதைப்பெ
ற்றுக்கொண்டுசெத்தவர்களைப்போலிவனையுஞ் சோதிக்குமபடியாய
வாளைவிடுத்துமடித்து பாளையோதியுடன் கூடிபந்துமுதலியவெல்லா
மாடி இந்தமண்டபங் குளமுதலியயாவும் உடனேமறைந்துபோகுமப
டிசெய்து இறைவனைநோக்கி நான்கொடுத்த விணைபத்திரம் நீர்த
விரமற்றொருவரும் இதைதட்டா திருக்கும்படியாய் பாதுகாத்துக்
க்கொளளு மற்றசாமான்களை யொருவருக்குங்காட்டாதீர் பத்திர
மாயப்பட்டணம்போய்ச்சேரும் காலமல்லாத காலத்திலென்னைக்கரு
தாதீரென்று வேண்டியநீதிபுத்திபுத்திகளையுஞ்சொல்லிவிடைகொடு
த்துவிடு தேவலோகம்போனாளவிடியற்காலையிலெழுந்தமகாராஜன்நி
த்யசெபதபபூசைமுடித்துக்கொண்டு பஞ்சகல்யாணிக்குதிரைமேலே
றி வருவதைப்பட்டணத்து ஜனங்கள்கண்டு மந்திரிசாமந்தர் முதலிய
பேருடன் தமயன்மார்களும்யெதிர்க் கொண்டுபோய்அரணமனைக்கு
அழைத்துவந்து ஒருவருககொருவர் க்ஷேமசமாசாரத்தைக்கலந்து
பேசிக்கொண்டு தாய் தந்தை தமயன்மார்களுடன் சம்பரமாய் வாழ்ந்
துகொண்டிருநதாாகள் தான்கொண்டுவந்த சாமான்முதலிய யாவ
றையுமஒருசிக்காரவ த்திலிருக்குமஒபரியபங்களாவிற்போட்டுசா
விடு யிட்டுககொண்டுஎந்தவேளையில்தனக்கிஷ்டமோ அந்தவேளையில்
வீணையைத்தட்டி ருபதன்னிகையைக்கிட்டி இருசாரத்தாலுமணைந்துக
ட்டிகாடனமுதலியதுந் தலைமேலிட்டுககட்டி இஷ்டமாறுதிருக்குங்கா
லத்திலேயில ஒருநாள் மகாராஜனுள்ளபுத்திசிநேகங்கட்டுபாடில்லாமல்
கொஞ்சம்தப்பாகத்தானிருக்குந அறையைத்தூடுகிறதும்சிலவேளை பூ
ட்டாமலும் இப்படியிருந்தபக்கு இவனுடைய தங்கையாகிய அமிர்தகிரண
க்கலையாளைவள் அண்ணனிருக்கும் அரண்மனைககுவந்தவள் அப்போது
மகாராஜன்மதாவேடிக்கையாகி ந்தோட்டத்லைசஞ்சுழ்ந்துயாாககப்போ
யிருந்தான் அந்தசமயத்தில் அவனுடைய அறையிலபுகுந்துயார்க்கும்
போகு இங்கச் சேவிகை மாட்டியிருந்தது இதிலேதானிலுமாணமுத
விரமணிகளிருககுமென று கையைப்போட்டாள்வேண்டியமணியுமப
ளையுமிருந்தது அதையெடுத்துககொண்டுவீட்டிற்குப்போவோமென
று திரும்பினனள்பக்கத்திலிருக்க பாதக்குறட்டிலகால்வைக்கவே இவள
ரணமனைக்குக்கொணடுபோய்விட்டது ஆச்சரியமடைந்துஐயோ அ
னை கண்டால கிட்டுவானேயென்று அங்கிருந்தபடியே அண்ணன அ

னைவீட்டுக்குப்போவோமென்று நினைத்தாள் அப்படியேஇங்கேகொ
ண்டுவந்துவிட்டது அந்தமிதியடியையிருந்தஇடத்திலவிட்டுவிட்டுவா
ளையுருவினான் அதுபளாபளத்தெழும்பி இவனுடையகைகளையிழுத்தது
அப்போதுஒருஎலியென்று ஓடககண்டுஅதன்மேல்நீட்டினான் அதன
லிதுண்டாவிழுந்தது அங்கவாளையுறையிற்போட்டுவிட்டுபிரம்மையடை
டுத்து இரண்டாய கிடக்கிறஎலியைவெளியிற்றள்ளினான் அதுபிழைத்
தோடிப்போச்சுது ஆ-ஆ நம்மண்ணன் விந்தைவிந்தையாகியசாமான்
கள்கொண்டுவந்துவைத்திருக்கிறானென்று சிந்தைகளித்து அந்தவீணை
யைமீட்டி இசைகூட்டினாள் அப்போது பகற்பதினைந்துநாழிகையாகச
மதிக்கிறதவங்கணகாரனுக்குளென்னமோஆபத்தாணவேளையென்று அ
க்குமிவகும் ஒருவருக்குந்தெரியாமலேஓடிவந்து அறையுட்புகுந்தாள்
இறைவையக்காணாமல எங்கிப்பக்கத்திற்பயந்துமறைந்தஅமிர்தகிரணக்
கலையக்கண்டு நீயாரென்றுதேவமங்கைகேட்டாள் நான்மகாசூரனு
டையதங்கையென்றுநங்கையுரைத்தாள் அதைக்கேட்டுநல்லது உன்த
மையன் இந்தவீணையைமீட்டச்சொன்னாராவென்றாள் இல்லையென்றுநங்
கையிசைத்தாள் இப்போதவரெங்கேயென்று தேவமங்கைகேட்டாள்
இந்தச்சிங்காரத்தோட்டத்திற் போயிருக்கிறாரென்று தங்கைசொன்
னாள்நீ இங்குவந்தது அவருக்குத்தெரியுமாவென்று தேவகன்னிகை
கேட்டாள்தெரியாதென்று இராசகன்னிகை சொன்னாள் எங்கேயந்
தவீணையை இப்படித்தாவென்றுவாங்கிநொறுக்கியுடைத்து பல்லைக்
கிறுக்கென்றுகடித்து வீணையைவீசியெறிந்து இன்றுமுதலின்பத்தை
யிழந்தாயென்றுஉனதமையனுக்குச்சொல்லென்றுசொல்லிப்போட்
டுதேவகன்னிகைகோடிசூரியப்பிரகாசம்போல் சொலிக்கும் படிக்குத்
தேவேந்திரனுலகத்திற்குப் போய்விட்டாள்.

இப்பாலஇந்தஅமிர்தகிரண கலையானவள்பயந்துஆருடனுஞ்சொ
ல்லாமல் திருடனைத்தேள்கொட்டினதுபோல்தன்வீடுபோய்சேர்ந்தா
ள் அதன்பின்புமகாசூரன்வந்துஅறையில்புகுந்துவீணைமுறிந்துகிடப்
பதைப்பார்த்து முகமவியர்த்துபூமியில்விழுந்துகடகடவென்றுபுரண்
டுருண்டழுது மூர்ச்சையடைந்துமுடித்தெழுந்து ஸ்நானம்பூசைசாப
பாடில்லாமல் தயங்கியழுதசமத்தில்தாய்தந்தைதமையன் சகலரும்வ
ந்து இந்தவிசனங்களெல்லாங்கேட்டுநாங்களொன்றுமறியோமென்று
உடனுயிர்த்திருந்து அம்மாகுழந்தாய் நீயறிவையாவென்றுகேட்கும்
போது தங்கையும்நடந்தசங்கதிசொன்னாள் அக்கவன்கேட்டு அரசர்
முதலியபேர்களுடனுஞ்சொல்லிநானபோய்அந்தப்பெண்களைபெருமா
ளைக்கண்டுகைக்கொண்டுவந்தால்வருவதேயல்லது இல்லாவிட்டாலே
ன்னைக்காணமாட்டீர்க ளென்றுயாவருக்குஞ்சொல்லவே அவர்களெல்
லாருங்கண்ணீருகுத்தழுது அப்பா பூலோகமல்லவே தேவலோகத்திலி
ருப்பவர்கள்உனக்குவசப்படுவார்களா நீயவ்விடத்திற்குப்போகலாமா
உன்னால்கூடாதே ஒருவேளையெப்படியிருக்குமோதெரியாதுபோகாது
போககமதுகுலத்தில நல்லபெண்ணைக்கல்யாணம்பண்ணிவைக்கிறோ
ம் பாக்கியத்துடனிருக்கலாமென்று எத்தனைவிதத்திற்றடுத்தாலுங்கே
ளாமல் ஒரேபிடிவாதமாய்புறப்பட்டுபோதக்குறட்டினையேவேயச்சொ
ண்டு சேனைவாள்பிரமபுறாதலியவெல்லாமெடுத்துக்கொண்டொருவரு-

க்குத்தெரியாமல்தேவலோகத்திற்குப்போய்தேவராஜன்சபையில்நட
க்கும் நாட்டியங்களைப்பார்த்துக்கொண்டிருந்தான் அப்போதவிடத்தி
லிருக்குந்தேவதூதாள் பார்த்துஆருங்காணும்மானிடமனிதன் தேவ
சபைக்குள்வந்திருக்கிறாய் அப்பால்போவென்றுஅதட்டினார்கள் இந்தி
ரனுக்குவந்த தொந்திரவெல்லாம்மானிடமனிதரால்தீர்ந்ததல்லது
தேவமனிதரால் தீர்க்கநூதாளன்று தம்பி தன்னைமறந்துபேசுறாயென்
றுமகாசூரன்சொல்லவே அந்தச்சொல்லை இந்திரனிடத்திற்போய்சொ
ன்னார்கள் அந்தப்புரந்தானேயோசிக்காமலவந்தமனிதனைக்கொல்லுங்க
ளென்றுகோடாகோடிச்சுந்தரவரக்கரைச்செந்தோமென்றனுப்பினான்
அவர்கள்வருவதைஅருபகன்னிகைகண்டுஐயோநம்மாலல்லவோ இவன்
பிராணன்போகப்போகுதேயென்றுகலங்கி ஐ-ஓ வச்ரவாள்முதலியவஸ்
துக்களிருக்கவில்லையா அதனாலநமதிஷ்டனுக்குயாதொருகுறைவுமில்
லையென்று மனந்தேறியிருந்தாள் இப்பால்ராட்சதாள்கோடிபேருமி
ந்தார்கள் அவர்களைக்கண்டு சாந்தவார்த்தைகளாகச்சொல்லியு
ங்கேளாமல்மகாசூரன்கோபங்கொண்டு வச்சிரவாளையுருவிக்கொண்
டுஇலட்சணம்இந்தராட்சதரையெல்லாம்பட்சணம்பண்ணிப்போடென்
றுபிரயோகஞ்செய்தான் தட்சணமே அலட்சியமாய்க்கட்டிசெய்து
வந்த அரக்கரைக்கண்ட துண்டமாய்க்கால்மாடுதலைமாடாய்விழச்செ
ய்தும்காசூரனுடைய்வாள் உறையில்வந்து நுழைந்ததுதப்பிப்பிழைத்
தோராகியதானவர்கண்டு தேவேந்திரனிடஞ்சென்று அகிலாண்டகோ
டிபிரமாண்டநாயகா பராக்குதேவரீர் உத்தாரப்படிக்கு ஜெயம்பெறச்
சென்றஒருகோடிராட்சதரும் ஒருநொடிப்போதிலிறந்துபோம்படிகூ
ருகூர்மையாகிய வச்ரவாளைவிடுத்துவெட்டிமடிந்து இந்நமனுக்குத்தக்க
பேர்களுண்டானால வாருங்களென்று ஆருமெதிரில்லாமலஅஞ்சாநெ
ஞ்சுடையவனாயிருக்கிறானையா வென்றுசொல்ல அந்தவசனத்தைக்கே
ட்கஆகண்டலன் மேகமண்டலத்தைப் பிளக்கிலுமெல்லாமிருந்துமுப்
பத்துமுக்கோடி தேவர்களுடனெதிர்த்தஇப்பேர்ப்பட்ட வல்லமைசாலி
யெப்பேர்ப்பட்டவனோ அவனைப்பார்ப்போமென்றுநோக்கியபோது அ
ந்தமகாசூரன் இந்திரன்முதலாகிய பேர்களுக்குவணங்கிவந்தனஞ்செய
அவணக்கத்துடனின்றான் அந்தமைந்தனைப்பார்த்துசிந்தைகளித்தப்பா
நீயார்உன்பேரென்னஉங்களூரேதுஉன்தாய்தந்தையுன்பேரென்ன நீ
இவ்விடத்திற்கு வந்தகாரணமென்னவென்றுதேவேந்திரன்கேட்கம
காசூரன்மகிழ்ந்துவச்சிராயுதனைப்புகழ்ந்துவணங்கிமகாதுரந்தரமண்
டலேசுரா விண்டலந்தனையாளும் மெய்த்தவப்பொருளே ஏழையாகிய
எனிடம்நிலைக்கேளும்தர்மமாபுரியையாளுந்தர்மேந்திரனுடை
யபிள்ளைகளுமூவரில் நாளிளையவனென்பேர்மகாசூரன்தேவரீரிடத்திற்
குஒருகாரியமாய்வந்தேன் அதெந்தவெனில்தங்களுடையசமுகத்
தில்நடனமாடுங்கன்னிகைகள் மூவர் இவர்களுக்கும்எங்களுக்கும்பட்ட
துவந்தமுறைநடைமயிக்கவிங்கேயென்றுசொன்னான் அந்தச்சங்கதிகளையெ
ல்லாம் இந்திரன்கேட்டு வந்தமனிதனையழைத்துநீர்சொல்லியகன்னி
கைகளென்பதுலட்சம பட்சராஸ்திரிகள் இங்கிருக்கிறார்கள் அவர்களிலெவ
ர்கள் நீர்கண்டுபிடிப்பாருமென்றுசொல்ல அவருத்தரவின்படிக்குஇந்தி
ரனுடையவாள்மனை முதலாகியபட்டணங்களையெல்லாம்பார்த்து இ

ந்திரனுடைய ராசகொலுமண்டபத்தில் இந்தகன்னியர்மூவருங்கைகோத்துக்கலந்தாடுவதைக்கண்டு இதோயிருக்கிறார்களே அவர்கள்தானென்றுமகாசூரன்சொல்லதேவேந்திரனவர்களைவரவழைத்துபூலோகபுருஷன்பேரிலிச்சைவைத்து நீங்களிவ்விடத்துக்கு வரலாமா நீங்கள் மகாகர்ப்பிகளானீர்கள்ஆகையால் இனிமேலிவ்விடத்திற்கு நீங்கள் வரவேண்டியதில்லைநீங்கள்மூவரும்போய்இந்தமகாசூரன்சொற்படிக் கேட்டுவாழக்கடவீர்களென்றுவேண்டியஆடையாபரணமுதலானவைகளையுச்சிதங்களுங் கொடுத்தனுப்பிவிட்டுமகாசூரனைப்பார்த்து அப்பா நீயாரோஎவரோவென்றுதெரியாமல்ராட்சசரையனுப்பிவைத்தேனந்தராட்சதர்கோடிபேரையுங்கொன்றுவிட்டாயே நீயாகிலும்முன்னமேதெரிவிக்காமற்போனாய்ஆனாலுமெனக்குமெத்தநஷ்டமாச்சுதென்று தேவேந்திரன்சொன்னான் அதைக்கேட்டுஐயா இறந்துபோன இத்தனைபேரையுமெழுப்பித்தருகிறேனென்றுசந்நாசிகொடுத்தபிரம்பாற்றட்டினான்வாளினால்வெட்டிராட்சதர்களெல்லாந்தூங்கிஎழுந்தவர்போலெழுந்துமகிழ்ந்தார் இந்திரன்முதலியதேவர்களும்புகழ்ந்துவச்சிராக்கொழுந்துகச்சிதமணிகள்உச்சிதப்பணிகள்அச்சுதாஸ்திரமுதலியவெல்லாங்கொடுத்தனுப்பஅவர்களிடத்தில்விடைபெற்றுக்கொண்டுகன்னியர் மூவருங்காடுங்காமலைசெடிமுதலியயாவுங்கடந்துதிருமால் புரியை நோக்கிவரும்போது இவன்பெண்சாதியாகியரூபகன்னிகைபயந்துவிணைமுழித்துவிட்டு வந்தோமேஇந்திரனுடையஉத்தரவின்பேரிற் கொண்டுபோகிற இந்தமகாசூரன்நம்மையென்னசெய்வாரோவென்றுஏங்கவும்மற்றஸ்திரீகள்இரண்டுபேரும்இவருடையமனைவியாகியரூபகன்னிகையைகால்வேறுதலைவேறாய்க்கொன்றுவிட்டுவந்தோமேஅந்தக்காமகாரம்வைத்துக்கொண்டு துன்பப்படுத்துவாரோ ஐயோதெய்வலோகத்தையுமிழந்தோம் இவர்களையுங்கசந்தோம் இனிஎதாயமுடியுமோஎப்படிவிளையுமோதெரியவில்லையேதெய்வமேயென்று மெத்த தீனளாய் வந்துக்கொண்டிருக்கும்வழியில்நடந்தவிந்தையைக்கேளும் பூர்வத்திலிருந்ததேவேந்திரன்தேவகன்னியைக்குறித்துஒருசாபமிட்டிருக்கிறான் அதாவதுராட்சதவுபத்திரமுடையவனாகையால் எந்தராசனாவது எவ்வுலகின்மனிதனாவது என்னுலகத்திலிருக்கும்வஸ்துக்கள் முதலிய ஸ்திரீகளைக்கைக்கொண்டுபோவாராகில்அவர்களை அக்கினிவளைக்கக்கடவதென்றுசொல்லியிருக்கிறார் இதுஒருவருக்குந்தெரியாது ஒருவேளைதெரிந்தவர்களிருந்தாலுஞ்ஞாபகமில்லை அப்படியிருக்க இந்தமகாசூரனாகியராஜகுமாரன் இந்தக்கன்னியர்களையழைத்துக்கொண்டு அவர்களுடன்பேசாமல் மௌனமாய்வரும்போதுபழைய இந்திரன்கூறியிருக்கிறவாக்கியப்படிக்கு அக்கினிமலைவந்து சுற்றிக்கொண்டது.

இந்தக்கதைஇவ்விடத்திலிப்படியிருக்க இந்தமகாசூரனுடையதாயுந்தந்தையும் தமயனும்விசனப்பட்டுதம்பிபோய்ச் சிலநாளாச்சுதே

இன்னம்வரக்காரோமென்றிரங்கிசோதிடநூல்வல்லோனொருவனையழைத்து
பிரசனைக்கேட்டான்இவர்கள்கேட்டலக்கினத்தையுந்திசையையுங்கட்
டியாகித்துப்பகுத்துச்சொல்லுகின்றார்ஐயாபிள்ளைபோநகாரியஞ்ஜெ
யம் வருகிறவழியில் அக்கினியாலபஜெயம்இரண்டாம்பாதத்திற்கு இ
ப்போதுநெருப்புமதியில் அகப்பட்டுக்கொண்டு மூனுபெண்ணுங
தானும்ஒருசாமத்துக்குள் ளிறக்கப்போறாளென்றுசொன்னான் அதை
க்கேட்டு தாய்தந்தைதமயன்மார் முதலியபேரும்வேகமாய் வாகனத்
திலேறிச்சென்று அந்தமலைக்குநேரேபோம்போது அவ்விடத்திலஇ
ரத்திநமயமாகியவொருகோயிலைக்கண்டுசதுரங்கச்சேனைகளையும்வெ
ளியேநிறுத்திவைத்துப்போட்டு தாங்கள்மாத்திரம் அந்தக்கோயிலுக்
குள்நுழைந்துபோய்ப்பார்க்கும்போது அதற்குக்கிழக்கே ஒருசமுத்தி
ரம்போலே இருக்குளமிருந்தது அந்தக்குளத்தினடுவே நெருப்புபய
மாயெரியுது அங்கே ஒருகல்லெழுதிநாட்டியிருக்குது அதிலென்னவெ
ழுதியிருக்குதென்றால் இந்தக்கோயிலின்மேலேறி அந்தஅக்கினிகுளத்
திற்குதித்தால் அவர்களைப்பாதாளலோகத்திற்குக்கொண்டுபோம் அங்
கேஜகத்தீஸ்வரநிருக்கிறார் அவரைத்தரிசனஞ்செய்துக்கொண்டால் அ
வர்களுக்குநேரிட்டஆபத்துதீர்ந்துவேண்டியவரமும் பெறுவார்கள்ஒ
ருசாமத்திறகுள்நடக்கவேண்டியதென்றுஒருகல்லிலெழுதியிருக்கக்கண்
டுதாய்தந்தையுந் தமயன்முதலாகியபேரும்நீயோநான்மாட்டேனென்
றுசச்சரவு பட்டுக்கொண்டிருக்கிறார்கள்ஐயோ இனியென்னசெய்வோ
மென்றுபெற்றவர்கள் போகத்துணிந்தும் பிராணன்யாவருக்குங்கரு
ப்புட்டியாகையால் மயங்குமிருக்கிறார்களென்றுவடக்கேபோனதூத
ன் இந்தச்சங்கதிகளையெல்லாம்எங்கள்விக்கிரமார்க்கராஜனுக்குச்சொ
ன்னான் இதைக்கேட்டவுடனே சந்தோஷங்கொண்டுபட்டியிடத்தில்ப
ட்டத்தைப்பாதுக்காகக்குப்படி யொப்பிவைத்துவேதாளத்தின்மீதேறி
விண்ணுலகிற்றாவிஉச்சினியோங்காளியையுன்னத்தித்கொண்டுவைரவ
ர்பூசைமுடித்து அந்தக்கோயிலின்மேலேறி அனற்குளத்திற்குதித்துஉ
ள்ளேமூழ்கி பாதாளமாமேஸ்வரரைக்கண்டு தரிசித்துமந்திரவாளைக்
கைக்கொண்டு நாங்வந்தது காரியசித்தியாகவேணுமென்று வருந்தித்
தொழுதுவாழ்த்தியபோதுமங்கைபாகன்விடைமேலெழுந்தருளி நாலு
குளிகையைராஜன்கையிற்கொடுத்துஉனக்குவேண்டிய காரியங்களுக்கு
ஒருகுளிகையைப்போட்டால்எண்ணியவண்ணமுடியுமென்று அவ
னுக்கருள்புரிந்து கண்ணுதல்காந்தார்மறுபடியும்வந்தவழியேமகா கு
ளைவளைத்துக்கொண்ட அனல்பர்வதத்தைநோக்கி ஒருகுளிகையை
யெறிந்தானுடனே அதுதண்ணீர்போல் குளிர்ந்துபோச்சுது அப்போ
து [illegible]காருனும் தேவகன்னிகைகளும்வெளியேவந்தார்கள் இவ்விடத்தி

ராஜன் பெரியவரைவணங்கிசுவாமிநான் விக்கிரமார்க்கனென்று விளம்
பினார் அப்பா மெத்தசந்தோஷமெய்தி ஆசீர்வதித்தார் அப்போது அரச
ன் பெரியவரைப்போற்றிஎன் ஐயனே இப்போது தேவரீருரைத்
த கெவுளிசாஸ்திரக்குறிப்பை நாமிருவரும்போய்ப்பார்க்கலாமென்று
ர் அப்படியே பார்க்கலாமென்று அந்தமழையிலும் இருட்டிலும் இவ
ர்களிருவரும்போம்போது ஒருநரிகூவியது இதென்னசுவாமியென்று
இறையவன்கேட்ட அதற்கந்தப்பெரியவர்சொல்லுகிறார் அப்பனே மு
ன் சொல்லிய பிணத்தின்மடியிலேதன்னீராயிரம் பொனிருக்குது அந்த
ப்பணவிஷலால் சலத்தில் மூழ்கி யிறந்தானென்று சொன்னார் அந்தஅ
டையாளப்படிக்கு இருவரும் போய்ப்பார்த்தார்கள் அப்படியேபிணமி
தந்துவந்தது அதையெடுத்துக்கரைமேலிட்டு அதனுடைய மடியைச்
சோதிக்கும்போது அரைப்பையில் பன்னீராயிரம் பொன்னுமிருந்த
து அதைக்கண்டு ராஜா சந்தோஷமடைந்து மகாபெரியவரை வந்தி
த்திருந்து ஓ தெய்வமே இந்தபிணத்தைநாமிருவருங்கண்டு சும்மா
ய்ப்போய்விடலாமா இதையெப்படியாகிலும் பிழைப்பூட்டுமென்று ராஜ
ன் சொல்லஅதைப்பெரியவர்செத்தபிணத்தைப்பிழைக்கச்செய்து அந்
தமிருதசஞ்சீவிமந்திரசத்தியை அரசனுக்குக்கருள்புரிந்து அவர்மாய்கை
யாய்ப்போய்விட்டார் அப்பால்ராஜன்மெலிந்துநலிந்து முகம்வாடிநா
லுபுறமுமோடிபெரியவரைத்தேடிக்காணாமல் மனம்வருந்தி உயிர்பெ
ற்றெழுந்தஇந்தஒருவனைப்பார்த்து உனதுஊரேதுபேரேதுஎன்றுவி
சாரித்து அவனுக்குச் சிலநன்மைகளைச் செய்து காவலாளிகளை கூட்
டி அவனூருக்கனுப்பிவைத்துவிட்டு அதிகவல்லாசத்துடன் அரசபுரிந்து
புரசனங்கள் மகிழவிருந்தார் ராஜபோசமகாராஜனே கேளும் இதுவ
ரைஇலுமநீர்கொண்டஆசையை நிராசையக்கிக்கொள்ளும் இந்தசிங்
காதனம்கைலாயபதியினுடைய கருணையினாலுண்டானது இதைதே
வேந்திரனுக்குக்கொடுத்திருந்தது அந்ததேவேந்திரன் இந்தச்சிங்கா
தனத்தின்பேரில்ஆயிரவருஷமிருந்து அரசாளக்கடவதென்று இந்த
விக்கிரமார்க்கராஜனுக்குக் கொடுத்தார் அந்தமகாராஜன் தன்சகோ
தரனாகியபட்டியென் னுமந்திரியினாலே இன்னொருஆயிரவருஷம்பெற்
றுக்கொண்டு சிங்காசனத்திலாறுமாதமிருந்து வாழ்வதுமநாட்டிலே
காட்டில் இறுமாதமிருந்து கல[illegible]ப் பெருவருமாக இரண்டாயிரவ
ருஷமிருந்துவாழ்ந்து மேற்சொன்ன கன்னிகையின் பிள்ளைகையினு
ல் காரணப்பட்டு முடிந்தார் இப்படில் முப்பத்திரண்டு கன்னிகளாலே
எங்களுக்கிப்பேர்ப்பட்டசாபம் வ[illegible] இந்தசாபமெப்படித் தீருமே
ன்றுகேட்கும்போது ஒப்பில்லாத[illegible] தீருமென் றுரைத்தார்க
ள் அப்படியேதேவரீருங்கட்டிநீர் இ[illegible]ல்லகாலம்வந்தது
ஐயனேயென்று சொல்லவேஅந்தவார்[illegible]தை கேட்டபோஜமகா

ராஜாக்களுக்குச்சாபம்வந்தவிதத்தைச்சொல்லுமென்றுகேட்டார்
பதுமைசொல்லத் தொடங்கியதுவரும் ஷிகாலதேச வாச்நேச விக
வாசமகாராஜ போஜனேகேளும் சிங்காரசிரோமணி-௧- சித்திரசிந்
தாமணி-௨-மாசிலாமணி-௩-[illegible]சிகாமணி-௪-மனோரஞ்சிதமணி-௫
அபரஞ்சிமணி-௬-கருணாநிதிமணி-௭-சக்கிதிமணி-௮-நீதிகலாமணி-
சாசகுணமணி-௰-சகலசர்வமணி-௰௧-விவேகசிந்தாமணி-௰௨- நீதிசிந்
தாமணி-௰௩-மநுநீதிமணி-௰௪-சுந்தரமணி-௰௫- சத்தபரிபூரணமணி-
அணிமணி-௰௭-பரிபூரணகலாமணி-௰௮- சரசசலாபஉலாசவலாசம
ணி-௰௯-இந்திரவிலாஸமணி-௨௰-குணபூஷணமணி௨௧-வேள்யார்த்
தவிரத்தினமணி-௨௨-மாணிக்கவாசகவல்லிமணி-௨௩-சாதலிலோமரக
தமணி-௨௪-கற்பகவல்லிமணி-௨௫-அமிர்தவல்லிமணி-௨௬- சிவவாக்
கியமணி-௨௭-பூங்கவனப்பொன்மணி-௨௮-சிரோன்மணி- ௩௰- மின்
னொளிமணி-௩௧-சனரக்ஷகவல்லிமணி-௩௨-இந்தநாமங்களையுடையமு
ப்பத்திரண்டுபெண்களும் தேவதேவனாகியகைலாய பதியினுடையமந்
திரபோக சபைக்குரியவர்களாய்சகலவைபவங்களையும் அனுபவித்து
க்கொண்டுபடியேசேவித்து வந்தநாளையில் ஒருநாள் எங்கள்வினை
வசத்தால் சௌந்தரியை பரமேஸ்வரனையனையும்படிக் கிச்சைகொ
ண்டோம் அந்தக்குறிப்பை ஆதிநாண்ட ரங்கனறிந்து நீங்கள்யாவரு
ந் தகுதியில்லாத[illegible]ச் செய்தபடியால் இந்தச்சிங்காசனப்
படியில மங்காமல்பிரதனமாய் நிற்கக்கடவதென்று சபித்தார் நாங்
களெல்லோரும் பூமியில்விழுந்து புரண்டழுதெழுந்து எங்களுக்காரு
மென் நிறைந்தருந்தோம் அப்போதிரங்கிஇச்சிங்காசனமேறித் துரை
த்தனஞ்செய்ய பராக்கிரசிங்கமாகிய விக்கிரமார்க்கனுடைய இராஜ
ம்அரசும்மறமும் அறிந்துகொண்டு இரண்டாயிரவருஷ மிருந்தப்பு
றம் இந்தசிங்காசனமும் பூமியிலழுந்திப் போம்படிச் சிலநாளிருந்துமறு
படியும் பூலோகத்துக்குவந்து போஜராசன் கண்டு சிங்காசனமேறு
வதற்கு வருவான் அவனுக்குநீங்கள[illegible]ற்கண்டிருந்தவிக்கிரமா
ர்க்கராஜனுடைய பெருமைத்திறங்கள[illegible]த்திரத்தை நீங்கள் மு
ப்பத்திரண்டுபேரும் சொல்வீராகில் உங்களுக்குச்சாபவிமோசனமா
குமென்று சொல்லியிருந்தார் அந்தப்படியே நாங்களுமநுபவித்துக்
கடைசியில்தேவரீருக்கு விக்கிரமார்க்கனுடைய கதையுஞ்சொல்லிநம்
மையும் தரிசித்தோமெங்களுடையசாபமுநீங்கியது இனிநாங்கள் சி
ங்காசனத்துடன் கைலாயத்திற்குப் போகின்றோம் நீர்சகலகுண சம்ப
ன்னசாம்பிராச்சியராய் வாழக்கடவதென்று விடைபெற்று தெய்வ
லோகத்துக்கு [illegible]றுடனெழும்பவே போஜராஜன
பார்த்தநுபூரித்து [illegible]ப புண்ணியவதிகளேஉங்கள் வாக்
கியப்படி [illegible] எழுகினோர் படித்தோர்கேட்டோர்முத
லி[illegible] யாவருஞ்சகல [illegible]யும்புத்தியும் பெறும்படிக் குறித்தியவராக்

ஸ்மகாரூாஜனுடையதாய் தந்தைதமையன் ராஜராஜேஸ்வ[illegible]ப்பிரபு மக
ருகியவிக்கிரமார்க்க மகாராஜனு மிருக்கக்கண்டெல்லோருக்குந்திர்க்
கதண்டஞ்சமர்ப்பித்து சிந்தைகளித்துவந்தமகாரூானை இந்திரனென்
றுபுகழ்ந்துவிக்கிரமார்க்கமகாராஜன்மகிழ்ந்து இந்தக்கன்னியர்களா
ல்வழியிலிறந்துவிட்ட சன்னியாசிகளை யெல்லாம்யெழுப்பி அவரவர்
களுடையவாள்சோளிபாதக்குறடு பிரம்புமுதலிய யெலலாங்கொடுத்
துநீங்கள் போங்களென்றுசொன்னார் அவர்கள்ஐயா அரசேநாங்கள்ச
ன்னியாசியாய்ப்போனஎங்களுக்குஇந்தக்கன்னிகையின்பேரிலிச்சை
வந்து லச்சைக்கெடுவானேன் அந்தக்கொடுமையினால் எங்களுயிரும்
போய்எங்களுக்குப்பிராணயதமாய்ச் சம்பாதித்திருந்த ஆயுதங்களும்
போய்விட்டது எங்களுக்குஇதுநல்லபிராச்சிதம் ஆகிலும்மிந்தக்கர்ம
பூமியில எங்களுடையவினையை யொழித்துவிடும்படிபிழைப் பூட்டிவி
ட்டபுண்ணியனுகியவுமக்குக் கொடுக்கிறோம்நீர்பெற்றுக்கொள்ளுமெ
ன்றுயெரியோர்விடை கொண்டுபோனார்கள் இப்பால்விகரமார்க்கரா
ஜன் இந்தக்கன்னியரை மூவருக்குங்கொடுத்து இந்தப் பெரியோர்கொ
டுத்தஆயுதங்களையும்மகாரூானுக்குக்கொடுத்துபாதாளயீசுவரன்கொடு
த்த குளிகைமூன்றையும்மூன்றுராஜகுமாரர்களுக்குங்கொடுத்து அவ
ர்கள்தாய்தந்தையுடன் பட்டணத்துக்கனுப்பிவைத்துதானும வேதா
ளமுக் தன்னகரம் சேர்ந்தார் தேவரீரும் இப்பேர்ப்பட்ட இளமனதும்
பரவுபகாரமும் அளவில்லாதஅன்பும் உடையவராகில் இந்தச்சிங்கா
தனமேறுமென்று சொல்லியபதுமைவாக்யதைதக்கேட்டுப் போஜம
காராஜன்வெட்கித் தன்வாஸஸ்தலத்துக்குப்போனார்.

முப்பத்தோராம்பதுமைகதை - முற்றிற்று.

## முப்பத்திரண்டாம்படிக்குக்காவலாகிய

## மதனபிஷேகஜனரட்சகமோகினிப்பதுமைசொல்கதை.

முப்பத்திரண்டாநாட்காலையிலெழுந்து ஸ்நானசந்தி ஜெபதபமு
[illegible]த்துககொண்டு ஆலயங்களெல்லாந்தொழுது அன்னதானமுதலாகி
[illegible]சொர்ணதானங்களுநடத்திசிங்காதனத்திற்குப்பூஜைசெய்வித்து[illegible]

குநோக்கிதெண்டனிட்டெழுந்து மங்களகரமாய்ச் சிங்காசனமேறிய
போது அந்தப்படிக்குக்காவலாகிய பதுமையானதெழுந்துபளிச்சென
றுமின்னிக்குலுங்கநகைத்து அரசனைத்தகைந்துவையுகங்காக்குமகாரா
ஜபோஜாஎங்களையனைப்போல ராஜருமுண்டோ தெய்வந்தொழுதல்-
தேசம்புரத்தல்-சத்தியவிரதம்-தவம்-தானம்-உண்மை-சிவகாருணியம்
செபம்-தபம்-பாக்கியம்-மந்திரதந்திரம்-மதியூகியேந்திரம்- அஷ்டமா
சித்தி-அணிமாலசித்தி-இன்னம்அநேகம்இத்தனைவிதமும் பெற்றவெ
ங்கோமான் பெரும்புவியாண்டான் ஆகினான்தன்னில்அருந்தவம்புரி
ந்துதெய்வத்துவமும் திரிகாலக்கியானமும் -பஷி பட்சி முதலிய
பாஷைகளெல்லாம் தனக்குத்தெரியுந் தன்மையம்பெற்று மூன்றாற்
றைம்பது நாளிற்பிறந்த ஒருகன்னிகைக்கு அந்தக் கணக்கின்படித
லைச்சன்பிறந்தால் அவன்கையால் இவன்மரண மடைவானென்று
அநுக்கிரகம்பெற்றான்.

இதுவுமல்லாமல் தன்னாட்டிலுள்ளயாவருக்குந்துற்சோரம்- து
ர்வியாதி-துர்மரணம்-துர்ப்பயங்கரம்-துர்க்குணமுதலிய தன்மையுமில
லாமற்பெற்றான் தேவேந்திரனால் முப்பத்திரண்டுபதுமைதாங்கியசிங்
காசனமும்பெற்றான் உச்சினிமாங்காளியினுடைய அருளும்பெற்றா
ன்-நாடாறுமாதங் காடாறுமாதமென்று இரண்டாயிரவருஷமும்பெற்
றான் இத்தன்மையாகச் சிறப்புடனிருந்தாங்கள்விக்கிரமார்க்கராஜன்
ஒருநாள்நகரிசோதனை வரும்போது மழைத்தூற்றலும்-இடிமின்னலு
ம்இருட்டுமாயிருந்தது-இந்தமழைக்குச் சற்றுநேரம் ஒதுங்கியிருந்து
போவோமென்று ஒருவீட்டின்தெருத்திண்ணையிலொதுங்கினார் அந்
தவேளையில் மத்திராகிரியிலிருந்து வியாபாரஞ்செய்தபாக்கியவானாகி
யவெள்ளாளன்செட்டி துறவுபூண்டபரதேசியாய்தேசமெல்லாந்திரிந்து
சிவாநுபவம்பெற்றுதிகம்பரமூர்த்தியாய இந்தவிக்கிரமார்க்கராஜனுக்கி
ரகம்பனனவேணுமென்றுஎங்கள்ராஜனுடையஊழ்வினையானது அந்தப்
பெரியவருக்குஇந்தநினைப்புவந்துஉச்சினிபட்டணத்து வீதியில்வருகிற
போதுநடுராத்திரியுங்கடுமழையுமானதால்எங்கள் ராஜனொதுங்கியிருக்
குந்திண்ணையிற்போயிறங்கினார்எங்கள்ராஜன்கண்டுதாநிருப்பது தெரியா
மற்பேசாதிருந்தார் அவ்விடத்தில்விக்கிரமார்க்கராஜநிருப்பதை உந்தித்
தெரிந்துக்கொள்ளாதபெரியவர்கண்ணைமூடிக்கொண்டு மௌனமாயி
ருந்தார் அப்போது அவ்வீட்டில்ஒருகெவுளிசசென்று சொல்லிற்று
அதைக்கேட்டு அந்தப்பெரியவர் இந்தப்பட்டணத்தைச்சூழ்ந்த ஆறு
பெருகிவருகிறசலப்பிரவாகத்தில் ஒருபிணமிதந்துவருகுதென்று சொல
லிறதல்லவா இந்தப்பிணத்தைஇந்தவூராளுகிற விக்கிரமார்க்கராஜ
னுயிருண்டாக்குவானென்றார் இவராரோபெரியவரென்று உடனே

கொடுமென்று போஜராஜன்கேட்க, ஸ்ரீ அப்படியேயாக் கொடுத்துகை லாயத்தைநோக்கிப் போய்விட்டார்கள், அப்போ ராஜன்கண்விழிக்க ண்டு கைக்கொள்ளப் போத பொருளை இழக்க கருணையில்லாதவனைப் போல் தன்னரண்மனைப்போய்ச் சேர்ந்தான்.

முப்பத்திரண்டாம்பதுமைகதை

முற்றிற்று.

வாழி

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்,

மறைவாழிமறைவாழ்த்து மகதேவர்வாழிவையம்வாழிவையத்
திறைவாழியிறைக்குரியவறம்வாழி மகத்தவங்களெல்லாம்வாழி
முறைவாழிநிறைவாழிவேதியர்மாதர்வாழிமுகுந்தன்வாழி
பிறைவாழியிக்கதையைப்படித்தவர்கேட்டவர்வாழிபெருகுமாதோ.

வாழிவிருத்தம்

முற்றிற்று.

116837